# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஸ்ரீகலாவின்
கள்ளிப்பூ காதல்!
கள்ளிப்பூ காதல்


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் “கள்ளிப்பூ காதல்”

**Contents**

பூ : 1
பூ : 2
பூ : 3
பூ : 4
பூ : 5
பூ : 6
பூ : 7
பூ : 8
பூ - 9
பூ : 10
பூ : 11
பூ : 12
பூ : 13
பூ : 14
பூ : 15
பூ : 16
பூ : 17
பூ : 18
பூ : 19
பூ : 2o
பூ : 21
பூ : 22
பூ : 23
பூ : 24

பு : 25
பு : 26
பு : 27
பு : 28
பு : 29
பு : 30
பு : 31
பு : 32

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

அதிகாலை வேளையில் 'கீச் கீச்' என்று கத்தி கொண்டு பறந்த பறவைகளில் ஒலியில் நிமிர்ந்த அபிராக்ஷிதா ஜன்னல் வழியே பார்த்தாள்... புலர்ந்தும் புலராத அந்தக் காலை வேளை காண்பதற்குக் காணத் தெவிட்டாததாக இருந்தது...

கையில் இருந்த புடவையைக் கீழே வைத்துவிட்டு ஜன்னல் அருகே வந்து நின்றாள்... மெல்ல கீழ் வானம் சிவக்க துவங்கியது... ஏனோ ஒவ்வொரு நாளும் அதைக் காணும் போதும் மனதில் நம்பிக்கை தோன்றும்... தங்களுடைய வாழ்க்கையிலும் இது போல் என்றாவது ஒரு நாள் விடியல் வரும் என்ற நம்பிக்கையை அந்த அழகான விடியல் கொடுக்கிறது என்று...

இன்றும் அதையே நினைத்துக் கொண்டிருக்கும் போது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது...

'இந்த நேரத்தில் யாராக இருக்கும்...?' புருவங்கள் முடிச்சிட யோசித்தவள் அவசரமாக வாயில் பக்கம் நடந்தாள்...

யோசனையுடன் கதவை திறந்தவள் முன் புன்சிரிப்புடன் நின்று இருந்தான் அவளது அண்ணன் ஆதர்ஷ்...

"என்ன அபி... கண்ணு எல்லாம் சிவந்து இருக்கு...? தூங்கலையாடா...?" பரிவுடன் கேட்டவன் அவளது முகத்தை ஆராய்ந்தான்...

"ஆமாண்ணா... நம்ம ராஜம் அத்தை பொண்ணு கல்யாணத்துக்குப் பட்டுச் சேலையில் ஒர்க் பண்ண கொடுத்து இருந்தாங்க... அதைத் தான் ராத்திரி எல்லாம் கண் முழிச்சு ஒர்க் பண்ணிட்டு இருந்தேன்... நீ வாரேன்னு சொல்லவே இல்லையே... கொஞ்சம் இரு பால் வாங்கிட்டு வந்து காபி போட்டு தர்றேன்..." பால் வாங்க கிளம்பியவளை தடுத்தவன்,

"நீ இரும்மா... நான் போய் வாங்கிட்டு வர்றேன்..." அவளைத் தடுத்து நிறுத்தியவன் அவளுக்குப் பதிலாய் தான் கிளம்பினான்...

"நீயே ஹாஸ்பிட்டல்ல கஷ்டப்பட்டு வேலை செஞ்சு களைச்சு வந்துருப்ப... நீ ரெஸ்ட் எடுண்ணா..."

"உன்னை விடவா..." என்று அவள் வாயை அடைத்தவன் அவளின் கையில் இருந்த பையை வாங்கிக் கொண்டு வெளியில் சென்றான்...

செல்லும் சகோதரனை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்குக் கண்கள் கலங்கியது...

மருத்துவத்தில் எம்.டி வரை கஷ்டப்பட்டு அவனைப் படிக்க வைத்தாயிற்று... இப்போது சென்னையில் தனியார் மருத்துவமனையில் சொற்ப சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறான்... மேற்கொண்டு இதய நோய் பற்றிய ஆய்வு படிப்பு (Cardiology) படிக்க வேண்டும் என்று அவனுக்கு மிகுந்த விருப்பம்... கனவு எல்லாம்... ஆனால் குடும்பச் சூழ்நிலை அதற்கு ஒத்துழைக்காத காரணத்தால் அந்தக் கனவை மறந்துவிட்டு வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறான்...

அபியும் தன்னால் இயன்றளவு அவனின் படிப்பிற்காகச் சேமித்து வருகிறாள்... அதே போல் அவனும் தன் சம்பளத்தில் சேர்த்து வருகிறான் தங்கையின் திருமணத்திற்கு என்று... இருவரும் மற்றவர்களின் நலனைப் பற்றித் தான் யோசித்தனரே தவிர எப்போதுமே தங்களது நலனை பெரிதாய் யோசித்தது இல்லை...

"யாரும்மா வந்தது...?" என்று கேட்டபடி அங்கே வந்தார் கோமதி நாச்சியார்... அவர்களின் பாட்டி... அவர்கள் இருவருக்கும் இருக்கும் ஒரே சொந்தம்...

"அண்ணா தான் வந்தான் ஆச்சி... பால் வாங்க போயிருக்கான்..."

PDF தமிழ் .com

"வந்ததும் வராததுமா போகணுமா...? என்னை எழுப்பி இருக்க வேண்டியது தானே கண்ணு..."

"உங்களுக்குப் பனி ஒத்துக்காது ஆச்சி... இன்னும் கொஞ்சம் நேரம் படுங்க..." என்றவள் வாளியில் தண்ணியை எடுத்துக் கொண்டு வாயிலை நோக்கி சென்றாள்...

காமாட்சி அம்மன் கொலுவீற்றிருக்கும் திசையைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டவள், 'அம்மா... நல்ல வழி காட்டு தாயே...' எப்போதும் போல் மனதில் வேண்டியவள் வெளி வாயிலை கூட்டி பெருக்கி கோலம் போட ஆரம்பித்தாள்...

அதற்குள் ஆதர்ஷ் பால் வாங்கி வந்துவிடப் பாலை காய்ச்சி காபி போட்டு பாட்டிக்கும், அண்ணனுக்கும் கொடுத்தவள் தானும் ஒரு தம்பளரில் காபியை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்...

காபியை வாங்கும் போது அவளின் கையைப் பற்றிய ஆதர்ஷ் அதில் இருந்த காய்ப்புக்களும், தைக்கும் ஊசி குத்தியதால் ஏற்பட்டு இருந்த சிறு சிறு காயங்களையும் கண்டவன் கண்கள் கலங்கியது...

சிறு வயதிலேயே பெற்றோர் இறந்துவிடப் பாட்டியின் கவனிப்பில் தான் இருவரும் வளர்ந்தனர்... இருவரையும் கவனித்து வந்த கோமதிக்கு வயதின் காரணமாகத் தள்ளாமை வந்த போது அவராலும் அதற்கு மேல் உழைக்க முடியவில்லை... அப்போது அபிக்கு பதினைந்து வயது தானாகி இருந்தது... அண்ணனின் படிப்பிற்காகத் தனது படிப்பை பத்தாவதோடு நிறுத்தி கொண்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள்... ஆதர்ஷ் எவ்வளவோ தடுத்த போதும் அவள் வேலைக்குச் செல்வதை நிறுத்தவில்லை... அதே சமயம் சகோதரனின் படிப்பை நிறுத்தவும் சம்மதிக்கவில்லை...

அவர்கள் வசிக்கும் காஞ்சிபுரம் பட்டு நெசவு தொழிலுக்குப் புகழ் வாய்ந்தது... அப்படி ஒரு நெசவு தொழில் செய்யும் ஒருவரிடத்தில் வேலை செய்யப் போன போது தான்

புடவைக்குப் போடும் பூ வேலைப்பாடு, கற்கள் ஒட்டுவது, தைப்பது என்று பல கைத்தொழிலை கற்று கொண்டாள்... பின்னாளில் தையல் கலையும் கற்று கொண்டவள் அதைத் தொழிலாகத் தனியே செய்ய ஆரம்பித்தாள்...

கடந்த ஒன்பது வருடங்களாக அவள் இதைச் செய்து வருகிறாள்... இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ப அவள் செய்து கொடுக்கும் புடவை, ரவிக்கை வேலைப்பாடுகள் வாடிக்கையாளர்களைப் பெரிதும் கவர அவளுக்கு என்று கணிசமான வாடிக்கையாளர்களை அது பெற்றுத் தந்தது... ஆதர்ஷ் வேலைக்குச் சென்ற பின்னும் கூட அவள் தனது தொழிலை கைவிடாமல் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறாள்...

"ஆச்சி... நீங்களாவது அபி கிட்ட சொல்லக் கூடாதா...? இனி மேல் இந்த வேலை எல்லாம் பார்க்க வேணாம்ன்னு..." பாட்டியிடம் தங்கையைப் பற்றி முறையிட்டான் ஆதர்ஷ்...

"நானும் சொல்லத்தான் செய்றேன் ஆது... அபி கேட்கணும்ல..."

"அண்ணா... உன் லட்சியத்தை நீ என்னைக்கு அடையறியோ அன்னைக்கு நான் இதை விட்டுர்றேன் சரியா... அதுக்கு அப்புறம் நீ தான் என்னைப் பார்த்துக்கணும்... நீயே விரட்டி அடிச்சாலும் சரி... நான் உன்னை விட்டு போக மாட்டேன்..." என்றவள் தனது கையில் இருந்த காபியை பருக...

"கட்டாயம் அபி... அதை இப்பவே இருந்து செய்ய நான் தயாரா தான் இருக்கேன்... நீ தான் ஒத்துக்க மாட்டேங்கிற..." ஆதுரத்துடன் சொன்னவனைக் கண்டு சிரித்தே மழுப்பினாள் அவள்...

"நீ ரெஸ்ட் எடுண்ணா... உனக்குப் பிடிச்ச பூரி, கிழங்கு மசாலா பண்றேன்..." என்றவள் சமையலறைக்குச் செல்ல...

"இரு நானும் வர்றேன்..." அவள் சொல்ல சொல்ல கேட்காமல் சமையலறையில் நுழைந்தவன் பூரி மாவு

PDF தமிழ் .com

பிசைந்து கொடுத்ததோடு மட்டும் இல்லாமல் அதைத் தேய்த்தும் கொடுத்தான்...

"அண்ணா... அண்ணிக்காக இப்பவே ட்ரெயினிங் எடுக்கிறியா..." கிண்டலடித்த தங்கையைக் கண்டு,

"சும்மா இரு அபி..." என்று சொன்னாலும் அவனின் உதடுகளும் சிரிக்கத்தான் செய்தது... அதைக் கண்டு கலகலவெனச் சிரித்தாள் அபி...

அண்ணனும் தங்கையும் தங்களுக்குள் பேசி சிரித்துக் கொண்டு வேலை செய்ததைக் கண்டு உள்ளம் பூரித்த கோமதி, "கடவுளே... இவங்க இரண்டு பேரும் இதே பாசத்தோட, அன்போட கடைசி வரைக்கும் ஒத்துமையா இருக்கணும்... தாய் தகப்பன் இல்லாத பிள்ளைங்க ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையா இருக்கணும்..." கடவுளிடம் வேண்டி கொண்டவர் கண்கள் கலங்கியது...

**************************

"அக்ஷய்..." என்றபடி வந்த மதிவதனாவை கண்டு தான் பார்த்துக் கொண்டிருந்த கோப்பை மூடி வைத்தவன்,

"வா மதி..." என்று வரவேற்றான் அவன்...

வேலை நேரத்தில் இப்படி வந்து தொந்திரவு பண்ணுவது அவனுக்கு எப்போதுமே பிடிக்காது... அது அவன் வீட்டில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும்...

ஆனால் இந்த மதிவதனா இடையில் வந்தவளாயிற்றே... அதனால் தான் அவளுக்கு அவனின் குணம் பற்றித் தெரியவில்லை... அப்படியே தெரிந்து இருந்தாலும் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டி கொள்பவளும் அவள் கிடையாது...

மாநில தொழில் அமைச்சரின் மகள் அவள்... அவளுக்காகத் தான் மற்றவர்கள் காத்து இருக்கணுமே ஒழிய... அவள் யாருக்காகவும் காத்து நின்றதும் கிடையாது... கைக்கட்டி நின்றதும் கிடையாது...

அவள் பார்த்து ஆசைப்பட்ட ஒரே ஒரு பொருள் அது அக்ஷய் மட்டும் தான்... தோழி ஒருத்தியின் திருமண வீட்டில் அவனை முதன்முறையாய் பார்த்த போதே அவனின் அழகில், கம்பீரத்தில் மயங்கிவிட்டாள்...

அதை மறைக்காமல் தன் தந்தையிடமும் தெரிவித்து விட்டாள்... எடுத்த எடுப்பில் மறுப்பு தெரிவிக்காத பாரிவேந்தன் அதான் அவளது தந்தை அவனைப் பற்றிய முழுத் தகவல்களையும் திரட்டினார்...

சென்னையில் பல தொழில்களைச் செய்து வரும் பிரபலமான பணக்கார குடும்பத்தின் ஒரே வாரிசு அவன்... பெற்றோர் மற்றும் ஒரே ஒரு தங்கை இருக்கிறார்கள்... எந்தவித பிக்கல் பிடுங்கல் இல்லை என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்பே பச்சை கொடியை காண்பித்தார் மகளின் காதலுக்கு...

அக்ஷய் வீட்டிலும் மதியை தவிர்ப்பதற்குப் பெரிதான காரணம் ஏதும் இல்லை... ஆனால் அவனைச் சம்மதிக்க வைக்க முடியுமா என்று தான் பெரிதும் யோசித்தனர்... ஏனெனில் அவன் எப்போதுமே தன் வழி தனி வழி என்று செல்ல கூடியவன்... யாருக்கும், எதற்கும் கட்டுப்படாதவன் அவன்...

அவனிடம் பெற்றோர் இந்த விசயத்தைக் கூறிய போது ஒரு நொடி கண்களை மூடி யோசித்தவன் பின் சரி என்றான் சம்மதமாக... அவனின் சம்மதம் குறித்து அவனது பெற்றோருக்கே சிறிது ஆச்சிரியம் தான்... உடனே பாரிவேந்தனிடம் பேசி நிச்சயத்தை முடித்துவிட்டனர்...

இன்னும் சில மாதங்களில் திருமணம் இருவருக்கும்...

"அக்ஷய்... நேத்தே சொன்னேனே... நாம ஷாப்பிங் போகணும்ன்னு... நீங்க கிளம்பலையா..." அவள் நியாபகப்படுத்தவும் தான் அவனுக்குமே நியாபகம் வந்தது...

PDF தமிழ் .com

தேவையில்லாமல் கொஞ்சும் மழலை மொழியில் மிளற்றியவளை கண்டு அவனுக்கு எரிச்சலாக வந்தது... வேலை நேரத்தில் இது என்ன தேவையில்லாத தொல்லை என்று மனதுக்குள் சலித்தவன் அவளை நேர்ப்பார்வையாய் பார்த்தான்...

"எனக்கு டைம் இல்லை மதி... நீ போய்ட்டு வா..." என்றவன் தனது கடன் அட்டையை அவளிடம் கொடுத்தான்... அதற்காகத் தான் வந்து இருப்பாள் என்று மனதில் ஏளனமாய் வேறு நினைத்தான்...

"உனக்கு என்ன வேணுமோ வாங்கிக்கோ..." என்றவனைக் கண்டு அவளது முகம் ஆத்திரத்தில் சிவந்தது...

"என் கிட்ட இல்லாத பணமா அக்ஷய்... நான் என்ன பணத்துக்காகவா வந்தேன்... உங்க கூட டைம் ஸ்பெண்ட் பண்ணணும்ன்னு தானே வந்தேன்... அதுக்கு நல்ல மரியாதை தந்துட்டீங்க..." என்று கோபமாய்ப் படபடத்தவளை கண்டு அவனது கோபமும் எகிற தொடங்கியது...

ஆனாலும் முயன்று தன்னை அடக்கி கொண்டான்... ஏனெனில் அவள் ஒரு பொன் முட்டை இடும் வாத்து... அவளை வைத்து தான் அவளது தகப்பன் தொழில் அமைச்சர் மூலம் அவன் பல காரியங்களைச் சாதிக்க வேண்டியது இருந்தது... அந்தக் காரியங்களுக்கு அவள் தேவையாய் இருந்தாள்... அந்தத் தேவைக்காகத் தனது கோபத்தைக் குறைத்தவன் நாற்காலியில் இருந்து எழுந்து அவள் அருகில் வந்தான்...

"கூல் மதி... நான் கார்ட் கொடுத்ததை நீ தப்பா நினைச்சிட்ட... என் பியான்சிக்கு வேண்டிய எல்லாச் செலவும் இனி நான் தான் செய்யணும்... உனக்கு வேண்டிய திங்க்ஸ் எல்லாம் நான் தான் வாங்கிக் கொடுக்கணும்... இனி உங்கப்பாவே ஆனாலும் அவர் கூட உன் கிட்ட உரிமை கொண்டாடுறதை நான் விரும்பலை... பிகாஸ் ஐ லவ் யூ சோ மச்..."

வாய் வார்த்தையாய் அவன் சொன்னாலும் அதில் இருந்த காதலில் மனதை பறி கொடுத்தவளாய் நின்று இருந்தவள் மகுடிக்கு மயங்கும் பாம்பாய் மாறி இருந்தாள்...

"மதி கொஞ்சம் ஹெவி ஒர்க்டா... இல்லை உன் கூட வராம இருப்பேன்னா..." என்று சொன்னவனிடம் நாய்க்குட்டியாய்ச் சுருண்டது அவளது மனம்...

"இட்ஸ் ஓகே அக்ஷய்... இன்னொரு நாள் போகலாம்... உங்களைத் தொந்திரவு பண்ணிட்டேன்... சாரி... நீங்க உங்க வேலையைப் பாருங்க..." குற்றவுணர்வுடன் மன்னிப்பு கேட்டுவிட்டு அவள் சென்றதும்,

'உஷ்... ஹப்பாடா... இம்சை தொலைஞ்சது...' என்று கோபத்துடன் நாற்காலியில் அமர்ந்தவன் தனது வேலையைத் தொடர்ந்தான்...

இது தான் அக்ஷய்... எதிராளியின் மனதை உணர்ந்து அவர்களுக்கு வளைந்து கொடுப்பது போல் வளைந்து அவர்களைத் தன் விருப்பப்படி வளைப்பதில் கெட்டிக்காரன்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவன் முகம் கோபத்தைத் தத்து எடுத்தது...

அடுத்தச் சில மணித்துளிகளில் அவன் காஞ்சிபுரத்தில் இருந்தான்...

அவனின் காரை கண்டதும் அவனது உதவியாளர் மணிவண்ணன் ஓடி வந்தான்...

"மணி... இந்த மாதிரி சின்ன விசயத்துக்கு எல்லாம் என்னைக் கூப்பிடணுமா... ஐஞ்சோ பத்தோ கூடக் கொடுத்து அனுப்ப வேண்டியது தானே..."

"அது வந்து சார்..." இழுத்தான் மணி...

அக்ஷய் அகராதியில் முடியாது என்ற வார்த்தை இருக்கவே இருக்காது... அது அவனுக்குப் பிடிக்காத வார்த்தையும் கூட... அப்படிப்பட்டவனிடம் காரியம் வெற்றி

PDF தமிழ் .com

அடையவில்லை என்று கூறினால் அவ்வளவு தான் ருத்ரதாண்டவம் ஆடி விடுவான்...

"என்ன வந்து போயின்னு பொம்பளை மாதிரி இழுக்கிற... நேரே விசயத்துக்கு வா..."

"மத்த குடித்தனங்காரங்க எல்லாம் பணத்தை வாங்கிட்டு காலி பண்றேன்னு சொல்லிட்டாங்க... ஒரே ஒருத்தங்களைத் தவிர..."

"அந்த வீட்டோட மதிப்பை விடப் பல மடங்கு பணம் கொடுக்கிறோம்ன்னு நீ தெளிவா சொன்னியா...?"

"சொல்லாம இருப்பேன்னா சார்... அதெல்லாம் தெளிவா சொல்லிட்டேன்... அதுக்கு அந்தப் பொண்ணு இது எங்க பாட்டன் பூட்டன் சொத்து இதை இப்போதைக்கு விக்கிற ஐடியா இல்லை... அப்படி விக்கிறப்போ சொல்லி அனுப்பறேன்னு எகத்தாளமா பேசுது சார்..."

"பொண்ணா...?"

"ஆமாம் சார்... சின்ன வயசு தான்... வசதியும் பெருசா இல்லை... ஆனா அதுக்கு இருக்கிற திமிரு..."

"ஓ..." என்று தாடையைத் தடவி கொண்டு யோசித்த அக்ஷய்,

"இதை எப்படி டீல் பண்ணணும்ன்னு எனக்குத் தெரியும்... அந்தப் பொண்ணை நான் பார்க்கணும்... இப்போ உடனே வந்து என்னைப் பார்க்க சொல்லு..." மணிக்கு கட்டளையிட அடுத்தப் பத்தாவது நிமிடம் மணி அபியின் வீட்டில் இருந்தான்...

"உங்க கிட்ட எத்தனை தடவை சொல்லிட்டேன்... நாங்க வீட்டை விக்கிற ஐடியால இல்லைன்னு... சும்மா தொந்திரவு பண்ணாம போங்க சார்..." என்று எரிச்சலில் கத்தியவளிடம் விழி பிதுங்க நின்று இருந்தான் மணி...

அபி சொல்வதிலும் உண்மை இருந்தது... ஆதர்ஷின் படிப்பிற்காகக் கூட அந்த வீட்டை விற்க வேண்டும் என்று

அவர்கள் கனவிலும் எண்ணியது இல்லை... அந்தளவுக்கு அந்த வீட்டின் ஒவ்வொரு செங்கலிலும் அவர்களின் முன்னோர்களின் நினைவுகள் கல்வெட்டாய் செதுக்கி இருந்தது...

"மேடம்... சாரை ஆபிசில் வந்து ஒரு ஐஞ்சு நிமிசம் பார்த்துட்டு போயிருங்க..." ஏறக்குறைய அவன் கெஞ்சினான்...

அப்படியாவது அவள் வர மாட்டாளா என்று...

"நான் தான் விக்கிறது இல்லைன்னு சொல்லிட்டேன்னே... அப்புறம் எதுக்கு உங்க சாரை நான் தேவையில்லாம பார்க்கணும்..." விடாப்பிடியாய் மறுத்தவளிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் மணி அக்ஷய்க்கு அழைத்தான்...

அவனிடம் பேசியவன் அபியிடம், "சார் உங்க கிட்ட பேசணுமாம்..." பவ்யமாய் அலைப்பேசியை அவளிடம் நீட்டினான்...

"நான் தான் வேண்டாம்ன்னு சொல்றேனே..." என்றவளின் கையில் மணி அலைப்பேசியைத் திணிக்க...

வேறுவழியின்றி அதைக் காதில் வைத்தாள்...

"என்ன மேடம் மரியாதையா சொன்னா கேட்க மாட்டீங்களா...? அப்புறம் நான் என்னோட வேலையைக் காட்ட ஆரம்பிச்சேன்னு வைங்க தாங்க மாட்டீங்க..." எடுத்த எடுப்பிலேயே ஒரு மாதிரியாய் விதண்டாவாதமாய்ப் பேசிய அக்ஷய் மீது அவளுக்குக் கோபம் வந்தது...

"சார் இது எங்க வீடு... உங்க வீடு இல்லை..." படபடத்தவளை கண்டு வாய்விட்டு சிரித்தவன்,

"உன் வீட்டை என் வீடா மாத்தி காட்டினா உன்னால என்ன பண்ண முடியும்..." கேலியாய் கேட்டவனின் குரலில் திகைத்து போனாள் அவள்... ஆனாலும் அதைக் காட்டி கொள்ளாமல்,

PDF தமிழ் .com

"இன்னமும் இந்த நாட்டில் நீதி நேர்மை சாகலைன்னு நினைக்கிறேன்..."

"அப்படியா..." என்று போலியாய் வியந்தவன்,

"நான் தோத்ததா சரித்திரம் இல்லை... அதுவும் ஒரு பொண்ணுக்கிட்ட... நோ சான்ஸ்... நீ எல்லாம் மரியாதையா சொன்னா கேட்க மாட்ட... எனக்கு வேண்டியதை எப்படி எடுத்துக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று திமிராய் பேசியவனிடம்,

"உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ..." என்று ஆத்திரமாய்ப் பதில் அளித்தவள் அலைப்பேசியை அணைத்து மணியை நோக்கி விசிறியடித்தாள்...

"உன் முதலாளி கிட்ட போய்ச் சொல்லு... எங்களை மாதிரி ஏழைங்களுக்கு தெய்வம் துணை இருக்கும்ன்னு..."

அவளைப் பார்த்து அவனுக்குமே பாவமாய் இருந்தது... அவனும் தொழிலாளி வர்க்கம் அல்லவா...

"தங்கச்சி... நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதேம்மா... எங்க சார் நினைச்சா நினைச்சதை நடத்தி முடிக்கிறவர்... அவர் முன்ன வச்ச காலை பின்ன வச்சு நான் பார்த்தது இல்லை... அது எந்த விலை கொடுத்துன்னாலும் செஞ்சு முடிச்சிடுவாரு... இதுக்கான விலை என்னவோன்னு எனக்குப் பயமா இருக்கும்மா..." என்றான் அக்ஷயின் குணம் அறிந்தவனாய்...

அவனது தங்கை என்ற விளிப்பில் சற்றுக் கோபம் குறைந்தவள், "அப்படி என்ன செஞ்சிருவான்னு நானும் பார்க்கிறேன்..." என்று தைரியமாக நிமிர்ந்து கூறியவளை கண்டு அவனுக்கு வருத்தமாய் இருந்தது...

"எதுக்கும் பார்த்து பத்திரமா இருந்துக்கோம்மா..." என்றவன் அங்கிருந்து கிளம்பினான்...

'அப்படி அவனால் என்ன பெரிதாய் செய்துவிட முடியும்... அக்கம் பக்கத்துல ஆட்கள் இல்லையா என்ன...?' மனதில்

நினைத்தவள் அவனின் நினைவுகளைப் புறந்தள்ளிவிட்டு தனது வேலைகளைப் பார்க்க சென்றாள்...

அங்கே அக்ஷய் கூண்டில் அடைப்பட்ட புலியாய் அறைக்குள் நீள அகலங்களை அளந்து கொண்டு இருந்தான்...

அவனின் காதுகளில் அவள் கூறிய வார்த்தைகளே மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு இருந்தது...

'உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ...'

"பார்க்கத்தான்டி போறேன்... நீயா...? நானான்னு...?" மேசை மீது ஆங்காரமாய்க் கையைக் குத்தியவன் கண்கள் வெறியில் பளபளத்தது...

அன்று மாலையே கடைவீதிக்கு வந்த அபி கடத்தப்பட்டாள்...

பூக்கும்...

PDF தமிழ் .com

தெருவில் வசிப்போரின் பார்வை தன்னை ஒரு மாதிரியாய் கேவலமாய்ப் பார்ப்பதை உணர்ந்த அபிக்கு உடல் கூனிக்குறுகி போனது... பிறந்ததில் இருந்து அங்கே தான் அவள் வசிக்கிறாள்... அந்தத் தெருவாசிகள் எல்லோரும் தனது சொந்தப் பந்தம் என்ற நினைவில் தான் இது நாள் வரை இருந்து வந்து இருக்கிறாள்... அந்த நினைவு ஒரு நாள் இரவில் மாறிவிடும் என்று அவள் கனவிலும் நினைத்துப் பார்த்தது இல்லை...

நேற்று மாலை அவள் தைப்பதற்குத் தேவையான நூல் வகைகள், பலவித வண்ண கற்களைக் கடைவீதிக்கு சென்று வாங்கி விட்டு வீட்டிற்கு வரும் வழியில் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டாள்... ஏன் எதற்கு என்று ஒரு வார்த்தை கூட அவர்கள் சொல்லவில்லை... பேசவில்லை... அவள் கேட்டதற்கும் பதில் இல்லை...

இரவு முழுவதும் ஒரு இருட்டு அறையில் அவளை அடைத்து வைத்து இருந்தனர்... கொஞ்சம் தைரியமான பெண் ஆதலால் அவள் பயப்படாமல் அந்தச் சூழ்நிலையைத் தைரியமாக எதிர் கொண்டாள்... ஆனாலும் அவள் மனதுக்குள் சிறு பயம் இருந்தது... ஏனெனில் இப்போது தொலைக்காட்சியில், நாளிதழ்களில் வரும் செய்திகள் அப்படிப்பட்டது... ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பது போல் அவளது பெண்மைக்கு எந்தவித களங்கமும் ஏற்படவில்லை... கடத்தியவர்களின் நோக்கம் என்ன என்று அவளுக்கு விளங்கவில்லை... அவர்களுக்குப் பணம் கொடுக்கும் அளவுக்கு அவள் ஒன்றும் வசதியானவள் கிடையாது... என்ன காரணம் என்று யோசித்துப் பார்த்தும் விடை தான் கிடைக்கவில்லை...

இன்று அதிகாலையில் புறநகர் பகுதியில் இருந்த பேருந்து நிலையத்தில் அவளை இறக்கிவிட்டு விட்டு அவர்கள் சென்றுவிட்டனர்... நல்லவேளை நேற்று மாலை அவளின் கைப்பை பறித்துத் தங்களிடம் வைத்து இருந்தவர்கள்

இப்போது தான் அவளிடம் கொடுத்து இருந்தனர்... அதனால் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தாள்...

"இப்பத்தானே புரியுது இவ அண்ணனை எப்படி டாக்டருக்கு படிக்க வச்சாள்ன்னு... இது எல்லாம் ஒரு பொழைப்புன்னு... த்தூ... மானங்கெட்ட பொழைப்பு..." அங்கு வந்த ஒரு பெண்மணி அவளைக் கண்டு காறி உமிழ்ந்து விட்டு செல்ல அதில் துடித்துப் போனவள் அவரை நேர்பார்வையாய் பார்த்தாள்...

"ஏன் மாமி... என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாது... நான் என்ன அப்படிப்பட்டவளா...?"

"எந்தப் புத்துல எந்தப் பாம்போ யார் கண்டது...?" முகவாயை தோளில் இடித்துக் கொண்டு சென்றவரை ஆதங்கத்துடன் பார்த்தவள் பின் பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமன் செய்து கொண்டு நிமிர்ந்து நின்றவள் அதே நிமிர்வுடன் தனது வீடு நோக்கி சென்றாள்...

'நான் எந்தவித தப்பும் செய்யவில்லை... அது என் மனசாட்சிக்கு தெரியும்... என் வீட்டில் உள்ளவர்களுக்கும் அது தெரியும்... அவர்கள் என்னை நம்பினால் போதும்...' என்ற எண்ணமே அவளிடத்தில் இருந்தது...

வீட்டிற்குள் நுழைந்தவளை கண்டு, "அபி கண்ணு எங்கேம்மா போயிருந்த... உன்னைக் காணாம தவிச்சு போய்ட்டேன்..." கதறிக் கொண்டு தன்னை அணைத்துக் கொண்ட பாட்டியை கண்டு அவளுக்குமே கண்கள் கரித்தது...

"அபிம்மா... எங்கேடா போன...? ஆச்சி பயந்து போய் எனக்கு ஃபோன் பண்ணினாங்க... நேத்து நைட் பூராவும் நானும் என் பிரெண்ட்சும் தேடாத இடம் இல்லை..." பரிதவிப்புடன் கேட்ட அண்ணனை கண்டதும் அத்தனை நேரம் இருந்த அவளின் உறுதி குலைய அவனது தோளில் சாய்ந்து விசும்பினாள்...

PDF தமிழ் .com

"என்னம்மா என்ன ஆச்சு...?" ஆதர்ஷ் இன்னமும் தன் தங்கை கடத்தப்பட்டு இருப்பாள் என்று எண்ணவில்லை...

ஆனாலும் இது நாள் வரை எங்கேயும் இரவு தங்காத தங்கை நேற்று இரவு எங்கோ சென்று இருக்கிறாள் என்றால்... அது எங்கே...? ஏன்...? என்ற கேள்விகளும் அவனது மனதை குடையத்தான் செய்தது... அதற்காக அவளை அவன் சந்தேகம் கொள்ளவில்லை...

நேற்று மாலை அபி வீட்டிற்கு வரவில்லை என்றதுமே கோமதி பதறி போய் அவனுக்கு அழைத்து விசயத்தைக் கூற அவன் அபியின் அலைப்பேசிக்கு தான் முதலில் அழைத்தான்... ஆனால் அது எடுக்கப்படாமல் அணைத்து வைக்கப்பட்டு இருக்க ஏதோ விபரீதம் என்று உணர்ந்தவன் அடுத்த நொடி விடுப்பு எடுத்துக் கொண்டு காஞ்சிபுரம் ஓடி வந்தான்... தங்கை எங்கே சென்று இருப்பாள் என்று அவனுக்கும் தெரியவில்லை...

காவல் நிலையம் செல்லவும் பயமாய் இருந்தது... ஒருவேளை ஏதாவது வேலை விசயமாய் அவள் சென்று இருந்து தாமதமாக வர நேர்ந்தால் அதன் பின் காவல்நிலையத்தில் அபியை அலைய வைத்து அலைக்கழித்து விடுவார்களோ என்ற பயம் அவனுக்கு இருந்தது... நடுத்தரவர்க்க மக்களின் அடிப்படை பயம் அது...

நேரம் நேரம் செல்ல பயம் வயிற்றில் புளியை கரைக்க அதனால் தனது நெருங்கிய நண்பர்களின் உதவியோடு தங்கையைத் தேடி அலைந்தான்... காஞ்சிபுரம் பெரும் நகரம் கிடையாது... கிட்டத்தட்ட இரண்டு மூன்று மணி நேரத்தில் அவர்கள் எல்லோரும் எல்லாப் பக்கமும் சல்லடை போட்டு தேடி களைத்து போயினர்...

தங்கை எங்கே என்று தெரியாத கவலையில் பயம் மனதை கவ்வினாலும் அவன் மனதில் பெரும் நம்பிக்கை இருந்தது... இப்படிப் பொறுப்பற்றுச் சொல்லாமல் கொள்ளாமல் வெளியில் தங்கும் அளவுக்கு அபி ஒன்றும் விளையாட்டுப் பெண் அல்ல... யாருக்காவது ஏதாவது அவசர தேவை இருந்து இருக்கும்... அவர்களுக்கு

உதவியாகத் தங்கை போயிருக்கலாம் என்று அவன் நினைத்தான்...

அவளை யாரோ கடத்தி கொண்டு போயிருப்பார்கள் என்று அவன் நினைக்கவில்லை... ஏனெனில் இது அவர்கள் பிறந்து வளர்ந்த ஊர்... எல்லோருக்குமே இவர்களை நன்கு தெரியும்... அதனால் அவன் மனதில் அந்த மாதிரி எண்ணங்கள் வரவில்லை... வந்தாலும் தங்கை மீது நம்பிக்கை இருந்தது...

"அண்ணா..." என்று அழுதவள் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் அவனிடத்தில் கூறினாள்...

அவள் கூறியதை கேட்டு அவனும், பாட்டியும் அதிர்ச்சியில் உறைந்துவிட்டனர்... அவளைக் கடத்தி கொண்டு போகும் அளவுக்குத் தங்களுக்கு யார் எதிரி இருக்கக் கூடும்... அவனால் அதை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை...

"அபி... வாம்மா போய்ப் போலீஸ் ஸ்டேசன்ல கம்ப்ளையிண்ட் கொடுத்துட்டு வரலாம்..." அவன் தங்கையை அழைத்தான்... தங்கைக்கு நேர்ந்த விபரீதம் கண்டு சகோதரனாய் அவனது இரத்தம் கொதித்தது...

"ஆது வேணாம்டா... கல்யாணமாக வேண்டிய பொண்ணுப்பா..." கோமதி கண்கலங்க கூற...

அபியும் அதை மறுத்தாள்... ஆனால் அவளது பயம் வேறு விதமாய் இருந்தது... சமீபகாலமாகக் காவல் நிலையங்களில் நடக்கும் குற்றங்களைக் கண்டு அவளுக்குமே சற்று உதறலாகத் தான் இருந்தது...

"வேண்டாம்ண்ணா... அங்கே போறதுக்குப் பயமா இருக்கு... இருக்கிற பிரச்சினையைப் பெருசாக்க வேண்டாம்... அதான் எனக்கு ஒண்ணும் ஆகலையே..." என்று அவள் முடித்துக் கொண்டாள்...

"அவங்களை உனக்கு அடையாளம் தெரியுமா அபி..." விடாமல் கேட்ட சகோதரனை பார்த்தவள் இல்லை என்று தலை அசைத்தாள்...

PDF தமிழ் .com

கண்ணைக் கட்டி அழைத்துச் சென்றவர்கள் கண்ணைக் கட்டி அவளைப் பேருந்து நிலையத்தில் விட்டு விட்டு போய்விட்டனர்... அவள் கண் கட்டை கஷ்டப்பட்டு அவிழ்த்து முடிப்பதற்குள் அவர்களை அங்கே காணவில்லை...

"விடுண்ணா... இனி வெளியில் போகும் போது ஜாக்கிரதையா இருக்கேன்..." என்றவள் தனது அறைக்குச் சென்றாள்...

என்ன தான் அபி விடு என்றாலும் ஆதர்ஷின் மனம் அடங்காமல் கொதித்தது... இந்தக் காரியத்தைச் செய்தவன் மட்டும் உயிரோடு எதிரில் இருந்து இருந்தால் கண்டம் துண்டமாய் வெட்டி போட்டு இருப்பான்... அந்தளவுக்கு ஆங்காரம் வந்தது அவனுக்கு...

உடையை மாற்றிக் கொண்டு இருந்த அபியும் அதைத் தான் யோசித்துக் கொண்டு இருந்தாள்... யாராய் இருப்பார்கள்... தன்னைக் கடத்தும் அளவிற்குத் தன்னிடம் அப்படி ஒன்றும் இல்லையே... தன்னை ஏன் கடத்தி இருப்பார்கள் என்று குழப்பம் அடைந்தாள்...

அதை விட ஆச்சிரியமான விசயம் என்ன என்றால் அவளின் மேல் விரல் நுனி கூடப் படாமல் அவளைத் திருப்பி அனுப்பியது தான்... அது அவளுக்கு ஆச்சரியமாக இருந்த போதிலும் பெருத்த நிம்மதியை அளித்தது என்றால் மிகை இல்லை...

கைப்பையில் இருந்த பொருட்களை எடுத்து வைத்தவள் அதில் இருந்த அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டு இருப்பதை உணர்ந்து அதை உயிர்ப்பித்தாள்... அவள் உயிர்பிப்பதற்காகவே காத்திருந்தது போல அடுத்த நொடி அது அலறியது...

தெரியாத எண்ணாக இருந்த போதிலும் எடுத்து பேசினாள்... அவள் செய்யும் தொழிலில் வாடிக்கையாளர்கள் பலர் அவளை எந்நேரமும் அழைப்பார்கள்... அதனால் அழைப்பை தவிர்க்க இயலாது...

"எப்படி இருக்க...? நல்லா இருக்க மாட்டேன்னு எனக்கு நல்லாவே தெரியும்..." எகத்தாளமாய் ஒலித்த குரலில் அவளது புருவம் இரண்டும் யோசனையாய்ச் சுருங்கியது...

"யார் நீ...?"

"உன்னால என்ன பண்ண முடியும்ன்னு என்னைக் கேட்டேல்ல... அதே ஆள் தான் நான்..." இப்போது அவளுக்குப் புரிந்து போனது அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் யார் என்று...

"என்னால என்ன செய்ய முடியுமோ அதைச் செஞ்சு காட்டிட்டேன்... கேவலம் ஒரு பொட்டச்சி என்னைப் பார்த்து சவால் விடுறதா... ஒரு ஆம்பிளை நினைச்சா எதுவும் செய்ய முடியும்ன்னு நான் செஞ்சு காட்டிட்டேன்... உன் மேல விரல் நுனி படாம உன்னோட நடத்தையைக் கேள்விக்குறியா இப்ப நான் மாத்திட்டேன்... இனியும் இடத்தைக் காலி பண்ண மாட்டேன்னு அடம் பிடிச்சேன்னு வை... அடுத்து உன்னோட கற்பை கேள்விக்குறியா மாத்திருவேன்... இப்பவாவது நான் சொல்றதை கேட்கிறியா என்ன...?"

அவன் யார் என்று அவளுக்குப் புரிந்து போனது... இவனை எப்படித் தான் மறந்தோம் என்று உள்ளம் குமைந்து போனாள்... தான் கடத்தப்பட்டதுக்குக் காரணம் இவன் தான் என்றதும் அவளது மனதில் அளவில்லா வெறுப்பு எழுந்தது...

தான் ஒன்பது வருடங்களாகப் பாடு பட்டு உழைத்து முன்னேறியதை ஒரு நொடியில் அழித்த அந்த அரக்கனை கொன்று குவிக்க அவளது உள்ளம் ஆத்திரம் கொண்டது... தனது பெயருக்குக் களங்கம் கற்பித்த அவனுக்குத் தானும் பாடம் புகட்ட வேண்டும் என்று மனம் தவியாய்த் தவித்தது...

"காலம் காலமா ஆண்கள் கடைப்பிடிக்கிற கேவலமான டெக்னிக்கை பயன்படுத்த உனக்கு வெட்கமா இல்லை... நீ எல்லாம் ஒரு ஆம்பிளை..."

PDF தமிழ் .com

அதைக் கேட்டதும் அவனது ஆத்திரம் தலைக்கேறியது...

"ஏய் மரியாதையா பேசுடி..." என்று சீறினான்...

"உனக்கு என்னடா மரியாதை வேண்டி கிடக்கு... நீ இப்படிப் பண்ணியதால நான் கெட்டவள் ஆகிருவேனா... என் மனசாட்சிக்கு தெரியும் நான் நல்லவள் தான்னு..."

"உன் மனசாட்சி வந்து ஊரார் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியுமா... இல்லை சாட்சி தான் சொல்ல முடியுமா...? இங்கே பாரு இந்த அளவுக்கு அவமானப்பட்ட பிறகும் நீ அந்தத் தெருவில், அதே வீட்டில் வாழ்ந்தே ஆகணுமா...? மானம் உள்ளவள்ன்னா வீட்டை எழுதி கொடுத்துட்டு போய்ட்டே இரு..." அலட்சியமாய்ப் பேசியவனைக் கண்டு அவளது உள்ளம் கொதித்தது...

"முடியாதுன்னா என்ன பண்ணுவடா... உன்னை மாதிரி ஆட்களைக் கண்டு நான் பயப்பட மாட்டேன்... நீ இதுக்கு மேல டார்ச்சர் கொடுத்த நான் மீடியாவுக்குப் போவேன்... உன் பெரிய மனுசன்ங்கிற முகத்திரையை நான் கிழிப்பேன்... அதுக்கு அப்புறம் எந்த மூஞ்சியை வச்சிட்டு நீ வெளியில் வர்றேன்னு நான் பார்க்கிறேன்..."

அவளின் பேச்சை கேட்டு அவனிடத்தில் சிறிது நேரம் பதில் இல்லை...

"என்ன பயந்துட்டியா...?" கேலி போல் அவள் கேட்டாள்...

அவனை வாயடைக்கச் செய்ததில் அவன் செய்த செயலுக்குப் பழிக்கு பழி வாங்கி விட்ட திருப்தி எழுந்தது அவள் மனதில்...

"இல்லை எந்த முகமூடியை மாட்டிக்கிட்டு வெளியில் போகலாம்ன்னு யோசிச்சேன்..." என்று சிரித்துக் கொண்டே சொன்னவனின் குரல் அடுத்த வினாடி கடுமைக்கு மாறி இருந்தது...

"என்னடி எகத்தாளமா பண்றே... உன்னை மாதிரி ஆளுங்க கிட்ட நான் மதிச்சு பேசுறதே பெரிய விசயம்... இதில் நீ

என்னைக் கேலி பண்றியா... சரி... நேரே விசயத்துக்கு வர்றேன்... உனக்கு ஒரு அண்ணன் இருக்கானாமே... அதுவும் டாக்டரா இருக்கானாமே..."

அவன் கேட்ட தொனியில் அவளது உள்ளம் பதறியது...

"அவனை எதுக்குடா இப்போ இழுக்கற...?" பதட்டத்துடன் கேட்டவளை கண்டு அவன் வாய்விட்டு நகைத்தான்...

"தான் ஆடலைன்னாலும் தன் சதை ஆடும்ன்னு சும்மாவா சொன்னாங்க... பாச மலர்கள்... ம்..." என்றவன்,

"அவனுக்கும் சொத்துல உரிமை இருக்குல்ல... அதனால தான் அவனை இழுத்தேன்... நீ சொன்னா அவன் கேட்பானாமே... அதனால நீயே அவன் கிட்ட வீட்டை விக்கிறது பத்தி பேசுற..."

மீண்டும் வீட்டில் வந்து நின்றவனிடத்தில், "முடியாது..." என்று அவள் மறுப்பு தெரிவிக்க...

"அப்படியா... அப்போ சரி இன்னும் ஒரே நாளில் உன் அண்ணன் வீட்டிற்கு வந்து சேருவான்... அவனுக்கும் சேர்த்து உழைக்க நீ தயாரா இரு..."

"என்ன பண்ண போற...?" கேட்டவளின் வார்த்தையில் அத்தனை பயம் இருந்தது... அண்ணன் என்றதும் அவளால் எதையும் யோசிக்க முடியவில்லை...

"என்ன பண்ணுவேணா...உன் அண்ணன் வாழ்க்கையில் ஸ்டெதஸ்கோப்பை கையில் எடுக்க முடியாதபடி பண்ண என்னால் முடியும்... வேணும்ன்னா சவால் விட்டு பார்க்கிறியா...?" ஆங்காரமாய்க் கேட்டவனின் குரல் தான் சொன்னதைச் செய்வேன் என்று அவளுக்கு நன்கு உணர்த்தியது...

இப்போது அவனைப் பத்தி அவளால் நன்கு உணர முடிந்தது... தன் மேல் விரல் நுனி கூடப் படாமல் தன்னைக் களங்கப்படுத்தியவனால் தனது அண்ணனின் மருத்துவத் தொழிலுக்கும் களங்கம் விளைவிக்க முடியும் என்று...

PDF தமிழ் .com

"இப்போ நான் என்ன செய்யணும்...?" கேட்டவளின் குரல் நடுங்கியது...

தனக்கு வந்த களங்கத்தை எதிர்த்து போராட முடிந்தவளால் தனது சகோதரனுக்கு ஒன்று என்றதும் அவளால் மேற்கொண்டு யோசிக்க முடியவில்லை... சகோதரனுக்காக உயிரையும் கொடுப்பவள் அவள்... அவனுக்காக இந்த வீட்டை விட்டுக் கொடுப்பதில் அவளுக்கு எந்தவித வருத்தமும் இல்லை...

"தட்ஸ் குட்... சொன்னதும் புரிஞ்சிக்கிட்டியே... இந்த வீட்டை எங்களுக்குக் கொடுத்துட்டு மூட்டையைக் கட்டும் வழியைப் பாரு..." என்றவன், "ஆங்... ஒரு விசயம்... நீ ரொம்ப வீம்பு பிடிச்சதால மார்க்கெட் ரேட்டை விடக் கம்மியா தான் கொடுக்க முடியும்..." இரக்கமே இல்லாமல் கூறியவன் பேச்சு முடிந்ததற்கு அர்த்தமாய் அழைப்பை துண்டித்தான்...

அவன் யார் என்று தெரியாது... அவன் முகம் தெரியாது... ஆனால் அவனது குரல் அவளது காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது...

பெரும் யோசனையுடன் கனத்த மனதுடன் அறைக் கதவை திறந்து கொண்டு வந்தவளை அந்தத் தெருவில் இருக்கும் சில குடித்தனக்காரர்கள் வரவேற்றார்கள்...

ஆதர்ஷ் மற்றும் கோமதியின் முகம் அவமானத்தில் கறுத்து இருந்தது...

அவளைக் கண்டதும் ஆதர்ஷ், "நீ போய் ரெஸ்ட் எடு அபி..." என்று அவளை உள்ளே அனுப்ப முயன்றான்...

"ஏன்ம்மா அபி... நேத்து நைட் முழுசும் நீ வீட்டுக்கு வரலையாமே... எங்கே போயிருந்த...?" அங்கிருந்த பெண் ஒருத்தி கேட்க...

"இதெல்லாம் கேட்கிற விசயமா... நாமளே புரிஞ்சிக்கிற விசயம் இது... நைட் காணாம போய்க் காலையில் வந்து இருக்காள்ன்னா என்ன அர்த்தம்... நைட் பண்ண வேண்டிய

தொழிலை பண்ணிட்டு வந்திருக்கான்னு அர்த்தம்..." என்று ஒருவர் கூற...

"டேய் என் தங்கச்சியை எப்படிடா நீ இப்படிப் பேசலாம்...?" என்று ஆதர்ஷ் அவர் மீது பாய்ந்துவிட்டான்...

"அண்ணா... விடுண்ணா..." அபி தான் இடையில் புகுந்து தடுத்தவள் வந்து இருந்தவர்களைக் கண்டு கையைக் கூப்பி,

"தயவுசெஞ்சு நீங்க எல்லாம் கிளம்புங்க..." என்று அவர்களைப் பார்த்து கூறியவள் வாயிலை நோக்கி கையைக் காண்பித்தாள்...

"தப்பு செஞ்சிட்டு என்ன தெனாவெட்டா இருக்கா பாரேன்..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவர்கள் களைந்து செல்ல கதவை மூடிவிட்டு வந்தவள் அண்ணனிடம்,

"நாம சென்னைக்குப் போயிரலாம்ண்ணா..."

"அபி..." என்றான் அதிர்ச்சியும் ஆனந்தமும் கலந்து...

அவன் எவ்வளவோ வற்புறுத்திய போதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிறந்த இடத்தை விட்டு வர சம்மதிக்காதவள் இன்று அவனுடன் சென்னை வர சம்மதிக்கிறாள் என்றாள் அவளது மனம் எந்த அளவிற்குக் காயப்பட்டு இருக்கும்...

"கட்டாயம் போகலாம் அபி... நீங்க ரெண்டு பேரும் என் கூட இருக்கிறது எனக்குச் சந்தோசம் தான்டா..."

"இந்த வீட்டை வித்திட்டு ஒரேடியா சென்னைக்குப் போயிரலாம் அண்ணா..." என்றவள் அதற்கு மேல் தாங்க முடியாமல் கதறிவிட்டாள்...

கடைசியில் அவளது வாயாலேயே வீட்டை விற்குமாறு சொல்ல வைத்து விட்டானே அந்தக் கொடியவன்... அவளது முன்னோர்களின் நினைவுகளை அழிக்கச் சொல்லி அவள் வாயில் இருந்தே வார்த்தைகளை வர செய்துவிட்டானே

PDF தமிழ் .com

அந்தக் கயவன்... தாங்கொண்ணா துயரத்தில் அவள் அழுகையில் பொங்கினாள்...

ஆனால் ஆதர்ஷோ அவளது அழுகையை வேறு விதமாய் எண்ணி கொண்டான்... அவளைப் பற்றிய பேச்சுக்களைத் தாங்க முடியாமல் அவள் அழுகிறாள் என்று... அவனுக்குமே தங்கையைப் பற்றி அக்கம் பக்கத்தினர் பேசியது கண்டு கோபமாய் வந்தது... அவளைப் பிறந்ததில் இருந்து பார்ப்பவர்கள் அவர்கள்... அவர்களே அப்படிப் பேசினால் மற்றவர்களை என்ன சொல்வது...

"உனக்குப் பிடிக்கலைன்னா நாம இந்த ஊரையே மறந்துருவோம் அபி... எனக்கு உன்னை விட எதுவுமே முக்கியம் இல்லை..."

அவனது கூற்றைக் கோமதியும் ஏற்றுக் கொண்டார்... உயிர் உணர்வுள்ள பேத்தியின் மகிழ்ச்சி முன்னால் ஜடப்பொருளான செங்கலால் ஆன வீடு அர்த்தம் அற்றுப் போனது...

ஆதர்ஷ் வீட்டை விற்பது அறிந்து ஊள்ளூர் தரகர் மூலம் அக்ஷய் அதை வாங்கிக் கொண்டான்... ஆனால் எந்த இடத்திலும் அவன் தன் முகத்தையோ அடையாளத்தையோ காட்டவில்லை... அவனது முகம் அறியாது தொழில் அடையாளத்தை மட்டும் அறிந்தவள் அபி மட்டுமே... அவளும் அதைச் சொல்லும் மனநிலையில் இல்லை...

ஊரை விட்டு போகும் அவசரத்தில் ஆதர்ஷும் கிடைத்த விலைக்கு வீட்டை விற்று விட்டுச் சென்னையில் தங்கை மற்றும் பாட்டியுடன் குடியேறினான்... அதன் பின்பே அபியால் நிம்மதி பெருமூச்சு விட முடிந்தது... இனி தன் அண்ணன் மருத்துவத் தொழிலுக்கு எந்தப் பாதகமும் இல்லை என்று தெரிந்ததும் அவளும் தனது கைத்தொழிலை வீட்டில் இருந்தே ஆரம்பித்து விட்டாள்...

முதலில் அக்கம் பக்கத்தவர்களுக்கு அவள் செய்து கொடுக்க ஆரம்பித்தாள்... அப்படியே அது விரிந்து அந்தப்

பெரும் நகரத்தில் நிறைய வாடிக்கையாளர்களைப் பெற்றுத் தந்தது...

தனியே தங்கை கஷ்டப்படுவதை உணர்ந்த ஆதர்ஷ் வீட்டை விற்ற பணத்தில் ஒரு சின்னக் கடையை விலைக்கு வாங்கிக் கொடுத்தவன் அவளின் உதவிக்கு இரு பெண்களை வேலைக்கு அமர்த்திக் கொடுத்தான்... இப்போது அவளுக்கு ஓரளவு வருமானம் வர ஆரம்பித்தது...

ஆதர்ஷை மேல் படிப்புப் படிக்கச் சொல்லி அவள் வற்புறுத்த அவனோ அவளது திருமணம் மற்றும் புதிய வீடு வாங்க என்று அதற்காகப் பணம் சேர்க்க ஆரம்பித்தான்... எப்படி இருந்தாலும் அவர்களுக்குப் பணத்தேவை மட்டும் குறையவில்லை...

அக்ஷய் அதன் பின் அபியை மறந்து போனான்... அவன் தொழில் வாழ்க்கையில் இது போல் தினம் ஆயிரம் பேரை பார்ப்பவன்... அதனால் அப்படி ஒருத்தி அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டது இப்போது அவன் நினைவில் இல்லை...

அவள் வீட்டை வாங்கிய அந்தப் பகுதியில் நீச்சல் குளத்துடன் கூடிய பெரிய குடியிருப்பைக் கட்டியவன் தொலைக்காட்சியில் சென்னைக்கு மிக அருகில் பிரமாண்டமான குடியிருப்பு என்று அதை விளம்பரம் செய்து லாபகரமாய் விற்று பணத்தையும் அள்ளிவிட்டான்...

அதில் எல்லாம் அவன் கைத்தேர்ந்த வணிகன்... அவன் கணக்கில் என்றும் லாபம் மட்டுமே பார்ப்பவன்... நஷ்டம் என்ற ஒன்றை அறியாதவன்... அறியாதவன் என்பதை விட அதைத் தன்னிடத்தில் நெருங்க விடாதவன் என்று சொன்னால் மிகப் பொருத்தம்...

அத்தகைய கடுமையான அக்ஷய் உயிராய் இருக்கும் நபர் ஒருவர் உண்டு... அது அவனது தங்கை அனித்ரா...

எல்லோரிடமும் இவ்வளவு ஏன் பெற்றோரிடத்தில் கூடத் தள்ளி நின்று பழகும் அக்ஷய் தங்கை இடத்தில் மட்டும்

கண்மூடித்தனமான பாசத்தைக் கொட்டுவான்... ஏனெனில் அவனுக்கும் அவளுக்கும் கிட்டத்தட்ட ஒன்பது வருடம் வித்தியாசம்...

அந்தச் சின்ன வயதில் தேவதை மாதிரி இருந்த அந்தக் குட்டிப்பெண்ணைக் காட்டி 'இது தான் உன் தங்கை... அவளைப் பத்திரமா பார்த்துக்கணும்... பாசமா வச்சுக்கணும்' என்று சொன்ன போது அந்தக் கபடம் இல்லா வயதில் அவனிடத்தில் தோன்றிய பாசம் அது... அது இன்று வரை அவனிடத்தில் குறையவில்லை...

எதற்கும் களங்காதவன் அவளுக்கு ஒன்று என்றால் களங்கி தவித்துப் போவான்... அவனது பலகீனம் அவனது தங்கை... அவனது அளவுக்கு அதிகமான செல்லத்தினாலோ என்னமோ அனித்ரா பெற்றோர் பேச்சை கூடக் கேட்க மாட்டாள்... அண்ணன் பேச்சை மட்டும் கேட்பாள்... அவனை மாதிரியே சுயநலவாதி... அவனை மாதிரி அந்தஸ்து பேதம் பார்ப்பவள்... மொத்ததில் பெண் உருவில் இருக்கும் அக்ஷய் அவள்...

அக்ஷய் இரண்டு மாத பயணமாக வெளிநாடு சென்று இருந்தான்... அதனால் அனித்ரா அவிழ்த்துவிட்ட கன்று குட்டியாய் ஊரை சுற்றினாள்...

அவளுக்கு ரஞ்சித் என்ற காதலன் இருந்தான்... இருவரும் ஒரே கல்லூரி... ஒரே வகுப்பு... ஒரே வயதினர்... அன்று ரஞ்சித் அவளைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று இருந்தான்...

"ரஞ்சி வீட்டில் யாரும் இல்லையா...?" அனியின் கண்கள் அவனது வீட்டை வலம் வந்தது...

ரஞ்சித்தும் பெரிய பணக்கார வீட்டின் வாரிசு தான்...

"இல்லை ஊருக்கு போயிருக்காங்க அனி... நாளைக்கு வந்திருவாங்க..." என்றவன் அவளுக்கு வீட்டை சுற்றிக் காட்டினான்...

சிறிது நேரம் பேசி கொண்டு இருந்தவர்களைத் தனிமையும் இளமையும் சேர்ந்து சற்று எல்லை மீறி நடக்க வைத்தது...

"வேண்டாம் ரஞ்சி..." என்று பெண்ணுக்கே உண்டான அச்சத்தில் அவள் சம்மதிக்க மறுத்தாள்...

"ஒரு கிஸ் தானே கேட்கிறேன்... இதுக்குப் போய் ஏன் இவ்வளவு அலட்டிக்கிற...?" என்றவன் அவளை அணைத்து முத்தமிட்டான்...

கூடாமல் கூடி, களைக்காமல் அவளைக் களைத்தவன் அதைத் தனது அலைப்பேசியில் காணொளி காட்சியாய் எடுத்ததை உணர்வின் பிடியில் இருந்தவள் கவனிக்கவில்லை...

பெண்ணின் எல்லா அணுக்களும் எந்த நேரத்திலும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்... ஆனால் அவளின் உணர்வுகளோ இளமையின் இச்சைக்கு இணங்கி தன்னை மறந்து மயங்கி இருந்தது...

அடுத்து வந்த தினங்களில் அந்தக் காணொளி கல்லூரி இளசுகளின் பட்டியலில் முதலிடம் பிடித்து இணையத்தில் வைரலாகப் பரவியது...

பூக்கும்...

அனித்ராவின் தோழி ஊர்மிளா அந்தக் காணொளியை பார்த்துவிட்டு அதிர்ந்தவள் அவளுக்கு அதை அனுப்பி வைத்தவள் உடனே அவளை அலைப்பேசியில் அழைத்தாள்...

"அனி... என்ன இது...? நீயா இப்படி...?" ஊர்மிக்கு அதிர்ச்சியாக இருந்தது...

அதைப் பார்த்த அனித்ராவுக்குமே பேரதிர்ச்சியாகத் தான் இருந்தது... அவளது கோபம் எல்லாம் ரஞ்சித் மீது திரும்பியது...

'யூ சீட் ராஸ்கல்...' மனதில் அவனைத் தீட்டி தீர்த்தாள்...

"அனி... லைன்ல இருக்கியா...?"

"ம்... இருக்கேன்... இது நான் இல்லை ஊர்மி... இது ஏதோ மாஃர்பிங் வேலையா இருக்கும்... நான் என்ன அப்படிப்பட்ட பொண்ணா ஊர்மி..." கொஞ்சம் உருக்கம் கொஞ்சம் அழுகை கலந்து அனி பேசியதை கண்டு ஊர்மி நிம்மதி அடைந்தவளாய்,

"உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும் அனி... இந்த வீடியோவை பார்த்ததும் நான் பயந்துட்டேன்... அதான் ஃபோன் பண்ணினேன்..."

"உனக்கே தெரியும்... இப்போ எல்லாம் என்னை மாதிரி பெரிய இடத்துப் பெண்களை இந்த மாதிரி கேவலமா போட்டு எங்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்துறது பேஷன்னு... அது மாதிரி தான் இதுவும்... இது ஒரு பொய்யான வீடியோ... எங்கண்ணா கிட்ட சொல்லி இதைச் செஞ்சவங்களை என்ன செய்றேன்னு பாரு..." என்றவளின் குரலில் ஆத்திரம் நிறைந்து இருந்தது...

"அதை முதல்ல செய்டி... உங்கண்ணா கொடுக்கிற பதிலடியில் இனி யாரும் இது போல் ஒரு காரியம் பண்ண

யோசிக்கணும்... எனக்கு அண்ணா மேல நம்பிக்கை இருக்கு... நிச்சயம் ஏதாச்சும் செய்வாங்கன்னு..."

ஊர்மிளாவிடம் பேசிவிட்டு வைத்தவள் அடுத்த நொடி ரஞ்சித்திற்கு அழைத்தாள்... அவன் எடுத்ததும் படபடவெனப் பொரியத் துவங்கி விட்டாள்...

"இடியட்... என்னடா பண்ணி வச்சிருக்க... இப்ப மட்டும் என் கண் முன்னாடி இருந்த உன்னைக் கொன்னு போட்டு இருப்பேன்... இப்படி அசிங்கப்படுத்திட்டியேடா..."

"அனி... தயவுசெஞ்சு நான் சொல்றதை நம்பு... அதை நான் அப்லோட் பண்ணலை... என் பிரெண்ட் ஒருத்தன் இப்படிப் பண்ணிட்டான்... என் பிரெண்ட்ஸ் எல்லாம் அவன் வீட்டுக்கு ட்ரிங்க்ஸ் அடிக்கப் போயிருந்தப்போ எப்படியோ என் ஃபோனை எடுத்து இந்த வீடியோவை திருடிட்டான்... என்னை நம்பு... நானே இந்தச் சிக்கல்ல இருந்து எப்படி மீள்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்... எங்கப்பா, அம்மாவுக்குத் தெரிஞ்சது நான் தொலைஞ்சேன்... என் அண்ணன் ஒருத்தன் போதும் என்னைப் போட்டு கொடுக்கிறதுக்கு..." ரஞ்சித்தின் குரலில் தெரிந்த அப்பட்டமான பயமே அவன் அதைச் செய்யவில்லை என்று சொல்லாமல் சொல்லியது...

அவன் கூறியதை நூறு சதவீதம் நம்பியவள்... "இப்போ அது பிரச்சினை இல்லைடா... நீ எடுத்த வீடியோ தான் பிரச்சினை... இதை எல்லாமா வீடியோ எடுப்பாங்க... உனக்குக் கொஞ்சம் கூட அறிவில்லை..." என்று அவள் பொரிய...

"இல்லை அனி... நீ இல்லாத நேரத்தில் அதைப் பார்த்து சந்தோசப்பட்டுக்கலாம்ன்னு தான்... வேற எந்தத் தவறான நோக்கத்திலும் இல்லை... என் வொய்ப்பை நான் அப்படித் தவறா நினைப்பேனா..."

அவனது காதல் பேச்சு அவளை நெகிழ்த்த அவனது மனைவி என்ற விளிப்பில் அவள் மனம் புளங்காகிதம் அடைந்தது...

"இப்போ என்ன பண்றது மடையா... நீ பண்ணி வச்சிருக்கிற வேலைக்கு..." பல்லை கடித்தவள், "அதை மாஃர்பிங் வேலைன்னு சொல்லி தப்பிக்கலாம்ன்னு பார்த்தா இப்ப அதுவும் சொல்ல முடியாது... என் அண்ணன் கேட்டா நான் என்ன பதில் சொல்வேன்... அவருக்குத் தெரியாம ஒரு விசயம் இருக்காது... இப்ப என்ன பண்றதுன்னு தெரியலை..." அண்ணனுக்குப் பயந்து கொஞ்சம் கலங்கி தான் போனாள் அவள்...

"அனி..." என்று அவன் அழைக்க...

"என்னடா...?"

"அது வந்து..." அவன் இழுக்க...

"சொல்லி தொலைடா..." என்று அவள் எரிச்சலில் கத்தினாள்...

"கொஞ்சம் கிக் வேணும்ன்னு..." மீண்டும் அவன் இழுக்க...

"கிக் வேணும்ன்னு..." அவளது கோபம் எகிறத் துவங்கியது...

"சில மாஃர்பிங் வேலை செஞ்சேன்..." என்றவனைப் பிடித்துக் காய்ச்சி எடுத்துவிட்டாள் அந்த லேடி அக்*ஷய்...

அவளுக்கு அந்தக் காணொளி வெளியில் வந்ததோ அவளது கற்பு கேள்விக்குறியானதோ பெரிதாகத் தோன்றவில்லை... ஏனெனில் அவளைப் போன்ற பெரிய வீட்டுப் பிள்ளைகளிடம் இது எல்லாம் சகஜம் என்பது அவளுக்கு நன்கு தெரியும்...

திருமணத்திற்கு முன் இது போல் இருப்பது தவறு என்று அவளுக்குத் தெரியவில்லை... அவள் வளர்ந்த சமூகச் சூழலும் இதை அவளுக்குத் தவறு என்று கற்று கொடுக்கவில்லை... இன்று ஒருவனுடன் சுற்றி விட்டு நாளை வேறு ஒருவனைத் திருமணம் செய்துவிட்டு போகும் பல பெரிய வீட்டுப் பெண்களை அவள் பார்த்து வளர்ந்ததினால் ஒழுக்கத்தைப் பற்றிய எண்ணம் பெரிதாக

அவளிடத்தில் கிடையாது... அதை விட எந்தவித தப்பும் நடந்துவிடவில்லை என்ற தைரியமும் திமிரும் அவளிடத்தில் இருந்தது...

"சரி சரி விடு... நீ செஞ்சதும் ஒரு விதத்தில் நல்லது தான்... நான் அண்ணா கிட்ட வேற மாதிரி சொல்லி இதைத் திசை திருப்பி விடுறேன்..." என்று அவனிடம் சமாதானமாய்ப் பேசியவள் அடுத்த என்ன செய்ய வேண்டும் இல்லை இல்லை சகோதரனிடம் எப்படி நடித்து இந்தக் காணொளி இணையத்தில் வலம் வருவதைத் தடுக்க முடியும் என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்...

"அனி..." அன்னையின் குரலை கேட்டு திடுக்கட்டவளாய் திரும்பி பார்த்தவள் அங்கே அவர் நின்று கொண்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள்...

"மாம்..."

"அப்படிக் கூப்பிடாதே... என் பொண்ணா நீ... நான் வளர்த்த வளர்ப்பா இப்படிக் கெட்டு போய் நிக்குது..." என்று துளசி தனது அலைப்பேசியை அவள் முன் தூக்கி போட்டார்...

"மாம்..." தலை குனிந்து நின்றாள்...

என்னத்தான் தைரியமாய் இருந்தாலும் பெண் அல்லவா... தவறு செய்துவிட்ட குற்றவுணர்வு எட்டி பார்க்க தான் செய்தது...

"இது பொய் மாம்... யாரோ கிராபிக்ஸ் பண்ணி இருக்காங்க..." தான் செய்த தவறை மறைக்க முயன்றாள்...

"ச்சீ பொய் சொல்லாதே அனி... நீ ஃபோனில் பேசியது எல்லாத்தையும் நான் கேட்டேன்... உன்னை நம்புறதுக்கு நான் ஒண்ணும் உன் அண்ணன் இல்லை... உன் குறுக்குப்புத்தி தெரிஞ்ச உன்னைப் பெத்த அம்மா... இதுக்கா உன்னைப் படிக்க அனுப்பினோம்... படிக்க அனுப்பிச்சா நீ என்ன பண்ணிட்டு வந்திருக்க... எல்லாம் உன் அண்ணனை சொல்லணும்... அவன் கொடுக்கிற செல்லம் தான் நீ இந்த மாதிரி ஆடுற... அவன் வரட்டும்

நான் பேசுற பேச்சில் இனி உனக்குச் செல்லம் கொடுக்கிறதை பத்தி இனி அவன் யோசிக்கணும்..."

அன்னையின் பேச்சை கேட்டு அவளின் கோபம் அதிகரித்தது... அண்ணனின் தயவு இருக்கும் தைரியத்தில் தான் அவள் தன் இஷ்டத்துக்கு ஆடி வருகிறாள்... அண்ணன் துணை இல்லை என்றால் இனி அவள் நிலை...??? அதுவே அவளது ஆத்திரத்தை கிளப்பி விட...

"என்ன சும்மா சத்தம் போடுறீங்க மாம்... இப்ப என்ன நடந்து போச்சு... நானும் என் பாய் பிரெண்ட்டும் கொஞ்சம் சந்தோசமா இருந்தோம்... அதை அந்த மடையன் வீடியோ எடுத்துட்டான்... அதை அவனோட பிரெண்ட் அப்லோட் பண்ணி தொலைச்சிட்டான்... இதுல நானோ என் பாய் பிரெண்ட்டோ என்ன தப்பு பண்ணினோம்..."

மகள் பேசியது கண்டு அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது... இந்தக் காலத்து பெண்களின் எண்ண போக்கு, நாகரீக மாற்றம் கண்டு வாயடைத்துப் போனார்... அன்று கற்புக்கு இருந்த வரையறை வேறு... இன்று கற்புக்கு இருக்கும் வரையறை வேறு... இது எதனால்... மேலை நாட்டு மோகமா இல்லை கல்வி கொடுக்கும் தைரியமா இல்லை ஆண் பெண் சமத்துவம் பேசும் உரிமையா... எதுவென்று தெரியவில்லை இன்றைய பெண்ணின் மனப்போக்கு அன்றைய பெண்ணின் மனநிலையில் இருந்து மாறுபட்டு வித்தியாசப்பட்டு இருந்தது...

காலங்கள் மாறலாம் காட்சிகள் மாறலாம்... ஆனால் அன்றும் இன்றும் பாதிக்கப்படுவது பெண் தான் என்பதை இந்தப் பெண்கள் என்று தான் உணர போகிறார்கள்... எச்சில் இலையாய் மாறி தூக்கி எறியப்படுவோம் என்று தெரிந்து இருந்தும் திருமணத்திற்கு முன் தங்களை ஆண்களுக்கு விருந்தாய் கொடுக்கும் அவலநிலையை அவர்கள் ஏன் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்... அவருக்கே இந்தக் கலிகாலப் பெண்கள் புதிராகத் தெரிந்தார்கள்...

தான் எந்த இடத்தில் தவறு செய்தோம்... தன் பெண் இந்தளவுக்கு மாறி போனதற்கு என்று யோசிக்க

ஆரம்பித்தவருக்கு விடையாக அவரது மகன் அக்*ஷய் தான் நினைவில் வந்தான்... என்று அனியின் பொறுப்பை அவன் கையில் எடுத்தானோ அன்றே அவள் அப்பா, அம்மா பேச்சை கேட்பது இல்லை... ஆண் மகனான அதுவும் இளரத்தமான அக்*ஷய்க்குப் பெண்களைப் பற்றிய நுண்ணிய அறிவு கம்மி... அதனால் தான் அவன் தங்கையை ஆண் பிள்ளை போல் எண்ணி நடத்தினான்...

"அனி... என்ன பேச்சு பேசற... பொம்பளை பிள்ளை கல்யாணத்துக்கு முன்னாடி இப்படி நடந்துக்கிறது சரி கிடையாது... ஊர் உலகம் என்ன பேசும்..."

"சும்மா இந்த மாதிரி ஓல்டு டயலாக் பேசுறதை நிறுத்துங்க மாம்... வேணும்ன்னா ஒண்ணு செய்யவா... நாளைக்கே ஹாஸ்பிட்டல் போய் ஒரு வெர்ஜினிட்டி சர்ட்டிபிகேட் வாங்கிட்டு வந்து நியூஸ்பேப்பரில் போட்டுரவா... அப்போ நம்புவாங்களா நீங்க சொல்ற ஊர் உலகம்...?"

கற்பை கண்ணாய் உயிராய் நினைத்து போற்றும் பெண் இனத்தில் பிறந்த தன் பெண் இந்த மாதிரி பேசியது கேட்டு அவர் உள்ளம் நொறுங்க நெஞ்சை பிடித்துக் கொண்டு கீழே சரிந்தார்...

****************************

கோபிநாத் மனைவியின் அருகில் அமர்ந்து அவரது தலையைப் பரிவுடன் வருடி கொடுத்துக் கொண்டு இருந்தார்... மாரடைப்பு வரும் அளவிற்கு மனைவிக்கு என்ன துயரம் இருந்திருக்கக் கூடும் என்று அவருக்குத் தெரியவில்லை... கவலையுடன் துளசியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார்...

அவரது எண்ணம் துளசியைத் தாக்கியதோ என்னமோ அவரது விழிகள் மெல்ல திறந்தது...

"துளசி..." பாசமாய்க் கையைப் பற்றிக் கொண்ட கணவரை கண்டு அவரது விழிகள் கலங்கியது...

தொழிலில் ஜாம்பவான்... எல்லோராலும் சிம்ம சொப்பனமாய்ப் பார்க்கப்படுபவர்... ஆனால் தன்னிடம் மட்டும் அன்பை தவிர வேறு எதையும் காட்ட தெரியாதவர்... திருமணம் முடிந்த இத்தனை நாட்களில் ஒரு நாள் கூடக் கடிந்து பேசியது கிடையாது... சண்டை போட்டது இல்லை... அந்தளவிற்கு அந்நியோன்யமாய் வாழ்பவர்... இப்படிப்பட்ட தங்களுக்குப் பிள்ளைகள் இரண்டும் வேறு விதமாய் அமைந்தது எதனால் என்று இதுவரை அவருக்குத் தெரியவில்லை...

"கோபி..." கணவரது நெஞ்சில் சாய்ந்து கண்ணீர் வடித்தவரை கண்டு கோபிநாத் பதறிப் போனார்...

"ச்சு... துளசி இப்போ எதுக்கு இந்த அழுகை... உனக்கு ஒண்ணும் இல்லைம்மா..." அவர் ஆறுதல் சொல்ல...

"எனக்கு எதுன்னாலும் தாங்கி கொள்வேனே... நம் மகள்... நம்ம அனி..." மேலே சொல்ல முடியாமல் அவர் அழ...

"அனிக்கு என்ன... சொல்லு துளசி..."

கணவர் கேட்டதும் நடந்ததை அவரிடத்தில் சொல்லி அழுதவர், "இதுக்கு மேலே அவளை வீட்டில் வச்சு பாதுகாக்க முடியாது... சீக்கிரமா மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி கொடுத்திடலாம்... அப்போதாங்க எனக்கு நிம்மதி..."

மனைவியின் கண்ணீரை கூடத் துடைக்க இயலாமல் உறைந்து போனார் கோபிநாத்... மகனின் தொழில் திறமையை நம்பி தொழிலை ஒப்படைத்தது போல் தனது மகளையும் ஒப்படைத்து இருக்கக் கூடாதோ என்று முதன்முறையாக எண்ணினார்...

மகளை அடித்து நொறுக்க வேண்டும் என்று அவரின் இரத்தம் கொதித்தது... அவரால் இந்த மாதிரியான காலச்சாரச் சீர்கேட்டை ஒரு நாளும் ஆதரிக்க முடியாது... தன் மகள் அந்தக் காலச்சாரச் சீர்கேட்டில் சம்பந்தப்பட்டு

இருப்பதை உணர்ந்தவருக்கு அவளைக் கொன்று போட்டுவிடும் வெறி எழுந்தது...

அந்நேரம் ஆதர்ஷ் அறைக் கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்...

துளசியின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்து விட்டு அவரது தினப்படி மருத்துவ அறிக்கையைப் பார்த்தவன் திருப்தியுற்றவனாய் அவரைப் பார்த்துப் புன்னகைத்தான்...

ஆதர்ஷின் புன்னகை முகம் துளசிக்கு ஆச்சிரியமாய் இருந்தது... எந்நேரமும் இறுக்கமாய்க் கடுகடுவென இருக்கும் மகன் அக்*ஷயை பார்த்து வந்தவருக்கு ஆதர்ஷின் புன்னகை முகம் இதத்தை அளித்தது...

அதற்குள் ஆதர்ஷின் கண்கள் துளசியின் கண்ணீரை கண்டுவிட்டது...

"ஆன்ட்டி... இது மைல்ட் அட்டாக் தான்... நீங்க பயப்படுற அளவுக்கு ஒண்ணும் இல்லை..." என்று ஆறுதல் கூறியவனைக் கண்டு துளசியும் புன்னகைத்தார்...

சிறிது நேரம் பேசி இருந்துவிட்டு சென்றவனைப் பார்த்துக் கொண்டு இருந்த துளசி, "நம்ம அக்*ஷய் இப்படி இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்..." என்று பெருமூச்சு விட...

துளசியின் வார்த்தைகள் கோபிநாத்தை ஆமோதிப்பாய் தலையசைக்க வைத்தது...

அன்றே கோபிநாத் அனியிடம் சென்று கேள்வி கேட்க அவள் அன்னையிடம் பேசியது போல் தந்தையிடமும் எதிர்த்து பேசினாள்... தவறு செய்துவிட்டு அஞ்சாமல் அதற்குத் திமிராய் பதில் சொல்லும் மகளின் மனநிலை அவருக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது... அவ்வளவு தான் அடுத்த நொடி அவளை அடிப் பின்னி எடுத்துவிட்டார்...

"தப்பு செஞ்சிட்டு திமிரா வேற பதில் சொல்றியா... நாளையில் இருந்து நீ காலேஜ் போக வேண்டாம்... படிக்கப்

போய்த் தான் புத்தி தறி கெட்டு போகுது... சொல் பேச்சு கேட்க மாட்டேங்குது... நாளைக்கே உனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் முடிக்கிறேன்... அதுக்கு அப்புறம் அவன் பாடு... உன் பாடு..."

தந்தையின் கோபத்தில் இன்னமும் வெகுண்ட அனி, "நான் ரஞ்சியைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்... நான் அவனைத் தான் காதலிக்கிறேன்..." என்று பதிலுக்குக் கத்தினாள்...

"அதையும் நான் பார்க்கிறேன்... உன் அப்பா ஒண்ணும் கையாலாகாதவன் கிடையாது... இன்னமும் எனக்குன்னு ஒரு பேர், மரியாதை இருக்கு... என் லெவல்ல நான் யூஸ் பண்ணினேன்னு வை... அப்புறம் நீ தாங்க மாட்ட..." என்று கர்ஜித்தவர் வெளியில் செல்ல...

அழுது கொண்டே தனது அண்ணனுக்கு அலைப்பேசியில் அழைத்தவள் எல்லா விசயத்தையும் ஒன்று விடாமல் கூறியவள் ரஞ்சித் காணொளி எடுத்த விசயத்தைக் கூறாமல் அது யாரோ இப்படித் தந்திர வேலை செய்து தன் மானத்தை வாங்கிவிட்டார்கள் என்று கூறி அழுதாள்...

தங்கையின் அழுகை கண்டு அக்ஷய் பதறி போய்விட்டான்... "அனி... நீ கவலைப்படாதே... நான் இருக்கிறேன் உனக்கு... நாளைக்கே நான் வர்றேன்... வந்து இதைச் செய்தவனை ஒரு வழி பண்ணிடறேன்..." என்று தங்கையைச் சமாதானப்படுத்தியவன் ஆத்திரத்தில் இருந்தான்...

மணிக்கு அழைத்தவன், "அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க... எந்த விசயம் நடந்தாலும் சொல்ல சொல்லி இருக்கேன்ல..." என்று எரிந்து விழுந்தான்...

"சார் இதை எப்படிச் சொல்றதுன்னு தான் எனக்குத் தெரியலை சார்..." வழக்கம் போல் மென்று விழுங்கினான் மணி...

"இதைச் சொல்லாம வேற என்னத்தைச் சொல்லுவ...?" என்று மேலும் எரிச்சலில் கத்தியவன், "முதல்ல இதைப்

பரவாம தடுக்கிற வழியைப் பாரு..."

"விசயம் கேள்விப்பட்ட உடனேயே அதைத் தான் முதல்ல செய்தேன் சார்... கமிஷனர் சார் கிட்ட சொல்லி அதுக்கான நடவடிக்கையை எடுக்கச் சொல்லிட்டேன்... அவரும் நடவடிக்கை எடுத்துட்டார்... இனி அது பத்தி கவலை இல்லை சார்..."

மணி அதைச் சொன்னதும் தான் அக்ஷய்க்கு சற்று நிம்மதியாய் இருந்தது... இருந்தாலும் அவனது கோபம் குறையவில்லை...

"இதை யார் பண்ணியது... ஏன் பண்ணினாங்கன்னு எல்லாம் விசாரிச்சு வை... நான் வந்து அவங்களைக் கவனிச்சுக்கிறேன்..." என்றவன் 'கவனிப்பு' என்ற வார்த்தையை அழுத்தி சொன்னதில் அது என்ன விதமான கவனிப்பு என்பது மணிக்கு புரிந்து போனது...

"சார்... விசாரிச்ச வரைக்கும் நம்ம மேடம் மேலயும் தப்பு இருக்கிற மாதிரி தெரியுது..." இதைச் சொல்லும் போது மணி பயந்து கொண்டே தான் சொன்னான்...

அனியை பற்றி ஒரு சொல் தவறாகப் பேசினாலும் அக்ஷய் பொறுத்து கொள்ளா மாட்டான் என்று அவனுக்கு நன்கு தெரியும்...

"மணி..." ஆங்காரமாய் ஓங்கி ஒலித்த அக்ஷய் குரலில் பல்லாயிரம் மைல் தூரம் தள்ளி இருந்த மணி அரண்டுவிட்டான்...

"சார் நான் பொய் சொல்லலை சார்... நல்லா விசாரிச்சுப் பார்த்துட்டேன்... அந்த வீடியோ பொய் இல்லை... உண்மை... ஒரிஜினல் தான்னு ஆதாரம் வந்திருச்சு... சின்ன மாஃர்பிங் வேலை மட்டும் பண்ணி இருக்காங்க..."

"அதைப் பண்ணியவன் யாரு...?" அக்ஷயின் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது... தன் தங்கையா இப்படி என்று அவன் உள்ளம் கொதித்தது...

"அது வந்து... அதைச் செஞ்சது நம்ம மேடத்தோட லவ்வர்... ஆனால் அவர் அதைப் பரவ விடலை... அவரோட பிரெண்ட் தான் இந்த வேலையைச் செஞ்சு இருக்கான்... அவனோட ஃபுல் டீட்டெய்ல்சும் கலெக்ட் பண்ணிட்டேன் சார்..."

தன் தங்கை தனக்குத் தெரியாமல் காதல் செய்கிறாளா...? அவனால் அந்த விசயத்தை நம்ப முடியவில்லை... தனக்குச் சிறு குழந்தையாகத் தோன்றும் தன் தங்கை காதல் செய்யும் அளவுக்குப் பெரிய பெண்ணாக எப்போது மாறினாள்... அவனுக்குப் புதிராக இருந்தது... அதே சமயம் சற்று ஏமாற்றமாகவும் இருந்தது...

"நான் நாளைக்கு அங்கே வர்றேன்... மத்ததை நான் வந்து பார்த்துக்கிறேன்..." அவன் எதையும் யோசிக்கும் மனநிலையில் இல்லை...

"சார் அப்புறம் முக்கியமான விசயம் நம்ம பெரிய மேடத்துக்கு அட்டாக் வந்து ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்கு..."

"வாட்..." அன்னைக்கு மாரடைப்பு என்றதும் அவன் அதிர்ந்துவிட்டான்... என்ன இருந்தாலும் பெற்று வளர்த்தவர் அல்லவா...

"ஆமாம் சார்..."

"இதை முன்னாடியே சொல்ல வேண்டியது தானே..." என்றவன் அடுத்த நொடி தந்தைக்கு அழைத்தான்...

"டாட்... மாம் இப்போ எப்படி இருக்காங்க...? மாம்க்கு அட்டாக் வந்த விசயத்தைக் கூடச் சொல்ல மாட்டீங்களா...? அவங்க எனக்கு அம்மா டாட்..."

"அப்படியாப்பா..." போலியாய் ஆச்சிரியப்பட்டவர், "சொன்னா மட்டும் உடனே உன் தொழிலை போட்டுட்டு ஓடி வந்திர போறியா என்ன...?" கிண்டலாய் கேட்ட தந்தையிடம் பல்லை மட்டுமே அவனால் கடிக்க முடிந்தது...

"நான் நாளைக்கு வர்றேன்..." என்றவன் மேற்கொண்டு ஒன்றும் பேசாது அலைப்பேசியை அணைத்தான்...

மருத்துவமனையில் ஆதர்ஷுடன் நல்ல பழக்கம் ஏற்பட்டது துளசிக்கு... இப்போது எல்லாம் ஆதர்ஷை பார்க்கும் போது அந்த விபரீத ஆசை அவர் மனதில் எழ ஆரம்பித்தது... அந்த ஆசையை அன்று மருத்துவமனைக்கு வந்த கணவரிடத்தில் கூறினார்...

"ஏங்க இந்தப் பையனை நம்ம அனிக்கு பார்த்தா என்ன...?"

"இந்தப் பையனா...?" யோசித்தார் கோபிநாத்...

"நான் விசாரிச்சு பார்த்துட்டேன்ங்க... இன்னும் கல்யாணம் ஆகலை... பாட்டி, தங்கை மட்டும் தானாம்... நடுத்தர வர்க்க குடும்பம்... இது எல்லாத்தையும் விட ரொம்ப அமைதியான, அன்பான பையனா இருக்கான்... அனிக்கு இதை விட வேறு என்ன வேணும்..." ஒரு தாயாய் அவர் மகளின் நலனை மட்டும் யோசித்தார்...

"சரி... நான் வெங்கட் கிட்ட விசாரிக்கிறேன்... அதுக்கு அப்புறம் மேற்கொண்டு பேசலாம்..." வசதி குறைச்சல் என்பதைத் தவிர ஆதர்ஷிடம் வேறு குறை என்று சொல்ல ஒன்றும் இல்லை...

அப்போதே சென்று அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவரும் அவரது நண்பருமான வெங்கடேசனிடம் ஆதர்ஷை பற்றி விசாரித்தார்...

"ரொம்ப நல்ல பையன்... பொறுப்பான பையன்... என் பையனா நினைச்சு உன் பொண்ணைத் தாராளமா கொடுக்கலாம்... அப்படியாவது அந்தப் பையனுக்கு நல்ல வழி பிறந்தா சரி..."

"என்ன சொல்ற வெங்கட்...?"

"மேலே படிக்கணும்ன்னு அவனுக்கு ரொம்ப ஆசை... ஆனா குடும்பச் சூழ்நிலை காரணமா அதைத் தள்ளி போட்டுட்டு

இருக்கான்... உன் மருமகனா ஆனா நீ இதுக்கு உதவ மாட்டியா என்ன...?"

"நிச்சயம் வெங்கட்... இதைக் கூடச் செய்யலைன்னா எப்படி... இனி அவரோட குடும்பம் எங்க குடும்பம் மாதிரி..." மனநிறைவுடன் வெளியேறியவர் மனைவியிடம் வெங்கடேசன் சொன்னதைக் கூற... அதைக் கேட்டதும் துளசிக்கு பெருத்த நிம்மதியாய் இருந்தது...

மறுநாள் அக்ஷய் வந்ததும், "அண்ணா..." என்று கட்டி கொண்டு அழுத அனித்ராவை கண்டு அவனுக்குமே அவனது கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது...

என்ன தவறு செய்து இருந்தாலும் அவள் அவன் தங்கை அல்லவா...

"அனி... இதுக்கு எல்லாம் அழுதுட்டு... அண்ணன் இருக்கேன்ம்மா... டோன்ட் வொர்ரி..." என்று அவளைச் சமாதானப்படுத்த கோபிநாத் மகனை முறைத்தார்... அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை...

தங்கையைச் சமாதானப்படுத்தி அவளது அறைக்கு அனுப்பிவிட்டுப் பெற்றோரிடம் வந்தான்...

"மாம் எப்படி இருக்கீங்க...?" வெகு நாட்கள் கழித்து மகனின் அக்கறையான விசாரிப்பில் துளசிக்குக் கண்கள் கலங்கியது...

"எனக்கு என்ன அக்ஷய்... அனி தான்..." அதற்கு மேல் பேச முடியாமல் அவர் அழ...

"மாம்... அனி விசயத்தை நான் பார்த்துக்கிறேன்... நீங்க கவலைப்படாதீங்க..."

"என்னடா பார்க்க போற... நீ செல்லம் கொடுத்து தான் அவ இப்படி எல்லாம் நடந்துக்கிறா... உன் தங்கை பண்ணிய காரியத்துக்குக் கண்டந்துண்டமா வெட்டி போட்டு இருந்தேன்னா... நீ நல்ல அண்ணன்... அதை விட்டுட்டு கொஞ்சிட்டு இருக்க... அவளால வெளியில் தலை காட்ட

முடியலை... தெரிஞ்சவங்க எல்லாம் கேவலமா பேசுறாங்க... பார்க்கிறாங்க..." கோபிநாத் மகனிடம் கோபமாய் உரைக்க...

"ஏன் அதை நீங்க செய்து இருக்க வேண்டியது தானே...?" எதிர்கேள்வி கேட்டவனைக் கண்டு வாயடைத்துப் போனார் அவர்...

"டாட்... உங்களால அதைச் செய்ய முடியாத போது... நான் எப்படி டாட் அதைச் செய்வேன்...? அவ என்னோட ஒரே தங்கை... அவ மேல எனக்கு எக்கச்சக்க பாசம் இருக்கு... பேசுற உலகம் பேச தான் செய்யும்... இன்னைக்கு நம்மை நாளைக்கு வேற யாரையோ... இவ்வளவு ஏன் நாளைய தலைப்பு செய்தியா அவங்க கூட இருக்கலாம்... மத்தவங்களைப் பத்தி கவலைப்படுறதை முதல்ல நிறுத்துங்க டாட்... தப்பு அனி பேரிலும் இருக்குன்னு எனக்குத் தெரியுது... இந்தத் தவறில் இருந்து அவளை எப்படிச் சேஃபா வெளியில் கொண்டு வர முடியும்ன்னு யோசிங்க... அதை விட்டுட்டு இப்படி ஓல்டு ஸ்டைல்ல அடி, உதைன்னு பேசிட்டு டைம் வேஸ்ட் பண்ணாதீங்க..."

"அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு நானும் உங்கம்மாவும் முடிவு எடுத்து இருக்கோம்..."

"வெல்... மாப்பிள்ளை பார்த்துட்டீங்களா... இல்லை நான் பார்க்கவா..."

"நாங்களே பார்த்துட்டோம்..." என்றார் கோபிநாத் முறைப்பாக...

"ஓ... பையன் யாரு...?"

"டாக்டர் பையன்... பாட்டியும், தங்கை மட்டும் தான்..."

"சொந்தமா ஹாஸ்பிட்டல் வச்சு இருக்காரா...?" அக்ஷய் கேட்டதும் பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"இல்லை... நம்ம வெங்கட் ஹாஸ்பிட்டல்ல வேலை பார்க்கிறாரு..."

"சோ... வசதி இல்லை..." என்றவன் கோபமாய்ப் பெற்றோரை பார்த்தான்...

"அனி இப்போ என்ன தப்பு பண்ணிட்டான்னு இப்படிப்பட்ட மாப்பிள்ளையைப் பார்க்கிறீங்க... நம்ம அந்தஸ்த்துக்கு ஏத்த மாதிரி நானே மாப்பிள்ளை பார்க்கிறேன்..." என்றவனைக் கண்டு கோபிநாத்க்குக் கோபம் வந்தது...

"அனி என் மகள் அதை நியாபகம் வச்சுக்கோ... என் மகளுக்கு எது நல்லதுன்னு எனக்கு நல்லா தெரியும்... இனியும் உன்னை நம்பி அவளை விட்டு வச்சா இன்னும் என்ன என்ன கண்றாவி எல்லாம் நாங்க பார்க்க நேரிடுமோ... உன் திறமையைப் பிசினஸ்ல வச்சுக்கோ... இது குடும்பம்... இங்கே உன் பிசினஸ் புத்தியை கொண்டு வராதே..." அவர் கடுமையுடன் கூற...

முதன்முறையாய் தனது செயல் தவறாய் போனதை நினைத்து அவனுக்கு வருத்தம் இருந்தாலும் தன்னை நம்பாமல் பேசும் தந்தையைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"அதுக்காக ஒண்ணும் இல்லாத வெறும் பயலுக்கு அவளைக் கட்டி கொடுக்கணுமா..."

"வாழ்க்கைக்குப் பணம் மட்டும் அவசியம் இல்லை... அன்பு தேவை அக்ஷய்... இது எல்லாம் உனக்கு எங்கே புரிய போகுது..." கேலி போல் கூறினாலும் மகனின் பேச்சு அவரை வருத்தம் கொள்ளச் செய்தது...

"நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம் டாட்... அனிக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் தன் பிடிவாதத்தில் நிலையாய் நின்றான்... கடைசியில் பெற்றவர்கள் தான் மகனுக்காக இறங்கி வர நேரிட்டது...

"அப்புறம் ஒரு விசயம்... அனி கிட்ட போய் உனக்குக் கல்யாணம் அது இதுன்னு மிரட்டுற வேலை எல்லாம் வேண்டாம்... அவள் எப்போதும் போல் காலேஜ் போகட்டும்... எப்போதும் போல் வெளியில் போகட்டும்... சைலண்ட்டா கல்யாண டேட் பிக்ஸ் பண்ணிட்டு அதுக்கு அப்புறம் அவ கிட்ட சொன்னா போதும்... தேவையில்லாத டிராமைவை தவிர்க்கத்தான் இது..." என்றான் வணிகனாய் தங்கையின் மனதை கணித்தவனாய்...

"அக்ஷய்..." ஆச்சிரியமாய்ப் பார்த்த தந்தையின் முகத்தைப் பார்க்க முடியாமல் வேறு பக்கம் பார்த்தவன்,

"அவ லவ் பண்ற பையன் அவ்வளவு நல்லவன் இல்லை... வெளியில் விசாரிச்சிட்டேன்... என்னால நேர்ந்த தவறை நான் தான் சரி செய்யணும்... அனியோட வாழ்க்கையைச் சரி பண்றது என்னோட பொறுப்பு..." கடமையை உணர்ந்த அண்ணனாய்...

அதற்கு மேல் அவர்களாலும் அவனிடம் வாதாட முடியவில்லை... இது நாள் வரை அவன் எடுத்த எந்த விசயத்திலும் தவறு நேர்ந்தது கிடையாது... முதன் முறையாய் அவனின் தங்கை வளர்ப்பு மட்டுமே தவறாய் போய்த் தோல்வியாய் மாறிவிட்டது...

பெற்றோரிடம் பேசிவிட்டு வந்த அக்ஷய்க்குத் தங்கை மீது கோபம் கோபமாய் வந்தது... ஆனாலும் ஏனோ அவளிடத்தில் அதைக் காட்ட முடியவில்லை அவனால்...

'சின்னப் பெண் என்று செல்லம் கொடுத்தது தப்பா போயிருச்சு... காதலன் கூட அத்துமீறும் அளவுக்கு அப்படி என்ன காதல் வேண்டி கிடக்கு... அதுவும் இந்த வயதில்... நான் நினைத்தால் அவளுக்கு வசதியான மாப்பிள்ளையை வரிசையில் கொண்டு நிறுத்துவேன்னு அவளுக்குத் தெரியாதா என்ன... போயும் போயும் ஒண்ணுத்துக்கும் உதவாத உதவாக்கரையைப் போய்க் காதலிச்சு தொலைச்சிருக்கா... இருக்கிற எல்லாக் கெட்டப் பழக்கமும் இருக்கு... அதை விடத் தைரியம் இல்லாத கோழை... ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி காப்பாத்தும்

அளவுக்குத் திறமை இல்லாதவன்... இவனிடத்தில் என்ன இருக்குன்னு மேலே போய் விழுந்தாளோ...' தங்கையின் காதல் குறித்து அவனுக்கு எரிச்சல் வந்தது...

தொழிலுக்காக இவ்வளவு தவறுகள் செய்யும் அக்ஷய் பெண்களிடம் சற்று நெருப்பாய் தான் இருப்பான்... எந்தப் பெண்ணிடத்திலும் மயங்கியது இல்லை... எந்தப் பெண்ணைக் கண்டும் மோகம் தலைக்கேறிப் பின்னால் அலைந்தது இல்லை... அதில் அவன் அந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தித் தான்...

இப்போது கூட மதி அவனுக்கு என்று நிச்சயம் செய்த பெண் அதிலும் அவளைத் தன் வசத்தில் வைத்து இருப்பதால் ஏற்படும் நன்மைகள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் அவளிடம் சிறிது நெருங்கி பழகுகிறான்...

அதிலும் ஒரு அளவிற்கு மேல் அவனால் அவளை நெருங்க முடியவில்லை... அது ஏனென்றும் அவனுக்கு இன்று வரை புரியவில்லை... ஒரு பெண்ணை அணைப்பதற்கும், முத்தம் கொடுப்பதற்கும் மனதில் காதல் என்ற ஒன்று இருந்தால் மட்டுமே அது சாத்தியம் என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை...

இப்போது அவனின் கோபம் எல்லாம் ரஞ்சித்தின் மீது திரும்பியது...

'முதலில் என் தங்கை கல்யாணத்தை முடிக்கிறேன்... அப்புறம் உன்னையும், உன் பிரெண்ட் கதையையும் முடிக்கிறேன்...' ரஞ்சித்தை நினைத்தவனின் முகம் விகாரமாய் மாறியது...

அக்ஷயின் நீதிமன்றத்தில் ரஞ்சித்திற்கும் அவனது தோழனுக்கும் மரணதண்டனை நிறைவேற்ற நாள் குறிக்கப்பட்டது...

அனித்ராவுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தான்... ஏதோ ஒரு குறைகள் அவனுக்குக் கண்ணில் தட்டுப்பட்டு

எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக நிராகரிக்க ஆரம்பித்தான்... வசதி இருந்தால் சிலருக்குத் திறமை இல்லை, சிலருக்கு அழகு இல்லை, சிலருக்கு உழைப்பு இல்லை... இப்படிப் பல காரணங்கள் இருந்தது அவன் நிராகரிப்பதற்கு... அப்படியே எல்லாம் பொருந்தி வந்த போது தங்கையின் காணொளி அவனுக்கு முன் போய் அங்கு நின்று அவனது தங்கையை நிராகரிக்க வைத்தது...

தங்கைக்கு மாப்பிள்ளை தேடி அவன் களைத்துப் போனான் அக்ஷய்...

ஒரு மாதமான பின் கோபிநாத் அவனிடம் வந்து, "இங்கே பார் அக்ஷய்... இது பிசினஸ் இல்லை... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு முடிவு பண்றதுக்கு... பேசாம நாங்க பார்த்த பையனை அனிக்கு பேசி முடிக்கலாம்... வசதி இல்லைன்னு கவலைப்படாதே... நம்ம கிட்ட இல்லாத வசதியா... அவளுக்கு என்ன தேவையோ அதை நாம செஞ்சி கொடுக்கலாம்... இந்த மாதிரி ஒரு பையன் தான் அனியை அனுசரிச்சு போவான்..." அவர் ஆதர்ஷின் குணத்தை நினைத்து பேச...

அக்ஷயோ அவனது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டான்... அதில் அவன் முகம் பளிச்சென்று மலர்ந்தது...

"ஓகே டாட்... இந்தப் பையனையே பேசி முடிக்கலாம்..." என்றவன், "நாளைக்கே போகலாமா டாட்..."

"நிச்சயமா அக்ஷய்... போகும் போது வெங்கட்டையும் கூட்டிட்டு போகலாம்..." சந்தோசத்துடன் சொன்னார் கோபிநாத்...

விதி அக்ஷயையும் அபியையும் சந்திக்க வைக்கத் தயாரானது... இதில் அதிகம் காயப்படப் போவது யார் என்பதையும் முன் கூட்டியே அறிந்த விதி இருவரையும் கண்டு கோரமாய்ச் சிரித்தது...

பூக்கும்...

காலை நேர பரபரப்பில் பம்பரமாய்ச் சுழன்று வேலை செய்து கொண்டு இருந்தாள் அபிராக்*ஷிதா... ஆதர்ஷுக்கும் அவளுக்கும் வேண்டிய மதிய உணவை சமைத்தவள் பாட்டிக்கு தேவையான பத்திய சாப்பாட்டையும் சேர்த்து சமைத்து முடித்தாள்... காலை உணவாக எளிதில் ஜீரணமாகும் இட்லியை ஊற்றி வைத்து விட்டு சட்னிக்குத் தேவையான பொருட்களை அரவை இயந்திரத்தில் போட்டு அதை அரைத்து எடுத்துத் தாளிதம் செய்து முடித்தவள் சமையலறையை ஒதுங்க வைக்கும் போது ஆதர்ஷ் அங்கு வந்தான்...

தங்கை வேலை செய்து கொண்டு இருப்பதைக் கண்டு தானும் பாத்திரங்களைக் கழுவி வைக்க ஆரம்பித்தான் அவளுக்கு உதவியாக...

"அண்ணா... நீ எதுக்கு இதை எல்லாம் செய்ற...? நான் பார்த்துக்கிறேன்... நீ ஹாஸ்பிட்டலுக்குக் கிளம்பு..."

"இருக்கட்டும் அபி... தனி ஆளா இருந்து நீயும் தான் எத்தனை வேலை பார்ப்ப... வேலைக்கு ஆள் வச்சுக்கோன்னா வேண்டாம்ன்னு சொல்ற..."

"நாம மூணு பேருக்கு எதுக்கு வேலைக்கு ஆள்...? அது எல்லாம் நான் பார்த்துப்பேன்... நீ நகரு..." அவள் சொல்லி கொண்டு இருக்கும் போது கோமதி அங்கே வந்தார்...

"ஆது உன் ஃபோன் அடிக்குது..." அவனது அலைப்பேசியை அவனிடம் கொடுத்தார்...

எடுத்து பேசியவனின் முகம் குழப்பத்தைத் தத்தெடுத்தது...

"என்னண்ணா... ஏதும் பிரச்சினையா...?" கவலையுடன் கேட்ட அபியை கண்டு புன்னகைத்தவன்,

"பிரச்சினை எதுவும் இல்லை அபி... இன்னும் கொஞ்ச நேரத்தில் சீஃப் டாக்டர் நம்ம வீட்டுக்கு வர்றேன்னு சொல்றாரு... அதான் எனக்கு ஒண்ணும் புரியலை..."

"ஒருவேளை அவர் பொண்ணை உனக்குக் கட்டி வைக்கலாம்ன்னு ப்ளான் பண்றாரோ என்னமோ..." கண்சிமிட்டி கேலி செய்த தங்கையின் தலையில் வலிக்காமல் குட்டியவன்,

"அவருக்கு ஒரே பையன் தான் அவனுக்கும் கல்யாணமாகிருச்சு..."

"ஓ..." என்று இழுத்தவள், "அப்போ எதுக்குண்ணா வர்றாங்க...?" அவளுக்கும் யோசனையாய் இருந்தது...

"வந்தா தெரிஞ்சிட்டு போகுது..." என்ற கோமதி இருவரையும் கிளம்பி தயாராக இருக்கச் சொன்னார்...

"அண்ணா... அவர் எப்போ வர்றார்... இன்னைக்கு ஒரு கல்யாண ஆர்டர் டெலிவரி பண்ணணும்... சரியான நேரத்துக்குக் கொடுக்கலைன்னா டென்சன் ஆகிருவாங்க..."

"ஒன்பது மணிக்கு வர்றதா சொன்னார்..."

"அப்போ சரிண்ணா... இருந்து பார்த்து போறேன்..."

"உனக்கு வேலை இருந்தா நீ கிளம்பும்மா..."

"நான் இல்லைன்னா அது மரியாதையா இருக்காது... வீடு தேடி வர்றவங்களை வாங்கன்னாவது சொல்லிட்டு கிளம்பறேன்..." என்றவள் குளிக்கச் சென்றாள்...

ஆதர்ஷ் மனதில் பல கேள்விகள் எழுந்து அவனைக் குழப்பியது... வேலையில் தான் ஏதும் தவறு செய்துவிட்டோமோ என்று கூட அச்சம் தோன்றியது...

ஒன்பது மணி வரை காத்திருந்த அபிக்கு அதற்கு மேல் காத்திருக்க நேரம் இல்லை... இன்று பன்னிரெண்டு மணிக்குள் அந்தத் திருமண ஆர்டரை கொடுக்க வேண்டும்... அவள் போய்த் தான் வேலை செய்யும் பெண்களை முடுக்கிவிட வேண்டும்... அவளுக்கு உள்ளுக்குள் சற்றுப் பதட்டமாக இருந்தது...

"நேரமாச்சுன்னா நீ போம்மா..." ஆது சொல்ல...

"இன்னும் கொஞ்ச நேரம் இருக்கேன்..." என்றவள் காத்திருந்தாள்...

சரியான நேரத்திற்குக் கிளம்ப முடியாமல் அக்ஷய்க்கு வேலை வந்துவிட்டது... அவனது பெற்றோர் தாங்கள் மட்டும் போய்ப் பேசிவிட்டு வருகிறோம் என்று கூறினாலும் அவன் அதைக் கேட்கவில்லை... தங்கையின் கணவனாக வர போகிறவனை நேரில் காண வேண்டும் என்கிற ஆவல் அவனுக்கு அதிகமாக இருந்தது...

அன்றைய முக்கியக் கூட்டத்தை முடித்தவன் வீட்டிற்குக் கிளம்பும் போது மணிவண்ணன் ஓடி வந்தான்...

"சார்... அந்த டாக்டரை பத்தி விசாரிக்கச் சொன்னீங்களே... விசாரிச்சிட்டேன்... டீடெயில்ஸ் இந்த ஃபைல்ல இருக்கு..." ஒரு கோப்பை அவனது கையில் கொடுத்தவன்,

"சார்... ஒரு விசயம்..." என்று தயங்கினான்...

"மணி சீக்கிரம் சொல்லு... எனக்கு நேரமாகுது..." என்றவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்க்க...

"இது யார்ன்னு தெரியுமா சார்...?" மேலும் இழுத்தவனை அக்ஷய் முறைத்து பார்க்க...

"கொஞ்ச மாசத்துக்கு முன்னாடி காஞ்சிபுரத்து புராஜக்ட்க்காக ஒரு பொண்ணைக் கடத்தி வலுக்கட்டாயமா வீட்டை காலி பண்ண சொன்னோமே அந்தப் பொண்ணோட அண்ணன் தான் சார் இவர்..."

"வாட்..." அக்ஷய் அதிர்ச்சி அடைந்தான்...

மணி சொன்னதும் அவனுக்குமே அந்த முகம் தெரியாத திமிர் பிடித்த பெண்ணின் பேச்சு நியாபகம் வந்தது...

'அவளோட அண்ணனா...' நினைக்கும் போதே அந்த நினைவு வேம்பாய்க் கசந்தது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைக்க... "இதோ வந்துட்டேன் மாம்..." என்று அழைப்பை துண்டித்தவன் தனது காரில் ஏறி வீட்டிற்குச் சென்றான்...

'இன்னும் அந்தக் குடும்பத்தை என்ன பண்ண போறாரோ...' என்று மனதில் நினைத்தபடி நின்று இருந்தான் மணி...

பெற்றோரை அழைத்துக் கொண்டு ஆதர்ஷ் வீடு வரும் வரை அக்ஷய் மனம் ஒரு நிலையில் இல்லை... இந்தச் சம்பந்தம் வேண்டாம் என்று தடுத்து விடுவோமா என்று கூட நினைத்தான்... ஆனால் இனியும் தந்தை தன் பேச்சை கேட்பாரா என்று சந்தேகம் தோன்ற தங்கைக்காக அந்தத் திமிர் பிடித்தவள் வீட்டிற்குச் செல்ல முடிவு செய்தான்... சிங்கம் தங்கைக்காகப் புலியாய் மாறிப் பதுங்கியது... அது என்று பாயப் போகிறதோ...

சரியாக வெங்கடேசனும் அங்கே வந்துவிட நால்வரும் ஆதர்ஷின் வீட்டிற்குச் சென்றனர்... அந்த அடுக்குமாடி குடியிருப்பில் முதல் தளத்தில் அவனின் வீடு இருந்தது... அந்தக் குடியிருப்பைக் கண்டு அக்ஷயின் முகம் சுளித்தது... அவனின் தரத்திற்கு இந்த இடம் எல்லாம் மிகச் சாதாரணமே...

ஆதர்ஷ் அவர்களை வாயிலில் நின்று வரவேற்றான்... ஆதர்ஷின் தோற்றம் கண்டு அக்ஷயின் சுளித்த முகம் மலர்ந்தது... மருத்துவன் என்பதற்கு ஏற்ப தன்மையாய் சாந்தம் நிலவும் முகத்துடன் கம்பீரமான அழகுடன் இருந்தவனைக் கண்டு அக்ஷய்க்கு மிகவும் பிடித்துப் போனது... தங்கைக்கு அவன் மிகச் சரியான பொருத்தமே என்று நினைத்தான்...

'அனிக்காக அந்த அடங்காப்பிடாரியை அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியது தான்... அக்ஷய் உன் நேரம் இப்படியா அமையணும்...' மனதை முயன்று தயார்படுத்திக் கொண்டு அவளது வீட்டில் காலடி எடுத்து வைத்தான்...

தனது தலைமை மருத்துவருடன் வந்து இருக்கும் அந்த வயதான தம்பதியர்களை அடையாளம் தெரிந்தது

ஆதர்ஷ்க்கு... அவர்களைப் பார்த்து புன்னகைத்தவன் அக்ஷயை யோசனையாய் பார்த்தான்... இருந்தாலும் அவனையும் இன்முகத்துடன் வரவேற்றான்...

வீட்டினுள் நுழைந்த அக்ஷயின் கண்கள் அவனையும் அறியாது அந்தத் திமிர் பிடித்தவளை தான் தேடியது... அவளைக் காண அவனது மனம் ஆவல் கொண்டது...

அவனின் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல் அபி தனது பாட்டியுடன் அறையில் இருந்து வந்தாள்... அவளைக் கண்டதும் அக்ஷய் திகைத்துப் போனான்...

மாநிறமாய் ஒல்லியான உடல்வாகுடன் தீட்சண்யமான கண்களுடன் வெகு சாதாரணப் பெண்ணாய் சாந்தமாய் இருந்த அபியிடத்தில் அந்த மாதிரியான திமிரை அவன் எதிர்பார்க்கவில்லை...

"வாங்க... வாங்க... வாங்க..." புன்னகையுடன் வரவேற்றவள் அவனையும் பார்த்து கையைக் குவித்தாள்...

'அடப்பாவி... அன்னைக்கு அந்த மாதிரி எகிறி அடிச்சா... இன்னைக்கு என்னம்மா அமைதியின் சிகரமா இருக்கா... இவ உண்மையான முகம் தான் என்ன...?' எதற்கும் அயராத அக்ஷய் அபியின் அடக்கத்தில் அயர்ந்து போனான்...

"உட்காருங்கம்மா..." கோமதியை அமர சொன்னார் வெங்கடேசன்...

ஆதர்ஷ் அருகில் கோமதி அமர அபி இருவருக்கும் பின்புறமாய் நின்று கொண்டாள்...

"நான் நேரிடையாவே விசயத்துக்கு வர்றேன்... இவர் என்னோட நண்பர் கோபிநாத்... தொழிலதிபர்... இது அவரோட மனைவி துளசி... இது அவரோட மகன் அக்ஷய்..." என்று அறிமுகப்படுத்தியவர்,

"கோபியோட பொண்ணு அனிக்கு ஆதர்ஷை மாப்பிள்ளை கேட்டு வந்திருக்காங்க... ஆதர்ஷோட குணம் பார்த்து அவங்களுக்கு அவனை ரொம்பப் பிடிச்சு போயிருச்சு... என்

கிட்ட விசயத்தைச் சொன்னாங்க... நான் தான் ஆதர்ஷ் என்னோட பையன் மாதிரி சொன்னா கேட்பான்னு கூட்டிட்டு வந்துட்டேன்..." என்றவர் கோமதியின் முகத்தைப் பார்த்தார்...

"நான் சொல்ல என்ன இருக்குப்பா... ஆதுவுக்குச் சரின்னா எங்களுக்கும் சம்மதம்... ஆது தான் சொல்லணும்..."

எல்லோரும் ஆர்வமாய் ஆதர்ஷை பார்த்தனர்... அக்ஷய் மௌனமாய் நடப்பதை வேடிக்கை பார்த்தான்... வெங்கடேசன் பேசுவதால் அவனால் இடையில் தலையிட முடியவில்லை...

"இது சரிப்பட்டு வராது டாக்டர்..." ஆதர்ஷ் தன் வாயை திறந்தான்...

"ஏன் ஏன் சரிப்பட்டு வராது...? என் தங்கை நல்லா படிச்சு இருக்கா... அழகா இருப்பா..." அக்ஷய் பொறுமை இழந்து படபடத்தான்...

வசதி படைத்த தங்களை ஆதர்ஷ் நிராகரிக்க என்ன காரணம் என்று அக்ஷய்க்கு விளங்கவில்லை...

"ஐயோ சார்... ஒரு பொண்ணை அபாண்டமா நான் குறை சொல்லலை..." பதறி போய்ச் சொன்ன ஆதர்ஷை கண்டு அக்ஷய் முகம் கறுத்துப் போனது... பெண்ணான அபியை தான் அவமானப்படுத்தியது அவனுக்குக் காரணமே இல்லாமல் நியாபகத்திற்கு வந்தது...

"எனக்குக் கடமைகள் இருக்கு சார்... என் தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணணும்... அப்புறம் மேலே படிக்கணும்... அப்புறம் கடைசிவரை என் பாட்டியை கண்கலங்காம பார்த்துக்கணும்..." அவன் சொல்லி முடிக்கும் முன் குறுக்கிட்ட அக்ஷய்,

"உங்க கடமை எல்லாம் இனி எங்க கடமை மாதிரி... உங்க தங்கை கல்யாணம், உங்க படிப்பு எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்..." என்று தேர்ந்த வணிகனாய் அவன் பேரம் பேச ஆதர்ஷின் முகம் சுருங்கி போனது...

"என்னோட தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நீங்க யாரு சார்...? என் கடமைகளை யாரும் பங்கு போட தேவையில்லை... என் கடமையை எப்படி நடத்தி முடிக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... நீங்க ஒண்ணும் உதவ வேண்டாம்..." என்று இறுக்கமான குரலில் கூறியவன்,

"இதை எல்லாம் விட எனக்கு வர போற மனைவி என் தங்கை, பாட்டியை அனுசரிச்சு நடந்துக்கிற பொண்ணா இருக்கணும்... எங்களை விட வசதி கூட இருந்தா அது மாதிரி நடக்க வாய்ப்பு இல்லை... அதனால்..." முடிக்காமல் அவன் நிறுத்த...

கோபிநாத் மகனை முறைத்தார்... அக்ஷய்க்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை...

எந்த இடத்திலும் பணத்தால் எதிரில் இருப்பவரின் வாயை அடைப்பவன் இன்று முதன்முறையாக நேர்ந்த தோல்வியில் வாயடைத்துப் போனான்...

"அண்ணா..." ஆதர்ஷின் தோளில் கை வைத்து தடுத்த அபி வந்திருந்தவர்களைப் பார்த்து, "நான் குறுக்கே பேசுறதுக்கு மன்னிக்கணும்... என் அண்ணா குடும்பத்து மேல உள்ள பாசத்தில் அப்படிப் பேசிட்டான்... உங்க வீட்டு பொண்ணு என் அண்ணியா வர்றதுக்கு எங்களுக்கு முழுச் சம்மதம்..." என்றவள் பாட்டியிடம்,

"அப்படித்தானே ஆச்சி..." பேத்தி கூறியது கேட்டு அவருக்கும் சந்தோசம் தான் இருந்தாலும் வயதுக்கு வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு பையனுக்குத் திருமணம் முடிப்பதா...?

"சரின்னு சொல்லுங்க ஆச்சி..." அவள் வற்புறுத்த...

"பேத்தி சொன்ன மாதிரி எனக்குப் பரிபூரணச் சம்மதம்..." பெரியவர் சொல்ல...

"அபி... உனக்கு ஒண்ணும் தெரியாது..." ஆதர்ஷ் தங்கையை அதட்ட...

"அண்ணா... ப்ளீஸ்ண்ணா... இப்ப ஒண்ணும் பேசாதே... பிறகு பேசலாம்..." அபி அண்ணனை அடக்க...

வந்திருந்த நால்வரின் முகமும் மலர்ந்தது...

தங்கையின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாமல் அடங்கும் ஆதர்ஷை கண்டு அக்ஷய்க்கு வியப்பாய் இருந்தது...

'இங்கேயும் நம்ம வீட்டு கதை தானா... ரொம்ப நல்லது...' என்று நினைத்தான்...

ஆனால் இந்த நல்ல விசயம் தான் நாளை அவனது தங்கையின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்க போவதை அவன் அறிந்து இருக்கவில்லை...

"அப்போ நாங்க கிளம்பறோம்ங்க... யோசிச்சு நல்ல பதிலா சொல்லுங்க..." ஆதர்ஷிடம் மறுபடியும் வலியுறுத்தி சொன்னவர்கள் கிளம்பினார்கள்...

அக்ஷய் எல்லோரிடமும் விடைப்பெற்றவன் கடைசியாக அபியிடம் கைக்கூப்பி விடைப் பெற இருவரது கண்களும் சந்தித்துக் கொண்டது...

'உன்னால என்ன பண்ண முடியும்...' 'நீ எல்லாம் ஒரு ஆம்பிளை...' அவளது குரல் அவனின் காதில் ஒலித்து அவனது ஆத்திரத்தை அதிகரித்த போதும் தங்கைக்காக அவளது வாழ்க்கைக்காகப் போலியாகச் சிரித்தபடி வெளியேறினான்... தங்கைக்காகத் தனது குரோதத்தை மறைத்துப் பொய்யாக நடிக்க முடிவு செய்தான்...

அவர்கள் சென்றதும் ஆதர்ஷ் கோபமாகத் தங்கையிடம் திரும்பினான்...

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சு இருக்கு அபி... அவன் என்னமோ நம்ம கிட்ட ஒண்ணுமே இல்லாத மாதிரி உதவி செய்ற மகாத்மா மாதிரி பேசுறான்... அந்த வீட்டுப் பொண்ணை என்னைக் கட்டிக்கச் சொல்லுறியா... இப்போ என் கல்யாணத்துக்கு என்ன அவசரம்... முதல்ல உனக்குக்

கல்யாணம் அதுக்கு அப்புறம் தான் என் கல்யாணம் எல்லாம்..." படபடத்தவன் அருகில் வந்த அபி,

"என் கல்யாணத்தை விட நீ உன் லட்சியத்தை அடையறது தான் எனக்கு முக்கியம்ண்ணா..." என்றாள் கண்கள் கலங்க...

"அபி..." ஆதர்ஷ் அதிர்ந்து போய்த் தங்கையைப் பார்க்க... கோமதியும் அதிர்ச்சியாய் அவளைப் பார்த்தார்...

"ஆமாம்ண்ணா... அவங்க உன்னைப் படிக்க வைக்கிறேன்னு சொல்றப்போ இந்தச் சம்பந்தத்தை எப்படிண்ணா மறுக்க முடியும்...? உன்னோட லட்சியத்தை இந்தக் கல்யாணம் நிறைவேத்தினா அதை ஏத்துக்கிறதுல என்ன தப்பு இருக்குண்ணா...?"

"அப்போ உன் கல்யாணம் என் பொறுப்பு இல்லையா...?" ஆதங்கமாய் இருந்தது ஆதர்ஷுக்கு... யாரோ ஒருவன் தன் தங்கை திருமணத்தை எடுத்து நடத்துவதா என்று உள்ளுக்குள் குமைந்து போனான்...

"கட்டாயம் அது உன் பொறுப்பு தான்... அதை நான் மறுக்கலையே..." அதில் அவன் முகம் பளிச்சென்று மலர்ந்தது...

"ஆமாண்ணா... நாளைக்கே கூட எனக்கு மாப்பிள்ளை பாரு... நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்... அதுக்காக உனக்கு வர்ற வாய்ப்பை நீ ஏன் தள்ளி போடணும்..."

அவள் சொன்னதும் அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

"நீ அவங்க கிட்ட பேசியது கேட்டு நான் அதிர்ச்சி ஆகிட்டேன் அபி..."

அண்ணன் கூறியதன் அர்த்தம் புரிந்தவளாய் அவள் அவனை ஆழ்ந்து பார்த்தாள்...

"நீ என்னைப் புரிஞ்சிக்கிட்டது அவ்வளவு தான்னா அண்ணா... என் அண்ணன் இருக்கிறப்போ அவர் யாரு என் கல்யாணத்தைப் பத்தின முடிவு எடுக்கிறதுக்கு... அவர்

தங்கையை நீ கல்யாணம் பண்ணிக்கத் தான் நான் சம்மதம் சொன்னேனே தவிர... என் திருமணத்துக்கோ, இல்லை பாட்டியை பார்த்துக்கிறதுக்கோ அவங்க ஆதரவையோ உதவியையோ நான் எதிர்பார்க்கலை... அதுக்கு என் அண்ணா இருக்கான்னு எனக்குத் தெரியும்..."

"நிச்சயம்மா... உனக்காக நான் இருக்கேன்..." என்றான் நெகிழ்வுடன் ஆதர்ஷ்...

"அப்போ சம்மதம் சொல்லிரலாமா..."

"வேணாம்மா..." என்றான் யோசனையாக...

"அவங்க படிக்க வச்சு நான் படிக்கணுமா...?" அவனது தன்மானம் அடிப்பட்டது... மனைவி வீட்டினர் பணத்தில் படிப்பதா என்று யோசித்தான்...

"நீ எனக்குச் செய்ய வேண்டிய சீர் எல்லாம் செஞ்சு தானே அனுப்புவ..." திடுமெனத் தங்கை அப்படிக் கேட்டதில் ஒரு நொடி திகைத்தாலும்,

"கட்டாயம் செய்வேன்..."

"எனக்கு வரப் போறவர் அதை மறுத்தா என்ன செய்வ...?"

"மறுத்தாலும் நான் கொடுக்க வேண்டியதை கொடுப்பேன்..."

"அது போல் இதையும் சீரா நினைச்சிக்கோ... இல்லை கடனா நினைச்சிக்கோ... நீ படிச்சு முடிச்சதும் சம்பாதிச்சு வட்டியோட பணத்தைத் திருப்பிக் கொடுத்திரு..." என்றவள், "நம்மளை மாதிரி ஆளுங்களுக்கு எல்லாம் வாய்ப்பு ஒரு முறை தான் வந்து கதவை தட்டும்... அதை அப்பவே யூஸ் பண்ணிக்கிறது புத்திசாலித்தனம்... இல்லைன்னா அந்த வாய்ப்பு கிடைக்காமலே போகச் சான்ஸ் இருக்கு..." என்றவளின் வார்த்தையில் இல்லாத கொடுமையின் துயர் விரவி பரவி இருந்தது...

தங்கையின் துயர் துடைப்பதற்காகவே அவன் சரி என்று சம்மதம் சொன்னான்... அதைக் கேட்டு அவளும்,

கோமதியும் மகிழ்ச்சி அடைந்தனர்...

தன்னுடைய விருப்பத்தால் அண்ணனின் வாழ்க்கையில் நிம்மதி பறி போகப் போகிறது என்று தெரிந்து இருந்தால் ஒருவேளை அபி இந்தத் திருமணத்துக்கு அண்ணனை வற்புறுத்தி இருக்க மாட்டாளோ என்னமோ...

உடனே வெங்கடேசனிடம் சொல்லி விசயம் கோபிநாத்திடம் சொல்லப்பட்டது... அதைக் கேட்டு அவரும் துளசியும் சந்தோசப்பட்டனர்...

அக்ஷய்க்கும் சந்தோசம் தான் என்றாலும் அபியை நினைத்து சற்று யோசனையாகத் தான் இருந்தது... அவளுக்குத் தன்னைப் பற்றிய உண்மை தெரிந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்று அவனால் கணிக்க முடியவில்லை... ஆனால் அது தன் தங்கையின் வாழ்க்கை பாதிக்கக் கூடும் என்று அவன் கொஞ்சமும் எண்ணவில்லை... அனியை எப்படி வாழ வைக்க வேண்டும் என்று அவனுக்கு நன்கு தெரியும்...

அடுத்த ஒரு மாதத்தில் திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது...

ஆதர்ஷிடம் அனியின் புகைப்படம் காண்பித்த போது பார்த்துவிட்டுப் புன்னகைத்தான்... மற்றபடி திருமணக் கனவில் அவன் ஒன்றும் மிதக்கவில்லை... வாழ்க்கையை அதன் போக்கில் எடுத்துக் கொள்ளப் பழகி கொண்டான்...

நல்ல விசயங்களை மட்டுமே எண்ணும் அந்த நல்ல அண்ணன் தங்கைக்கு அந்தக் காணொளி பற்றித் தெரிய வாய்ப்பு இல்லாமல் போனது... சாக்கடை மனது உடையவர்களிடம் தான் கண்ட கழுசடைகளும் போய்ச் சேரும் போலும்... இது போல் கெட்டதை அறியாத மனித ஜீவன்களும் நாட்டில் இருக்கத்தான் செய்தனர்...

அன்று அனி கல்லூரி செல்வதற்குத் தயாராக வர கோபிநாத், "நீ காலேஜ் எல்லாம் போக வேண்டாம்..." என்று சத்தம் போட...

"டாட்... சும்மா எதுக்கு அவளைச் சத்தம் போடுறீங்க...? நீ போ அனி... அங்கே யார் என்ன சொன்னாலும் கோழை மாதிரி அழாதே... தைரியமா எதிர்த்து நின்னு பேசு... அதுக்கு அப்புறம் யாரும் எதுவும் கேட்க மாட்டாங்க... உன் மேல தப்பு இல்லைல்ல..." என்றவன் ஊடுருவும் பார்வையை அவளை நோக்கி வீச...

அதில் வியர்த்து விதிர்த்து போன அனி, "இல்லைண்ணா..." வேகமாய்த் தலையை மறுப்பாய் அசைத்தாள்...

"சரி பார்த்துப் பத்திரமா போ..." என்று அவளை அனுப்பி வைத்தவனிடம்,

"அக்ஷய்... நீ பண்றது கொஞ்சமும் சரியில்லை... அவ மறுபடியும் அந்தப் பையன் கூடச் சேர்ந்து ஊர் சுத்த போறா..." கோபிநாத் மகனை சத்தம் போட...

"அதை நான் பார்த்துக்கிறேன்... இனி காலேஜ் முடிஞ்சு நேரே வீட்டுக்கு தான் வருவா..." என்றான் உறுதியான குரலில்...

அண்ணன் தன்னை நம்பி கல்லூரிக்கு அனுப்பியது அனிக்கு சந்தோசமாய் இருந்தது... அவன் தயவு இருக்கும் வரை அவளை யாராலும் அசைக்க முடியாது என்று இறுமாப்பு எழுந்தது அவளுள்... ஆனால் அக்ஷய்க்கு உடல் எல்லாம் கண் என்பதை அவள் அந்நேரம் உணரவில்லை... அவன் எங்கே இருந்தாலும் அவனின் பார்வை அவள் மேல் இருந்து கொண்டே இருக்கும் என்பதை அறியாமல் போனாள்...

அன்று அபி தனது கடையில் அமர்ந்து பட்டுப் புடவையில் நூல் வேலைப்பாடு செய்து கொண்டு இருந்தாள்... அப்போது கடை முன் கார் வந்து நிற்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள்...

அதில் இருந்து இறங்கிய துளசியைக் கண்டதும் ஆச்சிரியப்பட்டவளாய் தனது வேலையை விட்டு விட்டு எழுந்தவள் வாயிலுக்கு ஓடினாள்...

"வாங்க ஆன்ட்டி..." மகிழ்ச்சியாய் வரவேற்றவளை கண்டு ஆனந்த அதிர்ச்சி அடைந்தவர்,

"நீ எங்கே இங்க...?"

"இது என் கடை தான்..."

"உன்னோடதா...?" என்றபடி உள்ளே வந்தவர் அவள் செய்து இருந்த வேலைப்பாடுகளைக் கண்டு பிரமித்துப் போனார்...

"எல்லாம் ரொம்ப அருமையா, அழகா இருக்கும்மா..." என்று அவளைப் பாராட்டியவர்,

"நேத்து ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன்... அந்தப் பொண்ணு கட்டியிருந்த புடவையில் இருந்த கை வேலைப்பாடு பிடிச்சு போய் அது யாரு செஞ்சதுன்னு விசாரிச்சேன்... இந்த அட்ரஸ் சொன்னாங்க... அதான் உடனே பார்க்க வந்துட்டேன்..."

"சொல்லுங்க ஆன்ட்டி... நான் என்ன செய்யணும்...?"

"அழகா தமிழ்ல அத்தைன்னு சொல்லும்மா..."

"சரிங்கத்தை இப்போ நான் என்ன செய்யணும்..." உடனே ஏற்றுக் கொண்டு சிரித்தபடி பேசிய பெண்ணை நிறைவாய் பார்த்தார்...

"உன்னோட உதவி இப்போ எனக்குத் தேவைப்படுதும்மா..."

"அத்தைக்கு இல்லாத உதவியா... சொல்லுங்க... செஞ்சிடறேன்..."

"என்னோட கம்பெனிக்கு வந்து அங்கே தயாராகிற புடவையில் இந்த மாதிரி வொர்க் பண்ணி கொடுக்க முடியுமா..."

அவரது பேச்சு கேட்டு திகைத்துப் போய்ப் பார்த்தாள்... அவள் ஏதோ அவளுக்கு ஏற்றவாறு சிறிய அளவில் இந்த வேலையைச் செய்து கொண்டு இருக்கிறாள்... பெரிய

அளவில் செய்ய அவளால் முடியுமா... அதற்கான திறமை அவளுக்கு இருக்கிறதா...

"அத்தை... நீங்க சொல்ற மாதிரி செய்ற அளவுக்கு எனக்கு அனுபவம் பத்தாது..." அவள் நாசுக்காய் மறுத்தாள்...

"உன் கிட்ட சொல்றதுக்கு என்னம்மா... டெக்ஸ்டைல் பிசினஸ் எங்க பரம்பரை தொழில்... எங்க வீட்ல நான் தான் ஒரே பொண்ணு... அதனால தொழில் நிர்வாகம் என் கைக்கு வந்தது... எனக்கு அப்புறம் அக்ஷய் கிட்ட அதை ஒப்படைச்சேன்... ஆனா அவன் ரெடிமேட் ட்ரெஸ்ன்னு மத்ததுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தைப் புடவை தயாரிப்புக்கு கொடுக்க மாட்டேங்கிறான்... அதான் அதில் ஏதாவது புது முயற்சி பண்ணலாம்ன்னு யோசிச்சிட்டு இருந்தேன்... உன்னோட வொர்க் எனக்கு ரொம்பப் பிடிச்சு போச்சு... அதான் வந்தேன்... நான் சொன்னா அக்ஷய் கேட்பான்... உன் முடிவு என்னம்மா...?"

"அது வந்து..." சின்னதாய்ச் செய்தாலும் அவளுடையதுக்கு அவள் தான் முதலாளி... இதே இது அடுத்தவர்களிடம் சென்று வேலை செய்வது என்பது அவளுக்கு என்னமோ சரியாகத் தோன்றவில்லை...

"உனக்கு எந்தக் குறையும் வராம நான் பார்த்துக்கிறேன்... எனக்காகச் சரின்னு சொல்லும்மா..."

"சரிங்க அத்தை... நான் அண்ணா, பாட்டி கிட்ட கேட்டுட்டு சொல்றேன்..." என்றவள் அண்ணனிடமும் பாட்டியிடமும் அன்றே விசயத்தைக் கூறினாள்...

"உனக்குத் தோணுறதை செய் அபி..." என்று கோமதி முடித்துக் கொள்ள...

"எதுக்கும் யோசிச்சுக்கோ அபி... எல்லாத்துக்கும் அவங்க கிட்ட போகணுமான்னு எனக்குத் தோணுது..." ஆதர்ஷுக்கு அவ்வளவாய் விருப்பம் இல்லை...

"அந்த அத்தைக்காகப் போய்ப் பார்த்தால் தான் என்ன அண்ணா... பிடிச்சு இருந்தா செய்யப் போறேன்

இல்லைன்னா வேண்டாம்ன்னு மறுக்கப் போறேன்..." என்றவளின் பேச்சு ஆதர்ஷை ஒத்துக்கொள்ள வைத்தது...

அபி தன் சம்மதத்தைத் துளசியிடம் கூறினாள்... அவர் உடனே தனது மகனை போய்ச் சந்திக்கச் சொன்னார்...

இது எல்லாம் அக்ஷயின் திட்டம் என்பதை அறியாத அபியும் அப்பாவியாய் அவனைச் சந்திக்கச் சென்றாள்...

ஆம்... இது அக்ஷயின் திட்டம் தான்... என்று இருந்தாலும் அபியால் தனக்குப் பிரச்சினை எழ கூடும் என்று அறிந்தவன் தனது தாயின் மூலம் காய் நகர்த்தினான்...

"மாம்... அந்தப் பொண்ணுக்கு நாம ஏதாவது செஞ்சு கொடுத்தா பின்னாடி அவங்க அண்ணனை டிபண்ட் பண்ணி இருக்காது... நம்ம அனிக்கும் ஒரு பாரம் குறையும்... அந்தப் பொண்ணு ஹேண்ட் வொர்க் நல்லா பண்ணுமாம்... நம்ம கம்பெனிக்கு வந்து டிசைன் பண்ண சொல்லுங்க... அப்படியே அந்த நிர்வாகப் பொறுப்பை அவளிடம் கொடுத்திடலாம்... ஆனா அது அவளுக்குத் தெரியாம பண்ணணும்... அது உங்களால மட்டும் தான் முடியும்... " நயமாய்ப் பேசி அன்னையைத் தன் விருப்பத்திற்குச் சம்மதிக்க வைத்தான்...

அந்த அப்பாவி அன்னை ஒரு பெண்ணிற்கு நல்லது நடப்பதற்காகச் சரி என்று சம்மதித்தார்... அதன்படி அபியை சந்திக்க வந்தார்...

அக்ஷய் அபியை தனது பொறுப்பில் கொண்டு வர நினைத்தான்... என்றாவது ஒருநாள் உண்மை தெரிந்து அவள் தன்னிடம் வாலாட்டினால் அதை எப்படிக் கையாளுவது என்று அவனுக்குத் தெரியும்... அதற்கு அவள் தன்னிடம் வர வேண்டும்... வரவழைக்கப் பட வேண்டும்... தான் எண்ணியதை திட்டமிட்டுச் சரியாய்ச் செய்து முடித்தான்...

இன்று அபி தன்னைக் காண வருவதை ஆவலுடன் எதிர்பார்த்து அலுவலக அறையில் காத்து இருந்தான்...

அபி அவனது அலுவலகத்திற்கு வந்தவள் அங்கு இருந்தவர்களிடம் விசாரித்து உள்ளே சென்றாள்...

அக்ஷய் அனுமதி அளித்ததும் அவள் அவனது அறைக்குச் செல்லும் போது சரியாக மணிவண்ணன் அங்கு வந்தான்...

அவனைக் கண்டதும் திகைத்து போனவள் அவனை அதிர்ச்சியாய் பார்த்தாள்...

"நீ... நீங்க..." அவள் திகைக்க...

"தங்கச்சி... நீயா...?" எதிர்பாராமல் அவளை அங்குக் கண்டதும் அவனுமே தடுமாறினான்...

அவளைக் காணாமல் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்த அக்ஷயை திரும்பி பார்த்த அபியின் முகம் பேயறைந்தது போலானது...

பூக்கும்...

மணியின் 'சார்' என்ற பவ்யமான விளிப்பிலேயே அபிக்கு புரிந்து போனது அக்ஷய் யார் என்று...

அக்ஷயை அடையாளம் தெரிந்த அந்த நொடி அவள் மனதில் ஆத்திரம் என்ற தீ மூண்டது... 'ச்சீ... இவன் எல்லாம் ஒரு மனிதனா...?' என்ற எண்ணம் தோன்ற மனதின் ஒட்டு மொத்த வெறுப்பையும் கண்களில் தேக்கி அவளை நெருப்பாய் சுட்டு எரித்தாள்...

அடுத்தக் கணம் கோபம் மறைந்து இப்படித் தனது பெண்மையைக் கேவலப்படுத்தி விட்டானே என்ற ஆதங்கம் மனதில் எழுந்து அவளை உயிருடன் கொல்ல அவளது முகம் அருவருப்பைத் தேக்கி சுளித்தது...

அடுத்த நொடி ஒன்றும் பேசாது விறுவிறுவென அங்கிருந்து அவள் நகர முயல... அவள் தன்னை அடையாளம் தெரிந்து கொண்டாள் என்பதை அறிந்தவனாய் அக்ஷய் விரைந்து வந்து அவளது கையைப் பற்றியவன் மணியிடம்,

"நான் சொல்ற வரைக்கும் யாரையும் உள்ளே விடாதே..." என்று சொல்ல மணி அமைதியாய் அந்த இடத்தை விட்டு அகன்றான்...

அக்ஷயும் அபியும் நின்று இருந்த இடம் அக்ஷய் அறைக்கு முன்னால் இருந்த வரவேற்பறையில்... பொதுவாக முக்கியமானவர்கள் வந்தால் மட்டுமே அங்கு உட்கார வைக்கப்படுவார்கள்... மற்றவர்கள் எல்லாம் அவனது செயலாளர் மணிவண்ணனின் அறையோடு பேசி திருப்பி அனுப்பப்படுவார்கள்... அபியை தானே கையாள வேண்டும் என்று அக்ஷய் எண்ணியதால் அவளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது... அதுவும் அவன் அனுமதி தந்ததால் மட்டுமே...

"ச்சீ... என் கையை விடுடா..." இடது கையில் அவளது கை வேலைப்பாடுகளின் வடிவமைப்பின் மாதிரிகள் அடங்கிய

கோப்பு இருக்க, வலது கை அவனது இறுகிய பிடியில் இருந்தது...

அவளது அருவருப்பான முகச்சுளிப்பை கூர்ந்து பார்த்தவன் அவளைத் தனது அறைக்கு இழுத்துச் சென்றான்...

"விடுடா... என்னை விடுடா..." மெல்லிய குரலில் என்றாலும் அடக்கப்பட்ட கோபத்தில் கத்தியவளை கண்டு அவன் அசரவில்லை...

தனது அறைக்கு வந்து அவளது கையை விடுவித்தவன், "சாரிங்க கண்ணகி மேடம்... உங்க கையைப் பிடிச்சதுக்கு என்னை அடிச்சுறாதீங்க..." நக்கல் சிரிப்புடன் கூறியவனைக் கண்டு உறுத்து விழித்தவள்,

"உன்னை அடிக்கிறதுக்குக் கூட என் கை உன் மேல் படணும்ன்னு நினைக்கிறப்போ எனக்கு அருவருப்பா இருக்கு..." வெறுப்புடன் கூறியவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

அவள் முன் வந்து நின்றவன் தனது சட்டைப்பையில் இருந்த பேனாவை எடுத்து அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"இந்தத் திமிர் தான்டி உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கி இருக்கு... போயும் போயும் உன்னை மாதிரி ஒரு பொண்ணைத் தொடணும்ங்கிற எண்ணம் எனக்குக் கிடையாது... அதுக்கு அவசியமும் கிடையாது... ஊரு உலகத்துல நீ மட்டும் தான் பொண்ணும் கிடையாது... மைண்ட் இட்..."

அவள் பேசிய விதத்தில் அவனது தன்மானம் சீண்டப்பட அவனும் கோபத்தில் கடுகடுத்தான்...

"உன் கூட எனக்கு என்னடா பேச்சு... ஏதோ அத்தை பெரிய மனுசி சொன்னாங்களேன்னு தான் இங்கே வந்தேன்... அப்பவே நீன்னு தெரிஞ்சிருந்தா நான் வந்து இருக்கவே மாட்டேன்..." என்றவள் அவனைத் தாண்டி செல்ல முயன்றாள்...

"உன் அண்ணன் கல்யாணம் நடக்கணுமா வேண்டாமா...?" அவனது குரலில் தேங்கி நின்றவள்,

"அதில் உன் தங்கை கல்யாணமும் அடங்கி இருப்பதா எனக்கு எண்ணம்..."

"வெல்... அது எனக்கும் தெரியும்... அது நடக்கணுமா வேண்டாமான்னு தான் நான் கேட்கிறேன்..." அலட்சியமாய் வினவியவன் முன் வந்து நின்றவள்,

"இவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும் என் அண்ணனை உன் தங்கச்சியைக் கல்யாணம் பண்ண விடுவேன்னு நீ எப்படி நினைக்கலாம்... அது ஒரு காலமும் நடக்காது... என் மானத்தை வாங்கியவன் தங்கச்சி எங்க வீட்டு மருமகளா...? முடியாது முடியவே முடியாது..." என்று ஆங்காரமாய்க் கத்தியவள்,

"அன்னைக்கு நீ கடத்திட்டு போனப்போ ஒவ்வொரு நொடியும் நான் துடிச்சது எனக்கு மட்டும் தான் தெரியும்... ராத்திரி முழுக்க இருட்டு அறையில் எந்த நொடி என் கற்புக்குக் களங்கம் வருமோன்னு நான் தவிச்ச தவிப்பு எனக்கு மட்டும் தான் தெரியும்... அறைக் கதவை திறந்துட்டு ஒவ்வொருத்தனும் உள்ளே வரும் போது 'ஐயோ என்னை என்ன செய்யப் போறாங்களோ... என் பெண்மையைக் களவாட போறாங்களோ'ன்னு நான் பயந்து பயந்து செத்தது எனக்கு மட்டும் தான் தெரியும்..."

அன்றைய நாளின் தாக்கத்தில் அவளுக்கு அழுகை வரும் போல் இருந்தது... ஆனாலும் அவன் முன் அழ கூடாது என்று தன்னை முயன்று கட்டுப்படுத்தியவள் அவனை நிமிர்வாய் பார்த்தாள்...

"என்னை இந்த மாதிரி துடிக்க வச்ச நீ என் உறவினனா என் வீட்டுக்கு வந்துட்டு போயிட்டு இருப்பதை என்னால் எப்படி அனுமதிக்க முடியும்... என் அண்ணனுக்குப் போயும் போயும் கேவலமான உன்னோட தங்கை தான் கிடைத்தாளா... இனி நீ தலைகீழா நின்னாலும் இந்தக் கல்யாணம் நடக்காது..." தைரியமாய்க் கூறியவள் அங்கு இருந்து நகர முயல...

அது வரை அவளது பேச்சை கூர்மையாய் கவனித்துக் கொண்டு இருந்தவன் தனது இரு கைகளையும் கட்டி கொண்டு, "உன் அண்ணன் படிப்பு உனக்கு முக்கியம் இல்லையா...?"

அவனது வார்த்தையில் ஆழ்ந்து அவனைப் பார்த்தவளின் உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"என் மானத்தை விலை பேசியவன் பணத்தில் தான் என் அண்ணன் மேலே படிக்கணும்ன்னா அந்தப் படிப்பே அவனுக்குத் தேவையில்லை..."

அவளின் இந்தப் பேச்சில் அவன் சற்று திகைத்து தான் போனான்... ஏழ்மை நிலையைச் சுட்டி காட்டினால் தன் முன் மண்டியிடுவாள் என்று அவன் நினைக்க அவளோ வெகுண்டு நிமிர்ந்து அல்லவா நிற்கிறாள்...

"என் அண்ணன் எம்.டி வரைக்கும் படிச்சது உன் பணத்தில் இல்லை... இதோ உன் முன்னாடி நிற்கிறேனே நான் தான் அவனைப் படிக்க வைச்சேன்... பதினைஞ்சு வயசில் அவனுக்காகப் பத்தாவதோடு படிப்பை நிறுத்திட்டு உழைக்க ஆரம்பிச்சவ நான்... ஒன்பது வருசமா அவன் படிப்புக்காகத் தான் உழைச்சிட்டு இருக்கேன்... இனியும் நம்பிக்கை இருக்கு என்னால் அவனைப் படிக்க வைக்க முடியும்ன்னு... என்ன கூடுதலா இரண்டு வருசமாகும்... ஆனா ஆகிட்டு போகுது... அதுக்காக உன் கிட்ட பிச்சை எடுத்து தான் என் அண்ணன் படிக்கணும்ங்கிற அவசியம் அவனுக்குக் கிடையாது... நீ தான் என்னைக் கடத்தினேங்கிற விசயம் மட்டும் என் அண்ணனுக்குத் தெரிஞ்சது உன் தங்கச்சியை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்... அப்புறம் உயிரை காப்பாத்துறதுக்காகக் கத்தியை எடுக்கிற அவனது கை உன் உயிரை எடுக்கிறதுக்காகக் கத்தியை எடுக்கும்... என் அண்ணா பார்க்கத்தான் சாது... சாது மிரண்டா காடு கொள்ளாது..."

படபடவெனப் பொரிந்தவளை கண்டு அசராமல் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவன், "சூப்பர்... சினிமாவில் கூட இந்த மாதிரியான

உணர்ச்சிப்பூர்வமான காட்சியை நான் பார்த்தது இல்லை..." என்று கை தட்டி அவளைப் பாராட்டியவன் பாராட்டில் மருந்துக்கும் புகழ்ச்சி இல்லை... மாறாக அளவுக்கு அதிகமான நக்கல் நையாண்டியே நிறைந்து இருந்தது...

அதைக் கண்டு முறைத்தவள் அவனிடம் தனக்கு என்ன பேச்சு என்று அவனை அலட்சியப்படுத்தி விட்டு செல்ல முயன்றவளை அவனது குரல் மீண்டும் தடுத்து நிறுத்தியது...

"அப்புறம் ஏன்ம்மா உன் அண்ணன் கிட்ட சொல்லலை... உன்னைக் கடத்தின அன்னைக்கே உன் அண்ணன் கிட்ட சொல்லி இருக்க வேண்டியது தானே... உன் அண்ணன் கையால் என் உயிரை எடுத்து இருக்க வேண்டியது தானே... ஏன் செய்யலை...? உன் வாயை யாரும் கட்டி போட்டு இருந்தாங்களா என்ன...?" எள்ளல் குரலில் கூறியவனின் பேச்சு கேட்டு பதற்றத்துடன் திரும்பினாள்...

"நீ என்ன சொல்ற...?" அச்சம் நிறைந்த அந்தப் பெண் மானின் விழிகளைக் கண்டு அந்தக் கொடிய வேடவனின் மனம் இரக்கம் கொள்ளவில்லை... மாறாகச் சிக்கி கொண்டாயா என்ற ரீதியில் எகத்தாளமாய்ப் பார்த்தான்...

"புத்திசாலி... புரிஞ்சிக்கிட்டியே... எஸ்... அதே காரணம் இன்னமும் இருக்கு... நீ நான் சொல்ற பேச்சை கேட்கலைன்னா அதை நான் பின்பற்ற வேண்டி இருக்கும்... அந்தளவுக்கு என்னைச் செய்ய வைக்க மாட்டேன்னு நினைக்கிறேன்..."

ஆதர்ஷ் மருத்துவத் தொழிலுக்குக் களங்கம் உண்டாக்குவதைத் தான் அவன் குறிப்பிட்டுச் சொன்னான்...

கண்களில் நிறைந்த வெறுப்புடன் அவனைப் பார்த்தவள், "இப்படி எங்க கையைக் காலை கட்டியாவது உன் தங்கச்சி கல்யாணத்தை நடத்த நினைக்கிறியே... இப்போ தான் எனக்குச் சந்தேகமே வருது... உன் தங்கச்சிக்கு ஏதும் குறை இருக்கோன்னு... அதை மறைக்கத்தான் இந்த மாதிரி

மிரட்டுறியோ... பணக்காரன் நீ எங்க வீடு தேடி வந்து பொண்ணு கொடுக்கிறேன்னு வரும் போதே யோசிச்சு இருக்கணும்... என் அண்ணன் மேல் இருந்த நம்பிக்கையில் நான் அதைப் பத்தி யோசிக்கலை... என்ன நான் சொன்னது உண்மை தானா...?"

அவள் சொல்லி முடிக்கும் அவளது குரல்வளையை இறுக்கி பிடித்து இருந்தான் அவன்...

"ஏய் என்னடி சொன்ன...? என் தங்கச்சியைப் பத்தி பேச நீ யாருடி...? ஒண்ணும் இல்லாத நீ... எங்க வீட்டு இளவரசியைப் பத்தி பேச என்ன யோக்கியதை இருக்கு... நீ பேசுற ஒவ்வொரு வார்த்தைக்கும் என் கிட்ட படப் போறடி..." அவனின் ஆக்ரோசத்தில் அவள் உள்ளுக்குள் நடுங்கினாலும் வெளியில் நிமிர்வாய் தைரியமாய் நின்று இருந்தாள்...

"ச்சே... உன்னைத் தொட கூடாதுன்னு நினைச்சு இருந்தேன்..." என்று வெறுப்புடன் கூறியவன் அவளது கழுத்தில் இருந்து கையை எடுத்தான்... பின்,

"இங்கே உன் பேச்சை கேட்கிறதுக்கு எனக்கு நேரம் இல்லை... இனி நான் சொல்ற பேச்சை தான் நீ கேட்கணும்... உனக்கும் எனக்கும் நடந்த பிரச்சினையை உன் அண்ணன் கிட்ட சொல்லி என் தங்கச்சி வாழ்க்கையில் குழப்பம் பண்ண நினைச்ச... அதுக்கு அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்... என் தங்கச்சி கண்ணைக் கசக்கினா அடுத்த நொடி உன் அண்ணன் ஜெயிலுக்குப் போவான்... அவனுக்குத் துணைக்கு உன்னையும் ஜெயிலுக்கு அனுப்பிருவேன்..."

"என்ன பார்க்கிற... இனி நீ என் கிட்ட தான் வேலை பார்த்து ஆகணும்... எனக்கு எதிரா சுண்டு விரல் அசைக்க நீ முயன்றால் கூட அடுத்த நொடி கம்பெனி பணத்தை எடுத்துட்ட, போட்டி கம்பெனிக்கு விலை போயிட்ட, மெட்டீரியலை திருடி வித்துட்ட இந்த மாதிரி பொய் கேஸ் போட்டு உன்னை உள்ளே தள்ள என்னால் முடியும்... இது எல்லாம் நடக்காம இருக்கிறது உன் கையில் தான்

இருக்குது... நீ புத்திசாலி புரிஞ்சிப்பன்னு நினைக்கிறேன்... எனக்கு என் தங்கை வாழ்க்கை முக்கியம்..." என்று அவன் முடித்துக் கொண்டான்...

அவன் பேசியது கேட்டு மனம் தாங்கொண்ணா வேதனையில் உழல அவனை ஒன்றும் செய்ய முடியாத உயரத்தில் அவன் இருப்பதைக் கண்டு ஆத்திரத்தில் முகம் சிவக்க உதடுகள் துடிக்க அவனைப் பார்த்தவள்,

"இப்போ உனக்குச் சாதகமான காலம்... அதான் நீ இப்படி ஆடுற... கடவுள் எப்போதும் ஒரே மாதிரி உனக்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்துட்டு இருப்பாருன்னு நீ நினைக்காதே... என்னைக்காவது ஒரு நாள் உன் ஆட்டமும் முடிவுக்கு வரும்... அப்போ உனக்கு நான் திருப்பிக் கொடுப்பேன்... இப்போ என்னை வலிக்க வலிக்க நீ அடிக்கிற மாதிரி அன்னைக்கு உன்னை நான் வலிக்க வலிக்க அடிப்பேன்... எனக்கும் காலம் வரும் அன்னைக்குப் பார்த்துக்கிறேன் உன்னை..."

சவால் விடுவது போல் பேசியவளை கண்டு இளக்காரமாய் நகைத்தான் அக்ஷய்...

"யாரு... நீ என்னை... குட் ஜோக்... அது இந்த ஜென்மத்தில் நடக்காது... போயும் போயும் ஒரு பொண்ணு கிட்ட அதுவும் உன்னை மாதிரி ஏழை பொண்ணு கிட்ட இந்த அக்ஷய் தோற்கிறதா... நெவர்... என்ன சொன்ன நீ என்ன அடிக்கப் போறியா... ஒல்லி குச்சி மாதிரி உடம்பை வச்சிக்கிட்டு ஜிம் பாடியான என்னை வலிக்க வலிக்க அடிப்பியா... இப்போ நான் உன்னை அடிச்சேன்னு வை... என் ஒரு அறைக்கு நீ தாங்க மாட்ட..."

கர்ஜித்தவனைக் கண்டு பயப்படாமல் நேரே அவன் கண்களைச் சந்தித்தவள் மனம் சுண்ணாம்பு கால்வாயாய் கொந்தளித்துக் கொண்டு இருந்தது...

'அம்மா காமாட்சி... இது நாள் வரை உன் கிட்ட நான் எதையும் கேட்டது இல்லை... ஆனால் இப்போ கேட்கிறேன்... என்னைக் கதற வைக்கும் இவனைக் கதற வைக்க ஒரு

சந்தர்ப்பம் எனக்கு ஏற்படுத்திக் கொடு... இவன் கதறணும்... துடிக்கணும்... என்னை மண்டியிட வைக்கிறவனை நான் என் முன்னாடி மண்டியிட வைக்கணும்... என்னைத் திருப்பிக் கொடுக்காதபடி அடிக்கும் இவன் வாழ்க்கையில் மீள முடியாதபடி நான் கொடுக்கும் அடி பலமா அமையணும்... இதற்கான சந்தர்ப்பத்தை மட்டும் எனக்குக் கொடு தாயே...' மனம் வேதனையில் துடிக்க வேண்டியவளின் வேண்டுதல் அந்த அன்னையின் காதுகளில் விழுந்ததா... காலம் தான் பதில் சொல்ல வேண்டும்...

அவளது முகம் முன் சொடுக்கு போட்டவன், "கிளம்பலாமா...?" என்றான் மொட்டையாக...

"எங்கே...?" என்ன தான் தைரியமாகக் காட்டி கொண்டாலும் அவளது கண்ணில் பயம் எட்டி பார்த்தது...

அதை அவனும் கண்டு கொண்டான்... கேலியாய் அவளைப் பார்த்து சிரித்தவன், "இப்போவாவது புரிஞ்சதா... என்னத்தான் கத்தினாலும் குதிச்சாலும் நீ ஒரு பொம்பளை தான்ங்கிறது... ஆம்பிளை ஆம்பிளை தான்... பொம்பளை பொம்பளை தான்... பொட்டை கோழி கூவி பொழுது விடிஞ்சதா சரித்திரம் இல்லை..."

'ஒரு பெண் நினைச்சா ஆணின் சரித்திரத்தையே மாற்றிவிடுவாள்டா முட்டாள்...' என்று உரக்க கத்தி சொல்ல துடித்த நாவை முயன்று அடக்கி கொண்டாள் அபி...

"நீ வேலை செய்ற கம்பெனிக்கு தான்..." இலகுவாய் கூறியவன் கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றான்...

வேறுவழியின்றி அவன் பின்னே சென்றவள் அந்தக் குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்...

"இவ கூடப் பேசத்தான் என்னை உள்ளே வர விடலையா...? யாரு இவ...?" ஆங்காரமாய் ஒலித்த பெண்ணின் குரலில் அபி திகைத்துப் போய்ப் பார்த்தாள்...

மதிவதனாவை கண்டதும் அக்ஷய்க்கு ஆயாசமாக இருந்தது... இப்போது தான் அபியை சமாளித்தான்... அடுத்து இவளா...? அவனுக்கே அவன் நிலை கண்டு பரிதாபமாய் இருந்தது...

"ஏய் யாருடி நீ...? என் அக்ஷயை மயக்க வந்தியா...? அப்படி எல்லாம் அவர் யார் கிட்டேயும் மயங்கிட மாட்டார்... என்னைத் தவிர..." பெருமையாய் ஒலித்தது மதியின் குரல்... அவள் கர்வத்துடன் அக்ஷயின் கரத்தோடு தன் கரத்தை கோர்த்துக் கொண்டு பெருமிதமாய் அபியை பார்த்தாள்...

ஏனெனில் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத அக்ஷய் போன்று ஆண் மகனை இப்போது உள்ள நவநாகரீக உலகத்தில் பார்ப்பது அரிது... அதுவும் அவர்களைப் போல் பணக்காரர்கள் மத்தியில் காண்பது மிகவும் அரிது... அந்த விசயத்தில் அக்ஷயை பாராட்டியே ஆக வேண்டும்... தன்னைப் பலகீனப்படுத்தும் எந்த ஒரு விசயத்தையும் தன் அருகில் வர விட்டது கிடையாது... அந்த விதத்தில் அவன் கெட்டிக்காரன் தான்... அக்ஷயின் இந்த ஒழுக்கமான குணமே மதியை இன்னமும் அவன் பால் ஈர்த்தது...

"ச்சீ... போயும் போயும் இவனைப் போய்..." அருவருப்பாய் முகத்தைச் சுளித்த அபி, "ஓசியில் கொடுத்தால் கூட இவன் எனக்கு வேண்டாம்..."

அபியின் பேச்சில் மதியின் முகம் அவமானத்தில் சுண்டி போனது... ஆனால் அக்ஷய் உணர்வில்லாமல் அவளை வெறித்துப் பார்த்தவன்,

"மேடம் ஓசியில் கொடுத்தால் எல்லாம் வாங்க மாட்டாங்க... ஆனால் கோடி கோடியாய் கொட்டி கொடுத்தால் முதல் ஆளாய் வாங்கிக்குவாங்க... அப்படித்தானே மிஸ். அபிராக்ஷிதா..."

அக்ஷய் அவளது பெயரை சொல்லும் போது அத்தனை அழகாய் ஒலித்தது அவளது பெயர்... அந்நேரம் அவனது முகமும் குரலும் அத்தனை மென்மையாய் மாறி இருந்தது...

அதை அபியும் கவனிக்கவில்லை... அவனும் உணரவில்லை... ஆனால் மதி அதை உணர்ந்தாள்...

அக்ஷய் அவளது பெயரை கூட இந்தளவுக்கு அழகாய், மென்மையாய் உச்சரித்தது இல்லை... அவள் திகிலாய் இருவரையும் பார்த்தவள் பின் அபியை மேலிருந்து கீழாய் எடை போடுவது போல் பார்த்தாள்...

எளிமையாய் சாதாரணத் தோற்றத்தில் இருந்தாலும் அவளது ஆடை வடிவமைப்பு, அதை நேர்த்தியாய் அவள் அணிந்து இருந்த விதம் அவளை அழகாய்க் காட்டியது... அதை விட அவளின் நிமிர்வு அவளை மற்ற பெண்களிடம் இருந்து தனித்துக் காட்டியது...

அக்ஷய் சொன்னது கேட்டு அபியின் முகம் கன்றி கறுத்துப் போனது... அவனின் பணத்தின் முன்னால் தான் மண்டியிட வேண்டிய தன் ஏழ்மை நிலையை முதன்முறையாய் அறவே வெறுத்தாள்...

"உன் கிட்ட அப்படி எத்தனை கோடி நான் வாங்கினேனாம்..." கோபத்தில் அவளையும் அறியாமல் வார்த்தை வெளிவந்தது...

அபியின் வார்த்தைகள் கேட்டு மதி அடைந்த நிம்மதிக்கு அளவே இல்லை...

'நல்லவேளை இந்தப் பெண்ணுக்கு அக்ஷய் மேல் கண் இல்லை... விருப்பமும் இல்லை... என் அக்ஷய் எனக்கு மட்டும் தான்...' என்று நிம்மதி கொண்டவளாய் இருவரையும் வேடிக்கை பார்த்தாள்...

'அதான் என் தங்கச்சியை உன் அண்ணனுக்குக் கட்டி கொடுத்து கோடி கோடியாய் நாங்க செய்யப் போறோமே... அது பத்தாதா உனக்கு...' நுனி நாக்கு வரை வந்த வார்த்தைகளை முயன்று அடக்கி கொண்டான் அக்ஷய் மதி இருப்பதை உணர்ந்து...

"மதி நீ உள்ளே போய் உட்காரு... மேடத்தை வழியனுப்பி வச்சிட்டு நான் வர்றேன்..." அபியை பார்த்து நக்கலாய்

கூறியவன் மதியை தனது அறைக்கு அனுப்பி வைத்துவிட்டு,

"அபி..." என்று அவளை அழைக்க... அவளோ அவன் புறம் திரும்பாது விறைப்பாய் நின்று கொண்டு இருந்தாள்...

'ஒண்ணும் இல்லைன்னாலும் இந்தத் திமிருக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை...' ஆத்திரமாய் நினைத்தவன் அவளது கையைப் பிடித்துத் தன் புறம் திருப்பினான்...

"நான் கூப்பிட்டா என்னன்னு கேட்கணும் புரிஞ்சதா... உன் வேலையில் முதல் வேலை இது தான்... இல்லை இந்த மாதிரி தொட்டு பேசுற வேலையை நான் தொடர்ந்து செய்ய வேண்டி வரும்... இப்படி என் கிட்ட உதாசீனம் காட்டின அதுக்கு அப்புறம் ஏற்படப் போகிற பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பு இல்லை..." என்று அவளை எச்சரித்தபடி அவளது கையை விட்டவன்,

"மணி கிட்ட போய்க் கம்பெனி அட்ரஸ் வாங்கிட்டு போ... நான் ஒரு ஒன் அவர்ல அங்கே வர்றேன்..." என்றவன் அபி புரியாது பார்ப்பதை உணர்ந்து,

"பின்னே மகாராணியைக் காரில் கூட்டிட்டு போவேன்னு நினைச்சியா...? பஸ்ல போறவளுக்குக் கார் எல்லாம் ஒரு கேடா..." என்றவனை ஆத்திரத்தில் முகம் சிவக்க பார்த்த அபியை கண்டு திருப்தியுற்ற அக்ஷய்,

"கிளம்பு..." என்றான் கதவை நோக்கி கையைக் காட்டி...

அவமானத்தில் முகம் சிறுத்து போக அவனைத் திரும்பியும் பார்க்காமல் வெளியேறினாள் அபி...

அவள் அவமானப்பட்டுச் செல்வதை மனதில் எழுந்த திருப்தியுடன் பார்த்துக் கொண்டு இருந்தவன் பின்னர்த் தனது அறைக்குச் சென்றான்...

அவன் உள்ளே நுழைந்ததும், "அக்ஷய்... யார் இவள்...? யாரையும் உள்ளே கூட விடாம பேசுற அளவுக்கு அவள்

என்ன விஜபியா...?" கேலியாய் கேட்டவளை அமைதியாய் பார்த்தவன்,

"என் தங்கையோட நாத்தனார்..."

"வாட்... அனிக்கு கல்யாணமா...? என் கிட்ட நீங்க சொல்லவே இல்லை... அவளைப் பார்த்தா சாதாரணப் பேமிலி மாதிரி இருக்கு... அந்த வீட்டில் போய் நம்ம அனியை... எப்படி உங்களால முடிந்தது...?"

"அது உனக்குத் தேவையில்லாத விசயம்... யாருக்கும் தெரியாமல் கல்யாணம் நடத்த போறது இல்லை... இன்விடேசன் உங்க வீடு தேடி வரும்..."

அவனது அலட்சிய பேச்சு அவளது மனதை குத்தினாலும் சமாளித்துக் கொண்டவள், "சரி எனக்குத் தேவையான விசயத்துக்கு வர்றேன்... உங்க லெவலுக்கு இவ கிட்ட எல்லாம் இறங்கி போய்ப் பேசணுமா... என்ன திமிரா பேசுறா பார்த்தீங்கல்ல..."

மதியின் கூற்றை ஆமோதிப்பது போல் அமைதியாய் இருந்தவன், "என் தங்கைக்காக நான் எதையும் செய்வேன்... எதையும் பொறுத்து போவேன்..."

"ஓ... அப்படியா... உங்க தங்கச்சிக்காக இவளை கல்யாணம் பண்ணணும்ங்கிற சிச்சுவேசன் வந்தா அவளைக் கல்யாணம் பண்ணுவீங்களா...?"

மதி என்னமோ விளையாட்டுக்கு தான் கேட்டாள்... ஆனால் அக்ஷயோ அவளை உணர்வில்லாது பார்த்தவன்,

"அப்படி ஒரு சூழ்நிலை வந்தா நிச்சயம் அவளைக் கல்யாணம் பண்ணிப்பேன்..." என்றான் தீவிரமாய் உறுதியான குரலில்...

அதைக் கேட்டு இப்போது அதிர்ச்சி அடைந்தது மதிவதனா தான்...

பூக்கும்...

மதிவதனா எந்த மாதிரி மனநிலையில் இருந்தாள் என்பதை அவளாலேயே உணர முடியவில்லை... வருங்கால மனைவி அருகில் இருக்கிறாள்... அவளிடமே தங்கைக்காக வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறும் அக்ஷய் அவளுக்குப் புதிராகத் தெரிந்தான்... அதே சமயம் ஆபத்தானவனாகவும் தெரிந்தான்... அவனைக் குறித்து அவளுக்குச் சற்றுப் பயமாக இருந்தது...

இருந்தாலும் பெண்களுக்கே உரிய 'என்னவன் எனக்கு மட்டும் தான்' என்ற பிரத்யேக குணம் அவள் மனதில் தலை தூக்க எந்தக் காலத்திலும் வேறு ஒருத்திக்கு அவனை விட்டு கொடுத்து விட முடியாது என்பதை உணர்ந்தவளாய் அதற்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்...

அவன் என்ன பேசினாலும் எவ்வளவு அலட்சியப்படுத்தினாலும் அவளுக்கு அவனை நிரம்பப் பிடித்து இருந்தது... அந்தளவுக்கு அவனது கம்பீரமான அழகு அவளை மயக்கி இருந்தது...

தனது தந்தையின் பதவி மூலம் அக்ஷயின் தொழிலுக்குப் பல உதவிகளைச் செய்யச் சொல்லி அவனை எப்போதும் தன் கட்டுப்பாட்டில் வைக்கத் திட்டமிட்டாள்... அவளும் அக்ஷய் மாதிரி திருமணத்தையும் காதலையும் தொழில் ரீதியாக முடிச்சு போட எண்ணினாள்... இவ்விரண்டுக்கும் மனம் என்ற ஒன்று தேவை... அதில் தளும்பத் தளும்பக் காதல் தேவை என்பதை இருவரும் உணரவில்லை...

மனதில் தைரியம் மீள அக்ஷயை பார்த்தவள், "அக்ஷய் விளையாடாதீங்க...? பொய்க்கு தானே அப்படிச் சொன்னீங்க...? என்னைக் கலங்கடிக்கத் தான் நீங்க அப்படிச் சொன்னீங்கன்னா... என் அக்ஷய் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்று அவனின் கழுத்தை அவள் கட்டி கொள்ள...

நிதானமாக அவளது கையை விலக்கியவன் அவளிடம் இருந்து விலகி, "உண்மையா தான் சொல்றேன்... என் தங்கை விசயத்தில் நான் விளையாட மாட்டேன்..." என்றவன் அவளது முகம் மாறுவதை உணர்ந்து,

"ஆனால் அந்த நிலைக்கு நான் தாழவும் மாட்டேன்... அப்படி ஒரு நிலை எனக்கு வரவும் விட மாட்டேன்..." என்றான் உறுதியாக...

அதில் மகிழ்ந்தவளாய், "என் அக்ஷய்ன்னா அக்ஷய் தான்..." என்றவளிடம்,

"நான் வெளியில் கிளம்பறேன்..." என்றபடி கிளம்பியவனைப் பின் தொடர்ந்தவள்,

"என்னை அப்படியே வீட்டில் ட்ராப் பண்ணிடுங்களேன்..."

"ஏன் உன் கார் என்னாச்சு... அதில் தானே வந்த..."

அவன் கேட்டதும் நாக்கை கடித்துக் கொண்டவள், "அது டிரைவர் கொண்டு வந்து வீட்டில் விட்டிருவான்... எனக்கு உங்க கூட டைம் ஸ்பெண்ட் பண்ணணும் போல் இருக்கு..." என்று கொஞ்சியவளை பார்க்கும் போது அவனுக்கு எரிச்சலாக இருந்தது...

"இங்கே பாரு மதி... மினிஸ்டர் பொண்ணு நீ... எந்நேரமும் உங்கப்பா என்ன உன் கூடவோ உன் அம்மா கூடவோவா இருக்கார்... அது மாதிரி தான் எனக்கும்... தொழிலை பார்க்கவே எனக்கு நேரம் இல்லை இதில் அனி கல்யாணம் வேற... நான் ரெஸ்ட் எடுக்கக் கூட நேரம் இல்லாம ஓடிட்டு இருக்கேன்... புரிஞ்சிக்கலைன்னாலும் பரவாயில்லை இப்படி அடிக்கடி வந்து தொந்திரவு பண்ணாதே..." என்று முகத்தில் அடித்தார் போன்று பேசிவிட்டு விறுவிறுவென அவன் வேகமாய் நடந்து செல்ல...

மதி அவனது வார்த்தையில் உறைந்து போய் அப்படியே நின்றுவிட்டாள்... அவனது பேச்சில் அவளது மனம் மிகுந்த காயப்பட்டுப் போனது... ஒரு பெண்ணிற்கு உரிய நியாயமான ஆசையைக் கூடப் புரிந்து கொள்ளாமல்

அலட்சியமாய்ப் போகிறவனைக் கண்டு கோபமாகவும் வந்தது...

"இருடா... என் கழுத்தில் மூணு முடிச்சு போடுவல்ல... அதுக்கு அப்புறம் உன்னைக் கவனிச்சிக்கிறேன்... இப்போ நான் உன் பின்னாடி சுத்துற மாதிரி உன்னை என் பின்னாடி சுத்த வைக்கலை நான் மதிவதனா இல்லைடா..." கறுவி கொண்டவளுக்குத் தெரியவில்லை அக்ஷய் இதற்கு எல்லாம் அப்பாற்பட்டவன் என்று...

அக்ஷய் நேரே சென்ற இடம் அபியை வர சொல்லி இருந்த டெக்ஸ்டைல் மில்லுக்குத் தான்... அங்கு அவ்வளவாக அவன் செல்ல மாட்டான்... அதற்கு என்று பொறுப்பாக நிர்வாகி இருக்கிறார்... கணக்கு மட்டும் அவனது மின்னஞ்சலுக்கு மாதாமாதம் வந்துவிடும்... அப்படி ஏதும் முக்கியத் தேவை இருந்தால் மணிவண்ணன் வந்து பார்த்துவிட்டு போவான்...

அக்ஷயின் குறிக்கோள் எல்லாம் கட்டுமானத்துறை, ஏற்றுமதி, கணினி துறை என்று வேறு பக்கம் இருந்தது... அதில் அன்னையின் இந்தப் புடவை தயாரிப்பு தொழிலை செய்ய ஏனோ அவனுக்கு அவ்வளவாய் விருப்பம் இல்லை... ஒருவேளை பெண்கள் அணியும் புடவை தானே என்று இழிவாக எண்ணினானோ என்னவோ அதில் அவனுக்குப் பெரிதாக ஆர்வம் இருந்தது கிடையாது...

காரில் இருந்து இறங்கி கம்பெனி உள்ளே வந்தவன் அங்கு அமர்ந்து இருந்த அபியை கண்டதும் கண்களால் பின்னே வரும்படி சொன்னவன் மேலே நடக்க...

'ஆமாம் பெரிய மாகாராஜா... இவர் கண்ணசைத்ததும் பின்னாடியே போறதுக்கு...' என்று வெறுப்பாய் நினைத்தவள் அப்படியே நின்று இருந்தாள்...

அவள் வராததை உணர்ந்து திரும்பி பார்த்தவன், "என்ன வேலை பார்க்கும் எண்ணம் இல்லையா...? இனி உன் விதி என் கையில்..."

அவனது பேச்சில் நிமிர்ந்து அவனைப் பார்த்து முறைத்தவள் ஒன்றும் பேசாது அவனைத் தொடர்ந்து அவனது அறைக்குள் நுழைந்தாள்...

அலுவல் அறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவன் மருந்துக்கும் அவளை அமர சொல்லவில்லை... அவளும் அதை எதிர்பார்க்கவில்லை போலும் கோப்பை கையில் பிடித்தபடி அமைதியாய் அவனைப் பார்த்திருந்தாள்...

"காலையில் எட்டு மணிக்கு வந்தா மாலை ஏழு மணி வரை உன் வேலை நேரம்..." சாதாரணமாய்ச் சொன்னவனைக் கண்டு அவள் திகைத்து போனாள்...

அவளின் ஒரு நாள் பொழுதை இங்கே கழித்துவிட்டால் அவளது தொழிலை யார் பார்ப்பார்கள்...

"காலையில் ஒரு பத்து மணிக்கு வந்துட்டு மாலையில் ஐந்து மணிக்கு போகவா...?" என்றவளை கேலியாய் பார்த்தவன்,

"அப்புறம் மதிய உணவுக்குப் பின் ஒரு மணி நேர தூக்கம்... காலையில், மாலையில் ஒரு அரை மணி நேர டீ பிரேக்... இது போதுமா இல்லை வேற எதுவும் வேணுமா...? அதாவது தூங்குறதுக்குப் பெட், ஏசி இந்த மாதிரி..." அவன் கேட்ட பாணியில் அவனது நக்கல் புரிந்துவிட அமைதியாய் நின்றாள்...

"இங்கே பார்... இது ஒண்ணும் நீ பண்ற மாதிரி ஒரு பத்து புடவைக்கு டிசைன் பண்ற தொழில் இல்லை... ஆயிரக்கணக்கான புடவைகளுக்கு நீ டிசைன் பண்ணணும்... கூடுதலாய் அதில் கை வேலைப்பாடு பண்ணணும்... இன்னும் எவ்வளவோ இருக்கு... உன்னது மாதிரி இது ஒண்ணும் லோக்கலுக்குக் கொடுக்கிறது இல்லை... எல்லாமே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுறது... அதனால உன் வேலையில் கண்ணும் கருத்துமா நீ உழைச்சு தான் ஆகணும்..."

அவன் பேசியதை கேட்டு அவள் விழி பிதுங்கியது... இயலாமையுடன் அவனைப் பார்த்தவள்,

"என்னோட கடையையும் நான் பார்க்கணும்..." அவளின் குரல் நலிந்து ஒலித்தது...

"அட... அதுவா...? கடையா...?" ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டது போல் சிரித்தவன், "நீ அதை இழுத்து மூடுறதால இந்தியாவோட பொருளாதரம் ஒண்ணும் வீழ்ச்சி அடைய போறது இல்லை..." அவன் கூற வந்த விசயத்தைத் தானாய் ஊகித்தவளாய் கோபத்துடன்,

"நீ என்ன சொல்ற...?" அவளது ஒருமையான அழைப்பில் அவளை உறுத்து விழித்தவன்,

"இங்கே நான் உனக்கு வேலை தந்து இருக்கும் முதலாளி... நீ என்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளி... அதனால் மரியாதையா என்னைச் சார்ன்னு கூப்பிடும் வழியைப் பாரு... இன்னொரு முறை என்னை வா போன்னு சொன்ன உன் பல்லை பேத்துருவேன்..." என்று அவளை எச்சரித்தவன்,

"ஆனாலும் ஒரு விசயத்தைக் கணிக்கிறதுல நீ ரொம்ப ஸ்மார்ட்... கரெக்ட்டா நான் சொல்ல வர்ற விசயத்தை சரியா புரிஞ்சிக்கிட்டியே... எஸ்... நீ உன் கடைக்கு மூடு விழா பண்ணிட்டு என் கிட்ட மட்டும் தான் வேலை செய்யணும்..." என்றவனின் வார்த்தையில் வெறித்துப் பார்த்தாள் அவள்...

அவளுக்குப் புரிந்து போனது அவனது தந்திரமான செயல்... எந்த விதத்திலும் அவள் தனித்து நிற்க அவன் விரும்பவில்லை... பொருளாதார ரீதியில் அவள் தனித்து நின்று அவனுக்குச் சவால் விட்டு விடுவாளோ என்று பயந்து அவளை அவனது காலடியிலேயே இருக்க வைக்க எண்ணுகிறான்... அவனது எண்ணம் புரிந்ததும் அவளிடத்தில் மீண்டும் நிமிர்வு வந்தது...

"அது உங்களுக்குத் தேவையில்லாதது சார்... உங்களோட வொர்க்கிங் டைம்ல நான் என் வேலை செய்றேன்னா

என்று மட்டும் பாருங்க... அதுக்கு அப்புறம் எனக்கே எனக்கான நேரத்தில் நான் என்ன பண்றேன்ங்கிறது உங்களுக்குத் தேவையில்லாத விசயம்..." அவனது மூக்கை உடைப்பது போல் திமிராய் பதில் அளித்தாள்...

ஒன்றும் பேசாது அக்ஷய் அவளை அளவிடுவது போல் பார்த்தான்... தான் என்ன செய்தாலும் அவளின் திமிரை குறைக்க முடியவில்லையே என்று அவனின் மனதுக்குள் சிறு எரிச்சல் எட்டி பார்த்தது...

'ஏதாவது சமய சந்தர்ப்பம் அமையாமலா போய்விடும்... அன்று உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்டி...' மனதுக்குள் கறுவியவன் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"வெல்... மிஸ். அபி... அது உங்க தனிப்பட்ட விசயம்... எனக்குத் தேவையில்லாதது... ஆனால் இதனால் என்னோட வேலைகளுக்கு ஏதாவது இடைஞ்சல் வந்தது அப்புறம் நான் பொல்லாதவன் ஆகிருவேன்..."

'ஆமாம்... இப்ப மட்டும் நீ நல்லவனாக்கும்...' என்று மனதில் எரிச்சல் பட்டவள் அதை வெளியில் காட்டாது அவனிடம் தன் கையில் இருந்த கோப்பை நீட்டினாள்...

"என்ன இது...?" புரியாமல் பார்த்தான்...

"என்னோ ஹேண்ட் வொர்க் டிசைன்..."

"அதை வச்சு நான் என்ன பண்ண..." கேலியாய் கேட்டவன், "நீ படிச்ச பத்தாவது படிப்புக்கு என் கம்பெனியில் வேலையே கொடுக்கக் கூடாது... இவ்வளவு ஏன் என் கம்பெனி வாசலை மிதிக்கக் கூட உனக்குத் தகுதி இல்லை... எல்லாம் என் தங்கை வாழ்க்கைக்காக உனக்கு எல்லாம் வேலை கொடுக்க வேண்டி இருக்கு... உன் மூஞ்சியைச் சகித்துக் கொள்ள வேண்டி இருக்கு..." அதில் அவளுக்கும் ரோசம் எழ,

"அப்படி யாரும் என்னைச் சகித்துக் கொள்ளவும் வேண்டாம்... எனக்கு வேலை கொடுக்கவும் வேண்டாம்... நீ

வேலை கொடுக்கணும்ன்னு இங்கே யாரும் ஏங்கி கிடைக்கலை..."

"ஏய்... மரியாதை... மரியாதை..." அவன் எச்சரிக்க... அவனை அலட்சியத்துடன் பார்த்தவள்,

"அது உன் கிட்ட வேலை செய்தால் தானே கொடுக்கணும்... நான் தான் வேலை செய்யப் போறது இல்லையே..."

திமிராய் பேசியவளை அறவே வெறுத்தவனாய், "இன்னமும் உன் அண்ணன் வேலை என் கையில் இருக்கிறதா எனக்கு நியாபகம்..."

இப்போது அவள் அவனை உறுத்து விழித்து, "சில சமயம் நீ முட்டாளோன்னு எனக்குத் தோணுது... எங்கண்ணன் கல்யாணத்துக்கு அப்புறம் நீ மிரட்டும் விசயத்தை நான் என் அண்ணன் கிட்ட சொன்னேன்னு வை... அப்போ பாதிக்கப்படப் போறது உன் தங்கை வாழ்க்கை தான்..."

அவளை நிதானமாய்ப் பார்த்தவன், "இப்ப நீ தான் முட்டாள் மாதிரி பேசற..." என்றவனைக் கண்டு புரியாமல் விழித்தாள் அவள்...

"எப்போ என் தங்கை வாழ்க்கை பாதிக்கப்படுதோ அப்போ உன் அண்ணன் யாரோ நான் யாரோ... என் தங்கையை நல்லா வச்சிருக்கிற வரை தான் அவன் எங்க வீட்டு மாப்பிள்ளை... அப்படி வச்சுக்கத் தவறிட்டா என்னோட முதல் எதிரியே உன் அண்ணன் தான்... அதுக்கு அப்புறம் நான் என்ன வேணும்ன்னாலும் செய்வேன்... எந்தளவுக்கு வேணும்ன்னாலும் கீழே இறங்குவேன்..."

எப்படிப் பேசினாலும் சுற்றி வளைத்துக் கடைசியில் தன் நிலையில் நிலையாய் நிற்கும் அவனை என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"என்ன மேடம் இப்போ வேலை செய்யத் தயாரா...?" மீண்டும் எள்ளல் குரலில் கேட்டவனைக் கண்டு அவளால் சுண்டு விரலை கூட அசைக்க முடியவில்லை...

அன்று வேலை முடிந்து வீட்டிற்கு அபி வர இரவு எட்டு மணியானது... மிகவும் சோர்வுடன் வந்தவள் பாட்டி செய்து வைத்த உணவை உண்டு விட்டுப் படுக்கையில் வீழ்ந்தவளை நித்ராதேவி சுகமாய் அரவணைத்து கொண்டாள்...

மருத்துவமனையில் வந்த ஆதர்ஷ் என்றும் இல்லாத திருநாளாய் நேரத்துடன் உறங்க சென்றுவிட்ட தங்கையைச் சென்று பார்த்தவன் யோசனையில் ஆழ்ந்தான்...

மறுநாள் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து வந்த ஆதர்ஷ் அபி வெளியில் கிளம்பி செல்வதற்குத் தயாராக இருப்பதை உணர்ந்து கேள்வியாய் பார்த்தான்...

"என்ன அபி... இவ்வளவு ஏர்லியரா கிளம்பிட்ட..."

"ஆமாண்ணா... கடைக்குப் போய்ட்டு வேலையைச் சொல்லிட்டு அப்படியே நான் வேலைக்குக் கிளம்ப எனக்கு நேரம் சரியாக இருக்கும்..." என்றவள்,

"சாப்பாடு செஞ்சு எடுத்து வச்சிட்டேன்... மறக்காம எடுத்துட்டு போண்ணா..."

"ஒரு நிமிசம் அபி..." அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"எதுக்கு நீ இப்படிக் கஷ்டப்படணும்... நமக்கு இருக்கிறது போதும்மா... நான் வேண்ணா அவங்க கிட்ட பேசவா..."

எங்கே அண்ணன் தான் சூழ்நிலை கைதியாய் மாட்டி கொண்டு தவிப்பதை கண்டுப்பிடித்து விடுவானோ என்று பயந்தவள்,

"அண்ணா... இது எனக்குக் கிடைத்து இருக்கிற பெரிய வாய்ப்பு... இதன் மூலம் நம்ம வருமானம் மட்டும் இல்லை என்னோட திறமையும் அதிகரிக்க வாய்ப்பு இருக்கு..." என்றவள் அண்ணன் அருகில் வந்து அவனது கையைப் பிடித்துக் கொண்டு,

"நீ சொன்னதை யோசிச்சுப் பார்த்தேன்... அவங்க பணத்தில் நீ படிக்கணுமான்னு எனக்குத் தோணுச்சு... நீ

அண்ணியை அவங்களுக்காக மட்டுமே கல்யாணம் பண்ணிக்கணும்... அதில் வேறு காரணம் இருக்கக் கூடாது... அது அண்ணிக்கு பண்ற மிகப் பெரிய துரோகம்... நீ மேலே படிக்கிறது நம்ம பணத்தில் தான் இருக்கணும்ன்னு நான் முடிவு பண்ணிட்டேன்..." என்ற தங்கையைப் பெருமையாய் பார்த்தான் ஆதர்ஷ்...

"நிச்சயம் அபி... நீ சொல்றது தான் சரி..." என்றவன், "அதுக்காக நீ இப்படி ஓடணுமா...?" என்றான் கவலையுடன்...

"அண்ணா... இதனால உன் தங்கையோட புகழ் உலகம் எல்லாம் பரவப் போகுது பாரு... அதுக்கு ஒரு வாய்ப்பா இது அமைஞ்சிருக்கு... தானா வருவதை ஏன் மறுக்கணும்...?"

தங்கை சொல்வதும் சரி தான் என்றே தோணியது அவனுக்கு... இது வேலை என்று ஏன் நினைப்பானேன்... தங்கையின் திறமையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாகக் கருதலாமே என்று நினைத்தவன்,

"சரி போய்ட்டு வாம்மா..." என்று அவளை வழியனுப்பி வைத்தான்...

'விரைவில் அபிக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் முடிக்கணும்...' என்று மனதில் சகோதரனாய் நினைத்துக் கொண்டான்...

தனது கடைக்கு வந்த அபி அங்கே இருந்த வேலையைச் செய்ய ஆரம்பித்தாள்... அக்ஷய் சொன்னதில் இருந்து அவளது மனதில் வீம்பு பிறந்தது... எந்தக் காரணத்துக்காகவும் யாருக்காவும் தன்னோட தொழிலை தான் கைவிடக் கூடாது என்று... அவனுக்கு என்ன அவன் சொன்ன நேரத்தில் தான் வேலை செய்தால் போயிற்று... மற்றபடி அவளது ஓய்வு நேரத்தில் அவள் என்ன செய்தால் அவனுக்கு என்ன...? அவளைக் கேள்வி கேட்க அவன் யார்...?

கைகள் அது பாட்டுக்கு வேலை செய்து கொண்டு இருக்க மனம் அக்ஷயின் நினைவில் கொதித்துக் கொண்டு இருந்தது...

சரியாக ஏழு மணிக்கு வேலைக்கு வந்த பெண்கள் இருவரிடத்திலும் அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லிவிட்டு,

"நாளையில் இருந்து நீங்கள் எப்போதும் வரும் நேரத்திற்கு வந்தால் போதும்... தினமும் நான் செய்ய வேண்டிய வேலைகளை வீட்டில் கொண்டு வந்து கொடுத்துடுங்க... நான் வீட்டில் இருந்தபடி அதை முடித்துவிடுவேன்..." என்றவள் தனது வேலைக்குக் கிளம்பினாள்...

அக்ஷய் சொன்னது போல் அங்கு வேலை அவ்வளவு எளிதாக இல்லை... புதிதாகத் திணிக்கப்பட்ட வேலைப்பளுவில் அவள் சற்றுத் திணறித்தான் போனாள்... ஆனாலும் மனதில் இருந்த வைராக்கியம் அவளைச் சோர்வடையாமல் இருக்கச் செய்தது...

வேலை முடித்து வீட்டிற்கு வருகிறவளுக்கு அங்கு அவளின் வேலை காத்துக் கொண்டு இருக்கும்... அதை இரவு முடித்து உறங்க செல்ல மிகவும் தாமதமாகி விடும்... அதன் பின் காலையில் எழுந்து அவதி அவதியாய் திரும்ப ஓட வேண்டி இருக்கும்... அவள் படும் துன்பத்தைக் கண்டு ஆதர்ஷ் வீட்டு வேலைக்கு ஒரு ஆளை நியமித்துவிட்டான்...

"எதுக்கு அண்ணா..."

"நாம ரெண்டு பேரும் வேலைக்குப் போய்ட்டா ஆச்சியை யார் பார்த்துக்குவா... முதல்லயாவது உன்னால வேலைக்கு நடுவில் அப்பப்போ வந்து பார்க்க முடிந்தது... இப்போ அதுவும் முடியாது... வயசானவங்க கூடவே ஒரு ஆள் இருப்பது நல்லது..." என்று கூறி அவளது வாயை அடைத்தான்...

அன்று கல்லூரியில் இருந்த அனித்ராவின் அலைப்பேசி அழைத்தது... நல்லவேளை உணவு இடைவெளி என்பதால்

உடனே எடுத்து பார்த்தாள்... பேசுவது மதிவதனா என்றதும் அவளது முகம் சுளித்தது...

'ஐயோ இவளா... பெரிய அலட்டி மாதிரி பேசுவாளே... இவ மினிஸ்டர் பொண்ணுன்னா நான் பிசினஸ் மேன் பொண்ணு... என்னம்மோ பணத்தில் பிறந்து வளர்ந்த மாதிரி ரொம்பத்தான் பண்றா... எல்லாம் என் அண்ணனுக்காகத் தான் பொறுத்து போறேன்... இல்லை இவளை...' பல்லை கடிக்கும் போதே அழைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் அழைத்தது...

எரிச்சலுடன் எடுத்துக் காதில் வைத்தவள், "சொல்லுங்க அண்ணி..."

அனியின் அண்ணி என்ற அழைப்பில் சந்தோசப்பட்டுப் போன மதி, "அனி எப்படி இருக்க...? உனக்குக் கல்யாணமாமே... நீ சொல்லவே இல்லை பார்த்தியா... நீ சொல்லலைன்னா என்ன உன் அண்ணன் என் கிட்ட சொல்லிட்டாரே... யூ நோ அவர் என் கிட்ட எந்த ஒரு விசயத்தையும் மறைக்க மாட்டார்..." தனக்கும் அக்ஷய்க்கும் இடையில் இருக்கும் நெருக்கத்தைச் சந்தடி சாக்கில் அவனின் தங்கையிடம் பறைச்சாற்றிக் கொண்டாள்...

மதியின் வார்த்தைகள் அனியினுள் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது... தனக்குத் தெரியாமல் தனக்குத் திருமணமா... அதுவும் அண்ணனே முன் நின்று ஏற்பாடு செய்கிறானா... அவளுக்குத் தலைச்சுற்றியது...

"அனி... வெட்கத்தில் பேச்சு வரலையா...?"

"ஆங்..." தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், "அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை... எனக்குக் கிளாஸ்க்கு டைமாச்சு... பிறகு உங்க கிட்ட பேசுறேன்..." என்று அழைப்பை துண்டித்தவள் முதல் வேலையாய் ரஞ்சித்திடம் சென்றாள்...

நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு அவளுக்கு எரிச்சலாக வந்தது...

கொஞ்சமும் பொறுப்பு இல்லாமல் இருக்கும் அவனை என்ன செய்தால் தகும் என்ற கோபம் எழுந்தது...

"ரஞ்சி... உன் கிட்ட முக்கியமான விசயம் பேசணும்... வா..." அவள் அழைத்ததும் நாய்க்குட்டியாய் அவள் பின்னே சென்றான் அவன்...

அவனின் இந்தப் பணிவு தான் அனிக்குமே அவனிடத்தில் பிடித்த ஒன்று...

"அண்ணா எனக்கு மேரேஜ் பிக்ஸ் பண்ணி இருக்காங்களாம்..." எடுத்த எடுப்பில் விசயத்தைப் போட்டு உடைத்தவளை கண்டு அவன் அதிர்ச்சியில் வாயை பிளந்தான்...

"இப்போ என்ன அனி செய்றது...? நீ இல்லாம என்னால் வாழ முடியாது... நீ இல்லைன்னா நான் செத்து போயிருவேன் அனி..." அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவன் கலங்கி போனான்...

"இப்படி எதுக்கு எடுத்தாலும் கோழை மாதிரி பேசாம அடுத்து என்ன பண்ணலாம்ன்னு யோசி..." அவனிடம் காய்ந்தாள் அனித்ரா...

"பேசாம நாம ரெண்டு பேரும் ஓடி போய்க் கல்யாணம் பண்ணிக்கலாமா...?" கண்கள் பளபளக்க அவன் கூறியதை கேட்டு அவள் பல்லைக் கடித்தாள்...

"உனக்கு உருப்படியா யோசிக்க வராதா...? ஓடி போய்க் கல்யாணம் பண்ணினா என் அண்ணன் விட்டுருவான்னு நினைச்சியா...? முதல் வேலையா உன்னைக் கொன்னு என் கழுத்தில் தாலியை இறக்கிட்டு அவன் பார்த்த மாப்பிள்ளைக்கு என்னைக் கட்டி வச்சிடுவான்... உனக்கு உயிரை விட விருப்பம்ன்னா வா இப்பவே ஓடி போய்க் கல்யாணம் பண்ணிக்குவோம்..."

"ஐயோ அப்படின்னா வேணாம்..." பயந்தவனாய்ப் பின்வாங்கினான்...

"அந்தப் பயம் இருக்குல்ல அப்புறம் பேசாம இரு..." என்றவள் வெகு தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தாள்...

பின் கண்கள் பளிச்சிட அவனைப் பார்த்தவள், "ஐடியா கிடைச்சிடுச்சு..." என்றவள் அவனிடம் தான் எண்ணிய திட்டத்தைச் சொல்ல ஆரம்பிக்க ரஞ்சித்தின் முகம் சுண்டி போனது...

"எனக்கு இந்தத் திட்டம் பிடிக்கலை..." என்றான் கோபமாய்...

"நாம நிரந்தரமா ஒண்ணு சேரணும்ன்னா இதை விட்டா வேறு வழியில்லை... கொஞ்ச நாள் கஷ்டமா இருக்கும்... அதுக்கு அப்புறம் வாழ்நாள் முழுவதும் நாம சந்தோசமா இருக்கலாம்..." இன்னமும் அவன் முகம் தெளியாததைக் கண்டு,

"இங்கே பாரு ரஞ்சி... என் அண்ணனை எதிர்த்துட்டு நாம வாழ முடியாது... அவனுக்கு ஒருத்தங்களைப் பிடிக்கலைன்னா சாகும் வரை அவங்களைப் பிடிக்காது... அவன் மோசமான எதிரி தெரியுமா... அவனை நீ பகைச்சிக்கிட்டா உன்னை உரு தெரியாம அழிச்சிருவான்... இப்போ நம்ம லவ் மேட்டர் அவனுக்கு எப்பவோ தெரிஞ்சு இருக்கும்... அப்படி இருந்தும் அவன் என்னைக் கூப்பிட்டுச் சத்தம் போடாம சைலண்ட்டா கல்யாணத்தை முடிக்க நினைக்கிறான்னா அவன் இந்தக் கல்யாணத்தை நடத்தி முடிப்பதில் எவ்வளவு தீவிரமாய் இருக்கான்னு நீ புரிஞ்சிக்க... நீ மட்டும் நான் சொன்னதுக்கு ஒத்துழைச்சேன்னா அவனே உன்னை ஏத்துக்குவான்... அதுக்கு நீ பொறுமையா காத்து இருக்கணும்... இப்படி அவசரப்பட்டு எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு நடந்து காரியத்தைக் கெடுக்கக் கூடாது..."

அக்ஷயின் தங்கையாய் வெகு புத்திசாலித்தனமாய் நிதானமாய் அவள் திட்டமிட்டாள்...

"இனி நான் சொன்னபடி என் அண்ணனிடம் நடிக்கப் போறேன்... இனிமே கொண்டு நம் திட்டம் வெற்றி அடையற வரைக்கும் நீ என்னைப் பார்க்க வர கூடாது... எனக்கு

ஃபோன் பேச கூடாது... கொஞ்ச நாள் என் கிட்ட எந்தக் காண்டாக்ட்டும் நீ வச்சுக்கக் கூடாது..."

"அனி..." அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான் அவளது காதலன்...

"ப்ளீஸ்டா... புரிஞ்சிக்கோ... என் அண்ணனை பத்தி உனக்குத் தெரியாது... அவனுக்கு நாலாப் பக்கமும் கண் இருக்கும்... என்னைக்கு இருந்தாலும் நான் உனக்கு மட்டும் தான்டா..."

"ம்... ம்..." அரைக் குறை மனதாய் தலையாட்டியவன் அவளிடம், "அதுவரை தாங்குற மாதிரி ஸ்ட்ராங்கா ஒண்ணு கொடேன் அனி..." என்றவன் அவளின் அனுமதி எதிர்பாராமல் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

பெண்ணைக் காவல் காப்பதில் ஆணாய் நடந்து கொள்ளாமல் பெண்மையைக் கபளீகரம் செய்வதில் ஆணாய் தன் வீரத்தை காட்டினான் அந்தக் கோழை...

"போதும் ரஞ்சி... இட்ஸ் எனஃப்..." தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் தன்னைத் தழுவி இருந்த அவனது கைகளை உதறி தள்ளிவிட்டு எழுந்து கொண்டாள்... நல்லவேளை ஆட்கள் இல்லாத தனிமை இடம் என்பதால் யாரும் பார்க்கவில்லை...

"பை ரஞ்சி... டேக் கேர்..." என்று அவனிடம் விடைப்பெற்றவளுக்குக் கண்கள் கலங்கியது...

ஏனோ அவனை விட்டு ஒரேடியாய் பிரிந்து செல்வது போல் மனம் வலித்தது... காதல் என்று வந்துவிட்டால் நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற விதிவிலக்குக் கிடையாது போலும்... அந்த நோய் தாக்கியவர்கள் உணர்வுகள் எல்லோரிடத்திலும் ஒன்று தான் போலும்...

தானாகக் குனிந்து அவனது கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டவள் அடுத்த நொடி வேகமாய் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அன்றிரவு அண்ணனிடம் சென்று பேச முடிவு செய்தாள் அனி...

தனது அறையின் முன் நின்று இருந்த தங்கையைக் கண்டதும் அக்ஷய், "வா அனி..." என்றான் பாசமாக...

"அண்ணா..." கதறலுடன் உள்ளே வந்தவள் அவன் தோளில் சாய்ந்து அழுதாள்...

திடீரென்று அவள் அழுதது கண்டு அவன் பதறிப் போனான்... பிறந்ததில் இருந்து அவள் அழுது அவன் பார்த்தது இல்லை...

"அனி... என்னடா... எதுக்கு அழுற...? இந்த அண்ணன் இருக்கிறப்போ நீ எதுக்காகவும் அழ கூடாது... சரியா...?" அவளது அழுத விழிகளைத் துடைத்துவிட்டான்...

அவனது வார்த்தை கேட்டு அவளது மனம் குதூகலித்தது...

"அண்ணா... என்னை மன்னிச்சிருங்கண்ணா... உங்களுக்குத் தெரியாம நான் பெரிய தப்பு பண்ணிட்டேன்..." என்று பெரிதாய் அழுதவளை கண்டு அவன் மனம் பதைபதைத்துப் போனது...

"நீ என்ன தப்பு பண்ணி இருந்தாலும் நீ என் தங்கை அனி... உன் கிட்ட நான் கோபப்படுவேனா... சரி உன்னை மன்னிச்சிட்டேன்... என்ன நடந்தது சொல்லு...?"

"நான்... நான் ரஞ்சித்தை சின்சியரா லவ் பண்ணினேன்... ஆனா அந்த ரோக் என்னை..." மேலே சொல்ல முடியாமல் அவள் அழ...

அதைக் கேட்டு அக்ஷயின் முகம் இறுகியது... எதுவும் பேசாமல் அவன் நின்று இருந்தான்...

"என்னை ஏமாத்திட்டான் அண்ணா... லவ் பண்றேன்னு சொல்லிட்டு இப்போ என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டு வேறு ஒருத்தி கூடச் சுத்துறான்... கேட்டதுக்கு என்னை ரொம்பக் கேவலமா பேசிட்டான்... அவன் என்ன என்னை வேண்டாம்ன்னு சொல்றது... நான் அவனை

வேண்டாம்ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்... என் அண்ணன் உன்னை விட நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பாருன்னு சொல்லிட்டு வந்துட்டேன்... என்ன தான் அவன் கிட்ட பேசினாலும் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்குண்ணா... அவன் எப்படி என்னை ஏமாத்தலாம்... எனக்கு என்ன அழகு இல்லையா, படிப்பு இல்லையா, அந்தஸ்து தான் இல்லையா... ஏன் அப்படிப் பேசினான்...? என் மனசு ஆற மாட்டேங்குது..." என்று அழுதவளின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தவன்,

"இந்த வயசில் பாஸிங் க்ளவுட்ஸ் மாதிரி லவ் நம்ம வாழ்க்கையில் வர்றது சகஜம் தான் அனி... இதுக்காக நீ கில்ட்டியா பீல் பண்ண வேண்டியது இல்லை... எப்போதும் போலச் சந்தோசமா இரு... அவன் கிடக்கிறான் விடும்மா... உனக்கு நான் இருக்கிறேன்... நான் உனக்கு அவனை விடச் சூப்பரா மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..."

அக்ஷய் உருக்கமாய்ப் பேசியதை கண்டு மனதுக்குள் நகைத்து கொண்டாள் அவள்... தனது திட்டத்தின் முதல் படியில் வெற்றிகரமாகக் காலடி எடுத்து வைத்தாள்...

"ஆமாண்ணா... அவனை விட எல்லாவிதத்திலும் தகுதி அதிகமான மாப்பிள்ளை பாரு..." அண்ணன் மனதில் இருப்பதை அறிவதற்காக அவள் பேச...

"கட்டாயம் அனி..." என்றவன் அவளுக்குப் பார்த்து இருக்கும் மாப்பிள்ளை பற்றி எதுவும் சொல்லவில்லை... திருமணம் பற்றியும் பேசவில்லை...

'டேய் அண்ணா... உனக்கு இவ்வளவு அழுத்தம்ன்னா உன் தங்கை எனக்கு எவ்வளவு அழுத்தம் இருக்கும்...' மனதுக்குள் நினைத்தவள் தனது அறைக்குச் சென்றாள்...

அக்ஷய்க்காவது தங்கை என்ற பலவீனம் உண்டு... ஆனால் அவளுக்கோ அந்த மாதிரி எந்தப் பலவீனமும் இல்லை...

அக்ஷய் யோசனையுடன் தங்கை கூறியதை அசை போட்டுக் கொண்டு இருந்தான்... அவள் கூறுவதை அவனால் முற்றிலும் நம்ப முடியவில்லை...

தொடர்ந்து அவளைக் கல்லூரியில் கண்காணித்தான்... அனி கூறியது உண்மை என்பது போல் இருந்தது அனியின் செயல்கள்... எதிராளியின் மனதை எளிதில் கணிக்கும் திறமைமிக்க அக்ஷயே தங்கை விசயத்தில் ஏமாந்து போனான்...

அதன் விளைவு அவளது திருமண விசயத்தைப் பற்றி அவளிடம் பேசினான்... போலியான நாணத்துடன் அவள் அதற்குச் சம்மதித்ததைக் கண்டு அவனும் அவளை நம்பி ஆதர்ஷ் குடும்பத்தை ஒரு நல்ல நாளில் தனது வீட்டிற்கு வர ஏற்பாடு செய்தான்...

ஆனால் அவனது வீட்டிற்கு அபி வர மாட்டேன் என்று சொல்லிவிட ஆதர்ஷும் தனியே வர யோசித்தான்... கோமதி வயதின் காரணமாக அவரும் யோசிக்க... அக்ஷயின் ஒட்டு மொத்த கோபமும் அபியின் மீது திரும்பியது...

நேரே அவளுக்கு அலைப்பேசியில் அழைத்தவன், "என்னடி திமிர்த்தனம் பண்றியா...? நீ வரலையா உன் பாசமலரும் வர மாட்டேன்னு பிகு பண்றான்... என்னடி நினைச்சிட்டு இருக்க உன் மனசுல..." அவன் கர்ஜிக்க...

அவளோ ஒன்றும் பேசாது மௌனம் காத்தாள்...

"நீ வர்ற... உன் அண்ணனையும் கூட்டிட்டு வர்ற... இல்லை..."

"என்ன வழக்கமான டயலாக் சொல்ல போறியா...? அதுக்காக எல்லாம் உன் வீட்டுக்கு வர முடியாது..."

"ஏய்... என்ன மரியாதை குறையுது..."

"மரியாதை குறையாம என்ன செய்யும்... இப்போ நான் உன்னோட பேக்டரியில் இல்லை... என் வீட்டில் இருக்கேன் மடையா... அதுவும் எப்படித் தெரியுமா உட்கார்ந்துட்டு

இருக்கேன்... கால் மேல் கால் போட்டு..." என்று சொல்லி அவனது இரத்த அழுத்தத்தை இன்னமும் அதிகரிக்கச் செய்தாள்...

"உன்னை..." என்று பல்லை கடித்தவன், "சரி உறவினளா தானே வர மாட்ட... என் கிட்ட வேலை செய்ற வேலைக்காரியா உன்னை என் வீட்டுக்கு கூப்பிடறேன்... இருக்கிற புது டிசைன் புடவை எல்லாம் எடுத்துட்டு நாளைக்கே நீ என் வீட்டுக்கு வர்ற..."

அவனது வார்த்தையில் அபி பேச முடியாமல் வாயடைத்து போக... அதைக் கண்டு வாய் விட்டு நகைத்தவன்,

"இதுக்குத் தான் சொல்றது ஆழம் தெரியாம காலை விடக் கூடாதுன்னு..." என்று அவளை எச்சரித்தவன்,

"நாளைக்கு உன் பாசமலர், பாட்டி எல்லாத்தையும் கூட்டிட்டு என் வீடு வந்து சேரு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் அலைப்பேசியை அணைத்தான்...

மறுநாள் அக்ஷயின் வீட்டிற்கு அபியின் குடும்பத்தினர் கிளம்பி செல்ல அங்கே நல்ல பிள்ளையாய் வாயிலில் நின்று வரவேற்ற அக்ஷயை கண்டு அபி மனதில் மூண்ட சினத்துடன் முறைத்து பார்க்க... அவளைக் கண்டு அவனது உதடுகள் கேலியாய் வளைந்தது...

"இப்போவாவது என்னைப் பத்தி புரிஞ்சிக்கிட்டியா...? உன் தலையெழுத்தை நிர்ணயம் பண்ற பிரம்மாடி நான்..." தன்னைத் தாண்டி சென்ற அபியின் காதில் விழும்படி அழுத்தமாய் முணுமுணுத்தான் அக்ஷய்...

பூக்கும்...

பிரமாண்டமாய் இருந்த அக்ஷயின் வீட்டை பிரமிப்புடன் பார்த்தவாறு உள்ளே வந்தார் கோமதி... அவர்கள் வீடு வசதி என்று தெரியும்... ஆனால் இந்தளவுக்கு வசதி என்று அவர் நினைக்கவில்லை...

"அபி... வீடு ரொம்பப் பெருசா இருக்கு இல்ல..." ஆச்சிரியம் அடங்கிய குரலில் சொன்னவரிடம்,

"ஆமாம் ஆச்சி..." என்ற அபி... "ஆனால் வீட்டில் இருக்கிறவங்க மனசு தான் ரொம்பச் சின்னது..." அக்ஷயை பார்த்துக் கொண்டு அவள் முணுமுணுத்தாள்...

அபி தன்னைப் பற்றித் தான் ஏதோ சொல்கிறாள் என்று தெரிந்த போதும் அது என்ன என்று அக்ஷயினால் புரிந்து கொள்ள முடியவில்லை...

'என்ன செஞ்சாலும் இவ கொழுப்பை அடக்க முடியலையே...' மனதில் நினைத்தவன் ஆதர்ஷிடம் பேசுவதற்காகத் திரும்பினான்...

"நீங்க எல்லாரும் பேசிட்டு இருங்க... நான் போய் அனியை கூட்டிட்டு வர்றேன்..." துளசி உள்ளே சென்றார்...

மகளின் அறைக்குச் சென்ற துளசி அவளின் அலங்காரத்தைக் கண்டு பிரமித்தார்... எப்போ புடவை கட்ட சொன்னாலும் வேண்டாம் என்று அலறும் தன் பெண் தானாக முன் வந்து புடவை கட்டி இருப்பது கண்டு அவருக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"என் கண்ணே பட்டுடும் போலிருக்கு அனி... இப்படி உன்னைப் பார்க்கும் போது எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா...?" அவளது கன்னம் வழித்துத் திருஷ்டி கழித்தார்...

"மாம்... இப்போ நான் திருந்திட்டேன் மாம்..." என்று அவரது தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்ட அனியின் கன்னம் தட்டியவர்,

"அது பார்த்தாலே தெரியுது..." என்று ஆமோதித்தவர், "சரி வா போகலாம்... மாப்பிள்ள வீட்டில் இருந்து வந்து இருக்காங்க... மாப்பிள்ளை ரொம்ப அமைதியானவரா இருக்காரு... உனக்கு ஏத்த மாதிரி அழகா கம்பீரமா இருக்காரு..."

'ஓ... ரொம்ப அமைதியானவனா... அப்படின்னா ரொம்ப நல்லது...' நக்கலாய் நினைத்து கொண்டவள் அன்னையுடன் வரவேற்பறைக்குச் சென்றாள்...

வரவேற்பறைக்கு வந்த அனித்ரா செய்த முதல் வேலை கோமதி அம்மாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கியது தான்...

"நல்லா இரும்மா..." என்று ஆசிர்வாதித்த கோமதி அம்மாள் தன்னருகில் அவளை அமர்த்திக் கொண்டார்...

'அண்ணன் தான் திமிர் பிடிச்சவன் போலும்... தங்கை நல்ல பெண்ணாகத் தான் தெரிகிறாள்... நல்லவேளை என் அண்ணன் தப்பிச்சான்...' அபி மனதில் நிம்மதியாய் உணர்ந்தாள்...

ஆதர்ஷ் கூட அனியின் செயல் கண்டு நெகிழ்ந்து போனான்... பாட்டியிடம் அவள் காட்டிய மரியாதை கண்டு அவளிடத்தில் தனிப் பிரியத்தை உண்டு பண்ணியது... அவனது மனதில் அனித்ரா தனது முதல் காலடியை எடுத்து வைத்தாள்... சலனம் இல்லாத அவனது மனதில் முதல் சலனத்தை உண்டு பண்ணிவிட்டாள்...

அவளது அழகோ, அவளது வசதியோ கண்டு அவன் மயங்கவில்லை... அவளது செயல் கண்டு அவன் மயங்கி போனான்...

அக்ஷயுமே தனது தங்கையின் செய்கை கண்டு அசந்து தான் போனான்... அவனது மனதில் இருந்த சிறு உறுத்தல் கூட அனியின் இணக்கமான நடவடிக்கையில் மறைந்து போனது... அவனது பெற்றோர் மகளின் மனமாற்றம் கண்டு கண்கள் கலங்க மகிழ்ந்தனர்...

அனி அபியிடமும் நன்றாகப் பேசினாள்... ஆனால் மறந்தும் கூட ஆதர்ஷ் பக்கம் திரும்பவில்லை... அது ஆதர்ஷ் உணர்ந்தாலும் வெட்கமாக இருக்கும் என்று எண்ணி கொண்டான்...

சிறிது நேரம் பேசி இருந்துவிட்டு ஆதர்ஷையும், அனியையும் தனியே பேசுமாறு கோபிநாத் கூற... ஆதர்ஷ் மகிழ்வுடன் எழுந்தான்... அனியோ வேண்டா வெறுப்பாய் எழுந்தாள்...

தனிமையில் தன் முன் நின்ற அனியை அப்போது தான் நன்கு உற்று நோக்கினான் ஆதர்ஷ்... வானூலகத் தேவதை மண்ணுலகம் வந்தது போல் அழகாய் இருந்தவளை கண்டு ஒரு நொடி அவனது மனம் தடம் புரண்டது...

அனியோ அவனைப் பார்க்க விரும்பாதவளாய் தலையைக் குனிந்து கொண்டு நின்று இருந்தாள்...

'இவன் மூஞ்சி எல்லாம் ஒரு மூஞ்சின்னு நான் பார்க்கணுமாக்கும்...' மனதில் கடுப்புடன் நினைத்தவள் மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை...

"என்னைப் பிடிச்சு இருக்கா...?" ஆதர்ஷ் கேட்ட கேள்விக்குப் பொய்யாய் கூடப் பிடித்து இருக்கு என்று அவளால் சொல்ல முடியவில்லை...

மனம் முழுவதும் ரஞ்சித் நிறைந்து இருக்க வேறு ஒருவனைப் பிடித்து இருப்பதாய் கூற அவளால் முடியவில்லை...

"அப்போ பிடிக்கலையா..." அதற்கும் பதில் பேசாது தலை குனிந்து இருந்தவளை ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவன்,

"பிடிக்கலைன்னா சொல்லுங்க... நான் உங்க வீட்டில் வேற ஏதாவது சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்திர்றேன்..." ஆதர்ஷின் மென்மையான குரலோ இல்லை அவன் கூறிய விசயமோ ஏதோ ஒன்று அவளை நிமிர்ந்து பார்க்க வைத்தது...

அனியின் அழகான முகத்தை அப்போது தான் பார்க்கிறான் ஆதர்ஷ்... அவளது விழி வீச்சில் அவனது மனம் அடியோடு சாய்ந்தது...

தங்கையைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காதவன் முதல் முறையாய் தனக்கு என்று பார்த்திருந்த பெண்ணின் அழகில் உரிமையோடு உள்ளம் மயங்கி நின்றான்...

ஆனாலும் தனது மயக்கத்தை மறைத்துக் கொண்டு அவளது விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தான்...

"எதுவா இருந்தாலும் பயப்படாம சொல்லுங்க..." புன்னகையுடன் கேட்டவனிடம் 'பிடிக்கலைடா' என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவளுக்கு... இருந்தாலும் அண்ணனுக்காக அடக்கி கொண்டாள்...

வந்தவன் இடத்தில் உண்மையைப் போட்டு உடைக்க அவளுக்கு ஒரு நொடி போதும்... ஆனால் அண்ணன் கேட்கும் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியாது... அவனைப் பகைக்கவும் அவளால் முடியாது... அவளுக்கு வாழ்நாள் முழுவதும் இந்தப் பணம் வேண்டும் பணக்கார பகட்டு வேண்டும்... அதற்கு அண்ணன் தயவு அவளுக்கு வேண்டும்...

தான் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருப்பதை உணர்ந்து வேறுவழியின்றி மௌனமாய்த் தலையை ஆட்டினாள் சம்மதமாய்...

அதில் மனம் மகிழ்ந்து போனான் ஆதர்ஷ்...

"தேங்க்ஸ்..." என்று சொன்னவன் மேற்கொண்டு அவளிடம் படிப்பு பற்றிப் பேச ஆரம்பிக்க... ஆம், இல்லை என்று ஒற்றை வார்த்தையில் அவள் தனது பேச்சை முடித்துக் கொண்டாள்... அதை அறியாத அவனோ எல்லையில்லா சந்தோசத்தில் இருந்தான்...

"என்ன அபி முன்ன பார்த்துக்கு ரொம்ப மெலிஞ்சு கறுத்து போய்ட்டியே..." துளசி அக்கறையாய் அபியிடம்

விசாரித்தார்...

"அப்படி எல்லாம் இல்லை அத்தை... எப்போதும் போல் தான் இருக்கேன்..." என்றவளது பார்வை அவளையும் அறியாமல் அக்ஷய் பார்த்து அவனைக் குற்றம் சாட்டியது...

'ஆமாம் இல்லைன்னாலும் நீ அப்படியே அழகு தேவதை தான்... நாங்க வேலை வாங்குறதால தான் இப்படி ஆகிட்டியாக்கும்...' எக்காளமாய் அவனது கண்கள் பேசியது...

'போடா டேய்...' என்று அலட்சியமாய்த் தனது கண்களைத் திருப்பிக் கொண்டாள் அபி...

கோமதி ஓய்வு எடுக்க வேண்டும் என்று சொல்ல துளசி அவரை அழைத்துக் கொண்டு சென்றார்... கோபிநாத்தும் வேறு வேலையாய் உள்ளே செல்ல அபியும் அக்ஷயும் மட்டுமே அங்கு இருந்தனர்... அவன் அவளை விட்டு அங்கே இங்கே அசையவில்லை...

திடுமென அபி விசமமாய் அவனைப் பார்த்து சிரித்தாள்... அதைக் கண்டு அவனது கண்கள் சுருங்கியது...

"இப்போ எதுக்குச் சிரிக்கிற நீ...?"

"இல்ல எனக்குச் சம்பளமே வாங்காம செக்யூட்டரி வேலை பார்க்கிறியே அதை நினைச்சேன் சிரிச்சேன்..."

"கொழுப்புடி... உடம்பு பூராவும் கொழுப்பு..."

"ஆமா... நீ வாங்கிக் கொடுத்த பீட்சா, பர்கர்ல தான் எனக்குக் கொழுப்பு ஏறி போயிருச்சு..."

பதிலுக்குப் பதில் வாயடித்தவளின் வாயை அவளின் பாணியில் சென்று இறுக மூட செய்யாவிட்டால் அது அக்ஷய் அல்லவே...

"பின்னே காவல் இருக்காம இருக்க முடியுமா...? உன் முட்டைக் கண்ணைச் சுத்தி எங்க வீட்டை பார்... எவ்வளவு விலை உயர்ந்த பொருட்கள் கொட்டி கிடப்பதை... இதோ

இந்த ப்ளவர் வாஷ் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய்... இதோ உன் முன் காபி வைக்கப்பட்டு இருக்கும் வெள்ளி டம்ளர், ட்ரே விலை எவ்வளவு நான் சொல்ல தேவையில்லை... வெள்ளி விலை உனக்குத் தெரியும் இல்லையா... நீயே கணக்கு போட்டுக்கோ... இதில் எதையாவது நீ திருடிட்டு போயிட்டா...?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கி கேலியாய் கேட்டவனின் வார்த்தைகளில் அவளது மனம் உலைக்களமாய்க் கொதிக்கத் தொடங்கியது...

"அப்புறம் மாப்பிள்ளையின் தங்கையான உன்னைச் செக் பண்ணிட்டு அனுப்பினா நல்லாவா இருக்கும்... நான் எதையுமே தொலைநோக்கு பார்வையில் பார்க்கிறவன்..." என்று வார்த்தைக்கு வார்த்தைக்கு அவளது ஏழ்மையும், தன்மானத்தையும் சீண்டி விட்டுக் கொண்டு இருந்தான் அவன்...

"தான் திருடன் பிறரை நம்ப மாட்டான்... அது மாதிரி தான் நீயும்..." அவனை விட எள்ளலாய் பதில் சொன்னவளை கண்டு அவனது கண்கள் இடுங்கியது...

"யாரை சொல்ற...?"

"உன்னைத்தான் சொல்றேன்... இங்கே உன்னை என்னைத் தவிர வேறு யாராவது இருக்காங்களா என்ன...?" அவனைப் போலவே ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கியவளை கண்டு அவனது கோபமும் எகிறத் துவங்கியது... அவளது வார்த்தையில் அவனுக்கு அமிலத்தை உண்டது போல் எரிச்சலாய் இருந்தது...

"ஏய்..." என்று கத்தியவனைக் கண்டு அவள் சிறிதும் பயப்படவில்லை... பயந்தால் அவள் அபி இல்லையே...

"இந்தக் கத்துறது எல்லாம் வேற யார் கிட்டேயாவது வச்சுக்கோ... என் கிட்ட வேண்டாம்... நான் என்ன பொய்யா சொன்னேன்... உண்மையைத் தானே சொன்னேன்... அடுத்தவன் சொத்தை அபகரிக்கிற நீ திருடன் இல்லாம

வேறு யாரு...?" தனது வீட்டை அவன் அபகரித்த ஆத்திரத்தில் அவள் பேசினாள்...

"நான் அபகரிச்சேனா... இல்லையே விலைக்கு வாங்கியதாய் தான் எனக்கு நியாபகம்..." தாடையைத் தடவி கொண்டு அவன் யோசிப்பது போல் நடித்தான்...

"மிரட்டி எழுதி வாங்குவது கூட ஒருவித திருட்டு தான்..."

"ஓஹோ... நீ அப்படிச் சொல்றியா... ஓகேங்க நீங்க சொன்னீங்கன்னு கவர்மெண்ட்ல சொல்லி இதையும் திருட்டு குற்றத்துல சேர்க்க சொல்லிரலாம்ங்க..." நக்கல் குரலில் கூறியவனை முறைத்து பார்த்தவள்,

"கட்டாயம் இது குற்றம் தான்... அதுக்கான தண்டனையை ஆண்டவன் கொடுப்பாரு... அப்படி ஆண்டவன் கொடுக்கலைன்னாலும் அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கும் போது அன்னைக்கு இருக்குடா உனக்கு... உன் ஆணவப் பேச்சு, பணக்காரத் திமிர் எல்லாத்தையும் அடக்கி காட்டறேன்... அப்போ தெரியும் நான் யாருன்னு..."

"அதை அப்போ பார்க்கலாம்..." அலட்சியமாக அவளிடம் சொன்னவன், "இப்போ நான் உன்னைப் பார்க்கிறேன்..." என்றவன் அவள் புறம் நன்றாகத் திரும்பி அமர்ந்தவன் அவளை உறுத்து விழித்தான்...

அவனது பார்வையில் உடல் எல்லாம் மிளகாயை அரைத்து வைத்தது போல் அவளுக்குக் காந்தியது...

அந்நேரம் அங்கே வந்த துளசி இருவரும் அமர்ந்து இருப்பதை உணர்ந்து, "என்னம்மா எங்க அக்ஷய் என்ன சொல்றான்...?"

அவர் திடுமென அப்படிக் கேட்டதில் அவள் திணறி போனாள்...

"ஆபிஸ் விசயமா பேசிட்டு இருந்தேன் மாம்..." அவளுக்குப் பதிலாய் அக்ஷய் பதில் அளித்தான்...

"ஆமா அத்தை... சார் ஆபிஸ் விசயமா பேசிட்டு இருந்தாரு..." அவளும் பதிலுக்குச் சமாளித்தாள்...

"சாரா... நான் உனக்கு அத்தை... என் பொண்ணு உனக்கு அண்ணி... அப்போ என் பையன் உனக்கு என்ன வேணும்...?" அவர் மிரட்டும் தொனியில் கூறியதை கண்டு அவள் விழி பிதுங்கினாள்...

"அவனை அத்தான்னு சொல்லு... இல்லை மாமான்னு சொல்லு... அதை விட்டுட்டு சார்ன்னு சொன்னா நல்லாவா இருக்கு..."

துளசி கூறியதை கேட்டு இருவரும் ஒருவரை ஒருவர் வெட்டும் பார்வையால் மோதி கொண்டனர்...

'போயும் போயும் இவனை அத்தான்னு சொல்லணுமா...' அந்தச் சொல்லே அவளுக்குக் கசந்தது...

'போயும் போயும் இவளுக்குப் போய் நான் அத்தானா... என்ன கொடுமை அக்ஷய்...' மானசீகமாய்த் தலையில் கை வைத்தான் அவன்... ஆனாலும் அன்னையின் முன்பு அவனால் வாயை திறக்க முடியவில்லை...

"இல்லைங்கத்தை... ஆபிஸ்ல சார்ன்னு கூப்பிட்டே பழகிட்டேன்... திடீர்ன்னு மாத்த முடியலை... உறவுக்குள்ள வேலை வரலாம்... வேலைக்குள் உறவை திணிக்கக் கூடாது..." என்றவளை கண்டு துளசி திருப்தியாய் புன்னகைத்தார்...

"புத்திசாலித்தனமா பேசுறேம்மா..." அவளைப் பாராட்ட...

'இதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கு...' மனதில் அவளின் அறிவை மட்டமாய் நினைத்தவன் வெளியில் தாய்க்காக அமைதி காத்தான்...

அதற்குள் ஆதர்ஷ், அனியும் வந்துவிடப் பேச்சு வேறு பக்கம் சென்றது... அனியின் அமைதியான போக்கு கண்டு அபிக்கு சந்தோசமாய் இருந்தது... அவள் தன் அண்ணனுக்கு ஏற்றவள் என்று...

திருமணத்திற்கு இரு வாரங்கள் இருப்பதால் அன்று திருமணத்திற்குத் தேவையான புடவையை வீட்டிற்குக் கொண்டு வர சொல்லி இருந்தார் துளசி... அப்படியே மதிவதனாவையும் அங்கு அழைத்து இருந்தார்...

சரியாக மதிவதனாவும் அவளது தாய் அன்னபூரணியும் அங்கு வந்து சேர்ந்தார்கள்... மந்திரியின் மனைவி என்ற கெத்து இருந்த போதும் பூரணி அபி குடும்பத்தினருடன் சகஜமாகப் பேசினார்... ஏனெனில் தான் பெண் கொடுக்கும் இடத்தில் அவர்கள் பெண் எடுக்கிறார்கள் அல்லவா... அந்தப் பவ்யம் தான்... அதிலும் அக்ஷயின் குணம் பற்றி அவருக்கு மகளின் மூலம் நன்கு தெரியும்...

அக்ஷய்க்கும் மதிக்கும் இருக்கும் உறவு முறை அப்போது தான் அபிக்குத் தெரிந்தது... அக்ஷயின் அடாவடித்தனத்துக்கும் மதியின் திமிர்த்தனத்துக்கும் ஏக பொருத்தம் என்று நினைத்தவள் உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

அதைக் கண்டு கொண்டு அக்ஷய் அவளை யோசனையாய் பார்த்தான்... அவனது பார்வை உணர்ந்தார் போன்று அவன் புறம் திரும்பிய அபியின் வளைந்த உதடுகள் வளைந்தபடியே இருந்தது... அதில் அவனது கோபம் அதிகரித்தது... எல்லோர் முன்பும் எதுவும் பேசாதபடி அவனது வாய் மூடி இருக்க வேண்டிய கட்டாயத்தை எண்ணி எரிச்சல் அடைந்தான்

"ஆன்ட்டி..." மதிவதனாவின் அழைப்பை கேட்டு துளசியின் முகம் சுருங்கியது... இருந்தாலும் மகனுக்காக அமைதியாய் இருந்தார்... அவளிடம் அத்தை என்று கூப்பிடு என்று பல முறை சொல்லி சொல்லி அவர் தோல்வியைத் தான் தழுவி இருந்தார்...

"என்னம்மா சொல்லு...?"

"நான் அக்ஷய் கூட ஒரு டென் மினிட்ஸ் பேசலாமா...?"

அவள் அப்படிக் கேட்டதும் துளசிக்கு மனம் உருகி போனது... பூரணி மகளைப் பெருமையாய் பார்த்தார்...

"ஐயோ என்ன பொண்ணும்மா நீ... அவன் உனக்குக் கணவனா வர போகிறவன்... அவன் கூடப் பேச உனக்கு முழு உரிமை இருக்கு... நீ போய்ப் பேசும்மா... அக்ஷய்..." என்று அவர் மகனை அழைத்தார்...

மற்ற நாளாய் இருந்தால் அவன் தனது அன்னையின் பேச்சை முற்றிலும் தவிர்த்து விட்டு போயிருப்பான்... ஆனால் எல்லோர் முன்பும் அவனால் அது போல் நடந்து கொள்ள முடியவில்லை... அதை விட இளக்காரமாய்ப் பார்த்த அபியின் முகத்தில் கரியை பூச வேண்டும் என்று நினைத்தவன் ஒன்றும் பேசாது எழுந்து நின்றான்...

"வாங்க அக்ஷய்..." மதி அவனது கரத்தோடு தன் கரம் கோர்க்க... அபியை பார்த்தவாறு அவனது கரமும் தன் பிடியை இறுக்கியது... அப்போதும் அபியின் வளைந்து உதடுகள் நேரக்கோடாய் நிமிரும் வகைக் காணோம்...

'திமிர் பிடித்தவள்...' மனதில் அவளைத் திட்டியபடி மதியை அழைத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் வந்தான்... அங்கு வந்ததும் பிடித்து இருந்த அவளது கையை விடுவித்தான் அவள் அறியாமல்...

"என்ன அக்ஷய் இது... உங்க ரூம்க்கு கூட்டிட்டு போவீங்கன்னு எதிர்பார்த்தா இப்படிக் கார்டனுக்குக் கூட்டிட்டு வந்து இருக்கீங்களே..." செல்லமாய்ச் சிணுங்கியவளை ஏறெடுத்து பார்த்தவனுக்கு எப்போதடா பத்து நிமிடம் முடியும் என்று இருந்தது...

"அங்கே உட்காரலாமா...?" பெரிய மரத்தின் அருகில் போடப்பட்டு இருந்த கல்மேடையைக் காட்டி கேட்டவளிடம் சரி என்று தலையசைத்தவன் அங்குப் போய் அமர்ந்தான்...

அவன் அருகில் நெருங்கி அமர்ந்தவள் அவனது தோளில் தலை சாய்த்துக் கை விரல்களோடு விரல் கோர்த்து அமர அதில் அவன் திடுக்கிட்டுப் போனான்... இருந்தாலும்

அவளை உதறித்தள்ள முடியாதபடி அவனது நிலை இருந்தது...

அதிலும் திருமணம் செய்யப் போகிறவன் இடத்தில் அவள் இந்த மாதிரி சிறு சிறு சலுகை எடுப்பதைத் தவறு என்றும் அவனால் கூற முடியவில்லை... ஏனெனில் அனி தன் வருங்காலக் கணவனுடன் பேச சென்ற போது அண்ணனாய் அவன் மகிழ்ந்து தான் போனான்... அதை நினைத்தவனுக்கு மௌனமாய் இருப்பதைத் தவிர வேறுவழி தெரியவில்லை...

மதி ஏதேதோ பேச அவனால் தான் அதில் மனம் ஒன்ற முடியவில்லை... அங்கிருந்த செடி கொடிகளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தான்...

தன் மனம் குறித்து அவனுக்கே புரியாத புதிராக இருந்தது... ஏன் எந்தப் பெண்ணிடமும் தன் மனம் செல்ல மாட்டேன் என்கிறது என்று... இது நாள் வரை எந்தப் பெண்ணிடமும் மனம் லயிக்கவில்லை அது கூட ஏற்றுக் கொள்ள வேண்டிய விசயம் தான்... ஆனால் தனக்கு என்று ஒரு பெண் நிச்சயித்த பின்னும் மனம் அவள் பால் ஈர்க்கப்படாமல் இருப்பதை உணர்ந்து அவனுக்குப் பெரும் யோசனையாய் இருந்தது...

அவனது நண்பர்கள் பலர் திருமணம் பேசி முடித்ததும் தாபத்தில் புலம்புவதை அவன் அடிக்கடி கேட்டு இருக்கிறான்... அந்த ஏக்கமும் தாபமும் தனக்கு ஏன் தோணவில்லை என்று யோசித்துக் கொண்டு இருந்தவன் மதியின் பேச்சை கொஞ்சமும் கவனிக்கவில்லை...

"மதி எல்லோரும் காத்திருப்பாங்க..." சரியாகப் பத்து நிமிடத்தில் எழுந்த அக்ஷயை கண்டு மதி தன் திருப்தியின்மையை முகத்தில் காட்டினாள்...

"என்ன அக்ஷய் இது... இன்னும் கொஞ்ச நேரம்... ப்ளீஸ்..." உதடு குவித்துக் கெஞ்சியவளை அவனால் கண் கொண்டு காண முடியவில்லை...

"சாரி மதி... எங்க வீட்டு மாப்பிள்ளையை அங்கே உட்கார வச்சிட்டு நான் இப்படி உன் கூடப் பேசிட்டு இருக்கிறது அவ்வளவு நல்லா இல்லை... நீ வந்தா வா... நான் போறேன்..." என்று வீட்டை நோக்கி நடந்தவனைத் தொடர்ந்து வேறுவழியின்றித் தானும் நடந்தாள்...

"வாம்மா மதி... அனி கல்யாணத்துக்கு உனக்கு வேண்டிய புடவையை நீயும் செலக்ட் பண்ணு..." துளசி அன்போடு அவளை அழைத்தார்...

"அக்ஷய்... நீங்க செலக்ட் பண்ணுங்களேன்..." மதி அவனிடம் கொஞ்ச அவன் பல்லை கடித்தான்...

"இதெல்லாம்..." 'பொம்பளைங்க சமாச்சாரம்' என்று சொல்ல வந்தவன் அபியின் இளக்கார பார்வையில் தன்னை முயன்று அடக்கி கொண்டு தன் கௌரவத்தை அதாவது தனது வருங்கால மனைவியின் ஆசையைத் தான் கேட்டு நடப்பது போல் காப்பாற்றுவது போல் அங்கே அமர்ந்தான்...

"அனி... நீ புடவை எல்லாம் எடுத்திட்டியா..." அக்ஷய் கடமை தவறாத அண்ணனாய் அனியிடம் கேட்க...

"அவளுக்கு எடுத்தாச்சு அக்ஷய்..." துளசி பதில் அளித்தவர் அபியிடம்,

"நீயும் புடவை பாரும்மா..."

"இல்லை அத்தை... நான் அண்ணா கூடப் போய்க் கடையில் எடுத்துக்கிறேன்..." அபி மறுத்தாள்...

"ஏன் நீ பண்ற டிசைன் உனக்கே சகிக்கலையா...?" அக்ஷய் நேரடியாய் அபியை பார்த்து கிண்டலாய் கேட்டதைக் கண்டு அவனது குடும்பத்தினர் ஆச்சிரியமாய்ப் பார்த்தனர்...

எந்தப் பெண்ணிடமும் அவனாக வலிய சென்று பேசியது இல்லை... அபியிடத்தில் அவன் பேசியது அவர்களை மட்டும் அல்ல மதியையும் ஆச்சிரியமாகப் பார்க்க

வைத்தாலும் அவள் மனதில் கிலியை கிளப்ப தவறவில்லை...

"ம்... அதைத் தான் உ...." 'உன்' என்று அழைக்க வந்தவள் எல்லோரும் இருப்பதை உணர்ந்து, "உங்க தங்கை ரொம்பவும் பிடிச்சு எடுத்து இருக்காங்க... அதிலேயே தெரிய வேண்டாமா என் திறமை..." வெடுக்கென்று பதில் சொன்னவளை இப்போது ஆதர்ஷ் ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

அவன் அறிந்த தங்கை இப்படிப் படக்கென்று யோசிக்காமல் பேசுபவள் கிடையாது... எதையும் யோசித்துப் பேசுபவள்... அக்ஷயிடம் இப்படிப் பேசியது கேட்டு அவன் யோசனையில் ஆழ்ந்தான்...

அபி தன் தங்கையைச் சேர்த்து வைத்து பேசியதால் அக்ஷயால் சுட சுட அவளுக்குப் பதிலடி கொடுக்க முடியவில்லை... அதனால்,

"அம்பேல்..." என்று சரணடைவது போல் இரு கரங்களையும் மேலே தூக்கியவன்,

"என் தங்கைக்குப் பிடித்து இருந்தால் அதில் மாற்று கருத்து எனக்கு இல்லை..." என்றவனின் குரலில் இருந்த கேலி பேதம் பாதிக்கப்பட்ட அந்தப் பேதைக்கு மட்டுமே புரிந்தது...

"அவன் கிடக்கிறான் நீ விடு அபி..." என்ற துளசி, "நீயும் பாரும்மா... இந்த அத்தையோட பரிசுன்னு நினைச்சிக்கோ..." அவர் சொல்லவும் வேறுவழியின்றி அபி புடவை மேல் தன் கண்களை ஓட்டினாள்...

அக்ஷயும் கடனே என்று புடவையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க அவனிடம் மதி,

"இது நல்லா இருக்கா அக்ஷய்..." என்று தான் எடுத்த புடவையைக் காட்ட அதைக் கண்டு முகம் சுளித்தான் அவன்...

அதிகச் சரிகையுடன் பளபளப்பாய் இருந்த அந்தப் புடவை அவனுக்குப் பிடிக்கவில்லை...

"ம்ஹூம்..." என்றவன் அங்குப் பரப்பி இருந்த புடவையைப் பார்த்தான்...

இளம் மஞ்சள் வண்ணத்தில் அடர் பச்சை நிற சரிகைக் கரையுடன் இருந்த அந்தப் பட்டுப் புடவை அபியை ஈர்த்தது... ஒரு வாரத்திற்கு முன் தான் அதற்கான வேலைப்பாடை அவள் செய்து கொடுத்து இருந்தாள்...

உடல் முழுவதும் பச்சை நிறத்தில் சிறிய மாங்காய் வடிவத்தில் பட்டு நூல் கொண்டு வேலைப்பாடு செய்து அதில் மிகச்சிறிய வெள்ளை கற்கள் ஒட்டி பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது... அதனோடு இருந்த ரவிக்கை துணி வேலைப்பாடு புடவையின் வேலைப்பாட்டை விட மிக அழகாய் இருந்தது...

சாதாரணச் சரிகை அதிகம் இல்லாத அந்தப் பட்டுப்புடவை கை வேலைப்பாட்டால் விலை மதிக்க முடியாத பட்டுப்புடவையாய் ஜொலித்தது...

அக்ஷய் முன் இருந்த அந்தப் புடவையை அபி எட்டி எடுப்பதற்கும் அதே நேரம் அக்ஷய் அதை எடுப்பதற்கும் சரியாய் இருந்தது... அவளது கை மேல் அவனது கை படிய தீச்சுட்டார் போன்று தனது கையை உதறியவள் புடவையை எடுக்காமல் அமர்ந்துவிட்டாள்...

அவளின் முகச்சுளிப்பு, கை உதறல் இதை எல்லாம் கண்டு கொண்டவனுக்கு ஆத்திரமாய் வந்தது...

'பெரிய கற்புக்கரசி... தொட்டா அப்படியே எரிச்சிடுவாங்க...' எரிச்சல் அடைந்தவன் தானும் அதை எடுக்காமல் பேசாமல் இருந்தான்...

"உனக்குப் பிடிச்சா அதை எடுத்துக்கோ அபி..." துளசி அபியின் விருப்பத்தை அறிந்து கூறியவர் தானே அந்தப் புடவையை எடுத்து அவள் மீது வைத்து பார்த்தார்...

"உனக்கு ரொம்ப அழகா இருக்கு அபி..." என்று வேறு அவர் பாராட்ட அதில் மதிக்கு சிறிது பொறாமை குணம் தலைத்தூக்க,

"எனக்கு யெல்லோ கலரே பிடிக்காது..." என்று சிலிர்த்துக் கொண்டு பதில் கூறியவள் வேறு புடவையைப் பார்க்கலானாள்...

"இல்லை அத்தை... இது வேணாம்... சார்க்கு பிடிச்சு இருக்கு போல... " அபி மறுத்தாள்... அது அக்ஷயின் கைப்பட்டதாலோ என்னமோ அவளுக்கு அந்தப் புடவை பிடிக்கவில்லை...

"அக்ஷய் எடுத்தானேன்னு யோசிக்கிறியா... அவனுக்குப் புடவையைப் பத்தி ஒண்ணும் தெரியாது... சும்மா எடுத்து பார்த்து இருப்பான்... என்ன அக்ஷய்..." துளசி மகனை கேட்க...

அதில் அவனது கண்கள் பளபளத்து மின்னியது...

"எஸ் மாம்... சும்மா தான் பார்த்தேன்... அவளை எடுத்துக்கச் சொல்லுங்க..." என்றவனின் முகத்தில் பெருந்தன்மை இல்லை மாறாகக் கேலியே இருந்தது...

துளசி சொன்னதற்காக மறுக்க முடியாமல் அந்தப் புடவையை எடுத்து கொண்டாள் அபி... மதி தனக்குப் பிடித்த நிறத்தில் புடவை எடுத்து அக்ஷயிடம் மேம்போக்காய் சம்மதம் கேட்டவள் அதையே தனக்காகத் தேர்வு செய்து கொண்டாள்...

எல்லாம் முடிந்து கிளம்பும் போதும் அக்ஷய் முகத்தில் இருந்த கேலி மட்டும் மாறவில்லை... அபிக்கு அது ஏன் என்றும் புரியவில்லை... அதற்கு விடை மறுநாள் அலுவலகத்தில் கிடைத்தது...

என்றும் டெக்ஸ்டைல் மில்லுக்கு வராத அக்ஷய் அன்று வந்து இருந்தான்... அவன் வந்ததை அடுத்து அங்குப் பரபரப்பு நிலவியது...

'இத்தனை நாள் வராமல் இருந்தான் நிம்மதியாய் இருந்தேன்... இப்போ எதுக்கு வந்தான்...? என் நிம்மதியை கெடுக்கவா...' என்று மனதில் அவள் கடுப்புடன் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே அவனிடம் இருந்து அழைப்பு வந்தது...

'நினைச்சேன் இவன் என்னைக் கொடுமைப் படுத்துறதுக்குன்னே இங்கே வந்து இருக்கான்... அபி தைரியமா இரு... அவன் முன் அழுது கிழுது கோழையாக உன்னை நீயே காட்டி கொடுத்துறாதே...' என்று தனக்குத் தானே தைரியமூட்டி கொண்டவள் அவனைச் சந்திக்கச் சென்றாள்...

"வாங்க மேடம்..." எப்போதும் போல் நக்கல் குரலில் வரவேற்றவனை என்ன செய்தால் தகும் என்று அவள் மனதில் எரிச்சல் பட்டுக் கொண்டே அவனை முறைத்து பார்த்தாள்...

"நேத்து எதுக்குங்க மேடம் என்னை அவ்வளவு நக்கலா பார்த்தீங்க...?"

"சார்... இதுக்காகவா நீங்க இங்கே வந்தீங்க... அதை ஃபோன்ல கேட்டா கூடச் சொல்லி இருப்பேனே..." என்றவள்,

"உங்களுக்கும், மேடத்துக்கும் ஏக பொருத்தம்... எப்படி இப்படி ஒரு அருமையான பொருத்தத்தோடு நீங்க ரெண்டு பேரும் பொருந்துனீங்கன்னு நான் அப்படியே பிரமிச்சுப் போய்ப் பார்த்தேன்... அதை நீங்க நக்கல்ன்னு நினைச்சா அதுக்கு நான் பொறுப்பு இல்லை..." அவனைப் போலவே வார்த்தைக்கு வார்த்தைக்குக் கிண்டலாய் பேசியவளை பார்த்து அசராமல் புன்னகைத்தவன்,

"அப்படியா... ரொம்பத் தேங்க்ஸ்..." என்றவன் அப்படியே தலை குனிந்தால் நன்றாய் இராதே...

"கடைசியில் ஒரு புடவையைக் கூட உன்னால் உன் விருப்பத்துக்குச் செலக்ட் பண்ண முடியலையே... ரொம்பப்

பரிதாபம்..." என்று போலியாய் பரிதாபப்பட்டவனை உறுத்து விழித்தவள்,

"எதையுமே புரியும்படியாய் பேச மாட்டீங்களா சார்..." எரிச்சலுடன் அவள் சொல்ல,

"ஓ... புரியலையா... உன் அண்ணன் கல்யாணத்துக்கு நீ கட்டும் புடவை கூட என் செலக்சன் தான்னு சொன்னேன்..." அவன் சொன்னதின் அர்த்தம் புரிந்தவளுக்கு மேனி கொதித்தது...

"அதை நான் கட்ட போறது இல்லை..." என்றாள் முறைப்பாய்...

"அதை எப்படிக் கட்ட வைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." அமர்த்தலாய் சொன்னவன்,

"விசயம் அதில்லை... இனி உன்னோட எல்லா விசயத்திலும் என்னோட தலையீடு இருந்துக்கிட்டே இருக்கும்... அதைத் தான் சொல்ல வந்தேன்... என் விருப்பத்தை மீறி நீ எதுவும் இனி உன் வாழ்க்கையில் செய்யக் கூடாது... செய்யவும் நான் விட மாட்டேன்..." திமிராய் பதில் சொன்னவனை ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தவள் அடுத்த நொடி வாய்விட்டு சிரித்தாள்...

"என்னைக் கண்காணிக்கிறது இருக்கட்டும்... முதல்ல உங்க வருங்கால மனைவி உங்க விருப்பத்தை மீறி போயிடாம பார்த்துக்கோங்க..."

"வாட் யூ மீன்...?"

"என்னோட மீன் இல்லை சார்... அவங்க உங்களோட மீன்..." என்று சிரிக்காமல் நக்கலடித்தவளை கண்டு அவன் பல்லை கடித்தான்...

"உங்களுக்குப் பிடிச்சது அவங்களுக்குப் பிடிக்கலை... வேற ஒண்ணைச் செலக்ட் பண்ணினாங்க... அப்போ அவங்க உங்க விருப்பத்தை மீறி தானே போறாங்க..." என்றவளை இமைக்காமல் பார்த்தான்...

"பார்த்து சார்... இந்த விருப்பம் புடவையைத் தாண்டி வேற விசயத்தில் போயிர போகுது..." என்று கேலியாய் கூறியவள் பின் சீரியசாய் முகத்தை வைத்துக் கொண்டு,

"என்ன புரியலையா... அவள் உன்னை விட்டுட்டு வேற யார் பின்னாடியாவது போயிர போறா... எதுக்கும் ஜாக்கிரதையா இரு..."

"அபி..." என்று கோபத்தில் கத்தினான்...

"என்னமோ நீ பேரு வச்ச மாதிரி கத்தி கூப்பிடறே... ரொம்பச் சவுண்டு விடாதே... எப்பவுமே என்னைப் பழிவாங்கிறதை பத்தி மட்டும் யோசிக்காம உன்னைச் சுத்தி இருக்கிறவங்களை உன்னோட தக்க வைச்சுக்கிறதை பத்தியும் கொஞ்சம் யோசி... அப்புறம் கிளிக்கு றெக்கை முளைச்சிருச்சு... பறந்து போயிருச்சுன்னு நீ சோக டயலாக் பேச வேண்டி வரும்..." அவன் முக மாறுதலை திருப்தியுடன் பார்த்தவள்,

"எப்பவும் நீ கொட்ட கொட்ட குனிஞ்சிட்டு இருக்கவும் மாட்டேன்... எனக்குச் சமயம் வரப்போ உனக்குப் பதிலடி கொடுக்காம இருக்கவும் மாட்டேன்... இனியாவது அடிக்கடி என்னை அதட்டி மிரட்டி உருட்டுறதை விட்டுட்டு வேற வேலை இருந்தா போய்ப் பாரு..." என்றவள் அவனது பதிலை எதிர்பாராமல் அறையை விட்டு வெளியேறினாள்...

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் மனம் ஆத்திரத்தில் கொந்தளித்துக் கொண்டு இருந்தது...

அபி சொன்னதற்காகவே மதியை சீக்கிரம் திருமணம் செய்து கொண்டு அபியின் மூக்கை உடைக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழமாய் விழுந்தது...

*******************

நகரத்தில் இருந்து ஒதுங்கி புறநகர் பகுதியில் இருந்த அந்தக் கேளிக்கை விடுதி நள்ளிரவு நேரத்திலும் உற்சாகத்துடன் காணப்பட்டது... அங்காங்கே சிலர் அமர்ந்து மது அருந்தி கொண்டு இருக்க இளசுகள் பலர் உறக்கம்

என்ற ஒன்று இல்லாதவாறு உற்சாகத்துடன் தத்தம் இணையுடன் நடனம் ஆடி கொண்டு இருந்தனர்...

"மச்சி... இப்போ எல்லாம் ஹாட் மூவி அனுப்பறதே இல்லையே... ஏண்டா...? அனி உன்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டாளா..." மது அருந்தி கொண்டே அசோக் தனது நண்பன் ரஞ்சித்திடம் கேட்டான்...

"அந்தச் சோக கதையை ஏன்டா கேட்கிற..." என்றவன் அனி தன்னை விட்டு பிரிந்து இருக்கும் காரணத்தைக் கூறியவன்,

"அவ அண்ணன் பெரிய இவனடா... அவனுக்கு எல்லாம் பயந்துட்டு இப்படிச் செய்றா...?" மதுவின் போதையில் ரஞ்சித் கத்தினான்...

"அப்போ இழுத்துட்டுப் போய்க் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே..."

"கல்யாணமா... அவளையா...? போடா டேய்... லவ் பண்றேங்கிற பேர்ல இந்த மாதிரி பொண்ணுங்க கூடச் சுத்திட்டுக் காரியம் முடிஞ்சதும் சைலண்ட்டா கழட்டி விட்டுரணும் மச்சி... இல்லைன்னா இவளுங்க எல்லாம் வயலண்ட்டா மாறி நம்ம உயிரை எடுத்துருவாங்க... மேரேஜ் பண்றதுக்கு எல்லாம் அப்பா அம்மா பார்த்து வைக்கிற பேமிலி பொண்ணுங்க தான் சரிப்பட்டு வரும்... இந்த அலைஞ்சான் கேஸ்ங்க எல்லாம் எனக்குச் சரிப்படாது... அன்னைக்கு வீட்டுக்கு கூட்டிட்டு போனப்பவே காரியத்தை முடிச்சிருப்பேன்... எப்படியோ சுதாரிச்சிட்டா... இல்லைன்னா இப்போ இன்னொரு கிளியை தேடி நான் போயிருப்பேன்..."

"அந்த வீடியோவை காட்டி அவளை ப்ளாக்மெயில் பண்ண வேண்டியது தானே..." தோழனாய் அறிவுரை கூறினான் அசோக்...

இருவரும் சேர்ந்து செய்யாத தவறுகளே கிடையாது... அன்று ரஞ்சித் எடுத்த காணொளியை இணையத்தில் பதிவேற்றம் செய்தவன் இந்த அசோக் தான்... அதற்காக

ரஞ்சித் ஒன்றும் கவலைப்படவில்லை... மாறாக அனித்ராவை தன்னிடம் சிக்க வைக்கும் முயற்சியாகத் தான் அதைக் கருதினான்...

"அடபோடா... அதுக்கு எல்லாம் அவ மசிய மாட்டாடா... இந்த விசயம் அவளுக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு எனக்குத் தெரியலை... அவ என் கிட்ட கேட்டதும் ஆடி போய்ட்டேன்... ஏதேதோ சொல்லி சமாளிச்சேன்... ஆனா அவ அதைப் பத்தி எல்லாம் நினைச்சுக் கவலைப்பட்ட மாதிரி தெரியலை... ரொம்பக் கூலா எப்படிப் பொய் சொல்லி இதில் இருந்து தப்பிக்கலாம்ன்னு என் கிட்ட ஐடியா கேட்கிறா..."

"அப்போ இவ வேற மாதிரி பொண்ணா..."

"அப்படித்தான் நினைக்கிறேன்... அதனால யூஸ் பண்ணிட்டு கழட்டி விட்டாலும் ஒவ்வொரு பொண்ணுங்க மாதிரி அழுது ஆர்ப்பாட்டம் பண்ண மாட்டாள்ன்னு தான் நினைக்கிறேன்..."

"அந்தத் திருநாள் எந்நாளோ..." கண்களில் கனவு மிதக்க கேட்டான் அசோக்... ஏனெனில் நண்பனின் விருந்தில் அவனுக்கும் பங்கு உண்டே...

"அவ மேரேஜ் முடியட்டும் அதுக்கு அப்புறம் ஒரு நாள் பார்த்திடலாம்..."

"டேய்... மேரேஜ் முடிஞ்சா..." அசோக் கேள்வியாய் அவனைப் பார்த்தான்...

"மேரேஜ் முடிஞ்சாலும்... அவ எனக்குத் தான்..." என்றான் கர்வமாய் ரஞ்சித்...

"டேய் அசோக்... அங்கே பாருடா... சூப்பர் பிகர்..." திடீரென ரஞ்சித் கை காட்டிய திசையில் அசோக் திரும்பி பார்த்தான்...

எல்லோரும் நாகரீக உடையில் வந்திருக்க அந்தப் பெண் மட்டும் சேலை அணிந்து வந்திருந்தாள்.. அதை அவள்

கட்டிய விதமே மிகவும் அபாயகரமாய் அமைந்து அவளது அங்கங்களை அப்பட்டமாய் வெளிக்காட்டியது...

"ஆமாண்டா... நீ சொன்ன மாதிரி சூப்பர் பிகர் தான்..." அசோக் ஜொள்ளு வடித்தான்...

ரஞ்சித்தும் ஜொள்ளு விட்டுக் கொண்டு தனது அலைப்பேசியில் அந்தப் பெண்ணின் அங்கங்களைக் காணொளியாக எடுக்க ஆரம்பித்தான் யாருக்கும் தெரியாமல்...

பூக்கும்...

ரஞ்சித் காணொளி எடுக்கும் சுவாரசியத்தில் தன் பின்னால் நின்று கொண்டு இருந்தவனைக் கவனிக்க மறந்தான்... அவன் மட்டுமல்ல அசோக்கும் தான்... இருவரும் பெண் என்ற போதையில் தன்னை மறந்து மூழ்கி இருந்தனர்...

"டேய்..." என்ற ஆங்கார குரலில் அவர்கள் திரும்பி பார்க்கும் முன் ரஞ்சித்தின் தலையில் தன் கையில் இருந்த பியர் பாட்டிலால் ஓங்கி அடித்தான் அவனின் பின்னால் இருந்தவன்...

"யாரைடா வீடியோ எடுக்கிற நாயே...? அவ என்னோட வொய்ப்டா... மவனே உன்னைக் கொல்லாம விடாம மாட்டேன்..." அவன் ரஞ்சித்தின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்... அதில் ரஞ்சித் தலையில் ரத்தம் வழிய நிலைக்குலைந்து நாற்காலியில் இருந்து கீழே விழுந்தான்...

"விக்டர் வேண்டாம் விட்டுருங்க..." அந்தப் பெண் ஓடி வந்து தன் கணவனைச் சமாதானப்படுத்தினாள்...

"என்னை விடு நிஷா... இந்த நாதாரி என்ன பண்ணினான் தெரியுமா...?" விக்டர் ரஞ்சித்தின் வயிற்றில் ஓங்கி மிதித்தான்...

"அம்மா..." என்று அலறிக் கொண்டே அவன் சுருண்டு விழ...

"டேய் நீ யாருடா அவனை அடிக்கிறதுக்கு...? உன் வொய்ப் இந்த மாதிரி ஷோ காட்டிட்டு இருந்தா நாங்க வீடியோ பிடிக்கத்தான் செய்வோம்... அப்படி வொய்ப்பை நீ மட்டும் பார்த்து ரசிக்கணுமா இருந்தா எதுக்கு இந்த மாதிரி இடத்துக்குக் கூட்டிட்டு வர்ற..." அசோக் விக்டரின் சட்டையைப் பிடிக்க...

"அது என் இஷ்டம்... நாங்க ஜாலியா இருக்கிறதுக்காக வந்தோம்... அதுக்காக நீ வீடியோ எடுத்துட்டு இருக்கிறதை

பார்த்துட்டு சும்மா போகச் சொல்லுறியா... கொன்னு போட்டுருவேன்டா..." என்று அசோக்கின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் விக்டர்...

அதற்குள் விடுதி நிர்வாகி விசயம் கேள்விப்பட்டு அங்கு ஓடி வந்தார்...

"சார்... பெரிய மனுசங்க வர்ற இடம்... இங்கே ஏன் இப்படி அசிங்கமா சண்டை போடுறீங்க... ப்ளீஸ் சார்... எதுவா இருந்தாலும் பேசி தீர்த்துக்கோங்க..." தன்மையாய்ப் பேசினான் அந்த நிர்வாகி...

ஏனெனில் இங்கே வருபவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்கள் தான்... அதனால் யாரையும் பகைத்துக் கொள்ள முடியாது...

"யோவ் அவன் என் வொய்ப்பை அசிங்கமா வீடியோ எடுத்துட்டு இருக்கான்... அதைப் பார்த்து ரசிக்கச் சொல்றியா... எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு..." விக்டர் எகிறியவன் கீழே கிடந்த ரஞ்சித்தையும் அசோக்கையும் மீண்டும் ஓங்கி மிதித்தான்...

அத்தோடு விடாமல் மீண்டும் மீண்டும் இருவரையும் அடித்தவனை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை...

வேறுவழியின்றி நிர்வாகி காவல்நிலையத்துக்கு அழைத்து விசயத்தைச் சொல்ல காவல்துறை அங்கே விரைந்து வந்தது...

மூன்று ஆண்களையும் தாங்கள் வந்திருந்த வண்டியில் ஏற்ற மூவரும் அவர்களிடம் சண்டைக்குப் போயினர்...

"நாங்க யார்ன்னு தெரியுமா...? என்னோட பவர் தெரியாம என் மேல் கை வைச்சுட்ட..." என்று மூவருமே ஒரே மாதிரி எகிறினர்...

"யாராயிருந்தாலும் ஸ்டேசனுக்கு வந்து பேசுங்க..." என்று சொன்ன ஏட்டு அவர்களை வண்டியில் ஏற்றி தானும் ஏறி அமர்ந்தார்...

கணவனைக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதை உணர்ந்து நிஷா தங்கள் காரை எடுத்துக் கொண்டு அந்த வண்டியை பின் தொடர்ந்து சென்றாள்... போகும் வழியில் தங்களது வக்கீலுக்கும் அழைத்து வர சொல்லிவிட்டாள்...

அவர்கள் காவல் நிலையம் போய்ச் சேர்ந்த பத்து நிமிடத்தில் வக்கீல் அங்கு வந்து சேர்ந்தார்...

"உங்க வொய்ப்பை அப்படி வீடியோ எடுத்தா சும்மா விடுவீங்களா சார்..." விக்டர் இன்னமும் அடங்காமல் கொதித்துக் கொண்டு இருந்தான்...

"எங்கே உன் ஃபோனை காட்டு..." காவலதிகாரி ரஞ்சித்தை கேட்க அவன் தைரியமாக அதை அவரிடத்தில் நீட்டினான்... ஏனெனில் விக்டர் விடுதி நிர்வாகியிடம் பேசும் போது அவன் அந்தக் காணொளியை அழித்துவிட்டான்...

"ஒண்ணும் இல்லையே சார்..." விக்டரிடம் சொன்ன காவலதிகாரி ரஞ்சித்திடம் அலைப்பேசியைக் கொடுத்தார்...

"டேய் அதுக்குள்ள டெலிட் பண்ணிட்டியா...?" ரஞ்சித்தின் மீது பாய்ந்தான் விக்டர்...

நிஷாவும், வக்கீலும் சேர்ந்து தான் அவனை அடக்கினார்கள்...

"எல்லோருமே பெரிய இடம்... நான் கேஸ் ஃபைல் பண்ணினா பிரச்சினை எனக்குத் தான் வரும்... இப்போ என்ன செய்றது" தனக்குள் புலம்பினார் அந்த அதிகாரி...

ஆம்... விக்டர் தொழிலதிபன்... ரஞ்சித் தொழிலதிபரின் மகன்... அசோக்கின் தந்தை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கிறார்...

"சார்... கேஸ் எதுவும் பதிய வேண்டாம் விட்டுருங்க சார்..." வக்கீல் நயமாகப் பேச...

"எனக்கும் மட்டும் ஆசையா என்ன...? இருக்கிற கேசை பார்க்கவே நேரம் இல்லை... இதுல இந்த மாதிரி சின்னச் சின்னச் சண்டைக்கு எல்லாம் பஞ்சாயத்து பண்ண நேரமா இருக்கு..." அவர் அலுத்துக் கொண்டார்...

முடிவில் விக்டரை சமாதானப்படுத்தி வழக்குப் பதிவு பண்ணாமல் வெளியில் அழைத்து வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது...

ஆனால் மூவரிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டு தான் வெளியில் விட்டது காவல் துறை...

"மவனே... என்னைக்காவது என் கிட்ட மாட்டாமலா போவ அன்னைக்கு உன்னைக் கொன்னு உன் குடலை உருவி மாலையா போடுறேன்டா..." வெளியில் வந்த பின்னும் விக்டர் ஆத்திரத்துடன் கத்தினான்...

"அதையும் பார்க்கலாம்டா... கூடிய சீக்கிரத்தில் தேவை இல்லாமல் எங்க கிட்ட மோதிட்டோமேன்னு நீ வருத்தப்படப் போற பாரு..." அடிப்பட்ட வேங்கையாய்ச் சீறினான் ரஞ்சித்... காவல்நிலையத்திற்குத் தன்னை வரவழைத்து விட்ட விக்டரின் மீது கொலைவெறியில் இருந்தான் அவன்...

"யாரு வருத்தப்படப் போறான்னு போகப் போகத் தெரியும்..." பதிலுக்குப் பதில் பேசி கொண்டு இருந்த கணவனை இழுத்துக் கொண்டு சென்றாள் நிஷா...

அவர்கள் இருவரும் சென்றதும் ஒரு ஆட்டோவை பிடித்து அந்த விடுதிக்கு வந்த ரஞ்சித்தும், அசோக்கும் அங்கிருந்த தங்களது காரில் ஏறி அமர்ந்தனர்...

அசோக் ரஞ்சித்திடம், "எதுக்குடா தேவை இல்லாம பேசி வம்பை விலைக்கு வாங்குற..."

"இனித்தான்டா வம்பை விலைக்கு வாங்க போறேன்..." என்ற ரஞ்சித் தனது தலையில் இருந்து வழிந்த ரத்தத்தைக் கையில் எடுத்துப் பார்த்தான்... அவனது கண்கள் பழிவாங்கும் வெறியில் பளபளத்தது...

"என்னடா சொல்ற...? எனக்கு என்னமோ பயமாயிருக்கு... இந்த விசயம் வீட்டுக்கு தெரிஞ்சா நம்ம ரெண்டு பேரு முதுகுலயும் டின் கட்டிடுவாங்க..."

"தெரிஞ்சா தானே... தெரியாம பண்ணுவோம்..."

"எதை...?"

"தப்பை தான்..." கண்சிமிட்டி சிரித்தான் ரஞ்சித்...

"என்னடா சொல்ற...?"

ரஞ்சித் தன் அலைப்பேசியை அவன் முன்னால் காட்டி, "டெலிட் பண்ணிய வீடியோவை எப்படித் திரும்ப எடுக்கிறதுன்னு உனக்கும் எனக்கும் தெரியாதா என்ன...?"

"ரஞ்சித்..." நண்பனை கலவரமாய்ப் பார்த்தான் அசோக்...

"இந்த வீடியோவை திரும்ப எடுத்து அவன் பொண்டாட்டியை மிரட்டி நம்ம வழிக்குக் கொண்டு வரலை நான் ரஞ்சித் இல்லை..." என்றான் ஆத்திரமாய்...

"ஏதாவது பிரச்சினை வந்திர போகுதுடா..."

"ஒரு பிரச்சினையும் வராது... இந்த மாதிரி விசயம் வெளியில் வர்றதை எந்தக் குடும்பப் பொண்ணும் விரும்ப மாட்டா... சோ எல்லா விதத்திலும் யோசிச்சு பார்த்தா நன்மை நமக்குத் தான்... நம்மை அசிங்கப்படுத்தியவனை அசிங்கப்படுத்தின மாதிரியும் ஆச்சு... அதே சமயம் வாழ்க்கையை அனுபவிச்ச மாதிரியும் ஆச்சு..." உல்காசமாய்க் கூறிய ரஞ்சித்தை கண்டு அசோக்கின் கண்கள் கனவில் மிதந்தது...

"ரஞ்சித்... எல்லாம் சரி தான்டா... அவ புருசனை நினைச்சா தான் பயமா இருக்கு..."

"பயந்தா ஒண்ணும் பண்ண முடியாது... இந்த மாதிரி விசயத்தை எந்தப் பொண்டாட்டியும் தன்னோட புருசன் கிட்ட சொல்ல மாட்டா டா... அது தான் நம்மள மாதிரி ஆளுங்களுக்கு வசதியா இருக்கு..."

இப்போது ரஞ்சித்தின் வார்த்தையில் நம்பிக்கை அடைந்தவனாய் சம்மதமாய்த் தலையை ஆட்டினான் அசோக்...

"விக்டர்... உங்களுக்கு ரொம்பக் கோவம் வருது..." நிஷா சொல்வதைக் கேட்ட விக்டர் ஒன்றும் பேசாது அமைதியாய் இருந்தான்...

புடவையை மாற்றிவிட்டுச் சாதாரணப் பருத்தி இரவு உடையில் தன் முன் அமர்ந்தவளை அளவிடுவது போல் பார்த்தான்...

எந்தவித ஒப்பனையும் இல்லை... ஆனாலும் பளிச்சென்று அழகாய் இருந்தாள் நிஷா...

'இவளை போய் எப்படி...?' அவனது மனம் குமுறியது...

"சரி விக்டர்... எனக்குத் தூக்கம் வருது... குட் நைட்..." என்றபடி அவள் அறைக்குச் செல்ல...

விக்டர் அங்கிருந்த சோபாவில் படுத்தான்... ரஞ்சித் பண்ணிய செயல் அவனது மனதை ஆக்கிரமித்து இருந்தது... அவனது இழிவான செயலை எண்ணி பார்த்தவனுக்கு ஆத்திரம் மட்டும் குறையவில்லை...

சென்னையில் இருந்த அந்த விளையாட்டு மைதானத்தை அக்ஷய் அனியின் திருமணத்திற்காக வாடகைக்கு எடுத்து இருந்தான்... அங்கிருந்த ஒவ்வொரு அலங்காரத்திலும் பணக்காரத்தனமும் பகட்டும் நிறைந்து இருந்தது... முதல் நாள் வரவேற்பு விழா ஆடம்பரமாய் நடந்து முடிந்து இருந்தது... அதை விட ஆடம்பரமாய் இன்று திருமணம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது...

எல்லாத் துறைகளிலும் இருந்த முக்கியப் புள்ளிகள் எல்லோரும் ஆதர்ஷ் - அனியின் திருமணத்திற்கு வந்திருந்தனர்...

அபிக்கு ஏனோ அந்த இடத்தில் பொருந்த முடியாமல் ஒட்டாத தன்மையுடன் அவஸ்தையுடன் நெளிந்து கொண்டு

இருந்தவள் தனது பாட்டியுடன் ஓர் ஓரமாய் அமைதியாய் அமர்ந்து கொண்டாள்...

அக்ஷய் அங்கும் இங்கும் பரபரப்புடன் வந்திருந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களை உபசரித்து அமர செய்த பாங்கை தன்னையும் மறந்து பார்த்துக் கொண்டு இருந்தாள்...

எப்போதும் அவளிடம் சீண்டி கோபப்பட்டு நக்கலாய் சிரிக்கும் அக்ஷய் இவன் இல்லை... கம்பீரமாய் ஆளுமையுடன் ஆதிக்க மனப்பான்மையுடன் அவன் நின்று இருந்தவிதம், அவன் பேசி சிரித்துக் கொண்டு இருந்த பெரிய மனிதர்களின் தரம், திட்டமிட்டு அவன் வேலை செய்த பாங்கு, வேலைக்காரர்களிடம் அவன் வேலை வாங்கிய விதம் எல்லாவற்றையும் கண்டு அவனைப் பிரமிப்பாய் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

அதனால் தான் அமைச்சரே தனது மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க முன் வந்து இருக்கிறார் போலும்...

அவன் மலை... அவள் மடு என்று அந்தக் கணம் புரிந்தது... மலையோடு மோதி தன் தலையை உடைத்துக் கொள்வது வேண்டாத வேலையோ என்று கூடத் தோன்றியது... ஆனாலும் அவன் செய்த காரியத்தை அவளால் இன்றளவும் ஜீரணிக்க முடியவில்லையே...

ஒரு வீட்டை கைப்பற்றுவதற்காக ஒரு பெண்ணின் கற்பை கேள்விக்குறியாக்கும் அளவுக்கு ஒருவன் தரம் இறங்குவானா? என்று அவனை நினைத்து குமைந்தவளுக்கு உள்ளம் ஆறவில்லை... அதே சமயம் அவனிடம் தன்னால் மோத முடியாது என்ற நிதர்சனம் மனதில் உறைக்க அவள் முற்றிலும் செயலிழந்து போனாள்...

'ஏழையாய் பிறந்த ஓரே காரணத்துக்காக இவனை எல்லாம் நான் சகித்துக் கொள்ள வேண்டுமா...' என்ற எண்ணம் தோன்றி அவளை அலைக்கழித்தது...

"அபி... ஆதுவையும் அனியையும் பாரேன்... ஜோடிப் பொருத்தம் அருமையா இருக்குல்ல... என் கண்ணே பட்டுடும் போலிருக்கு..." பாட்டியின் குரலில் அவள் மேடையைத் திரும்பி பார்த்தாள்...

இவ்வளவு நேரம் அக்ஷயை திறந்த வாய் மூடாமல் தான் பார்த்துக் கொண்டு இருந்ததை எண்ணி மனதுக்குள் வெட்கினாள்...

அண்ணனையும் அண்ணியையும் பார்த்தவள் மனம் நிறைந்தது... தன் நலம் பேணும் சகோதரனுக்காகத் தான் யாரையும், எதையும், எதற்காகவும் சகித்துக் கொள்ளலாம் என்று அந்தக் கணம் அவள் முடிவு செய்தாள்...

அதற்குள் நாத்தனார் முடிச்சு போட அபியை யாரோ அழைக்க அவள் பாட்டியை திரும்பி பார்த்தாள்...

"ஆச்சி நீங்களும் வாங்களேன்..." அத்தனை பணக்கார மனிதர்கள் மத்தியில் செல்வதற்கு அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது...

அதிலும் பெண்கள் அணிந்து இருந்த வைர நகைகளும், அவர்களது உடையும், அலங்காரமும் கண்டு அவளது மனதில் சிறு சுணக்கம் வந்தது...

அவள் எப்போதும் ஏழ்மையை அவமானமாக நினைத்தது இல்லை... ஆனால் இன்று ஏனோ அதைத் தலையிறக்கமாக உணர்ந்தாள்...

"நீ போம்மா அபி... மூட்டு வலியோட படியேற என்னால முடியாது... நான் இங்கே இருந்து பார்க்கிறேன்..." என்று அவர் கூறி விட...

என்ன செய்வது என்று தெரியாமல் மேடையின் கீழே நின்று இருந்தாள்... படியேறி அவள் செல்ல முடியாத அளவு அங்கே கூட்டமாய் இருந்தது... அவளது எளிமையான தோற்றம் கண்டோ யாரும் அவளைப் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை...

கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தவளை நோக்கி அக்ஷய் வந்தான்...

"என்ன மகாராணிக்கு வெத்திலை பாக்கு வச்சு அழைக்கணுமா...? சீக்கிரம் வா... என் தங்கை உனக்காக எத்தனை நேரம் காத்திருக்கிறது... உன் நாத்தனார் குணத்தை இப்பவே காட்ட ஆரம்பிச்சிட்டியா..." படபடவெனப் பேசி கொண்டு போனவன் அவளது கலங்கிய நிலையைக் கண்டு அமைதியானான்...

"என்ன...?"

"இத்தனை பேர் ஒதுங்காம நின்னுக்கிட்டு இருந்தா நான் எப்படி வர்றது..."

"வேணும்ன்னா மகாராணி வர்றார்... பராக்... பராக்ன்னு சொல்ல ஒரு ஆளை நியமிக்கவா...?" கிண்டலாய் கேட்டவனைக் கண்டு இத்தனை நேரம் அவன் மேலிருந்த பிரமிப்பு போய் மெல்ல கோபம் எட்டி பார்த்தது...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்..." சிடுசிடுப்புடன் கூறியவள், "நான் இப்போ எப்படி வர்றதுன்னு மட்டும் சொல்லுங்க..."

"நான் கூட்டிட்டு போறேன் வா..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல...

"விடுங்க..." அத்தனை பேர் முன்னிலையில் அவனைக் கடியவும் முடியவில்லை... திட்டவும் முடியவில்லை...

"கையை விட்டேன்னு வச்சுக்கோ கூட்டத்துல பறந்து காணாம போய்டுவ..." என்றான் அவளின் ஒல்லியான தேகத்தை நக்கலாய் பார்த்தபடி... அதில் வாயை மூடி கொண்டாள்...

ஒருவழியாய் மணவறை பக்கம் வந்ததும் அவளின் கையை விட்டவன் தனது பெற்றோருடன் சேர்ந்து நின்று கொண்டான்... அவளும் மணப்பெண்ணான தனது

அண்ணியின் பின்புறம் போய் நின்று கொண்டாள்... ஆதர்ஷ் தங்கையைக் கண்டு புன்னகைத்தான்...

"அக்ஷய்... அவ எல்லாம் ஒரு ஆள்ன்னு... நீங்க போய்க் கூட்டிட்டு வரணுமா..." மதி அவனது செயலில் குறைப்பட்டுக் கொள்ள...

"இப்போ என் தங்கை கல்யாணம் நடக்கணுமா...? வேண்டாமா...?" என்று கூறி அவளது வாயை அடைத்தவன் மணமேடையைப் பார்க்கலானான்... அதற்கு மேல் மதி ஏன் வாயை திறக்க போகிறாள்...

சரியாக முகூர்த்த நேரத்திற்கு அமைச்சர் பாரிவேந்தன் வர அந்த இடம் பரபரப்பானது... வருங்கால மாமனாரை ஓடி போய் வரவேற்றான் அக்ஷய்... மாமனார் என்பதை விட அவரின் அமைச்சர் பதவிக்கு முக்கியத்துவம் கொடுத்தான்... அதைக் கண்டு மதியின் சுணங்கிய மனம் லேசானது...

ஆதர்ஷ் மங்கல நாணின் முதல் முடிச்சு போட மீதி இரண்டு முடிச்சையும் அபி போட்டு அண்ணனுக்கும் அண்ணிக்கும் இடையே உள்ள பந்தத்தை உறுதி செய்தாள்...

'கடவுளே... என் அண்ணன் வாழ்க்கை நல்லபடியா சந்தோசமா இருக்கணும்..." அது மட்டுமே அவளது வேண்டுதலாய் இருந்தது...

அக்ஷய்க்கும் தங்கை திருமணம் முடிந்ததும் தான் நிம்மதியாக இருந்தது... இப்போது அவனது மனதில் தன் தங்கையைக் கேவலப்படுத்திய அந்த ரஞ்சித்தை பழிவாங்கும் எண்ணம் மட்டுமே நிறைந்து இருந்தது... அவனை உருத்தெரியாமல் அழிக்க வேண்டும் என்ற வெறி தணியாத தாகமாய் அவனது நெஞ்சில் எரிந்து கொண்டு இருந்தது...

ஆதர்ஷ் தன் கைகளை மனைவியைச் சுற்றிக் கொண்டு வந்து அவளது நெற்றியில் வைத்த போது அவளது முகத்தை உற்றுக் கவனித்தான்... அலங்கார தேவதையாய்

அழகுற அமர்ந்து இருந்தவளை கண்டு மனமும் மதியும் மயங்கி போனது அவனுக்கு... கனவிலும் நினைத்து பார்க்காத அழகு மனைவி அமைந்தால் யாருக்கு தான் உள்ளம் மயங்காது...

அனித்ரா உள்ளம் இறுகி போய் அமர்ந்து இருந்தாள்... தனது காதலன் கையால் தொங்க தொங்க தாலி கட்டும் பாக்கியம் தனக்குக் கிடைக்காமல் போனதை எண்ணி மனம் குமுறியவள் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அமைதியாய் அமர்ந்து இருந்தாள்...

சடங்குகள் முடிந்து மணமக்கள் மணமகன் வீடு கிளம்பினர்... அந்தச் சிறிய வீட்டிற்குச் செல்ல அக்ஷய்க்கு பிடிக்கவில்லை... இருந்தாலும் தங்கைக்காகச் சென்றான்... ஏனெனில் அக்ஷய் தங்கைக்காக எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முன் வந்த போது ஆதர்ஷ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை...

"உங்க தங்கைக்கு நீங்க செய்றதை நான் மறுக்கலை... அதே சமயம் என் மனைவி என் வீட்டில் என் வருமானத்துக்குள் வாழணும்ங்கிறது தான் என் விருப்பம்..."

ஆதர்ஷ் அப்படிச் சொன்ன போது யாராலும் பதில் பேச முடியவில்லை... அனி பண்ணிய காரியத்துக்கு இந்தத் திருமணம் முடிந்ததே அவளது அதிர்ஷ்டம் என்று எண்ணி அவர்களது பெற்றோர் அமைதி காத்தனர்... இனிமேல் தான் தன் தங்கையைக் கொண்டு ஆதர்ஷை தங்கள் பக்கம் வர வைக்க வேண்டும் என்று அக்ஷய் எண்ணி கொண்டான்...

அந்தச் சிறிய வீட்டை பார்த்த போது அனிக்கு குமட்டி கொண்டு வந்தது... கண்களில் கண்ணீர் முட்டியது... தன் நிலை இந்தளவுக்கா கேவலமாய்ப் போக வேண்டும் என்று கோபமாய் வந்தது...

அப்படி என்ன தவறு செய்துவிட்டாள் அவள்... காதலித்தது தவறா... இல்லை காதலுடன் இணக்கமாக இருந்தது தவறா... அதற்காகத் தன் அண்ணன் இப்படி ஒரு

வசதியில்லாத ஒருவனைக் கணவனாகப் பார்த்துத் தன்னைத் தள்ளி இருக்க வேண்டாம் என்று உள்ளுக்குள் நொந்து போனாள்...

இது தற்காலிக பந்தம் தான் என்றாலும் ஆதர்ஷை கணவனாகத் தான் எண்ணியது அவளது பெண் மனம்...

"மாம்... என்னையும் உங்க கூடவே கூட்டிட்டு போங்களேன்..." கதறி அழுதவளை கண்டு துளசி திகைத்தார்...

"அனி என்னம்மா இப்படிப் பேசுற...?"

அந்நேரம் அங்கு வந்த அபியும் திகைத்து போனாள்...

"ஏன் அண்ணி அழுறீங்க...?"

"அது ஒண்ணும் இல்லைம்மா... எல்லாப் பொண்ணுங்களும் அம்மா வீட்டில் இருந்துட்டு புருசன் வீட்டுக்கு வரும் போது அழுறது தான்... கொஞ்ச நேரத்தில் சரியாகிடுவாம்மா..." துளசி சமாதானமாய்ப் பேசினார்...

"ஓ..." என்ற அபிக்கும் மனசு கஷ்டமாகத் தான் இருந்தது... அவளும் ஒரு பெண் அல்லவா... அனியின் உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

"நீங்க இருங்க... நான் இப்போ வர்றேன்..." என்றவள் நேரே தனது அண்ணனிடம் வந்தாள்...

அக்ஷய் வீட்டில் இருந்து முக்கியமானவர்களும், அவளது சொந்தங்கள் கொஞ்ச பேர் மட்டுமே அங்கு இருந்தனர்...

தங்கையின் கண் அசைவிலேயே ஆதர்ஷ் புரிந்து கொண்டவன் அவளிடம் வந்தான்...

"என்னம்மா..."

"இங்கே பேச முடியாதுண்ணா... மாடிக்கு வா..." அவனை அழைத்துக் கொண்டு மாடிக்கு வந்தவள்,

"நீ கொஞ்ச நாள் அண்ணி வீட்டில் இருந்துட்டு வாயேன்..." என்றாள் மொட்டையாக...

"எதுக்கும்மா... அதெல்லாம் வேண்டாம்..." அவன் முடிவாய் மறுத்தான்...

"அண்ணா ப்ளீஸ் புரிஞ்சிக்கோ... அண்ணி நிலையில் என்னை வச்சு பாரு... அவ்வளவு பெரிய வீட்டில் இளவரசி போல் வளர்ந்தவங்களை ஒரே நாளில் இப்படிச் சூழ்நிலையை மாத்திக்கச் சொன்னா அவங்களால எப்படித் தாங்கிக்க முடியும்... முதல்ல அவங்க கிட்ட அன்பான கணவனா நடந்து அவங்களை உன் அன்பில் குளிப்பாட்டு... அதுக்கு அப்புறம் அவங்களே உனக்காக எல்லாத்தையும் விட்டு கொடுத்துட்டு நம்ம வீட்டுக்கு வந்துடுவாங்க... அதுவரைக்கும் கொஞ்சம் விட்டு கொடுத்து போண்ணா... அவங்க அழுறதை பார்க்கும் போது பாவமா இருக்கு..."

அனி அழுதாள் என்று கேள்விப்பட்டதும் அவனாலும் மனம் தாங்க முடியவில்லை...

"இருந்தாலும்..." அவன் தயங்கினான்...

"மூச் நீ பேச கூடாது... உன் தங்கை சொல்றதை கேட்டு நீ நடக்கிற அவ்வளவு தான்..." என்றவள் மேலே பேச போனவனின் வாயை கை கொண்டு மூடியவள்,

"மூச்..." கண்களை உருட்டி போலியாய் மிரட்டினாள்...

அதில் ஆதர்ஷ்க்குச் சிரிப்பு வந்தது...

"சரி உனக்காக நான் அங்கே போறேன்... ஆனா இதுவே பழக்கமா மாறாம பார்த்துக்கோ..." என்றான் சம்மதமாக...

"அண்ணான்னா என் அண்ணா தான்..." சந்தோசத்தில் துள்ளி குதித்தவள் கீழே ஓடினாள்...

ஆதர்ஷ் அங்கேயே நின்று வானத்தைப் பார்த்தான்... ஏனோ மனதில் குழப்பமாய் இருந்தது...

"தேங்க்ஸ்..." படியில் தாவி தாவி இறங்கி கொண்டு வந்தவள் அந்த வார்த்தையில் அப்படியே நின்றாள்...

கைகளைக் கட்டி கொண்டு அக்ஷய் தான் அவள் முன் நின்று இருந்தான்...

"எதுக்கு...?" கண்களைச் சுருக்கி கொண்டு அவனைப் பார்த்தாள்...

"என் தங்கைக்காக உன் அண்ணன் கிட்ட பேசியதுக்கு..."

"என் அண்ணிக்காக நான் பேசினேன்... அதுக்கு நீ எதுக்குத் தேங்க்ஸ் சொல்ற...?" என்றவள், "ஒட்டு கேட்கிற நல்ல புத்தியும் இருக்கா... ரொம்பச் சந்தோசம்..." என்றாள் கிண்டலாய்...

அதில் அவனது இயல்பான குணம் தலைத் தூக்கியது...

"பிசினஸ்மேனுக்கு உடம்பு எல்லாம் காது இருக்கணும்..." என்றவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தவள்,

"அப்படியா... நான் கேள்விப்பட்ட வரைக்கும் உடம்பு பூரா கண்ணால்ல இருக்கணும்ன்னு சொல்வாங்க..."

"கண்ணு, காது, மூக்கு எல்லாமும் தான் இருக்கணும் போதுமா..." என்றவன் அவளை மேலிருந்து கீழாக நோக்கி...

"ம்... புடவை அழகாத் தான் இருக்கு..."

திடுமென அவன் அப்படிச் சொன்னதில் அவளுக்குக் கோபம் வர, "உன் கண்ணை நோண்டிருவேன்..." என்றாள் பட்டென்று...

அவளின் தைரியமான பேச்சில் அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்...

"புடவையைத் தானே அழகா இருக்குன்னு சொன்னேன்... உன்னையவா சொன்னேன்... என்னம்மோ உன்னைய சொன்ன மாதிரி குதிக்கிற..." என்றவனின் பார்வை

அவளின் மேனியில் ஊர்ந்ததைக் கண்டு அவளுக்கு உள்ளம் கொதித்தது...

"உன்னை... உன்னை..." காலையில் அவனைப் பற்றி நினைத்ததை எல்லாம் காற்றில் பறக்கவிட்டவள் சண்டைக் கோழியாய் சிலிர்த்துக் கொண்டு நின்றாள்...

"என்னை... என்னை... மீதியையும் சொல்லு... என்ன சொல்ல முடியலையா... அது சரி நீ கட்டுற புடவையையே உன்னால செலக்ட் பண்ண முடியலை... இந்த லட்சணத்துல நீ என்னை என்ன பண்ண முடியும்..." என்று கேலி பேசியவன்,

"என்ன நான் சொன்னதை நடத்தி காட்டிட்டேனா...?"

"நீ சொன்னதுக்காக நான் ஒண்ணும் இதைக் கட்டலை... அத்தை சொன்னாங்கன்னு தான்..." அவள் முறுக்கி கொள்ள...

"அந்த அத்தைக்கு அந்த நேரத்தில் நியாபகப்படுத்தியது யாரம்மா...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேட்டவன் அவள் முழிப்பதை கண்டு தனக்குள் நகைத்தபடி,

"அடியேன் தான்..." கேலியாய் வளைந்தது அவனது உதடுகள்...

அவனைக் கூர்ந்து பார்த்தவள், "அவ்வளவு பிசியான நேரத்திலும் என் மேல் காட்டிய அக்கறைக்கு ரொம்பத் தேங்க்ஸ்... இப்பவும் சொல்றேன் என்னைக் கவனிக்கிறதை விட்டு வேறு வேலை இருந்தா போய்ப் பாரு... நீ கவனிக்கிற அளவுக்கு நான் ஒண்ணும் விஐபி இல்லை..."

"விஐபி இல்லைன்னாலும் என்னோட பரம எதிரி நீ இல்லையா... அப்போ என் கவனம் முழுவதும் உன் மேல் தான் இருக்கும்..."

"அப்படியா... சரி சரி... போனா போகுதுன்னு உன்னை என் செக்யூரிட்டியா வச்சிக்கிறேன்... ஆனா சம்பளம்

வாங்கிக்கணும்... என்ன ஓகேவா...?" ஓரக்கண்ணால் தன்னைப் பார்த்தபடி சளைக்காமல் பதிலுக்குப் பதில் வாயாடும் அவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"சம்பளம் கொடுக்கிற முதலாளிக்கே சம்பளம் கொடுக்கிறேங்கிற... ரொம்பவும் திமிர் தான்..."

இந்த முறை அவன் அவளை முறைக்கவில்லை... மாறாக அவனது கண்கள் சிரித்தது... அது அவனது தங்கைக்காக அவள் பரிந்து பேசியதால் வந்தது...

"பின்னே செக்யூரிட்டி வேலை பார்க்கிறேன்னு நீ பிடிவாதம் பிடிச்சா... நான் என்ன செய்றது...?" தோளை குலுக்கியவள் அங்கிருந்து நகர்ந்தாள்...

ஏனோ இன்னும் கொஞ்ச நேரம் அவளிடம் பதிலுக்குப் பதில் வாயாட வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது...

காலையில் இருந்து அவனிடத்தில் இருந்த இறுக்கம் அவளின் பேச்சால் சற்று தளர்வதை உணர்ந்தான்...

"க்ரேசி கேர்ள்..." அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் முகத்தில் புன்னகை உறைந்து இருந்தது...

அவளும் அவனைத் தான் நினைத்துக் கொண்டு இருந்தாள்... ஆனால் வேறு மாதிரி...

'காலையில் அவனைப் பத்தி நினைச்சதை நான் வாபஸ் வாங்கிக்கிறேன்... அவன் மாற மாட்டான்... அதே அயோக்கியன் அக்ஷய் தான் அவன்... அவன் பசுத் தோல் போர்த்திய புலி... நேரத்துக்கு நேரம் இடத்துக்கு இடம் நிறம் மாறும் பச்சோந்தி... அபி நீ அவன் கிட்ட எதுக்கும் ஜாக்கிரதையா இரு... இல்லை உன்னை விழுங்கி ஏப்பம் விட்டிருவான்...'

அவள் நினைத்தது சரி என்பது போல் அடுத்த நாளே அவள் முன் அவன் அதே பழைய அக்ஷயாய் ஆக்ரோசமாய் அவள் முன் வந்து நின்றான்...

பூக்கும்...

அனித்ராவுக்குத் தன்னுடைய அறைக்குச் செல்லவே விருப்பம் இல்லை... இத்தனை நாள் அவளது ராஜ்ஜியமாக, அவளது அந்தரங்கத்தின் அங்கமாகத் திகழ்ந்த அறையில் கணவன் என்ற பெயரில் அந்நியன் ஒருவனை அனுமதித்தது ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை... அருவருப்பாக இருந்தது...

கால்கள் தயக்கத்தில் பின்ன என்னத்தான் மெதுவாக நடந்த போதும் அவளின் அறை வந்துவிட்டது... அவளது உறவு பெண்களில் திருமணமான பெண் ஒருத்தி அவளைக் கொண்டு அறையில் விட்டு விட்டு சென்று விட்டாள்...

திருமணமாகாத அபி மாலையில் அண்ணனிடம் விடைப்பெற்று தனது வீட்டிற்குப் பாட்டியுடன் சென்றுவிட்டாள்... அவளுக்குமே அதற்கு மேல் அக்ஷயின் வீட்டில் இருப்பது முள் மேல் இருப்பது போல் இருந்தது...

கதவை திறந்து கொண்டு அறைக்குள் மெல்ல காலடி வைத்தவளுக்கு இதயம் படபடவென அடித்துக் கொண்டது... இந்த மாதிரி பயப்படுவது அவளது குணத்திற்குப் புறம்பானது... மனதிற்குச் சரி என்று படுவதைத் தைரியமாகச் செய்து முடிப்பவள் அவள்... எதைப் பற்றியும் யோசித்தது கிடையாது... அதனால் வரும் பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட்டதும் கிடையாது...

'அப்படிப்பட்ட நான் ஏன் இவனுக்காகப் பயப்படணும்...? இவன் என்னை என்ன செய்துவிட முடியும்...' தனக்குத் தானே தைரியமூட்டி கொண்டவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள்...

"வா அனி..." அவளை வரவேற்ற ஆதர்ஷை கண்டு அவளுக்கு உள்ளம் எரிந்தது...

'என்னோட ரூமில் இருந்துட்டு என்னையே வெல்கம் பண்றியா... எல்லாம் என் நேரம்டா...' மனதுக்குள் எரிச்சல்

பட்டாலும் தனது காரியம் வெற்றி பெறுவதற்காக அவன் சொல் கேட்டு அவன் அருகில் வந்தாள்...

"உட்காரு..." தான் சொன்னதும் கட்டிலில் அமர்ந்தவளை தொடர்ந்து தானும் அமர்ந்தான் ஆதர்ஷ்...

ஆதர்ஷ்க்கு தான் நினைத்ததைச் சொன்னால் தன்னை ஏதும் தவறாக எண்ணி கொள்வாளோ என்ற குழப்பம் பெரும் யோசனையாய் இருந்தது அவனுக்கு...

"அனி..." அவன் அழைத்தும் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை...

அதை அவன் தவறாகவும் எண்ணவில்லை... புது மணப்பெண் கூச்சம் என்று எண்ணி கொண்டான்...

"இன்னைக்கு நீ அழுதியா...?" அதில் அவள் நிமிர்ந்து பார்த்தாள்... ஆனால் ஒன்றும் பேசவில்லை...

"உன் நிலைமை எனக்குப் புரியுது... கொஞ்சம் கஷ்டம் தான்... போகப் போக எல்லாம் சரியாய் போகும்... அப்படிச் சரியாகலைன்னாலும் அதை என்னால் சரியாக்க முடியும்..." என்று நம்பிக்கையுடன் அவன் பேச அவள் கடனே என்று விட்டேற்றியாய் அமர்ந்து இருந்தாள்...

"அப்புறம் ஒரு விசயம்... இதை நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே... அபி கல்யாணம் முடியும் வரை நமக்குள் எந்தவித உறவும் வேண்டாம்ன்னு நினைக்கிறேன்..." தயக்கத்துடன் அவன் உரைக்க...

அவன் சொன்னதும் மனதில் எழுந்த சந்தோசத்துடன் அவனைப் பார்த்தாள்... அவன் பேச ஆரம்பித்ததில் அவளை நெருங்கிய தூக்கம் கூடச் சொல்லாமல் கொள்ளாமல் அவளிடம் இருந்து விடைப்பெற்றுப் போனது...

"அவளை வீட்டில் வச்சிக்கிட்டு நான் கல்யாணம் பண்ணியதே எனக்கு ரொம்ப உறுத்தலா இருக்கு... இப்பவே மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு தான் இருக்கேன்... சீக்கிரத்தில் அவளுக்குக் கல்யாணம் பண்ணிடுவேன்...

அது வரைக்கும் நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்க முயற்சி பண்ணுவோம்..."

அவள் மனமோ வேறு விதமாய்க் கணக்கிட்டது...

'நல்ல சான்ஸ் கிடைச்சு இருக்கு... இந்த இடைவெளியில் நான் போட்ட திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டியது தான்...' மனதுக்குள் குதூகலித்தாள்...

"என்ன அனி ஒண்ணுமே பேச மாட்டேங்கிற..."

அவன் குரலில் அவனைப் பார்த்தவள் அறியாப் பிள்ளையாய் கண்களை மலர்த்தியவள், "எனக்குத் தூக்கம் வருது..."

"ஓ... சாரி அனி... நீ தூங்கு..."

அவன் சொன்னதும் தான் தாமதம் உடனே எழுந்தவள் கட்டிலின் மறுபக்கம் செல்வதற்காகப் போகும் போது கட்டிலின் கால் தட்டி அதன் மீதே விழுந்தாள்... தூக்க கலக்கமா இல்லை மனதில் இருந்த கலக்கமோ ஏதோ ஒன்று அவளை நிலைத்தடுமாற வைத்தது...

"அனி..." என்று பதறியப்படி அவளைத் தாங்கி பிடிக்க வந்த ஆதர்ஷை விலக்க முயன்றவளால் அதைச் செய்ய முடியாமல் உடல் தடுமாறியது...

அவளை அமர வைத்தவன் அவளது முகத்தை ஆராய்ந்தான்... நினைத்தது போல் தாடையில் அடிப்பட்டுக் கன்றி சிவந்து இருந்தது...

"நான் வேணா போய் ஐஸ்க்யூப் எடுத்திட்டு வரவா..." கவலையுடன் கேட்டவன் நகர முற்பட...

"வேணாம்... இந்த நேரத்தில் போனா யாராவது ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க..." பதட்டத்துடன் அவனது கையைப் பிடித்துத் தடுத்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

எதற்கு இவன் சிரிக்கிறான் என்று அவள் யோசிக்கும் போது அவனின் பார்வை அவனது கையைப் பிடித்து இருக்கும் தனது கையைப் பார்ப்பதை உணர்ந்து அவசரமாய் அதை விலக்கினாள்...

"சாரி..." முணுமுணுத்தவளை கண்டு அவனுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது...

"கட்டிய கணவனைத் தொட்டதற்குச் சாரி கேட்கணும்ங்கிற அவசியம் இல்லை... இது உன் உரிமை..." என்றான் உல்லாசமான குரலில்... தானாய் முன்வந்து அவளாய் தன்னைத் தொட்டது அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

'யாரு கணவன்... நீயா...? அது ஒரு போதும் நடக்காது... என் ரஞ்சி தான் என் கணவன்...' மனதுக்குள் வன்மமாய் நினைத்தவள் ஒன்றும் பேசாமல் எழுந்தாள்...

"உன் கிட்ட பர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் இருக்கா..." அவள் எழுந்ததும் அவளுக்கு அடிப்பட்டது நியாபகம் வர அக்கறையுடன் கேட்டான் அந்த மருத்துவனான கணவன்...

"ஒண்ணும் செய்யாது..." அடிப்பட்ட இடத்தைத் தடவி விட்டபடி படுத்தவளை கண்டு அவனால் எதுவும் பேச முடியவில்லை...

அவளது மறுபக்கம் அவன் படுக்க அதில் படக்கென்று அவள் எழுந்து அமர்ந்தாள்...

"என்ன அனி..." என்றவனிடத்தில் ஒன்றும் பேசாது அங்கிருந்த சோபாவில் போய்ப் படுத்தவளை கண்டு அவனுக்குப் புரிந்து போனது...

"அனி... நீ வந்து பெட்ல படு... நான் சோபாவில் படுக்கிறேன்... உனக்கு இது எல்லாம் பழக்கம் இருக்காது..."

அவன் சொல்லவும் ஒன்றும் பேசாது கட்டிலில் சென்று அவள் படுக்க... அவன் சோபாவில் சரிந்தான்...

அவரவர் போக்கிலேயே சென்று எதிராளியை அடிப்பதில் அண்ணனுக்குச் சளைத்தவள் தான் இல்லை என்று நிரூபித்தாள் அனித்ரா...

இதைப் புரியாத ஆதர்ஷோ வேறு மாதிரி நினைத்தான்... என்ன தான் தாலி கட்டிய கணவனாய் தான் இருந்தாலும் தான் அவளுக்கு அந்நியனே... அதனால் தான் அவள் பயப்படுகிறாள் என்று எண்ணினான்... அவளின் தைரியத்தின் அளவை பற்றித் தெரியும் போது அவனின் நிலை என்னவோ...

காலையில் எழுந்து குளித்து முடித்து வந்த மகளைக் கண்டு துளசியின் முகம் பூரித்தது... மகளின் மனமாற்றம் கண்டு அவர் மகிழ்ந்து போனார்...

"அனி... சந்தோசமா இருக்கியாம்மா..." அவளது முகத்தை ஆராய்ச்சி கண்ணோட்டத்துடன் பார்த்தவர் கண்ணில் தாடையில் கன்றி சிவந்து இருந்த அந்தத் தடம் பட்டது...

"என்ன அனி இது...?"

"மாம்... இதை எல்லாமா கேட்டுட்டு இருப்பாங்க..." வெட்கத்துடன் கூறிய மகளைக் கண்டு நிம்மதியுற்றவராய்,

"இப்போ தான்டா சந்தோசமா இருக்கு..." என்றவர், "மாப்பிள்ளை காலையில் என்ன குடிப்பார்ன்னு தெரியுமா... காபியா, டீயா இல்லை பாலா..."

"காபி..." வாய்க்கு வந்ததை அவள் சொல்ல அதைக் கலந்து அவளிடம் கொடுத்தவர் ஆதர்ஷிடம் கொடுக்கச் சொல்லி அனுப்பினார்...

வெற்றிகரமாக அன்னையைச் சமாளித்த தன் சாமர்த்தியத்தை மெச்சியபடி தனது அறைக்கு வந்தாள்...

ஏற்கெனவே கிளம்பி இருந்த ஆதர்ஷிடம் காபியை நீட்ட அதை மறுக்காதவனாய் வாங்கிப் பருகியவன் தன் முன் நின்று இருந்த தனது புது மனைவியையும் கண்களால் பருகினான்...

'இந்தக் கொடுமை எல்லாம் சகிக்க வேண்டி இருக்கே கடவுளே...' மனதில் நொந்தவளாய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவள் செய்தித்தாளை கையில் எடுத்து அதில் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

அவளின் செயலில் மனதில் ஏமாற்றம் மூண்ட போதும் அதை மறைத்துக் கொண்டு எழுந்தவன் அவளிடம், "போகலாமா அனி..."

"ம்..." என்று அவளும் எழுந்தாள்...

வரவேற்பறைக்கு வந்தவர்களைக் கோபிநாத்தும், அக்ஷயும் வரவேற்றனர்... ஆதர்ஷ் இயல்பாய் அவர்களது வரவேற்பை ஏற்றவன் அங்கு அமர்ந்து பேச... அக்ஷயின் கூரிய கண்களில் இருந்து அனியின் தாடையில் இருந்த காயம் தப்பவில்லை...

பேருக்கு சிறிது நேரம் பேசி கொண்டு இருந்தவன், "அனி இங்கே வா... உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..."

அதில் அவள் மனம் துள்ளி குதித்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல் கணவனின் அனுமதி வேண்டி நிற்பது போல் பவ்யமாய் ஆதர்ஷை பார்த்தாள்...

"உன் அண்ணன் கிட்ட பேசுறதுக்கு என்னை ஏன் பார்க்கிற அனி... போய்ப் பேசு..." என்று சிரித்தான் அந்த அப்பாவி கணவன்...

"ம்... சரிங்க..." அவள் காட்டிய பவ்யம் கண்டு அவளுக்கே உள்ளுக்குள் சிரிப்பு பீறிட்டது...

தங்கையை அழைத்துக் கொண்டு தனது அறைக்கு வந்த அக்ஷய் பதட்டத்துடன், "அனி... என்னம்மா இது...?" அவளின் தாடையைச் சுற்றி காட்டி...

"அது ஒண்ணும் இல்லைண்ணா..." சொல்லும் போதே அவளது கண்களில் கண்ணீர் பொங்கியது...

அவளது கண்ணீர் கண்டு அவனது பதட்டம் இன்னும் கூடியது...

"என்ன நடந்துச்சுன்னு சொல்லும்மா...?"

"வேண்டாம்ண்ணா... எதையும் என் கிட்ட கேட்காதீங்க..." முகத்தை மூடி கொண்டு விம்மியவளின் அருகில் வந்து அவளது தோள் பற்றி,

"இப்போ உண்மையைச் சொல்ல போறியா இல்லை நானே உன் புருசன் கிட்ட கேட்கவா..." அவனது வார்த்தையில்,

'காரியம் கெட்டது...' மனதுக்குள் நினைத்தவள் விலுக்கென்று நிமிர்ந்தவள், "ப்ளீஸ்ண்ணா... தயவுசெஞ்சு அவர் கிட்ட கேட்காதீங்க... நானே சொல்றேன்..."

"அவர் ஒரு பொண்ணைக் காதலிக்கிறாராம்..."

"வாட்...?" என்றான் அதிர்ச்சியுடன் அக்ஷய்... அவனால் அனி சொல்வதை நம்பவும் முடியவில்லை நம்பாமலும் இருக்கவும் முடியவில்லை...

"ஆமாண்ணா... அந்தப் பொண்ணைத் தான் கல்யாணம் பண்ண நினைச்சாராம்... அதுக்குள்ள நீங்க போய்ப் பொண்ணு கேட்டதுல அவங்க வீட்டுல சரின்னு சொல்லி அவரை வற்புறுத்தி கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்களாம்..."

அன்று ஆதர்ஷ் தயங்கியதும் அபி அவன் சார்பாய் பேசி சம்மதிக்க வைத்ததும் அவன் மனக்கண்ணில் வந்து போனது...

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதித்த காரணத்தைத் தான் அண்ணா என்னால ஜீரணிக்க முடியலை... அவரோட மேல் படிப்புக்கு நீங்க உதவி செய்றேன்னு சொன்னதால தான் அவங்க தங்கச்சி அவரை வற்புறுத்தி சம்மதிக்க வச்சாங்களாம்... மத்தபடி அவருக்கு அவரோட காதலி தான் பிடிக்குமாம்... என்னைப் பிடிக்காதாம்... நான் எவ்வளவோ கெஞ்சி பார்த்தேன்... அவளை மறந்துட்டு என்னோடு வாழுங்கன்னு... அதுக்கு அவர்..." மீண்டும் அழுதவளை கண்டு அவனது நாடி நரம்பு எல்லாம் ஆத்திரத்தில் துடித்தது...

அக்ஷயின் தங்கை தனது கணவனே என்றாலும் ஒருவனிடத்தில் போய் வாழ்க்கைப் பிச்சை கேட்டு கெஞ்சுவதா...? அவனது கண்கள் சிவந்தது அடக்கப்பட்ட கோபத்தில்...

"அதுக்கு என்ன சொன்னான் அவன்...?" உறுமினான் அக்ஷய்...

"உன் கூட எல்லாம் என்னால் வாழ முடியாதுன்னு என் கன்னத்தில் ஓங்கி அடிச்சிட்டார்... அதில் நிலைத்தடுமாறி போய்க் கட்டில் முனையில் விழுந்து அடிப்பட்டிருச்சுண்ணா..." என்று கேவியவளை அணைத்துக் கொண்டான் ஆறுதலாகச் சகோதரனாக...

"இந்த அண்ணன் இருக்கிற வரை நீ அழ கூடாது... இப்பவே நான் அவன் கிட்ட போய்ப் பேசுறேன்... என் தங்கச்சி வாழ்க்கையைப் பாழாக்கிட்டு அவன் யார் கூட வாழ்றான்னு நான் பார்க்கிறேன்..." என்று கோபமாய்க் கத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் செல்ல முற்பட,

"அண்ணா... எனக்குப் பயமா இருக்குண்ணா... நீங்க பிரச்சினையைப் பெருசாக்கிடாதீங்க... நான் அவரைப் பொறுத்து போறேன்..."

"நீ எதுக்கும்மா பொறுத்து போகணும்...? கை நீட்டின புருசனை பொறுத்து போறதுக்கு நீ என்ன கற்காலத்துலயா வாழ்ற...?"

"எந்தக் காலத்தில் வாழ்ந்தாலும் பெண் பெண் தானே அண்ணா..."

"என்ன சொல்ல வர்ற... புரியும்படியா சொல்லு..."

"எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சு இருக்குண்ணா..." முகம் சிவந்தவளை விசித்திரமாய்ப் பார்த்தான் அந்தச் சகோதரன்...

"நானும் அவரைப் போல் ஒருத்தரை காதலிச்சவள் தானே... இப்போ மனசு மாறலையா... அது போல் அவரோட மனசும்

மாறும்... அது வரைக்கும் நான் காத்திருப்பேன்..."

அவள் கூறுவது எல்லாம் உண்மை என்று நம்பும் அந்தச் சகோதரனின் அன்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள் அந்த நவீன சூர்ப்பனகை... அவனும் தன் தங்கை கூறுவதை அப்படியே நம்பினான்... அதில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை...

அக்ஷய் கூறுவது போல் இன்றே ஆதர்ஷிடம் சண்டை போட்டால் அவர்களது பெற்றோரின் சந்தேகம் அவள் மீது தான் பாயுமே ஒழிய... ஆதர்ஷை அவர்கள் சந்தேகப்பட மாட்டார்கள்... ஏனெனில் பெற்ற மகளைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும்... இதை மெல்ல மெல்ல ஊதி பெரிதாக்க வேண்டிய விதத்தில் பெரிதாக்க வேண்டும்... அதற்குச் சற்று பொறுமையை அவள் கடைப்பிடித்துத் தான் ஆக வேண்டும்... அதுவரை அந்த ஆதர்ஷை சகித்துத் தான் ஆக வேண்டும்...

"ரொம்பப் பெரிய பொண்ணாகிட்டே அனி..." பெருமையாய் பார்த்த அக்ஷய், "உனக்காகத் தான் அவனைச் சும்மா விடுறேன்... இல்லை நடக்கிறது வேற..." தீவிரத்துடன் சொன்னவனைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்தது... அவளுக்கும் இது தானே வேண்டும்...

"நான் அதே குட்டி பெண் உன் தங்கை தான் அண்ணா..." என்று கூறியவள், "நீங்க இருக்கிற வரை எனக்கு என்ன கவலைண்ணா..." சலுகையுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்...

அனி சொன்னதைக் கேட்டுக் காலம் முழுவதும் அவள் கண்ணில் கண்ணீர் வர கூடாது என்று மனதில் சபதம் எடுத்துக் கொண்டான் அவன்... அந்த அருமை தங்கை செய்யும் வேலை தெரிந்தால் அவன் மனம் என்னவாகுமோ...

தங்கையாய், மனைவியாய் இரு ஆண்களின் உணர்வுகளோடு அவள் விளையாட தயாரானாள்... அவர்களை ஏமாற்ற அவள் போட்ட திட்டத்தில் தான் ஏமாறப்

போவதை அவள் அறிந்திருக்கவில்லை... இது தான் விதி என்பதா...

மீண்டும் வரவேற்பறைக்கு அவர்கள் இருவரும் வந்தனர்... அக்ஷய் ஆதர்ஷிடம் பேசாமல் அமைதியாய் அமர்ந்தான்... ஆனால் அவனது மனம் கொதித்துக் கொண்டு இருந்தது...

காலை உணவு முடிந்ததும் ஆதர்ஷ், "அப்போ நாங்க ரெண்டு பேரும் எங்க வீட்டுக்கு கிளம்பறோம்..."

"அதெல்லாம் நீங்க போக வேண்டாம்..." உடனே மறுத்தான் அக்ஷய்...

'எங்க வீட்டுல நாங்க எல்லாம் இங்கே இருக்கிறப்பவே அனியை இந்த அடி அடிச்சு இருக்க... இதுல உன் வீட்டுல வச்சு என்ன எல்லாம் பண்ணுவ... இந்த அக்ஷய் உயிரோட இருக்கும் வரை அது நடக்காது...' மனதில் நினைத்தவன் ஆதர்ஷை வெறுப்பாய் பார்த்தான்...

"இல்லைங்க... இன்னும் ஒரு நாள் தான் என்னால் லீவு போட முடியும்... அதான் எங்க வீட்டுக்கு போலாம்ன்னு..." ஆதர்ஷ் நயந்து தான் பதில் சொன்னான்...

அண்ணன், தங்கையின் உள்குத்து அறியாத பாலகனாய் இருந்தான் அவன்...

"இல்ல நீங்க இங்கே தான் இருக்கணும்..." அக்ஷய் உறுதியாய் கூற...

"அக்ஷய்..." பெற்றோர் அவனை அதட்டினர்...

"அதான் அவர் அவ்வளவு சொல்றாரே அக்ஷய்..." கோபிநாத் சொல்ல...

"நல்ல நேரம் பார்த்து நாம கிளம்பலாம் மாப்பிள்ளை..." துளசியும் சம்மதம் சொன்னார்...

"இன்னைக்கு ஒரு நாள் இருங்க... நாளைக்கு நீங்க போகலாம்..." எதையோ நினைத்து முடிவு எடுத்தவனாய்...

"அது வந்து..." ஆதர்ஷுக்கு தன் தங்கை, பாட்டியை நினைத்து கவலையாய் இருந்தது... அதை வெளியில் சொல்ல முடியாமல் தான் அவன் அப்படிச் சொன்னது...

மச்சினன் புரிந்து கொள்ளாமல் பேசியதை கண்டு அவனுக்கு வருத்தமாய் இருந்தது...

"ஒரு நாள் தானே..." மெதுவே வாய் திறந்த மனைவியைப் பார்த்தவனால் ஏனோ அவளது ஆசையை மறுக்க முடியவில்லை...

"சரி..." என்றான்...

தங்கை சொன்னது கேட்டு உடனே சம்மதம் சொன்ன ஆதர்ஷின் மனதை கூடப் புரிந்து கொள்ள முடியாதபடி அக்ஷயின் மனதை கோபம் என்ற மேகம் மூடி மறைத்து இருந்தது... அது தன் தங்கையை அவன் அடித்ததால் வந்தது...

அபிக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை... அண்ணன் இல்லாதது என்னவோ போல் இருந்தது அவளுக்கு... அதனால் வேலைக்குக் கிளம்பி வந்துவிட்டாள்...

எப்போதும் போல் அவள் தனது வேலையை மும்முரமாய்ச் செய்து கொண்டு இருந்தாள்...

அப்போது புயல் போல் அக்ஷய் அலுவலகத்திற்குள் நுழைந்தவன் கண்ணில் அங்கு வேலை செய்து கொண்டு இருந்த அபி பட்டாள்... அவளின் நிம்மதி நிறைந்த முகம் அவனுள் குரோதத்தை விதைத்தது... தன் தங்கையை அடித்தவன் தங்கையை அவன் ஏதாவது செய்து கதற அடிக்காவிட்டால் அவன் அக்ஷய் இல்லையே...

அலுவலகத்தில் அமர்ந்தவன் கோப்பை புரட்டி பார்க்கையில் அவனிடம் வசமாய் மாட்டினாள் அபி... உடனே அவளை அழைத்தான்...

'வந்ததும் ஆரம்பிச்சுட்டானா...' என்று சலித்தபடி அவள் அவனது அறைக்கு வந்தாள்...

"இது என்ன...?" அவள் முன் அந்தக் கோப்பை தூக்கி வீசினான்...

"என்ன...?" என்றபடி சாவகசமாய் எடுத்து பார்த்தவள்,

"புரியலையே..."

"உன்னை மாதிரி ஞானச் சூன்யங்களுக்கு இது எல்லாம் எப்படிப் புரியும்...?" என்று இளக்காரமாய்ப் பேசியவன்,

"இது எப்போ கொடுக்க வேண்டிய ஆர்டர்... ஏன் இன்னமும் இதை டெலிவரி பண்ணலை...?"

"இது கொஞ்சம் ஹெவி ஓர்க் உள்ளது... அதான்... ஏற்கெனவே டெலிவரி டிப்பார்ட்மென்ட்ல சொல்லி அவங்க கிட்ட சொல்லியாச்சே..."

"ஓ... நீயே முடிவு பண்ணி நீயே சொல்றதுக்கு இது என்ன உன் தாத்தா வீட்டு மில்லா...?" என்று கோபமாய்க் கத்தியவன்,

"ஓவர் டைம் பண்ணி முடிக்கிறதுக்கு என்ன கேடு..." அவனது பேச்சில் அவளுக்கும் சுறுசுறுவெனக் கோபம் வந்தது...

"கொடுக்கிற சம்பளத்துக்குத் தான் வேலை பார்க்க முடியும்... ஓவர் டைம் பார்க்க இது என்ன எங்க தாத்தா வீட்டு மில்லா...?" அவனைப் போல் கேலியாய் வினவியவளை கண்டு,

"என்னடி சொன்ன...?" என்று ரௌத்திரமாய் எழுந்தவன் அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தான்...

அவனது எதிர்பாராத அந்தச் செயலில் அதிர்ந்து போனவளாய் அபி கன்னத்தில் கையை வைத்தபடி அப்படியே நின்றாள்...

அவளது உதட்டோரம் துளிர்த்த இரத்தத்தைக் கண்டு அவனது மனம் கொடூரமாய்த் திருப்தியுற்றது... தன்

தங்கைக்குத் தான் நியாயம் செய்துவிட்டதாய் எண்ணி உள்ளம் மகிழ்ந்தான்...

கணவன் அடித்ததற்கே கற்காலமா என்று கேள்வி கேட்டு உறுமியவன் இப்போது தான் செய்து இருக்கும் காரியத்திற்கு என்ன சாக்கு போக்கு சொல்ல போகிறான்...?

பூக்கும்...

அக்ஷய் அடித்ததும் அபியின் கன்னங்கள் எரிந்து கண்களில் பூச்சி பறந்தது... கன்னத்தைப் பிடித்தபடி அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்... இதுநாள் வரை அவன் அவளைத் திட்டி இருக்கிறான், கேவலப்படுத்திப் பேசியிருக்கிறான்... ஆனால் அது எல்லாம் வெறும் வாய் வார்த்தை மட்டும் தான்... ஆனால் இன்று அவன் கை நீட்டி அடித்தது கண்டு அவள் திகைத்து போனாள்...

அவன் அடித்த அதிர்ச்சியில் இருந்தவள் தன்னிலை அடைவதற்குச் சில வினாடிகள் பிடித்தது... சுயநினைவு அடைந்ததும் அவன் மீதான அவளது ஆத்திரம் அதிகரித்தது...

'இவன் யார் என்னை அடிப்பதற்கு...? இவனுக்கு யார் கொடுத்தார்கள் அந்த உரிமையை...?' வெகுண்டது அவளது மனம்...

"நீ யாருடா என்னை அடிக்கிறதுக்கு...?" சீற்றத்துடன் வினவியவள் தனது கையை ஓங்கி இருந்தாள் அவனைப் பதிலுக்கு அடிப்பதற்கு...

அதற்குள் சுதாரித்து விலகியவன் அடுத்த நொடி அவளது கையைப் பிடித்து முறுக்கினான்... வலித்தது இருந்தாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அவள்,

"கையை விடுடா..." தன் கரத்தை அவன் பிடியில் இருந்து விலக்கி கொள்ளப் போராடினாள்...

அவளின் போராட்டத்தைக் கண்டு அவனது இதழ்கள் வளைந்தது இகழ்ச்சியாய்...

"நான் யாருன்னு உனக்குத் தெரியாது... உனக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளி..."

"உன் கிட்ட வேலை செய்ற ஒரே காரணத்துக்காகக் கை நீட்டி அடிப்பியா நீ..."

"தப்பு செஞ்ச அடிச்சேன்..." தனது தவறை உணராதவனாய் அலட்சியமாய்ப் பேசினான் அவன்... அதிகார வர்க்கத்தின் திமிர் போலும்... அப்போதும் அவளின் முறுக்கிய கையை விடவே இல்லை...

"நீ எல்லாம் எப்படிப் பெரிய பிசினஸ்மேன் ஆன...? எதையும் யோசிச்சுச் செய்ய மாட்டியா...?" குற்றம் சாற்றினாள் கோபமாய்...
அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தாலும் வாய் விட்டு கேட்கவில்லை... அப்படிக் கேட்டால் அவன் தகுதி என்னாவது...

"என்னோட வேலை டிசைன் பண்றது மட்டும் தான்... அதைச் செய்து முடிக்க வேண்டியது நீ வேலைக்கு வச்சு இருக்கும் ஆட்கள்... இதில் என்னோட தவறு எங்கே இருந்து வந்தது... அப்படி இருந்தும் நான் என்னோட வேலையை மட்டும் பார்க்கா வொர்க் நல்லா வரணும்ங்கிறதுக்காக நான் அவங்க கூடச் சேர்ந்து வேலை செய்றேன்... நீ கொடுக்கிற சம்பளத்துக்கு அதிகமாகவே நான் உழைக்கிறேன்... ஆனா ஒண்ணு மட்டும் என்னால் உறுதியா சொல்ல முடியும் நிச்சயம் உனக்காக நான் இதைப் பண்ணலை... ஏன்னா இதில் என்னோட திறமையும் அடங்கி இருக்கு... என்னோட திறமைக்கான அங்கீகாரமும் அடங்கி இருக்கு... எனக்கு இந்த வேலை ஒரு சவால்... அதனால் தான் செய்றேன்... இதில் நீ குற்றம் குறை கண்டுப்பிடிக்கிற அளவுக்கு என்ன தப்பு நடந்து போச்சுன்னு தான் எனக்குத் தெரியலை..."

அவளின் நீண்ட விளக்கத்தில் அவனது வாய் அடைத்து தான் போயிற்று... அவள் சொல்வதும் முற்றிலும் உண்மை... யோசித்துப் பார்க்கும் போது அவள் தவறு செய்யவில்லை... தவறு செய்தவன் அவன் தான்... ஆனாலும் அவளிடம் உண்மையை ஒத்துக்கொள்ள மனம் வரவில்லை அவனுக்கு...

'அவள் அண்ணன் என் தங்கையை அடித்தது மட்டும் சரியா...' அவனது உள்ளம் அதிலேயே நின்று கொதித்துக்

கொண்டு இருந்தது... அதற்கு அபிக்கு இந்தத் தண்டனை தேவை தான் என்றே அவனுக்குத் தோன்றியது...

"என்ன பதில் பேச முடியலையா...?" கேலியாய் கேட்டவளின் குரலில் அவளது கையை மெதுவாய் விடுவித்தவன் தனது நாற்காலியில் அமர்ந்தான்...

அவன் இறுகிப் பிடித்ததால் கன்றி சிவந்த கையைத் தடவி கொண்டே அவள், "உன்னைத் திருப்பி அடிக்க முடியாத உயரத்தில், உடல் வலிமையில் நீ இருப்பதை நினைச்சு ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே... என்னைக்காவது ஒரு நாள் எனக்குச் சமய சந்தர்ப்பம் வராமலா போயிரும்... அப்போ உன்னோட முதல் எதிரி நான் தான்..."
ஆத்திரமாய்க் கூறியவள்,

"உன்னோட தகுதிக்கு என்னை மாதிரி ஆளுங்க கிட்ட மோதுறியே... உனக்கே அது வெட்கமாய் இல்லை..."

இந்த வார்த்தையில் அவளைக் கூர்ந்து பார்த்தவன், "இப்பவாவது உன் தகுதி பத்தி உனக்குப் புரிஞ்சதே ரொம்பச் சந்தோசம்..." என்றான் அமர்த்தலாக...

அதில் அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"நீ சொல்றது ஒருவிதத்தில் உண்மை தான்... என்னோட தகுதிக்கு உன்னை மாதிரி ஆளுங்க கிட்ட பேசுறதே கௌரவக் குறைச்சல் தான்..."

"அப்படி இருந்தும் நீ என் பின்னால் சுத்துறன்னா..." அவனைப் பார்த்து நக்கல் சிரிப்பு சிரித்தவள், "உன் குடுமி என் கையில் சரியா..."

அவள் சொன்னதைக் கேட்டு அவனது முகம் கறுத்தது... அவள் கூறுவதும் பொய்யில்லையே... அவளைப் போன்று எத்தனையோ பேரை தினமும் அவன் தொழில் வாழ்க்கையில் சந்திக்கிறான்... தன் காரியம் கை கூட அபியை போன்றவர்களை அவன் பகடை காயாகப் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம் வரும் போது அவன் வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல் தன் காரியம் வெற்றி

அடைவதற்காக அவர்களை வெற்றிக் கொள்கிறான்... அதில் இருக்கும் நியாய அநியாயங்களை என்றுமே அலசி பார்க்கும் நிலையில் அவன் இல்லை...

அப்படிப்பட்டவன் இந்த அபியிடம் மாட்டி கொண்டு முழிப்பது தன் தங்கை வாழ்க்கைக்காகத் தான்... அவனது தங்கையின் கணவனது தங்கையாக இந்த அபி வந்து விட்டாள்... இல்லை இந்தளவுக்கு அவனை எதிர்க்கும் அவளை இத்தனை நாளில் உருத்தெரியாமல் அழித்து அந்த இடத்தில் புல் முளைக்கச் செய்து இருப்பான் அந்தக் கிரிமினல் பிசினஸ்மேன்... இப்போதும் தனது தங்கைக்காகத் தான் அபியிடத்தில் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறான்... அவனைப் பற்றி இன்னமும் அவள் அறியவில்லை...

"என் குடுமியை உன் கையில் கொடுக்கும் அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை... எனக்குக் குடுமியும் இல்லை... ரொம்பவும் ஆடாதே... அப்புறம் என்னோட இன்னொரு பக்கத்தைப் பார்க்க வேண்டி இருக்கும்..." என்று அவளை எச்சரித்தவன்,

"இப்போ நீ கிளம்பலாம்..." என்று கதவு பக்கம் கை காட்டினான்...

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் விருட்டென்று வெளியேறிய அபிக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... அவன் தன்னை அடித்தும் அவனுக்கு எதிராய் தன் சுண்டு விரலை கூட அசைக்க முடியாத தன் நிலையைக் குறித்து அவளுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது...

அவனது பேச்சும், செயலும் அவளைப் பெரிதும் காயப்படுத்தி இருந்தது... ஒரு அந்நியன் கையால் தான் அடிவாங்குவதா அவளால் மனம் தாங்க முடியவில்லை... இதுநாள் வரை அவளது பெற்றோர் கூட அவளை அடித்தது இல்லை... அதற்கு மேலாக அவளது சகோதரன் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான்... படிக்கும் காலத்தில் ஆசிரியர்களிடத்தில் கூட அவள் அடி வாங்கியது

இல்லை... அந்தளவுக்கு அவள் தனது வேலையைத் திறம்படச் சரியாகச் செய்துவிடுவாள்...

அப்படிப்பட்டவளை, வேலையில் தவறே செய்யாத அவளை அடிக்க அவனுக்கு என்ன உரிமை இருக்கு... இயலாமையில் கோபமும் ஆத்திரமும் சேர்ந்து அவளைக் குமுற செய்தது...

"அபி... என்னம்மா உதட்டோரம் ரத்தம் வருது..." உடன் வேலை செய்யும் கனகம் பதறி போய் அவளது முகத்தைப் பற்ற...

அபிக்கு அப்போது தான் இரத்தம் வருவதே தெரிந்தது... கை விரல் வைத்து தொட்டு பார்த்தவள் விரலில் இரத்தம் ஒட்டி கொண்டது... அதைக் கண்டதும் இன்னமும் கண்கள் கரித்தது அவளுக்கு...

"என்னாச்சு அபி..."

நடந்ததை என்னவென்று அவள் கூறுவாள்... "கீழே விழுந்துட்டேன்..." என்றாள் சமாளிப்பாக...

"பொய் சொல்லாதே அபி..." என்ற கனகம் அவளது கன்னத்தைத் தொட்டு காட்டி, "விரல் தடம் பதிஞ்சு இருக்கு..."

"அது வந்து..." தான் அக்ஷயிடம் அடி வாங்கியதை அவமானமாய் நினைத்தவளால் அதை வெளியில் சொல்ல முடியவில்லை...

"இப்போ எம்.டி கூப்பிட்டாருன்னு தானே போன... அப்போ அடிச்சது அவர் தானா..." கனகத்தின் கேள்வியில் பொய் கூற இயலாதவளாய் நடந்ததைக் கூறியவள் கண்கள் கலங்கி கண்ணீரை சொட்டியது...

"தப்பு உன் பேரில் இல்லைங்கிறப்போ அவர் எப்படி உன்னை அடிக்கலாம்... நீ கவலைப்படாதே... நாங்க போய் இதை என்னன்னு கேட்கிறோம்..."

கனகம் கூறவும் அபிக்குப் பயம் பிடித்துக் கொண்டது... சும்மாவே அவளைப் பாடாய் படுத்துபவன் சந்தர்ப்பம்

கிடைத்தால் இன்னும் அதிகமாய் அவளைப் படுத்துவான்...

"வேண்டாம்க்கா... விடுங்க..."

"இதை இப்படியே விட முடியாது அபி... இன்னைக்கு நீ... நாளைக்கு எங்கள்ள யாராவது ஒருத்தர்... இதை இதுக்கு மேல தொடரவிட்டா தொழிலாளர்கள் நமக்குத் தான் ஆபத்து... அதை எல்லாம் ஆரம்பத்துலேயே கட்டுப்படுதிரணும்... நீ பேசாம இரு..."

அபி வேலை செய்த பகுதியில் இருந்த தொழிலாளர்கள் அவளுக்காக ஒன்று கூடி அக்ஷயின் அறையை முற்றுகையிட்டனர்...

மேலாளர் பதட்டத்துடன் அவனிடம் விசயத்தைக் கூற அதைக் கேட்டு அவனின் கோபம் அபி மீது இன்னமும் அதிகரித்தது...

'என்னைப் பத்தி தெரியாம அவ வேலையைக் காட்டிட்டா...' பல்லை கடித்தவன்,

"இப்போ என்ன வேணுமாம் அவங்களுக்கு..."

"உங்களை அபி கிட்ட சாரி கேட்க சொல்றாங்க..."

"வாட்... போயும் போயும் அவ கிட்ட போய்... நான் சாரி கேட்கணுமா... அதுக்கு வேற ஆளை பார்க்க சொல்லுங்க... இஷ்டம் இருந்தா வேலை பார்க்க சொல்லுங்க... இல்லை வேலையை விட்டுப் போகச் சொல்லுங்க... இவங்க போறதால எனக்கு ஒண்ணும் நஷ்டம் இல்லை..." ஆத்திரம் அடங்காத குரலில் கர்ஜித்தான்...

"நீங்க கேட்கலைன்னா அம்மா கிட்ட விசயத்தைக் கொண்டு போகப் போறோம்ன்னு சொல்றாங்க..."

துளசி பற்றிச் சொன்னதும் அவனது ஆத்திரம் சற்று மட்டுப்பட்டது... ஆனால் முழுவதும் குறையவில்லை...

அன்னையிடம் விசயம் தெரிந்தால் தேவையில்லாத அவனது விசயம் வெளியில் வந்து அவனை அவரிடத்தில்

காட்டி கொடுத்துவிடும்... அதற்குக் கூட அவன் பயப்படவில்லை... ‘ஆமாம் நான் அப்படித்தான்...’ என்று அன்னையிடம் அலட்சியமாய்க் கூறிவிட்டு அவனால் செல்ல முடியும்...

ஆனால் இதைப் பற்றி ஆதர்ஷுக்கு தெரிந்தால்...? சும்மாவே தங்கையை அடித்துக் கொடுமை செய்பவன் இதைக் கேள்விப்பட்டால் என்னாகும்... அவன் செய்த செயலால் அவனது தங்கையின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகுவதை அவன் விரும்பவில்லை...

'ஆமாம்... அந்த மாதிரி ஒருத்தன் கூட வாழ்றதுக்கு அனி வாழாமல் என் தங்கச்சியா வீட்டோட இருந்துட்டுப் போகலாம்...' அதே சமயம் ஆதர்ஷை நினைத்து கோபமும் எழுந்தது...

'அவரை எனக்குப் பிடிச்சு இருக்குண்ணா...' முகம் சிவக்க சொன்ன அனியின் முகம் அவனது மனக்கண்ணில் வந்து போனது...

கண்களை மூடி யோசித்தவன் அவளுக்காக அவளை வாழ வைக்க வேண்டும் என்பதற்காக அண்ணனாய் முடிவு எடுத்தான்...

"அபியை மட்டும் வர சொல்லுங்க..."

"சார்..." மேலாளர் இழுத்த இழுவையில் புரிந்து போனது அவனுக்கு...

அமைதியாய் எழுந்தவன் தனது அறையை விட்டு வெளியில் வந்தான்...

அங்குத் திரண்டு இருந்த தொழிலாளர்களைப் பார்வையால் அளவிட்டான்... அந்தப் பார்வை வட்டத்தில் அபியும் சிக்கினாள்...

அத்தனை நேரமும் சக தோழர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியாமல், இதைக் கண்டு அக்ஷய் எந்த மாதிரி அவளிடத்தில் பாய்வானோ என்று பரிதவிப்புடன்

நின்று கொண்டு இருந்த அபியின் மனநிலை அக்ஷயை கண்டதும் முற்றிலும் மாறிப் போனது... அதிலும் அவன் தெனாவெட்டாய் பார்த்த பார்வையைக் கண்டு அவளது உள்ளம் வெகுண்டது...

அவனை எதிர்த்து தன் சுண்டு விரலை கூட அசைக்க முடியவில்லையே என்று துயரத்தில் இருந்தவளுக்குக் கையில் சாட்டைக் கிடைத்தால் என்ன மாதிரி உணர்வாளோ அந்த மாதிரி ஒரு மனநிலையில் அவள் இருந்தாள்...

'நீ எதைச் செய்தாலும் தட்டி கேட்க முடியாதபடி இருக்கும் என் நிலையை உனக்கு நீ சாதகமா பயன்படுத்திக் கொண்டாய்... ஆனால் அது உண்மை இல்லை... இதோ எனக்காகப் போராடும் இந்தத் தோழர்களைப் பார்...' என்று ஒரு மகாராணியின் கர்வத்துடன் அவளது பார்வை அவனை முற்றுகை இட்டது...

அவளது பார்வை கண்டு ஒரு நொடி அவனது கண்கள் சுருங்கியது... அடுத்த நொடி அது பொய்யோ என்பது போல் இயல்பு நிலைக்கு மாறியது...

"உங்களுக்கு என்ன நான் இப்போ அபி கிட்ட சாரி கேட்கணும் அவ்வளவு தானே..." என்று கூட்டத்தைப் பார்த்து கூறியவன் அபியின் புறம் திரும்பியவன்,

"சாரி..." என்றான் பட்டும் படாமல்...

ஆனால் அதைச் சொல்வதற்குள் அவனது முகம் அவமானத்தில் சுருங்கி போனது... போயும் போயும் அவன் கால் தூசி பெறாத ஒருத்தியிடம் அவன் மன்னிப்பு கேட்பதா...? அவன் வாழ்க்கைச் சரித்திரத்தில் முதன் முறையாக நிகழ்ந்த இந்தக் கேவலமான நிகழ்வை அவன் அறவே வெறுத்தான்... ஆனாலும் தங்கைக்காக என்று எண்ணி பொறுத்துக் கொண்டான்... அந்தப் பொறுமைக்கு அவன் தங்கை தகுதி இல்லாதவள் என்று தெரிய வரும் போது அவனின் நிலை என்னவாகுமோ...?

அதுவே அபியின் காயப்பட்ட மனதுக்குப் போதுமானதாய் இருந்தது... உதட்டில் அலட்சிய புன்னகை உறைய அவனைப் பார்த்து இருந்தாள் அவள்...

அவன் மன்னிப்பு கேட்டதும் எல்லோரும் சென்று விட அபி அவன் அருகில் வந்தாள்...

"கத்தியின்றி ரத்திமின்றி என் விரல் நகம் கூட உன் மேல் படாமல் உன்னை அடித்து வீழத்திட்டேன் பார்த்தியா... எப்பவும் காலமும் நேரமும் உனக்குச் சாதகமா இருக்காது... இந்த மாதிரி சந்தர்ப்பம் அமையும் போது எல்லாம் உன்னை வலிக்க வலிக்க அடிக்காம விட மாட்டேன்..." அவனது அவமானம் சுமந்த முகத்தைத் திருப்தியுடன் பார்த்தவாறு கூறினாள்...

அவளது பேச்சில் இன்னமும் அவமானம் அடைந்தவன், "ரொம்ப ஆடாதே... அப்புறம் ஆள் அட்ரஸ் இல்லாம பண்ணிடுவேன்..." என்று அவள் முகத்துக்கு நேரே ஆட்காட்டி விரலை அசைத்து உறுமியவன்,

"மறக்க மாட்டேன்டி... இந்த மன்னிப்பை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்... இதுக்கு எல்லாம் என்கிட்ட நல்லா அனுபவிக்கப் போற..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராமல் தனது அறைக்குச் சென்றான்...

'அப்படி என்ன செஞ்சிற முடியும் உன்னால... என்ன என் அண்ணனை காட்டி நீ மிரட்டுவ... நீ என் அண்ணனை சொன்னா எனக்கு உன்னோட இன்னொரு பக்கம் தெரியும்... அதைப் புட்டு புட்டு ஊர் முழுசும் தண்டோரா போட்டுற மாட்டேன்... போடா போ... உன்னால என்னை ஒண்ணும் பண்ண முடியாது...' மனதுக்குள் நினைத்தவள் தனது வேலையைப் பார்க்க சென்றாள்...

அன்று மாலை வரை அங்கே இருந்தவன் மீண்டும் அவளைத் தனது அறைக்குக் கூப்பிட்டு அனுப்பினான்...

'ச்சே இவனோட ஒரே ரோதனையா போச்சு...' மனதில் அவனை அர்சித்தபடி அவன் முன் வந்து நின்றாள்...

"உன் அண்ணனும் என் தங்கையையும் தனிக்குடித்தனம் வைக்கலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்..." என்றவன் அவளது முகத்தை ஆழ்ந்து பார்த்தான்...

காலையில் அவன் அடித்த அதிர்ச்சியை விடப் பெரிய அதிர்ச்சி இது... மனம் கலங்க நின்று இருந்தாள் அவள்... காலையில் நடந்த செயலுக்கு அவளைப் பழிக்கு பழி வாங்கிவிட்டான்...

"அதுக்கு உன் அண்ணனை நீ தான் சம்மதிக்க வைக்கணும்..." அடுத்தக் குண்டை சத்தம் இல்லாமல் அவள் தலையில் போட்டான்... இதற்கு அவளை அவன் உயிருடன் கொன்று இருக்கலாம்...

"அப்படிச் சம்மதிக்கலைன்னா...?" என்று நிறுத்தியவன் கேள்வியாய் பார்த்தான் அவளை...

"நான் என்ன செய்வேன்னு உனக்கே தெரியும்..." என்றவனின் கழுத்தை நெறித்துக் கொன்றால் தான் என்ன என்று தோன்றியது...

"இதை என்னால் செய்ய முடியாது... என் அண்ணனை பிரிந்து என்னால் இருக்க முடியாது..." என்றவளை கிண்டலாய் பார்த்தவன்,

"ஓ... அப்படி எத்தனை நாள் உன் அண்ணன் கூட நீ இருப்ப... எப்படியும் கல்யாணமாகி அடுத்த வீட்டுக்குப் போகப் போறவள் தானே..."

"அது பத்தி உனக்கு என்ன கவலை... கல்யாணமாகி போறேன் இல்லை வீட்டோட மாப்பிள்ளையா பார்க்கிறேன்... உனக்கு என்ன வந்தது..."

"நீயே வீட்டோட மாப்பிள்ளையா பார்க்கும் போது... என் தங்கைக்கு நான் அப்படிப் பார்ப்பதில் என்ன தவறு..." அவள் பதிலாலே அவளைத் திரும்ப அடித்தவன்,

"எதுக்குத் தேவை இல்லாத பேச்சு... போய்ச் சொன்னதைச் செய்..." என்றவன் அறையை விட்டு வெளியேறினான்...

அபியோ செயல் இழந்து போனவளாய் நின்று இருந்தாள்... தனது கை கொண்டு தனது உயிரை மாய்க்க சொல்லும் அரக்கனின் செயலில் அவள் மனம் நொந்து போனது...

அக்ஷயின் முடிவு ஆதர்ஷிடம் தெரிவிக்கப்பட்டது... இதைக் கோபிநாத், துளசியால் கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை... இதில் ஆதர்ஷ் எப்படி ஏற்றுக் கொள்வான்... தனிக்குடித்தன யோசனையைப் பற்றிக் கேட்டதும் அவன் முகம் இறுகி போனது...

"என்னைப் பத்தி தெரிஞ்சு தானே பொண்ணு கொடுத்தீங்க... அப்புறம் எதுக்கு இந்தப் பேச்சு எல்லாம்... என்னால் அபி, பாட்டியை விட்டுட்டு ஒரு போதும் உங்க பின்னாடி வர முடியாது... என்னை விட்டா அவங்களுக்கு வேறு யாரும் இல்லை..." என்றவன் அனியிடம்,

"என் கூட வர்றதா இருந்தா வா... இல்லை உங்க வீட்டில் நீ இருந்துக்கோ..." என்று சொன்னவன் அவளின் பதிலுக்காகக் காத்து இருந்தான்...

அனிக்கு அப்போது தான் ஆதர்ஷை பத்தி புரிந்தது... தான் நினைப்பது போல் அவன் அப்பாவி இல்லை... அவனுக்குள்ளும் ஒரு அந்நியன் ஒளிந்து இருப்பதை உணர்ந்தாள்... அது வெளிப்பட்டால் தன் பாடு திண்டாட்டம் தான் என்று உணர்ந்தவள்,

"இல்ல நான் வர்றேன்..." அவசரமாய்ச் சொன்ன மனைவியை ஆதூரத்துடன் பார்த்த ஆதர்ஷ் அக்ஷயை நிமிர்ந்து பார்த்து,

"உங்க தங்கையை நான் நல்லா வச்சுக்குவேன்... நீங்க கவலைப்பட வேண்டாம்..." என்றான்...

'அதான் நீ வச்சிக்கிற லட்சணத்தைத் தான் நான் பார்த்தேனே...' எரிச்சலுடன் நினைத்தவனிடம் அவனது தந்தை,

"அக்ஷய்... மாப்பிள்ளை தான் அவ்வளவு சொல்றாரே... கொஞ்சம் புரிஞ்சி நடந்துக்கோ..." எச்சரிக்கும் தொனியில்

அவர் பேசியதும் வேறுவழியின்றி அவன் அமைதியானான்...

அதற்கு மேல் ஒரு நொடி கூட ஆதர்ஷ் அங்கு இருக்கச் சம்மதிக்கவில்லை... உடனே தன் வீட்டிற்குக் கிளம்பினான்... அக்ஷய் தான் இருவரையும் அவர்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டான்...

அனி வீட்டினர் கொடுத்த சீர் வரிசைகள் அத்தனையும் மறுத்துவிட்டான் ஆதர்ஷ்... ஏனோ அக்ஷயின் சில வார்த்தைகளில் அவனது தன்மானம் அடிப்பட்டுப் போனது...

அண்ணனும் அண்ணியும் வீட்டிற்கு வந்ததை நம்ப முடியாமல் பார்த்த அபி வேகமாய் ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்தாள்... அவர்களோடு உள்ளே நுழைந்த அக்ஷயையும் கேலியாய் பார்க்க தவறவில்லை அவள்...

தங்கையை விட்டு விட்டு அக்ஷய் போகும் போது அவனிடம் அபி, "என்னையும் என் அண்ணனையும் பிரிக்க முடியாதுன்னு இப்பவாவது உனக்குப் புரிஞ்சதா..." சீண்டும் குரலில் கேட்டவளை கண்டு அவனால் முறைக்க மட்டுமே முடிந்தது...

விருட்டென்று அவன் காரை கிளப்பிய வேகத்திலேயே தெரிந்தது அவனது கோபத்தின் அளவு... அதில் அபிக்குச் சிரிப்புப் பொங்கியது...

மறுநாள் காலையில் எப்போதும் போல் எழுந்த அனி நேரே சமையலறைக்கு வந்தாள்... அவளுக்குச் சமையல் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் ஆதர்ஷ் வீட்டில் தனது நடிப்பிற்கான பிள்ளையார் சுழியை அங்கிருந்து துவங்க எண்ணினாள்...

"என்ன அண்ணி அதுக்குள்ள எழுந்திருச்சுட்டீங்க...? காபி குடிப்பீங்களா இல்லை..." சமையல் செய்தபடி அபி கேட்க...

"காபி போதும்... நானே கலந்துக்கிறேன்..." என்றவளை தடுத்த அபி,

"உங்களுக்கு இது எல்லாம் பழக்கம் இருக்காது அண்ணி... நான் கலந்து தர்றேன்..." என்றவள் காபி கலந்து அனி கையில் கொடுத்தாள்...

அந்நேரம் அங்கு வந்த ஆதர்ஷ் தங்கையிடம், "என்ன சொல்றா உன் அண்ணி..." என்று கேட்டவனின் பார்வை மனைவி மீது இருந்தது...

'இது என்ன எப்ப பார்த்தாலும் இப்படிப் பார்த்துக்கிட்டு...' அவனது பார்வையில் எரிச்சல் அடைந்தவள் காபி பருகுவது போல் தலையைக் குனிந்து கொண்டாள்...

"சும்மா தான் பேசிக்கிட்டு இருந்தோம்..." என்ற அபி சமையலில் கவனத்தைப் பதிக்க...

ஆதர்ஷ் எப்போதும் போல் அவளுக்கு உதவி பண்ண வந்தான்...

"வா அனி... நீ மட்டும் ஏன் சும்மா இருக்க... நான் பாத்திரம் தேய்ச்சு தர்றேன்... நீ கழுவி போடு..." என்று மனைவியை அழைக்க...

அவள் 'பே' என்று விழித்தாள்...

"நானா..." முகத்தைச் சுளித்தவளை பார்த்தவன்,

"நீ தான்... வா..."

"ஐயோ... இது வேலைக்காரங்க வேலை... இங்கே வேலைக்கு ஆள் இல்லையா..." என்றவளை கண்டிப்புடன் பார்த்தவன்,

"அனி... இப்படிப் பேசறது ரொம்பத் தப்பு... அவங்க வசதி இல்லாததால வேலைக்கு வந்து இருக்காங்க... நீ வசதியா இருக்கிறதால அவங்களை வேலை வாங்கிற... இதே இது உன் வசதி குறையும் போது உனக்குமே இந்த நிலை வரலாம்... பணம் நிரந்தரம் இல்லை... இதோ அபி எல்லா வேலையும் பார்ப்பா... அதுக்காக அவளைக் கேவலமா பேசுவியா... நான் கூடப் பாத்திரம் தேய்க்கிறேன் அதனால

என்னையும் கேவலமா பேசுவியா... வா... வந்து பாத்திரத்தை கழுவு..."

அவன் பேசியதை கண்டு அனியின் உண்மை குணம் தலை தூக்கியது...

"எனக்கு அப்படி ஒரு நிலை வராது... அப்படி வரவும் என் அண்ணன் விட மாட்டாரு..." அவளது பேச்சில் ஆதர்ஷ், அபியின் முகம் மாறியது...

"அனி... நீ அக்ஷய் தங்கச்சி இல்லை... என்னோட மனைவி... அப்போ எனக்கு ஏத்த மாதிரி தான் நீ வாழ பழகிக்கணும்..." இறுகிய குரலில் கூறியவனின் முகம் கோபத்தைத் தத்து எடுத்து இருந்தது...

"அண்ணி பாவம்ண்ணா... அவங்களுக்குப் பதிலா நான் கழுவுறேன்..." என்று அண்ணனிடம் கூறிய அபி,

"அண்ணி... நீங்க போங்க... நாளையில் இருந்து வேலைக்கு ஆள் வந்திடும்... கல்யாண வேலை அதிகமா பார்த்ததால அவங்க லீவு எடுத்துட்டு போய்ட்டாங்க... நாளைக்கு வந்திடுவாங்க..."

"அபி இதில் நீ தலையிடாதே..." தங்கையிடம் கறாராய் கூறியவன்,

"நீ என் மனைவியா இங்கே இருக்கணும்ன்னா எல்லா வேலைகளும் செஞ்சு தான் ஆகணும்... இல்லை இப்போ வேணும்ன்னாலும் உன் வீட்டுக்கு போகலாம்..."

"அண்ணா என்ன இது... பாட்டி காதில் விழுந்தா என்ன நினைப்பாங்க..." அபி பதற...

ஆதர்ஷின் அழுத்தமான குணத்தைக் கண்ட அனி அரண்டு விட்டாள்... முதன் முறையாய் அவனைத் தான் திருமணம் செய்தது தவறோ என்று கூட நினைத்தாள்... தனது நாடகம் அவனிடம் செல்லுபடியாகுமா என்று அவளுக்கு உள்ளுக்குள் யோசனையாய் இருந்தது...

'எல்லாம் கொஞ்ச காலம் தான் அதன் பிறகு யார் தடுத்தாலும் என் அண்ணனே இவனுடன் வாழ விட மாட்டான்...' மனதுக்குள் நினைத்தவள் ஒன்றும் பேசாது அவன் அருகில் வந்து நின்றாள்...

அமைதியாய் வந்து நின்றவளை கண்டு, "வேலை செய்யாமல் நின்னுக்கிட்டு இருந்தா எப்படி...?" ஆதர்ஷ் கேட்க...

"நீங்க தேய்ச்சுக் கொடுத்தா தானே நான் கழுவி வைக்க முடியும்..." கன காரியமாய் அவனையும் வேலை வாங்கியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"சரி சரி... வா..." என்றவன் அங்குக் கழுவ கிடந்த பாத்திரத்தை கையில் எடுத்தான்...

இருவருக்கும் தனிமை கொடுக்க எண்ணிய அபி, "அண்ணா... சமையல் முடிச்சிட்டேன்... வீட்டை பெருக்கிட்டு வந்திடுறேன்..." என்றவள் அவனின் பதிலை எதிர்பாராமல் வெளியேறினாள்...

தண்ணீரை முழுவதும் திறந்து விட்டுக் கொண்டு பாத்திரத்தை அலசிய மனைவியின் வெண்டை பிஞ்சு விரல்களைப் பார்த்த ஆதர்ஷ்க்குப் பாவமாகத் தான் இருந்தது... ஆனால் இந்த மாதிரி சின்னச் சின்ன வேலைகள் செய்வதில் தப்பு இல்லையே...

ஒன்றும் பேசாது வேலையை முடித்தவன் தங்களது அறைக்கு வந்ததும் மனைவியின் கையைப் பற்றி நிறுத்தினான்...

"அனி... கை வலிக்குதா..." அவளின் கையை உயர்த்திப் பிடித்து உள்ளங்கையை விரித்தான்...

அவனது மென்மையான சொல்லா செயலா ஏதோ ஒன்று அவளை அவனை நிமிர்ந்து பார்க்க தூண்டியது...

ஆதர்ஷ் கண்ணில் வழிந்த காதல் அவளது இரும்பு மனதையும் சற்று அசைத்துப் பார்க்கத்தான் செய்தது...

அவள் காதலன் ரஞ்சித் கண்ணில் கூட இத்தனை காதலை அன்பை அவள் பார்த்தது கிடையாது... அவளையும் அறியாமல் அவனது கண்ணோடு கண் கலந்து நின்றாள்...

"சாரிடா..." என்றவன் தனது இதழை அதில் பதித்தான்...

அவனது மீசை முடி உராய்ந்ததில் அவளது உள்ளங்கை குறுகுறுத்தது... அடி வயிற்றில் இருந்து சில்லென்று எழுந்த உணர்வானது அவளது நாடி நரம்பில் எல்லாம் ஓடி இதயத்தைக் கவ்வி இழுத்தது... அந்த உணர்வை தாங்க முடியாதவள் மெல்ல அவன் பிடியில் இருந்து கையை உருவி கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்...

ஆதர்ஷ் சிரித்துக் கொண்டே குளியலறைக்குள் புகுந்தான்... அவளோ உள்ளங்கையைப் பார்த்தபடி அமர்ந்து இருந்தாள்...

எத்தனையோ முறை ரஞ்சித் அவளிடம் அத்துமீறி நடந்து இருக்கிறான்... அப்போது எல்லாம் தோன்றாத இந்த உணர்வு இப்போது ஏன் தோன்றுகிறது... அவளுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

அது தான் காமத்துக்கும், காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்பதை அந்தப் பேதை பெண் இன்னும் உணரவில்லை... ரஞ்சித் அவளுக்குக் காதலை உணர்த்தவில்லை காமத்தை அல்லவா உணர்த்தினான்... அதில் உடல் தேவை மட்டுமே இருந்தது...

ஆனால் ஆதர்ஷ் காதலை அல்லவா உணர்த்துகிறான்... இது மனம் சார்ந்தது... அவனது தேடல் அவளது மனம் மட்டுமே... உடல் அல்ல... இதை எல்லாம் விட மஞ்சள்கயிறு செய்யும் மாயமும் இதில் அடங்கி இருக்கிறது... இதை எல்லாம் அவள் உணர ரஞ்சித் என்னும் மாயவலையில் இருந்து வெளிவர வேண்டும்...

"என்ன யோசனை பலமா இருக்கு...? இப்படியே தப்பிச்சு உங்க வீட்டுக்கு போகலாம்ன்னா..." திடுமென ஒலித்த

கணவனின் குரலில் திடுக்கிட்டவள் பதட்டத்துடன் எழுந்தாள்...

"தப்பிச்சு போக நினைச்சாலும் நான் விட மாட்டேன்... பின்னாலே வந்து கூட்டிட்டு வந்திடுவேன்..." அவனது குரலில் தன் குழப்பத்தில் இருந்து வெளிவந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

'நான் போகத் தான் போறேன்... உன்னை விட்டு என் ரஞ்சியிடம்...' திடமாய் நினைத்தவள் சற்று முன் நினைத்து பார்த்ததைக் காற்றில் பறக்க விட்டாள்...

"எங்கே போனாலும் நீ என் கிட்ட தான் வரணும் அனி..." என்று அவளின் மனதை கணித்தவனாய் கூறியவனைக் கண்டு அவள் பயத்தில் முழித்தாள்...

அவளது அகன்ற விழியில் தன்னைத் தொலைத்த ஆதர்ஷ் அவளது இடையில் கை கொடுத்துத் தன்னருகில் இழுக்க அவள் அவனது நோக்கம் புரிந்து அவன் நெஞ்சில் கை வைத்து தடுத்தாள்...

அவளது கையை விலக்கியவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து அவளது கன்னத்தில் மென்மையாய் முத்தமிட்டான்... முத்தத்தில் கூட இத்தனை மென்மையை ஒருவனால் காட்ட முடியுமா... அவளால் அந்நேரம் ரஞ்சித்தின் ஆவேச முத்தத்தை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை... ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை...

“இந்த மாதிரி சின்னச் சின்னதாய் தொடுறதுல தப்பு இல்லை ஹனி...” அவள் காதுக்குள் ரகசியம் பேசியவனின் குரல் அவளை வசியம் செய்யத் தான் செய்தது...

அவனது ‘ஹனி’ என்ற அழைப்பில் தன்னிலை அடைந்தவள் அவனது அருகாமையில் செயல் இழந்து போகும் தன் நிலையை மனதுக்குள் சபித்தவளாய்,

“என் பேரு ஹனி இல்லை... அனி...” என்றாள் தீவிர முகபாவத்துடன்...

“அது எங்களுக்கும் தெரியும்... இந்த மல்கோவா கன்னத்துக்கு முத்தம் கொடுக்கும் போது தான் தெரிஞ்சது நீ எவ்வளவு ஸ்வீட்டானவள்ன்னு... அதனால எனக்கு மட்டும் நீ ஹனி தான்...”

அவனது விளக்கத்தில் மந்திரித்து விட்டது போல் நின்று இருந்தவள் கன்னத்தில் கை கொண்டு தட்டியவன்,

“இப்போ எனக்கு நேரமாச்சு... நைட்டு வந்து விளக்கமா பதில் சொல்றேன்...” கண்சிமிட்டியபடி சொன்னவன் மருத்துவமனைக்குத் தயாரானான்...

**********************

காரில் போய்க் கொண்டு இருக்கும் போது ரஞ்சித்தின் கண்ணில் விக்டர் விழுந்தான்...

'இத்தனை நாளா உன்னைத் தான்டா தேடிட்டு இருந்தேன்... வசமா மாட்டினடா...' விக்டரின் காரை பின் தொடர்ந்தான் ரஞ்சித்...

நகரத்தில் இருந்து சற்று தள்ளி புறநகர் பகுதியில் இருந்த அந்தப் பெரிய வீட்டின் முன் விக்டரின் கார் நின்றது... வாயிலுக்கு வந்து வரவேற்ற நிஷாவை கண்டதும் ரஞ்சித் மது அருந்திய மந்தி போலானான்...

அவளது வாளிப்பான மேனி அவனின் போதையை இன்னமும் தூண்டியது...

'ப்யூட்டி உன்னை அனுபவிக்கும் நாள் வெகு அருகில்...' மனதில் நினைத்தபடி விக்டர் வீட்டின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு கிளம்பினான்...

"விக்டர்... உங்களுக்குப் பிடிச்ச டிஷ் பண்ணி இருக்கேன்..." என்று மலர்ச்சியுடன் கூறிய நிஷா அவனது தட்டில் மஷ்ரூம் ப்ரைட் ரைசும், கோழி குருமாவையும் பரிமாறினாள்...

ஒன்றும் பேசாது உணவு அருந்தியவனின் தட்டில் அவனின் தேவை அறிந்து உணவு பரிமாறியவள், "இன்னும்

கொஞ்சம் போட்டுக்கங்க..." என்று உணவை வைக்க... அவளது அன்பில் அவனது கண்கள் பனித்தது...

பெற்றோரை இழந்த அவனுக்கு இதுநாள் வரை யாரும் இப்படிப் பார்த்து பார்த்து பரிமாறியது இல்லை... அவனுக்கும் வயிறு என்று உண்டு... அதில் பசி என்று ஒன்று உண்டு என்பதைப் பற்றி யாரும் அக்கறை காட்டியது இல்லை... ஆனால் இந்த நிஷா அவனைப் பார்த்த நாள் முதல் இன்று வரை அவனின் மேல் கொண்ட அக்கறையை எள்ளளவும் மாற்றிக் கொள்ளவில்லை...

"நிஷா..." அவனது அழைப்பில் அவனைப் பார்த்தவளின் கையைப் பற்றித் தன் அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தவன் தனது தட்டில் இருந்து ஒரு கவளத்தை எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான்...

அவனது அந்தக் கரிசனையில் அவள் அப்படியே உடைந்து போனாள்...

"விக்டர்..." அவனது தோளில் சாய்ந்தவளின் கண்களில் கண்ணீர் துளிகள்...

அவளுக்கு என்று உறவுகள் இருந்த போதும் மனதில் அநாதை போல் உணர்ந்தவள் இன்று தனக்கு என்று விக்டர் இருக்கிறான் என்ற மகிழ்ச்சியில் அவளது மனம் நெகிழ்ந்தது...

"எனக்கு யாருமே இல்லைன்னு நினைச்சிட்டு இருந்தேன் விக்டர்... இப்போ எனக்குச் சந்தோசமா இருக்கு... நான் இறந்தா அநாதை பிணமா தான் போவேனோன்னு கவலைப்படுவேன்... இப்போ அந்தக் கவலை இல்லை எனக்கு..."

"லூசு மாதிரி பேசாதே நிஷா..." அவளை அதட்டினான் அவன்...

"லூசு தான் ஆனால் என் விக்டர் மேல..." கண்சிமிட்டி சிரித்தவளை கண்டு அவனது உள்ளம் வலித்தது...

ஒன்றும் பேசாது அவளுக்கு உணவை ஊட்டியவன் அவள் உண்டு முடித்ததும் இருவருமாகச் சேர்ந்து உணவு மேசையைச் சுத்தம் செய்தவர்கள் படுக்கையறைக்கு நுழைந்தனர்...

விக்டர் நெஞ்சில் தலை சாய்ந்து படுத்தவள், "விக்டர்..." என்று அழைக்க... அதைக் காதில் வாங்காதவனாய் படுத்து இருந்தான் அவன்...

"விக்டர்..." மீண்டும் அவள் அழைக்க...

"ம்..." என்றவன் அசையாது படுத்து இருந்தான்...

அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது உணர்வில்லாத தன்மையைக் கண்டு தானே அவனிடம் நெருங்கினாள்...

"வேண்டாம் நிஷா..." என்று அவளின் செயலை தடுத்தவன் தனது சொல்லுக்கு மாறாக அவளை அணைத்துக் கொண்டான்...

"இது புதுசா இருக்கே... என்னோட விக்டர் இந்த மாதிரி இருந்து நான் பார்த்தது இல்லையே... என்னைப் பார்த்ததும் புயல் வேகத்தில் ஆக்கரமிக்கும் விக்டரோட வேகம் எங்கே போச்சு..." பூவாய் மலர்ந்து சிரித்தவளை கண்டு,

"அந்த விக்டருக்கு நிஷாவோட உடல் தேவையாய் இருந்தது... ஆனா இந்த விக்டருக்கு நிஷாவோட மனசு தேவையாய் இருக்கு... தருவியா நிஷா..."

அவன் சொன்னதைக் கேட்டு நம்ப முடியாமல் பார்த்தவள் கண்கள் கலங்கியது... எத்தனை நாள் தவம் இது...

"விக்டர்... உண்மையாவா...?" அவளின் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பு, ஆசை எல்லாம் அவனை அடியோடு வெட்டி வீழ்த்தியது...

"ஐ லவ் யூ நிஷா..." என்றான் உண்மையாய் காதலாய்...

அவனது மனதில் தனக்கு என்று ஒரு இடம் கொடுக்க மாட்டானா என்று அவள் எத்தனை முறை ஏங்கி

இருப்பாள்... இன்று தனது இதயம் முழுவதையும் அவள் வசம் ஒப்படைத்தவனைக் கண்டு அவளது கண்ணில் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது...

"விக்டர்..." என்று அவனை அணைத்து கொண்டவள், "எனக்கு இது போதும்... இந்த நொடி செத்துருன்னு சொன்னா நான் செத்துருவேன்..." அதில் இருந்த காதலை உணர்ந்தவனின் அணைப்பும் இறுகியது...

"இன்னொரு தடவை இப்படிப் பேசாதே நிஷா... ரொம்பக் கஷ்டமா இருக்கு... நாம ஆயிரம் வருசம் சந்தோசமா வாழணும்..." அவனது வார்த்தையில் நிஷாவின் உள்ளம் நெகிழ்ந்தது...

"விக்டர்..." என்று ஆசையுடன் அவனது இதழ் நோக்கி குனிந்தவளின் செய்கையை அவன் தடுக்கவில்லை...

சிறிது நேரம் கழித்து நிமிர்ந்தவள், "விக்டர் என்னாச்சு உங்களுக்கு... ஆர் யூ ஓகே...?" அவனின் சலனம் இல்லாத நிலையைக் கண்டு கேள்வியாய் பார்த்தாள்...

அவளின் கண்களை உற்று பார்த்தவன், "இவ்வளவு நாள் உனக்கு மனசுன்னு ஒண்ணு இருப்பதை நான் புரிஞ்சிக்கலை... உன் உடலை அறிஞ்ச அளவுக்கு உன் மனசை நான் அறியலை... இப்போ உன் மனசை நான் முழுசா தெரிஞ்சிக்கணும்... உன்னைத் திகட்ட திகட்ட காதலிக்கணும்... முதல்ல இருந்து வாழ்க்கையைத் தொடங்கணும்..." என்று ஆசையாய் சொன்னவனின் வார்த்தைகள் அந்தப் பெண்ணின் மனதை கரைத்தது என்றால் மிகையில்லை...

“நிச்சயம் விக்டர்...” அவனை அணைத்து கொண்டாள் நிஷா...

துயரம் மட்டுமே வாழ்க்கையாக இது நாள் வரை அனுபவித்து வந்த இருவருக்குமே இனி வாழ்க்கை சந்தோசமாய்ச் செல்லும் என்ற நம்பிக்கை துளிர்த்தது...

**************************

நாட்கள் அதன் பாட்டிற்கு விரைந்து சென்றது... டெக்ஸ்டைல் மில் பக்கம் தலை காட்டாத அக்ஷய் இப்போது எல்லாம் அடிக்கடி வந்தான் அபியை குதறிவிடும் நோக்கில்... அவன் எப்போதும் அபியை ஏதாவது குற்றம் கூறி அவளைக் கடிந்து கொண்டே இருந்தான்... எதற்கும் சளைக்காமல் பதிலடி கொடுத்தவளை கண்டு அவனின் ஆத்திரம் அதிகரித்தது தான் மிச்சம்... மற்றபடி அவளை அடக்க அவனால் முடியவில்லை...

அபியை பழிவாங்குவதற்கான சந்தர்ப்பத்திற்காக உறுமீன் தேடி காத்திருக்கும் கொக்கு போல் அக்ஷய் காத்திருந்தான்... அவனுக்கான சந்தர்ப்பம் வெகு சீக்கிரத்தில் வந்தது...

ஆம்... ஆதர்ஷ் அபிக்கான மணமகனை தேடி கண்டுபிடித்து இருந்தான்...

அன்று அலுவலகம் முடிந்ததும் அபி அக்ஷய் முன் வந்து நின்றாள்... அவள் வந்து நின்றது அறிந்தும் சாவகசமாய் நிமிர்ந்தவன் அலட்சியமாய்,

"என்ன...?"

"நாளைக்கு எனக்கு லீவு வேணும் சார்..." அவள் சம்பந்தப்பட்ட எந்த விசயமும் அவனிடத்தில் மட்டும் கேட்கப்பட வேண்டும் என்பது அவனது எழுதப்படாத சட்டம்...

"ஏன்...?" அதில் கடுப்பு ஏறியது அவளுக்கு...

"நாளைக்கு என்னைப் பெண் பார்க்க வர்றாங்க..."

அவள் சொன்னதைக் கேட்டு அவனது விழிகள் அவனையும் மீறி ஆச்சிரியத்தில் விரிந்தது... அவளை மேலும், கீழும் அளவிடுவது போல் பார்த்தவன் உதட்டை பிதுக்கினான் இளக்காரமாய்...

"போயும் போயும் உன்னைப் போய்ப் பொண்ணு பார்க்க வர்றாங்களா... பாவம் அந்த அப்பாவி... அவனுக்கு என்

ஆழ்ந்த அனுதாபங்கள்... வந்து பார்த்தா தான் தெரியும் நீ பெண் இல்லை ராட்சசின்னு..." அவனது உதடுகள் துடித்தது அடக்கப்பட்ட சிரிப்பில்...

அவனது வார்த்தைகள் அவளுக்குக் கோபத்தை உண்டு பண்ண...

"சாதாரண மாப்பிள்ளை இல்லை... அமெரிக்க மாப்பிள்ளை... சாப்ட்வேர் இன்ஜினியர்..." என்றாள் பெருமிதமாய்...

"ஓ..." போலியாய் வியந்தவனைக் கண்டு,

"பின்னே என் அண்ணனை உன்னை மாதிரி நினைச்சியா... எனக்காக அமெரிக்கா மாப்பிள்ளையைத் தேர்வு பண்ணி இருக்கான்..." அண்ணனை நினைத்து பெருமையாய் சொன்னாள்...

அதில் அவனது முகம் கறுத்தது... தன்னை இந்த நிலைக்குத் தாழ்த்திய தங்கை மீது சிறிது கோபம் கூட எழுந்தது...

"பெர்மிசன் கொடுக்க முடியாது..." நிர்தாட்சண்யமாய் மறுத்தான் அவன்...

"அப்ப சரி... நான் அத்தை கிட்ட பேசி பெர்மிசன் கேட்டுக்கிறேன்..." என்று கூறியவளை கண்டு அவனால் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது...

"லீவு எடுத்து தொலை..." என்று சொன்னவனை அலட்சியமாய்ப் பார்த்தவள் அங்கிருந்து வெளியேற அவனது மனம் உலைக்களமாய்க் கொதித்தது...

'உனக்குக் கல்யாணமா... அதுவும் அமெரிக்க மாப்பிள்ளையா...? பத்தாவது படிச்ச உனக்குச் சாப்ட்வேர் இன்ஜினியர் புருசன் கேட்குதா...? நான் இருக்கும் வரை அது நடக்காது... நடக்கவும் விட மாட்டேன்... கடைசி வரை உன்னை முதுகெலும்பு இல்லாத கோழையாகத் தான் வைத்திருப்பேன்... எப்போதும் நீ என் அடிமை தான்...

உனக்கு என்று எந்தவித ஆசையும் இருக்கக் கூடாது... அப்படியே இருந்தாலும் அதை முளையிலேயே கருக வச்சிருவேன்...' என்று மனதில் வன்மமாய் நினைத்தவன் அதற்குச் செயல் வடிவம் கொடுக்கத் தயாரானான்...

பூக்கும்...

அக்ஷய் முன் நின்று கொண்டு இருப்பது ஏனோ முள் மேல் நின்று கொண்டு இருப்பது போல் பெரும் அவஸ்தையாக இருந்தது அபிக்கு... காலையில் வேலைக்கு வந்தவுடன் அவளை அழைத்தவன் ஒன்றும் பேசாது தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பது கண்டு அவளுக்கு எரிச்சலாக இருந்தது...

அவளை உற்று நோக்கிய அக்ஷய் குபீரென்று வாய்விட்டுச் சிரித்தான்... மேலும் மேலும் சிரித்தவனின் சிரிப்பு அந்த இடி சத்தத்தை ஒத்ததாய் இருந்தது... ஆனால் கம்பீரமாய் அழகாய் இருந்தது... அபி அவனது சிரிப்பை கண்டு அசந்து போய்விட்டாள்... ஆனாலும் 'என்னவானது இவனுக்கு...?' என்ற கேள்வி மனதிற்குள் எழுந்தது...

"என்ன விடிந்தும் விடியாததுமாய் முதல் ஆளாய் வேலைக்கு வந்து இருக்க...?" என்று அக்ஷய் கேலியாய் கேட்ட போது கூட அவளுக்கு ஒன்றும் உறைக்கவில்லை...

"வேலை இருந்துச்சு வந்தேன்..." என்றாள் சாதாரணமாக...

"அப்போ மாப்பிள்ளை பார்க்கும் வேலை என்னாச்சு...? நேத்து யாரோ 'என்னைப் பெண் பார்க்க வராங்க லீவு வேணும்ன்னு' என் கிட்ட கேட்டதாய் நியாபகம்... அது நீங்க தானே மிஸ். அபி...?" கிண்டலாய் அவன் வினவும் முன்பே அவனது உதடுகள் சிரித்தது நக்கலாய்...

இப்போது அபிக்குப் புரிந்தது அவனது கேலி, கிண்டல் எல்லாம்...

இன்று பெண் பார்க்க வருவதாய்ச் சொல்லி இருந்த மாப்பிள்ளை வீட்டார் கடைசி நேரத்தில் தங்களால் வர இயலவில்லை என்று கூறிவிட்டனர்... அதே சமயம் அடுத்து எப்போது வர போகிறோம் என்றும் உறுதியாய் கூறவில்லை... அப்போதே தெரிந்துவிட்டது அவர்கள் என்றுமே பெண் பார்க்க வர போவது இல்லை என்று...

ஆதர்ஷும், கோமதி அம்மாளும் வருத்தப்பட்ட போது கூட அபி ஒன்றும் வருத்தப்படவில்லை...

"இது இல்லைன்னா வேறு இடம்... வீணாய் கவலைப்பட வேண்டாம்..." என்று அவர்களுக்கு ஆறுதல் அளித்தவள் வேலைக்குக் கிளம்பி வந்துவிட்டாள்...

இப்போது அக்ஷய் அந்த விசயத்தை அவளிடம் வினவிய போது அதில் இருந்த ஏளனம் அவளை அதைச் சாதரணமாய் எடுத்துக் கொள்ள விடவில்லை...

"அது என் சொந்த விசயம்..." என்றாள் பட்டென்று...

அவளை ஒரு கணம் உற்று நோக்கியவன், "சொந்த விசயம்... ம்..." என்றவன், "என் தங்கைக்கு நான் பார்த்த மாப்பிள்ளையை விட நல்ல மாப்பிள்ளையாய் உன் அண்ணன் உனக்குப் பார்த்து இருப்பதாய் என்னிடம் ஆணவமாய்ச் சொல்லிட்டு போனீயே... இப்போ என்னாச்சு...?" இரு புருவத்தையும் உயர்த்தி அவளைப் பார்த்து வினவியவன்,

"உன்னைப் பார்க்காமலேயே உன்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டானாமே அந்தச் சாப்ட்வேர் என்ஜினியர்..." சொல்லும் போதே அவனது உதடுகள் துடித்தது அடக்கப்பட்ட சிரிப்பில்...

அவனது கேலி பேச்சில் அவளுள் ஏதோ எச்சரிக்கை மணி அடித்தது... யோசனையாய் அவனைப் பார்த்தாள்... பின்பு ஏதோ ஒன்று புரிபட உதடுகள் உணர்ச்சியில் துடிக்க,

"இது... உன் வேலை தானா...?" கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

தன்னை அவள் புரிந்து கொண்டாள் என்றவுடன் அக்ஷய் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து அவளைத் தெனாவெட்டாய் பார்த்தான்...

"என்னைப் பத்தி கணிக்கிறதுல நீ எப்பவுமே ஸ்மார்ட் தான்... உன் கிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சதே இந்த ஒரு

விசயம் தான்... பயங்கர ஷார்ப் நீ..." என்று அவளைப் பாராட்டியவன்,

"ஆனா இதுக்காக நான் எந்த மெனக்கெடலும் பண்ணலை... ஒரே ஒரு ஃபோன்... ஒரே ஒரு வார்த்தை... மேட்டர் ஃபினிஷ்டு..." இரு கைகளையும் சேர்த்து விலக்கியவாறு சைகை செய்தவனைப் பார்த்துப் புரியாமல் நின்றவளை கண்டு,

"என்ன புரியலையா...? உன்னைப் பத்தி காஞ்சிபுரத்தில் விசாரிக்கச் சொன்னேன்... மானஸ்தன் விசாரிச்சுப் பார்த்ததும் ஓடிட்டான் போலிருக்கு..."

அவன் சொன்னதும் அவளுக்குப் புரிந்து போனது அவனின் திட்டம்... ஆனால் ஏன் இப்படி...? மனதில் கேள்வி வண்டாய்க் குடைந்தது... அக்ஷய் காலைச் சுற்றிய பாம்பாய் அவளைப் பின் தொடர்வது ஏன்...? தனது சுயநலத்திற்காக ஒரு பெண்ணின் மணவாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் அளவிற்கு அவளிடத்தில் அப்படி என்ன பகைமை...? யோசிக்க யோசிக்க அவனை நினைத்து பயமாய் இருந்தது...

"ஏன் இப்படிச் செஞ்ச...?" கழிவிரக்கத்தில் கண்களில் கண்ணீர் கொட்டிவிடுமோ என்று அவளுக்கு அச்சமாக இருந்தது...

"ஏன்னு உனக்குத் தெரியாது...?" என்றவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்...

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...?" கேள்வியை அவனிடம் கேட்டாளா இல்லை தனக்குத் தானே கேட்டு கொண்டாளா அவளுக்கே அது தெரியவில்லை... இப்படியும் ஒரு ஆண்மகன் இருப்பானா என்று உள்ளம் குமைந்து போனாள் அவள்...

"சம்பந்தம் இல்லாமல் ஏன்... நிறைய இருக்கு... எப்பவும் உன்னைச் சுயமாய்ச் சிந்திக்க விட மாட்டேன்... தன்னிச்சையாய் செயல்படவும் விட மாட்டேன்... அதுக்குத்

தடையா எது வந்தாலும் இந்த மாதிரி விளைவுகள் தான் நடக்கும்..." என்றான் அலட்சியமாக...

அவனின் அலட்சியம் கண்டு அவளது இரத்தம் கொதித்தது... அவன் தங்கை வாழ்வதற்கு அவளது வாழ்வை பலியிடும் அவன் மேல் கோபமும் ஆத்திரமும் பொங்கியது அவளுக்கு...

"ச்சீ... ச்சீ... நீ எல்லாம் மனுசனா... இப்படி ஒரு வெட்கம் கெட்ட செயலை செய்ய உனக்கு எப்படி மனசு வந்தது... இல்லை உன் மனசே வெட்கம் கெட்டது தானா..."

"எப்படி வேணும்ன்னாலும் வச்சுக்கோ... எனக்கு ஒண்ணும் இல்லை..." அசால்ட்டாய் தோளை குலுக்கினான்...

அவனது ஒவ்வொரு செயலும் அவளது ஆத்திரத்தை அதிகரித்தது...

"நீ ஜெயிச்சிட்டதா சந்தோசப்பட்டுக்காதே... கல்யாணம் மட்டும் தான் வாழ்க்கை இல்லை... என் வாழ்க்கையில் கல்யாணம் இல்லைன்னாலும் எனக்கு ஒரு கவலையும் இல்லை... நீ நினைச்ச மாதிரி அதுக்காக நான் வருத்தப்பட மாட்டேன்... காலம் முழுவதும் கல்யாணம் ஆகாமல் வாழ என்னால் முடியும்... இதுக்காக நான் உன் காலடியில் விழுவேன்னு நீ நினைச்சா... அது உன் குருட்டு நம்பிக்கை..."

ஆணித்தரமாய்ப் பேசியவளை ஆழ்ந்து பார்த்தவன், "ரொம்ப நல்லதாய் போச்சு... காலம் முழுவதும் என் கண்காணிப்பில் தான் நீ இருந்தாக வேண்டும்... அதுக்கு உன்னோட இந்த முடிவு எனக்குச் சாதகமான முடிவு தான்... ரொம்பச் சந்தோசம் பெண்ணே..." நையாண்டியுடன் கூறியவன் இளக்காரமாய் அவளைப் பார்த்தான்...

இருவரின் பேச்சும் வருங்காலத்தில் உண்மையாய் மாறப் போவதை அவர்கள் அறியவில்லை... காலம் முழுவதும் அவள் கல்யாணத்தை வெறுக்கப் போவதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை... அதே போல் காலம்

முழுவதும் அவளைக் கண்காணிப்பது மட்டுமே தன் முழுநேர வேலையாய் மாறப் போவதையும் அவன் அறியவில்லை...

"அப்புறம் ஒரு விசயம்... இப்போவாவது ஒத்துக்கிறியா... உன் அண்ணனை விட நான் என் தங்கச்சிக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை பெட்டர்ன்னு..."

அவனது வார்த்தையில் இருந்த அர்த்தம் தாமதமாய் அவளுக்குப் புரிந்தது... நேற்று அவனிடத்தில் தான் பேசிய வார்த்தைகள் அவளுக்கு நியாபகம் வந்தது... அக்ஷயை மட்டம் தட்டுவதாய் நினைத்துக் கொண்டு தன் அண்ணனை தான் மட்டம் தட்டியது நினைத்து அவளது முகம் அவமானத்தில் கன்றியது...

அவளின் முகபாவனையைத் திருப்தியுடன் பார்த்தவன், "இதுக்குத் தான் யோசிக்காமல் அவசரப்பட்டு வாய் விடக் கூடாது... பெண் புத்தி பின் புத்தி என்பதை இப்போதாவது உணர்ந்தாயா...? இனியாவது நாவடக்கத்துடன் செயல்படு..." அறிவுரை கூறியவனைக் கண்டு அவளால் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது...

ஏனெனில் தவறு அவள் மேல் அல்லவா இருக்கிறது... "இதுக்குத் தான் கூப்பிடீங்கன்னா நான் போகிறேன்..." என்றவள் கிளம்ப ஆயத்தமாக,

"இனி மேல் என்னிடம் மோதும் எண்ணத்தை மாற்றிக் கொள்... அது உனக்குத் தான் நல்லது..." என்றவனின் கூர்ந்து பார்த்தவள்,

"இதற்கு மேல் எந்தக் கெடுதலும் வர வாய்ப்பு இல்லை... அதனால் உங்க அறிவுரை எனக்குத் தேவை இல்லை..." என்றவள் அவனின் பதிலை எதிர்பாராமல் வெளியேறினாள்...

'கொழுப்பு உடம்பு எல்லாம் கொழுப்பு... இதுக்கு மேல எந்தக் கெடுதலும் வர வாய்ப்பு இல்லையா... யோசிக்கிறேன்டி...

அப்படி ஒரு வாய்ப்பு மட்டும் கிடைக்கட்டும் உன்னை என்ன பண்றேன்னு பாரு...' மனதில் வன்மமாய் நினைத்தான்...

அவனுக்கான அந்தச் சந்தர்ப்பம் வெகு சீக்கிரத்தில் வரவிருப்பதை அவன் அறியவில்லை... ஆனால் அப்படி ஒரு வாய்ப்பை அவன் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டான்... அது அவன் வாழ்க்கையைப் புரட்டி போட கூடியது என்பதும் அப்போது அவனுக்குத் தெரியவில்லை... விதி கடுமையாய் அவனின் தலையெழுத்தை எழுத ஆரம்பித்து விட்டதை அறியா பாலகனாய் அவன் அகம்பாவத்தில் ஆணவத்தில் திளைத்து இருந்தான்...

காலம் செய்யும் கோலம் மட்டும் முதலிலேயே தெரிந்து இருந்தால் மனிதன் ஏன் இவ்வாறு அகம்பாவத்தில் ஆடப் போகிறான்...

****************************

தனது அலைப்பேசியில் ரஞ்சித்தின் எண் ஒளிர்வதைக் கண்ட நிஷா அருவருப்புடன் அதைப் பார்த்தாள்... தானே அடித்து அது ஓய்ந்ததும் அடுத்த நொடி விக்டருக்கு அழைத்தாள்...

"விக்டர்... ரஞ்சித் ஃபோன் பண்ணினான்..." அவள் சொன்னது கேட்டுப் பரபரப்பானான் விக்டர்...

"என்ன சொன்னான்...?"

"நான் எடுக்கலை..." என்றாள் தயக்கமாய்...

அவளது பதிலில் ஒரு நொடி அமைதியாய் இருந்தவன், "உனக்குப் பிடிக்கலைன்னா இது வேண்டாம் நிஷா..." என்றான் தன்மையாக...

"ஐயோ விக்டர் அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை... உங்களுக்காக உயிரையும் கொடுப்பவள்... உங்களுக்காக இதைச் செய்ய மாட்டேனா... உங்க சந்தோசம் தான் எனக்கு முக்கியம்..."

"தேங்க்ஸ் நிஷா..." என்றான் மனமார... பின்பு, "எதுக்கும் அவன் கிட்ட நீ ஜாக்கிரதையா இரு... அவனைப் பத்தின உண்மை எல்லாம் என் கைக்கு வரட்டும்... அதுக்கு அப்புறம் பாரு... அவனுக்கு எமன் நான் தான்..."

"விக்டர்..." நிஷா அதிர்ச்சியாய் கூவினாள்...

"என் வேலையில் இது எல்லாம் சகஜம் நிஷா... இதுக்குப் போய் நீ பயப்படலாமா..." என்று அவளைத் தேற்றினான்...

"விக்டர்..." மேலே பேச முடியாமல் தேம்பியவளை கண்டு அவனுள் இரக்கம் சுரந்தது...

"அப்படியே நான் ஜெயிலுக்குப் போனாலும் உனக்குப் போர் அடிக்காம இருக்கிறதுக்கு ஒரு வழி சொல்லவா...?" அவன் கேட்க அவள் அமைதி காத்தாள்...

"நான் வர்ற வரைக்கும் என் குழந்தையை வளர்த்து ஆளாக்கிட்டு இரு... வருசம் நிமிசமாய் ஓடிடும் நிஷா..."

அவனின் பேச்சில் துக்கம் மறைந்து அவளது கன்னத்தில் வெட்கப் பூக்கள் பூத்தது...

"என்ன பதிலை காணோம்... வெட்கமா...?" சரசமாய்க் கேட்டவனின் குரல் அவளின் மனதை கண்டபடி தாக்க,

"ம்..." என்றாள் கிறக்கமாய்...

"குட்... இப்படி நீ சந்தோசமா இருந்தா தான் நான் என் வேலையைப் பார்க்க முடியும்... சரி நிஷா முதல்ல அவனைக் கூப்பிட்டு பேசு... அவன் சொன்னதுக்கு எல்லாம் சரின்னு சொல்லு... மத்ததை நான் பார்த்துக்கிறேன்..."

"ம்... சரி..." என்று அலைப்பேசியை வைத்த நிஷாவுக்கு ஒரே குழப்பமாய் இருந்தது...

முதலில் இருந்த நிஷா என்றால் இதற்குச் சற்றும் தயங்காமல் சம்மதித்து இருப்பாள்... ஆனால் இப்போது இருக்கும் நிஷா விக்டரின் மனைவி அன்றோ... ஆனாலும்...???

'என் விக்டருக்காக நான் இதைச் செய்வேன்...' மனதிற்குள் உறுதி எடுத்து கொண்டவளுக்கு மனம் நிர்மலமாய் ஆனது...

அடுத்து அவளை யோசிக்கவிடாமல் அவளது அலைப்பேசி அலறியது... முதலில் இருந்த தயக்கம் இப்போது அவளிடத்தில் இல்லை...

"ஹலோ..." என்றாள் அமர்த்தலாக...

"ஹாய் ப்யூட்டி... எப்படி இருக்க...?" ஹஸ்கி குரலில் கூறிய ரஞ்சித்தின் குரலை கேட்டு பல்லைக் கடித்தாள் அவள்...

"டேய் யாருடா நீ...?" என்றாள் அவனை அறியாதவளாய்...

"நான் யாருங்கிறது பிறகு சொல்றேன்... முதல்ல உனக்கு ஒரு வீடியோ க்ளிப் அனுப்பறேன்... அதை நீ பார்த்த பிறகு நானே உன்னைக் கூப்பிடறேன்... பை ஸ்வீட்டி..." அவள் பதிலுக்குக் காத்திராமல் அலைப்பேசியைத் துண்டித்தான்...

அடுத்தச் சில நொடிகளில் அவளின் அலைப்பேசிக்கு அந்தக் காணொளி வந்தது... அவசரமாய் அதை எடுத்து பார்த்தாள்... பார்த்ததும் உறைந்தாள் அச்சத்தில்... அது அந்தக் காணொளியை கண்டு அல்ல ரஞ்சித்தை நினைத்து...

'இதை அழித்துவிட்டதாய் கூறினானே... அப்புறம் எப்படி இது அவனிடத்தில் வந்தது...' பயத்தில் அவளுக்கு முத்து முத்தாய் வியர்த்தது...

அந்நேரம் அவளின் அலைப்பேசி அடித்தது... அந்த ரஞ்சித் தான் அழைத்தான்...

"ஹலோ..." ஏனோ பயத்தில் அவள் குரல் நடுங்கியது...

"என்ன ஸ்வீட்டி... வீடியோல நீ ரொம்ப அழகா இருக்கல்ல..." அவன் அவளது அழகை ஆபாசமாய் வர்ணிக்க அவளுக்கு அருவருப்பில் குமட்டி கொண்டு வந்தது...

"நிறுத்துடா நாயே..." தாங்க மாட்டாமல் கத்திவிட்டாள்...

"நான் நாயா...? நாய் என்ன செய்யும் தெரியுமா...?" என்றவன் அடுத்தப் பேசிய வார்த்தைகளைக் காது கொடுத்து கேட்க முடியாதவை...

"நான் சொன்னதை எல்லாம் செஞ்சி காட்டுறேன்... அப்புறம் தெரியும் நான் யார்ன்னு..." என்று ஆங்காரமாய்ச் சொன்னவன், "இந்த வீடியோவை நெட்டில் போடாம இருக்கணும்ன்னா நீ நான் சொன்னபடி நடந்துக்கணும்..." அவனின் பேச்சிற்குப் பதில் பேச முடியாமல் விக்கித்துப் போய் அமர்ந்து இருந்தாள் நிஷா...

"உன் புருசன் என் மேல கை வச்சான்ல அதுக்குத் தண்டனை தான் இது..." என்றவன், "நேரடியாய் விசயத்துக்கு வர்றேன்... நீ எனக்கு வேணும்..."

அவன் பேசும் போதே, "அது மட்டும் முடியாது..." அலறிவிட்டாள் அவள்...

"உன் கருத்தை நான் கேட்கலை... என்னோட விருப்பத்துக்கு நீ உடன்படுற... இல்லை இந்த வீடியோ நெட்ல போட்டா உன் மானம் மட்டும் இல்லை... உன் புருசன் மானமும் சேர்ந்து போகும்... எது வசதி உனக்கு..." அவன் பேசும் போதே அலைப்பேசியை அணைத்து தூக்கி தூர எறிந்தாள்...

அவனின் பேச்சை நினைத்து அவளது மேனி தூக்கிவாரி போட்டது...

எத்தனையோ காமுகர்கள் அவளின் உடலை தங்களது காம பசிக்குப் புசித்த போது எல்லாம் ஏற்படாத அருவருப்பு இன்று ரஞ்சித்தின் வார்த்தையில் உண்டானது... கோடி கம்பளிப் பூச்சிகள் உடலில் ஊர்ந்தது போல் இருந்தது...

இப்போது விக்டரின் மனைவியாய் அவளுக்கு அந்நிய ஆணின் இந்த வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை...

நிஷாவுக்குப் படபடப்பாய் வந்தது... விக்டர் நினைப்பது போல் ரஞ்சித் சாதாரணமானவன் இல்லை... அபாயகரமானவன் அவன்... விக்டர் நினைப்பது ஒன்று... ஆனால் ரஞ்சித்தின் நடவடிக்கையோ வேறு ஒன்று... இது

எங்கே போய் முடியுமோ என்று அவளுக்கு அச்சமாக இருந்தது...

"நிஷா..." விக்டரின் குரலில் கலங்கிய மனதையும் முகத்தையும் அவசரமாய்ச் சரி செய்து கொண்டாள்...

"அந்த நாய் பேசியதை ரெக்கார்ட் பண்ணுனியா...? எங்கே கொடு பார்க்கலாம்..." என்றான் அவசரமாய்...

அவனின் முகத்தை இமைக்காமல் பார்த்தவள், "அதுக்கு அப்புறம் அவன் பேசலை விக்டர்..." என்று மனதார பொய் உரைத்தாள்...

அந்தக் காணொளியை மட்டும் விக்டர் கண்டான் என்றால் அடுத்த நொடி ரஞ்சித்தை கொல்ல அவன் தயங்க மாட்டான்... என்ன தான் அவனது தொழில் அது தான் என்றாலும் தன்னால் அவன் கொலைக் குற்றவாளியாய் சிறைக்குச் செல்வதை அவளது காதல் மனம் ஒத்து கொள்ளவில்லை...

"ஓ... பரவாயில்லை விடு... எப்படியும் அவன் அடிப்பட்ட பாம்பு... நிச்சயம் கொத்தாமல் விட மாட்டான்... அப்புறம் நிஷா அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், செயலும் நமக்கு முக்கியம்..."

"ம்... சரி..." என்று முணுமுணுத்தவளை ஆராய்ச்சியாய் பார்த்தான் அவன்...

அவளது முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தியவன் அவளது கண்களில் தன் கண்களைக் கலக்கவிட்டவாறு, "என்ன நிஷா... ஏன் ஒரு மாதிரியாய் இருக்க...?"

"ஒண்ணும் இல்லை..." பொய்யாய் சிரித்தாள் அவள்...

"நான் உன்னை இந்த மாதிரி யூஸ் பண்றேன்னு உனக்கு வருத்தமா...?"

"ச்சே... ச்சே... உங்களைப் போய் அப்படி நினைப்பேனா விக்டர்... நீங்க எது செஞ்சாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதா..."

"ம்... உண்மை தான் இதில் ஒரு அறியா பெண்ணின் வாழ்க்கை அடங்கி இருக்கு... இல்லை அந்த அயோக்கியனை கண்டந் துண்டமாய் வெட்டி போட்டு இருப்பேன்..." கோபமாய்க் கூறியவன்,

"அவனால் உனக்கு எந்தக் கெடுதலும் ஏற்படாம நான் பார்த்துக்குவேன் நிஷா... நீ என்னை நம்புறியா..."

"உங்களை நம்பாம நான் வேறு யாரை நம்புவேன் விக்டர்... சத்தியமா உங்களை நம்புறேன்..."

"தேங்க்ஸ் நிஷா... முதலில் நமக்கு இடையில் இருந்த உறவு கடமைக்காகப் பணத்துக்காக இருக்கலாம்... ஆனால் இப்போ நீ என் மனைவி... உன்னோட சுக துக்கங்கள் எல்லாம் என்னையும் பாதிக்கும் நிஷா... ஏன்னா நீ என்னோட உயிர்..." என்றவன் அவளை அணைத்து அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்...

அவளும் அவனது அணைப்பில் வாகாய் அடங்கியவள், "விக்டர்..." என்றாள் மெதுவாக...

"என்ன கண்ணம்மா..." மிகுந்த நெகிழ்வுடன் இருக்கும் சமயங்களில் மட்டும் அவன் அவளைக் கண்ணம்மா என்று அழைப்பான்...

"எனக்கு..." என்று தயங்கியவளை நெஞ்சில் இருந்து நிமிர்த்தியவன்,

"உனக்கு...?" கேள்வியாய் பார்த்தான்...

"எனக்குக் குட்டி விக்டர் வேணும்..." என்று கூறியவள் முகம் வெட்கத்தில் சிவக்க அதை மறைக்க அவனது மார்பில் தஞ்சம் புகுந்தாள்...

"நிஷா..." ஆச்சிரியத்துடன் அவளை அணைத்தவன் தான் சொன்னதைச் சற்றும் மறந்தவனாய் அவளுள் புதைந்தான்...

இப்போதும் அவளது மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் தான் அவளுடன் கூடினான்... என்ன ஒன்று அன்று

அவனிடத்தில் இருந்தது உடல் வேட்கை மட்டும்... இன்றோ அவனுக்கு அவள் மேல் அளவில்லா காதல் இருந்தது...

கணவனின் நலன் கருதி நிஷா ரஞ்சித்தின் பேச்சை அவனிடம் இருந்து மறைத்தாள்...

********************

அனித்ராவுக்கு அன்று ஏனோ மனதில் எரிச்சலாக இருந்தது... இந்த ஒட்டாத வாழ்க்கைக்கு என்று தான் முற்றுப்புள்ளி வர போகிறதோ என்று மனம் கவலையில் உழன்றது...

உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தவளை கண்ட ஆதர்ஷ் அவளிடம் வந்தான்... சில நாட்களாய் அபிக்கு சரியாய் வரன் அமையாததால் சற்று கவலையுடன் நடமாடியவன் மனைவியைக் கவனிக்க மறந்து போனான்... இன்று அவளது முக வாடலை உணர்ந்து அவள் புறம் வந்தவன்,

"உடம்பு சரியில்லையா ஹனி..." மென்மையாய் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்கள் அவனை வெறித்துப் பார்த்தது...

'அய்யோ... என்னை ஹனின்னு கூப்பிடாதே... எரிச்சலா வருது...' மனதுக்குள் கத்தியவள் வெளியில் அமைதியாய் இருந்தாள்...

"என்ன பண்ணுதுடா..." கேட்டவன் அவளின் நெற்றியில் கை வைத்து பார்க்க வர சட்டென்று தள்ளி அமர்ந்தாள்...

அதைக் கண்டு அவன் இதழ்கள் வளைந்தது புன்னகையில்...

"தலை வலிக்குது..." என்று சொல்லியவளுக்கு உண்மையில் தலைவலி வந்துவிட்டது...

"கொஞ்சம் இரு..." என்றவன் அலமாரியில் இருந்து மாத்திரை ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்...

மறுக்காமல் வாங்கி விழுங்கி கொண்டாள் அவள்... அதை அவள் மறுத்து அதற்கும் விளக்கம் கேட்டு அவன் நின்றால் இருக்கும் தலைவலி இன்னும் அதிகரித்து விடாதா... அதனால் தான்...

மாத்திரை போட்டவள் உடனே படுத்துக் கண்களை மூடி கொண்டாள்... மேலும் அவனிடத்தில் பேச்சு வளர்ப்பதை தவிர்க்கத்தான்...

அந்நேரம் அவளின் நெற்றியில் அவனின் கை தைலத்தைத் தேய்த்து மிருதுவாய் வருடி விட்டது... அவனின் செயலை தடுக்க வேண்டும் என்று அவள் நினைத்தாலும் ஏனோ அதைச் செய்ய விடாமல் அவளது மனம் தடுத்தது... அவனின் அந்தப் பரிவான செய்கையில் அவளது மன எரிச்சல் காணாமல் போவதை அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தாள்... ஆனாலும் மூடிய கண்களைத் திறக்கவில்லை...

அவளது நெற்றியில் குனிந்து முத்தமிட்ட ஆதர்ஷ் செயலில் அவள் திடுக்கிட்டு விழிக்க இரு விழிகளும் வெகு அருகில் சந்தித்துக் கொள்ள ஒன்றை ஒன்று ஈர்த்து பிணைத்து நின்றது... பார்வையை விலக்க முடியாமல் அவனது விழி வீச்சில் உறைந்து நின்றவளை கண்டு சிரித்தவன் அவளின் கன்னம் தட்டி,

"நான் ஹாஸ்பிட்டல் கிளம்பறேன்... ஏதாவது தேவைன்னா ஆச்சி கிட்ட கேளு... அவசரம்ன்னா எனக்கு ஃகால் பண்ணு..." என்றவன் விடைப்பெற்று செல்ல...

அவள் உறைந்த நிலையில் இருந்து வெளிவர வெகுநேரமானது...

'என்ன இது... மனதில் ரஞ்சியைச் சுமந்து கொண்டு இவனைக் கண்டும் நான் ஏன் தடுமாறுகிறேன்...? இது என் காதலுக்கு, ரஞ்சிக்கு நான் செய்யும் துரோகம் அல்லவா... ரஞ்சி சாரி...' மனதில் நினைத்தவளின் விழிகள் கசிந்தது காதலினால்...

அந்த முட்டாள் பெண் அறியவில்லை தாலி கட்டிய கணவனுக்குத் தான் துரோகம் இழைக்கக் கூடாது என்று...

அந்நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... வேறு யார் ரஞ்சித் தான்...

அலைப்பேசியை எடுத்தவள், "ரஞ்சி..." என்று கதறிவிட்டாள்...

அவளின் கதறலை கண்டு ரஞ்சித்திற்கு ஒன்றுமே புரியவில்லை... அனி என்ன செய்கிறாள், கணவனுடன் மனமுவந்து வாழ்கிறாளா, தன் கைவிட்டு போய்விடுவாளா என்ற அச்சத்தில் தான் அவன் அழைத்தது... அவளது எச்சரிக்கையை மீறி அவளை அழைத்துவிட்ட பின் தான் அவன் யோசித்தான்... அவள் ஏதும் தன்னைத் திட்டுவாளோ என்று... ஆனால் சத்தியமாக இந்த மாதிரி ஒரு அழுகையை அவன் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை...

"அனி எதுக்குடா அழற..." போலியாய் உருகினான் அந்த அயோக்கியன்...

"எனக்கு உன்னை இப்பவே பார்க்கணும் போலிருக்குடா..." தேம்பியவளை கண்டு அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது...

பழம் நழுவி பாலில் விழுந்த கதை என்பது இது தானோ... உற்சாகத்தில் சத்தமாய் விசிலடிக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு...

"எனக்கும் தான் அனி..." பாவமாய்ச் சொன்னவன் மனம் கேவலமாய் நினைத்ததை அந்தப் பேதையவள் அறியவில்லை...

"நாம எப்போதும் மீட் பண்ற காபி ஷாப்புக்கு வா ரஞ்சி..." அவனிடம் கூறியவள் கோமதி அம்மாளிடம் வாய்க்கு வந்ததைச் சொல்லி சமாளித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்...

"ரஞ்சி..." தனக்கு முன் வந்து காத்து இருந்த காதலனை கண்டு அவளது உள்ளம் காதலில் விம்மியது...

"ஐ மிஸ் யூ ரஞ்சி..." அவனது தோளில் சாய்ந்து கண்ணீர் வடித்தவளை கண்டு குள்ளநரி சிரிப்புடன் அணைத்து கொண்டவன்,

"நானும் தான் அனி..."

காதலர்கள் மனம் விட்டு பேசி கொண்டாலும் அவர்களால் இறுதியாய் உறுதியாய் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை... ஏனெனில் ரஞ்சித் தான் கழுவுற மீனில் நழுவுற மீனாய் இருக்கிறானே...

அவனுக்கு அவளது உடலை சுகித்து இன்பம் காண வேண்டும்... மற்றபடி அவளுடன் மண வாழ்க்கையில் இணைவது என்பது அவனுக்கு ஒத்துவராது... காதலுக்காக அவளிடம் அடங்கி நடிப்பவன் கல்யாணத்துக்குப் பின் காலம் முழுவதும் அவளிடம் அடங்கி நடிக்க அவன் என்ன ஆதர்ஷ் போல் மடையனா...?

இதை அறியாத அவளும் அவனின் ஆறுதல் வார்த்தையை நம்பி தனது வீட்டிற்குச் சென்றாள்...

*************************

அனித்ரா ரஞ்சித்தை சந்தித்த விசயம் அக்ஷய்க்கு உடனே தெரிந்துவிட்டது... அவன் தன் தங்கையைக் கண்காணிக்க ஆள் வைக்கவில்லை... அவளை முழுவதும் நம்பினான்... ஆனால் ரஞ்சித்தை கண்காணிக்க ஆள் வைத்து இருந்தான்...

தங்கை தனது நம்பிக்கையைப் பொய்த்துப் போகச் செய்வாள் என்று அவன் கனவில் கூட நினைக்கவில்லை... எல்லாவற்றையும் மறந்துவிட்டதாய் கூறி திருமணத்திற்குச் சம்மதித்தவள் எதற்காகக் காதலனை போய்ச் சந்திக்க வேண்டும்...?

'அனி நீ இப்படிப் பண்ணுவேன்னு நான் கொஞ்சமும் நினைக்கலை... ரொம்ப ஏமாத்தமா இருக்கு...' அவனையும் அறியாது அவனது உள்ளத்தில் வலி ஒன்று ஏற்பட்டது...

அவன் எத்தகைய குணத்தைக் கொண்டு இருந்தாலும் அவனின் தங்கை மீதான அன்பு கள்ளம் கபடமற்ற தூய்மையான அன்பு அன்றோ... மனம் வேதனையில் துவண்டது...

"சார்..." என்றழைப்பில் தன் உணர்வை பெற்றவன்,

"இனியும் தாமதிக்க முடியாது விக்டர்... முடிக்கிறதுக்கான நேரத்தை குறிச்சிட்டு எனக்குச் சொல்லு..." என்றான் தன் உள்ளத்து குமுறலை மறைத்துக் கொண்டு அமைதியாக...

மறுபக்கம் கேட்டுக் கொண்டு இருந்த விக்டர் தனது முதலாளி சொல்வதைக் கவனமாய்க் கேட்டு கொண்டவன், "சரிங்க சார்..." என்றான் பணிவாக...

அதே நேரம் அக்ஷய் காண அவனது அலுவலக அறைக்கு வந்த அபியும் அந்த வார்த்தையில் யோசனையாய் புருவத்தை நெறித்தாள்...

இந்த வார்த்தை இருவரின் வாழ்க்கையும் புரட்டி போட கூடியது என்பதை அந்நேரம் இருவருமே அறிந்து இருக்கவில்லை...

பூக்கும்...

விக்டரிடம் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்த அக்ஷய் மனதின் வேதனை தாங்காமல் வேலையில் கவனம் செலுத்த முடியாமல் வெளியில் செல்ல எண்ணி வேகமாய் அறைக் கதவை திறந்தான்... அதே நேரம் அபியும் உள்ளே நுழைவதற்காகக் கதவை திறந்தாள்...

தன் நினைவில் உழன்று கொண்டு வந்த அக்ஷய் அபியை கவனிக்கவில்லை... அபி அவனின் வரவை கவனித்துச் சமாளிப்பதற்குள் அவன் அவள் மீது மோதி விட்டான்... தேக்கு மரத்தின் உறுதியோடு இருந்த அவனின் உடல் வலிமையின் மோதலை தாங்க முடியாமல் முல்லை கொடியவள் தேகம் தடுமாறப் பற்றுகோலாக அவனின் தேகத்தைப் பிடிப்பதற்கு மனம் ஒவ்வாமல் அவள் கீழே சரிந்து விழும் முன் அன்னிச்சை செயலாக அக்ஷயின் கைகள் அவளைத் தாங்கி பிடித்தது...

அவனின் வலது கரம் அவளது இடது கரத்தை உறுதியாய் பற்றி இருக்க அவனது இடது கரம் அவளது இடையில் அழுத்தமாய்ப் பதிந்து அவளது மொத்த எடையையும் தாங்கி நின்றது...

நல்லவேளை இருவரும் நின்றது அவனின் அறைக்கு முன் இருந்த வரவேற்பறை... அதுவும் தனி அறையாக இருந்ததால் இந்தக் காட்சியை யாரும் பார்க்க வாய்ப்பில்லை...

இருவரின் விழிகளும் நொடி பொழுதில் சந்தித்து மீண்டது...

"பார்த்து வர மாட்டியா...? அப்படி என்ன அவசரம் உனக்கு...?" தங்கை மீது இருந்த எரிச்சலை அவளிடம் காட்டியவன் அவளை நிமிர்த்தி நிற்க வைத்தான்...

அக்ஷய் தன்னைத் தாங்கி பிடித்ததை இன்னமும் நம்ப முடியாமல் நின்று கொண்டு இருந்தாள் அபி... அதை விட இடையில் பதிந்த அவனின் கரம் கொடுத்த குறுகுறுப்பு

அவள் மனதை அரித்துக் கொண்டு இருந்தது... புதிதாய் ஏற்பட்ட ஆணின் ஸ்பரிசம், அருகாமை அவள் மனதை படபடக்கச் செய்தது... மொத்தத்தில் அவனின் செயலில், அருகாமையில் அவள் உறைந்து போய் நின்று இருந்தாள்...

அவளிடம் இருந்து பதில் வராததால் அவளை நிமிர்ந்து பார்த்தவன் அவள் இருந்த நிலை கண்டு திகைத்துப் போனான்... அவளது புடவை மேலே லேசாக விலகி அவளின் இளமை அழகையும், இடுப்பில் தாராளமாக விலகி அவளின் இடை அழகையும் பளிச்சென்று எடுத்துக் காட்டி அவனின் கண்களுக்கு விருந்தாக்கியது...

சட்டென்று தன் பார்வையை அவளிடம் இருந்து திருப்பியவன் வேறு புறம் திரும்பி நின்றான்... அவன் இடத்தில் வேறு ஒருவன் இருந்தால் இது தான் சந்தர்ப்பம் என்று எண்ணி பாவையவளை பார்வையால் துகிலுரித்து இருப்பான்... அந்த விதத்தில் அக்ஷய் மிகவும் நல்லவன் தான்... தனக்குப் பிடிக்காத பெண் தான் அபி என்றாலும் அவளின் பெண்மைக்கு மதிப்புக் கொடுத்தான்...

"எதுக்கு இங்கே வந்த...?" அவனின் குரல் கடுமை காட்டியது...

அவனின் குரலில் தன்னுணர்வு பெற்றவள், "ஆங்... நீங்க தான் வர சொன்னீங்க..." பொய் கூறி சமாளித்தாள்...

அவனுக்கு இருந்த மனவருத்தத்தில் அவளின் பொய்யை சரியாய் கவனிக்கவில்லை...

"நானா...?" நெற்றியை தேய்த்து எதற்காக அவளைக் கூப்பிட்டோம் என்பதை யோசித்தவனுக்கு ஒன்றும் பிடிபடாத காரணத்தால்,

"நேத்து ஒரு டிசைன் மெயிலில் வந்தது... அதைப் பிரிண்ட் அவுட் எடுத்து வச்சிருக்கேன்..." என்றபடி அவள் புறம் திரும்பினான்... இன்னமும் அவள் அதே நிலையில் இருப்பதை உணர்ந்து மீண்டும் அவசரமாய்த் தனது விழிகளைத் திருப்பிக் கொண்டவன்,

"டேபிளில் இருக்கிற க்ரீன் ஃபைல் தான் எடுத்துட்டு போ..." என்றவன் வெளியில் செல்ல எத்தனித்த வேளையில் ஏதோ நினைத்தவனாய் நின்று,

"டிரெஸை சரி பண்ணிட்டு வெளியில் போ..." திரும்பி பார்க்காமல் கூறியவன் விறுவிறுவென வெளிக்கதவை திறந்துவிட்டு சென்றுவிட்டான்...

அவன் கூறியதை கேட்டு அவசரமாய்த் தன் உடையைப் பார்த்தவள் அதிர்ந்தவளாய் உடனே அதைச் சரி செய்தவள் ஆயாசமாய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

ஒரே நேரத்தில் அடுத்தடுத்த அதிர்ச்சிகள் தாக்கினால் பாவம் அவளும் தான் என்ன செய்வாள்...

அக்ஷய் தொடுகையில் ஏற்பட்ட விதிர்ப்பு, அவனின் கண்ணிய செயலினால் ஏற்பட்ட நிம்மதி எல்லாம் சேர்த்து அவளை அலைக்கழித்தது...

அவனிடத்தில் இப்படி ஒரு கண்ணியத்தை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான் போலும் என்று நினைத்து கொண்டவளுக்குத் தான் அவன் முன் இருந்த நிலையை நினைத்து முகம் சிவந்தது...

'என்ன நினைத்தானோ... நிச்சயம் நல்லவிதமாய் நினைக்கப் போவது இல்லை... ச்சே அபி... வர வர நீ சரியில்லைடி... இனியாவது பார்த்து நடந்துக்கோ...' என்று நினைத்தவள் பச்சை நிற கோப்பை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்...

வெளியில் வந்தவளின் சிவந்த முகத்தைக் கண்டு தவறாய் நினைத்த உடன் வேலை செய்பவள், "அபி... சார் எதுவும் திட்டினாரா...?" கேட்கவும் அத்தனை நேர இதம் மறைந்து சுடு தண்ணீர் ஊற்றியது போல் துடித்துப் போனாள்...

"இல்லை..." என்று கூறியவள் தன் இருக்கையில் வந்து அமர்ந்தாள்... தன் நிலையை எண்ணி தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள்...

'அவனின் அரக்க குணத்தை எப்படி மறந்தேன்... அவன் மாற மாட்டான்... என்றுமே சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை... அது போல் தான் அவனும்... அவனாவது மாறுவதாவது... இதை வைத்து அவனை நல்லவன் என்று நம்பி விடக் கூடாது... தன் மேல் களங்கம் ஏற்படாமல் இருக்க நினைக்கும் அவன் அடுத்தவர்கள் மேல் களங்கத்தைச் சுமத்துவதில் கில்லாடி... இல்லை என்றால் எந்தவித சேதாரமும் இல்லாமல் என் கற்பை கேள்விக்குறி ஆக்கி விளையாடி இருப்பானா... அது மட்டுமா... இதோ இப்போது வரை என்னை மிரட்டி தன் பிடியில் வைத்து இருக்கும் அவன் கடைசியில் என் மணவாழ்க்கையும் கேள்விக்குறியாக்கி விட்டானே... மொத்தத்தில் அவன் கெட்டவன்... கெட்டவன் தான்...' தனக்குள் உறுதியாய் சொல்லி கொண்டாள்...

அவளின் எண்ணத்தையும் மீறி அவன் தொட்ட இடம் குறுகுறுக்கத் தான் செய்தது... புடவையை நன்றாக ஏற்றி விட்டு இடையை மூடியவள் அந்தக் குறுகுறுப்பைப் போக்க முயன்றாள்... என்ன முயன்றும் அவனின் கை அழுத்தம் அவளது மனதில் அழியாத தடத்தைப் பதித்துவிட்டது... அவளையும் அறியாமல் அவன் அவள் மனதில் தனது முதல் காலடிச் சுவடை அழுத்தமாய்ப் பதிந்துவிட்டான்...

அவளாவது அவனைத் திட்டுவதற்காகவாவது அவனை நினைத்தாள்... ஆனால் அவனோ அவளைப் பற்றி யோசிக்கக் கூட நேரம் இல்லாமல் தங்கையின் வாழ்க்கைப் பற்றிய கவலையில் மூழ்கி இருந்தான்...

அனியை கன்னம் கன்னமாய் அடித்துத் துவம்சம் செய்ய வேண்டும் என்ற வெறி அவனுள் எழுந்தது... ஆனால் அவளை அடிப்பதாலோ இல்லை திட்டுவதாலோ எந்தப் பிரயோஜனமும் இல்லை... அப்படிச் செய்தால் முன்பை விட அதிகமாய் வீறு கொண்டு ரஞ்சித்தின் பக்கம் சாய்ந்து விபரீத முடிவை எடுத்து விடுவாள்... அதன் பின் அவள் வாழ்க்கை அந்த ரஞ்சித் கையில் சின்னாபின்னமாகி விடும்... அதன் பின் அவனே நினைத்தால் கூட அவளைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும்... அதனால் இதை

மெதுவாகத் தான் கையாள வேண்டும்... ஆதாரத்துடன் ரஞ்சித்தின் குணத்தை அனியிடம் நிரூபித்து விட்டால் போதும்... அதன் பின் அந்த ரஞ்சித்தே வலிய வந்தாலும் அனி அவனைச் சீண்ட கூட மாட்டாள்...

அதற்காகத் தான் அவன் விக்டரின் உதவியை நாடியது... அக்ஷய் தொழிலில் ஏற்படும் பல இக்கட்டுக்களை விக்டரின் உதவி கொண்டு தீர்த்து இருக்கிறான்... விக்டர் அக்ஷயின் நிழல்... ஆனால் அது யாருக்கும் தெரியாது... நேருக்கு நேர் கண்டால் கூடத் தெரியாத மாதிரி பார்த்துக் கொண்டு சென்று விடுவார்கள்... அந்தளவுக்குத் தங்களது தொடர்பை ரகசியம் காத்தார்கள்...

விக்டர் செய்யும் காரியங்களில் எப்போதேனும் அவன் காவல்துறையினரிடம் மாட்டி கொண்டால் கூட அவன் அக்ஷய் பெயரை எதற்காகவும் பயன்படுத்த மாட்டான்... அதனால் தனது தொழிலுக்காக அக்ஷய் விக்டரை பயன்படுத்திக் கொண்டான்... அதனால் தான் இது வரை எந்தத் தவறிலும் அவனது பெயர் வெளிவராமல் தப்பித்துக் கொண்டு இருக்கிறான்...

அதே போல் தான் தனது பெயர் வெளியில் வராதபடி ரஞ்சித்தை பழிவாங்க அக்ஷய் விக்டரை பயன்படுத்தினான்... விக்டரும் அவன் சொன்னதைக் கேட்டு அதன்படி நடக்கிறான்... எல்லாம் சரியாய் நடக்கும் வேளையில் அவனது தங்கை குட்டையைக் குழப்புகிறாள்...

மனதில் பாரமேறினாலும் அலுவலக வேலைகள் அடுத்தடுத்து காத்துக் கொண்டு இருப்பதை உணர்ந்தவனாய் அடுத்த அலுவலகம் நோக்கி விரைந்தான்...

************************

"நிஷா..." உற்சாகமான விக்டரின் குரல் வீட்டின் நிசப்தத்தைக் கலைத்தது...

துள்ளல் நடையுடன் மனைவியைக் காண ஆவலாய் உள்ள வந்தவன் அங்கே கண்ட காட்சியில் அதிர்ந்து போய் நின்றுவிட்டான்...

"நிஷா..." என்ற கூவலுடன் அவளின் அருகில் ஓடினான்...

வயிற்றில் கத்தி குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதந்தவளை கையில் அள்ளி கொண்டவன் அவளின் கன்னம் தட்டி, "கண்ணம்மா... இங்கே பாரும்மா..."

ம்ஹூம் அவனது எந்த முயற்சிக்கும் அவளிடத்தில் பதில் இல்லை என்றதும் பயந்து போனவனாய் அவளைக் கையில் ஏந்தி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றான்...

அவனுக்குத் தெரிந்த மருத்துவமனை என்பதால் எந்தக் கேள்வியும் இல்லாமல் நிஷாவை உடனே எடுத்து அனுமதித்துச் சிகிச்சை அளித்தனர்... தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்தவளை கண்ணாடி வழியே பார்த்தவன் கண்கள் கலங்க அங்கிருந்த நாற்காலியில் செயலிழந்தார் போல் அமர்ந்தான்...

பழைய நினைவுகள் அவன் மனதில் அலை மோதியது...

சிறு வயதில் பெற்றோரை இழந்த விக்டர் வயிற்று பசிக்காக முதன் முதலாய் ஒரு ரொட்டி துண்டை திருடினான்... அது தான் அவனது முதல் திருட்டு... அதன் பின் திருட்டு அவனுக்குக் கை வந்த கலையானது... பதின்வயதில் கொலை முயற்சி செய்த வழக்கில் சிறை சென்று வந்தவனுக்கு அதன் பின் கொலை செய்வதும் வாடிக்கையான தொழிலானது... அப்படியே அதிலேயே வளர்ந்து ஆளானாதால் தான் செய்வது தவறு என்று அவன் என்றுமே உணர்ந்தது இல்லை...

அந்தச் சமயம் தான் அக்ஷயிடம் தொடர்பு ஏற்பட்டது... தான் சொன்ன வேலையைக் கனகச்சிதமாய்ச் செய்து முடித்த விக்டர் மேல் முழு நம்பிக்கை அவனுக்கு வந்தது... அதன் பின் அக்ஷயின் அனைத்து வேலைகளுக்கும் நிழலாய்

விக்டர் இருந்தான்... விக்டரின் தொழில் நேர்மை அக்ஷய்க்கு மிகவும் பிடித்துப் போனது...

இப்போது விக்டர் கமிசன் ஏஜென்ட்டாகப் பணி புரிவதாய் வெளியில் காட்டி கொண்டாலும் அவனின் அடிப்படை தொழில் கட்டப்பஞ்சாயத்து, வெட்டு குத்து தான்...

தான் உண்டு தன் தொழில் உண்டு என்று இருந்த விக்டருக்குப் பெண் மோகத்தை அவனது நண்பன் ஒருவன் அறிமுகப்படுத்தி வைத்தான்...

அவன் முதன் முதலாய் தொட்ட பெண் நிஷா தான்...

பெற்றோர் இருந்தும் அவர்களாலேயே பாலியல் தொழிலுக்குப் பழக்கப்பட்டவள் நிஷா... தந்தை பாலியல் தொழில் தரகர்... தாயும் பாலியல் தொழிலாளி தான்... அதனால் அவர்களுக்கு இது தவறு என்று தோன்றவில்லை...

நிஷாவுக்குப் பதினான்கு வயதான போது அவளை இந்தத் தொழிலில் நுழைக்க நினைத்த போது அவள் பெற்றோரிடத்தில் அழுது கரைந்து மறுத்தாள்...

"என்னைப் படிக்க அனுப்புங்கப்பா... நான் படிச்சு வேலைக்குப் போய் உங்களைக் காப்பாத்துறேன்..." என்றவளை கேலியாய் பார்த்தவர்கள்,

"உனக்கு வர்ற பத்தாயிரம் ரூபாய் சம்பளத்துல எங்களை நீ பார்த்துக்கப் போறியா...? இதே இது நீ இந்தத் தொழிலுக்கு வந்தா ஒரு தடவையில் பத்தாயிரம் என்ன லட்ச ரூபாய் கூடச் சம்பாதிக்கலாம்..."

அவர்கள் அவளது பேச்சுக்கு இணங்காமல் அவர்களின் ஆசைக்கு இணங்க செய்தார்கள்... நல்ல சுபயோக தினத்தில் அவளின் கன்னித்தன்மையைப் பல லட்ச ரூபாய்க்கு விற்று காசாக்கினர்... அவர்கள் பணம் பார்ப்பதற்கு அவளின் உடல் பல முறை புண்ணானது... வெளியில் சொல்லி அழ முடியாமல் சோகத்தைத் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டு அவள் உணர்வற்ற

கல்லாய் மாறி போனாள்... உணர்வுகள் இருந்தால் தானே வலிக்கும்... கிட்டத்தட்ட பத்தாண்டுகளாய் இந்தத் தொழிலை செய்கிறாள்...

விக்டர் நிஷாவை முதன் முறை நெருங்கிய போது நிஷா எந்தவித உணர்வும் இல்லாமல் இயந்திரகதியில் அவனின் விருப்பத்திற்கு உடன்பட்டாள்... விக்டரும் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்றாலும் மற்ற ஆண்கள் போல் முரட்டுத்தனமாய் நடந்து அவளுக்கு உடல் காயத்தையோ மனக்காயத்தையோ அளிக்காமல் பார்த்து நடந்து கொள்ள... முதன்முறையாய் நிஷா அவனைக் கவனித்துப் பார்த்தாள்...

ஆண்களைக் கண்டாலே மனம் வெறுத்து இருந்த அவள் முதன் முறையாய் ஒரு ஆணை உற்று நோக்கினாள்... ஏனோ அவன் நடந்து கொண்ட விதம் அவளின் மனதுக்கு இதமாக இருந்தது...

அடுத்த முறை அவன் வந்த போதும் அவளைத் தான் அவன் நாடினான்... அவள் ஆச்சிரியமாக அவனைப் பார்த்தாள்... அவனோ ஒன்றும் கூறாமல் அவளுடன் இணைந்தான்...

மெல்ல மெல்ல விக்டர் மேல் அவளையும் அறியாமல் ஈர்ப்பு வர ஆரம்பித்தது... அவன் தொட்ட பின் வேறு ஆண் தன்னைத் தொடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை... ஏன் என்று ஆராய்ந்த போது தான் அவன் தன் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்து இருப்பதை உணர்ந்தாள்... தான் அவனைக் காதலிப்பதையும் உணர்ந்தாள்...

ஊர் அறிந்த பரத்தை காதலிப்பது எங்கேனும் நடக்குமோ... அது சாத்தியமோ... பல கேள்விகள் எழுந்து அவளைத் திணறியடித்த போதும் மழைச்சாரலாய் விக்டர் மீதான காதல் அவள் மனதை நனைத்து அவளது காதலில் உறுதியாய் இருக்கச் செய்தது...

ஒரு நாள் அதை அவனிடமே கூறியும் விட்டாள்...

"விக்டர்... நான் சுத்தி வளைச்சு பேசலை... நேரடியாய் விசயத்துக்கு வர்றேன்..." என்றவளை புரியாமல் பார்த்தவனைக் கண்டு,

"நான் உங்களைக் காதலிக்கிறேன் விக்டர்..." என்றவள் அவனை உற்று நோக்கினாள்...

அவள் கூறியது கேட்டு அவன் அதிர்ந்து போகவில்லை... அதற்காக மகிழவும் இல்லை... கண்கள் சுருங்க அவளைக் கூர்ந்து பார்த்தவன் ஒன்றும் பேசவில்லை...

அதில் தைரியம் வரப் பெற்றவளாய், "விக்டர்... உங்க கையால தாலி வாங்கும் பாக்கியம் இந்த வேசிக்குக் கிடையாது... என்னோட எல்லை எனக்கு நல்லா தெரியும்... ஆனால்..." என்று இடை நிறுத்தியவளை கேள்வியாய் பார்த்தவன் தோளில் சாய்ந்து,

"மனசுல உங்களை நினைச்சுட்டு வேறு ஒருத்தன் என்னைத் தொடுறதை என்னால சகிக்க முடியலை விக்டர்..." என்று கதறியவளை அவன் ஆறுதல் படுத்தவும் இல்லை... அணைக்கவும் இல்லை...

"ஒரு நாளைக்கு நீ எவ்வளவு சம்பாதிப்ப..." என்று மட்டும் கேட்டான்...

அவனின் கேள்வி புரியாமல் அவள் அதைச் சொல்ல ஒன்றும் பேசாது எழுந்தவன் நேரே அவளது பெற்றோரிடம் சென்றான்...

"நிஷா... எவ்வளவு சம்பாதிக்கிறாளோ அதை உங்களுக்கு நான் தர்றேன்..." என்று அவர்களிடம் சொன்னவன் நிஷாவை பார்த்தவாறு,

"இனி அவள் எனக்கு மட்டும் தான் சொந்தம்..." என்றான் அழுத்தமான குரலில்...

அவளது மனவருத்தம் அவனை மிகவும் பாதித்தது... அதனால் தான் அவளின் பெற்றோரிடத்தில் அவனை

இவ்வாறு பேச வைத்தது... ஆனால் அது காதலா இல்லை வேறு எதுவுமா என்று அவன் அலசி ஆராயவில்லை...

அவனது செல்வாக்கை கண்டு வேறு வழியின்றி நிஷாவின் பெற்றோர் சம்மதமாய்த் தலையாட்டினர்...

அதன் பின் நிஷா விக்டருக்கு மட்டுமே சொந்தமானாள்... நிஷா காதலுடன் அவனுடன் கூட அவனோ தன் உடல் தேவைக்காக மட்டுமே அவளுடன் கூடினான்... ஆனால் அதுவே நிஷாவை பொருத்தவரையில் மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்தது...

நிஷாவின் அன்பு மெல்ல மெல்ல விக்டரின் மனதை மாற்ற அவன் தன் கூட்டில் இருந்து வெளியில் வந்தான்... மனதில் உள்ளதை அவளிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தான்...

அப்படிப் பகிர்ந்து கொண்டது தான் ரஞ்சித் விசயம்... விக்டர் மற்ற விசயத்தைக் கையாளுவது போல் ரஞ்சித் விசயத்தைக் கையாள முடியாது... எதையும் நேரடியாய் வெட்டு ஒண்ணு துண்டு இரண்டாய்ச் செய்து தான் அவனுக்குப் பழக்கம்... ஆனால் ரஞ்சித் விசயம் தலையைச் சுற்றி மூக்கை தொடுவது போல் இருந்தது...

அதை அவளிடம் சொன்ன போது, "இதுக்கு நான் உதவுகிறேன்..." என்றவளை மகிழ்ச்சியாய் அணைத்து கொண்டவன்,

"தேங்க்ஸ் நிஷா... எப்படி இதைக் கையாளுவதுன்னு யோசிச்சுட்டு இருந்தேன்... அந்த அயோக்கியனை கையும் களவுமாய்ப் பிடித்து அந்தப் பொண்ணுக்கிட்ட நிரூபிக்கணும்... அதே சமயம் அவனை உயிரோடவும் விடக் கூடாது... அதுக்குத் தான் உன்னோட உதவி தேவை... நீ சம்மதிச்சது எனக்கு ரொம்பச் சந்தோசமா இருக்கு... உனக்கு என்ன வேணுமோ கேளு..." என்றவனைக் கண்ணிமைக்காமல் பார்த்தவள்,

"உங்க கையால தாலி வேணும் விக்டர்..." என்றவளை திகைத்துப் போய்ப் பார்த்தான்...

"நான் எப்படி...?" திணறிப் போனான் அவன்...

தினம் தினம் வெட்டு, குத்து, கொலை என்று இருப்பவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுக்குக் காவலாய் அவனால் இருக்க முடியுமா...?

"நான் வேசின்னு தயங்கிறீங்களா விக்டர்..." அவளுக்குக் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது...

"ச்சீ... ச்சீ... என்ன பேச்சு பேசுற... நான் உன்னை அப்படி நினைச்சது கிடையாது..." அவனின் வார்த்தையில் அவளது முகம் மலர்ந்தது...

"அப்போ நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?" ஆவலுடன் தன் முகத்தைப் பார்த்து கேட்டவளை ஏமாற்ற அவனுக்கு மனம் வரவில்லை... ஆனால் அவன் பார்க்கும் தொழில் அதற்குத் தடையாக இருக்க அவன் தயங்கினான்...

"என்னோட தொழில் உனக்குத் தெரியும் தானே... அப்படி இருந்தும் உனக்கு இதில் சம்மதமா..." என்றவனை மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்ட நிஷா,

"நான் பண்ணுற தொழிலை விடக் கேவலம் இல்லை..." என்றவளை அவனும் அணைத்துக் கொண்டான் சம்மதமாய்...

இதோ திருமணம் முடிந்து ஒரு மாதமாகிறது... திருமணத்திற்குப் பின் தான் அவளின் அன்பில், அனுசரணையில், காதலில் விக்டர் தனது மனதை அவளிடத்தில் தொலைக்க ஆரம்பித்தான்... கரடுமுரடான அவன் காதலில் விழுந்து மென்மையானவன் ஆனான்...

காதல் என்ற ஒன்று வந்ததும் அவன் நிஷாவை இதில் ஈடுபடுத்த விரும்பவில்லை... ஆனால் நிஷா தான் ஒரு பெண்ணின் வாழ்க்கையை முன்னிட்டு அவனுக்கு உதவினாள்...

இப்போது அவளை இரத்த வெள்ளத்தில் பார்த்த பின் அவனது காதல் உள்ளம் ஆட்டம் கண்டுவிட்டது...

'நிஷா... என்னை விட்டு போய்விடாதே... என்னிடமே திரும்ப வந்துவிடு...' அவனது மனம் அவளிடம் கோரிக்கை வைத்து வேண்டி கொண்டது... கடவுளிடம் கையேந்தி வேண்டாதவன் தனது தேவதை பெண்ணிடம் மனமுருக வேண்டி நின்றான்...

முழுதாய் இரண்டு நாட்கள் கழித்து அவனின் அருமை மனைவி கண் திறந்தாள்...

"கண்ணம்மா..." அவளின் கையைப் பிடித்துக் கொண்டு சிறு குழந்தை போல் கண்ணீர் விட்டான் அந்த முரட்டு குழந்தை...

தாயின்றித் தவிக்கும் மழலை போல் அவளின் நிலை கண்டு அவன் அரண்டு போய் இருந்தான்...

"விக்டர்... என்ன இது சின்னக் குழந்தை மாதிரி..." அவனைச் செல்லமாய்க் கண்டித்தவள் அவனின் கண்களைத் துடைத்து விட்டாள்...

"ரெண்டு நாளா நான் தவிச்ச தவிப்பு எனக்குத் தான் தெரியும்... என்னை உசிரோட கொன்னுட்டேடி..."

தன்னையும் அறியாது தனது காதல் மனதை திறக்கும் கணவனை இமைக்காமல் பார்த்தவளின் கண்களும் கலங்கியது அவனது காதலில்...

"யாரு உன்னைக் குத்தியது...? அவனைக் கொன்னு போட்டுர்றேன்..." ஆவேசமாய்க் கர்ஜித்தவனைக் கண்டு புன்னகைத்தவள்,

"அப்போ என்னைக் கொல்லுங்க விக்டர்..." என்றாள் புன்னகை மாறாமல்...

"என்ன சொல்ற...?"

"அவன் கையில் நான் மாட்ட கூடாதுன்னு தான் நான் என்னை நானே கத்தியால் குத்திக்கிட்டேன்..." என்றவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

"யாரு அவன்...?" அவளின் தோளைப் பற்றி உலுக்கினான்...

"எனக்கு ப்ராமிஸ் பண்ணுங்க..." கையை நீட்டியவளை புரியாமல் பார்த்தான் விக்டர்...

"அவனை நீங்க ஒண்ணும் பண்ண மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணினா தான் நான் அவனைப் பத்தி சொல்வேன்..."

"உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவனைக் கொல்லாமல் என்னை என்ன கையைக் கட்டி வேடிக்கை பார்க்க சொல்றியா...?" கோபத்துடன் ஒலித்தது அவனது குரல்...

"ப்ளீஸ் விக்டர்..." கெஞ்சுதலாய் கேட்டவளிடம் பொய்யாய் சத்தியம் செய்தான்... ஆனால் மனதுக்குள் எரிமலையாய்க் குமுறினான்...

"ரஞ்சித்..." என்றாள் ஒற்றைச் சொல்லாக...

"அவனா...?" விக்டருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது...

நிஷா நடந்ததை அவனிடம் கூறத் துவங்கினாள்...

காலையில் விக்டர் கிளம்பி சென்ற கொஞ்ச நேரத்தில் ரஞ்சித்தும், அவனது நண்பன் அசோக்கும் அங்கு வந்தனர்... வேலை செய்பவளாக இருக்குமோ என்று எண்ணி கதவை திறந்த நிஷா அவர்களைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத காரணத்தால் அதிர்ந்து போய் உறைந்து நின்றுவிட்டாள்...

அவளின் அதிர்ந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு அவளைத் தள்ளி கொண்டு உள்ளே நுழைந்தனர் இருவரும்...

"என்னடி அன்னைக்குப் பேசும் போதே ஃபோனை ஆஃப் பண்றியா... எவ்வளவு தைரியம் உனக்கு...?"

கோபமாய் ஒலித்த ரஞ்சித்தின் குரலில் தன்னுணர்வு பெற்றவள் தன் கணவனின் சொல்லுக்கேற்ப தனது அலைப்பேசியில் நடப்பதை பதிவு செய்வதற்காக வழி

முறைகளில் இறங்கினாள்... பேச்சு ரஞ்சித்திடம் இருந்த போதும் அவளது விரல்கள் அந்தப் பணியைச் செவ்வனே செய்தது... இத்தோடு இவனின் சாவகாசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணினாள்...

"ச்சீ வெளியில் போடா நாயே..." என்று சிறிதும் பயமின்றி அவள் கத்தினாள்...

"நாய் என்ன செய்யும்ன்னு உனக்கு ஏற்கெனவே சொல்லி இருக்கேன்... புரியலைன்னா புரிய வைக்கவா...?" என்றபடி அவளை நெருங்கினான்... கூடவே அசோக்கும் தைரியம் கொண்டவனாய் பெரிய இளிப்புடன் அவள் அருகில் வந்தான்...

"வேண்டாம் போய்டு... என் புருசனுக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான் உன் உயிர் உடலில் தங்காது..." இருவரையும் மிரட்டும் தொனியில் பேசினாலும் அவளுக்கு மனதில் அச்சம் விருட்சமாய் உருவெடுத்தது...

விக்டரை பற்றி அவள் சொன்னதும் ரஞ்சித்திற்கு ஆத்திரம் தலைக்கேறியது...

"முடிஞ்சா உன் புருசனை கூப்பிடுடி... அவனா நானான்னு பார்க்கலாம்..." என்றவன் அந்நாள் நியாபகத்தில் வெறிக் கொண்ட வேங்கையாய் அவள் மீது பாய்ந்தான்...

அவனின் நோக்கம் அறிந்து விலகியவளை அசோக் மறுபுறம் பிடித்துக் கொள்ள அவர்கள் பிடியில் இருந்து விலகத் திமிறியவளின் அலைப்பேசி கீழே விழுந்து சோபாவின் அடியில் சென்று மறைந்தது... அதில் காணொளி காட்சி பதியப்படவில்லை என்றாலும் அவர்களின் குரல்கள் அட்சர சுத்தமாய்ப் பதிவு செய்யப்பட்டது...

"விடுடா..." என்று போராடியவளை நண்பர்கள் இருவரும் பிடித்துக் கொண்டனர்...

இருவரின் கையையும் வெடுக்கென்று கடித்தவள் பின்னுக்கு நகர்ந்தாள்...

"ஆ..." என்று அலறியபடி கையை உதறி கொண்டவர்கள் கண்களில் ஆத்திரமும் வெறியும் பளபளத்தது...

"அவளைச் சும்மா விடக் கூடாதுடா..." அசோக் ரஞ்சித்துக்குத் தூபம் போட்டான்...

"ஆமாம் டா..." என்ற ரஞ்சித்தும் அவளை நோக்கி முன்னேற... நிஷா பின்னுக்கு நகர்ந்து கொண்டே போக உணவு மேசை தடுக்கத் திரும்பி பார்த்தாள்...

அதில் இருந்த பழம் நறுக்கும் கத்தியை கண்டு கண்கள் பளபளக்க அதை எடுத்தவள் அவர்கள் புறம் திரும்பினாள்...

"அய்யோ மேடம் பயமாயிருக்கே..." பயந்தது போல் கூறியவன் வாய் விட்டு சிரித்தபடி மேலும் அவளை நோக்கி முன்னேற...

"இது உங்க உயிரை எடுக்கிறதுக்கு இல்லைடா... என் உயிரை எடுக்கிறதுக்கு... நான் உயிரோட இருந்தா தானே நீங்க நினைக்கிறது நடக்கும்..." என்றவள் வினாடி நேரம் கூடத் தாமதிக்காமல் தன் வயிற்றில் கத்தியை சொருகினாள்...

"ஏய்... என்ன பண்ற...?" ரஞ்சித் அலறினான்...

"ரஞ்சித் வாடா போயிரலாம்... போலீஸ் கேஸ்ன்னு நம்மளால அலைய முடியாதுடா... நம்ம வீட்டுக்கு தெரிஞ்சது அவ்வளவு தான்... ஜாலியா இருக்கலாம்ன்னு பார்த்தா இவ நம்மளை களி திங்க வச்சிடுவா போலிருக்கே..." என்று அசோக் ரஞ்சித்தின் கையைப் பிடித்து இழுத்தான்...

அசோக் சொன்னதைக் கேட்டு ரஞ்சித்தும் பயந்து போனவனாய் அவனுடன் வீட்டை விட்டு வெளியேறினான்... காமத்துக்கு ஆசைப்பட்டுக் கொலைப்பழி சுமக்க அவன் தயாராய் இல்லை...

உயிருக்கு போராடி கொண்டு இருந்த பெண்ணை நிர்கதியாய் விட்டு விட்டு ஓடி போயினர் அந்தக் கோழை கயவர்கள்...

கத்தி குத்தியதில் இரத்த போக்கு அதிகமாகி நிஷா மெல்ல மயக்கத்தில் ஆழ ஆரம்பித்தாள்... தன் உயிர் போனாலும் பரவாயில்லை விக்டரின் காதலை சுமந்த நெஞ்சோடு அந்தக் கயவர்களின் காமப்பசிக்கு இரையாக அவள் தயராக இல்லை...

நிஷா சொல்லி முடித்ததும் விக்டரின் கண்கள் இரத்தமெனச் சிவந்தது... கோபத்தில் அவனது நரம்புகள் முறுக்கேறியது... ஆனால் அதை அவளுக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டான்...

"விக்டர் நீங்க சொன்ன மாதிரி ரெக்கார்ட் பண்ணிட்டேன்... ஆனால் பாதித் தான் பதிஞ்சு இருக்கும்..." என்றவளின் வாயை பொத்தியவன்,

"போதும் நிஷா... இனி உன்னைப் பணயம் வைக்க நான் தயாராய் இல்லை..."

மருத்துவமனையில் இருந்து வந்ததும் முதன் வேலையாய் நிஷா தனது அலைப்பேசியைத் தேடி எடுத்து அதைச் சார்ஜ் போட்டுக் கணவனிடத்தில் அந்தக் காணொளியை காண்பித்தாள்...

நல்லவேளையாக நடந்தது அனைத்தும் பாதிக் காணொளியாக, பாதிக் குரலாகப் பதிவு செய்யப்பட்டது இருந்தது... இதைப் பார்த்தாலே ரஞ்சித்தின் உண்மை முகம் தெரிந்துவிடும்...

அதைத் தன் அலைப்பேசியில் பதிவு செய்து கொண்டவன் உடனே அதை அக்ஷய்க்கும் தனக்குமான பிரத்யேக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தான்...

***********************

"உட்காரு அனி..." என்று வரவேற்ற அண்ணனை பயத்துடன் பார்த்தபடி அந்த விருந்தினர் இல்லத்தில் இருந்த சோபாவில் அமர்ந்தாள் அனித்ரா...

வீட்டில் சந்திக்காமல் இப்படி விருந்தினர் இல்லத்தில் சந்திக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி அவள் மனதை வண்டாய்க் குடைந்தது...

"இப்படி என் நம்பிக்கையை உடைச்சிட்டியே அனி..." என்ற சகோதரனை யோசனையாய் பார்த்தாள்...

"நானா... நான் அப்படி எல்லாம் செய்வேனா அண்ணா..." பசப்பாய் மழுப்பினாள்...

"அப்போ எதுக்கு ரஞ்சித்தை போய்ப் பார்த்த...?" அவனது கேள்வியில் அவள் அதிர்ந்து போனாள்...

"அண்ணா..."

"எனக்குத் தெரியாம நீ சுண்டு விரல் கூட அசைக்க முடியாது அனி... எதுக்காக நீ அவனைப் போய்ப் பார்த்த..." பதில் பேசாது தலை குனிந்த தங்கையை வெறித்துப் பார்த்தவன்,

"அனி... உன் நன்மைக்காகத் தான் சொல்றேன்... அவன் அவ்வளவு நல்லவன் கிடையாது... அவன் நம்பர் ஒன் ரோக்..." ரஞ்சித்தை பற்றி அக்ஷய் குறை சொன்னதும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது...

"அண்ணா... அவனைப் பத்தி தப்பா பேசாதீங்க... அவன் ரொம்ப நல்லவன்... நீங்க தான் அவனைப் புரிஞ்சிக்காமல் எங்க காதலை பிரிச்சிட்டீங்க... உங்களால தான் நான் அவனைப் பிரிந்தேன்..." ஆத்திரமும் அழுகையுமாய்ப் பேசியவளை பார்த்தவன்,

"அப்போ அவன் உன்னை விட்டு போனதாய் என்னிடம் சொன்னது எல்லாம்..." இடை நிறுத்தி அவளைக் கூர்ந்து பார்த்தவன், "நாடகமா...?"

முழுதும் நனைந்தபின் முக்காடு எதற்கு என்று நினைத்தாளோ என்னவோ அக்ஷயின் தங்கையாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

"ஆமாம்..." என்றாள் அழுத்தமாய்...

அதில் அவனது மனதில் சுருக்கென்று வலி ஒன்று எழுந்தது... நம்பி வைத்த பாசம் இப்படி மோசம் போகும் என்று கனவிலும் அவன் எண்ணவில்லை...

"அப்போ என்னிடம் நடிச்சிருக்க..."

"ஆமாம்... அப்படி நடிக்கலைன்னா நீங்க என்னையும் ரஞ்சியையும் சேர்ந்து வாழ விட மாட்டீங்க... அதான் நீங்க சொன்ன மாப்பிள்ளையைக் கட்டிக்கிட்டேன்... உங்க வாயாலேயே அவனை வேண்டாம் சொல்ல வச்சு என் ரஞ்சியைத் திரும்பக் கல்யாணம் பண்ண நினைச்சேன்... அதுக்குள்ள என்னென்னமோ நடந்து போச்சு... பரவாயில்லை இப்படிப் பயந்து வாழ்றதுக்கு உங்களுக்குத் தெரிந்தது நல்லது... இனி பயம் இல்லை... நீங்க பார்த்த மாப்பிள்ளையை எனக்குப் பிடிக்கலை... நான் அவனை டிவோர்ஸ் பண்ணிட்டு ரஞ்சியோடு போகப் போகிறேன்..." ஆணித்தரமாய்ப் பேசிய தங்கையைக் கண்டு அயர்ந்து போய் நின்றான்...

அவன் தான் திட்டமிடுவதில் வல்லவன் என்றால் அவனது சகோதரி அவனுக்கும் மேலாய் அவனுக்கே ஆட்டம் காண்பிக்கிறாளே...

"ஆதர்ஷை பத்தி சொன்ன குற்றச்சாட்டு எல்லாம் பொய்யா...?" ஏனோ இதைக் கேட்கும் போதே அவனது உள்ளம் பதைபதைத்தது...

"ஆமாம்... எனக்கு அவனைப் பிடிக்கலை... அதை விட அவன் ரொம்ப நல்லவனா வேற இருக்கான்... அதான் அவனை எப்படி உங்க கிட்ட வெறுக்க வைக்கிறது தெரியாம அப்படிச் சொன்னேன்..." அவள் சொல்லி முடிக்கும் முன் அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்து இருந்தான் அக்ஷய்...

"அண்ணா..." கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அவள் திகைத்து போய் நிற்க...

"அப்படிக் கூப்பிடாதே... ச்சீ உன்னை என் தங்கைன்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமாய் இருக்கு..." என்று ஆற்றாமையில் தலையைக் கோதி கொண்டவன் தனது மன படபடப்பை அடக்க முடியாமல் அங்கும் இங்கும் நடந்தான்...

'இவளின் வாழ்க்கைக்காக அபியை மிரட்டி... இவள் அடி வாங்கினால் என்பதற்காக அவளை அடித்து... ஆதர்ஷை தவறா நினைத்து... ச்சே என்னை எந்த மாதிரி காரியம் பண்ண வைத்து இருக்கிறாள்... இவ்வளவு நாள் தங்கை தங்கைன்னு கண்மூடித்தனமான பாசத்தில் இருந்ததால தான் இவளோட உண்மையான குணம் தெரியாம போச்சு...' மனம் கோபத்தில் பொங்கியது...

"உன் ரஞ்சியோட உண்மையான முகத்தைப் பாரு..." அதற்கு மேல் தாங்க மாட்டாமல் ரஞ்சித்தின் வண்டவாளத்தைச் சொல்லும் அந்தக் காணொளியை அலைப்பேசியில் உயிர்ப்பித்து அனியின் மடி மீது தூக்கி போட்டான்...

அதில் நிஷாவுடன் ரஞ்சித் பேசியது, நடந்து கொண்டது அனைத்து பதிவாகி இருந்தது... வெறும் குரல் மட்டும் இருந்து இருந்தால் அனி இதை நம்பி இருக்க மாட்டாள்... ஆனால் ரஞ்சித்தின் உருவம் பொய்யில்லை... அருகில் நின்று இருந்த அவனது நண்பன் அசோக்கும் பொய்யில்லை...

ரஞ்சித் பேசிய ஆபாச வார்த்தைகள் கேட்டு அவளது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் காந்தியது... அவனின் காம செயல் கண்டு அவன் தொட்ட அவளது மேனி அமிலத்தில் குளித்தது போல் எரிந்தது...

தான் காதலித்த ரஞ்சித் இத்தகைய கொடிய கயவனா...? அவளால் நம்ப முடியவில்லை... அவளையும் அறியாமல் அவளிடம் இருந்து பெருத்த கேவல் ஒன்று புறப்பட்டது...

அதில் அவளைப் பார்த்த அக்ஷய், "இப்போ தெரிஞ்சதா அவனது குணம்... இப்படிப்பட்ட கேடு கெட்ட ஒருத்தனை

தான் நீ உருகி உருகி காதலிச்சு இருக்க... ஒரு பொண்ணோட விருப்பம் இல்லாமல் அவளைத் தொட நினைக்கும் அவன் எத்தனை உயர்ந்த குணத்தை உடையவனா இருப்பான்னு நீயே யோசிச்சுக்கோ... இப்படிப்பட்ட ஒருத்தனை நம்பி எங்களை எல்லாம் எதிர்க்க நீயும் கிளம்பிட்ட..." படபடவெனப் பொரிந்த அண்ணனை கண்டு அனியின் கண்கள் கண்ணீரை மழையாய்ப் பொழிந்தது...

வரும் நாட்களில் ரஞ்சித்தை போல் அவனும் விருப்பம் இல்லாத பெண்ணின் கற்பை களவாட போகிறான் என்பதை அப்போது சத்தியம் செய்து சொன்னால் கூட அக்ஷய் நம்பி இருக்க மாட்டான்... ஆனால் அது தான் நடக்கப் போகிறது என்பதை அறிந்த விதியோ அவனைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தது...

பூக்கும்...

பயந்த சுபாவம் உள்ளவனாய், நல்லவனாய், சொல் பேச்சு கேட்டு நடக்கும் நாய்க்குட்டியாய் தன் பின்னால் அப்பாவியாய் சுற்றி வந்த ரஞ்சித் இப்படி அடப்பாவியாய் இருப்பான் என்று அனித்ரா கனவிலும் நினைக்கவில்லை... ஆனால் ஒரு விசயத்தில் மட்டும் அவன் தன் புத்தியை காட்டி இருந்தான்... ஆனால் காதல் மயக்கத்தில் அவள் அதைச் சரியாக உணரவில்லை...

எப்போது அவளைச் சந்தித்தாலும் அவனது கைகள் அவளது மேனியில் அத்துமீற ஆசை கொண்டு அலையும்... அதைக் காதல் என்றல்லவா அவள் நினைத்தாள்... அது மட்டுமா அவனது கண்களில் வழிந்த உணர்வையும் காதல் என்று அல்லவா எண்ணி எண்ணி மகிழ்ந்தாள்... ஆனால் இப்போது தானே தெரிகிறது அது காதல் அல்ல காமம் என்று...

அதுவும் திருமணமான பெண்ணைத் தன் ஆசைக்கு இணங்க சொல்லும் அவன் எப்படிப்பட்ட காமுகனாக இருக்க வேண்டும்... அவன் கையில் தான் மாட்டி இருந்தால் தன் நிலை...??? நினைக்கவே உடலும், மனமும் பதறியது... கண்ணீர் ஊற்றாகப் பெருகியது...

"அண்ணா... இது உண்மையாண்ணா...?" அவளது அகம்பாவம் அடிப்பட்டு அவளது குரல் நடுங்கியது...

"அடிச்சு பல்லை கழட்டிருவேன்... என்னையே சந்தேகப்படுறியா...? என்னைப் பார்த்தா உனக்குப் பொய் சொல்றவன் மாதிரியா தெரியுது...? பொய் சொல்றது, நம்பிக்கை துரோகம் செய்றது இது எல்லாம் உனக்கு வேணும்ன்னா கை வந்த கலையா இருக்கலாம்... ஆனா நான் அப்படிக் கிடையாது... என்னைப் பத்தி நல்லா தெரிஞ்ச நீ இப்படி ஒரு கேள்வி கேட்க எவ்வளவு தைரியம் உனக்கு...? உனக்காக இந்த வேலையைச் செய்யப் போய் ஒருத்தி கத்தி குத்துப்பட்டு ஹாஸ்பிட்டல்ல இருக்கா... அதுக்கு அப்புறமும் உனக்கு நம்பிக்கை இல்லையா...? நான்

என் பிசினசில் முன்னே பின்னே இருந்தாலும் உன் விசயத்தில் நான் அப்படிக் கிடையாதுன்னு உனக்கு நல்லாவே தெரியும்..."

"இப்பவும் நான் இதை உன் கிட்ட காட்ட வேண்டிய அவசியம் இல்லை... ஆனால் நீ திரும்பவும் அவனைப் போய்ச் சந்திச்சுட்டு வந்ததுக்கு அப்புறம் என்னால உன்னை நம்ப முடியலை... அதான் அவனோட உண்மையான முகத்தை உனக்குக் காட்டினேன்... இது மட்டும் இல்லை... அவன் கிட்ட மாட்டிக்கிட்ட பெண்களோட லிஸ்ட் அதிகம்... அதை எல்லாம் ஆதாரத்தோட நிரூபித்தால் நீ நம்புவியா...? நேத்து காதலிச்சவன் மேல் இருக்கிற நம்பிக்கை உன் அண்ணன் மேல் உனக்கு இல்லையா... உன்னோட வெல்விஷர் நான்... எப்போதும் நீ நல்லா இருக்கணும் தான் நான் விரும்பறேன்... என் உடம்பில் உயிர் இருக்கும் வரை அதைத் தான் நான் நினைப்பேன்..." கடைசி வரி சொல்லும் போதே அவனது குரல் தழுதழுத்தது...

அவனது வார்த்தையில் இருந்த உண்மை அவளது மனதை சுட்டது... அண்ணன் மீதான அன்பை காதல் சந்தேகம் கொள்ளச் செய்துவிட்டது... அவளது மனத்திரையில் சிறு வயது முதல் தன்னைப் பேணி பாதுகாத்த அண்ணனின் செயல்கள் படமாய் ஓட அடுத்த நொடி,

"அண்ணா..." கதறலுடன் அக்ஷயின் காலில் விழுந்தவள், "என்னை மன்னிச்சிருங்கண்ணா..."

காலில் விழுந்து கதறிய தங்கையைத் தூக்கி ஆறுதல் சொல்ல அவன் மனம் விழைந்த போதும் ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது... அவள் மேல் வைத்த பாசம், நம்பிக்கை பொய்த்து போனதாலோ என்னமோ அவனால் இந்த மன்னிப்பை மனதார ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அவளின் நடவடிக்கையை அவனால் ஜீரணிக்க முடியவில்லை...

அவளை விட்டு எழுந்தவன் ஜன்னல் அருகே சென்று வெளியில் வெறித்துப் பார்த்தான்... பின் மெதுவே,

"நான் யாரு உன்னை மன்னிக்க...? உன் கணவனிடம் மன்னிப்பை கேட்டு அவனுடன் ஒழுங்கா வாழும் வழியைப் பாரு... நான் விசாரித்த வரையில் ஆதர்ஷ் ரொம்ப நல்லவன்... ரஞ்சித்தை மாதிரி அயோக்கியன் இல்லை... ஆதர்ஷ் மனம் கோணாமல் நடந்து உன் வாழ்க்கையைக் காப்பாத்திக்கப் பாரு..." அழுத்தமாய்க் கூறிய அண்ணனின் குரலில் இருந்த அந்நியத்தன்மை அவள் மனதை உயிரோடு கொன்றது...

"அண்ணா..." என்று அழைத்தபடி அவன் அருகில் வந்தவளை, சைகையால் அங்கேயே நிற்குமாறு கூறியவன்,

"இனி அப்படிக் கூப்பிடாதே... இனி நீ எனக்குத் தங்கையும் இல்லை... நான் உனக்கு அண்ணனும் இல்லை... ஆனால் அண்ணனாய் என்னோட கடமைகளை நான் தவறாமல் செய்வேன்... இப்போ நீ போகலாம்..." வாயிலை நோக்கி கையைக் காட்டினான்...

"அண்ணா..." மீண்டும் பேச முயன்றவளை பார்க்காமல் வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டான்...

அக்ஷயின் குணத்தைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அவனாய் ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதில் இருந்து மாற மாட்டான்... அவனாய் மாறும் வரை அவன் அருகில் யாரும் நெருங்க முடியாது...

யானை தன் தலையில் மண்ணை வாரி போட்டுக் கொள்வது போல் அவள் தன் சுயநலத்தால் அண்ணனின் அன்பை இழந்து அநாதை ஆனாள்...

அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் அனி வாயிலை நோக்கி சென்றாள்...

தங்கையே ஆனாலும் தவறு செய்தவளை மன்னிக்க அவனால் முடியவில்லை... தவறு என்றால் சாதாரணத் தவறு அல்ல... நம்பிக்கை துரோகம் அல்லவா தனக்குச் செய்து இருக்கிறாள்...

அவள் மேல் உயிரை வைத்து இருந்த தன்னை ஏமாற்ற அவளுக்கு எப்படி மனம் வந்தது... தங்கை அளித்த ஏமாற்றத்தின் வலியை அவனால் தாங்க முடியவில்லை...

கண்களை இறுக மூடி அதை ஜீரணிக்க முயன்றவனின் கண்கள் கலங்கியது...

அழகிய ரோஜா பூக்குவியலாய் மென்மையாய் அவன் கையில் ஏந்திய சிறு குழந்தையான தங்கையின் மலர் முகத்தை நினைத்து பார்த்தவனுக்குச் சொல்லொண்ணா வேதனை எழுந்தது...

என்ன நினைத்தானோ கண்களைத் திறந்தவன் தங்கையைத் தேடினான்... வெளிப் படியில் இறங்கி கொண்டு இருந்தவளை கண்டு வேகமாய் வாயில் பக்கம் வந்தவன்,

"முத்து..." என்று வேலை செய்பவனை அழைத்தான்...

அவனின் குரலுக்குப் பணிந்து வந்து நின்றவனிடத்தில் கார் சாவியைக் கொடுத்து, "மேம்மை... அவங்க வீட்டில் விட்டுட்டு வந்துடு..." என்றவன் தங்கையைத் திரும்பியும் பார்க்காமல் உள்ளே சென்றுவிட்டான்...

அண்ணினின் அக்கறையில் அனியின் கண்கள் பனித்தது... அக்கறை கொண்ட அண்ணனின் அன்பை கொன்ற தன்னைக் குறித்து அவளுக்கே அசிங்கமாய் இருந்தது... கழிவிரக்கத்தில் தன் மீதே அவளுக்கு ஆத்திரம் வந்தது...

ஒன்றும் பேசாது காரில் ஏறி அமர்ந்தவள் அண்ணன் மனம் என்றாவது ஒரு நாள் மாறும் என்ற நம்பிக்கையில் தன் கணவன் வீடு நோக்கி பயணமானாள்...

வீட்டிற்கு வந்த அனி அழுது அழுது ஓய்ந்து போனாள்... எதை நினைத்து அழுதாள் என்று அவளுக்கே தெரியாது... ஏமாற்றிய காதலனை நினைத்தா இல்லை அவனுக்காக உடன் பிறந்தவனைத் தூக்கி எறிந்த தனது அகங்காரத்தை

நினைத்தா எதுவென்று தெரியவில்லை கண்களில் கண்ணீர் வற்றும் வரை அழுது கொண்டு இருந்தாள்...

மருத்துவமனையில் இருந்து வந்த ஆதர்ஷ் மனைவியின் வீங்கி சிவந்து இருந்த முகத்தைக் கண்டு பதறிப் போனான்...

"என்ன அனி இது...? ஏன் இப்படி முகம் வீங்கிருக்கு...? அழுதியா...?" அவனது கரிசனையில் மீண்டும் அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அவளது துயரத்தில் தாலி கட்டிய கணவனை எப்படி மறந்தாள்...? திருமணம் முடிந்த நாளில் இருந்து இன்று வரை அன்பை மட்டுமே காண்பிக்கும் கணவனிடத்தில் அவள் காட்டியது எல்லாம் வெறுப்பு அன்றோ... அவள் மட்டும் ரஞ்சித்தை நம்பி சென்று இருந்தால் முதலில் பாதிக்கப்பட்டு இருப்பவன் அவன் அன்றோ... இப்படிப்பட்ட நல்லவன் மேல் எப்படிப்பட்ட அபாண்டமான பழியைத் தூக்கி போட்டாள்...

"என்னம்மா...?" கனிவோடு கேட்டவன் அவள் அருகில் அமர்ந்து அவளது கண்ணீரை துடைக்க அவ்வளவு தான் அத்தனை நேரம் பற்றுக்கோல் இல்லாமல் தள்ளாடி கொண்டு இருந்தவள் உடைந்து போய் அவனது தோளில் சாய்ந்து கதறினாள்...

"ஹனி... இப்போ எதுக்கு இந்த அழுகை...?" என்று கேட்டவனுக்கு அவளிடத்தில் பதில் இல்லை...

"உங்க வீட்டுக்கு போகணும் போல இருக்கா... நாளைக்குப் போகலாமா...? நானே கூட்டிட்டு போறேன்..." இதமாய் அவளை அணைத்து கொண்டவன் சிறு குழந்தையைச் சமாதானப்படுத்துவது போல் சமாதானப்படுத்தினான்...

அவனின் அன்பில் அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது... 'வேண்டாம்' என்பது போல் தலை அசைத்தவள் இன்னமும் அவனுள் ஒடுங்கி அவனது நெஞ்சோடு முகம் புதைத்தாள்...

முதன் முறையாய் தானாய் அவன் அருகில் நெருங்கி வரும் மனைவியை நினைத்து உள்ளம் மகிழ்ந்தாலும் அவளது அழுகைக்கான காரணம் தெரியாமல் குழம்பி தவித்தான்... ஆனாலும் அவனது கைகள் அவளைத் தன்னோடு இறுக்கி கொண்டது...

"சாப்பிட்டியா..." அதற்கும் ‘இல்லை’ என்று தலையாட்டியவளை கண்டு புதினமாய் இருந்தது அவனுக்கு...

'என்னவானது இவளுக்கு...' மனம் கேள்வி கேட்டாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு,

"நான் போய் உனக்குச் சாப்பாடு எடுத்துட்டு வர்றேன்..." அவளை விலக்கி விட்டு அவன் எழ முயற்சித்தான்...

தூங்கும் குழந்தை பொம்மையை விடாமல் பற்றிக் கொண்டு இருக்குமே அது போல் துயரத்தில் இருந்த அவள் அவனது விலகலில் மனம் சிணுங்கியவளாய் அவனைப் போக விடாமல் செய்வதற்காக அவனது கழுத்தில் கரத்தை கோர்த்து அவனது நெஞ்சில் இன்னமும் ஆழமாய் முகம் புதைத்தாள்... இதை அறிந்து அவள் செய்யவில்லை... ஆறுதல் தேடி தத்தளித்த அவளது மனம் அவனின் அருகாமையை நாடியது... அதே போல் அவளது கண்ணீரும் குறையவில்லை...

அவளது செயலில் நிலை தடுமாறி படுக்கையில் அமர்ந்தவன் இப்போது உள்ளம் தடுமாறி நின்றான்... அவனது இளமை உணர்வுகள் அவளது அருகாமையில் விழித்து எழ ஆரம்பித்தது...

"ஹனி... ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்டா..." அப்படியாவது அவள் தன்னை விட்டு விலக மாட்டாளா என்று...

"வேணாம்..." இதை மட்டும் அழுகையுடன் கூறியவள் தலையை நிமிர்த்தவில்லை...

'கடவுளே...' என்று ஆயாசமாக இருந்தது அவனுக்கு...

"ப்ளீஸ் ஹனி... நானும் மனுசன் தான்..." தவிப்பாய் தாபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

அவனது வார்த்தையில் புரியாமல் ஏறிட்டவள் அவனது கண்ணில் வழிந்த காதலில் கட்டுண்டு போனாள்...

மனதில் ரஞ்சித்தின் மீது காதல் இருப்பதாய் நினைக்கும் போதே ஆதர்ஷின் காதலில் கரைந்தவளுக்கு இப்போது நிர்மலமான மனநிலையில் அவனின் காதல் பார்வையில் அப்படியே வசீகரிக்கப்பட்டாள்...

"அபிக்குக் கல்யாணம் முடியட்டும் ஹனி... அதுக்கு அப்புறம்..." முடிக்காமல் இழுத்தவனின் கூற்றைப் புரிந்து கொள்ளும் நிலையில் அவள் இல்லை... ஆனாலும்,

"ம்... சரி..." என்று சொன்னவள் அவனின் அருகாமையை விட்டு மட்டும் விலகவில்லை...

"இப்போ சாப்பிட போகலாமா...?" அனுமதி கேட்டவனைக் கண்டு பரிதாபமாய் இருக்க அவள் சரி என்று தள்ளி அமர்ந்தாள்...

இரவு உணவு முடித்து வந்து மீண்டும் அறைக்குள் வந்த ஆதர்ஷ்க்கு மீண்டும் சோதனை ஏற்பட்டது... எப்போதும் அவனிடம் நெருங்காமல் விலகி படுக்கும் மனைவி இன்று தானாய் அவனை ஒட்டி கொண்டு படுத்தாள்...

அனியின் மனதில் அண்ணன் கூறிய வார்த்தைகள் நிலையாய் நின்று இருக்க இன்று முதல் ஆதர்ஷின் மனைவியாய் மாற முற்பட்டாள்...

அவனது கழுத்தை கட்டி கொண்டு நெஞ்சில் முகம் புதைத்துப் படுத்த இளம் மனைவியை வெறுமனே பார்த்துக் கொண்டு படுப்பதற்கு அவன் என்ன முற்றும் துறந்த முனிவனா... தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல்,

"ஹனி..." தாபத்துடன் அழைத்தவன் அவளது கழுத்தில் முகம் புதைத்தான்...

காதல் என்று வந்தால் மனிதன் கடமையை மறந்துவிடுவது இயல்பு போலும்... அதைத் தான் ஆதர்ஷ் செய்தான்... அனியும் அவனது அழைப்பை ஏற்று அவனுள் பாந்தமாய் அடங்கினாள்... அங்கே இனிய இல்லறம் அழகாய் மலர்ந்தது...

காதலில் அவசரப்பட்ட அனி திருமண வாழ்க்கையிலும் அவசரப்பட்டாள்... இப்போதும் காதலுக்கான அர்த்தத்தைத் தவறாகவே புரிந்து கொண்டாள்... கணவனுடன் மனம் விட்டுப் பேசாமல் தன்னைப் பற்றி முழுதும் எடுத்துச் சொல்லாமல் அவள் தன் உடலை மட்டுமே அவனுடன் பகிர்ந்து கொண்டாள்...

வேறு ஒருவன் தொட்ட உடலை கணவனுக்குக் கொடுக்கிறோம் என்ற குற்றவுணர்வு சிறிது கூட அவளுக்கு இல்லை... மொத்தத்தில் காதலுக்கான வரையறை அவளிடத்தில் தவறான வரையறையாக இருந்தது...

தான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பது புரியும் போது அவளுக்கு உண்மையான காதல் என்ன என்று புரியும்... அப்போது உண்மையான காதல் அவளுடன் இருக்குமா என்பது கேள்விக்குறியே...

****************************

இரு மாதம் அமைதியாய்க் கழிந்தது... நிஷாவின் உடல்நிலையைப் பொருட்டு விக்டரும் சற்றுப் பொறுமை காத்தான்...

ஒரு சுபயோக தினத்தில் ரஞ்சித்தும், அசோக்கும் விக்டரால் கடத்தப்பட்டனர்... இனி அவர்களின் வாழ்வு அக்ஷய், விக்டர் கையில்... அக்ஷய் மன்னித்து விட்டாலும் விக்டர் அவர்களை விடப் போவது இல்லை... அக்ஷயும் இப்போதைய நிலையில் அவர்களை மன்னிப்பதாய் இல்லை...

அந்தப் புறநகர் பகுதி வழியாய் இரவு நடந்து வந்து கொண்டு இருந்த அபிக்கு சிறிது பயமாக இருந்தது... அன்று ஒரு திருமண வீட்டாரின் உடைகளை நேரில் கொண்டு வந்து கொடுக்க வேண்டியதாய் போயிற்று... அதன் வேலைப்பாடு செய்து முடிக்கச் சிறிது தாமதமாகிவிட்டதால் அவளே கொண்டு வந்து கொடுத்தாள்... நாளை திருமணம் என்ற நிலையில் இன்று தான் அவசரமாய் அதைச் செய்து முடித்தாள்...

'எல்லாம் அந்தக் கடன்காரன் அக்ஷயால் வந்தது... இவனால் என் வேலைகளை நிம்மதியாய் என்னால் பார்க்க முடியவில்லை...' மனதில் அவனைத் திட்டியபடி கால்களை எட்டி போட்டாள்...

அங்கே சாலை ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த காரை கண்டதும் யோசனையாய் அதைப் பார்த்தாள்...

'இது அவன் கார் அல்லவா...' என்று நினைத்தவள் அதன் எண்ணை பார்த்தாள்... அது அக்ஷயின் கார் தான்...

'இவன் எதுக்கு இங்கே வந்தான்...' யோசனையாய் நினைத்தவள் சுற்றும் முற்றும் பார்க்க அங்கே தெருவிளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் அக்ஷயும் வேறு ஒருவனும் நடந்து செல்வது தெரிந்தது...

புருவங்கள் நெறிபடத் தீவிரமாய் யோசித்தவளின் காதில், 'இனியும் தாமதிக்க முடியாது... முடிச்சிரு விக்டர்...' என்று கூறிய அக்ஷயின் வார்த்தைகள் ஒலிக்க அதை இதோடு நினைத்து பார்த்தவள் கண்கள் பளிச்சிட்டது...

'வசமாய் மாட்டினியாடா மவனே... எனக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கட்டும் உன் முகத்துல கரியை பூசல நான் அபி இல்லைடா...' மனதுக்குள் குதூகலமாய் நினைத்தவள் மெதுவே அவர்களைப் பின் தொடர்ந்தாள்...

அவனால் பாதிக்கப்பட்ட அவளது மனது அவனுக்கு எதிராய் செயல்பட வைத்தது...

பாழடைந்த கட்டிடத்திற்குள் அவர்கள் செல்ல வெளியில் தேங்கிய அவள் அங்கிருந்த ஜன்னல் வழியே உள்ளே நோட்டம் இட்டாள்...

இரு ஆண்களைத் தூணில் கட்டி வைத்து இருந்தனர்... அதைக் கண்டதுமே அவளது கண்கள் அச்சத்தில் விரிந்தது...

'அடப்பாவி உண்மையில் இவங்களைக் கொல்ல போறானா...? இவன் ஒரு கொலைக்காரனா...' அக்ஷயை நினைத்து பயமாய் இருந்தது அவளுக்கு...

"விக்டர்... அந்த நாய் என்ன சொல்லுது...?" கேட்டுக் கொண்டே அக்ஷய் ரஞ்சித்தின் முன் வந்து நின்றான்...

"அவனை யார் சார் பேச விட்டா... விடாம கொடுத்த அடியில் மயங்கி போய்க் கிடக்கிறான்..." சொல்லும் போதே விக்டருக்குக் கோபம் கொப்பளித்தது...

"டேய்..." ரஞ்சித்தின் கன்னத்தைத் தட்டிய அக்ஷய் அவன் மெல்ல கண் திறந்ததும்,

"எவ்வளவு தைரியம் இருந்தா என் தங்கச்சியோட எடுத்த வீடியோவை நெட்ல போடுவ... உன்னை நம்பி காதலிச்சவளை இப்படித் தான் கேவலப்படுத்துவியா...?" என்று ஓங்கி அவன் கன்னத்தில் அடிக்க...

"என்னைச் சொல்ற... உன் தங்கச்சி என்ன ஒழுங்கா... அவளா தானே விரும்பி மயங்கி என் கிட்ட வந்தா..." மேலே தாகாத வார்த்தையில் பேசி கொண்டு போனவனைக் கண்டு ஆத்திரம் அடைந்த அக்ஷய் தாறுமாறாய் அடித்தான்... அவனது கை ரஞ்சித்தின் உடலில் எங்கே எல்லாம் பட்டது என்று அவனுக்கே தெரியாது...

அவர்கள் பேசிய விசயத்தைக் கேட்டு அபி அதிர்ச்சியில் வாயடைத்து போனாள்... அனியை பற்றித் தான் பேசுகிறார்கள் என்பதும், அது எந்த மாதிரியான காணொளி என்பதைப் பற்றியும் அறியாத சிறுமி அல்ல அவள்...

'அண்ணியா இப்படி...?' அவளுக்கு அருவருப்பாய் இருந்தது...

அதே சமயம் அண்ணனை எண்ணி மனம் கலங்கி போனாள்... சிறிது நாட்களாக அவர்களிடத்தில் காணப்படும் அந்நியோன்யம் அவர்களின் சந்தோசமான மணவாழ்க்கையைத் தெளிவாய்க் காட்டியது... ஆனால் இந்த விசயம் ஆதர்ஷுக்கு தெரிந்தால் என்ன ஆவானோ... அவனை நினைத்துப் பரிதாபம் ஏற்பட்டது...

அக்ஷய் மாதிரி பணக்காரன் தன் வீடு தேடி பெண் கொடுக்கும் போதே தெரிந்து இருக்க வேண்டாமா அதில் என்ன ஓட்டை இருக்கிறது என்பது... தன் அண்ணன் மேல் கொண்ட நம்பிக்கை அவளைத் தவறாக எண்ண விடவில்லை... அழகு, படிப்பு, குணம் எல்லாம் அமைந்த அண்ணனுக்கு ஏற்ற பெண் அனி என்று உள்ளம் மகிழ்ந்து போனாளே... அதற்கு நல்ல பரிசினை இந்தப் பணக்கார குடும்பம் கொடுத்துவிட்டது...

'ஆக இவன் தங்கையை வாழ வைப்பதற்காக என்னை மிரட்டி இருக்கிறான்... த்தூ... இந்த மாதிரி ஒரு தங்கைக்காகவா என்னை நீ மிரட்டினாய்...? என் அண்ணனை ஏமாற்றி, என்னை மிரட்டி என்ன காரியம் எல்லாம் பண்ணி இருக்க நீ... எல்லாம் பணம் இருக்கும் திமிர் தானே... உனக்கு இருக்குடா...? உன் திமிரை அடக்கி தலை குனிய வைக்கிறேன் டா...' அவள் மனதில் வன்மம் கூடி கொண்டே போனது...

"விக்டர்... இவங்களை இப்படியே பட்டினி போட்டு சித்ரவதை செஞ்சி ஏண்டா உயிரோடு இருக்கோம்ன்னு கதறி இவனுங்க உயிரை விடணும்... அதுக்கு அப்புறம் இவங்க பிணத்தைக் கடல் மீனுக்கு இரையாய் போட்டுரு..." அக்ஷய் சொல்லும் போதே ரஞ்சித், அசோக் கண்கள் பயத்தைப் பிரதிபலித்தது...

அதே போல் அபியின் கண்களும் பயத்தைப் பிரதிபலித்தது...

"நீங்க போங்க சார்... நான் இவங்களைப் பார்த்துக்கிறேன்..." விக்டர் சொன்னதும் அக்ஷய் வெளியில் வந்தான்...

அபி சுவரோடு சுவராய் பல்லி போல் ஒடுங்கி நின்றாள்...

அக்ஷய் காரை கிளப்பிக் கொண்டு சென்றது அவளது காதில் விழுந்தது... ஆனாலும் நகர முடியாமல் பயத்தில் உறைந்து போய் நின்று இருந்தாள்... இந்த மாதிரி காட்சிகளைப் படத்தில் மட்டும் கண்டவளுக்கு இது அச்சத்தைக் கொடுத்தது...

"ஏண்டா நாயே... நிஷா கிட்ட சொன்னியாமே... உன் புருசனை வர சொல்லுன்னு... அவ புருசன் வந்திருக்கேன்... என்ன செய்ய முடியும்டா உன்னால..." என்ற விக்டர் ரஞ்சித்தின் முடியை கொத்தாய் பற்றி,

"என் நிஷா மேலயாடா கையை வச்ச உன் கையை ஒடிக்க வேண்டாமா..." என்றபடி கட்டப்பட்டு இருந்த அவனின் கையைப் பிடித்து வளைக்க உண்மையில் அது உடைந்து போனது...

கை உடைந்த வலியில் ரஞ்சித் அலறிய சத்தம் அந்தப் பகுதியில் பயங்கரமாய் எதிரொலித்தது...

அதில் தன்னுணர்வு அடைந்த அபி வேகமாய் அங்கிருந்து செல்ல துவங்கினாள்...

வீட்டிற்கு வந்தும் அவளின் படபடப்பு குறையவில்லை...

"அபி ஏன் ஒரு மாதிரியா இருக்க...?" என்று கேட்ட அண்ணனிடம் ஏதோ சொல்லி சமாளித்தவள் அண்ணியின் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் அறைக்குள் சென்று முடங்கினாள்...

ஏனோ அனியை பற்றி அண்ணனிடம் கூற அவளுக்குக் குழப்பமாய் இருந்தது... சந்தோசமாய் இருக்கும் அண்ணன் வாழ்க்கையைக் குலைக்க அவளுக்கு மனம் வரவில்லை...

அதே சமயம் அனியை பற்றிய விசயங்களையும் ஜீரணிக்க முடியவில்லை...

படுக்கையில் முடங்கியவளுக்கு அக்ஷயை சுற்றியே மனம் ஓடியது... இப்போது அக்ஷய் மீது இருந்த கோபம் போய் அவன் மீது பயம் எழுந்தது...

'இப்படித்தான் தன்னை எதிர்ப்பவர்களை அழித்து விடுவானோ... அப்போ என்னையும் அழித்து விடுவானோ...'

அந்நேரம் ஆதர்ஷ் பாட்டியிடம் பேசி கொண்டு இருந்தது காதில் விழுந்தது...

"ஆச்சி... அபியை பெண் பார்க்க இந்த வாரம் வர்றாங்க... மாப்பிள்ளை என்னோட ஸ்கூலில் படிச்சவன் தான்... அதனால முதன் முறை ஏற்பட்ட தவறு மாதிரி இந்தச் சம்பந்தத்தில் நடக்க வாய்ப்பில்லை..." நம்பிக்கையுடன் கூறியவனின் வார்த்தைகளைக் கேட்டு அபியின் கண்கள் கலங்கியது...

'அந்த அரக்கன் உயிருடன் இருக்கும் வரை உன் தங்கச்சிக்குக் கல்யாணம் என்பதே கிடையாது அண்ணா... அவன் தங்கை வாழ்றதுக்கு உன் தங்கை வாழ்க்கையைப் பலியிட நினைக்கிறான் அண்ணா...' கலங்கியவள் மனதில் அக்ஷய் மீதான கோபம் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது...

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள், 'எப்படியும் அவன் என்னை வாழ விடப் போவது இல்லை... அப்படியே நான் செய்யும் காரியத்துக்கு அவன் என் உயிரை எடுத்தால் எடுத்து விட்டு போகட்டும்... ஆனால் அதற்கு முன்னால் அவனை நான் இந்த ஊரார் முன்னிலையில் அவமானப்படுத்தியாக வேண்டும்...' என்று உறுதியாய் நினைத்தாள்...

அவள் நினைத்தபடி மறுநாள் அந்தப் பாழடைந்த கட்டிடம் இருக்கும் பகுதியில் இருக்கும் காவல் நிலையத்தில் அக்ஷய் மீது புகார் அளித்தாள்...

தனக்காகக் கூடக் காவல் நிலையம் போக அஞ்சியவள் இன்று அக்ஷயின் திமிரை அடக்க வேண்டும் என்பதற்காகக் காவல் நிலையம் சென்றாள்...

"நீ என்னம்மா சொல்ற... திடுப்புன்னு வந்து நீ சொன்னதுக்காக எல்லாம் உடனே யாரையும் அரெஸ்ட் பண்ண முடியாது... அதுவும் நீ சொல்ற ஆள் ரொம்பப் பெரிய இடம்... அங்கே கை வச்சா என் வேலை எனக்கு நிலைக்காது..." அந்த அதிகாரி அவளை நம்ப மறுத்தார்...

"சார்... நான் என் ரெண்டு கண்ணால பார்த்தேன்... நீங்க என் கூட வாங்க... உண்மையா இல்லையான்னு உங்களுக்கே தெரிஞ்சிடும்..." என்றவளை சலிப்புடன் பார்த்தவர் அங்கிருந்த ஏட்டை அழைத்து,

"யோவ்... இந்தப் பொண்ணு சொல்லுறது உண்மையா இல்லையான்னு பார்த்துட்டு வந்து சொல்லு..."

அவரை அவளுடன் அனுப்பி வைத்தார் அந்த அதிகாரி...

சில நிமிடங்களில் ஏட்டு அவருக்கு அழைத்து அபி கூறிய விசயத்தை உறுதி செய்யக் காவலதிகாரி அங்கே விரைந்து வந்தார்...

அங்கே ரஞ்சித்தும் அசோக்கும் பசி பட்டினி மற்றும் அடி உதையில் குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்தனர்...

திகைத்து போன அந்த அதிகாரி அவர்களை உடனே மருத்துவமனையில் சேர்த்து விட்டு நேரே அக்ஷயிடம் சென்று விசாரித்தார்...

அதைக் கேட்டு முதலில் அதிர்ந்த அக்ஷய் பின் அதை நிர்தாட்சண்யமாய் மறுத்தான்...

"சார் அபிங்கிறவங்க நீங்க தான் இதைச் செய்ததா சொல்றாங்களே... சாட்சி ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கே..."

அபி என்ற வார்த்தையில் ஒரு கணம் கண்களைச் சுருக்கியவன், "அபி... ம்... அந்தப் பேரில் எங்க கம்பெனியில் ஒருத்தர் வேலை செய்றாங்க... மத்தபடி

எனக்கும் அவங்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை... யாரோ ஒருத்தங்க சொன்னதுக்காக நான் குற்றவாளி ஆகிற முடியாது... உண்மையில் நான் தான் இதைச் செஞ்சேன்னு உங்களால ஆதாரத்தோட நிரூபிக்க முடிந்தால் நானே உங்க விசாரணைக்கு வர்றேன்... அதே சமயம் எனக்கும் இதுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை..." என்று கை கூப்பியவனிடத்தில் மேலே விசாரிக்க முடியாமல் போனது...

அக்ஷயும் அபி மேல் ஆத்திரத்தில் இருந்தான்... இந்த விசயத்தில் அபி குறுக்கிடுவாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... ‘இவளுக்கு எப்படி இது தெரியும்...?’ விடை தெரியாமல் குழம்பி போனான்...

'இவளை என்ன தான் செய்வது...?' மனம் வெதும்பி போனான்... ஆனால் ஒரு யோசனையும் அவன் மனதில் தோன்றவில்லை... குழப்பமாய் இருந்தது...

'என்ன செய்தாலும் இவளின் திமிரை அடக்க முடியவில்லை...' மனதில் கோபமாய் நினைத்தவனுக்கு ரஞ்சித்தும் அசோக்கும் காவல்துறை கண்காணிப்பில் சென்றுவிட்டதை அறிந்து இன்னமும் ஆத்திரம் அதிகரித்தது...

"எப்படியும் அவங்க சாவு என் கையில் தான் சார்..." விக்டர் அவனை ஆறுதல் படுத்தினான்...

காவல் நிலையத்தில் கிடைத்த தோல்வியில் அபி துவண்டு போனாள்... என்ன செய்தும் அக்ஷயை மாட்ட வைக்க முடியவில்லையே என்று மனம் நொந்து போனாள்... அவனைக் காண பிடிக்காமல் வேலைக்குச் செல்லாமல் விடுப்பில் அவள் இருந்தாள்... ஆதர்ஷிடம் இதைப் பற்றி மூச்சு விடவில்லை...

அக்ஷய் அபியை சந்திக்கப் பலமுறை முயன்று தோல்வி அடைந்தான்... வீட்டில் அடைந்து கிடப்பவளை அவனால் சந்திக்க முடியவில்லை... அனியிடம் கோபம் கொண்ட பின்

அவளைச் சாக்கிட்டும் அபியின் வீட்டிற்கு அவனால் செல்ல முடியாமல் போனது...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ரஞ்சித் உயிர் பிழைத்து கொண்டாலும் நினைவு இழந்த நிலையில் இருந்தான்... நோஞ்சான் உடம்புக்காரனான அசோக் தன் உயிரை இழந்தான்...

மகனை இழந்த சோகத்தில் இருந்த அவனது தந்தை அவனது காரியம் முடிந்ததும் முதன் வேலையாய் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்...

"என் மகன் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டு இருக்கிறான்... ஆனால் கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்யக் காவல்துறை மெத்தனம் காட்டுகிறது... அதனால் இந்த வழக்கை விரைந்து விசாரிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்...' என்று ஒரு மனுவை தாக்கல் செய்தார்...

உயர்நீதிமன்றத்தின் நீதிபதியான அவரின் மனு உடனே பரிசீலிக்கப்பட்டுக் காவல்துறைக்கு இந்த வழக்கில் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளச் சொல்லி உத்தரவிட்டது...

அதைக் கேள்விப்பட்ட அக்ஷய்க்கு முதன் முறையாய் மனதில் பயப்பந்து உருண்டது... அக்ஷய்க்குத் தன்னைப் பற்றி எல்லாம் பெரிதாகக் கவலை இல்லை... ஆனால் அனியின் வாழ்க்கையை நினைத்து பெரும் கவலையாக இருந்தது... ஏனெனில் ரஞ்சித் நினைவு திரும்பி அவனைக் காட்டி கொடுத்து விட்டால் ஏன், எதற்கு, என்று தோண்டி துருவும் போது அனியின் விசயம் தேவையில்லாமல் வெளிச்சத்துக்கு வரும்... அதன் பின் நிகழும் நிகழ்வுகள்...??? நினைக்கும் போதே அவனுக்குத் தலை வெடித்தது...

திடீரென்று அபியின் நினைவு மனதில் எழுந்தது... அனியின் விசயம் ஏதும் அபிக்கு தெரிந்து இருக்குமோ என்ற எண்ணம் தோன்றிய போதே...

'இது ஆதர்ஷ்க்கு தெரிந்தால்...?' மனதில் கேள்வி முளைக்க அவன் அபியை சந்திக்கத் தயாரானான்...

ரஞ்சித்தின் வாயை கூட அவனால் கட்டி போட்டு விட முடியும்... இல்லை அவனின் உயிரை பறிக்க முடியும்... ஆனால் அபியை அவனால் ஒன்றும் செய்ய முடியாது... அது தான் உண்மையும் கூட... தங்கையின் உறவினளான அவள் மீது கை வைக்க அவன் மிகவும் யோசித்தான்...

வீட்டில் தாயிடத்தில் யாரோ ஒரு சாமியார் அனியின் வாழ்க்கை நலனுக்காகப் பூஜை செய்யச் சொன்னதாய் சொல்லியவன் அதற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி திட்டமிட்டு அனி மற்றும் அவளது கணவன், பாட்டியை தனது வீட்டிற்கு வரவழைத்தான்... அவனுக்கு நன்கு தெரியும் அபி அவனது வீட்டிற்கு வர மாட்டாள் என்று... அவன் நினைத்தபடி அபி அங்கு வரவில்லை...

தனிமையில் இருக்கும் அபியை சந்திக்க அவன் முடிவு செய்து வெளியில் கிளம்பியவனைத் துளசி பிடித்துக் கொண்டார்...

“அக்ஷய்... இவ்வளவு ஏற்பாடு பண்ணிட்டு நீ இல்லாமல் எப்படிப்பா...?”

“மாம்... முக்கியமான வேலை இருக்கு... போயிட்டுச் சீக்கிரம் வந்திடறேன்...” பொய்யாய் சிரித்து மழுப்பியவன் எல்லோரிடமும் விடைப்பெற்று வெளியில் வந்தான்...

காரில் ஏறி அமர்ந்தவன் நேரே அபியின் வீடு நோக்கி சென்றான்... வேலைக்கும் வராமல் அவனைச் சந்திப்பதை தவிர்க்கும் அபியை சந்திக்க அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை...

அபி தன் கடைக்குக் கூடச் செல்லாமல் வீட்டில் இருந்தாள்... மனம் முழுவதும் ரணமாய் வலித்தது... தனக்கு வலிக்கச் செய்தவனை வலிக்கச் செய்ய அவளால் முடியாமல் போனதே...

அந்நேரம் அழைப்பு மணி அழைக்கக் கதவை திறந்தாள் அவள்... வெளியில் நின்று இருந்த அக்ஷயை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... அவளையும் அறியாது மனதில் படபடப்பு தோன்றியது...

அவள் ‘உள்ளே வா’ என்று வாய்விட்டு அழைப்பாள் என்று எதிர்பார்க்காதவனாய் தானாய் அவன் வீட்டினுள் நுழைந்தான்...

"நீ எதுக்கு இங்கே வந்தே...?" அவள் கேட்கும் போதே...

வந்தவன் ஒன்றும் பேசாது அவளின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்... அவள் அதிர்ந்து போனவளாய் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்று விட்டாள்...

“எவ்வளவு தைரியம் இருந்தா என் மேலேயே போலீஸ் கம்ப்ளையின்ட் கொடுத்து இருப்ப... உன்னை எல்லாம்...” அவளின் கழுத்தை நெறிக்கப் போனவன்,

“ச்சே...” என்று உதறியபடி கையைக் கீழே போட்டான்...

“நான் தான் அவங்களைக் கடத்தி வச்சேன்னு நீ பார்த்தியா...? எதுக்கு என்னைப் பத்தி வீணாய் பொய் சொல்ற... என்னைப் பழி வாங்கணும்ன்னு கங்கணம் கட்டிக்கிட்டு திரியறியா?”

அவனின் அடுத்தடுத்த குற்றச்சாட்டும் வார்த்தையில் தன் அதிர்ச்சியில் இருந்து மீண்டவள் தைரியமாய் அவனைப் பார்த்தாள்...

"நான் என்ன பொய்யா சொன்னேன்... உண்மையைத் தானே சொன்னேன்... நீ தானே அவங்களை அடைச்சு வச்சி இருந்தது... போலீஸ்காரங்க வேணும்ன்னா நீ சொல்றதை நம்பலாம்... ஆனால் கண்ணால் பார்த்த நான் உன்னை நம்ப மாட்டேன்... நீ தான் குற்றவாளி..." என்றவளை எரிச்சலுடன் பார்த்தவன்,

"லூசு மாதிரி உளறாதே... அவங்க என்ன செஞ்சாங்கன்னு உனக்குத் தெரியுமா...?" தன்னையும் அறியாது தன்னைத்

தானே அவன் காட்டி கொடுத்தான்... அதை அவனும் உணரவில்லை... அவளும் அறியவில்லை.

"ஓ... பேஷா தெரியுமே... உன் தங்கையும், அவனும் அடிச்ச கூத்து எல்லாம் எனக்கு நல்லா தெரியுமே... அதை என் ரெண்டு காதால கேட்டேன்..." இளக்காரமாய்க் கூறியவளை கண்டு அவன் அதிர்ந்தான்...

"நீ அவங்க கிட்ட பேசியது எல்லாம் நான் கேட்டேன்..." என்றவள் அவன் அருகே வந்து,

"ச்சீ இப்படிப்பட்ட கேவலமான தங்கச்சிக்காகவா என்னை நீ மிரட்டின... என்னைப் பழிவாங்கின... உன் தங்கச்சி வாழ்க்கையைப் பெருசா தெரிஞ்ச உனக்கு உன் தங்கச்சி மாதிரி ஒரு பெண்ணான என் வாழ்க்கை பெருசா தெரியலைல... இதை என் அண்ணன் கிட்ட சொன்னா உன் தங்கச்சி வாழ்க்கை என்னாகும்ன்னு யோசிச்சு பார்த்தியா... என் அண்ணன் எவ்வளவு நல்லவன் தெரியுமா... அவனுக்குப் போய்ப் போயும் போயும் உன் தங்கை மாதிரி கேவலமான பிறவியா மனைவியா வரணும்... என் வாழ்க்கையை நாசமாக்கின மாதிரி நீ என் அண்ணன் வாழ்க்கையும் நாசமாக்கிட்ட..." பேசும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் விழிகள் மட்டும் நொடி பொழுதில் சுருங்கி விரிந்தது...

கோபமாய்ப் பேசியவளை அவன் சிறிதும் லட்சியம் செய்யவில்லை... அவள் வார்த்தையில் இருந்த வலியை அவன் உணரவில்லை... தன் நலம் மட்டுமே பெரிதாக எண்ணினான்... பணக்கார வர்க்கத்தின் பிரதிநிதியாய் அவன் நின்று இருந்தான்... அதனால் வார்த்தைகளும் திமிராய் வந்தது...

“வெல்... உனக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சா... ரொம்ப நல்லதாய் போச்சு...” என்று அலட்சியமாய்த் தோளை குலுக்கியவன்,

“இதுக்காக உன் கிட்ட நான் கெஞ்சிட்டு இருக்க மாட்டேன்... நான் இப்படித்தான்... என் வாழ்க்கையில் குறுக்கிட்டா

அவங்களுக்கு ஏற்பட்ட கதி தான் எல்லாருக்கும்…” சொல்லும் போதே அவளை ஆழ்ந்து பார்த்தபடி சொன்னான்… அந்தப் பார்வையில் அவளது முதுகெலும்பு சில்லிட்டது… ஆனாலும் அதை அவனுக்குக் காட்டாதவளாய் அமைதியாய் நின்று இருந்தாள்…

“உன் வாழ்க்கையும், உன் அண்ணன் வாழ்க்கையும் இன்னும் நாசமாகவில்லை… இன்னும் என்னை எதிர்க்க நினைச்சேன்னா இனி தான் உங்க ரெண்டு பேரு வாழ்க்கையும் நாசமாகப் போகுது… இனியும் நீ தேவை இல்லாம ட்ராமா பண்ணி என் தங்கச்சி வாழ்க்கையைப் பாழாக்கினே…” என்று நிறுத்தியவன் தன் முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்று…

“நான் சொன்ன விசயம் அப்படியே தான் இருக்கு… உன் அண்ணன் கையில் ஸ்டெதஸ்கோப் இருக்காது… விலங்கு தான் மாட்டிருக்கும்… எது நல்லதுன்னு நீயே முடிவு பண்ணிக்கோ…” மிரட்டும் தொனியில் கூறியவனைக் கண்டு அவள் இதழ்க்கடையில் இளக்கார புன்னகை வந்தமர்ந்தது…

ஆனால் முதலில் மாதிரி அவனிடத்தில் அவள் வாயாடவில்லை… அமைதியாய் அவனை நிமிர்ந்து பார்த்தவாறு நின்று இருந்தாள்… இவ்வளவு நாள் வாய் விட்டு அவனிடத்தில் குட்டு வாங்கியது போதும்… இனி நேரே செயல் தான்…

அவளின் அமைதியை தவறாகப் புரிந்து கொண்டான் அவன்… என்றும் போல் இன்றும் தனது வார்த்தைக்கு அவள் அடங்கிவிட்டதாய் அவன் எண்ணி கொண்டான்…

“ம்… இது நல்ல பிள்ளைக்கு அழகு… இனியாவது என்னை எதிர்க்கிறேன்னு வீணா நீ உன் வாழ்கையைப் பாழாக்கிக்காதே… இனியாவது புத்தியோடு நடந்து கொள்…” என்று அறிவுரை கூறியவன்,

“எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன்னைக் கொல்லணும் போலிருக்கு… ஆனா நீ அனியோட நாத்தனாரா போய்ட்ட…

இல்லை உன்னை எல்லாம் பேச விட்டு நான் கேட்டுட்டு இருக்க மாட்டேன்... நேரா மேட்டரை முடிச்சிடுவேன்... இதே மாதிரி துள்ளிட்டு இருந்தன்னு வை... கடைசியில் உனக்கு அந்தக் கதி தான்... பார்த்து நடந்துக்கோ...” என்று கூறியவன் புயல் போல் வெளியேறினான்...

போகும் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் மனதில் வைராக்கியம் ஒன்று எழுந்தது... அதாவது திமிராய் பேசும் அவனின் திமிரை அடக்க வேண்டும் என்று...

‘என் அண்ணன் கையில் நீ விலங்கு மாட்டும் முன் உன் கையில் விலங்கு ஏற செய்யா விட்டால் நான் அபிராக்ஷிதா இல்லைடா...’ மனதில் நினைத்தவள் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தது...

பூக்கும்...

"உங்களுக்கு ரஞ்சித் என்பவரை தெரியுமா...?" அந்தக் காவல் அதிகாரியின் கேள்விக்கு ஒரு நொடி அமைதியாய் இருந்த அக்ஷய்,

"தெரியாது..." என்றான் அழுத்தமாக...

"உங்கள் தங்கையின் காதலனை பற்றித் தெரியாதுன்னு சொல்றீங்க... ரொம்ப ஆச்சிரியமாய் இருக்கு...?" அவரது கேள்வியில் சிறிது கேலி கலந்து இருந்ததோ...

அதை உணர்ந்தவனாய் பெருமூச்சை இழுத்து விட்டவன், "ஓ... அவன் பேர் ரஞ்சித்தா... என் தங்கை ஒருவனைக் காதலித்தாள் என்பது தெரியும்... மத்தபடி அவன் யார், அவனுடைய பேர் இது எல்லாம் என் நியாபகத்தில் இல்லை..."

"உங்க தங்கையும், அவரது காதலனும் சேர்ந்து எடுத்த வீடியோ நெட்டில் உலா வந்ததும் அதைப் பரவாமல் நீங்க தடுத்து நிறுத்தியதாக நாங்கள் நடத்திய விசாரணையில் தெரிய வந்ததே... அப்போ அவனை உங்களுக்கு எப்படித் தெரியாமல் போகும்..."

அதைக் கேட்டு அவன் முகம் அவமானத்தில் கன்றிச் சிவந்தது... கண்களை இறுக மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மீண்டும் கண்களைத் திறந்தவன்,

"தங்கைக்கு ஒரு அவப்பேர் எனில் எந்த அண்ணனும் நான் செய்ததைத் தான் செய்வான்... அதைத் தான் நானும் செய்தேன்... என் தங்கைக்குத் திருமணம் பேசி கொண்டு இருக்கும் சமயத்தில் இந்த மாதிரி வீடியோ வந்தால் அவளின் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும்... அதனால் தான் அதைப் பரவ விடாமல் தடுத்தேன்... இதில் தவறு இருப்பதாய் நான் நினைக்கவில்லை... அதுக்காக என்னைக் குற்றவாளி போல் நீங்கள் விசாரணை பண்ணுவதும் சரியில்லை..."

ஆம்... அசோக்கின் தந்தை தொடுத்த வழக்கின் எதிரொலியாய் நீதிமன்றம் காவல்துறையை முடிக்கி விட்டது... முதல் கட்ட விசாரணை நடத்திய போது அபி இந்த வழக்கிற்கு முக்கியச் சாட்சியாக உள்ளே கொண்டு வர பட்டாள்... ஏனெனில் இன்னும் ரஞ்சித் கண் விழிக்கவில்லை... விழித்தால் அவன் முக்கியச் சாட்சியாகக் கருதப்படுவான்...

மீண்டும் அவளிடம் காவல்துறை தன் விசாரணையை நடத்தியது... அபியே இந்தச் சந்தர்ப்பத்தைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... அக்ஷயை தலைக்குனிய வைக்க வேண்டும் என்று நினைத்தவளுக்குக் கடவுளாய் பார்த்துச் சந்தர்ப்பம் கொடுத்ததை எண்ணி பூரிப்பு அடைந்தவள் அன்று தன் கண்ணால் பார்த்த அத்தனையும் கூறி அக்ஷய் மீது குற்றம் சுமத்தினாள்... அதன் அடிப்படையிலேயே காவல்துறை அவனிடம் தன் விசாரணையை மேற்கொண்டது...

விசாரணை என்று காவல்துறை அவனை அழைத்ததும் அவன் தங்கள் குடும்ப நண்பரான மாநகரக் காவல் ஆணையரிடம் பேசிவிட்டு தான் சென்றான்...

"அக்ஷய்... இது கோர்ட் மூலம் விசாரிக்கப்படும் கேஸ்... அதனால் அவங்க விசாரணைக்குக் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடு... மத்தபடி எந்தப் பிரச்சினையும் வராம நான் பார்த்துக்கிறேன்..." என்று அவர் கூறிய வார்த்தைகளில் தான் அவன் காவல்நிலையம் வந்ததே...

அதுவே நாளைய செய்தித்தாளில் தலைப்பு செய்தியாய் மாறக் கூடிய அபாயம் இருப்பதால் யாருக்கும் தெரியாமல் தான் இந்த விசாரணையை வைத்து கொண்டனர்... இது வெறும் ஊகத்தின் அடிப்படையில் நடக்கும் விசாரணை மட்டுமே...

"நீங்கள் சொல்வது எல்லாம் சரி மிஸ்டர். அக்ஷய்... ஆனால் சாட்சி ரொம்ப ஸ்ட்ராங்கா உங்களுக்கு எதிராய் இருக்கே... இதற்காகத் தான் நீங்க ரஞ்சித்தை கடத்தி அவரைக் கொலை செய்ய முயன்றதாய் சொல்லி இருக்காங்களே..."

இதைக் கேட்டு அக்ஷய்க்கு சிறிது அதிர்ச்சி தான்... அபியை அடக்கி ஆயிற்று... அப்போ வேறு யார்...? அவனுக்குக் குழப்பமாய் இருந்தது...

"யார்...?" யோசனையாய் கேட்டான்...

"அது ரகசியம்..." என்று அந்த நபரை பற்றித் தெரிவிக்க மறுத்துவிட்டனர்...

யாரோ தனக்கு எதிராய் சதி பண்ணுவதை உணர்ந்தவன் மிகவும் எச்சரிக்கையுடன் பேசினான்...

"அப்படி ஏதாவது செய்யணும்ன்னு எண்ணம் எனக்கு இருந்தா... வீடியோ வெளியான அன்னைக்கே அவனைப் போட்டு தள்ளி இருப்பேனே... இவ்வளவு நாள் காத்திட்டு இருக்கணும்ன்னு அவசியம் இல்லையே... நான் நினைத்தது எல்லாம் என் தங்கை அவமானப்படாமல் இதில் இருந்து வெளியில் வர வேண்டும்... அவளுக்கு நல்ல மணமகனாய் பார்த்து மணம் முடிக்க வேண்டும் என்பது மட்டுமே... இதில் ரஞ்சித்தை நான் ஏன் கொலை செய்ய முயற்சிக்க வேண்டும்... என்னைப் பத்தி என் தொழில்களைப் பத்தி உங்களுக்கே நல்லா தெரியும்... இதில் அவனைப் பழிவாங்க எல்லாம் என்னால நேரத்தை ஒதுக்கி தள்ள முடியாதபடி என் வேலை எனக்குக் காத்திருக்கு..."

"நாங்கள் கேள்விப்பட்ட வரை விசயம் வேற மாதிரி அல்லவா சொல்கிறார்கள்... நீங்கள் உங்க தங்கையின் காதலை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் தான் ரஞ்சித் அந்த வீடியோவை நெட்டில் போட்டான் என்றும் அதைக் கண்டு நீங்கள் ஆத்திரமுற்றாலும் அந்நேரம் ஆத்திரத்தை காட்டாமல் சத்தம் இல்லாமல் உங்கள் தங்கைக்கு வேறு இடத்தில் மணம் முடித்து, அதன் பின் சாகவாசமாய் ரஞ்சித்தை பழிவாங்க முயிற்சித்ததாய் சொல்கிறார்களே..." போட்டு வாங்குவதில் காவல்துறையினருக்கு நிகர் யாரும் இல்லை...

"நல்ல கற்பனைத் திறன்..." என்று அந்த அதிகாரியை பாராட்டியவன், "ஆத்திரத்தில் தான் ஒருவன் கொலை செய்யும் அளவுக்குத் துணிவான்... இதே இது அந்த ஆத்திரம் குறையும் போது அவன் மனம் மாறிவிடும்... அந்தச் சமயத்தில் எல்லாச் சகோதரன் போல் எனக்கும் கோபம் வந்தது... ஆனால் என் தங்கை அவனின் குணம் தெரிந்து விலகி நாங்கள் சொன்ன மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது எங்கள் அனைவருக்கும் சந்தோசமாய் இருந்தது... இதில் அந்த ரஞ்சித்தை நாங்கள் மறந்து போய்விட்டோம்... இப்போது கூட நீங்கள் நியாபகப்படுத்தா விட்டால் அந்த ரஞ்சித் யார் என்றே எனக்குத் தெரியாது... ஆனால் ஒன்று மட்டும் உண்மை நான் அவர்களைக் காதலை எதிர்த்தது... ஏனென்றால் அவனின் குணம் சரி கிடையாது..." என்று அக்ஷய் ரஞ்சித்தின் மற்றொரு பக்கத்தை அவர்களிடம் கூறினான்...

அக்ஷயின் பேச்சில் அந்த அதிகாரி குழப்பம் அடைந்தார்... அவன் கூறுவதும் நம்பும்படியாக இருந்தது...

"ஓகே... மிஸ்டர். அக்ஷய் இப்போது நீங்கள் போகலாம்... தேவைப்பட்டால் உங்களை விசாரிக்க நாங்கள் வருவோம்... உங்கள் ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவை..."

"ஷ்யூர் சார்... ஒரு சின்ன ரெக்வெஸ்ட்... எந்தக் காரணம் கொண்டும் என் தங்கையை இதில் இழுக்க வேண்டாம்... அவள் இப்போது தான் திருமணமாகி அவள் கணவருடன் சந்தோசமா இருக்கா... இந்த நேரத்தில் இந்த மாதிரி விஷயங்கள் அவளின் வாழ்க்கையைப் பாதிக்கும்... ப்ளீஸ்..." என்க...

“நிச்சயமாய்... ஆனால் அவரின் மேல் சந்தேகம் வந்தால் நாங்கள் அவங்களையும் விசாரிக்கத் தவற மாட்டோம்...” என்று காவல் அதிகாரியாய் சொன்னவரின் கையைப் பற்றிக் குலுக்கி விடைப்பெற்று வெளியில் வந்தான் அக்ஷய்...

காரை கிளப்பியவனின் மனதில் சொல்லொண்ணா ஆத்திரம் எழுந்தது...

'யார் இதைச் செய்திருக்கக் கூடும்...?' மனதில் எழுந்த கேள்விக்கு விடை தெரியாமல் குழம்பி போனான்...

விக்டருக்கு என்று தனியே வைத்திருக்கும் அலைப்பேசி எண்ணில் இருந்து அவனை அழைத்தவன், "போலீஸ்க்குச் சந்தேகம் என் பேரில் வந்திருச்சு... இதுக்கு ஏதாவது செஞ்சாகணும்..."

"சார் நான் இதைப் பார்த்துக்கிறேன்... நீங்கள் கவலைப்பட வேண்டாம்..." விக்டர் சொல்லவும் தான் அவனுக்குச் சற்று நிம்மதி வந்தது...

"அனியின் பேர்..."

"மேம் பத்தின விசயம் எதுவும் வெளியில் வராது..." என்று சொன்ன விக்டரின் மனக்கண்ணில் நிஷாவின் அலைப்பேசியில் ரஞ்சித் அனுப்பிய காணொளி விரிந்தது...

அதை நிஷா அவனுக்குத் தெரியாமல் மறைத்தாலும் அன்று ரஞ்சித், அசோக் பற்றின காணொளி பார்க்கும் போது விக்டர் அதை நிஷாவுக்குத் தெரியாமல் பார்த்துவிட்டான்... ஏற்கெனவே ரஞ்சித் மேல் ஆத்திரத்தில் இருக்கும் விக்டர் அது பார்த்ததில் இருந்து மேலும் அவன் மேல் ஆத்திரம் கொண்டான்... இப்போதும் அந்த ஆத்திரம் கொஞ்சமும் குறையாது அவனிடத்தில் இருக்கிறது... அவனைக் கொலை செய்யும் அளவுக்கு விக்டரின் மனதில் வெறி எழுந்து உள்ளது...

"விக்டர்... இப்போ கூட யாரோ சொல்லி தான் என்னை விசாரணைக்குக் கூப்பிட்டு இருக்காங்க... அது யார்ன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்..." அக்ஷய் சொன்னதும்...

"விசாரிச்சு சொல்றேன் சார்..." என்று விக்டர் சொல்லியதும் அலைப்பேசியை அணைத்த அக்ஷய் அந்த முகம் தெரியாத எதிரியை பத்தி யோசிக்க ஆரம்பித்தான்... ஆனால் அது முகம் தெரிந்த எதிரி தான் என்றால் என்ன செய்வானோ...

இந்த நேரத்திலும் அவனது மாமனார் அமைச்சரிடம் உதவி கேட்க வேண்டும் என்று அவன் நினைக்கவில்லை... அது அவனுக்குத் தலையிறக்கமாக எண்ணினான்... தன்னால் முடியாத காரியமா என்ற அகம்பாவ எண்ணமும் கூட... அதனால் அவன் பாரிவேந்தனை நாடவில்லை... மதியிடமும் இது பற்றி மூச்சு விடவில்லை... இவ்வளவு ஏன் தன் வீட்டாரிடம் கூட அவன் எதுவும் சொல்லவில்லை...

விக்டர் மறு நாளே அக்ஷய்க்கு அழைத்தான்...

"சொல்லு விக்டர்..." அக்ஷய் கேட்டதும்,

"சார்... உங்களை விசாரணைக்குக் கூப்பிட்டதுக்கான காரணம் உங்க மாப்பிள்ளையோட சிஸ்டர் அபி தான்..." இதைக் கேட்டதும் அக்ஷய்க்கு வந்த ஆத்திரத்தில் பற்களைக் கடித்தான்...

"ஏற்கெனவே அவங்க உங்க மேல கம்ப்ளையிண்ட் பண்ணதால போலீஸ் அவங்களைத் தான் முதலில் விசாரிச்சு இருக்கு... அவங்க சொன்னதன் பேரில் போலீஸ் உங்க கிட்ட விசாரிச்சு இருக்காங்க..."

'என்ன திமிர் அவளுக்கு... நான் சொல்ல சொல்ல கேட்காமல் போலீசுக்கு போய் இருக்கிறாள் என்றால்...? நிச்சயம் அவளின் திமிர் அடக்கப்பட வேண்டும்... எப்படி அடக்கலாம்...' அக்ஷயின் மனம் வேகமாய்ச் சிந்தித்தது...

"அவங்க கிட்ட எடுத்து சொல்லி இதில் இருந்து விலகி இருக்கச் சொல்லுங்க... அந்த ரஞ்சித்தை நான் பார்த்துக்கிறேன்..."

"ம்..." என்றவன் வேறு ஒன்றும் சொல்லாமல் அலைப்பேசியை அணைத்தான்...

அபி உறவினளாய் வரும் முன் அவளைக் கடத்தி இருக்கிறான்... அவளுக்குத் துன்பம் விளைவித்து இருக்கிறான்... ஆனால் இப்போது தங்கையின் கணவனின் தங்கையாய் அவள் வந்த பின் அவளின் மேல் கை வைக்க யோசித்து அவன் அமைதி காத்தால் அவள்

அவனை முட்டாள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாள்...

"நான் யாருன்னு உனக்குக் காட்டுறேன்டி..." வாய்விட்டு சொன்னவனின் மனதில் அவள் மீதான வன்மம் மட்டுமே நிறைந்து இருந்தது என்றால் மிகையில்லை...

மருத்துவமனையில் இருந்த ரஞ்சித் அன்று தான் கண் விழித்தான்... அதில் அவனது பெற்றோர் நிம்மதி அடைந்தனர்... காவல்துறை அவனிடம் விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு இப்போது விசாரணையை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அவனின் உடல்நிலை தயாராய் இல்லை என்று அவனது பெற்றோர் ஒரு மருத்துவ அறிக்கையைத் தயார் செய்து கொடுத்து விட்டனர்... அதனால் காவல்துறையால் அவனிடத்தில் விசாரிக்க முடியவில்லை... ஆனால் தொடர்ந்து அவன் அவர்களது கண்காணிப்பில் தான் இருந்தான்...

"டேய்... கொஞ்சம் உடம்பு நல்லானதும் ஃபோனை பிடிச்சி நோண்ட ஆரம்பிச்சிட்ட பார்த்தியா...? உன்னை எல்லாம்..." அவனது அன்னை அவனைத் திட்டி கொண்டே அலைப்பேசியை அவனிடம் இருந்து பறித்தார்...

"எதுக்கு அவனைத் திட்டுற... எத்தனை நேரம் தான் அவனும் படுக்கையில் இருப்பான்... அவனுக்கும் பொழுது போகணுமே..." அவனது தந்தை மனைவியைத் திட்டியவர் அலைப்பேசியை அவரிடம் இருந்து வாங்கி மகனிடத்தில் கொடுத்தார்... அவர் சொல்வது போல் கை உடைந்து உடல் முழுவதும் அடிப்பட்டுப் படுக்கையில் இருந்தான் ரஞ்சித்...

"நீங்க இப்படிச் செல்லம் கொடுத்தா அவன் எப்படி என் பேச்சை கேட்பான்..." என்று கோபப்பட்ட அவனது அன்னை, "இன்னும் எத்தனை நாளைக்கு ஹாஸ்பிட்டல்ல இருக்கணும்...?"

"டிஸ்சார்ஜாக இன்னும் ஒரு வாரம் ஆகும் போலிருக்கு..." என்ற அவனின் தந்தை மகனிடம்,

"அசோக்கோட அப்பா கோர்ட்ல கேஸ் போட்டு இருக்கார்..." என்று வழக்கின் விவரத்தை கூற... ரஞ்சித்தின் முகம் பயத்தில் வெளுத்தது...

"அசோக் செத்துட்டானா...?" பயத்தில் அவனுக்குப் பேச முடியவில்லை...

"இப்போ எதுக்குங்க இந்த விசயம்...? இப்போ தான் அவனே சரியாகிட்டு வர்றான்..." அவனது அன்னை கணவனைக் கடிந்து கொள்ள...

"அது கோர்ட்ல விசாரணைக்கு வருது... இவன் அவசரப்பட்டு ஏதாவது உளறி வச்சா அதான் இவன் கிட்ட சொல்லி வைக்கிறேன்..."

"ரஞ்சித் போலீஸ் உன் கிட்ட விசாரணை பண்ண துடிச்சிட்டு இருக்காங்க... நாங்க தான் விடலை... அதனால நீ எப்பவுமே ஜாக்கிரதையா இரு..." என்று எச்சரித்த அவனது தந்தை மனைவியிடம்,

"நீ வா... டாக்டர் கிட்ட பேசிட்டு வந்திடுவோம்..." என்று அழைக்க இருவரும் அறையை விட்டு வெளியேறினர்...

அசோக் இறந்தது கேட்டு அவனுக்கு அச்சமாய் இருந்த போதிலும் தான் உயிர் பிழைத்து கொண்டதை நினைத்து அவன் சந்தோசம் அடைந்தான்...

அதன் பின் அவன் மனம் நடந்தவற்றை அசை போட அவனுக்கு அக்ஷயின் செயலுக்கான காரணம் புரிந்து போனது... விக்டரை வைத்துத் தன்னைப் பற்றிய உண்மைகளை அனிக்கு ஆதாரத்துடன் நிரூபித்து அனியை தன்னிடம் இருந்து பிரிக்கச் செய்து, தன் உயிரை பறிக்கவும் அக்ஷய் திட்டம் போட்டதை அவனாய் ஊகித்துக் கொண்டான்...

அதனால் அவன் அவசரமாய் அனியின் அலைப்பேசிக்கு அழைத்தான்... அவள் எடுக்கவில்லை... விக்கிரமாதித்தன் போல் மீண்டும் மீண்டும் முயன்றவன் இறுதியில் வெற்றிப் பெற்றான்...

"அனி..." காதலோடு அழைத்தவனின் வார்த்தை அவளின் காதில் ஈயத்தைக் காய்த்து ஊற்றியது போல் இருந்தது...

"இனி மேல் எனக்கு ஃபோன் பேசாதே... ச்சீ... போயும் போயும் உன்னை மாதிரி ஒருத்தனை உயிருக்கு உயிராய் காதலிச்சதை நினைச்சாலே... எனக்கே என்னை நினைச்சு கேவலமா இருக்கு..." படபடவெனப் பொரிந்தவள் அவன் பேசுவதற்கு இடம் கொடாமல் அலைப்பேசியை அணைத்தவளை கண்டு அவனுக்குக் கோபமாய் வந்தது...

அக்ஷய் திட்டம் போட்டு அனியை தன்னிடம் இருந்து பிரித்து விட்டதாய் எண்ணியவனின் கோபம் எல்லாம் அக்ஷய் மீது திரும்பியது... அக்ஷயை பழிவாங்க வேண்டும் அதே சமயம் அனியின் வாழ்க்கையில் நிம்மதி பறி போக வைக்க வேண்டும் என்று நினைத்த அவன் அதை எப்படிச் செயலாற்றுவது என்று யோசிக்க ஆரம்பித்தான்...

***********************

"கண்ணம்மா... ஐ லவ் யூ..." என்று சொன்ன விக்டரை கண்டு நிஷா களுக்கென்று சிரித்தாள்...

"இதை நீங்க சொல்லணுமா விக்டர்..."

"ஏனோ சொல்லணும்ன்னு தோணுச்சு..." என்றவன் அவளுள் புதைந்தான்...

என்றும் இல்லாத அளவுக்கு மீண்டும் மீண்டும் தன்னை நாடிய கணவனின் செயல் அவளுக்கு வியப்பாய் இருந்தது... உடல் வலித்த போதும் மனதில் நிறைந்த காதல் அவனுடன் ஒன்ற செய்தது...

மறுநாள் காலையில் வெளியில் கிளம்பியவன் தன்னை வழியனுப்ப வந்த நிஷாவை பிரிய மனம் இல்லாமல் அவளை இறுக அணைத்து கொண்டவன் பின் அவளின் இதழில் அழுத்தமாய்த் தன் முத்திரையைப் பதித்த பின்பே அவளை விட்டு விலகினான்...

"விக்டருக்கு என்னமோ ஆச்சு...?" விளையாட்டாய் அவனின் மூக்கை திருகியபடி சொல்லியவள் முகம் அவனின் செயலில் ரகசிய புன்னகையில் மலர்ந்தது...

"பார்த்து பத்திரமாய் இருக்கணும் கண்ணம்மா..." கணவன் சொன்னதைக் கேட்டு இன்னமும் புன்னகை விரிந்தது அவளுக்கு...

அவள் கத்தி குத்துப் பட்டதில் இருந்து அவன் எப்போது வெளியில் செல்ல நேர்ந்தாலும் இப்படித்தான் அறிவுரை கூறுவது அவனது வழக்கம்... தன் மேல் அவன் கொண்ட அக்கறை இப்போதும் அவள் மனதை நெகிழ்த்தியது...

"பத்திரமா இருத்துக்குவேன் விக்டர்... நீங்க பார்த்து போங்க..." என்ற மனைவியைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன் பின்பு அவளின் கன்னம் தட்டி,

"பை கண்ணம்மா..." என்றபடி காரில் ஏறிய கணவனின் நடவடிக்கை புதிராய் இருந்த போதும் அவள் வாய் திறந்து எதுவும் கேட்கவில்லை...

விக்டருக்கும் மனம் எல்லாம் பாரமேறிய ஒரு உணர்வு ஏற்பட்டது... தான் செய்யப் போகும் காரியம் அவளைத் தன்னிடம் இருந்து தூர தள்ளி நிறுத்த போவதை அறிந்தவனாய் அவனின் மனம் எல்லையில்லா துயரில் மூழ்கி இருந்தது...

நேரே அவன் சென்ற இடம் ரஞ்சித் இருந்த மருத்துவமனை...

ரஞ்சித் தனிமையாய் இருக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவனின் அறை இருந்த தளத்தின் வராந்தாவில் காத்திருந்தான்...

ரஞ்சித்தின் அறை முன்பு ஒரு ஏட்டு மட்டும் காவல் இருந்தார்... அதைப் பற்றி அவன் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை... அவர் இருப்பது அவன் செய்யப் போகும் காரியத்துக்கு மிகவும் நல்லது...

மக்கள் நடமாட்டம் குறைந்த மதிய வேளையில் ரஞ்சித் தாயார் ஏதற்கோ வெளியில் வருவதைக் கண்ட விக்டர் மருத்துவன் போல் வேடமிட்டு ரஞ்சித்தின் அறைக்குள் பிரவேசித்தான்...

ஒற்றைக் கையால் அலைப்பேசியில் ஏதோ விளையாடி கொண்டு இருந்த ரஞ்சித் அவனது வரவு உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்... விக்டரை கண்டதும் அவன் முகம் வெளிற சத்தம் போட எத்தனிப்பதற்குள் அவனின் வாயை இறுக மூடியவன்,

"எவ்வளவு தைரியம் இருந்தா என் நிஷாவை நீ மிரட்டுவ..." என்றபடி அவனைக் கத்தியால் குத்தத் தொடங்கினான்...

எதிர்பாராதவிதமாக அங்கே திரும்ப வந்த ரஞ்சத்தின் அன்னை, "ஐயோ... ரஞ்சித்..." என்று அலற... அவரது அலறல் சத்தத்தில் வாயிலில் இருந்த ஏட்டு மற்றும் மருத்துவ ஊழியர்கள் எல்லோரும் அங்கு ஓடி வந்துவிட்டனர்...

கத்தியால் குத்திய விக்டர் ரஞ்சித்தின் உயிரை பறிக்கும் முன் எல்லோரும் சேர்ந்து விக்டரை சுற்றி வளைத்து பிடித்தனர்...

அப்படி இருந்தும் ஆத்திரம் தாளாமல் கையை ஓங்கிய விக்டரை பிடித்துக் கை கால்களைக் கட்டி போட்டு காவல்துறைக்கு அழைத்தனர்...

இரத்த வெள்ளத்தில் மிதந்த ரஞ்சித்தை தீவிர சிகிச்சை பிரிவுக்கு அழைத்துச் சென்றனர்... இரண்டாம் முறையாக அவனின் உயிர் காப்பாற்றப்பட்டது...

கைது செய்யப்பட்ட விக்டரின் மனம் நிம்மதி இல்லாமல் அலைப்பாயந்தது... அவன் எண்ணி சென்ற காரியம் பாதித் தான் நிறைவேறி இருக்கிறது...

ரஞ்சித்தின் உயிரை எடுக்க வேண்டும்... அதே சமயம் தான் காவல்துறையிடமும் மாட்ட வேண்டும்... அதைத் திட்டமிட்டு தான் அவன் அப்படி நடந்து கொண்டது...

அவன் திட்டமிட்டது போல் காவல்துறையினரிடம் மாட்டி கொண்டான்... ஆனால் ரஞ்சித்தின் உயிரை பறிக்க முடியாமல் போயிற்றே... மனம் மிகுந்த வேதனை கொண்டது... தான் இல்லாமல் நிஷாவின் நிலை... மீண்டும் அந்தக் கயவனிடம் மாட்டி கொள்வாளோ என்று அவனுக்கு அச்சமாக இருந்தது...

காவல் அதிகாரி அவனிடம் விசாரிக்க ஆரம்பித்தார்... விக்டர் தனது வாக்குமூலத்தை ஒப்புவிக்க ஆரம்பித்தான்...

"சார்... அவன் என் வொய்ப்பை அசிங்கமா வீடியோ எடுத்து மிரட்டி அவன் ஆசைக்கு இணங்க சொன்னான்... ஆனால் அவள் அதுக்குச் சம்மதிக்கலை... அப்புறம் வீட்டுக்கு வந்து அவனும், அவனோட பிரெண்டும் மிரட்டவும் அவள் கத்தியால் தன்னைத் தானே குத்திட்டு தற்கொலைக்கு முயன்று இருக்காள்... அதைப் பார்த்துட்டு அவன்ங்க பயந்து ஓடிட்டாங்க... நல்லவேளையா அவளை நான் காப்பாத்திட்டேன்... அதுக்கு அப்புறம் நான் தான் அவங்களைக் கடத்தி போய் வச்சிருந்தேன்... இது எப்படியோ நீங்க தெரிஞ்சிட்டு அவனைக் காப்பாத்திட்டீங்க... இதுக்குக் காரணமான அவனைக் கொல்லாம என் மனசு ஆறாது சார்..." என்று அவன் வாக்குமூலம் கொடுத்தான்...

அவன் கூறியதை நம்பினர் காவல் துறையினர்... ஏனெனில் அக்ஷய் சொன்னதை வைத்து ரஞ்சித்தை பற்றி விசாரிக்கையில் அவனைப் பற்றிய முழு விவரமும் அவர்களுக்குக் கிடைத்தது...

அடுத்து விக்டரின் மனைவி நிஷாவிடம் விசாரணை செய்தது காவல்துறை...

ஏன், எதற்கு என்று கேள்வி கேட்டவளிடம் விக்டரின் தற்போதைய நிலையை அவர்கள் கூற...

"விக்டர்..." என்று அதிர்ச்சியில் கூவியவள் மயங்கி விழுந்தாள்...

அவளின் மயக்கம் தெளிவித்ததும், "நான் அவரைப் பார்க்கணும்..." என்று கதறியவளிடம் இருந்து அவர்களால் ஒரு விசயத்தையும் கறக்க முடியவில்லை... அதனால் அவளை விக்டரிடம் அழைத்துச் சென்றனர்...

"விக்டர்..." அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அழுத மனைவியைக் கண்டு அவனது உள்ளம் வலித்தது...

"இதுக்குத் தான் நீங்க அவ்வளவு அன்பா நடந்துக்கிட்டீங்களா...? இதுக்குத் தான்னு தெரிஞ்சு இருந்தா நான் உங்களைத் தடுத்து இருப்பேனே..." என்று அவனைப் பார்த்துக் கண்ணீர் உகுத்தவள்,

காவல்துறையினரிடம் தன் அலைப்பேசியை எடுத்து வீசியவள், "இதில் இருக்கும் வீடியோவை பாருங்க... அப்போ தெரியும் அந்த அயோக்கியனை பத்தி... அவனை மாதிரி கிரிமினலுக்குக் காவல் இருப்பதும், என் புருசன் மாதிரி அப்பாவிகளைத் தண்டிப்பதும் தான் உங்களோட தர்மமா...?" ஆவேசமாக அவள் கேட்டதை அங்குள்ளவர்கள் கண்டு கொள்ளவில்லை...

அவர்களுக்கு வேண்டியது ஆதாரம்... அசோக்கின் மரணத்துக்கான காரணம் அவ்வளவே... இதில் கண்ணீரோ, நியாயத் தர்மமோ அவர்களுக்குத் தேவை இல்லாதது...

அந்தக் காணொளியின் உண்மைத் தன்மையை அலசி ஆராய்ந்து அதன் பின் ரஞ்சித் மற்றும் அசோக் இருவரின் மீதும் பெண்ணை மிரட்டி தற்கொலைக்குத் தூண்டியதாக வழக்குப் பதிவு செய்தது... அடுத்துப் பெண்ணை ஆபாசமாகக் காணொளி எடுத்தற்காகச் சைபர் க்ரைமிலும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது...

குற்றவாளி கண்டு பிடித்துக் கொடுக்கச் சொன்ன அசோக்கின் மரண வழக்கில் அவனே குற்றவாளியாகி போனான்... காவல்துறைக்குத் தெரிந்து கொஞ்சம்... தெரியாதது ஏராளம்... இனி ரஞ்சித்திடம் விசாரிக்கும் போது எல்லா உண்மைகளும் வெளிவரும்...

"யாரோ ஒருத்தருக்காக நீங்க ஏன் விக்டர் இப்படிக் கஷ்டப்படணும்..." விக்டரிடம் அழுதாள் நிஷா...

"நிஷா... ஷ்..." வாயில் விரல் வைத்து அவளை எச்சரிக்கை செய்தவன்,

"எந்தக் காரணம் கொண்டும் சார் பேர் வெளியில் வர கூடாது..." என்று அவளை எச்சரித்தவன்,

"இது சாருக்காகப் பண்ணலை நிஷா... உனக்காகத் தான் பண்ணினேன்..." என்றவனை அதிர்ந்து போய் அவள் பார்த்தாள்...

"உண்மை அது தான் நிஷா... உன்னை ரத்த வெள்ளத்தில் பார்த்ததும் அன்னைக்கே அவன்ங்களைக் கொல்லணும்ன்னு முடிவு பண்ணிட்டேன்... அதைத் தான் செஞ்சேன்... இப்ப அவன் தப்பினாலும் என்னைக்கு இருந்தாலும் அவன் உயிர் என் கையால் தான் போகும்..." வெறியுடன் கூறிய கணவனைக் கண்டு அவளுக்கு அழுகை தான் வந்தது...

யாருக்கோ உதவப் போய்த் தங்களது வாழ்க்கை கேள்விக்குறியாகி போனதை நினைத்து மனம் குமைந்து போனாள் நிஷா...

"நிஷா... கவலைப்படாதே... உனக்குத் தேவையான எல்லா ஏற்பாடும் செய்துவிட்டு தான் வந்து இருக்கேன்..." என்ற கணவனிடம்,

"நீங்க இல்லாம எதுவுமே எனக்குத் தேவை இல்லை..." என்று அழுதவளை அவன் சமாதானப்படுத்த...

அதற்குள் அவளை வெளியில் போகச் சொல்லி காவல் அதிகாரி உத்தரவிடக் கண்களில் கண்ணீர் மல்க அவள் கணவனிடத்தில் விடைப்பெற்றாள்... அவனின் கண்களிலும் நீர் நிறைந்தது...

அவன் கஷ்டப்பட்ட போதிலும் அக்ஷயிடம் உதவி கேட்க சொல்லி மனைவியை அவன் பணிக்கவில்லை... அது

அவனது தொழில் தர்மம் கிடையாது...

தனக்காக ஒருவன் சிறை சென்று இருப்பதை அறியாத அக்ஷயின் நினைவு முழுவதும் அபி தான் நிறைந்து இருந்தாள்...

அவனுக்கு எதிரான வலுவான ஆதாரம் அவள் மட்டுமே... அந்த ரஞ்சித்தை விக்டர் பார்த்து கொள்வான்... ஆனால் அபியை தான் எப்படிச் சமாளிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை...

ரஞ்சித் விசயத்தில் அவன் சம்பந்தப்பட்டு இருப்பது தெரிய வந்தால் தேவை இல்லாமல் அனியின் விசயம் அலசி ஆராயப்படும்... அதன் பின் அனியின் வாழ்க்கை...? என்ன யோசித்தும் ஒன்றும் பிடிபடாத காரணத்தால் இந்த வழக்கு முடியும் வரை அபியை தலைமறைவாக வைக்க அக்ஷய் முடிவு செய்தான்...

அந்த வழக்கில் அவனுக்குச் சாதகமான தீர்ப்பு வந்துவிட்டால் அதன் பின் அபியின் வாக்குமூலம் செல்லாததாய் ஆகிவிடும்... அதன் பின் அவள் துள்ளி குதித்தாலும் அவளால் தனக்கு எந்தவித பிரச்சினையும் எழ போவது இல்லை... தங்கைக்கும் பிரச்சினை இல்லை...

பிரச்சினையைப் பேசி தீர்க்காமல் மூடி மறைக்கப் பார்த்தான் அவன்... இதனால் இன்னும் பல பெரிய பிரச்சினைகள் அவன் வாழ்வில் வெடிக்கப் போவதை அவன் அறியவில்லை...

அவளைத் தலைமறைவாக்க நினைத்ததன் விளைவு அவன் அபியை யாருக்கும் தெரியாமல் கடத்திவிட்டான்...

எப்போதும் போல் அதிகாலை நேரத்தில் தனது வீட்டில் இருந்து கடைக்குச் சென்று கொண்டு இருந்த அபியின் அருகில் காரை கொண்டு வந்து நிறுத்தியவன், அவள் யார் என்று சுதாரிக்கும் முன் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளைத் தனது காருக்குள் தள்ளி காரை கிளப்பினான்...

"ஏய்... விடு..." யாரோ என்று எண்ணி திமிறியவள் அக்ஷயை கண்டதும் முறைத்து பார்த்து பார்த்தாள்...

"எங்களை மாதிரி பஸ்ல போறவங்களை எல்லாம் உன் காரில் ஏத்தினா உன் கௌரவம் என்னாகிறது... என்னை இறக்கி விடு..."

அப்போதும் திமிர் குறையாமல் பேசியவளை கண்டு அவனது ஆத்திரம் தான் அதிகரித்தது...

"உனக்கு இருக்கிற வாய் கொழுப்புக்கு..." பல்லை கடித்தான்...

"ஏண்டி இப்படிச் செஞ்ச...?"

"எப்படிச் செஞ்சேன்...?" அப்பாவியாய் கண்களை அகல விரித்தாள்... ஆனால் அவளது இதழ்கள் விரிந்தது விசமமாய்...

அவளை ஒரு கணம் கூர்ந்து பார்த்தவன் பின் சாலையில் கவனம் பதித்தவனாய், "உனக்குத் தைரியம் அதிகம் தான்..."

"இப்பவாவது என் தைரியத்தின் அளவை புரிஞ்சிக்கிட்டியே..." என்றவளை கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"பின்னே இல்லையா... கடத்திட்டு போறவன் கிட்டே கூட வாயடிக்கிறியே உன் தைரியத்தை என்னன்னு சொல்ல..." வஞ்சப் புகழ்ச்சி அணியில் பாராட்டியவனைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள்...

அவளது கண்கள் அச்சத்தைப் பிரதிபலித்தது...

"ஏய்... சும்மா தானே சொல்ற... பொய் சொல்லாதே..." என்றவள் காரின் கதவை திறக்க முயல... அதுவோ திறக்க மாட்டேன் என்று அடம் பிடித்தது...

"லாக் போட்டு இருக்கேன்..." என்றவன் மேலே எதுவும் பேசவில்லை...

"என்னை எங்கேடா கூட்டிட்டு போற...?" அவனது சட்டையைப் பிடித்து ஆங்காரமாய்க் கத்தியவளை ஒரு கையால் அலட்சியமாய் ஒதுக்கி தள்ளியவன் மற்றொரு கையால் இலகுவாய் காரை ஓட்ட... அவனின் இந்த அலட்சியத்தில் அத்தனை நேரம் இருந்த தையரியமான மனநிலை மறைந்து அவள் பயத்தில் இருக்கையோடு உறைந்தாள்...

அவனை இன்னமும் கைது செய்யாமல் வெளியில் உலாவ விட்டு இருக்கும் தமிழ்நாட்டு காவல்துறையை மனதுக்குள் சபித்தபடி வந்தாள்...

மாளிகை போல் இருந்த பங்களாவின் முன் காரை நிறுத்தியவன், "இறங்கு..." என்றான்...

மரங்கள் அடர்ந்து இருந்த அந்த இடத்தின் சூழ்நிலை மனதை அச்சுறுத்த அச்சம் அடைந்தவளாய் பயந்து கொண்டே இறங்கினாள்...

"என்னை வீட்டில் விட்டிரு... என் அண்ணனுக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான்..."

அவளின் பேச்சை கண்டு கொள்ளாது அவளின் இரு கைகளைப் பின்னால் இழுத்துப் பிடித்துக் கொண்டு நடத்தி சென்றவன் வாயில் கதவு வந்ததும் கைகளை விட்டான்...

"உன்னை விடுறதுக்கா இங்கே கூட்டிட்டு வந்தேன்..." என்று அவள் புறம் திரும்பி சொன்னவன், கதவை திறந்து கொண்டே,

"உன் அண்ணன் கிட்ட சொல்ல மாட்டேன்னு நினைக்கிறேன்... சொன்னா அதனோட விளைவுகள் இதை விடக் கடுமையா இருக்கும்..." என்று சொன்னவன் அவளிடம் இருந்து பதில் வராது போகவும் திரும்பி பார்த்தான்...

அலங்கார பூஞ்செடி இருந்த தொட்டியை ஒன்றை கையில் எடுத்து அவன் மேல் போடுவதற்காக ஓங்கி கொண்டு

நின்று இருந்த அபியை கண்டு அவனது முகம் விகாரமாய் மாறியது...

"எவ்வளவு தைரியம் உனக்கு...? என்னையே கொல்ல பார்க்கிறியா...?" அவனது வார்த்தையை விட அவனது கைகள் அவளது கன்னத்தில் வேகமாய்த் தனது தடத்தைப் பதித்தது...

அவன் அடித்த வேகத்தில் தடுமாறியவள் கையில் இருந்த தொட்டியோடு கீழே விழுந்தாள்... தொட்டி அவளின் கையின் மீதே விழுந்தது...

"ஆ... அம்மா..." என்று வலியில் சத்தமிட்டவளை பொருட்படுத்தாமல்,

"உன்னை எல்லாம் மரியாதையா ட்ரீட் பண்ண கூடாது..." என்று அவளின் கையைப் பிடித்து இழுத்து தூக்கியவனைக் கண்டு,

"வலிக்குதுடா..." என்று அவள் கையை விடுவிக்க முயல...

அதைக் கண்டு கொள்ளாமல் அவன் தன் காரியத்தில் கண்ணாயிருந்தான்...

ஒரு கையில் அவளைப் பிடித்துக் கொண்டு மறுகையால் கதவை மூடியவனைக் கண்டு மனதில் அச்சம் எழ அவள் அவனின் கையைப் பிடித்து நன்கு கடித்துவிட்டாள்...

"ஸ்..." என்று அவளது கையை விட்டவன் வலியில் தன் கையை உதறிக் கொண்டான்...

"உன்னை..." என்றபடி அவளின் அருகில் வர... அவள் கண்கள் பயத்தில் சாசர் போல் விரிந்தது...

பூட்டிய அறைக்குள் அவனுடன் தனிமையில் இருப்பதை எண்ணி அவ்வளவு நேரம் இல்லாத பயம் அவளிடம் வந்து ஒட்டி கொண்டது... அவளது இதயம் துடிப்பது பெரும் மத்தளச் சத்தமாய் மாறி அவளது காதை நிறைப்பது போல் இருந்தது... நாக்கு வறண்டு போன மாதிரி இருந்தது...

"என்னை ஒண்ணும் பண்ணிடாதே..." தன்னை நோக்கி முன்னேறிய அக்ஷயை கண்டு அவள் கைகளைக் கூப்ப அவளின் செயல் புரியாதவனாய் அவன் அங்கேயே நின்றான்...

'அட... ராணி மங்கம்மா எதுக்கு இப்படிப் பயப்படறா...' அக்ஷய் மனதுக்குள் வியந்தாலும் அவளின் பல் தடம் பதிந்த அவனது கை வலி கொடுக்க அவன் கோபத்தோடு அவளை நோக்கி முன்னேற...

"ப்ளீஸ்... உன்னைக் கெஞ்சி கேட்கிறேன்... என்னை ஒண்ணும் பண்ணிடாதே..." என்று கைகளை மார்புக்கு குறுக்கே வைத்துக் கொண்டு கெஞ்சியவள் கண்களில் கண்ணீர் சரசரவென்று வழிந்தது...

அவளது பயம், அவளது கண்ணீர் கண்டு அவனது மனதின் கோபம் குறையவில்லை... மாறாகச் சந்தோசமே அதிகரித்தது...

எப்பவும் அடங்காத குதிரையாய் தன் முன் சிலிர்த்துக் கொள்ளும் அவளைக் கண்டு எரிச்சலுற்ற அவனது மனம் அவளின் இந்தப் பயத்தைக் கண்டு குளிர்ச்சி அடைந்தது...

எதற்காகவும் பயப்படாதவள் தனது கற்பிற்காகக் கலங்கி அவனிடம் கையேந்தி நின்றது அவனுக்குச் சற்று கர்வமாய் இருந்தது...

"அப்படி வாடி வழிக்கு... எப்பப்பாரு என்னை எதிர்த்து பேசிட்டு இருந்த வாய் இப்போ கெஞ்சி கேட்குது... உலக அதிசயம் தான்... இப்போ புரியுதா... நீ நீதான்... நான் நான்தான்... என்னை எதிர்த்து போலீஸ்ல போய்ச் சொல்லுவியா..." இதைச் சொல்லும் போதே அவனின் மூளையில் மின்னல் அடித்தது...

அவளின் அருகே தொட்டு விடும் அளவுக்கு அருகில் வந்தவனைக் கண்டு அவளது பயம் மேலும் அதிகரித்தது...

"வேண்டாம் விட்டிரு..." என்றவளின் கண்ணீர் ஆறாய்ப் பொழிந்தது...

"அது எப்படி விட முடியும்... நீ தான் என் மேல் கம்பளையிண்ட் பண்ணி இருக்கியே... அதை உண்மையாக்க வேண்டாமா...?" என்றவனின் கரங்கள் அவளது தோளில் உறுதியாய்ப் பதிந்தது...

"இருந்தாலும் நீ செஞ்சது தப்பு தானே..." என்று கேவியவளின் முகம் நோக்கி குனிந்தவன்,

"அந்தத் தப்பை தான்ம்மா இப்போ செய்யப் போறேன்..." என்றவன் அவளது இதழில் தனது இதழை பதித்தான் அழுத்தமாய்...

ஆடை விலகியவளை கண்டு கண்ணியம் காத்த அவன் இன்று அவளின் கண்ணீர் கண்டு கொஞ்சமும் இறங்கவில்லை... மாறாக அவளின் மீதான வன்மம் தான் அதிகரித்துக் கொண்டு போனது...

தொழில் எப்போதும் வெற்றியை மட்டுமே அடைந்து கொண்டு இருப்பவன் ஒரு சிறு பெண்ணிடம் தான் தோற்று போவதை ஒத்துக் கொள்ள மனம் இல்லாமல் குறுக்கு வழியில் அவளை வெற்றிக் கொள்ள முடிவு செய்தான்...

தான் நினைத்த இலக்கை அடைய எத்தகைய எல்லை வரைக்கும் செல்லும் அவன் அவளை அடக்குவதற்காக அவளின் கற்பை சூறையாட முடிவு செய்து விட்டான்... பெண்களை அடக்குவதற்கான எல்லை அவர்களின் கற்பு அல்லவா...

தொழில் வெற்றி வேறு... வாழ்க்கை வெற்றி வேறு என்பதை அவன் புரிந்து கொள்ளும் காலம் விரைவில் வர போவதை அறியாமல் மனம் போக்கில் அவன் செயல் பட்டான்...

தனது கைகளால் அவனைப் பலம் கொண்ட மட்டும் தள்ளி விட அவள் செய்த முயற்சி எல்லாம் ஒன்றும் இல்லாததாய்ப் போனது... அவனது வலிமையான உடல் பலத்தின் முன் மெல்லிய தேகம் கொண்ட அவள் தோற்றுக் கொண்டு இருந்தாள்...

அவனது இதழ் முத்தத்தில் கண்கள் இருட்ட கொஞ்சம் கொஞ்சமாய் மயக்க நிலைக்குச் சென்று கொண்டு இருந்தவளை அங்கிருந்த சோபாவில் சரித்துத் தான் நினைத்ததைச் சாதிக்க எண்ணினான்...

அவளது இதழை விட்டு விலகி அவளது கழுத்தில் முகம் புதைத்தவனின் செயலில் தப்பிய நினைவுகளை மீட்டவள் தன்னால் முடியும் மட்டும் அவனைத் தன்னிடம் இருந்து பிய்த்து எடுத்தவள், அவனிடம் மெல்லிய குரலில்,

"இது நம்ம வீட்டுக்கு தெரிஞ்சா என்ன நினைப்பாங்க...? அதை விடு உனக்குன்னு ஒரு பொண்ணு காத்துட்டு இருக்கா... நீ செய்ற இந்த ஈனமான வேலையை அவள் கேள்விப்பட்டால் என்ன செய்வாள்...? நீ பண்றது கொஞ்சமும் சரியில்லை... என்னை விட்டிரு..."

"உன் திமிரை அடக்காமல் விட மாட்டேன்டி..." என்றவன் அவளின் வார்த்தையில் இருந்த அர்த்தத்தைக் கொஞ்சமும் உணரவில்லை... உணரும் மனநிலையில் அவனும் இல்லை...

அவன் உணர்ந்த ஒரே ஒரு விசயம் அவளை அடிப்பணிய வைப்பது தான்... எப்போதும் எதற்கும் அடிப்பணியாத அவளைத் தனக்கு அடிப்பணிய வைக்க வேண்டும் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது போல் இருந்தது அவனது செயல்...

அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனது ஆண் என்ற ஈகோவை தட்டி எழுப்பி இருந்தது... அவளை இப்படி அடக்குவதன் மூலம் அவனது கோபம் கொண்ட ஈகோ கொஞ்சம் கொஞ்சமாய்ச் சமாதானமாகி கொண்டு இருந்தது...

"விடு... என்னை விடுடா..." என்று கற்பு பறி போகும் கடைசி நொடி வரை போராடியவளை எளிதில் வெற்றிக் கொண்டு அன்று போல் இன்றும் அவளது கற்பை கேள்விக்குறி ஆக்கினான்... அன்றாவது அது சொல் அளவில்... ஆனால் இன்றோ இது செயல் அளவில்... இதனால் எழப் போகும்

விளைவுகளை அறியாதவனாய் நடந்து கொண்டான் அவன்...

இறுதியில் வெற்றி கொண்டவனாய் அவளை விட்டு விலகியவன் அருகில் கிடந்த புடவையை எடுத்து அவள் மீது போட்டு,

"இப்போ போய்ப் போலீசில் கம்ப்ளையிண்ட் குடுடி... அக்ஷய் என்னை ரேப் பண்ணிட்டான்னு... முதல்ல கொடுத்த கம்ப்ளையிண்டோடு சேர்த்து இதையும் நான் சந்திக்கிறேன்..." என்று இடைவெளி விட்டவன் நக்கலாய்,

"கோர்ட்டில் சந்திக்கலாம்..." என்றவனின் முகத்தில் அவளது இயலாமை கண்டு ஏளனமான நகைப்பே இருந்தது...

அவளைச் சாதாரணமாய் எண்ணி கொண்டு அவன் அகங்காரமாய்ச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அவனை வெறித்துப் பார்த்தவளின் கண்களில் கண்ணீர் வேண்டுமானால் வற்றி போயிருக்கலாம்... ஆனால் அவளது மன வைராக்கியம் வற்றவில்லையே...

அந்த வைராக்கியம் உருமாறி அவனைத் தாக்கும் போது தெரியும் அவள் பூ அல்ல... புயல் என்று...

பூக்கும்...

அபியின் மனதில் வெறுமை வெறுமை வெறுமை மட்டுமே நிறைந்து இருந்தது... தன் மேல் அவன் விட்டு எறிந்த புடவையை அவசரமாய் நெஞ்சோடு அணைத்து கொண்டவளுக்கு மனதில் விரக்தி மட்டுமே எஞ்சி இருந்தது...

உயிரை விடப் பெரியதாய் போற்றும் கற்பை இழந்த பின் எதைக் காப்பாற்றுவதற்காகத் தான் துடிக்கிறோம் என்று தனக்குத் தானே கேட்டு கொண்டவளுக்குக் கழிவிரக்கத்தில் கண்கள் கலங்கியது... அதை அவனிடம் காட்டாது மறைக்கத் தலையைக் குனிந்து கொண்டவளை கண்டு அக்ஷயின் மனம் திருப்தி அடைந்தது...

"இந்தப் பணிவு முதல்லேயே இருந்து இருந்தால் இந்த நிலை உனக்கு வந்திருக்காது..." என்றவன்,

"ம்... கிளம்பு..." என்றான் அவளின் கையைப் பற்றித் தூக்கியபடி,

"அய்யோ..." என்று பதறியபடி அவனின் கையை உதறியவள் புடவையை நெஞ்சோடு அழுத்தியபடி முழங்காலில் முகம் புதைத்தாள்...

அவளின் செயலில் கோபம் உற்றவன் அவளைக் கடிந்து பேச வாயை திறந்த போது தான் அவள் இருக்கும் நிலையை உணர்ந்தான்... ஒரு நொடி எதுவும் பேசாது மௌனம் காத்தவன் பின்,

"ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வா..." என்றவன் விறுவிறுவென அந்த இடத்தை விட்டு அகன்றான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் இதழ்கள் வளைந்தது இகழ்ச்சியாய்...

அவளின் பெண்மையைக் களவாடி விட்டு இப்போ ரொம்ப நல்லவன் மாதிரி வேசம் போடும் அவனைக் கண்டு அவளுக்கு அழுகையும், ஆத்திரமும் ஒரு சேர எழுந்தது...

முதலில் அவனிடம் வாயடித்துத் தோற்று போனாள்... இதோ இப்போது அவனுக்கு எதிராய் செயல்பட்டு வாழ்க்கையில் மிகவும் பயங்கரமாய் மோசமாய்த் தோற்று போனாள்... இனியும் அவனிடம் பேச்சாலோ இல்லை செயலாலோ தோற்க அவளிடம் சக்தி இல்லை...

ஆனால் அவனை அப்படியே விட்டு விடவும் அவளால் முடியவில்லை...

'காமாட்சி தாயே... என்னை இப்படிக் கைவிட்டுட்டியே... ஒரு பொண்ணைப் பழிவாங்க இப்படிக் கேவலமா அவளின் கற்பை சூறையாடுறது தான் ஒரே வழியா...? பெண்ணான நீ இதைப் பார்த்துட்டு தானே இருக்க... இவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா...?'

அவளின் மனம் தனது தாயாய் எண்ணி வழிபட்ட அந்த அன்னையிடம் சரணடைந்தது...

மனம் தன் போக்கில் யோசித்தாலும் கைகள் அது பாட்டிற்குப் புடவையை உடலில் சுற்றிக் கொண்டு இருந்தது...

உடையை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவள் அங்கே அக்ஷயை காணாது திகைத்தாலும் அதுவே இப்போதைய நிலையில் பெருத்த நிம்மதி கொடுக்க வெளிவாயிலை நோக்கி வேகமாய் நடந்தாள்... இனியொரு முறை அவன் முகத்தில் முழிக்க அவளுக்குப் பிடிக்கவில்லை...

வீட்டின் முன் இருந்த ஆளரவமற்ற கடற்கரை மணலில் மல்லாந்து படுத்து இருந்த அக்ஷய் மனதில் எந்தவித குற்றவுணர்வும் இல்லை... மாறாக மனதில் சந்தோசம் நிரம்பி வழிந்தது...

அபியை அடக்கி ஆண்டு விட்டதால் வந்த மகிழ்ச்சி தான் இது என்று அவன் நினைத்தான்... ஆனால் அதற்கு அது மட்டும் காரணம் அல்ல என்பதை அவன் உணரவில்லை...

வஞ்சினத்தில் பெண்ணுடன் கூடும் கூடல் மனதில் மூர்க்கத்தையே விளைவிக்கும்... இறுமாப்பை

தோற்றுவிக்கும்... மாறாக மகிழ்ச்சியைத் தோற்றுவிக்காது... மனதில் ஏதோ ஒரு மூலையில் அந்தப் பெண்ணின் மீதான ஈர்ப்பு இருந்தால் மட்டுமே மனதில் உவகைத் தோன்றும்...

தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணிடம் கூட நெருங்கி பழகாத அக்ஷய் அபியிடத்தில் மட்டும் வார்த்தைக்கு வார்த்தை பதிலுக்குப் பதில் வாயாடி அவளைச் சீண்டி கொண்டு இருந்தது ஏன் என்பதை அவன் இன்னமும் உணரவில்லை...

வருங்கால மனைவியாகப் போகும் மதியிடம் கூட அளந்து பேசுபவன், இவ்வளவு ஏன் பெற்றோரிடமும் மற்றும் தொழில் தொடர்புகளில் எல்லாம் வார்த்தையை யோசித்துப் பேசுபவன் அபியிடம் மட்டும் சரளமாய்ப் பேசவும் கோபப்படவும் செய்தது ஏன் என்பதைப் பற்றி அலசி ஆராயவில்லை...

அதை எல்லாம் விட ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கி இருக்கும் தன் நிலையை அவன் இன்னமும் உணரவில்லை... உணரும் போது தான் செய்த தவறின் அளவை புரிந்து கொண்டு அதைச் சீர் செய்வானா...???

அரை மணி நேரம் ஏகாந்த நிலையில் இருந்தவன் அபியின் நினைவு வந்தவனாய் வீட்டிற்குச் சென்றான்...

அங்கே வரவேற்பறையில் அவளைக் காணாது திகைத்தவன், "அபி..." என்று அழைத்தவாறு உள்ளே சென்று தேடியவன் பின்பு வெளியில் வந்து பார்த்தான்... எங்கும் அவள் இல்லை...

"ச்சே... எங்கே போய்த் தொலைஞ்சா...?" அவ்வளவு நேரம் இருந்த அவனின் இதமான மனநிலை மறைய கோபம் மனதை ஆக்கிரமித்தது...

வேகமாய் வீட்டை பூட்டியவன் காரிலேறி வெளியில் வந்தான்... அங்கு இருந்த சாலைகள், பேருந்து நிலையம்

எங்கும் தேடியும் அவளைக் காணோம்...

"இம்சை இம்சை... மனுசன் உயிரை எடுக்குது..." என்று அவளைத் திட்டியபடி காரை தனது வீடு நோக்கி செலுத்த ஆரம்பித்தான்...

இப்போ இருக்கும் நிலையில் அபியின் வீடு தேடி சென்று அவளைத் தேட முடியாது... அதனால் அந்த யோசனையைக் கைவிட்டான்...

வீட்டிற்குள் நுழைந்தவனை, "அக்ஷய்... நில்லு..." அன்னையின் குரல் தடுத்து நிறுத்தியது... அதில் அப்படியே நின்றான்...

"சட்டை கிழிஞ்சி இருக்கு... என்னாச்சு..." துளசி கேட்கவும் தான் அவன் குனிந்து தனது சட்டையைப் பார்த்தான்...

அவனிடம் போராடிய அபியின் கைகள் அவனிடம் காட்ட முடியாத தனது கோபத்தை அவனது சட்டையிடம் காட்டி இருந்தது... சட்டை லேசாகக் கிழிந்து தொங்கியது... அவளின் நகக்கீறல்கள் அவனது நெஞ்சில் தடத்தை ஏற்படுத்தி இருந்தது...

தொங்கிய சட்டைப் பகுதியை சரி செய்து காயத்தை அன்னைக்குத் தெரியாமல் மறைத்தவன், "சைட்ல கம்பி குத்திருச்சு மாம்..."

"காயம் ஏதும் பட்டிருக்கா அக்ஷய்..." பதறியபடி வந்த அன்னையைக் கண்டு பின்னால் நகர்ந்தவன்,

"லேசா உரசிருச்சு... அவ்வளவு தான்..." என்றவன் இன்னமும் இருந்தால் அன்னை கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார் என்று எண்ணி தனது அறையை நோக்கி சென்றான்...

அவனின் குணம் அறிந்த ஒன்று என்பதால் துளசி வேறு எதுவும் கேட்க முடியாமல் தனது வேலைகளைக் கவனிக்கச் சென்றார்...

குளியலறைக்குச் சென்று ஷவரை திறந்து விட்டு அதன் அடியில் நின்றவன் உடலில் இருந்த நகக்கீறல்கள் மீது நீர் பட்டு சிறிது எரிச்சலை உண்டு பண்ணியது... அந்த எரிச்சல் கூட அவனுக்குச் சுகமாய் இருந்தது... சந்தோசத்தையும் கொடுத்தது...

குளித்து முடித்து வந்தவன் உடையை மாற்றிக் கொண்டு உணவு உண்ண அமர்ந்தவன் முன் தட்டை எடுத்து வைத்து பரிமாற ஆரம்பித்தார் துளசி...

உணவு உண்ணும் மகனின் முகத்தை உற்று கவனித்த துளசி அதில் தெரிந்த மாற்றத்தை ஆச்சிரியத்துடன் பார்த்தார்... இத்தனை நாள் இருந்த மகனின் முக இறுக்கம் மறைந்து முகத்தில் இளக்கம் தோன்றி இருப்பதைக் கண்டார்... அதை விட அவனது உதட்டில் நெளிந்த புன்னகை அவரை ஆச்சிரியத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது...

மகனின் இந்த மாற்றத்திற்குக் காரணம் மதிவதனா என்று அப்பாவியாய் நினைத்தார் அவர்... அவளின் காதல் மகனை இந்தளவுக்கு மாற்றி இருப்பதை அறிந்து அவரும் மகிழ்ச்சி அடைந்தார்...

"ஒரே சந்தோசமா இருக்கிற மாதிரி இருக்கு... என்ன விசயம் அக்ஷய்...?" அன்னை கேட்டதும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தவன் அவரை நிமிர்ந்து பார்த்தான்...

"ஒண்ணும் இல்லையே... ஏன்...?"

"இல்லை உன்னுடைய முகம் சந்தோசமா இருந்த மாதிரி இருந்தது... அதான் கேட்டேன்..."

"ஓ..." என்றவன் அதற்கு மேல் பதில் பேசவில்லை...

ஆனால் மனதோடு பேசி கொண்டான்... 'அவளின் திமிரை அடக்கியது என் வாழ்நாள் சாதனை அல்லவா...' அகம்பாவமாய் நினைத்தான்...

அதன் பின் அபியை பற்றி நினைக்க விடாமல் அவனை வேலை ஆக்கிரமித்துக் கொண்டது... அவ்வளவு தான் அவன் பெண்ணின் உணர்வுகளுக்குக் கொடுத்த முக்கியத்துவம்...

விக்டர் காவல்துறையில் மாட்டி இருப்பதைத் தன்னுடைய வக்கீல் மூலம் உணர்ந்தவன் அவரின் மூலமாக அவனை வெளியில் எடுப்பதற்கான முயற்சியில் இறங்கினான்...

வக்கீல் தகுந்த ஆட்கள் மூலம் விக்டரை அணுகி அவனிடம் நேரில் சந்தித்துப் பேசினார்... அவர் விக்டரை சந்தித்த போது அவரது அலைப்பேசி மூலம் விக்டரிடம் அக்ஷய் உரையாடினான்...

"விக்டர் நீ கவலைப்படாதே... எப்படியாவது உன்னை வெளியில் கொண்டு வந்துடறேன்..."

"இல்லை சார்... நானே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துட்டேன்... அதனால நீங்க வீண் முயற்சி எடுக்க வேண்டாம்..."

விக்டரின் வார்த்தைகள் அக்ஷயிடத்தில் அதிர்வை ஏற்படுத்தியது... இத்தனை நாள் தொழில் ரீதியாய் இருந்த பழக்கம் இன்று உணர்வு ரீதியாய் மாறிப் போனது... தனது தங்கைக்காக அவன் சிறை சென்றதை எண்ணி அக்ஷய் மனம் வேதனை கொண்டது...

"சார்... ஒரே ஒரு விசயம் மட்டும் எனக்குச் செய்ய முடியுமா...?"

"என்ன விசயம் சொல்லு விக்டர்... உனக்காக நான் எதையும் செய்யத் தயாரா இருக்கேன்..."

"என் மனைவி நிஷாவை பத்திரமா பார்த்துக்கோங்க சார்... அவளை அந்த ரஞ்சித்திடம் இருந்து காப்பாத்தினா போதும்..." விக்டரின் வார்த்தையில் இருந்த அர்த்தம் அக்ஷய்க்குப் புரியாமல் இல்லை...

விக்டர், நிஷா பற்றி முழுவதும் அறிந்தவன் அல்லவா... அனிக்காக அவர்கள் செய்த உதவியை அவனால் என்றும் மறக்க இயலாது...

"நிச்சயம் விக்டர்... இனிமேல் நிஷா எனக்கு அனி மாதிரி இன்னொரு தங்கை தான்... நீ வர்ற வரைக்கும் நான் அவளைப் பத்திரமா பார்த்துக்கிறேன்..." என்று விக்டருக்கு ஆறுதல் சொன்னவன் அதே போல் நிஷா பத்திரமாகத் தனது பாதுகாப்பில் தங்க வைத்தான்...

இதில் எல்லாம் அவன் குணவான் தான்... ஏனோ அபியிடத்தில் மட்டுமே அவனது குணம் சற்று சறுக்கி போனது...

************************

அக்ஷயின் வீட்டை விட்டு வெளியேறிய அபி திரும்பியும் பார்க்காமல் சிறிது தூரம் நடந்தவள் அங்கு வந்த ஆட்டோவை நிறுத்தி தனது வீட்டின் முகவரியை கூறி ஏறி அமர்ந்தாள்...

வீடு வந்ததும் இறங்கியவள் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு மீண்டும் வீட்டிற்குள் நுழைந்தாள்...

"அபி அதுக்குள்ள வந்துட்டீங்க...?" அப்போது தான் குளித்து முடித்து வந்த அனி அபியை பார்த்து கேட்டாள்...

அபிக்கு அவளின் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை...

"லேசா தலைவலி..." முணுமுணுத்தவள் அறைக்குச் செல்ல எத்தனிக்க...

"காபி போட்டு தரவா...?" என்றவளை நிமிர்ந்து பார்த்தாள் அபி...

அண்ணனால் வந்த தலைவலி தீர தங்கை காபி போட்டு கொடுக்கிறாளா மனதுக்குள் விரக்தியாய் சிரித்தவள்,

"வேண்டாம்... கொஞ்சம் தூங்கி எழுந்தா சரியா போகும்..." என்றவள் அறைக்குள் சென்றாள்...

கோமதி பாட்டி மூட்டு வலி காரணமாக அறையில் இருந்தார்...

"அபி... என்ன கண்ணு இந்த நேரத்தில் வந்திருக்க...?"

"தலைவலி ஆச்சி..."

"எப்ப பாரு வேலை வேலைன்னு ஓடிட்டு இருந்தா இப்படித் தான்... இங்கே வா..."

"குளிச்சிட்டு வந்திர்றேன் ஆச்சி..."

"தலைவலியோட குளிக்கப் போறியா..."

"ஒரு ஆர்டரை கொடுக்க நடந்தே போனேன்... ஒரே வியர்வையாய் கசகசன்னு இருக்கு..." என்றவள் மாற்று ஆடையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குச் சென்றாள்...

தலை வழியாய் தண்ணீரை ஊற்றும் போது அவளையும் அறியாது கண்களில் கண்ணீர் வழிந்தது...

'ஏன் இப்படிப் பண்ணினான்...? அவன் எனக்குச் செய்த பாதகத்தை விடவா நான் அவனுக்குச் செய்துவிட்டேன்... அதற்காக என்னை... என்னை...' நடந்ததை நினைத்து பார்த்தவளுக்கு மேலும் மேலும் கண்ணீர் வழிந்தது...

"அபி..." பாட்டியின் குரலில் கண்ணீரை துடைத்துக் கொண்டு வேகமாய் உடையை மாற்றியவள் வெளியில் வந்தாள்...

"தலைவலியை வச்சிக்கிட்டு தலைக்குக் குளிச்சு இருக்கியே அபி..." என்று அவளைக் கடிந்தவர் அவளின் தலையைத் துவட்டி உலர செய்தார்...

பின்பு தன் மடியில் படுக்க வைத்து அவளின் தலையை இதமாய் வருடி விட அதில் மேலும் அவளுக்குக் கண்கள் கரித்தது... ஆனால் கண்ணீரை அடக்கி கொண்டு கண் மூடி கிடந்தாள்...

அவள் உறங்கி விட்டாள் என்று எண்ணி அவளைப் படுக்கையில் படுக்க வைத்து போர்வையைப் போர்த்தி விட்ட பாட்டி கதவை சாத்திவிட்டு வெளியேறினார்...

அவர் வெளியேறியதும் தான் தாமதம் அது வரை அடக்கி வைத்திருந்த அழுகை பெரும் கேவலாய் உருமாறி சத்தத்துடன் வெளிவந்தது...

அவ்வளவு நேரம் மனதில் புதைத்து வைத்து இருந்த துயரம் எல்லாம் இப்போது கண்ணீராய் வெளிவந்தது... தனது துயரத்திற்குக் காரணமான அக்ஷயை ஒன்றும் செய்ய இயலாத தன்னுடைய இயலாமை நிலையை எண்ணி மேலும் மேலும் கதறினாள்...

அடுத்து என்ன செய்வது, என்ன பண்ணுவது என்று தெரியாமல் அழுகை மட்டுமே அவளிடம் மிச்சம் இருந்தது... எதையும் யோசிக்க இயலாமல், செய்ய முடியாமல் அவளின் மூளை மரத்துப் போயிருந்தது...

இரவு ஆதர்ஷ் வந்து அவளைப் பார்க்கும் வரை உணவு உண்ண கூடச் செல்லாமல் படுத்து கிடந்தாள் அபி...

"அபி..." அண்ணனின் குரல் கேட்டுக் கண் விழித்தாள் அவள்...

"என்ன பண்ணுதுடா...?" என்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்... நெருப்பாய்த் தகித்தது...

"ஒண்ணும் இல்லைண்ணா..."

"உடம்பு சுடுது... ஒண்ணும் இல்லைங்கிற..." என்று அவளைக் கடிந்தவன் மாத்திரையை எடுத்து வந்து போட செய்தவன் பிறகு ஒரு இட்லியை ஊட்டி விட்டான்...

அண்ணனின் கரிசனையில் அவளின் கண்களில் கண்ணீர் துளி உருண்டோடியது...

"ரொம்ப முடியலையா அபி..." அக்கறையுடன் கேட்ட ஆதர்ஷிடம் நடந்த உண்மையைச் சொல்ல முடியாமல் தவித்தவள் குற்றவுணர்வுடன் தலையை ஆட்டினாள்...

ஏனெனில் இதுநாள் வரை மிரட்டி வந்த அக்ஷயின் அதிரடியான செயலை நேரடியாய் இன்று பார்த்ததினால் அவள் அவனைப் பற்றி அண்ணனிடம் மூச்சு விடவில்லை... தனது காரியம் நடக்க எந்தளவுக்கும் கீழிறங்கும் அக்ஷயை நினைத்து அவள் மனதில் வெறுப்பு தான் எழுந்தது...

முதலில் சாதாரணச் சுரம் என்று நினைத்த ஆதர்ஷ் மூன்று நாட்கள் ஆகியும் காய்ச்சல் குறையாமல் படுத்தே இருந்த தங்கையைக் கண்டு அவனுக்குப் பயமாய்ப் போயிற்று...

"ஆச்சி... அபியை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போயிடலாமா..."

கோமதி பாட்டிக்கும் பேத்தியின் நிலை கண்டு சற்றுக் கவலையாகத் தான் இருந்தது...

"கூட்டிட்டுப் போகலாம் ஆது..." அவரும் சம்மதிக்க ஆதர்ஷ் வேலை பார்க்கும் மருத்துவமனையில் அபி சேர்க்கப்பட்டாள்...

மருத்துவமனையிலும் அவளுக்குக் காய்ச்சல் என்று எண்ணி தான் மருத்துவம் பார்த்தனர்... யாரும் அவள் மானப்பங்கப் படுத்தப்பட்டாள் என்று நினைக்கவில்லை...

ஏனெனில் அவளின் உடலில் சின்னக் காயம் கூட ஏற்படுத்தாமல் அவளது கற்பை மட்டும் களவாடிய அக்ஷயின் கெட்டிக்காரத்தனத்தை என்னவென்று சொல்வது...

வன்கொடுமை நடந்ததைப் பெண்ணாய் சொல்லாவிட்டால் யாரும் அதைக் கண்டறிவது கடினம்... அது தான் அபியின் விசயத்தில் நடந்தது...

தனக்கு நேர்ந்த கொடுமையை நினைத்து அவள் உள்ளுக்குள் மருகினாளே தவிர வாய்விட்டு சொல்லவும் இல்லை... புலம்பவும் இல்லை...

அதை அப்போதே சொல்லி இருந்தால் பின்னால் ஏற்படப் போகும் பல பிரச்சினையைத் தவிர்த்து இருக்கலாம்...

கடவுளின் கணக்கு வேறாய் இருக்கும் போது மனிதன் என்ன செய்வான்... அவனின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆட வேண்டியது தான் மனிதனின் கடமை...

அன்று இரவு களைத்து போய் வீட்டிற்கு வந்தான் அக்ஷய்... உடையைக் கூட மாற்றாமல் கையைக் கழுவி கொண்டு சாப்பிட அமர்ந்தான்... அந்நேரம் கோபிநாத்தும் உணவு உண்ண வந்தார்...

"இப்போ அபி எப்படி இருக்கா..." கோபிநாத் மனைவியிடம் கேட்டார்...

அபி பெயரை கேட்டதும் அக்ஷயின் காதுகள் கூர்மை அடைந்தது...

"இப்போ பரவாயில்லைங்க... மாப்பிள்ளை அந்த ஹாஸ்பிட்டல்ல வேலை பார்க்கிறதால கூடவே இருந்து கவனிச்சிக்கிறார்..." என்ற துளசி தானும் சாப்பிட அமர்ந்தார்...

'அபிக்கு என்னவானது...?' அவனுக்கு உள்ளுக்குள் திக்கென்று இருந்தது...

தன்னுடைய செய்கையில் மனம் வெறுத்து போய் அவள் தற்கொலை முயற்சி ஏதும் செய்துவிட்டாளோ என்று நினைத்தவன் மனம் அதிர அப்படியே எழுந்துவிட்டான்...

"என்ன அக்ஷய்... சாப்பிடாம எந்திருச்சிட்ட..." தாயின் குரலில் தன்னுணர்வு பெற்றவன் தன் மனதை வெளிக்காட்டி கொள்ளாமல் தட்டில் இருந்ததை வேகமாய் விழுங்கி விட்டு கையைக் கழுவி கொண்டு அறையை நோக்கி சென்றான்...

உடையை மாற்ற கூடத் தோன்றாமல் அப்படியே படுக்கையில் சாய்ந்தவனுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை... தொழில் நிமித்தமாய்த் தேவைப்பட்டால் மற்றவர்களை அவன் மிரட்டி இருக்கிறான்... ஆனால் அவனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யாரும் கிடையாது... தன்னுடைய காரியம் நடக்க வேண்டுமாயின் பணத்தைத்

தாராளமாகச் செலவு செய்து காரியத்தை முடிப்பவன் அவன்... அதனால் பெரிய பாதிப்பு என்று இதுவரை வந்தது இல்லை...

அபி மாதிரி ஆட்கள் அவனுக்கு எதிராகத் துள்ளும் போது கொஞ்சம் கடுமை காட்டி மிரட்டி தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வான்... மற்றபடி அவன் யாரையும் துன்புறுத்தியது கிடையாது... ஆனால் இந்த அபியின் விசயத்தில் மட்டும் ஆரம்பம் முதல் தகராறு தான்... முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது அவள் விசயத்தில் சரியாய்ப் போனது...

அவளிடம் அத்துமீறி நடக்கும் போது வராத பதட்டம் இப்போது அவளின் உயிருக்கு ஒன்று என்றவுடன் தோன்றுவதை வியப்பாய் நினைத்தவனுக்குத் தன்னைக் குறித்தே ஆச்சிரியமாக இருந்தது...

'அவளிடத்தில் மட்டும் என் கணிப்பு எல்லாம் வீணாய் போகுதே ஏன்... ஏன்... ஏன்...?' என்ன யோசித்தும் விடை தெரியவில்லை அவனுக்கு...

அடுத்து வந்த நாட்கள் ஒருவித அமைதியில் கழிந்தது... அன்று அலுவலகத்தில் முக்கியமான கூட்டத்தில் பேசி கொண்டு இருந்த போது அவனின் தந்தை அவனை அழைத்தார்...

"அக்ஷய்... உடனே கிளம்பி வா..." கோபிநாத் அவனை அழைக்க...

"டாட் முக்கியமான மீட்டிங் இருக்கு... இப்போ வர முடியாது..."

"இங்க வாழ்க்கையே வீணா போயிட்டு இருக்கு... முதல்ல நீ கிளம்பி வா..." அவர் குரலில் கடுமை இருந்ததோ...

"புரியலை டாட்..."

"உன் வாழ்க்கையோடு உன் தங்கை வாழ்க்கையும் சேர்த்து கேள்விக்குறியாக்கிட்டியே அக்ஷய்... அதன் விளைவுகளை

நீ தான் சந்திக்க வேண்டும்... உடனே வா..." என்றவர் அழைப்பை துண்டித்தார்...

அக்ஷய்க்கு விசயம் புரிந்து போனது... அபிக்கும் தனக்கும் இடையே நடந்த விசயம் இரு வீட்டாருக்கும் தெரிந்து விட்டது என்று...

அபியை மட்டுமே நினைத்து அகங்காரம் கொண்டு செயல்பட்டவன் அதில் தன் தங்கையின் வாழ்வும் பிணைந்து இருப்பதை எண்ணி பார்க்க மறந்து போனான்...

கூட்டத்தை வேறு ஒரு நாளுக்குத் தள்ளி வைத்துவிட்டு அலுவலகத்தை விட்டு விரைந்து வெளியேறியவன் காரில் ஏறி வீடு நோக்கி பறந்தான்...

வீட்டின் வரவேற்பறையில் குழுமி இருந்த இரு வீட்டு உறுப்பினர்களைக் கண்டதும் அவனது நடை ஒரு நொடி தயங்கி பின் சீரானது...

அவனது கண்கள் அபியை தேடி அலைந்து கடைசியில் அவளிடம் நிலைத்து நின்றது... கண்களால் அவளை அலசி ஆராய்ந்தவன் மனதில் நிம்மதி அடைந்தான்...

ஆதர்ஷ் அவனை வெட்டவா குத்தவா என்று ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான்... அவனைப் பார்த்துக் கொண்டே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் அக்ஷய்...

"சொல்லுங்க என்ன விசயமா வந்து இருக்கீங்க...?" கேட்டவனின் பார்வை அங்கு ஓரமாய் நின்று இருந்த அபியிடம் மீண்டும் சென்றது...

ரொம்பச் சாதாரணமாய்க் கேள்வி கேட்கும் மகனை முறைத்தபடி துளசி அபியின் கையை ஆறுதலாய் பிடித்துக் கொண்டு நின்று இருந்தார்... அனியும், கோமதி பாட்டியும் அடுத்து இருந்த சோபாவில் அமர்ந்து இருந்தனர்...

அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்த அபியின் பார்வையில் என்ன இருந்தது என்று அவனுக்குப் புரியவில்லை...

"எவ்வளவு தைரியம் இருந்தா ஒண்ணும் தெரியாத மாதிரி என்ன விசயம்ன்னு கேட்ப..." ஆதர்ஷ் எழுந்து வந்து அவனின் சட்டை காலரை பிடித்தான்...

"ஆது..." கோமதி பாட்டி பேரனை அடக்கினார்...

பேத்தியின் வாழ்க்கை குறித்து அவருக்குக் கவலை இருந்த போதும் அவரால் அதிரடியாய் பேச முடியவில்லை... பாதிக்கப்பட்டது பெண்ணான அவரது பேத்தி அல்லவா... அவளை நினைத்து மூதாட்டியின் கண்கள் நிறைந்தது...

"எதுவா இருந்தாலும் பேசி தீர்த்துக்கலாம்..." என்றவர்,

"இதுக்கு நீயே ஒரு முடிவு சொல்லுப்பா..." அக்ஷயிடமே முடிவு எடுக்கும் உரிமையை அளித்தார்...

உயிரை காவு வாங்கும் அரக்கனிடம் உயிரை காப்பாற்ற வழி கேட்பது போல் இருந்தது அவரது பேச்சு...

"ஆச்சி..." அலறினாள் அபி...

அவளைப் பார்த்துக் கொண்டே அக்ஷய், "நான் செய்த தவறை நானே சரி செய்யறேன்... நான் அபியை கல்யாணம் பண்ணிக்கிறேன்..."

அவன் தன் தங்கையை மனதில் வைத்துக் கொண்டு தான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நினைத்தான்... இப்போதும் திருமணத்தை வியாபாரமாகத் தான் எண்ணினான்...

அவன் கூறி முடித்ததும் தான் தாமதம் அவன் அருகில் வந்து அவனது சட்டையைக் கொத்தாக பற்றிய அபி,

"எவ்வளவு தைரியம் இருந்தா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லுவ... பொம்பளைங்கன்னா உனக்கு அவ்வளவு லேசா போயிருச்சாடா... என்னோட கற்பு உனக்கு அவ்வளவு கேவலமா போயிருச்சா... அன்னைக்கு அனுமதி இல்லாம பண்ணியதை கல்யாணம் பண்ணிட்டு அனுமதியோட பண்ண போறியா... ச்சீ... த்தூ..." அவனது முகத்தில் காறி உமிழ்ந்தாள்...

அவளின் ஆத்திரமான செயலில் அக்ஷய் செயலிழந்து போனான்...

"நான் உன் வீடு தேடி வந்ததும் உன் கிட்ட வாழ்க்கை பிச்சை கேட்டு வந்து இருக்கேன்னு என்னை இளக்காரமாய் நினைச்சிட்டியா... அப்படி ஒரு நிலை வந்தா நான் செத்து போவேனே தவிர உன் கிட்ட வந்து நிற்க மாட்டேன்... அப்போ எதுக்கு இங்கே வந்திருக்கேன்னு பார்க்கிறியா... நான் எங்கே போனாலும் உன்னால தடை போட முடியும்... போலீஸ்ல இருந்து கோர்ட் வரைக்கும் உன் இஷ்டத்துக்கு ஆட்டி வைக்க முடியும்... ஏன்னா உன் பணபலம் அப்படி... ஆனா உன்னைப் பெத்தவங்க கிட்ட உன் ஜம்பம் பலிக்காது பாரு... அதான் நான் நியாயம் கிடைக்க வேண்டி உன் அப்பா, அம்மாவை தேடி வந்தேன்..." என்றவள் துளசியின் அருகில் சென்று,

"அத்தை... நீங்க ஒரு பொண்ணு தானே... உங்க மகனால எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஒரு நல்ல முடிவாய் சொல்லுங்க... நான் இவனைக் கோர்ட்டில் நிறுத்தணும்... தண்டனை வாங்கித் தரணும்... அப்போ தான் நான் துடிச்ச துடிப்பிற்கு ஒரு அர்த்தம் இருக்கும்..." கண்ணீர் மல்க கேட்டவளை அணைத்துக் கொண்ட துளசி தானும் கண்ணீர் வடித்தார்...

அபியின் இந்த வார்த்தையில் அக்ஷய் அவளை உற்று நோக்கினான்...

"உன்னோட வேதனை எனக்குப் புரியுதும்மா... அனி மாதிரி நீயும் எனக்கு ஒரு பொண்ணு தான்... அதே மாதிரி அக்ஷயும் எனக்கு மகன்ம்மா... அவனுக்காக நான் உன் கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... அவன் செஞ்சது தப்பு தான்... அதுவும் மன்னிக்க முடியாத தப்பு தான்... அதுக்காக அவனைத் தண்டிக்க என்னால முடியாது..."

"அப்போ உங்களால முடியாதுல்ல அத்தை..." என்று கேட்டவளிடம் துளசி முந்தானையைக் கையில் ஏந்தி,

"எங்க சொத்தை வேணும்னாலும் எடுத்துக்கோ அபி... ஆனால் அவனை ஒண்ணும் செஞ்சிடாதே... அவன் தான் தன் தப்பு உணர்ந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றானே... அவனை மன்னிச்சு ஏத்துக்கோ அபி..."

அவரின் கையைப் பிடித்துக் கீழிறக்கிய அபி, "நீங்க பணக்காரங்க இல்ல... அதான் எதையும் விலை பேசியே பழிகிட்டீங்க... சரி நானும் விலை பேசறேன்... என் கற்புக்கு விலை என்ன...? உங்களால மதிப்பு போட்டு சொல்ல முடியுமா...?"

அவளின் பேச்சு கேட்டு துளசி வாயை மூடி கொண்டு அழ, கோபிநாத் இதைக் காண முடியாமல் வேதனையுடன் கண்களை மூடி கொள்ள, ஆதர்ஷோ உச்சக்கட்ட கொதிப்பில் நின்று இருந்தான்...

அக்ஷய் தனது விழிகளை அபியிடம் இருந்து விலக்கி கொள்ளவில்லை... கைகளைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்...

"உங்களால சொல்ல முடியலை அப்படித்தானே... அப்போ நான் சொல்லவா...?" என்றவள் அக்ஷய் அருகில் வந்து,

"என் கற்புக்கான விலை உங்க மகனோட உயிர்..." என்றாள் தைரியமாய்... நிமிர்வாய்...

அது நாள் வரை அவளைக் கவனித்துப் பார்க்காதவன் இன்று அவளைக் கவனித்துப் பார்த்தான்...

மெல்லிய தேகம் கொண்ட இந்தப் பெண்ணுக்குள் இத்தனை நிமிர்வா...? ஒரு கணம் அதிசயித்துப் போனான்...

காதலனிடம் வரம்பு மீறி பழகத் துடித்த அனியையும், திருமணத்திற்கு முன் தன்னுடன் இளமையைப் பங்கு போட துடித்த மதியையும் கண்டு வந்த அவனுக்கு அபியின் கற்புக்கான இந்தப் போராட்டம் அவனை வியக்க வைத்தது...

அனி கூட அவன் ஒரு வார்த்தையில் அடங்கிப் போய்விடுவாள்... மதியோ கேட்கவும் வேண்டாம் ஒரு பார்வையில் ஒதுங்கி விடுவாள்...

ஆனால் அபியோ இத்தனை நடந்தும் அவனுக்கு எதிராய் போர்க்கொடி தூக்குவதைக் கண்டு மெல்லிய ஆச்சிரியம் மனதில் முளைத்தது...

பணத்திற்கும், வளமான வாழ்க்கைக்கும் மயங்காத அந்தப் பெண்ணிடத்தில் அவனது மனம் லேசாகச் சாயத் துவங்கியது...

வாழ்க்கையில் காதலை பற்றி அறியாத, தெரியாத அவனுக்கு அந்தச் சின்னப் பெண் தான் வருங்காலத்தில் காதல் என்றால் என்ன என்பதை உணர்த்த போகிறாள் என்பதை அறியாமல் அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்...

பூக்கும்...

அபி குணமாகி மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த சில நாட்களில் ஆதர்ஷ் அவளைப் பெண் பார்க்க தனது நண்பன் வருவதாய்த் தெரிவித்தான்...

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தாள் அபி... இதே இது முன்பு இருந்த அபியாய் இருந்து இருந்தால் சந்தோசப்பட்டு இருப்பாளா என்னமோ... ஆனால் இப்போது இருக்கும் அபியின் சந்தோசத்தை அந்த ராட்சசன் அல்லவா களவாடி விட்டான்... சந்தோசத்தை மட்டுமா அவளது கற்பையும் சேர்த்து அல்லவா...

"அண்ணா... எனக்குக் கல்யாணம் வேண்டாம்..." என்றாள் கலங்கிய கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு...

"ஏன் அபி இப்படிச் சொல்ற...?" கோமதி பேத்தியை கேள்வியாய் பார்க்க...

"ஏன்டா..." தங்கையிடம் ஆறுதலாய் வினவினான் ஆதர்ஷ்...

தன் நிலையை என்னவென்று சொல்வாள்...? அதை எப்படிச் சகோதரனிடம் கூறுவாள்... மனதில் துயர் அழுத்தியது...

"இப்போதைக்கு வேண்டாம்ண்ணா... பிறகு பார்க்கலாம்..."

"அதைத் தான் ஏன்னு கேட்கிறேன்...?" ஆதர்ஷ் அழுத்தமாய்க் கேட்டான்...

வருடம் செல்ல செல்ல வயது என்ன குறைந்து கொண்டா போகிறது... தங்கையின் பேச்சு அவனுக்குச் சிறிது கோபத்தை வரவழைத்தது...

"ஏன்னா உன் தங்கை இப்போ கன்னிப் பெண் இல்லை..." ஒருவாறு விசயத்தைப் போட்டு உடைத்தவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்...

அதைக் கேட்டு ஆதர்ஷ், பாட்டி இருவருமே அதிர்ந்து போயினர்... அனிக்குமே அவள் கூறிய விசயம் கேட்டுத்

திகைப்பை அளித்தது...

"ஐயோ கடவுளே... என் பேத்திக்கா இந்த நிலைமை..." கோமதி பாட்டி சத்தம் போட்டு அழுதார்... அவரால் அதை ஜீரணிக்க முடியவில்லை...

ஆதர்ஷ்க்கோ தங்கையின் நிலை கண்டு மனம் கொதித்தது... அந்தக் கயவனை வெட்டி சாய்க்க வேண்டும் என்ற வெறி எழுந்தது...

"யார் அவன்...?" அவன் கோபமாய் அவளது தோள் பற்றி உலுக்க... அவளோ நிமிரும் வழி தெரியவில்லை...

"சொல்லு அபி..." அவன் விடாப்பிடியாய் கேட்டும் அவளிடம் பதில் இல்லை...

தங்கையின் அழுகை அவனின் மனதை கரைக்க,

"அபி... இங்கே பாரும்மா..." அவள் முகத்தை நிமிர்த்த ஆதர்ஷ் செய்த முயிற்சிகள் எல்லாம் வீணாய்ப் போனது...

"அபி... யாருன்னு சொல்லுடா... அவனை ஒரே போடா போட்டு தள்ளிர்றேன்..." அவனது மனம் குமுறியது...

அவனின் வார்த்தையில் அனி பயந்து போய் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அசையாமல் சிலை போல் நின்று இருந்தாள்... சாதுவான தனது கணவனின் இன்னொரு முகம் அவளை அச்சுறுத்த அவன் மேல் பயம் எழுந்தது...

"அண்ணா..." என்றபடி அவனது தோளில் சாய்ந்து மேலும் அழுத தங்கையைக் கண்டு அவனுக்கும் கண்கள் கலங்கியது...

குடும்பத்திற்காக ஓடாய் தேய்ந்து உழைத்த தன் தங்கை இதுவரை சந்தோசம் என்பதை வாழ்வில் காணவில்லை என்பதை உணர்ந்தவனுக்கு மனம் வேதனை கொண்டது... திருமணம் முடிந்தாவது அவளது வாழ்வு நல்லபடியாக இருக்கும் என்று எண்ணினால் அதற்கும் தடை வந்து கொண்டு இருக்கிறதே...

அன்று ஊரார் முன் அசிங்கப்படுத்த பட்டாள்... இன்று அவளின் கற்பு பறி போய்க் கலங்கி நிற்கிறாள்... தன் தங்கைக்கு மட்டும் ஏன் இப்படி...?

அபியாய் அழுது ஓய்ந்ததும் அவளின் தலையை வருடி கொடுத்து, "இப்பவாவது சொல்ல கூடாதா அபி..." என்று அவன் கேட்க...

அபி மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்... கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது...

"சொல்லுடா..." அவளின் கண்களைத் துடைத்துக் கொண்டே அவன் கேட்டான்... தங்கையிடத்தில் கோபத்தைக் காட்டி பிரயோஜனம் இல்லை... அவனுக்குத் தெரியும் அவள் அப்பாவி என்று...

அபிக்கும் வேறுவழி தெரியவில்லை... மனதின் பாரத்தைச் சுமக்க சுமக்க அவளுக்கு மூச்சு முட்டியது... யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது...

எதுவும் பேசாமல் அனியை நோக்கி கை காட்டினாள்...

"அனி உனக்கு விசயம் தெரியுமா...?" ஆதர்ஷ் மனைவியைக் கோபமாய்ப் பார்த்தான்...

"ஐயோ... எனக்கு எதுவும் தெரியாதுங்க..." கணவனின் கடுமை கண்டு பயத்தில் கண்களில் கண்ணீர் வழிந்தது அவளுக்கு...

அந்த நிலையிலும் அண்ணியின் கண்ணீர் அபிக்கு இரக்கத்தை அளித்தது... தவறு செய்து இருந்தாலும் இப்போது திருந்தி அண்ணனுடன் மனமொத்து வாழும் அவள் மேல் குற்றம் சாட்ட அபியால் முடியவில்லை...

தவறு உணர்ந்து திருந்துபவர்களை மன்னிக்க வேண்டும்... அது தான் மனித இயல்பு... அதைத் தான் அபி அனி விசயத்தில் செய்தாள்... தனது அத்தனை பிரச்சினைக்கும் மூலக்காரணம் அனி தான் என்றாலும் பெண்ணாய் அவளை மன்னித்தாள்... அனியை வைத்து அக்ஷய் அவள்

வாழ்வில் விளையாண்டதை தான் அவளால் மன்னிக்க முடியவில்லை...

"அண்ணிக்கு எதுவும் தெரியாது... இதுக்குக் காரணம் அவங்க அண்ணன்..." சகோதரன் முகம் காண கூசி தலை கவிழ்ந்தாள் அவள்...

அக்ஷய் என்றதும் ஆதர்ஷ் திகைத்தான்... அக்ஷயின் குணம் சிலது அவனுக்குப் பிடிக்காது... அதனால் அவன் அக்ஷயிடம் இருந்து ஒதுங்கியே இருந்தான்...

தங்கையிடம் இருந்து எழுந்தவன் மனைவியிடம் வந்தான்...

"உன் அண்ணனுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும் என் தங்கச்சி மேல கை வைக்கிறதுக்கு..." அனியை நோக்கி கையை ஓங்கியவன் அவளின் கலங்கிய முகத்தில் என்ன கண்டானோ கையைக் கீழே போட்டான்...

"உன் அண்ணனுக்கு அபி மேல அப்படி என்ன கோபம்...? இப்படி அவள் வாழ்க்கையைப் பாழடிக்கும் அளவுக்கு...?" மனைவியிடம் கோபமாய்க் கத்தியவனுக்கும் ஏன் என்ற காரணம் பிடிபடவில்லை...

அனிக்குமே அக்ஷய் இப்படிச் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை... தன் அண்ணனா இப்படி என்று அவளும் அதிர்ந்து போயிருந்தாள்...

ரஞ்சித்தின் அந்த மாதிரியான குணத்தைக் கண்டறிந்து தன்னைக் கண்டித்த தன் அண்ணன் அதே மாதிரி ஒரு காரியத்தை அபிக்கு செய்ததைக் கண்டு அவளுக்குத் திகைப்பாய் இருந்தது...

"அபி எழுந்திரு... போலீசில் கம்ப்ளையிண்ட் பண்ணலாம்... அப்போ தான் அவனுக்குப் புத்தி வரும்..." ஆக்ரோசத்துடன் சொன்னவன் தங்கையின் முகத்தைப் பார்த்தான்...

அவனது வார்த்தையில் முகம் வெளிறியவள், "வேண்டாம்ண்ணா..." என்று கூவி கொண்டு அறைக்குள் ஓட அவளின் செயலில் அவன் செய்வதறியாது நின்றான்...

பின்பு சுதாரித்துக் கொண்டு அவள் பின்னோடு சென்றவன், "அபி உனக்கும் அவனுக்கும் ஏதாவது பிரச்சினையா...? ஏன் இப்படி நடந்து கொண்டான்...?" ஆதர்ஷ் கேட்ட கேள்விக்கு அவளிடத்தில் பதில் இல்லை...

அவள் அதன் காரணத்தைச் சொல்ல ஆரம்பித்தால் தோண்ட தோண்ட எல்லாப் பிரச்சினையும் வெளிவரும்... அதன் பின் ஆதர்ஷ் கோபம் கொண்டு பொங்கி எழுவான்... அதன் பிறகு முடிவு நிச்சயம் ஆதர்ஷின் கையில் இல்லை... அக்ஷயின் கையில்... அவளின் வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கியதை போல் ஆதர்ஷின் வாழ்க்கையையும் கேள்விக்குறி ஆக்கி விடுவான் அக்ஷய்...

பதில் பேசாது அழும் தங்கையைப் பார்த்தவன், "அப்படின்னா அவனை ஒண்ணும் பண்ணாம விடச் சொல்றியா...?"

"தெரியலைண்ணா..." அவளுக்குமே அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை...

எந்த விதத்தில் அக்ஷயை எதிர்த்தாலும் எல்லா எதிர்ப்பையும் அவன் ஒன்றும் இல்லாததாய்ச் செய்துவிடுவான் என்பது அவளுக்கும் தெரியும்... காவல்நிலையம் சென்று அவள் தான் வீணே அவமானப்பட வேண்டும்... வேண்டும் என்றே அவன் அவளை அவமானப்படுத்துவான்... அதனால் அவளால் எதையும் யோசிக்க முடியவில்லை...

எதற்கும் மறுக்கும் தங்கையைக் கண்டு ஆயாசமாக இருந்தது அவனுக்கு... அதே சமயம் அக்ஷய் மேல் கொலைவெறி எழுந்தது...

அவனுக்கு என்ன கோபம் வேண்டும் என்றாலும் அபி மீது இருக்கட்டும்... அதற்காக அவளை இந்த நிலைக்கு ஆளாக்க வேண்டுமா என்று உள்ளம் குமைந்தான்...

"ஏன் அபி கற்காலம் மாதிரி சிந்திக்கிற...? உன்னை மாதிரி பெண்கள் கோழை மாதிரி வெளியில் சொல்லாமல்

இருக்கிறதால தான் அவனை மாதிரி ஆம்பிளைங்க தைரியமா வெளியில் அலையறாங்க... உன்னை இந்த நிலைக்கு ஆக்கியவனைத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டாமா...? எந்த நேரத்திலும் அண்ணன் உன் பக்கம் நிற்பேன் அபி... என் மனைவி அவன் தங்கைகிறதால நீ யோசிக்காதே... எனக்கு நீ தான் முக்கியம்..." என்ற அண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டாள்...

இவ்வளவு நேரம் அவளிடம் விடைப்பெற்று இருந்த தைரியம் இப்போது மெல்ல திரும்பலானது... தன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியவன் நிம்மதியாய் இருக்கத் தான் மட்டும் அழுது கரைய வேண்டுமா... ம்ஹூம்... அழக் கூடாது என்று நினைத்தவளின் கைகள் கண்களை அழுந்த துடைத்தது...

அக்ஷயை எதிர்த்துக் காவல்நிலையம் போவதோ, நீதிமன்றம் போவதோ பயன் இல்லாதது... எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கி விடுவான்... அவன் திரும்பப் பேச முடியாதபடி அடிக்க வேண்டும்... அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தாள்...

தீவிரமாய்ச் சிந்தித்தவளின் சிந்தனையில் அந்த எண்ணம் உதயமானது... முகத்தில் வெளிச்சம் ஏற...

"அண்ணா..."

"சொல்லுடா..."

"அண்ணியோட வீட்டுக்கு போவோம்..." உறுதியாய் கூறியவளை கண்டு என்ன ஏது என்று கேட்காமல் ஆதர்ஷும் சரி என்று சம்மதித்தான்...

அவர்கள் கிளம்பிய போது கோமதி பாட்டி, "ஆது... நானும் வர்றேன்... கோபப்பட்டு எதாவது பேசி காரியத்தைக் கெடுத்துடாதீங்க... பாதிக்கப்பட்டு இருப்பது நம்ம வீட்டு

பொண்ணு... அதனால் பார்த்துப் பக்குவமா பேசணும்ப்பா..."

"அவன் செஞ்ச காரியத்துக்குப் பக்குவமா பேச என்ன இருக்கு ஆச்சி... அவனை எல்லாம்..." ஆத்திரத்தில் பற்களைக் கடித்தான் ஆதர்ஷ்...

அண்ணனின் மனநிலையில் தான் தங்கையும் இருந்தாள்...

வாழ்க்கையை வாழ்ந்து பார்த்துப் பக்குவப்பட்ட அந்த மூதாட்டி பேத்தியின் எதிர்கால வாழ்க்கையை மட்டுமே யோசித்துப் பார்த்தார்... தனது தள்ளாமையைக் கூடக் கண்டு கொள்ளாமல் இருவருடன் கிளம்ப அனியும் அவர்களுடன் கிளம்பி வந்தாள்...

நியாயம் கேட்க வந்த இடத்தில் அக்ஷய் என்னடா என்றால் கட்டப் பஞ்சாயத்துப் பண்ணுகிறான்...

தன் கற்பிற்கு விலையாக அவனது உயிரை கேட்கும் அபியை பார்த்தவன் உதட்டில் இளநகை ஒன்று வந்தமர்ந்தது...

"அதைத் தானே நானும் சொல்றேன்... என் உயிரை வச்சுக்கோன்னு..." அவனது வார்த்தையில் அவள் மட்டும் அல்ல அங்கிருந்த எல்லோருமே திகைத்து போயினர்...

அவளது திகைத்த முகத்தைத் திருப்தியுடன் பார்த்தவன் அவளைக் கண்டு இரு புருவங்களையும் கேலியாய் உயர்த்தினான்... அதில் முகத்தைச் சுளித்தவள் வேறு புறம் திரும்பி நின்றாள்... அவளை அப்படியே விட்டு விட்டால் அவன் அக்ஷய் இல்லையே...

அவள் முன் வந்து நின்றவன் எல்லோரும் இருப்பதைப் பொருட்படுத்தாமல் அவளது முகத்தை இரு கைகளில் தாங்கி,

"உன்னை உயிராய் காதலிக்கிறேன்னு சொன்னேன்... நீ நம்பலை... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன்னு சொன்னேன்... நீ நம்பலை... அதனால

தான் நான் வேறுவழியில்லாம உன்னை அடைவதற்காக..." ஒரு கணம் தயங்கி நிறுத்தியவன்,

"ம்.... நம் வாழ்க்கையைப் பத்தி நான் கண்ட கனவு வேறு... நடந்தது வேறு... இப்போவும் ஒண்ணும் கெட்டு போகலை... நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்... ஏன்னா நான் உன்னைக் காதலிக்கிறேன்..."

அவனது செயலில் அவனது சொல்லில் அவள் சிலையாய் நின்றாள்... நிச்சயம் அவன் காதலில் உருகி அல்ல... போலித்தனமான அவனின் நடிப்பை கண்டு அவள் மனதில் பிரமிப்போடு கூடிய திகைப்பு எழுந்தது...

"என்ன அபி... நாம திருமணம் செய்து கொள்ளலாமா...?" கொஞ்சமும் அசராது நடிப்பவனைக் கண்டு திகைப்பில் இருந்து வெளியில் வந்தவள்,

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது..." வெறுப்புடன் கூறியவள் அவனின் கரத்தை தன்னிடம் இருந்து பிய்த்து எடுக்க அவளின் போக்குக்கு விட்டுக் கொடுப்பது போல் கையை எடுத்தவன் அடுத்த நொடி அவளைத் தன் அணைப்பில் கொண்டு வந்தான்...

"கையை எடுடா..." பெரியவர்கள் முன்னிலையில் அவனைக் கடிந்து பேச முடியாமல் அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னாள்...

"எடுக்க மாட்டேன்டி..." அவளைப் போல் கிசுகிசுப்பாய் கூறியவன் தன் கையை அகற்றினான் இல்லை...

அங்கிருந்த அனைவரையும் பார்த்தவன், "நான் அபியை காதலிக்கிறேன்... அவளைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்..." என்று அறிவிப்பாய் சொல்ல...

அதில் துளசி முகம் மலர்ந்தார்... அன்று அனி திருமணத்திற்காகப் புடவை எடுக்கும் போது யாரிடமும் சகஜமாய்ப் பேசாத அக்ஷய் அபியிடம் மட்டும் பதிலுக்குப் பதில் வாயாடினதை நினைத்து பார்த்தார்... அன்றே அவன் மனதில் அபி நுழைந்து இருக்க வேண்டுமோ...?

அதன் பின் திருமண நாள் அன்று அதிகாலையில் அவரிடம் வந்த அக்ஷய், "மாம்... அபியை அன்னைக்கு எடுத்த சேரியை கட்ட சொல்லுங்க மாம்..." என்று கூற...

மகனின் வார்த்தைகள் அவருக்கு வியப்பை அளிக்க... "என்ன திடீர்ன்னு...?"

"அவ அதைக் கட்டலை அதான்..." மகன் சற்று அசடு வழிந்தானோ... அவருக்குச் சந்தேகமாய் இருந்தது...

"பெண்கள் புடவையைக் கவனித்துப் பார்க்கும் அளவுக்கு உனக்கு நேரம் இருக்கா...?" என்று கேலியாய் கேட்டவரை பார்த்து,

"போங்க மாம்..." என்று சிரித்த அக்ஷய் கண்டு அவருக்கு அதிசயமாய் இருந்தது...

"ஆனா அபியை கவனிக்க நேரம் இருக்கு..." என்றவனின் வார்த்தையில் இருந்த உள் அர்த்தத்தை அந்தத் தாய் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை...

அவன் சொன்னதின் பேரில் அவர் தான் அபியை அன்று எடுத்த புடவையைக் கட்ட செய்தார்...

அதை நினைவு கூர்ந்தவருக்கு மகனின் மனம் அதிசயமாய்த் தெரியவில்லை... மாறாகப் பிரச்சினை இவ்வளவு எளிதில் சுமூகமாய்த் தீர்ந்ததைக் கண்டு சந்தோசமாய் இருந்தது... எங்கே தான் பெற்ற மகன் தவறான பாதையில் சென்று விட்டானோ என்று உள்ளம் பதைத்து நின்றவருக்கு அவனின் வார்த்தைகள் அவரின் காதில் தேனாய்ப் பாய்ந்தது...

"அன்னைக்கே அபி மேல் நீ தனிக் கவனம் செலுத்தும் போதே எனக்குத் தெரியும் அக்ஷய்... உன் மனதில் அவள் இருக்கிறாள்ன்னு... இப்ப தான் எனக்கு ரொம்பச் சந்தோசமா இருக்கு..." மகனின் அருகில் வந்து சொன்ன துளசி அவனை அணைத்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்...

"துளசி... என்ன இது...? அப்போ மதி... அவளின் நிலை..." கடுமையாய் ஒலித்தது கோபிநாத்தின் குரல்...

அதில் துளசி அதிர்ந்து போனவராய் கணவரையும், மகனையும் மாறி மாறி பார்த்தார்... இருந்த பிரச்சினையில் மதியை எப்படி அவர் மறந்தார்... அவளும் ஒரு பெண் தானே... அக்ஷயுடனான திருமணத்தில் அவள் என்ன என்ன கனவுகள் கண்டு கொண்டு இருக்கிறாளோ...

"டாட்... மதி விசயம் நான் பார்த்துக்கிறேன்... அவள் அப்பாவிடம் நான் பேசி கொள்கிறேன்..." என்றான் அக்ஷய்...

மதி மூலம் வரும் பயன்களைக் கருத்தில் கொண்டு தான் அவளைத் திருமணம் செய்ய அவன் சம்மதித்ததே... ஆனால் அதைக் கூட உதறித் தள்ள அவன் தயாராய் இருந்தான்...

தொழிலில் யாருக்காவும் எதுக்காகவும் விட்டு கொடுக்காதவன், சமரசம் செய்ய மறுப்பவன் இன்று மதியின் மூலம் வரும் பலன்களை விட்டுக் கொடுக்கிறான் என்றால் நிச்சயம் அது அவன் தங்கைக்காக அல்ல... நிச்சயம் அபிக்காகத் தான்... அதை அவன் உணராமல் பேசினான்...

"எப்படி அக்ஷய்... அவளோட அப்பா மினிஸ்டர்..." தயக்கம் இருந்தது கோபிநாத்தின் குரலில்...

"அந்த மினிஸ்டரை உருவாக்குவது நம்மை மாதிரி இன்டஸ்ட்ரியலிஸ்ட் தான்..." அசால்ட்டாய் பதில் சொன்னவனைக் கண்டு அபிக்கு எரிச்சல் வந்தது...

'என்ன மனிதன் இவன்...? தனக்கு நடந்த நிச்சயத்தைக் கூட நிறுத்துகிறானே... அந்தப் பெண் மனம் என்ன பாடுபடும்...? பெண்கள் என்றால் இவனுக்கு என்ன கிள்ளுக்கீரையா போயிட்டாங்களா...' தன்னைத் திருமணம் செய்யத் தான் அவன் தன் நிச்சயத்தை முறிக்கிறான் என்பதை அறியாத பேதையாய் அவள் மனம் மதிக்காகப் பரிதாபப்பட்டது...

மகனின் பதிலில் கோபிநாத்துக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை... மதியை விட அபியின் வாழ்க்கை மிகவும் மோசமான நிலையில் இருப்பதை உணர்ந்து அமைதி காத்தார்...

"ச்சீ... நீ எல்லாம் மனுசனா...?" சீறினாள் அவள்...

"பார்த்தா எப்படித் தெரியுது..." எகத்தாளம் நிரம்பி வழிந்தது அவனது குரலில்...

"ஒரு பொண்ணோட வாழ்க்கையைச் சீரழிக்க நினைக்கிறியே... உன்னை எப்படி மனுசன்னு சொல்றது..."

"அப்படிச் சீரழிக்காம இருக்கிறதுக்குத் தான் உன்னை நான் கல்யாணம் பண்ண போறேனே..." என்றவன், "ஓ... நான் மனுசன் இல்லை... தெய்வம்ன்னு சொல்றியா... தேங்க்யூ... தேங்க்யூ..." என்றவனை வெட்டவா குத்தவா என்பது போல் முறைத்து பார்த்தாள் அபி...

"நான் என்னைச் சொல்லலைடா முட்டாள்... அந்த மதியை சொன்னேன்..." என்றவள் அவன் பிடியில் இருந்து விடப் பட முயன்றாள்...

அவளின் வார்த்தையில் ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தவன் தன்னையும் அறியாது கையை எடுத்தான்... அவன் கையை எடுத்ததும் தான் தாமதம் அவளை விரைவாக நகர்ந்து பாட்டி அருகில் சென்று நின்று கொண்டாள்...

அக்ஷயின் பார்வை அவளைப் பின் தொடர்ந்தது... அவள் கொஞ்சம் கொஞ்சமாய் அவனின் மனதில் அடி எடுத்து வைத்துக் கொண்டு இருந்தாள்...

"நீங்க அவளை லவ் பண்ணி இருந்தா... நானே என் தங்கையிடம் பேசி இருப்பேனே... நான் சொல்லி என் தங்கை மறுத்து இருக்க மாட்டாள்... அதுக்காக நீங்க பண்ணியது சரியில்லை..." ஆதர்ஷ் அக்ஷயின் முகம் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்தபடி சொன்னான்...

ஆதர்ஷ்க்கு அக்ஷய் மேல் இருந்த கோபம் இன்னும் குறையவில்லை... காதலுக்காக ஒருவன் இந்தளவுக்குத் தரம் இறங்குவானா என்று அவனுக்கு வெறுப்பாய் இருந்தது... ஆனால் முன்பு இருந்த கோபம் அந்தக் காதல் என்ற சொல்லில் காணாமல் போயிருந்தது என்னமோ உண்மை...

ஆதர்ஷின் வார்த்தைகளில் அக்ஷயின் முகம் சுருங்கியது... 'இவன் எல்லாம் ரெக்கமண்ட் செய்யும் அளவுக்கு என் நிலைமை மோசமாகி விடவில்லை' மனதில் எரிச்சல் அடைந்தவன் அவனைக் கவனியாதவாறு கோமதி பாட்டி அருகில் சென்றான்...

அவனுக்குச் சாதகமாகப் பேசக் கூடிய ஒரே நபர் அவர் மட்டுமே... அதனால் அவர் அருகே அமர்ந்தவன் அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"பாட்டி... உங்க பேத்தியை நான் பூ மாதிரி பார்த்துக்கிறேன்... அவளை எனக்குக் கல்யாணம் பண்ணி தருவீங்களா...?" அவன் கேட்டதில் அந்த மூதாட்டி மனம் உருகி போனார்...

"ஆச்சி இவனை நம்பாதீங்க..." என்று அலறிய அபியின் மனம் அவனது வார்த்தையில் கொந்தளித்துக் கொண்டு இருந்தது...

'குரங்கு கையில் கிடைத்த பூ மாலை போல் என்னைப் பிய்த்து எறிந்துவிட்டு இப்போ பூ போல் பார்த்து கொள்வாயா...?' மனதில் குமைந்தாள்...

"அபி நீ சும்மா இரு..." என்று பேத்தியை அடக்கியவர் அக்ஷயிடம்,

"நீ உன் தவறை உணர்ந்துட்டே இல்ல... அதுவே போதும்ப்பா... அவளைக் கல்யாணம் பண்ணி சந்தோசமா வச்சுக்கோ..." என்றவர் அவனைப் பார்த்துக் கை கூப்பினார்...

இப்போது அக்ஷய் நிமிர்ந்து பார்த்தான் அபியை... அவன் கண்ணில் தெரிந்த கர்வத்தில் அவளுக்குப் பேச வாய் வரவில்லை...

"அண்ணா... நீயாவது சொல்லுண்ணா... இந்தக் கல்யாணம் வேண்டாம்ன்னு..." அபி கதறிக் கொண்டு ஆதர்ஷ் புறம் வந்தாள்...

அக்ஷய் அவள் வாழ்க்கையில் மேலும் விளையாட எண்ணுகிறான் என்று பயந்து போனாள்...

"அபி..." என்று ஆதர்ஷ் அவள் பக்கம் வரும் முன் அக்ஷய் அவளை இழுத்து ஆறுதலாய் அணைத்து இருந்தான்...

"ஷ்... அபி... நான் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்..." என்று அவளின் தலையை வருடி ஆறுதல் படுத்திய அக்ஷயின் செயலில் ஆதர்ஷ் கூடச் சற்று அசந்து போய்விட்டான்...

உண்மையில் அக்ஷய் காதலினால் தான் இவ்வாறு நடந்து கொண்டானோ என்று... 'ஆல் இஸ் ஃபேர் இன் லவ் அன்ட் வார்' என்பது அக்ஷய் விசயத்தில் சரியாய் போனதோ என்று எண்ணம் தோன்றியது...

அதன் பின் அபியின் வார்த்தை எதுவும் அங்கே எடுபடாமல் போனது... அக்ஷய்க்கும், அபிக்கும் இடையே திருமணம் பற்றிப் பேசி முடிவு செய்யப்பட்டது...

பெண்ணின் கற்பை சூறையாடிய அக்ஷயை வில்லனாய் பார்த்தவர்கள் அவனின் காதல் என்ற வார்த்தையில் அவனை ஹீரோவாய் பார்த்தனர்...

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆத்திரத்துடன் செய்வதறியாது நின்று இருந்த அபியை கண்ட அக்ஷய் தன் அன்னையின் காதில் ஏதோ கிசுகிசுத்தான்...

"தாராளமாய்க் கூட்டிட்டுப் போய்ப் பேசு அக்ஷய்..." துளசி சிரித்தபடி அனுமதி அளிக்க...

நொடி நேரம் தாமதிக்காமல் எழுந்த அக்ஷய் அபியின் அருகில் வந்து அவளின் கையைப் பற்றி, "வா..." என்று அழைக்க...

ஏதோ யோசனையில் இருந்தவள் அவனின் செயலில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள், "வர மாட்டேன்..." என்று அடம் பிடிக்க...

அதைக் கண்டு கொள்ளாமல் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்... அவளின் மறுப்பு அவனிடத்தில் ஒன்றும் செல்லாததாய் ஆனது...

தனது அறைக்குள் அவளை இழுத்து வந்தவன் அறைக் கதவை மூடி தாளிட்டான்...

அவனது செயலில் அச்சம் கொண்டவள் சுவரோடு ஒன்றினாள்...

கதவை தாளிட்டு விட்டு அவள் புறம் திரும்பியவன் அவளின் பார்வையில் இருந்த அச்சத்தை உணர்ந்தவனாய் அவள் அருகில் வந்தான்...

மூச்சுச் சுவாசம் அவள் மீது படும்படி நெருங்கி நின்றவன், "எப்போதும் கோபமா பார்க்கும் உன் கண்கள் இப்படிப் பார்க்கும் போது எவ்வளவு நல்லா இருக்கு தெரியுமா...?"

அவனின் அருகாமையில் அவளது தைரியம் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றது... சூடு கண்ட பூனையாய் ஒடுங்கினாள்...

அவளின் கோபம் தன்னை ஏன் பாதிக்கிறது... அவளின் பார்வை மாற்றம் தனக்கு ஏன் சந்தோசத்தை அளிக்கிறது என்பதை அப்போதும் அவன் உணர்ந்தான் இல்லை...

"அன்னைக்குப் பண்ணின தப்பை திரும்பச் செய்ய எனக்கு ஆசையா இருக்கு..." என்றவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

அவனின் வார்த்தையில் சுடு நீர் ஊற்றியது போல் துடித்தவள் அவனைத் தன் பலங்கொண்ட மட்டும் பிடித்துத்

தள்ளினாள்... அவனின் வலிமை மிக்கத் தேகத்தை அவளால் அசைக்கக் கூட முடியவில்லை...

"ஓகே... ஓகே..." என்று சிரித்தபடி அவன் அவளை விட்டு விலகினான்...

"உயிரை கேட்டவளுக்கு வாழ்க்கையே கொடுத்து இருக்கிறேன்... ஒரு தேங்க்ஸ் கிடையாதா...?" புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு அவளின் தேகம் பற்றி எரிந்தது...

"யாருக்கு வேணும் நீ கொடுக்கும் வாழ்க்கைப் பிச்சை... எனக்கு வேண்டியது உன் உயிர் தான்டா..." ஆக்ரோசமாய் வந்தது அவளது வார்த்தைகள்...

"ஓ... அப்படியா... சொல்லவே இல்லை..." அவனின் நக்கலில் அவள் பார்வையால் அவனை எரித்தாள்...

"நீ தாலி கட்டுவதற்காக நான் கழுத்தை நீட்டிட்டு இருப்பேன்னு மட்டும்ன்னு நினைக்காதே..."

"ம்ஹூம்... அப்புறம் வேறு என்ன பண்ணுவதாய் உத்தேசம்..."

"கல்யாணத்துக்கு முன்னால் ஓடி போயிருவேன்..." என்றவளை அலட்சியமாய்ப் பார்த்தவன்,

"உலகத்தில் எந்த மூலைக்குப் போனாலும் உன்னைத் தேடி வருவேன்... நெக்ஸ்ட்..."

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கும் நிலை வந்தா உயிரை விட்டிருவேன்... அப்போ உன்னால் என்ன செய்ய முடியும்..."

அவளை உறுத்து விழித்தவன், "என் மனைவியாய் உன்னை அடக்கம் செய்வேன் போதுமா..."

"ஏண்டா என்னை இப்படிப் படுத்துற...? செத்தும் என்னை நிம்மதியா விட மாட்டியா...?" கண்ணீர் விட்டவளை கண்டு அவன் கொஞ்சமும் இரங்கவில்லை...

"என் அப்பா, அம்மா முன்னாடி என்னைக் கேவலப்படுத்திட்ட இல்ல... அதுக்கு உனக்குத் தண்டனை வேண்டாமா...?" கோபமாய் இரைந்தவனைக் கண்டு அச்சத்தில் பின்னால் நகர்ந்தாள்...

"என்னைக் கேவலப்படுத்தின உன்னை நான் சும்மா விட்டா நல்லா இருக்காதுல்ல... அதான் நடிச்சேன்... நான் உன்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன்னு சொன்னா உன் உத்தம அண்ணன் அனியை எங்க வீட்டில் விட்டுட்டுப் போயிருவான்... என் தங்கை வாழாம இருக்கிறதுக்காகவா நான் உன் கிட்ட போராடுறேன்... அவளை வாழ வைக்க நீ என்ன எந்தக் கழுதை கழுத்திலும் தாலி கட்ட நான் தயாரா இருக்கேன்... அதோட உனக்கும் உன் திமிருக்கும் மூக்கணாங்கயிறு போட்ட மாதிரியுமாச்சு..." என்றவனின் பேச்சில் அவனது நடிப்பின் பின்னால் இருந்த தந்திரம் புரிந்தது...

"நீ தப்பு மேல தப்பு பண்ற..."

"ஹா... ஹா..." வாய் விட்டு சிரித்தவன், "அது எனக்குப் பிடித்தமானதும் கூட..." என்றான் சிரிப்பினூடே...

"சரி அதை விடு... உனக்குமே என்னைத் தவிர வேறு ஆப்சன் ஏதும் இல்லையே... நீ என்னைத் தானே கல்யாணம் பண்ணி ஆகணும்..." திமிராய் சொன்னவனை எரிக்கும் சக்தி மட்டும் அவளுக்கு இருந்தால் நிச்சயம் எரித்து இருப்பாள்...

"ஏன் இல்லை...?" என்றவளை கண்டு அவனின் சிரிப்பு நின்றது... அவனின் கண்கள் ஒரு கணம் சுருங்கி மீண்டது...

"ஏன் கல்யாணமே பண்ணிக்காமல் இருக்கப் போறியா...?" கிண்டல் தொனித்த அவனது பேச்சில் நன்றாக நிமிர்ந்தவள்,

"நிச்சயமாய் இல்லை... என்னை, என் நிலையைப் புரிந்து ஏற்றுக் கொள்ளும் நல்ல இதயம் கிடைத்தால் நல்லா

கேட்டுக்கோ நல்ல இதயம் கிடைத்தால் கண்டிப்பா நான் கல்யாணம் பண்ணிக்குவேன்..."

அபிக்கு அப்படி ஒரு எண்ணம் எல்லாம் இல்லை... ஆனால் அவனை வெறுப்பேற்றவே அப்படிச் சொன்னாள்... அவன் படுத்திய பாட்டிற்கு இந்த ஜென்மத்தில் அவள் திருமணத்தை நினைத்து பார்க்க போவது இல்லை...

அவளது வார்த்தையில் அவனது முகம் கறுத்துப் போனது... அவனது ஆண் என்கிற அகம்பாவம் அடிப்பட்டது போனது...

ஆனாலும் அசராமல் அவளைப் பார்த்தவன் அவளின் கண்களை உற்று நோக்கி,

"பொய்..." என்றான்...

"இல்லை... மெய்..." என்று அடித்துச் சொன்னாள் அவள்...

"அப்படியா..." என்று கேட்டுக் கொண்டே அவள் அருகில் நெருங்கி வந்தவன் சட்டென்று அவளது இடையில் கை கொடுத்து அவளை அருகில் இழுத்தான்...

அன்று அவள் கீழே விழுந்த போது அவன் அவளைத் தாங்கி பிடித்த போது உணர்ந்தாளே அதே அதிர்வை இப்போதும் உணர்ந்தாள் அவள்... அவனது கைத்தடம் மனதில் ஒருவித குறுகுறுப்பை ஏற்படுத்த அவள் அதிர்ந்தாள் தன் மனம் செல்லும் திசை அறிந்து...

அப்போது அவள் மனதில் அவன் வரம்புமீறி நடந்து கொண்ட காட்சி எழவில்லை...

அவனின் துரோகத்தை மறந்தவளாய் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றவளை கண்டு வெற்றிப் புன்னகை புரிந்தவனாய்,

"இப்போ சொல்லுடி... என்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ண உன்னால் முடியுமா...?" என்று கேட்டவனின் குரலில் கல்லாய் சமைந்தாள்...

"தூக்கத்தில் கூட என்னை உணர்ற உனக்கு என்னை விடப் பெஸ்ட் சாய்ஸ் யாரு இருக்காடி...?" அவளை உணர்ந்தவனாய் அவளின் மனதை படித்தவனாய் கூறியவனைக் கண்டு கண்கள் கலங்கியது அவளுக்கு...

இத்தனை நாளாய் அவள் தனக்குள் கேள்வி கேட்க பயந்து மறந்து போன விசயத்தை அவன் நியாபகப்படுத்தி விட்டான்...

கள்வனாய் தன் இதயத்தைக் களவாடி சென்றவனை அவள் கண்ணிமைக்க மறந்து பார்த்து இருந்தாள்...

அழகிய ரோஜாப் பூ கள்ளிச் செடி மீது காதல் கொண்டது...

பூக்கும்...

அபியின் தடுமாற்றத்தை அக்ஷயின் லேசர் கண்கள் உடனே கண்டு கொண்டது... அவளின் தடுமாற்றம் அவனுக்கு இறுமாப்பை அளித்தது...

"நீ என்னை லவ் பண்றியா அபி..." அவள் முகத்தில் படிந்த முடிக்கற்றையை ஒதுக்கியபடி அவளின் கண்களைப் பார்த்து மென்மையாய் கேட்டவனின் வார்த்தையில் தீச்சுட்டார் போன்று அவனிடம் இருந்து விலகினாள்...

அவனின் வார்த்தைகள் அவளுள் படபடப்பை விதைத்தது... தனது மனதில் தோன்றிய மாயாஜாலத்தில் அவளது தேகம் நடுங்கியது... அது கூறிய உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் அவளது கண்கள் கலங்கியது...

அவளது மானத்தைக் கேள்விக்குறி ஆக்கியவன்... பெண் என்று இரங்காமல் அவளை அந்தப் பாடு படுத்தியவன் அவன்... அதற்கு எல்லாம் சிகரம் வைத்தார் போன்று அவளது பெண்மையைக் களவாடிய கயவன் அவன்... அப்படிப்பட்டவனைக் கண்டு அவளது மனம் தடுமாறுகிறதே...

தனக்கு மனம் வலிக்கச் செய்தவனுக்குத் திருப்பிப் பல மடங்கு வலிக்கச் செய்ய வேண்டாமா...? அதை விட்டு விட்டு மானங்கெட்டு போய் அவனது காலடியில் போய்த் தான் விழுவதா... அவளுக்குத் தன்னைக் குறித்தே கேவலமாய், அசிங்கமாய் இருந்தது...

அவனைப் பழிவாங்க துடித்தவள் எப்படி அவனிடம் மனதை பறி கொடுத்தாள்... ஒவ்வொரு நொடியும் அவனை வெறுத்தவள் மனதில் அவன் எப்படி நுழைந்தான்...

வெறுப்புக்கும் விருப்புக்கும் நூலளவு இடைவெளி என்பது சரி தானோ... வெறுப்பு விருப்பாய் மாறிவிட்டதோ...

எப்போது நிகழ்ந்தது இந்த மாற்றம்...? அன்று தன்னைத் தாங்கி பிடித்த போது அவனது கை தன்னைத் தழுவியதே

அப்போதா... இல்லை தனது ஆடை விலகியதை கண்டு கண்ணியம் காத்தவனாய் திரும்பி நின்றானே அப்போதா... எப்போது அவன் தன் மனதில் புகுந்தான்... அவளுக்கே அது தெரியவில்லை...

ஒன்று மட்டும் புரிந்தது கெட்டவனாய் உருவகம் செய்து இருந்த அக்ஷய் நடந்து கொண்ட கண்ணியத்தில் அவளையும் அறியாமல் அவளது மனம் அவனை உயர்வாய் நினைத்துவிட்டது... அதன் விளைவு தான் இந்தத் தடுமாற்றம்... இதைக் காதல் என்று அவளால் ஒத்து கொள்ளவும் முடியவில்லை... ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை...

ஏனெனில் அவனின் குணம் அத்தகையது... அவர்களுக்குள் இருந்த பகை அப்படிப்பட்டது... இதை எல்லாம் விட அவன் வேறு ஒருத்திக்கு சொந்தமானவனும் கூட...

அப்படிப்படவன் மீது தனக்கு ஈர்ப்பா...? அந்த நினைவே அவளுக்குக் கசந்தது...

அவளது முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளின் வர்ண ஜாலத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் அவள் அருகில் மெல்ல வந்தான்...

"எதுக்கு இவ்வளவு கஷ்டப்படுற அபி...? வேணும்ன்னா ஒண்ணு செய்வோமா... நடந்ததை எல்லாம் நீயும் நானும் மறந்து விடுவோம்... மறந்து கல்யாணம் பண்ணிக்கலாம்..."

அவனின் வார்த்தையில் விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தவள், "எதை மறக்க சொல்ற... நீ எனக்குப் பண்ணிய கொடுமை ஒண்ணா, ரெண்டா... இதில் எதை மறக்க சொல்ற...?" ஆவேசமாய் வந்தது அவளது வார்த்தைகள்...

"ஏன் உன் காதல் அதை மறக்க செய்யாதா...?"

"காதலா... நானா... உன் மீதா...? அப்படி ஒரு காதல் என் மனதில் உன் மீது வந்தால் நான் என் உயிரை மாய்த்துக்

கொள்வேன்..." அவளின் கோபம் சிறிதும் குறையவில்லை...

தகுதி அற்றவனைக் கண்டு தடுமாறி போகிறோமே என்ற கழிவிரக்கத்தில் அவளுக்குத் தன் மீதே ஆத்திரமாய் வந்தது...

"திரும்பத் திரும்பப் பொய் சொல்றதால நீ சொல்வது உண்மை ஆகாது அபி... உன் மனசில் நான் இருக்கிறேன்... நீ என்னைக் காதலிக்கிறாய்..." என்று ஆணித்தரமாய்க் கூறியவனின் பேச்சை அவள் கவனித்துக் கேட்கவில்லை...

அவன் எப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகிறானே... ஏன் என்று கேட்க தோணவில்லை அவளுக்கு...

"இல்லை... இல்லை... இல்லை..." என்று கோபமாய்க் கத்தியபடி சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் நீர் நிறைந்த கண்ணாடி குவளை பட்டது...

அவனிடம் இருந்து விலகி சென்றவள் அதைக் கீழே போட்டு உடைத்தாள்... அவன் புரியாமல் அவளின் செயலை பார்த்துக் கொண்டு இருக்கும் போதே உடைந்த கண்ணாடி துண்டில் பெரியதாய் இருந்ததை எடுத்து தனது இடது மணிக்கட்டை கீறினாள்...

"ஏய் அபி... என்ன பண்ற...?" அவளது செயலில் பதறி போய் அருகில் வர முயன்றவனைக் கண்டு,

"ஏய்... கிட்டே வராதே..." என்றவள் மேலும் மேலும் தனது கையைக் கீறிக் கொள்ள இரத்தம் பீறிட்டு கிளம்பியது...

"பைத்தியம் மாதிரி நடந்துக்காதே அபி..." சொல்லி கொண்டே அவளை நோக்கி நகர்ந்தவனைக் கண்டு,

"கிட்டே வராதேன்னு சொல்றேன்ல..." அவனை எச்சரித்தவள், "நான் உன்னைக் காதலிக்கலை... நீயா அப்படி நினைச்சா நான் பொறுப்பு இல்லை... எனக்கு எப்பவுமே உன்னைப் பிடிக்காது... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு இஷ்டம் இல்லை... என்னைக்

கற்பழிச்ச உன்னைக் கல்யாணம் பண்றது எவ்வளவு கொடுமை தெரியுமா... அந்தக் கொடுமையைக் காலம் முழுவதும் அனுபவிக்கிறதுக்கு நான் செத்துப் போறது மேல்..." சொல்லியவள் கையில் இருந்த கண்ணாடி துண்டு கொண்டு வெறிக் கொண்டது போல் தன்னைக் கிழித்துக் கொண்டாள்...

இரத்தம் ஊற்றாக வெளியேறியதை கண்ட அக்ஷய் செய்வதறியாது ஸ்தம்பித்தான்... அந்தச் சின்னப் பெண்ணின் வைராக்கியத்தின் முன் அவனின் அகம்பாவம் மண்டியிட்டது...

"ப்ளீஸ் சொன்னா கேளுடி... அதைக் கீழே போடு..." கிட்டே நெருங்கினால் தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளும் அவளைக் கண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அவன் திகைத்து நின்றான்...

தொழிலில் எத்தனையோ இக்கட்டுக்களைச் சமாளித்தவனால் அபியை சமாளிக்க முடியவில்லை...

"நீ இந்தக் கல்யாணத்தை நிறுத்தறேன்னு சொன்னா நான் இதைக் கீழே போடுறேன்... இல்லை இப்படியே செத்து போறேன்..." என்றவளின் கண்கள் சொருக துவங்கியது...

உயிர் விடும் நேரத்திலும் தன்னுடனான நடக்க இருக்கும் திருமணத்தை வெறுத்து ஒதுக்கும் அவளை வெறித்துப் பார்த்தான்...

பின்பு அவளின் உயிரை காப்பாற்ற வேண்டி, "சரி கல்யாணத்தை நிறுத்தறேன்..." என்றவன் அவளின் அருகில் சென்றான்...

"இல்லை நீ பொய் சொல்ற... மாத்தி மாத்தி பொய் பேசும் நீ ஒரு நடிகன்... எனக்குச் சத்தியம் பண்ணி கொடு..." இரத்தம் தோய்ந்த கையை அவன் முன் நீட்டியவளை கண்டு அவனது இதயம் இரண்டாகப் பிளந்தது போல் வலித்தது...

தாய் தனது குழந்தையை வலியுடன் பிரசவித்து எடுப்பாளே... அது ஒரு மாதிரியான சுகவேதனை அல்லவா

அந்த வலி... அந்த மழலையின் முகத்தைப் பார்க்கும் போது அந்தத் தாயின் வலி வேதனை விலகி போய் மகிழ்ச்சி குடி கொள்ளுமே... அது போல் இருந்தது அவனுக்கு...

அவளது வார்த்தைகள், அவளது செயல் அவனுக்கு வலிக்கச் செய்த போதும் அது எதனால் என்று உணர்ந்த போது அவனது மனம் மகிழ்ந்து போனது... லேசானது...

அவனது மனவலியில் அவள் மீதான காதல் என்ற குழந்தையைப் பிரசவித்தது அவனது இதயம்...

கள்ளிச்செடியில் காதல் பூ பூத்தது... இந்தக் காதல் பூ அவளின் இரத்தத்தின் மீது, அவளின் உயிரை பணயம் வைத்து பிறந்து இருக்கிறது...

மனதின் காதலை ஒதுக்கி வைத்து விட்டு அவளின் கை மீது கை வைத்து, " இந்தக் கல்யாணம் நடக்காது... இனி நீயே சொன்னால் ஒழிய நான் கல்யாணத்தைப் பத்தி பேச மாட்டேன் போதுமா...? இது உன் மீது சத்தியம்..." சொல்லும் போது அவனது முகமும், கண்களும் கலங்கியதோ...

"இப்பவாவது ஹாஸ்பிட்டல் வா அபி..." எதையும் அதிரடியாய்ச் செய்து பழக்கப்பட்டவன் அவளிடம் கெஞ்சி கொண்டு இருந்தான்...

காதல் வந்தால் கல்லும் கனியும், கரையும் போலும்...

"ம்..." என்றவளின் கண்கள் மூடியது...

"அபி..." என்று அலறியபடி அவள் அருகில் சென்றவன் அவளது புடவை முந்தானை கொண்டு அவளது கையில் கட்டியவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

அவனது தொடுகையை உணர்ந்தது போல் அவளது மேனி சிலிர்த்தது... அதை அவனும் உணர்ந்தான்...

கண்கள் சொருகி உயிர் பிரிந்து கொண்டு இருக்கும் அந்த நேரத்திலும் அவனை உணர்ந்தவளாய் அவளது வாய் முணுமுணுத்தது...

"நீ ஏன்டா நல்லவனா இல்லாம போன... அடுத்த ஜென்மத்திலாவது நீ நல்லவனா பிறந்து நானும் நீயும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கணும்... இப்போ நீ அந்த மதியை கல்யாணம் பண்ணிக்கோ... நான் போறேன்... உன்னை விட்டுத் தூரமா போறேன்... திரும்பி வர முடியாத இடத்துக்கு..."

"அபி..." அவளின் வார்த்தையில் அவனது கண்கள் கலங்கியது...

இதோ இந்த நேசத்தை இல்லை என்கிறாளே... இது காதல் இல்லாமல் வேறு என்னவாம்...

"ஏன் அடுத்த ஜென்மம் வரைக்கும் காத்து இருக்கணும்... இந்த ஜென்மத்தில் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்..." என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

காமம் இல்லா காதலில் கனிந்து முதல் முத்தம் கொடுக்கிறான்... ஆனால் அதை உணரும் நிலையில் அவள் இல்லையே... அவளின் நிலை உணர்ந்து விரைவாய் அவளைத் தூக்கி கொண்டு கீழே சென்றான்...

அவளைத் தூக்கி கொண்டு வந்தவனைக் கண்டு எல்லோரும் புரியாமல் பார்த்தனர்... அவளின் கையில் இருந்து வழிந்த இரத்தத்தைக் கண்டு அவர்களும் திகைத்து போயினர்...

"அபி..." ஆதர்ஷ் அருகில் வர முயல...

"இப்போ பேச நேரம் இல்லை... நான் அபியை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போறேன்..." என்றவன் தனது காரில் அவளைப் படுக்க வைத்து காரை கிளப்பினான் புயலின் வேகத்தில்...

யார் வருகிறார்கள் என்று கூட அவன் கவனிக்கவில்லை... யாரையும் அவன் எதிர்பார்க்கவில்லை...

மருத்துவமனையில் அபியை சேர்த்தவனுக்கு உயிர் கையில் இல்லை... அடுத்தப் பத்து நிமிடங்களில்

மற்றவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்...

யாரும் யாரோடும் பேசவில்லை... அங்கே கனத்த அமைதி நிலவியது...

அக்ஷய் இறுகி போய் அமர்ந்து இருந்தான்... யாரும் அவனுடன் பேச பயந்தனர்... அவன் மனதில் அபியின் நியாபக ஊர்வலங்களே... அவளை முதன் முதலில் சந்தித்தில் இருந்து இன்று வரை அவனது மனக்கண்ணில் படமாய் ஓடியது...

யாரிடமும் முகம் கொடுத்து பேசாத தான் அவளிடம் மட்டும் பதிலுக்குப் பதில் வாயடித்ததை நினைத்துப் பார்த்தான்... அதற்குச் சளைக்காமல் பதிலடி கொடுத்த அபியை நினைத்தவனுக்கு இதழில் புன்னகை வந்தமர்ந்தது...

அதனால் தான் எந்தப் பெண்ணிடத்திலும் தோன்றாத ஈர்ப்பு அவளிடத்தில் மட்டும் தனக்குத் தோன்றி இருக்க வேண்டும்... அதன் விளைவு தான் இந்த மோதல் எல்லாம்...

அவளின் திருமணத்தைத் தடுத்து நிறுத்தியது கூட அவள் மீது இருந்த நேசத்தின் விளைவோ... யோசித்துப் பார்த்தவனுக்கு விடை ஆம் என்றே வந்தது...

எல்லாம் சரி தான்... அன்று மட்டும் தான் ஏன் அவளிடம் அப்படி மூர்க்கமாக நடந்து கொண்டோம்... அவனுக்குத் தன்னைக் குறித்தே அவமானமாய் இருந்தது...

'கடவுளே... அந்த நாளை மட்டும் என் வாழ்க்கையில் இருந்து அகற்ற முடிந்தால்...?' ஆயாசமாக இருந்தது அவனுக்கு...

அப்படி மட்டும் நடந்து இருந்தால் நல்ல பெண்ணின் காதலை இழந்து இப்படித் தவித்து இருக்க வேண்டியது இல்லை என்று யோசனை எழும் போதே,

'இல்லை... இல்லை... அந்தச் சம்பவம் மட்டும் என் வாழ்க்கையில் இடம் பெறாமல் இருந்து இருந்தால் அபியின் காதல் எனக்குத் தெரிந்து இருக்கப் போவது

இல்லை... நானும் அவளைக் கடைசி வரை புரிந்து இருக்க மாட்டேன்...'

அவனின் மனம் அவளின் மனதை அறிந்து கொண்ட தினத்திற்குச் சென்றது...

அன்று அவனின் அன்னை அபிக்கு உடல்நலம் சரியில்லை என்று சொன்னதில் இருந்து அவனின் மனம் ஒரு நிலையில் இல்லை... அவளைக் காண அவனின் மனம் துடியாய்த் துடித்தது... அவனுக்குத் தன்னைக் குறித்து வியப்பாய் இருந்தது...

மறுநாள் காலையில் எழுந்ததும் முதல் வேலையாய் அபியை காண சென்றான் அவன்... அவனின் நல்ல நேரமோ என்னமோ அபிக்குத் துணை இருந்த அனி அப்போது தான் எழுந்து காபி வாங்குவதற்காக வெளியில் சென்று இருந்தாள்...

தனியே உறங்கி கொண்டு இருந்த அபியை கண்டதும் தான் அவனின் சுவாசம் சீரானது... நிம்மதி அடைந்தவனாய் அவளின் அருகில் சென்றான்...

அந்நேரம் திரும்பி படுத்த அபி படுக்கையின் ஓரமாய் வந்து படுத்ததைக் கண்டு எங்கே அவள் கீழே விழுந்து விடுவாளோ என்று பதறி போய் அவளின் தோள் பற்றி அவளைப் படுக்கையின் நடுவில் படுக்கச் செய்தான்...

"அக்ஷய்..." என்று அழைத்த அபியின் குரலில் முதலில் அதிர்ந்தாலும் பின் சுதாரித்துக் கொண்டு,

"சொல்லு அபி..." என்று அவள் முகம் பார்த்தான் அவன்...

ஆனால் அபியோ தூங்கி கொண்டு இருந்தாள்... உண்மையில் அவள் தான் அழைத்தாளா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது... ஆனாலும் அது அபியின் குரல் தான் என்று அவனது மனம் அடித்துச் சொன்னது...

"அபி..." அவளின் கையைப் பற்றியபடி மெல்ல அழைத்தான் அவன்...

"ஏன் இப்படிப் பண்ணீங்க அக்ஷய்...?" கேட்டவளின் கண்கள் மூடியிருந்தது... ஆனால் மூடிய இமைகளின் வழியே கண்ணீர் வழிந்தோடியது...

அதைக் கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான்...

"அபி... அபி..." என்று அவளை உலுக்கியவனின் குரலில் அவள் அப்படியே உடைந்தாள்...

"உங்களை நேசிக்கிற எனக்கு நீங்க கொடுத்த பரிசு இது தானா...?" அவளது வார்த்தையில் திகைப்பின் உச்சிற்கே சென்றுவிட்டான்...

அடுத்த நொடி அவளது முகத்தைப் பார்க்க பயந்தவனாய் வெளியில் வந்துவிட்டான்... காரிலேறி அமர்ந்தும் அவனது படபடப்பு அடங்கவில்லை...

'அபியின் மனதில் நானா...?' நினைத்தவனுக்குப் படபடப்பை மீறி சிறு இதம் ஒன்று மனதை தாக்க தான் செய்தது...

'இது எப்படி நிகழ்ந்தது...?' யோசித்தவனுக்கு அன்று அவளிடம் வரம்புமீறி நடந்து கொண்ட போது அவள் கூறியது அவனின் காதில் ஒலித்தது...

'இந்த விசயத்தில் உங்களை நல்லவர்ன்னு நினைத்தேனே... நீங்களா இப்படி...?' , 'என் மனம் முக்கியம் இல்லையா... கேவலம் என் உடல் தான் உங்களுக்கு முக்கியமா...?' அவளின் வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது...

ஆனாலும் அன்றைய மனநிலையில் அதை அலட்சியமாய் ஒதுக்கி தள்ளினான்... அதன் பின் அவளையும் மறந்து போனான்...

தன் வீட்டிற்கு வந்து போராடியவள் மீது முதலில் அவனுக்கு நம்பிக்கை வரவில்லை... ஆனால் அவனது பணமோ, அவன் கொடுக்கும் வாழ்க்கையோ வேண்டாம் அவனது

உயிர் வேண்டும் என்று கேட்டாளே அப்போது அவனது மனதில் முதல் காலடியை எடுத்து வைத்தாள் அவள்...

அவன் தங்கையிடமோ, மதியிடமோ காணாத ஒரு விசயத்தை அவளிடம் கண்ட போது அவனது மனம் அவள் புறம் சாயத் துவங்கியதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அதன் பின்பும் அவனது காதல் நாடகத்தில் மயங்காமல் நிமிர்ந்து நின்றவளின் தைரியம் அவனுக்குப் பிடித்து இருந்தது... அப்போது எல்லாம் அவன் தன் காதலை உணரவில்லை...

அவளின் மனதில் தான் இருக்கிறோம் என்ற தைரியத்தில் தான் அவளைத் திருமணப் பந்தத்தில் சிக்க வைக்க முடிவு செய்தான்...

ஆனால் அவளோ வேறு மாதிரி ஒரு முடிவினை தேடிவிட்டாள்... அவளின் அந்த முடிவில் தான் அவனது காதல் அத்தியாயம் துவங்கியது...

அவன் எவ்வளவு ஆழப் பதிந்து இருந்தால் தன்னை மறந்த நிலையிலும் அவள் அவனை உணர்வாள்...

இத்தனை காதலை அவன் மீது கொண்டு இருந்த போதும் அவனுடனான திருமணத்தை வெறுத்தவளின் வெறுப்பே அவனை அவள் மீது காதல் கொள்ளச் செய்துவிட்டது...

அவனது அந்தஸ்து, பணம், படிப்பு அழகு என்று எதற்கும் தலை வணங்காத அவளின் குணம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது...

அவனுக்கே தான் காதலிப்பது குறித்து ஆச்சிரியமாக இருந்தது... அதுவும் தனக்கு எந்த விதத்திலும் பொருத்தம் இல்லாத ஒருத்தியிடம் காதல் வந்ததை உணர்ந்தவனுக்கு ஆச்சிரியத்திலும் பேராச்சிரியமாய் இருந்தது...

எது இல்லை என்றால் என்ன... அவளின் நல்ல மனம் கண்டு காதல் கொண்டான் அவன்... இப்படிப்பட்ட பெண் ஒருத்திக்காகத் தான் அவன் இத்தனை ஆண்டுகளாய்

பிரம்மச்சரிய விரதம் காத்தானோ... எது எப்படியோ கடைசியில் காதல் நோய் அவனைத் தாக்கியே விட்டது...

ஆனால் அபி...??? அவளைக் குறித்து அச்சம் எழுந்தது அவனது மனதில்... தன்னை விசமாய் வெறுக்கும் அவளை நினைத்து கலக்கமாய் இருந்தது... மனதில் இருக்கும் காதலை உணராமல் இருக்கும் அவளின் நிலை அவனுக்கு யோசனையை அளித்தது... அப்படியே அவள் உணர்ந்தாலும் தன்னை ஏற்றுக் கொள்வாளா...? மனதில் மிகப் பெரிய கேள்வி முளைக்க அவனுக்கு ஆயாசமாய் இருந்தது...

இப்போது அவளது முறை... அவள் எப்படி அவனைப் படுத்தி எடுத்தாலும் அவனின் காதலில் இருந்து அவன் மாறப் போவது இல்லை... அதே சமயம் தன் காதலை அவளிடத்தில் சொல்ல போவதும் இல்லை... அவனது செயலில் அவள் அவனுடைய காதலை உணர்வாள்... அதே போல் அது அவளது மனதில் இருக்கும் காதலையும் வெளிக் கொணரும்... அதுவரை அவன் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது தான்... மனதில் நினைத்தவன் அதன் பின்பே நிம்மதி ஆனான்...

நிறைய இரத்தம் வெளியேறியதால் அபி அபாயக் கட்டத்தைத் தாண்ட ஐந்து நாட்களுக்கு மேலானது... அவள் கண் விழித்ததும் தான் எல்லோருக்கும் நிம்மதியாய் இருந்தது...

எல்லோரும் அவளைப் பார்த்துவிட்டுச் சென்ற பின் அக்ஷய் அவளைப் பார்க்க சென்றான்...

"நீ எதுக்கு இங்கே வந்த...?" அவனைக் கண்டதும் படபடத்த மனதை அடக்க வழியறியாது அவனைப் பார்த்துப் படபடவெனப் பொரிந்தாள் அவள்...

அதைக் கண்டு கொள்ளாது, "எப்படி இருக்க அபி...?" என்றான் ஒன்றுமே நடவாதது போல்...

"எவ்வளவு தைரியம் உனக்கு... பண்றது எல்லாம் பண்ணிட்டு எப்படி இருக்கேன்னா கேட்கிற...?"

"சரி கேட்கலை போதுமா...? இப்போ நான் வந்த விசயம் வேறு... நம்ம கல்யாணம் நிக்கணுமா... வேண்டாமா...?"

அவனை வெறித்துப் பார்த்தவள், "ம்..." என்று தலையாட்டினாள்...

"அப்போ நான் சொல்றதை கேட்டேன்னா நம்ம கல்யாணம் நடக்காது... நானே நிறுத்திருவேன்..." என்றவனைக் கேள்வியாய் பார்த்தாள் அவள்...

"நீ திரும்ப வேலைக்கு வரணும்..." என்றவனைப் பார்த்து,

"ம்ஹூம்... அதெல்லாம் முடியாது..." என்று அவசரமாய் மறுத்தாள்...

"அப்போ நம்ம கல்யாணம் நடக்கும்... வேலைக்கு வந்து ஆபிசில் மட்டும் என் முகத்தைப் பார்க்க போறியா... இல்லை கல்யாணம் பண்ணிட்டு எந்நேரமும் என்னைப் பார்த்துட்டு இருக்கப் போறியா...?"

"நீ எனக்குச் சத்தியம் பண்ணி கொடுத்து இருக்க... மறந்திறாதே..."

'எப்படி மறப்பேன்டி... நீ உயிரை விடத் துணிந்ததில் நான் செத்துப் பிழைத்த கணம் அல்லவா அது...' மனதில் உருகியவன் வெளியில் காட்டி கொள்ளவில்லை...

"அது அப்போ... இது இப்போ..."

"இது தான் நீ... ஏமாத்துக்காரன்... நடிகன்... வேசக்காரன்..." அவனைத் திட்டி தீர்த்தாள் அவள்...

அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் அவளது முகம் நோக்கி குனிந்தவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"நீ சாப்பிடறது எல்லாம் உன் முடிக்கே சரியாய் போயிரும் போலயே..." அவளின் நீண்ட கூந்தலை வருடி

கொடுத்தவன்,

"அதனால நல்லா சாப்பிட்டு உடம்பை தேத்திட்டு வேலைக்கு வா..." என்றவன்,

"அப்பத்தானே என் கூடச் சண்டை போட தெம்பா இருக்கும்..." என்று கண்சிமிட்டியவனை முறைத்து மட்டுமே பார்க்க மட்டுமே முடிந்தது அவளால்...

“உனக்கு நியாபக மறதி நோய் இருக்கா...?”

“என்ன கொழுப்பா உனக்கு...? அண்ணா...” என்று ஆதர்ஷை அழைக்க முயன்றவள் வாய் மீது கை வைத்து பொத்தியவன்,

“எதுக்கு இப்படிக் கத்துற...?” என்று அவளை மென்மையாய் கடிந்தவன்...

“நீ என் உயிரை கேட்டியே நியாபகம் இல்லையா...?” என்றவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தாள் அவள்...

“என் உயிரை உனக்குக் கொடுக்க எனக்கு முழுச் சம்மதம்...” என்றவனைக் கண்டு அதிர்ச்சியில் வாய் பிளந்தாள்...

“ஆனால் என்னோட விருப்பத்தை நீ நிறைவேத்தினா அதுக்கு நான் சம்மதிக்கிறேன்...” என்றவனைக் கண்டு அதிர்ச்சி மறைந்து சந்தேகமாய்ப் பார்த்தாள்...

“என் உயிரை நான் கொடுக்கிறேன்... ஆனால் அதை நீ உன் கையால் எடுப்பதாக இருந்தால்...”

அவனின் வார்த்தையில் கண்கள் கலங்கியவளின் கண்ணீர் துளிகள் வழிந்தது அவளது காதோரம்...

அதைத் தன் கரங்களில் வேகமாய்த் தாங்கியவன், “என் உயிரை எடுப்பது என்ன அவ்வளவு கஷ்டமான காரியமா என்ன...? அது உனக்குப் பிடித்த காரியமாயிற்றே...” என்றவனை வேதனையுடன் பார்த்தாள் அவள்...

அவளின் வேதனையில் அவன் முகம் மென்மையுற்றது...

“அது உன்னால் முடியாது அபி...” என்றவன், “இப்பவாவது ஒத்துக்கோ நீ என்னைக் காதலிக்கிறேன்னு...”

அவனின் வார்த்தையில் அவளது மனம் ஒரு நொடி நிலைக்குலைந்து அடுத்த நொடி அருவருப்பு அடைந்து முகத்தைச் சுளிக்க வைத்தது... நிச்சயம் அது அவனை நினைத்து அல்ல... அது அவளை நினைத்து...

“ஏன் முடியாது...? உன் உயிரை எடுக்கிறேன்டா...” என்றாள் உறுதியுடன்...

“எப்படி...?” என்றான் அறியாத சிறுவனாய்... அவளின் மனதை அறிந்த காதலனாய்...

“எல்லா விசயத்திலும் நீ ஜெயிக்கலாம்... ஆனால் இந்த விசயத்தில் நீ எந்தக் கோர்ட்டையும் விலைக்கு வாங்க முடியாது... எனக்குச் சார்பா சாட்சி சொல்ல நம்ம குடும்பத்துல உள்ளவங்க வருவாங்க... நிச்சயம் நீ ஜெயிலுக்குப் போறது உறுதி...”

அவனின் மன மாற்றத்தை உணராமல் பேசி கொண்டு போனாள் அவள்... ஆனால் அவளின் மீது கோபப்படாமல் அவளின் தைரியத்தை ரசித்தது அவனது காதல் மனம்...

“ம்ஹும்... அப்படியா... ரொம்ப நல்லது...” புன்னைகையுடன் பேசியவனைக் கண்டு அவளுக்கு ரத்தம் கொதித்தது...

“ஆனா அபி... அங்கே உன் கிட்ட நிறைய க்ராஸ் கொஸ்டியன் கேட்பாங்களே...” அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்...

“அதாவது நான் எங்கே எங்கே தொட்டேன்... எப்படி நடந்துக்கிட்டேன்னு கேட்பாங்க... உனக்கு எல்லாம் நியாபகம் இருக்கா...”

“ச்சீ... என்ன பேச்சு பேசுற...” முகத்தை அருவருப்பாய் சுளித்தாள்...

“மறந்து போயிருந்தால் நான் நியாபகப்படுத்தவா...? இல்லை செய்முறை விளக்கம் கொடுக்கவா...?” என்று

அவள் முகம் நோக்கி குனிந்தவனைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டவள்,

“நீ மனுசனே இல்லை... ராட்சசன்...”

அவளின் புறக்கணிப்பை கண்டு கொள்ளாதவனாய் அவளின் முகத்தைத் தன் புறம் திருப்பியவன் அவளின் இதழில் மென்மையாய் தனது இதழை பதித்து,

“ஆனால் இந்த அழகான ராட்சசிக்கு ஏத்த ராட்சசன்...” என்றவன் தன் வார்த்தையின் அர்த்தத்தை அவள் உணர்ந்து கொள்ளும் முன் அந்த அறையை விட்டு வேகமாய் வெளியேறினான்...

பூக்கும்...

அபிக்கு இருந்த கோபத்தில் அக்ஷயின் வார்த்தையில் இருந்த அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை... அதிலும் அவன் இதழ் ஒற்றிய தனது இதழை அழுந்த துடைத்து கொண்டவள் மனதில் அவனின் மீது வெறுப்பு மட்டுமே நிறைந்து இருந்தது...

'நான் எவ்வளவு அசிங்கப்பட்டாலும் சரி... உன்னை அசிங்கப்படுத்தாமல் நான் விட மாட்டேன்... நீ பண்ணிய கொடுமைக்கு உனக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காம ஓய மாட்டேன்...' மனதில் நினைத்தவள் அதைச் செயலாற்ற எண்ணினாள்...

அபியின் தற்கொலை முயற்சி கண்டு குடும்பத்தினர் எல்லோருமே ஆடிப் போய் விட்டனர்...

ஆதர்ஷ்க்கு தங்கையின் நிலை கண்டு என்ன முடிவு எடுப்பது என்று தெரியவில்லை... அக்ஷயுடனான அபியின் திருமணத்தை ஆதரிப்பதா, வேண்டாமா என்று அவன் குழம்பி போனான்...

ஆனால் அதற்கு வேலை வைக்காமல் அக்ஷயே இந்தத் திருமணத்தை நிறுத்திவிட்டான்...

"அபியே மனம் மாறி என்னை ஏற்றுக் கொள்ளும் வரை கல்யாணத்தைப் பத்தி யாரும் பேசாதீங்க... ஆனால் ஒண்ணு மட்டும் உறுதியா சொல்ல முடியும்... அபி தான் என் மனைவி... அவளுக்காக நான் காத்துக் கொண்டு இருப்பேன்..." என்று அவன் முடித்து விட யாராலும் எதுவும் பேச முடியாமல் போனது...

அபிக்கு இது தெரிந்து ஒன்றும் பேசவில்லை... அவளின் அமைதிக்குப் பின் எரிமலையாய் அவளது மனம் கொதித்துக் கொண்டு இருந்தது...

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியதும் அவள் செய்த முதல் வேலை மாநாகரக் காவல் ஆணையரை

நேரில் சந்தித்து அக்ஷயின் மீது புகார் அளித்தது தான்...

அபியின் புகாரை வாங்கிப் படித்த அவர் சிறிது குழம்பி போய்விட்டார்... அக்ஷய் அவரது நெருங்கிய நண்பரின் மகன்... அவனைச் சிறு வயதில் இருந்து பார்ப்பவர் அவர்... அவர் அறிந்த வரை அவன் ஒழுக்கக் கேடாய், முறை தவறி நடக்கும் இளைஞன் இல்லை... எத்தனையோ முறை அவனின் நற்குணம் கண்டு பிரமித்து இருக்கிறார்... அப்படிப்பட்டவன் மீது இப்படிப்பட்ட புகாரா...?

ஆனாலும் அவனின் உறவினளான அவள் அளித்த புகாரை ஒரு அதிகாரியாய் ஏற்றுக் கொண்டார்... அபியை அனியின் திருமணத்தில் பார்த்து இருந்ததால் அவருக்கு அடையாளம் தெரிந்தது...

நடவடிக்கை எடுப்பதாய் கூறிவிட்டு அவளை அனுப்பி வைத்துவிட்டு உடனே அக்ஷய்க்கு அழைத்தார்...

விசயத்தைக் கூறி, "அக்ஷய்... என்னப்பா இது...?" என்று கேட்டார் வருத்தத்துடன்...

அபி இந்த மாதிரி செய்வாள் என்று அவனும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... ஏதோ கோபத்தில் கூறுகிறாள் என்று தான் அவனும் அவளிடம் விளையாட்டாய் பதில் அளித்துவிட்டு வந்தான்... ஆனால் அவள் இந்தளவுக்குத் தன் மீது ஆத்திரம் கொண்டு இருப்பாள் என்று அவன் நினைத்து கூடப் பார்க்கவில்லை...

அவள் மனதில் இருக்கும் காதல் தன் தவறை மன்னித்துத் தன்னை ஏற்க வைக்கும் என்று தப்புக் கணக்கு போட்டு விட்டான்... ஆரம்பத்தில் இருந்து அவள் விசயத்தில் அவன் போடுவது எல்லாம் தப்புக் கணக்கு தானே...

‘அவள் காதல் ஏன் என்னை மன்னிக்கவில்லை...?’ மனதில் கேட்டவன் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்... பின் நொடி நேரத்தில் வேதனையை மறைத்து கொண்டவன்,

"அந்தக் கம்ப்ளைண்ட் உண்மை தான் அங்கிள்... என்ன நடவடிக்கை எடுக்கணுமோ நீங்க எடுங்க... இல்லை நானே அங்கே வரவா..."

உடனே தன் தவறை ஒத்துக் கொண்டு பேசியவனைக் கண்டு அவருக்கு ஆச்சிரியமாகவும் அதே சமயம் கவலையாகவும் இருந்தது... இருவருக்கும் இடையில் ஏதோ பிரச்சினை நடந்து இருக்கிறது என்று மட்டும் அவருக்குப் புரிந்தது... அது என்ன என்று தான் புரியவில்லை...

"கொஞ்சம் பொறுமையா இரு அக்ஷய்... பேசி பார்க்கலாம்..."

"செய்த தப்புக்குத் தண்டனை அனுபவிக்கிறதுல எந்தத் தப்பும் இல்லை அங்கிள்..." கொஞ்சம் விரக்தி கலந்து வந்தது அவனது வார்த்தைகள்...

"சரி அக்ஷய்... நான் யோசிச்சுட்டு சொல்றேன்..."

"இதுல யோசிக்க ஒண்ணும் இல்லை அங்கிள்... அபி ரெண்டு தடவை என் கிட்ட மோதி தோத்துட்டா... ஆனா இந்த முறை அவள் தோற்க கூடாது... ஜெயிக்கணும் அங்கிள்... இப்ப மட்டும் இல்ல எப்பவுமே அவள் ஜெயிக்கணும்..." அவனின் வார்த்தைகளில் அவனது மனம் வெளிப்பட்டது...

அனுபவம் மிகுந்த அந்த மனிதர் அவனின் மனதை புரிந்து கொண்டவராய், "சரி அக்ஷய்... நடவடிக்கை எடுக்கிறேன்..." என்று கூறி வைத்துவிட்டார்...

ஆனால் அவரது நடவடிக்கை வேறுவிதமாய் இருந்தது... அன்று மாலை வேலை முடிந்ததும் நேரே கோபிநாத்தை சந்தித்து விசயத்தைக் கூறிவிட்டார்...

உறவுக்குள் ஏற்பட்டு இருக்கும் சிக்கலை பேசி தீர்த்துக் கொள்ள நினைத்தார்... அதையும் மீறி நடவடிக்கை எடுத்து தானாக வேண்டும் என்றால் அதற்கும் அவர் தயாராக இருந்தார்...

"நீ என்ன சொல்ற...? அபியா இந்த மாதிரி கம்ப்ளையிண்ட் கொடுத்தது... ஆனா நாங்க அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கத் தயாரா இருக்கிறோமே... அப்புறம் ஏன் இப்படி...?" கோபிநாத் குழம்பி போனார்...

"இப்படிப் பண்ணிட்டாளே அபி..." துளசியும் மனம் நொந்து போனார்...

"நீ சொல்றது சரி தான் கோபி... அக்ஷய் பேச்சில் காதல் தெரியுது... ஆனால் அந்தப் பொண்ணு அவன் மேல் கோபமா இருக்காளே... இது அந்தப் பொண்ணு விருப்பம் இல்லாமல் நடந்த ஒன்றா இருக்கலாம்... ஒரு பொண்ணா அவளின் கோபம் சரி தான்... அதே சமயம் நம்ம பையனையும் நாம நினைச்சு பார்க்க வேண்டி இருக்கு... தொழில் தர்மப்படி பார்த்தா நான் அக்ஷயை அரெஸ்ட் பண்ணி இருக்கணும்... ஆனா என் மனசாட்சி இடம் கொடுக்கலை... எனக்குத் தெரியும் அவன் நல்லவன் தான்னு... எதுக்கும் பேசி முடிவு எடு..." என்றவர் விடைப்பெற்று சென்றார்...

கோபிநாத்திற்கு அபியின் மேல் சற்றுக் கோபம் வந்தது... என்ன பெண் இவள்... அக்ஷய் தான் தன் தவறை உணர்ந்து அவளைத் திருமணம் செய்வதாகக் கூறி விட்டானே... அதன் பின்பும் இந்தப் பெண் ஏன் இந்த மாதிரி செய்கிறாள்...

"துளசி... அந்த அபியிடம் போய் நான் பேச போறேன்... அவ மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கா...?" என்று கோபமாக எழுந்த கோபிநாத்தை துளசி தடுத்தார்...

"கொஞ்சம் பொறுமையா இருங்க... எதுக்கும் அக்ஷய்க்கு ஃபோன் பண்ணி பாருங்க..."

"இது நம்ம குடும்ப மானப் பிரச்சினை..." என்றவர் வெளியில் வந்தார்...

"அபியும் பாவம் தான்ங்க..." பெண்ணாய் அவரின் மனம் அவளுக்காய் இரங்கியது...

தன் பேச்சை மீறி கிளம்பியவரை கண்டு துளசியும் அவருடன் சென்றார்... போகும் வழியில் மகனுக்குத் தகவல் சொல்லவும் மறக்கவில்லை...

அவர்கள் அபியின் வீட்டை சென்று அடையவும் அக்ஷய் அங்கு வருவதற்கும் சரியாய் இருந்தது... எவ்வளவு வேகமாய்க் காரை ஓட்டி கொண்டு வந்து இருந்தால் அவன் இத்தனை விரைவாய் வந்து இருக்க வேண்டும்... மகனின் மனதில் அபியின் மீது இருக்கும் அன்பு துளசிக்கு புரிவதாய்...

"டாட்... நீங்க எதுக்கு இங்கே வந்தீங்க...?"

"அவளுக்கு என்ன தான்டா பிரச்சினை... கல்யாணத்துக்குத் தான் நாம சரின்னு சொல்லிட்டோமே அதுக்கு அப்புறமும் இந்தக் கம்ப்ளையிண்ட் தேவையா..." என்ற கோபிநாத் மகனின் பதிலை எதிர்பாராமல் அபியின் வீடு நோக்கி நடந்தார்...

"டாட்... நான் பண்ணதும் தப்பு தானே..."

"தப்பு தான்டா... மன்னிக்க முடியாத தப்பு தான்... அந்தத் தப்பை ஒத்துக்கவும் பெரிய மனசு வேணும்... நீ ஒத்துக்கிட்டது மட்டும் இல்லாம அவளைக் கல்யாணம் பண்ணவும் சம்மதிச்சு இருக்க... அப்புறமும் இவ எதுக்கு இப்படி நடந்துக்கிறா..."

பேசி கொண்டு வந்ததில் அபியின் வீடு வந்துவிட்டது... அப்போது தான் ஆதர்ஷும் வேலை முடிந்து வந்து இருந்தான்... இவர்களைக் கண்டதும்,

"வாங்க... வாங்க..." என்று வரவேற்றான்...

வேறுவழியின்றித் தந்தையைத் தடுத்து இயலாதவனாய் அக்ஷயும் முகத்தில் எதையும் காட்டி கொள்ளாமல் அவர்களுடன் இணைந்து அபியின் வீட்டினுள் நுழைந்தனர்...

"அபி எங்கே...?" கோபிநாத்தின் இறுகிய குரலை யாரும் கவனிக்கவில்லை...

"இங்கே தான் இருந்தா... அபி..." உள்ளே பார்த்து குரல் கொடுத்தான் ஆதர்ஷ்...

சமையலறையில் இருந்து கைகளைத் துடைத்துக் கொண்டு வந்த அபியின் எளிமையான தோற்றம் அந்த மனநிலையிலும் அக்ஷய் மனதை கவரத்தான் செய்தது...

நீண்ட கூந்தலை கொண்டை போட்டு சேலையை இழுத்து சொருகி கொண்டு அவள் நின்று இருந்த அழகில் அவன் மனம் சொக்கித் தான் போயிற்று...

அங்கு அக்ஷயின் குடும்பத்தை எதிர்பாராமல் கண்ட அபி அதிர்ந்து போனாள்... அவளையும் அறியாது அவள் அக்ஷயை பார்க்க அவனின் இமைக்காத பார்வையைக் கண்டு அவனை முறைத்தாள் அவள்...

அதை எல்லாம் கண்டு கொள்வானா அக்ஷய்... நமட்டுச் சிரிப்புடன் அவளைப் பார்த்தவன் யாருக்கும் தெரியாமல் கண் சிமிட்டினான்... அதில் இன்னமும் கொதித்துப் போனாள் அவள்...

"அபி... என்ன காரியம் பண்ணி இருக்கன்னு தெரிஞ்சு தான் பண்ணி இருக்கியா... இல்லை எங்க மானத்தை வாங்கணும்ன்னு திட்டம் போட்டு வாங்கி இருக்கியா..." கோபிநாத்தின் வார்த்தையில் திடுக்கிட்டு போனாள்...

ஆதர்ஷும், கோமதியும் புரியாமல் விழித்தனர்... அனி ஒன்றும் பேசாது வேடிக்கை மட்டுமே பார்த்தாள்... சமீபகாலமாக நடக்கும் விசயங்கள் யாவும் அவளின் வாயை பசை போட்டு ஒட்ட செய்துவிட்டது...

"டாட்..."

"அக்ஷய்..." மகனை கண்டித்த கோபிநாத்,

"அக்ஷய் தான் தான் செஞ்ச தப்பை உணர்ந்து திருந்தி மன்னிப்பு கேட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க

ஒத்துக்கிட்டானே... அப்புறமும் எதுக்கும்மா அவனைப் பத்தி போலீசில் கம்ப்ளையிண்ட் கொடுத்த..."

அவரின் பேச்சில் ஆதர்ஷும், கோமதி பாட்டியும் 'அவர் சொல்வது உண்மையா...' என்பது போல் அபியை திரும்பி பார்த்தனர்...

அபி அவர்களின் முகத்தைப் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்தாள்...

அவளின் தலை குனிவு அவளது செயலை உறுதிப்படுத்தி விடக் கோமதி பாட்டி பேத்தியை நோக்கி வந்தவர் எதிர்பாரா விதமாக அவளது கன்னத்தில் ஓங்கி அடித்தார்... யாரும் இதை எதிர்பார்க்கவில்லை...

"பாட்டி..." அக்ஷய் தான் அவர் அருகில் வந்து அவரைத் தடுத்தான்...

"நீ யாரு இதுல தலையிட... இது எனக்கும் என் ஆச்சிக்கும் இடையில் நடக்கும் விசயம்... நீ உன் வேலையைப் பார்த்துட்டு போ..." அபி அவனைப் பார்த்துக் கோபமாய்க் கத்த...

"ஏண்டி... உன் தலையில் நீயே மண்ணை அள்ளி போட்டுக்கிற..." பாட்டி தலையில் அடித்துக் கொண்டு அழுதார்...

"பாட்டி... அழாதீங்க... அவ என்ன பேசினாலும் எனக்குக் கோபம் வராது... என் வாழ்க்கை உங்க பேத்தியோடு தான்... அதனால நீங்க அவளை நினைச்சு கவலைப்படாதீங்க..." என்று அவரைச் சாமாதானப்படுத்திய அக்ஷயை கண்டு அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது...

"ஏய்... நான் கேட்டேன்னா எனக்கு வாழ்க்கை கொடுன்னு... சும்மா சீன் போடாதே..."

"என்ன அபி எதுக்கு இவ்வளவு கோபம்... கூல் யா..." என்றபடி அவளின் அருகில் வந்தவன்,

"சரி நான் உனக்கு வாழ்க்கை கொடுக்கலை... நீ எனக்கு வாழ்க்கை கொடுக்கலாமே..."

"என்ன கிண்டலா...?" அவனது பேச்சு கண்டு அவளுக்கு எரிச்சல் வந்தது...

"ச்சே... ச்சே... கிண்டலா... அதுவும் உன் கிட்டேயா... நோ அபி... உன் கிட்ட மட்டும் தான் நான் உண்மை பேசுவேன்..."

அவள் எப்படிக் கோபப்பட்டுப் பேசினாலும் இறங்கி தணிந்து பேசும் மகனை காண சகிக்கவில்லை கோபிநாத்திற்கு... கம்பீரம் குறையாத தன் மகன் ஒரு பெண்ணிடம் கெஞ்சி கொண்டு இருப்பதா... அவரால் மனம் தாங்க முடியவில்லை...

"பாரும்மா... நீ அவன் மானத்தை வாங்கினாலும் அவன் உன் கிட்ட காதலா தான் இருக்கான்... அவன் மேல் இப்படி ஒரு கம்ப்ளையிண்ட் கொடுக்க உனக்கு எப்படிம்மா மனசு வந்தது..."

"அப்போ உங்க மகன் பண்ணது மட்டும் சரியா...?" இயலாமையும் ஆத்திரமும் போட்டி போட கண்களில் நீர் முட்டி கொண்டு நிற்க அபி அவரைப் பார்த்து கேட்டாள்...

"அதுக்காக நீ பண்ணியதும் சரியில்லை அபி..." கோமதி பாட்டி பேத்தியை கண்டித்தார்...

"அபி... அந்தக் கேசை வாபஸ் வாங்கிடு..." ஆதர்ஷும் தங்கையைப் பார்த்துச் சொன்னான்...

"அண்ணா... நீயுமா..." அவள் மனம் குமுறி நின்றாள்... கடைசியில் சகோதரனும் தன்னைப் புரிந்து கொள்ளாமல் இந்த வேடதாரியை நம்புகிறானே...

நிராயுதபாணியாய் நின்ற அபியை கண்டு அக்ஷய்க்கு இரக்கம் சுரந்தது...

"அபி அந்தக் கேசை வாங்க வேண்டாம்..." என்றான் உறுதியான குரலில்...

"டேய் அக்ஷய் உனக்கு என்ன லூசா பிடிச்சு இருக்கு... குற்றம் நிரூபிக்கப்பட்டா கிட்டத்தட்ட ஏழு வருசத்துக்கும் மேல் நீ வெளியில் வர முடியாது..." கோபிநாத் மகனிடம் கத்தினார்...

துளசி எதுவும் தோன்றாமல் அழுதார்...

"தெரியும் டாட்..."

"தெரிஞ்சுமா இப்படிப் பண்ற..." அவருக்கு ஆற்றாமை தாங்கவில்லை...

"இந்த முறை அபி தோற்க கூடாது..." என்றான் அழுத்தமாய் அபியை பார்த்துக் கொண்டு...

அவன் கூறியது அங்கிருந்த யாருக்கும் புரியவில்லை... புரிய வேண்டியவளுக்குப் புரிந்தது... ஆனால் அவள் அதையும் நடிப்பு என்றே நம்பினாள்... ஒரு முறை நடித்தற்கான பலனை வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கப் போகிறானோ அக்ஷய்...

அதற்கு மேல் யாரும் பேச முடியவில்லை... கோபிநாத்தும், துளசியும் விதி விட்ட வழி என்று நொந்து போய்க் கிளம்பி சென்றுவிட்டனர்...

ஆதர்ஷும், கோமதி பாட்டியும் அபி மேல் தான் கோபமாய் இருந்தனர்...

தன்னை யாரும் புரிந்து கொள்ளவில்லையே என்று கழிவிரக்கம் தாக்க அபி அறைக்குள் சென்று முடங்கினாள்...

பெற்றோரை வழியனுப்பி விட்டு மீண்டும் அபியின் வீட்டிற்கு வந்தான் அக்ஷய்...

"நான் அபி கிட்ட பேசணும்..." என்றான் அனுமதியாய்...

"அவ சின்னப் பொண்ணு தப்பா பேசினா மனசுல வச்சுக்காதேப்பா..." கோமதி பாட்டி அவனிடம் வேண்டி கொள்ள...

"அதை நீங்க சொல்லணுமா..." என்றவன் அபி இருந்த அறைக்குள் நுழைந்தான்...

தன்னைக் கண்டு கொள்ளாமல் செல்லும் அண்ணனை கண்டு அனிக்குக் கண்கள் கலங்கியது... அவள் செய்ததும் தவறு தானே... அதனால் அமைதியாய் இருந்தாள்...

யாரும் இல்லாத அநாதையாய் படுக்கையில் படுத்து குமுறி குமுறி அழுது கொண்டு இருந்த அபியின் தோளை தொட்டான் அக்ஷய்...

"அபி..." அவனது தொடுகையிலும், அவனது அழைப்பிலும் திடுக்கிட்டு எழுந்தவள் அவனை அங்குக் கண்டதும் அவசரமாய் எழுந்து நின்றாள்...

அவளையும் அறியாமல் அவளது கண்கள் தன் முன்னால் நின்ற அக்ஷயை தாண்டி கதவை நோக்கியது... அது மூடப்பட்டு இருப்பதை உணர்ந்து அவளின் கண்களில் பயம் எழுந்தது...

"ஒரு முறை செஞ்ச தப்புக்கே இன்னமும் தண்டனை அனுபவிக்கலை... இதில் அடுத்தத் தவறா..." வேதனையுடன் கூறியவனைக் கண்டு கண்களில் கனல் பறக்க பார்த்தவள்,

"ரொம்பத் தான் நடிக்காதே..." என்றாள் கோபமாய்...

"நான் நடிக்கலை அபி... உண்மையா தான் சொல்றேன்... நான் செஞ்ச தவறுக்குத் தண்டனை அனுபவிக்க நான் தயாரா இருக்கேன்... "

"பொய் சொல்லாதே..."

"நான் ஏற்கெனவே சொல்லியது தான்... உன் கையால் என் உயிர் போகணுமா இருந்தா நான் உயிரை விடத் தயார்ன்னு... நீ நான் தண்டனை அனுபவிக்கணும்ன்னு நினைக்கிற... அப்போ நான் அதை முழுமனதாய் ஏத்துக்கிறேன்..."

சுற்றும் முற்றும் கண்களை ஓட்டியவள், "இங்கே உன்னையும், என்னையும் தவிர யாரும் இல்லை... அதனால் நடிக்கத் தேவையில்லை..."

அவளது கருவிழிகள் அங்கும் இங்கும் உருண்டு ஓட அவள் நின்று இருந்த விதம் மனதை தாக்க அவனது விழிகள் ரசனையுடன் அவளைப் பார்த்தது...

அவனது கண்களில் தெரிந்த ரசனையில் அவளது கண்கள் அச்சத்தைப் பிரதிபலித்தது... அதைக் கண்டு கொண்டவன் மனம் வேதனை அடைந்தது...

"நான் நடிக்கலைன்னு கூடிய சீக்கிரம் நீயும் புரிஞ்சுப்ப..."

"என்னத்தைப் புரிஞ்சிக்க இருக்கு... இப்போ நடிச்சு நடிச்சு ரெண்டு குடும்பத்தையும் ஏமாத்தின மாதிரி என்னையும் ஏமாத்தலாம்ன்னு நினைக்காதே... நான் அதுக்கு எல்லாம் மசிய மாட்டேன்..."

"நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்..." என்றவன், "நான் வந்த விசயமே வேறு... நாளையில் இருந்து நீ வேலைக்கு வந்தாகணும்..."

"இல்லை நான் வர மாட்டேன்..." என்று பிடிவாதம் பிடித்தவளை கண்டு பழைய அக்ஷய் திரும்பலானான்...

காதலுக்காக அவளிடம் மண்டியிட்டு நின்றவன் அதே காதலுக்காக அவளிடம் போராடவும் தயாரானான் அவனின் பாணியில்...

"நான் சொன்ன மாதிரி கல்யாணத்தை நிறுத்திட்டேன்... அதே மாதிரி நீ வேலைக்கு வரும் வழியைப் பாரு... இல்லைன்னா..." என்று நிறுத்தியவனை நிமிர்ந்து தைரியமாய்ப் பார்த்தவளை கண்டு,

"வீடு புகுந்து தூக்கிட்டு போவேன்... சும்மா மிரட்டுறேன்னு மட்டும் நினைக்காதே... நான் சொன்னதைச் செய்வேன்னு உனக்கே தெரியும்..."

அவனது மிரட்டிலில் வாய் மூடி மௌனியானாள்... இரு முறை சூடு கண்டவள் அல்லவா...

அவளது மௌனம் அவன் மனதை கரைக்க அவள் அருகில் நெருங்கி வந்தவன், "என் மனைவியா... முறையோடு தாலி கட்டி தூக்கிட்டு போவேன்..." என்றான் அவளின் காதில் கிசுகிசுப்பாக...

அவனது வார்த்தையில் இமைக்க மறந்து பார்த்தாள் அவள்... அவன் பேசுவது உண்மையோ... நடிப்போ... ஆனால் அவளது மனது அந்த வார்த்தையில் தடம் புரண்டது...

அவளது பார்வையில் தன்னைத் தொலைத்தவனாய் நின்று இருந்தான் அவன்... அவளது பார்வையில் இருந்த நேசத்தை அவனது மனம் கண்டு கொண்டது...

அவள் மனதில் தன் மீது நேசம் இருந்த போதும் தன் மீது அவள் புகார் அளித்து இருக்கிறாள் என்றால் தனது கொடிய செயல் அவள் மனதில் எந்த மாதிரியான வலி, வேதனையைக் கொடுத்து இருக்க வேண்டும்...

அந்த வலியை போக்க செய்து அவளின் நேசத்தை உயிர்ப்பிக்கச் செய்வது அவனது கடமை அல்லவா... அதற்காகத் தான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று வேகமாய்த் திட்டமிட்டான்... அதன் பின்னரே அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது...

"அபி..." மென்மையாய் அவளை அழைத்தவன் அவளது முகத்தை இரு கைகளில் தாங்கினான்...

ஏதோ காலம் காலமாய் அவளைப் பிரிந்து இருந்தவன் போல் பார்வையால் அவளை அள்ளி பருகியவனைக் கண்டு மூச்சடைக்க நின்று இருந்தாள் அவள்...

அவனது விழி வீச்சு அவளை வசியம் பண்ணியதோ அசையாமல் சிலையாய் நின்று இருந்தாள்...

"அடுத்துக் கோர்ட்டில் சந்திக்கலாம்..." அன்று அவன் கூறிய அதே வார்த்தை...

அன்றைய கொடிய சம்பவத்தை நினைத்து அவளது கண்கள் கலங்கியது...

"ஆனால் இந்த முறை வெற்றி உனக்குத் தான்..." அவளின் மனதை படித்தவனாய்... தன்னைச் சபித்தவனாய்...

அவளது நெற்றியில் முத்தமிட்டு, “கடைசியாய் ஒரு முறை அபி...” என்று காற்று கூட இருவர் இடையில் புகாதபடி அவளை இறுக்கி அணைத்தவன் பின்பு ஒரு நொடி கழித்து அவளை விடுவித்தான்...

"பை அபி..." என்றவன் அவளது அறையை விட்டு வெளியேற...

அவனது வார்த்தைகளை நம்பியும் நம்பாமலும் நின்று இருந்தாள்...

மறுநாள் காலையில் தாமதமாக எழுந்த அபியை யோசிக்கக் கூட அவகாசம் அளிக்காமல் கிளம்பச் சொல்லி அவளை அழைத்துக் கொண்டு சென்றான் ஆதர்ஷ்... எங்கே, எதற்கு என்று அவள் கேட்டதற்குப் பதில் இல்லை...

மாநாகரக் காவல் ஆணையரின் அலுவலகத்திற்குத் தான் அவளை அழைத்து வந்தான்...

அங்கு ஏற்கெனவே வந்து அமர்ந்து இருந்த அக்ஷயை கண்டதும் விசயம் புரிந்து போனது அபிக்கு...

"கேசை வாபஸ் வாங்கு அபி..." ஆதர்ஷ் அவளை அவசரப்படுத்தினான்...

"மாட்டேன்..." அக்ஷயை பார்த்துக் கொண்டே மறுப்பாய் தலையசைத்தாள்...

அக்ஷய் புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"அபி... பிடிவாதம் பிடிப்பதற்கான நேரம் இது இல்லை... சீக்கிரம்... வெளியில் பிரஸ்காரங்க எல்லாம் இருக்காங்க..."

"விடுங்க ஆதர்ஷ்... அவ விருப்பத்துக்கு நான் தலை வணங்குகிறேன்..." அக்ஷய் அவனிடம் கூறினான்...

"இல்லை அக்ஷய்... உங்களுக்கு ஒண்ணும் தெரியாது... இந்தக் கேசால பாதிக்கப்படப் போறது நீங்க மட்டும் இல்ல... அவளும் தான்..." என்று அக்ஷயிடம் சொல்லியவன் தங்கையிடம்,

"அபி... நான் சொல்றேன்... கேளு..."

"அண்ணா..." கண்கள் கலங்க பார்த்தவளை கண்டு ஆறுதலாய் அணைத்துக் கொண்ட ஆதர்ஷ்,

"உன் நல்லதுக்குத் தான்டா சொல்றேன்..."

அண்ணனின் பேச்சை தட்ட முடியாமல் அவள் வழக்கை திரும்பப் பெற்று கொண்டாள்... ஆனால் மனம் ரணமாய் வலிக்கத்தான் செய்தது...

வெளியில் வந்த அக்ஷயிடம், "கடைசியில் நடிச்சு எல்லோரையும் நம்ப வச்சு நீ ஜெயிச்சிட்ட இல்ல..." என்ற அபியின் வார்த்தைகள் வெறுப்புடன் வெளிவந்தது...

"அபி..." அவன் அழைத்ததைப் பொருட்படுத்தாமல் சென்றவளின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன்,

"இப்பவும் எதுவும் மாறல... வா... உள்ளே போய்க் கம்ப்ளையிண்ட் கொடு... நான் தண்டனையை ஏத்துக்கத் தயாரா இருக்கேன்..."

அவனை வெறித்துப் பார்த்த அபி பின்பு விரக்தி புன்னகையை உதட்டில் வழிய விட்டவள் ஒன்றும் பேசாது விறுவிறுவென நடந்தாள்...

அவன் அபியை கைப்பிடித்து நிறுத்திய காட்சியை அங்கு இருந்த பத்திரிக்கை நிருபர் ஒருவன் புகைப்படம் எடுத்தான் அவர்களுக்குத் தெரியாமல்...

"அக்ஷய்... அவள் ஏதோ கோபத்தில் இப்படி நடந்துக்கிறா... எல்லாம் சரியாகும்..." என்ற ஆதர்ஷ் தங்கையின் பின் ஓடினாள்...

சென்று கொண்டு இருந்த அவளைப் பார்த்தபடி நின்று இருந்த அக்ஷய்க்கு அவளின் மனவலி புரிவதாய்...

அவளின் மனதில் இடம் பிடிப்பதற்காகவே தண்டனையை ஏற்றுக் கொள்ள வந்தவனுக்கு அந்த விதி சதி செய்து விட்டதாய் எண்ணி மனம் நொந்து போனான்...

ஆனால் விதி அதன் வேலையைச் சரியாய் செய்தது...

மறுநாள் நாளிதழில் பிரபல இளம் தொழிலதிபர் இளம்பெண்ணுடன் கசமுசா... விசயம் பெரிதாகி காவல்நிலையம் வரை வந்துவிட்டது... பணப் பலத்தால் வழக்குத் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்ற செய்தி அக்ஷய், அபி புகைப்படத்துடன் வெளிவந்தது...

நாளிதழ் மூலம் அக்ஷய், அபி விசயம் ஊருக்கு மட்டும் அல்ல மதிவதனா குடும்பத்திற்கும் தெரிந்துவிட்டது...

பூக்கும்...

தன் முன் கோபத்துடன் அமர்ந்திருந்த பெற்றோரை கண்டு சிறிது எரிச்சல் வந்தது மதிவதனாவிற்கு... தான் இத்தனை சொல்லியும் கேட்காமல் அவர்கள் சொன்னதையே சொல்வது அவளுக்கு மேலும் எரிச்சலை தந்தது...

"டாட், மாம்... அக்ஷய் அப்படிப்பட்டவர் இல்லை... அவரைப் பத்தி யாரோ வேண்டாதவங்க செஞ்சதா இருக்கும்... இது ஒரு ஃபேக் நியூஸ்..." தன்னவனுக்காக அவர்களிடம் வாதாடினாள்...

"ஒரு பொண்ணு கையைப் பிடிச்சிட்டு கமிசனர் ஆபிஸ் முன்னாடி நிற்கிறது உனக்கு ஃபேக் நியூசா... நான் விசாரிச்சிட்டேன்... அந்தப் பொண்ணு அவன் மேல் கம்ப்ளையிண்ட் கொடுக்கத்தான் வந்திருக்கா..." என்று சொன்ன பாரிவேந்தனின் முகம் இறுகி இருந்தது...

"அந்தப் பொண்ணு வேணும்ன்னு அக்ஷய் மேல பழி போட்டு இருக்கலாம்..." இப்போதும் அக்ஷய்க்காக வாதிட்டாள் அவள்...

"மதி... அந்தப் பொண்ணு யாருன்னு உனக்குத் தெரியாதா...? அவள் அனியோட நாத்தனார் தானே... அவ எதுக்குத் தேவையில்லாம இவன் மேல் பழி போடணும்..." அவளின் அன்னை அன்னபூரணி சொல்ல...

"மாம்... அக்ஷய் மாதிரி ஒருத்தர் மேல எல்லோருக்கும் ஆசை இருக்கத்தான் செய்யும்... அது மாதிரி அக்ஷயை அடைய அவ ஏன் பொய்யா கூடக் கம்ப்ளையிண்ட் பண்ணி இருக்கக் கூடாது...?"

"மதி... இது என்னம்மோ எனக்குச் சரின்னு படலை... அனி கல்யாணத்தப்பவே அவன் அந்தப் பொண்ணு கிட்ட பேசிட்டு ஒட்டிட்டு அலைஞ்சதை நானே பார்த்தேன்... ரெண்டு பேருக்குள்ள என்ன கண்றாவி நடந்ததோ... யார் கண்டா...? உனக்கு என்ன குறைன்னு அவனைக் கட்டிக்கணும்ன்னு சொல்ற...? இவன் இல்லைன்னா

இன்னொருத்தன்... இப்படிப்பட்டவன் உனக்குத் தேவையா...?" அன்னபூரணி படபடத்தார்...

"டாட்..." மதி தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள்... அவர் தனக்குச் சாதகமாகப் பேசுவார் என்று அவர் முகம் பார்த்தாள்...

"மதி... பூரணி சொல்றது தான் எனக்கும் சரின்னு படுது... அவனைப் பத்தி இப்படி ஒரு நியூஸ் வந்ததுக்கு அப்புறம் அவனைத் தான் கல்யாணம் பண்ணப்பேன்னு நீ பிடிவாதம் பிடிக்கிறது சரியில்லை... கல்யாணத்துக்கு முன்னாடி இது தெரிஞ்சதுன்னு சந்தோசப்பட்டு விலகிரு... உனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமான மாப்பிள்ளையை நான் வரிசையில் கொண்டு வந்து நிறுத்தறேன்..."

பெற்றோர் சொல்வதை அவள் மனம் ஏற்றுக் கொண்டாலும் அக்ஷய் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் அவர்களின் முடிவை ஏற்றுக் கொள்ள அவளால் முடியவில்லை...

"டாட், மாம்... இந்தக் காலத்துல அக்ஷய் மாதிரி ஆளுங்களைப் பார்ப்பது ரொம்ப ரேர்... அந்தளவுக்கு க்ளீன் கேபிட் உள்ளவர்... இவ்வளவு ஏன் அவருக்கு நிச்சயம் பண்ணிய என் கிட்ட கூட வரம்பு மீறி அவர் நடக்க நினைச்சது இல்லை... அந்தக் குணம் தான் எனக்கு அவர் கிட்ட ரொம்பப் பிடிச்சது... இந்த விசயமா நான் அவர் கிட்ட பேசி முடிவு எடுக்கிறேன்... அதுவரை எனக்காக நீங்க அமைதியா இருங்க..."

தங்களின் செல்ல மகளுக்காக இருவரும் சற்று இறங்கி வந்தனர்...

பாரிவேந்தனுக்கு அக்ஷய் மேல் கோபம் கோபமாய் வந்தது... திருமணம் பேசி முடிவாகி இருக்கும் இந்த நேரத்தில் இப்படி ஒரு காரியம் பண்ணி இருக்கானே என்று... அதுவும் அமைச்சர் மகளை மணக்க போகிறோம் என்ற பயம் சிறிதும் இல்லாமல் அவன் பண்ணிய வேலை

கண்டு அவர் ஆத்திரத்தில் இருந்தார்... இது அவருக்குமே அவமானம், அசிங்கம் அல்லவா...

ஆனாலும் மகளுக்காகச் சற்றுப் பொறுமை காத்தார்... மதிவதனா விருப்பத்தை மீறி அவர் எதுவும் செய்தது கிடையாது... அவள் விருப்பப்பட்டாள் என்பதற்காகத் தானே அக்ஷய் வீடு தேடி போய் மாப்பிள்ளை கேட்டார்... இன்றும் அவளின் விருப்பத்திற்காக அமைதி காத்தார்...

அன்று வழக்கத்திற்கு மாறாக அலுவலகம் வந்துவிட்ட அக்ஷய் அன்றைய செய்தித்தாளை படிக்காதது அவனின் துரதிர்ஷ்டமே... அபியின் விசயமாய் அவன் அலைந்ததில் வேலைகள் மலை போல் குவிந்திருக்க அதை எல்லாம் முடிக்க வேண்டி அவனின் கவனம் எல்லாம் அதன் மேல் இருந்தது...

அப்போது அவனின் இன்டர்காம் அழைத்தது... அவனது செயலாளர் மணி தான் பேசினான்... மதிவதனா அவனைக் காண வந்திருப்பதை அவன் தெரிவிக்க அக்ஷயின் புருவங்கள் யோசனையில் சுருங்கியது... பின்பு,

"உள்ளே அனுப்பு..." என்றவன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்... அவனுக்கு இருந்த மனவுளைச்சலில் மதியை பற்றி மறந்து போனான்...

தன்னை ஏன் அவள் காண வந்து இருக்கிறாள் என்று குழம்பியவனுக்கு அவளின் வருகை நல்லது என்றே தோன்றியது... அபியை பற்றிச் சொல்வதற்குச் சரியான நேரம் இது என்று எண்ணினான்...

"ஹாய் அக்ஷய்..." என்று சிரித்தபடி வந்த மதியை கண்டு அளவாகப் புன்னகைத்தவன் தன் முன் இருந்த நாற்காலியை காட்டி சைகையில் அவளை அமரும்படி சொன்னான்...

அவனின் பேச்சற்ற சைகையைக் கூர்ந்து கவனித்தவள் அவன் சொன்னதைச் செய்யாமல் அவன் அருகில் வந்து அவன் முன் இருந்த மேசை மீது சாய்ந்து அமர்ந்தாள்...

அவளின் செயலில் அவனின் முகம் அதிருப்தியை காட்டியது... அதைக் கவனியாதவளாய்,

"அக்ஷய்... இன்னைக்குப் பேப்பர் பார்த்தீங்களா...?"

எதற்கு என்று மனம் கேட்டாலும் அதை ஒதுக்கிவிட்டு அக்ஷய், "இல்லை..." என்றான்...

தனது கைப்பையில் இருந்து நாளிதழை எடுத்து அவன் முன் நீட்டினாள்... அதில் அவனும், அபியும் கைக் கோர்த்தபடி நின்று இருந்த காட்சி புகைப்படமாக வந்திருந்தது... அதைப் படித்துப் பார்த்தவனுக்குக் கோபம் வந்தது...

தன்னுடைய அந்தரங்கத்தை அலசி ஆராய்ந்து இருக்கும் பத்திரிக்கை சுதந்திரத்தை எண்ணி அவனுக்கு ஆத்திரம் வந்தது...

அதை மதி தவறாகப் புரிந்து கொண்டாள்... பொய்யான செய்தியை கண்டு கோபப்படுகிறான் என்று அவளாக எண்ணி கொண்டாள்...

"நீங்க கோபப்படாதீங்க அக்ஷய்... உங்களைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... நீங்க அந்த மாதிரி பண்ண மாட்டீங்கன்னு... எனக்கு உங்க மேல் நம்பிக்கை இருக்கு..."

அவளின் நம்பிக்கை கண்டு அவன் அயர்ந்து போனான்... ஆனாலும் அவளிடம் உண்மையைச் சொல்ல வேண்டி,

"உண்மை தான் மதி..." அவனின் வாய் முணுமுணுத்தது... இதில் மறைக்க ஒன்றும் இல்லை என்றே நினைத்தான்... அபி விசயத்தை அவளிடம் அவன் ஏற்கெனவே சொல்லி இருக்க வேண்டும்...

"வாட்...?" அதைக் கேட்டு மதிக்கு அதிர்ச்சியாக இருந்தது...

"பொய் சொல்லாதீங்க அக்ஷய்...

"உண்மை தான்..." என்றான் மீண்டும்...

"நீங்களா இப்படி... என்னால நம்ப முடியலை அக்ஷய்..." மதிக்கு அவன் இப்படிச் செய்து இருப்பான் என்று நம்ப முடியவில்லை...

"ஏன் அக்ஷய் இப்படி...? உங்களுக்காக நான் காத்திருக்க... நீங்க வேறு பொண்ணு கூட..." அந்த விசயத்தைக் கிரகிக்க முடியாமல் கண்களை மூடி சில நிமிடங்கள் நின்றவள் பின் ஏதோ ஒரு முடிவு எடுத்தவளாய்,

"சரி அக்ஷய்... நடந்தது நடந்து போச்சு... அதை மறந்திருங்க..." என்றவளை புரியாமல் கண்கள் சுருங்க பார்த்தான்...

"தப்பு எல்லாம் என் பேரில் தான்... உங்களை இந்த மாதிரி போக விட்டதுக்கு நான் தான் காரணம்... உங்க தேவையை நான் புரிஞ்சிக்காம இருந்துட்டேன்... சாரி அக்ஷய்..." என்றவள் அவன் எதிர்பாரா நேரம் அவனது முகம் நோக்கி குனிந்து அவனது இதழில் தன் இதழை பதித்தாள்...

அந்நேரம் பார்த்து அக்ஷயின் அறைக் கதவை திறந்து கொண்டு அபி உள்ளே நுழைந்தாள்... அவள் எப்போது வேண்டும் என்றாலும் வேலைக்கு வருவாள் என்ற காரணத்தினால் அவள் வந்தால் உடனே தன்னைக் காண அனுப்பும்படி மணியை அவன் பணித்து இருந்தான்... அவன் சொன்னது நல்லதுக்குத் தான் என்றாலும் அது இப்படித் தவறாகப் போகும் என்று கனவிலும் நினைத்து இருக்க மாட்டான்...

மதி இதழ் பதித்த அடுத்த நொடி அவளைத் தன்னிடம் இருந்து பறித்து விலக்கி தள்ளியவன் அவளின் கன்னத்தில் ஓங்கி விட்டான் ஒரு அறை... அவளது செயலில் அவனது மனம் அருவருத்துப் போனது...

இதை எல்லாம் பார்த்த அதிர்ச்சியில் அசையாது நின்று இருந்தாள் அபி...

"இந்த வேலை எல்லாம் என் கிட்ட வச்சுக்காதே..." என்று மதியை மிரட்டியவன் அப்போது தான் அபியை

கவனித்தான்...

"அபி..." என்றான் முகம் மலர...

அவனின் அழைப்பில் தன்னுணர்வு அடைந்தவள், "ச்சீ..." முகம் அருவருத்தவளாய் வெளியில் செல்ல முயல... அக்ஷய் ஓடிச் சென்று அவளது கரத்தை பற்றி நிறுத்தினான்...

"அக்ஷய்..." அவனின் செயலை கண்டு ஆத்திரமும் அதிகாரமும் கலந்து ஒலித்தது மதியின் குரல்...

அவனோ மதியை கண்டு கொள்ளாது, "அபி... அதிசயமா இருக்கு... என்னைத் தேடி வந்திருக்க... வா வா..." தன்னவளை அகம் மகிழ்ந்து அவன் வரவேற்றான்...

அக்ஷயின் செயலும், வார்த்தையும் அவனது மனதை தெளிவாக எடுத்துக் காட்டியது மதிக்கு... அதிலும் தன்னிடம் காட்டிய அவனது உதாசீனம் அவளுக்குப் பெருத்த வலியை கொடுத்தது... என்ன தான் இருந்தாலும் அவளும் ஒரு பெண் அல்லவா... காதல் அவள் மனதை வேதனை கொள்ளச் செய்தது...

"என் கையை விடு..." மதியின் வேதனை முகத்தைப் பார்த்து அபி தனது கையை அக்ஷய் பிடியில் இருந்து உருவி கொள்ள முயல...

"கையை விட்டா நீ ஓடிருவ..." என்றவன் அவளைத் தனது கையணைப்பில் கொண்டு வந்தவன் மதியிடம்,

"சாரி மதி... நான் அபியை விரும்பறேன்... நான் கல்யாணம்ன்னு ஒண்ணு பண்ணினா அபியை தான் பண்ணுவேன்..." என்று தன் மனதை வெளிப்படுத்தினான்...

"வாட் அக்ஷய்...” அப்பட்டமாய் முகத்தில் அதிர்ச்சியைக் காட்டிய மதி,

“உங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சி இருக்கு... போயும் போயும் இந்த லோ கிளாஸ் பொண்ணையா விரும்பறீங்க...? உங்க லெவல் என்ன... அவள் லெவல்

என்ன...? நீங்க போய் அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா...?" என்றவள் அவன் அருகில் வந்து,

"இங்கே பாருங்க அக்ஷய்... நடந்த தப்பை சரி செய்ய நீங்க பணத்தைத் தூக்கி இவள் மூஞ்சில விட்டு எறிங்க... அதை விட்டுட்டு நீங்க அவளைக் காதலிக்கிறதா சொல்றது கொஞ்சமும் சரியில்லை..."

"மதி..." அக்ஷய் குரல் உயர்ந்து ஒலித்தது... அவனது குரலில் மதி மட்டும் அல்ல அபியும் சிறிது அரண்டு தான் போனாள்...

மதி அவனைப் பேசி இருந்தால் கூடப் பொறுத்து போயிருப்பான்... ஆனால் அபியை தரக்குறைவாய் பேசியதை அவனால் தாங்க முடியவில்லை...

"மதி... தேவையில்லாம அபியை பேசும் வேலை வச்சுக்காதே... எனக்கும் உனக்கும் தான் பேச்சு... இப்போ நீ போ... நானே உன் அப்பா கிட்ட வந்து பேசுறேன்..."

"என்ன பேசப் போறீங்க...? நம்ம கல்யாணம் நடக்காதுன்னா... ஆனா நான் அதுக்கு விட மாட்டேன் அக்ஷய்... நீங்க எப்படி இவளை கல்யாணம் பண்ணிக்கிறீங்கன்னு பார்க்கிறேன்... என்னைக்கு இருந்தாலும் நீங்க தான் என் கணவர்... நம்ம கல்யாணம் நடந்தே தீரும்... பார்க்கலாம் நீங்களா... நானான்னு...?" என்று சவால் விட்டவளை உறுத்து பார்த்தவன்,

"இந்த அக்ஷய் யாருக்காகவும் எதற்காகவும் பணிய மாட்டான்... இப்போ கூட நான் உன் கிட்ட அமைதியா பேசுறதுக்குக் காரணம் இதில் என்னோட தப்பு இருக்கிறதால தான்... அதுக்காக ஒரேடியா துள்ளினன்னு வை... அப்புறம் நான் யாருன்னு காட்ட வேண்டி வரும்..." என்று அவளை எச்சரித்தவன்,

"என்ன சொன்ன எங்க கல்யாணம் நடக்காதுன்னா..." என்று மதியை பார்த்துக் கேள்வி கேட்டவன் அபியின் தோள் மீது கையைப் போட்டு இறுக்கி அணைத்தவன்,

"நிச்சயம் என் கல்யாணம் அபியோடு நடக்கும்... நீயும் அதைப் பார்க்கத்தான் போற... இப்ப நீ போகலாம்..." என்று வாயிலை நோக்கி கையைக் காட்டினான்...

இரக்கம் இல்லாமல் பேசும் அக்ஷயை கண்டு அபிக்கு கோபமாய் வந்தது... பாவம் மதி என்று மதிக்காக வேதனைப்பட்டவள் மதியிடம்,

"எனக்கு ஒண்ணும் தெரியாது... அவரா ஏதேதோ பேசுறார்... அவர் சொன்ன மாதிரி எல்லாம் எங்க கல்யாணம் நடக்காது... உங்க ரெண்டு பேருக்கு தான் கல்யாணம் நடக்கும்..." என்ற அபி மதியை பார்த்து கையெடுத்து கும்பிட்டு மன்னிப்பு கேட்டாள்...

ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பறிப்பது எவ்வளவு பெரிய பாவச்செயல்... அதைத் தன்னைச் செய்ய வைக்க நினைக்கும் அக்ஷயின் மீது வெறுப்பு வந்தது அவளுக்கு... மதிக்காக அவள் மனம் இரங்கியது...

அக்ஷய் அபியை பிரமிப்பாய் பார்த்துக் கொண்டு நின்று இருந்தான்... தனது வாழ்க்கையே கேள்விக்குறியாக இருக்கும் இந்த நேரத்திலும் அவள் அடுத்தப் பெண்ணின் வாழ்க்கைக்காக யோசிக்கிறாளே என்று வியந்து போனவன் மனதில் அபி பல படிகள் உயர்ந்து போனாள்... அவள் மீதான காதல் இன்னமும் அதிகரித்தது...

"என்ன கிண்டல் பண்றியா...?" மதி அபியை பார்த்து கேட்டவள்,

"நீ பிச்சை போடும் அளவுக்கு என் வாழ்க்கை கேவலமா போயிடலை... என் வாழ்க்கையைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும்... நீ உன் வேலையைப் பார்..." எகத்தாளமாய்ப் பேசிய மதியை கண்டு அபிக்குக் கோபம் வரவில்லை... மாறாக அவளின் மனதை புரிந்து கொண்டாள் ஒரு பெண்ணாய்...

"மதி திரும்பத் திரும்பத் தேவையில்லாம பேசுற நீ..." அவள் அபியை பேசியது கண்டு அக்ஷய்க்கு தான் கோபம்

வந்தது...

"ஓ... அவளைச் சொன்னா உங்களுக்குக் கோபம் வருதோ..." அவனைப் பார்த்து நக்கலாய் மதி கேட்டாலும் உள்ளுக்குள் அவளது மனம் துவண்டு தான் போனது அவனது வார்த்தையில்...

இத்தகைய ஆறுதலை நிச்சயித்த பின் வந்த இத்தனை மாதங்களில் ஒரு நாளாவது தன்னிடம் அவன் காட்டி இருப்பானா... ஆறுதல் மட்டுமா... இந்த அரவணைப்பு, காதல் எதுவுமே அவளிடத்தில் காட்டியது இல்லையே... ஏனோ எதையோ இழந்தார் போன்று அவளுக்குக் கண்கள் கரித்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை...

"அப்படி என் கிட்ட இல்லாதது இவள் கிட்ட என்ன இருக்கு அக்ஷய்...? அழகு, படிப்பு, அந்தஸ்துன்னு எல்லாத்திலேயும் அவளை விட நான் எந்தவிதத்தில் குறைஞ்சு போயிட்டேன்..."

அவள் அப்படிக் கேட்டது அக்ஷயின் மனதை உறுத்தியதோ இல்லையோ அபியின் மனதை வெகுவாய் உறுத்தியது... தன் தோளில் படிந்து இருந்த அக்ஷயின் கையை எடுக்க முயன்றாள்...

அவளின் மனதை படித்தானோ என்னமோ அபியின் பக்கம் திரும்பி அவளை ஆழ்ந்து பார்த்தவன் தனது கைகளைச் சற்றும் விலக்கி கொள்ளவில்லை... மாறாக அவளது தோளை இன்னமும் அழுத்தமாய்ப் பற்றினான்...

'யார் என்ன சொன்னாலும் நான் உன்னை விட்டு விலக மாட்டேன்...' என்பது போல் இருந்தது அந்த அணைப்பு... ஆனால் உணர வேண்டியவள் அதை உணரவில்லையே...

"நீ லிஸ்ட் போட்டதுல முக்கியமான ஒண்ணு விட்டு போச்சு... அது என்னன்னு உனக்குத் தெரியுமா...?" மதியை பார்த்து கேட்டவன் அபியை பார்த்துக் கொண்டு,

"குணம்..." என்றான் பிசிறில்லாமல் தெளிவாக... அழுத்தமாக...

"ஓ... அது என் கிட்ட இல்லைன்னு நீங்களா முடிவு பண்ணிட்டீங்க அப்படித்தானே..." என்ற மதி, "உங்க கிட்ட மட்டும் இருக்கா என்ன...?" நக்கலாய் கேட்டவளை கண்டு பெருமூச்சு விட்டவன்,

"நிச்சயம் என் கிட்டே இல்லை தான்... அதை நான் ஒத்துக்கிறேன்... எது என் கிட்ட இல்லையோ அதைத் தான் நான் அபியிடத்தில் விரும்புகிறேன்... நீ சொன்ன எல்லாமே என் கிட்ட இருக்கு... அதனால் தான் எனக்கு அபி கிட்ட அவளோட குணம் பிடிச்சு இருக்கு... அப்புறம் ஒண்ணு கேட்டியே... நீ குணம் உள்ளவள் இல்லைன்னு நான் முடிவு பண்ணிட்டதா... நிச்சயம் அபி அளவுக்கு உன்னிடம் உயர்ந்த குணம் கிடையாது..." என்றவனைப் பார்த்து மதி,

"அக்ஷய்..." என்று கத்தினாள்...

"உண்மையைத் தான் சொல்றேன் மதி... நீ இவ்வளவு எடுத்து எறிஞ்சு பேசியும், பணத்தைக் கொடுத்து அவளைக் கழட்டி விடச் சொல்லியும் உன் நல்லதை மட்டுமே அபி நினைக்கிறா பாரு... அந்த நல்ல மனசு உனக்கு வராது... இவ்வளவு ஏன் எனக்குக் கூடக் கிடையாது... நானும் உன்னை மாதிரி சுயநலம் பிடிச்சவன் தான்... ரெண்டு சுயநலமும் எப்பவுமே ஒண்ணா சேர முடியாது... அப்படியே வாழ்க்கையில் இணைந்தாலும் அது ரொம்பப் போலித்தனமா இருக்கும்... வாழ்க்கையே நடிப்பா போயிரும்... என்னால் வாழ் நாள் முழுவதும் உன் கிட்ட நடிச்சிட்டு இருக்க முடியாது... இதே இது அபிக்கிட்ட மட்டும் தான் என்னால் இயல்பா இருக்க முடியும்... நான் இயல்பை தொலைக்க முடியாது... சாரி மதி..." என்றவன் மீண்டும் வாயிலை நோக்கி கையைக் காண்பிக்க...

அதற்கு மேல் அவமானப்பட மதியால் இயலவில்லை... அக்ஷயை வெற்றுப் பார்வை பார்த்தவள் அபியை நன்கு முறைத்து விட்டு விருட்டென்று வெளியில் சென்றாள்...

போகும் மதியை கண்டு வேதனை அடைந்தவளாய் அபி, "கையை எடு..." அவனின் கரத்தை விலக்கினாள்...

அவனோ கரத்தை விலக்காமல் அவளை அப்படியே அழைத்து வந்து அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்து அதன் கைப்பிடியில் கைகளை ஊன்றி அவளின் முகத்தைப் பார்த்தவாறு,

"சொல்லு... என்ன விசயமா என்ன பார்க்க வந்திருக்க...?" அவளின் வரவிற்கான காரணத்தை அறிய ஆவல் கொண்டவனாய் கேட்டான்...

அப்போது தான் அபிக்கும் தான் வந்ததுக்கான காரணம் நியாபகம் வந்தது...

"இன்னைக்குப் பேப்பரை பார்த்தியா...?"

அவளின் ஒருமை அழைப்பை கேட்டு அவனது இதழ்களில் புன்னகை நெளிந்தது...

"என்ன...?"

"உன் மனசுல நான் இருக்கேன்டி..." என்றான் திடுப்பென்று...

"இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி...? நான் கேட்டதுக்குப் பதிலை சொல்லு..." என்றாள் முகத்தை வெட்டியபடி...

"முதல்ல நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லு... மதி கிட்ட அவர்ன்னு என்னை மரியாதையா பேசின நீ... இப்போ ஏன் ஒருமையில் பேசுற... உன் மனசுல காதல் இல்லைன்னா மதி கிட்டேயும் அதே மாதிரி பேசி இருக்கலாமே..."

"அது..." பேச வார்த்தை இல்லாமல் தடுமாறியவள் பின் அதை மறைக்கச் சிடுசிடுப்புடன்,

"பேப்பர் பார்த்தியா இல்லையா...?" மீண்டும் விட்ட இடத்தில் வந்து நின்றாள்...

"மதி கிட்ட கூட உன்னால என்னை விட்டு கொடுக்க முடியல என்ன... ம்..." என்றவன் பார்வை ஆராய்ச்சியாய் அவள் மீது படிந்தது...

அதன் வீரியம் தாங்க முடியாதவளாய் அவனைத் தள்ளி விட்டு நாற்காலியில் இருந்து எழுந்து விட்டாள்...

"நீ பேச்சை மாத்தாதே..." என்றவள் கண்ணில் மேசை மீது இருந்த நாளிதழ் விழ, "இது... இது... உன் வேலை தானே..." என்றாள் குரல் நடுங்க... அவளது கண்கள் கலங்கி கண்ணீர் வடித்தது...

"ஹேய் அபி..." அவளின் கண்ணீர் கண்டு பதறி போனவன் அவளின் முகத்தைப் பற்றி அதைத் துடைத்து,

"சத்தியமா இது பத்தி எனக்கு எதுவும் தெரியாது... யாரோ அவன் பேப்பர் விக்கிறதுக்காக இந்த மாதிரி போட்டு இருக்கான்..." அவனின் கையைத் தட்டிவிட்டவள்,

"ச்சீ... பொய் பேசாதே... நான் உன் காலடியில் வந்து விழணும்ன்னு தான் நீ இப்படி ஒரு நியூஸ் வர செய்திருக்க... நீ இந்தளவுக்குக் கீழ்த்தரமா இறங்குவேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை... நீ எல்லாம் மனுசன் தானா... சதையைத் தின்னும் ராட்சசன்... அதான் என் உடலை உன் பசிக்கு தின்னுட்டியே... திரும்பவும் எதுக்கு அலையற... உன் உடல் பசிக்கான ஆள் நானில்லை... அதுக்கு வேற ஆளை பார்த்துக்கோ... என்னை விட்டிரு... இதுக்கு மேல வலி தாங்க என் உடலிலும் சரி மனசிலும் சரி தெம்பு இல்லை..." என்று அவனைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டவளை கண்டு அவனுக்கு வேதனையாய் இருந்தது...

அவனுக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து இன்று வரை எந்த ஒரு பெண்ணின் நிழல் கூடத் தன் மீது படியாமல் கற்பு வாழ்க்கை வாழ்பவன் அவன்... அவன் வயது பையன்கள் பெண் சகவாசம் கொண்டு ஊர் சுற்றிய போது கூட அவன் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி தன் மனதை, இளமையை வென்று வெளியில் வந்தவன்...

அத்தகையவன் அவளிடம் மட்டுமே தோற்றுப் போனான்... அவளிடம் மட்டுமே தன் பிம்மச்சரிய விரதத்தை முடித்துக் கொண்டான்... அவன் அறிந்த, உணர்ந்த முதல் பெண் அவள் தான்... கடைசிப் பெண்ணும் அவள் தான் என்பதை என்றாவது அவள் உணர்வாளா...?

அவளின் இரு தோள்களையும் பற்றியவன், "ஏன் அபி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிற... இன்னுமா என் மனசு உனக்குப் புரியலை... உனக்காக மதியோடு நடக்க இருந்த கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தறேன்னா நீ எந்தளவுக்கு முக்கியம்ன்னு உனக்குத் தெரியலையா...? அப்படிப்பட்ட நான் போய் இப்படி ஒரு கேவலமான நியூஸ் போடுவேனா... இவ்வளவு நேரம் உனக்காக அவள் கிட்ட நான் போராடினதை பார்த்துமா நீ இப்படிப் பேசற...?”

அவளது வார்த்தைகள் கோபத்தை அளித்த போதும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசினான்...

அவனது வார்த்தையில் இகழ்ச்சியான புன்னகை ஒன்றை உதிர்த்தவள், "உன் தங்கையின் வாழ்க்கை அந்த மதியிடத்தில் இல்லையே... என்னிடத்தில் அதாவது என் அண்ணனிடத்தில் அல்லவா இருக்கிறது..." என்றவளின் வார்த்தையில் அதிர்ந்து போனவன் தனது கைகளை அவளது தோளில் இருந்து எடுத்துவிட்டான்...

பூக்கும்...

அக்ஷயின் அதிர்ச்சியைத் திருப்தியுடன் பார்த்த அபி, "உன் தங்கை வாழ்க்கையைக் காப்பாத்துறதுக்காக நீ ரெண்டு பொண்ணுங்க வாழ்க்கையில் விளையாடுற... அந்த மதி உன்னை மன்னித்தாலும் கூட நான் உன்னை மன்னிக்க மாட்டேன்..." சீற்றத்துடன் வந்தது அவளது வார்த்தைகள்...

தான் செய்த ஒவ்வொரு செயலும் பல மடங்கு வீரியத்துடன் தன்னைத் திருப்பித் தாக்குவதை உணர்ந்தவன் சிறிது நேரம் அமைதியாய் இருந்தான்...

தன்னைக் கொஞ்சமேனும் புரிந்து கொள்ள முயற்சி எடுக்க மாட்டேங்கிறாளே என்று அவனுக்கு ஆயாசமாய் இருந்தது... ஆனாலும் அவனைக் காமுகன் என்று சொல்லாமல் சொல்லும் அவளின் வார்த்தையைக் கேட்டவனுக்கு அது அவனுள் இருந்த தன்னகங்காரத்தைத் தூண்டி விடுவதாய் இருந்தது...

அவளது காதல் கொடுத்த தடுமாற்றம், குற்றவுணர்ச்சி காரணமாக அவன் அவளிடத்தில் பணிந்து போனால் ஒரேடியாய் அவள் தன்னைப் பழித்துப் பேசுகிறாளே என்று அவனது ஆண் மனம் நினைத்தது... அடிப்பட்ட பெண்ணின் மனதை அவனின் ஆண் மனம் சற்றும் புரிந்து கொள்ளவில்லை...

"என்னைப் பத்தி இந்தளவுக்கு உயர்வாய் நினைச்சதுக்கு ரொம்ப நன்றி..." என்றவன் தன்னுடைய முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றான்...

அவனது வார்த்தையில் இருந்த பேதத்தை உணர்ந்தவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்ணில் அவனின் தோற்றத்தை கண்டு சிறிது அச்சம் எட்டி பார்த்தது... அவனை முதன் முறையாய் பார்த்த போது எந்தளவுக்கு இறுகி போனவனாய் இருந்தானோ அந்தளவுக்குக் கடினமாய் மாறி இருந்தது இப்போதைய அவனது முகம்...

சற்று முன் மலர்ந்த முகத்தோடு பார்த்த அக்ஷய் பொய்யோ என்பது போல் இருந்தது அவனது முகம்...

அவளது அச்சத்தை உள்வாங்கிக் கொண்ட அவனது விழிகள் எதையும் பிரதிபலிக்கவில்லை... தனது இருக்கையில் அமர்ந்தவன்,

"உட்காருங்க மிஸ். அபிராக்ஷிதா..." என்றான் கம்பீரமாய்...

அவளது பெயரை உச்சரிக்கும் போது அவனது மனதில் ஒருவித சந்தோசம் ஏற்பட்டு அவனது முகம் மென்மையுற்றது...

'ரக்சி...' அவளது பெயரை சுருக்கமாய்ச் செல்லமாய் மனதுக்குள் அழைத்துப் பார்த்தவன் மகிழ்ந்து போனான்... ஆனால் வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல் இறுக்கமாய் அமர்ந்து இருந்தான்...

தனது அச்சத்தை அவனுக்குக் காட்டாமல் மறைத்த அபி, "நான் உட்கார வரவில்லை... ஊர் எல்லாம் என்னைக் கேவலமா பேசும்படி நீ செய்தாலும், இதை விட அதிகமா நீ என்னை அவமானப்படுத்தினாலும் நான் உன் காலடியில் வந்து விழ மாட்டேன்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கவும் மாட்டேன்... அதைச் சொல்லத்தான் வந்தேன்... நான் வர்றேன்..."

அவளது பேச்சு ஒவ்வொன்றும் அவள் என்றும் அவனை மன்னிக்கப் போவது இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லியது... இனியும் அவளின் போக்குக்கு விட்டால் என்றுமே அவள் மனதில் தான் நிலைக்க முடியாது என்பதை உணர்ந்தவனாய்,

"வெல் ரக்சி..." என்றவனை அவள் உறுத்து விழித்தாள்...

"என் பெயர் அபி..."

"அட சூப்பர் டைட்டில்..." என்று அவளைச் சிலாகித்துப் பாராட்டியவன், "நம் கதையைப் புத்தகமாகப் போடும் போது இந்த டைட்டில் வைக்கிறேன்..."

அவனது கேலியில் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்...

"உன் பெயர் அபிராக்ஷிதான்னு எனக்கு நியாபகம்... ஏன் உனக்கு அது நியாபகத்தில் வரலையா...?" என்றவன், "நீ சொன்ன காரணம் எல்லாம் உண்மைன்னே வச்சுக்குவோம்..."

"உண்மை இல்லாம அது என்ன பொய்யா...?" இடைமறித்துச் சொன்னவளின் குரலில் சீற்றம் மிகுந்து இருந்தது...

அவளைக் கூர்ந்து பார்த்தவன், "இன்னமும் அந்த உண்மை காரணம் அப்படியே தான் இருக்கு ரக்சி..."

அவனின் வார்த்தையின் தாக்கத்தில் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

"உன் அண்ணனின் வளமான எதிர்காலம் என் கையில் தான் இன்னமும் இருக்கு..." அழுத்தமான அவனது குரலில் அவள் மனம் தொய்வுற தொப்பென்று நாற்காலியில் அமர்ந்தாள்...

"ம்... இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்று அவளை மெச்சியவனை அருவருப்புடன் பார்த்தவள்,

"மேலும் மேலும் நீ தப்பு பண்ணிட்டே போற... நான் என் அண்ணன் கிட்ட சொன்னா என்ன ஆகும்ன்னு தெரியுமா...?"

"என்னாகும்..." என்றவன் எழுந்து அவள் அருகே வந்தவன் மேசை மீது சாய்ந்து நின்று கொண்டு,

"அப்புறம் ஏன் நீ சொல்லலை...? உன் கற்பை கெடுத்த என்னைப் பத்தி முழுவதையும் உன் அண்ணன் கிட்ட ஏன் சொல்லல..."

"நா... நா..." என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து போனாள்....

"நான் சொல்லவா... உன் மனதில் உள்ள என் மீதான காதல் அதைச் சொல்ல விடவில்லை..." அவளின் மனதை அறிந்தவனாய்...

"இது நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் உள்ள ரகசியம்ன்னு நீ நினைக்கிற..."

"மண்ணாங்கட்டி..." வெடித்தாள் அவள்...

"நிச்சயம் உனக்காக நான் இதைச் செய்யவில்லை... உன் தங்கைக்காக அவள் வாழ்க்கை கெட்டு விடக் கூடாதேங்கிறதுக்காகத் தான் நான் வாய் மூடிட்டு இருக்கேன்... ஏதோ அறியாமல் அவள் செய்த தப்புக்குக் காலம் முழுவதும் அவள் கண்ணீர் வடிக்க நான் காரணமா இருக்க விரும்பலை... அதை விட என் அண்ணன் அவளை ரொம்ப நேசிக்கிறான்... அவனின் காதலை கேள்விக்குறியாக்க நான் விரும்பவில்லை... என் அண்ணனோட காதல் உன் தங்கையை மாத்தி இருக்கு... இனி அவங்க வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லை... நீயும் தேவையில்லாம அவளைப் பத்தி கவலைப்படாம உன் வேலையைப் பாரு...இந்த விசயம் என் உயிர் போனாலும் என் உடலோடு மண்ணோடு மண்ணாகத் தான் போகும்..."

அபியின் ஒவ்வொரு வார்த்தையும் அவனுள் ஏற்படுத்திய மாற்றத்தை சொல்ல வார்த்தைகள் இல்லை...

'உனக்குக் கொடுமை செய்தவனின் தங்கையிடமும் கூட உன்னால் எப்படியடி இவ்வளவு அன்பு காட்ட முடியுது... இவ்வளவு கவலையை மனசில் வைத்து இருக்கும் நீ என் கவலையைப் பத்தி யோசிக்கிற பாரு... இது தான் நீ... உன்னை விடவா வேறு ஒருத்தி எனக்கு வாழ்க்கை துணையா வர முடியும்... இப்போ தான்டி உன்னை இன்னமும் காதலிக்கத் தோணுது... உனக்காக உயிரையும் விடத் தோணுது...' மனதில் நினைத்தவன் வாய்விட்டு சொல்லவில்லை...

சொன்னால் மீண்டும் முருங்கை மரம் ஏறி விடுவாள் அவனது காதலியான வேதாளம்...

அவளை அணைத்து அன்பை வெளிப்படுத்த நினைத்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன், "வெல்... இந்தளவுக்கு நீ யோசிச்சேன்னா எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... இப்போ ஒரு எம்டியா உன் கிட்ட நான் பேசலாமா...?"

அவள் புரியாமல் பார்த்தாள்...

"நீ ஏன் இன்னமும் வேலையில் சேரவில்லை...?"

"இனி உன் கிட்ட வேலை பார்க்க என்னால் முடியாது..."

"ஓ..." என்றவன் ஒன்றும் பேசாது கணினி முன் அமர்ந்து எதையோ தேடினான்... பின் அதைப் பிரதி எடுத்து வந்து அவள் முன் நீட்டினான்...

"படிக்கத் தெரியும் இல்லையா..." என்றவனை முறைத்து பார்த்தாள் அவள்...

"இல்லை இங்கிலீசில் எழுதி இருக்கு..."

வேண்டும் என்றே இழுத்தவனை எரித்தபடி பார்த்தவள் அவன் கையில் இருந்த தாளை பிடுங்கி வாசிக்க ஆரம்பித்தாள்...

"பத்தாவது படிச்சவளுக்கு இங்கிலீஷ் வாசிக்கத் தெரியுமா...?" அவனது நக்கலில்...

"டென்த் வரைக்கும் இங்கிலீஷ் மீடியத்தில் தான் படிச்சேன்... அதனால எனக்கு ஏ, பி, சி, டி நல்லா வாசிக்கத் தெரியும்..."

அவளின் பேச்சு அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது... அதை அடக்கி கொண்டவன் பேசாது அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

அதைப் படிக்கப் படிக்க அவளது முகம் கோபத்தில் சிவப்பதை கண்டு உள்ளுக்குள் ரசித்தபடி வெளியில் எதையும் காட்டாது அமர்ந்து இருந்தான்...

"நீ ஒரு ஏமாத்துக்காரன்..." என்றவள் கையில் இருந்த தாளை அவனது முகத்தில் விசிறியடித்தாள்...

அதில் அவனது முகம் அவமானத்தில் சட்டென்று கறுத்தது... ஆனாலும் அவளுக்காகப் பொறுத்துக் கொண்டான்... இதே வேறு ஒருவர் இதைச் செய்து இருந்தால் நடந்து இருப்பதே வேறு...

இவ்வளவு ஏன் அவனின் தங்கை அனியாக இருந்தால் கூட அவனிடம் இருந்து கண்டிப்பாய் தண்டனை உண்டு... பாழாய் போன காதல் வந்து அக்ஷயின் குணத்தைப் புரட்டி போட்டு விட்டது...

"அது தெரிந்தது தானே..." அவளின் கோபம் தன்னைப் பாதிக்கவில்லை என்பது போல் அலட்சியமாகப் பேசியவனைக் கண்டு அவள் உறுத்து விழித்தாள்...

அந்தத் தாளில் இருந்ததன் சாராம்சம் இது தான்...

அபியை முதன் முதலில் வேலைக்கு எடுக்கும் போது வேலைக்கான ஒப்பந்தத்தில் அவளிடம் இருந்து கையெழுத்து வாங்கிய போது கூடவே அவளுக்குத் தெரியாமல் ஒரு வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கிய அக்ஷய் அதில் அவள் காலம் முழுவதும் அவனிடம் பணி புரிய வேண்டும் என்று எழுதி விட்டான்... அதாவது அவனாக அவளை விடுவிக்கும் வரை அவள் அவனிடத்தில் தான் வேலை செய்ய வேண்டும் என்று...

எவ்வளவு பெரிய மோசடி... எத்தகைய துரோகம் இது...

"இன்னைக்கு நாள் ரொம்ப நல்லா இருக்கு... சோ இன்னையில் இருந்து வேலையில் ஜாயிண்ட் பண்ற..."

மீண்டும் மீண்டும் அவனை ஒன்றும் செய்யாதபடி தன்னை அடிபணிய செய்யும் அவனின் அகம்பாவச் செயலை

வெறுத்தவளாய் அமர்ந்து இருந்தாள் அவள்...

"இந்தப் பத்தாங் கிளாஸ்க்கு உங்க கம்பெனியில் என்ன வேலை இருக்கு சார்...? உங்க கம்பெனி வாசப்படி மிதிக்கக் கூடத் தகுதி இல்லாத எனக்கு வலிய கூப்பிட்டு வேலை தர்றீங்களே... அந்தளவுக்கா உங்க கம்பெனி மோசமா போயிருச்சு..."

அந்த நிலையிலும் அவளது குத்தல் பேச்சு கண்டு அவன் அசந்து போனான்... மனதிற்குள் அவளைப் பாராட்டியவன்,

"உனக்குக் கம்ப்யூட்டர்ல கேம் விளையாட தெரியுமா...?" என்றான் திடுப்பென்று...

"தெரியாது..."என்றாள் அவன் பேச்சு புரியாதவளாய்...

"அப்போ உனக்குச் சினிமா பார்க்க தெரியுமா...?"

அவனது விளையாட்டுக் கேள்வியில் உண்மையில் அவளுக்கு ஆத்திரம் எழ,

"நான் போறேன்..." என்று நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டாள்...

அவள் அருகே வந்தவன், "கோபப்படாம நான் சொல்றதை கேளு..." என்றவன் தனது அறைக்குப் பக்கத்தில் இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்...

ஒற்றைப் படுக்கையுடன் கூடிய ஓய்வறை அது... அங்கேயே குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி என அனைத்தும் இருந்தது...

"நான் விளையாட்டுக்கு சொல்லலை ரக்சி... நீ தினமும் வந்து வேலை பார்த்தாலும் சரி... இல்லை இங்கே வந்து ரெஸ்ட் எடுத்துட்டுப் படம் பார்த்து பொழுது கழிச்சாலும் சரி... என்ன செய்தாலும் சரி... நீ என் கண் பார்வையில் இருக்கணும்... அது தான் எனக்கு வேணும்..."

"நீ வேற ஏதோ ப்ளான் பண்ற...?" என்றாள் கண்களில் யோசனையுடன்...

"நீ இப்படிச் சொல்லும் போது தான் எனக்கு ஏதாவது பண்ணனும்ன்னு போல இருக்கு..." என்றவனின் பார்வை மாறியது...

அவள் பயத்துடன் வெளியேற முயல அதை உணர்ந்தவனாய் அவன் முன் கை நீட்டி தடுத்து நின்றவன்,

"ஒண்ணும் சொல்லாம போற...?"

"என்ன சொல்லணும்...?" தடுமாறியது அவளது பார்வையும், பேச்சும்...

"வேலை பிடிச்சு இருக்கா இல்லையான்னு சொல்லவே இல்லை..." கையைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்தவன் பார்வையில் விசமம் வழிந்தது...

அதைக் கேட்டதும் ஆசுவாசம் அடைந்தவள் நிம்மதி பெருமூச்சு விட்டபடி, "எனக்கு உன் கிட்ட வேலை செய்ய விருப்பம் இல்லை..." மீண்டும் கிளிப்பிள்ளையாய் கூறியவளை கண்டு சலிப்பு வந்தாலும்,

"உன் விருப்பத்தை இங்கே யார் கேட்டது...? இங்கு என் விருப்பமே செல்லும்..." என்றான் அமர்த்தலாய்...

அவனது பேச்சை கண்டு பல்லைக் கடித்தாள் அவள்...

"நீ வேலைக்கு வரல... நான் இதைக் கோர்ட்டுக்குக் கொண்டு போவேன்..."

"கோர்ட், கேஸ் நமக்கு என்ன புதுசா... எங்கே வேணும்ன்னாலும் போ... நான் வேலைக்கு வர மாட்டேன்னா... வர மாட்டேன் தான்..." பிடிவாதம் பிடித்தாள்...

"ஓகோ அப்படியா... நான் துளசி, கோமதி பாட்டி கோர்ட் சொன்னேன்... நீ என்ன நினைச்ச...?" அப்பாவியாய் விழி விரித்துக் கேட்டவனைக் கண்டு கொலை வெறி எழுந்தது அவளுக்கு...

"நான் இங்கே வேலைக்கு வர மாட்டேன்... அங்கே மில்லில் முன்பு செய்த வேலையைச் செய்றேன்..." என்றாள்

சமாதானமாய்...

ஏனெனில் அவனின் அன்னை, அவளின் பாட்டியை பற்றி அவளுக்கு நன்கு தெரியும்...

"தட்ஸ் குட்..." என்று அவளை மெச்சியவன், "என் கிட்ட இருந்து நீ தப்பிச்சிட்டதா ரொம்பச் சந்தோசப்படாதே... இனி என்னோட முழு நேர வேலையும் டெக்ஸ்டைல் மில்லில் தான்..." என்று அவளை அதிர வைத்தான்...

இனி எப்போதும் அவனது நேரடி பார்வையில் அவள் இருக்க வேண்டும் என்பதை அவன் சொல்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு இயலாமையில் கண்கள் தான் கலங்கியது...

"என்னைக் கேவலப்படுத்தும் அசிங்கப்படுத்தும் உன் கிட்டேயே வேலை பார்க்கும் அவல நிலைக்கு என்னைத் தள்ளிட்ட இல்ல... இப்ப உனக்குச் சந்தோசமா...?" நாளிதழில் வந்த செய்தி நினைவில் வந்து அவளைக் கலக்கம் அடைய செய்தது...

அவளது கலக்கம் அவனையும் தாக்கியதோ... அவள் அருகே வந்தவன் அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"இதுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைச்சிரலாமா...?" என்றவனைப் புரியாது பார்த்தாள் அவள்...

"நாம கல்யாணம் பண்ணிக்கிட்டா இந்த வதந்தி எல்லாம் அடிப்பட்டுப் போயிரும்..."

தவறு செய்துவிட்டு அதற்குக் கொஞ்சமும் வருந்தாமல் பேசும் அவனைக் கண்டு அவளது உள்ளம் கொதித்தது...

"இதுக்கு எல்லாம் கலங்குறவளா இருந்தா நான் ஏன் கமிசனர் கிட்ட போய்க் கம்ப்ளையிண்ட் கொடுக்கப் போறேன்...? எப்படியும் நியூஸ் பேப்பரில் போட தான் செய்வான்னு எனக்குத் தெரியாதா என்ன...? என் மனம் இரும்பா மாறி போய் நாளாச்சு... நீ என் வாழ்க்கையை அழிச்சதை தாங்கிட்ட நான் இதைத் தாங்க மாட்டேன்னா...

இதுக்காக எல்லாம் உன்னைக் கல்யாணம் செய்துக்க முடியாது..." படபடவெனப் பொரிந்தவள்,

"நாளையில் இருந்து வேலைக்கு வர்றேன்..." என்று அவனிடம் சொல்லியவள் அவனின் பதிலை எதிர்பாராமல் அறையை விட்டு வெளியேறினாள்...

போகும் அவளைத் தடுத்து நிறுத்த வழியில்லாமல் அவன் நின்று இருந்தான்...

அவனுடைய காதலையும் புரிந்து கொள்ளாமல், அவளுடைய காதலையும் புரிந்து கொள்ளாமல் பேசும் அவளின் மனநிலையை எப்படி மாற்றுவது என்று அவனுக்குத் தெரியவில்லை... அதற்கு அவன் மிகவும் பாடுபட வேண்டும் என்பதை அப்போது அவன் அறிந்து இருக்கவில்லை...

அன்று மாலையே பாரிவேந்தனை சந்தித்துப் பேச முடிவு செய்தான் அக்ஷய்... அவரும் மகளின் வாழ்க்கையை முன்னிட்டு தனது வேலைகளை ஒதுக்கி கொண்டு அவனைச் சந்திக்கத் தயாரானார்...

மதி அவரிடம் அக்ஷய், அபி விசயம் பற்றி எதுவும் சொல்லவில்லை... ஏற்கெனவே அக்ஷய் மீது கோபத்தில் இருக்கும் தந்தையிடம் இதைப் பற்றிச் சொன்னால் மேலும் அவர் அவனிடத்தில் கோபத்தைக் காட்ட கூடும்...

தந்தை கூடுமான மட்டும் அவனிடம் சுமூகமாகப் பேசி தங்களது திருமணத்தை நடத்தி வைத்தால் போதும் என்றே அவள் நினைத்தாள்...

"வணக்கம் சார்..." 'மாமா' என்றழைப்பு போய் அக்ஷயின் சார் என்றழைப்பில் அவரது முகம் சுருங்கியது...

"உட்காரு..." அவர் சொன்னதும் அமர்ந்தவன்,

"சார்... நேரே விசயத்துக்கு வர்றேன்... நான் ஒரு பொண்ணை விரும்பறேன்... அவளை உங்களுக்கு எல்லாம் நல்லா தெரியும்... என் தங்கையோட நாத்தனார் அபி..."

"நீ பேசுறது வேடிக்கையா இருக்கு... கல்யாணம் நிச்சயம் செய்த பெண் கிட்ட வர வேண்டிய காதல் வேற பொண்ணு கிட்ட வந்திருக்குன்னு சொல்ற... இது உனக்கே அசிங்கமா படலை..." தனது மன அருவருப்பை அவனிடத்தில் நேரடியாய் காட்டினார்...

"இல்லை சார்... அசிங்கமா படலை... நான் காதலிக்கிற அளவுக்கு உங்க பொண்ணு இல்லையேன்னு நீங்க தான் தலை குனியணும்... நான் எதுக்கு அசிங்கப்படணும்... எனக்கு மனசுக்கு பிடிச்ச பொண்ணைக் கல்யாணம் பண்ண நான் எதுக்கு அசிங்கப்படணும்...?" அவரது பேச்சில் பணிவாய் பேச வேண்டும் என்று வந்தவனின் எண்ணம் அவரது அகங்கார பேச்சில் மாறிப் போனது...

அவனின் பேச்சில் பாரிவேந்தனுக்கு மிகவும் அவமானமாய்ப் போய் விட்டது...

அபியின் வாழ்க்கையை அவன் பறித்த போதே அதற்காகக் கவலைப்படாதவன் அவன்... இப்போது மதிக்காகவா கவலைப்படப் போகிறான்... அவனும் மதியும் அப்படி ஒன்றும் மனமொத்த காதலர்கள் அல்லவே...

அப்படிப்பட்டவன் அபிக்காக இவ்வளவு இறங்கி வந்ததே அதிசயம் தான்... அதற்குக் காரணம் காதல் என்றால் மிகையில்லை...

"அக்ஷய்... யார் கிட்ட பேசறேன்னு தெரிஞ்சு தான் பேசுறியா...?"

"அது எப்படித் தெரியாம... நல்லாவே தெரியுது... மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கிட்ட தான் பேசறேன்..."

"உன் பொழப்பு என்னை மாதிரி அரசியல்வாதி நம்பி தான் நடக்குது... வீணே என்னைப் பகைச்சிக்கிற வேலை வச்சுக்காதே... ஒழுங்கு மரியாதையா முடிவு பண்ணிய நிச்சயத்தைக் கல்யாணத்துக்குக் கொண்டு போகும் வழியைப் பாரு..."

முதலில் நாளிதழை பார்த்து அக்ஷயை வேண்டாம் என்று முடிவு செய்து இருந்தவர் அவனது திமிரான பேச்சில் வெகுவாய் வெகுண்டு போனார்... சின்னப் பையனிடம் தான் தோற்பதா என்று கோபம் அடைந்தவர் தனது மகளை அவனுக்கு வம்படியாக மணம் செய்விக்க எண்ணினார்... அதன் மூலம் அவனை அடிமைப்படுத்த எண்ணினார்...

"சார்... தப்பா புரிஞ்சிக்கிட்டீங்க... உங்களை மாதிரி அரசியல்வாதிகளை நம்பி நான் இல்லை... என்னை நம்பி தான் உங்களை மாதிரியான ஆளுங்க இருக்கீங்க... உங்க பவர் ஆட்சி மாறினா பறந்து போயிரும்... ஆனா என்னோட பவர் எந்த ஆட்சி மாறினாலும் அதே தான்..." என்று நிமிர்வாய் சொன்னவன்,

"காதல் இல்லாம கல்யாணம் பண்ண முடியாது... என்னோட காதல் என் அபியிடத்தில்... உங்க பொண்ணுக்கு என்னை விட நல்லா பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைங்க... வேணும்ன்னா இன்னைக்கு வந்த நியூசை காரணமா சொல்லிக்கோங்க... எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்...

அவன் போவதை எரிமலை சீற்றத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தார் பாரிவேந்தன்...

அக்ஷயின் பேச்சில் மிகுந்த வேதனை அடைந்த மதி, "டாட்... எனக்கு அக்ஷய் வேணும்... நீங்க என்ன விலை கொடுத்தாலும் சரி அவன் எனக்கு வேணும் டாட்... பிகாஸ் ஐ லவ் ஹிம் சோ மச்..." தந்தையின் தோளில் சாய்ந்து கண்ணீர் வடித்தாள்...

அவளின் காதல் பொய்யில்லையே உண்மையே... மகளின் மனதை உணர்ந்தவராய் அவளின் தலையை ஆதரவாய் வருடி கொடுத்தவர்,

"அக்ஷய் உனக்குத் தான் மதி..." என்று மகளுக்கு ஆறுதல் சொன்னவர் அக்ஷய்க்கான விலையை மனதில் தீர்மானித்தவராய் அடுத்தடுத்து தான் செய்ய வேண்டிய

வேலைகளை வேகமாய் மனதினுள் திட்டமிட ஆரம்பித்தார்...

பூக்கும்...

கடையில் வேலை முடித்து விட்டு இரவு அபி வீட்டிற்கு வரும் போது ஆதர்ஷ், கோமதி பாட்டி, அனி எல்லோரும் அவளுக்காகக் காத்திருந்தனர்... வாசலில் செருப்பைக் கழட்டி வைத்துவிட்டு வீட்டினுள் நுழைந்தவள் அண்ணனை கண்டு ஆச்சிரியமாய்ப் புருவம் உயர்த்தினாள்.

"என்ன அண்ணா அதுக்குள்ள ஹாஸ்பிட்டல்ல இருந்து வந்துட்ட...?"

"ம்..." என்றவன் அன்று வந்த செய்தித்தாளை அவளிடம் நீட்டினான்...

"ம்ப்ச்..." அதை வாங்காமல் சலித்தபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள் அவள்...

"பாரு அபி... நேத்து நீ பண்ணின வேலையால இது நடந்து இருக்கு..." அண்ணனின் குற்றச்சாட்டு கண்டு அவள் விக்கித்து இருக்க...

"இதுக்குத் தான் சொன்னேன்... அக்ஷயை கல்யாணம் பண்ணிக்கோன்னு..." கோமதி பாட்டி தன் பங்குக்கு அவளைச் சத்தம் போட்டவர் இயலாமையில் கண்ணீர் வடித்தார்...

"அண்ணா... நீ இப்படிச் சொல்லுவன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலைண்ணா..." அவளது கண்கள் கலங்கியது...

காலையில் தான் அக்ஷயிடம் போராடி விட்டு வருகிறாள்... இப்போது அண்ணனும் புரிந்து கொள்ளாமல் பேசுவது கண்டு அவளின் மன உறுதி எல்லாம் அவளை விட்டு விலகுவது போல் இருந்தது...

தங்கையின் கலங்கிய கண்கள் ஆதர்ஷை ஏதோ செய்ய அவளின் அருகில் வந்து அமர்ந்தவன், "இங்கே பாரு அபி... இந்தக் காலத்துல தப்பு செய்யாதவங்கன்னு யாரும் கிடையாது... அக்ஷய் உனக்குப் பண்ணியது மிகப் பெரிய

கொடுமை தான் இல்லைன்னு மறுக்கிறதுக்கு இல்லை... ஆனால் அதுக்குக் காரணம் காதல்ன்னு சொல்லும் போது எங்களால ஒண்ணும் செய்ய முடியலை..." இதை ஆதர்ஷ் சொல்லும் போது அபி அவனை வெறித்துப் பார்த்தாள்...

"அவரோட காதல் எங்களுக்கு எல்லாம் புரியுது... நீயும் புரிஞ்சிக்க ட்ரை பண்ணும்மா... அவரே செஞ்ச தப்பை உணர்ந்து மன்னிப்பு கேட்டுட்டார்... அதை விட அவருக்குப் பண்ணிய நிச்சயத்தை நிறுத்திட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சரின்னு சொல்லிட்டார்... இதை விட வேற என்னடா உனக்கு வேணும்...? உன் மேல் அன்பை பொழியற கணவனா அக்ஷய் இருப்பார் அபி..."

"அண்ணா... இந்த மாதிரி கொடுமைக்குக் கல்யாணம் மட்டும் தான் தீர்வா...? அவனைக் கல்யாணம் பண்ணிட்டு தினம் தினம் அந்தக் கொடுமையை என்னை நீ அனுபவிக்கச் சொல்றியா...? என்னால அது முடியாதுண்ணா..." அவனின் தோளில் சாய்ந்து கதறியவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் விழித்தான்...

பாதிக்கப்பட்ட தங்கையின் வாழ்க்கை நேராக வேண்டும் என்று சகோதரனாக யோசித்தானே தவிர அவளின் மனதை பற்றிச் சக மனிதனாய் அவன் சிறிதும் யோசிக்கவில்லை... இப்போது அவளின் கதறல் அவளின் மனவேதனையை அவனுக்கு உணர்த்துவதாய் இருந்தது... அவளின் வலியை புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டோமே என்று குற்றவுணர்வில் தவித்தான் அவன்...

"சரி அபி... உனக்கு எது விருப்பமோ அதைச் செய்... உன்னை நாங்க எதுவும் வற்புறுத்தலை..." அவளின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்து அவன் சொல்ல...

"கடைசி வரை உன் தங்கையாவே நான் இருந்தர்றேன் அண்ணா... நீ என்னை வச்சு காப்பாத்த மாட்டியா...? இல்லை என்னை உனக்குப் பாரமா நினைக்கிறியா...?"

"என்ன அபி இப்படிப் பேசற...? நீ எனக்குப் பாரமா... இல்லவே இல்லை..." என்று அவளைப் பாசத்தோடு அணைத்துக் கொண்டான்...

அபியின் அழுகை சிறிது ஓய்ந்ததும், "அதுக்காக நீ இப்படியே இருக்க முடியுமா அபி...? உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைச்சுக்க வேண்டாமா...? நீ சந்தோசமா உன் கணவன், குழந்தைகள்ன்னு வாழும் போது தானே எங்களுக்கு உண்மையான சந்தோசம் கிடைக்கும்... நீ இப்படி வாழ்க்கையை இழந்து தவிக்கிறதை பார்த்து எங்களால மட்டும் சந்தோசமா இருக்க முடியுமா...? ஆச்சி உன்னை நினைச்சு எவ்வளவு வேதனைப்படுறாங்க பாரும்மா..."
அவளுக்கு என்றும் துணை...

உறுதியுடன் நினைத்தவள் எதுவும் பேசாமல் அமைதியாய் அறைக்குள் செல்ல அவளைக் கண்டு ஆதர்ஷ்க்கு மனதில் வெறுமை எழுந்தது...

தானும் எழுந்து தனது அறைக்கு நுழைந்தான்... சிறிது நேரத்தில் தன் அருகில் வந்து படுத்த அனியை திரும்பி பார்த்தான்... அவளும் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அபியின் பிரச்சினை எழுந்த நாளில் இருந்து அனியை அவனால் சரிவரக் கவனிக்க முடியவில்லை... மனதில் பாரம் இருக்கும் போது மனைவியிடம் சந்தோசமாக இருக்க அவனால் இயலவில்லை...

என்ன இருந்தாலும் அனியும் சிறு பெண் தானே... கை நீட்டி கண்களால் மனைவியை அழைத்தான்... அவன் அழைத்ததும் நாய்க்குட்டியாய் அவனிடம் விரைந்து வந்தவளை கண்டு அவனது கைகள் காதலோடு அணைத்துக் கொண்டது...

"சாரி ஹனி..." என்றவனைப் புரியாமல் ஏறிட்டாள் அனி...

"அபி பிரச்சினை தீரும் வரை..." என்றவனைக் கண்டு புரிந்தது போல் தலையசைத்து புன்னகைத்தவள் மீண்டும் அவனது நெஞ்சில் தலை சாய்த்து படுத்தாள்...

அபியின் பிரச்சினைக்கு நாளையோடு தீர்வு கிடைக்கப் போவது இல்லை... இவ்வளவு ஏன் எப்போது தீர்வு கிடைக்கும் என்று கூட யாருக்கும் தெரியாது... ஆனாலும் கணவனுக்காக அனி அவனின் மனம் உணர்ந்து செயல்பட்டாள்...

முதன் முறையாகக் கணவனின் மனதை உணர்ந்து நடக்கிறாள் என்றால் காதல் பாடத்தில் முதல் அடியை வெற்றிகரமாக எடுத்து வைத்து விட்டாள் என்றே அர்த்தம்... அவளின் புரிந்துணர்வை கண்டு ஆதர்ஷின் மனம் நிறைந்தது...

மறுநாள் காலையில் டெக்ஸ்டைல் மில்லில் வந்து அமர்ந்த அக்ஷய்க்கு மனம் ஒரு நிலையில் இல்லாமல் சந்தோசமும் தவிப்புமும் கலந்து அலைப்பாய்ந்து கொண்டு இருந்தது... அபியை இன்னமும் காணாமல் தவித்தவன் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தான்... அது மணி ஏழரை என்று காட்டியது...

"ம்ப்ச்..." அதில் திருப்தி அடையாதவனாய் தனது அலைப்பேசியை எடுத்துப் பார்த்தான்... அதுவும் அதே நேரத்தை காட்டியது...

'என்னடா இது நேரம் நகரவே மாட்டேங்குது...' சலித்தவன் அங்கிருந்த கோப்பை கையில் எடுத்தான்...

ஆனால் மனம் அதில் நிலைக்காமல் கணினியில் தெரிந்த செக்யூரிட்டி கேமிரா மீது அவனின் கண்கள் நிலைத்தது... செக்யூரிட்டி கேமிரா மூலம் வாயிலில் நடப்பவற்றைக் காண முடியும்... அதன் மூலம் தான் அபியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்...

அவன் வாழ்நாளில் யாருக்காகவும் எதற்காகவும் இப்படிக் காத்துக் கிடந்தது கிடையாது... தவித்து இருந்ததும் கிடையாது... எல்லாம் காதல் என்ற ஒற்றைச் சொல் நிகழ்த்தும் மாயாஜாலம் இது...

அதோ இதோ என்று அவனைக் காக்க வைத்த அவன் காதலி சரியாக 7.55 க்கு மில்லின் வாயிலில் நுழைந்தாள்...

அவளின் நேரம் தவறாமையை மனதுக்குள் பாராட்டியவன் படபடக்கும் இதயத்துடன் அவளுக்காகக் காத்திருந்தான்... அவனுள் எழும் இந்த உணர்வு புதிது... இது தான் காதலா... அவனுக்கு அது தெரியவில்லை... ஆனால் அந்த நேரம் இந்த உணர்வு அவனுக்கு மிக மிகப் பிடித்து இருந்தது...

அவள் அவனது அறைக்குள் நுழைவதை கண்டவன் மனப்படபடப்பை அடக்குவதற்காகக் கையில் இருந்த கோப்பில் கவனமாய் இருப்பது போல் காட்டி கொண்டான்... அவனுக்கே தான் நடந்து கொள்ளும் விதம் சற்று அதிகப்படியாய் தோன்றியதோ என்னமோ...

காதலில் சரணாகதி அடைவது தான் அதற்கான உன்னத நிலை என்று அவனுக்குத் தெரியவில்லை...

அனுமதி கேட்டு உள்ளே நுழைந்தவளை ஏறிட்டு பார்த்தவன் அவளின் புத்துணர்ச்சியான முகத்தைக் கண்டு தானும் முகம் மலர்ந்தான்...

"குட்மார்னிங் சார்..." அவளின் வார்த்தையில் மனம் சுருங்கி போனான்...

"மார்னிங்..." என்றவன் தனது மனச் சுணக்கத்தைக் காட்டாமல் இருப்பதற்காகக் கையில் இருந்த கோப்பில் மீண்டும் கண்களை ஓட்டினான்...

திடுமென ஒலித்த அபியின் சிரிப்பில் அவன் நிமிர்ந்து கேள்வியாய் அவளைப் பார்த்த போதும் அவள் வாய் விட்டு சிரிக்கும் அழகை மனதிற்குள் ரசிக்கத்தான் செய்தான்...

அபி ஒன்றும் பேசாமல் அவனது கையில் தலைகீழாய் பிடித்து இருந்த கோப்பை நேராகத் திருப்பி வைத்து அவனை நமட்டு சிரிப்புடன் பார்த்தாள்...

தனது தவறு புரிந்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல், "இது எனக்கும் தெரியும்... நீ வேலை செய்ற

மனநிலையில் வர்றியா இல்லையான்னு உன்னைச் செக் பண்ணினேன்..." என்று மிடுக்காய் உரைத்தவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"வேலை செய்ய வந்தவள் வேலையைச் செய்யாமல் வேறு என்ன வேலை பார்க்க வந்தேன்னு நினைச்ச...?"

அவளின் கோபத்தில், "ஷ்... அப்பா... காலையில் என்ன ஒரு காரம்...?" என்றபடி அவள் அருகில் வந்தவன் மேசை மீது இருந்த சிவப்பு ரோஜாக்கள் அடங்கிய பூங்கொத்தை எடுத்து அவள் புறம் நீட்டினான்...

"வெல்கம் மை டியர் ரக்ஷி..." புன்னகையுடன் கூறியவன் அதை அவளின் கைகளில் வலுக்கட்டாயமாகத் திணித்தான்... அந்தப் பூக்களை அவனின் முகத்தில் விசிறியடிக்கும் வேகம் அவளுள் எழுந்தது...

ஆனால் அந்த அழகிய பூக்களைக் கண்டதும் அதைச் சிதைக்க மனம் வராமல் அருகில் இருந்த மேசை மீது வைத்தவள் தான் வழக்கமாய்க் கையெழுத்து போடும் வருகை பதிவேட்டில் கையெழுத்திட்டவள் வெளியில் செல்ல எத்தனித்தாள்...

"ஒரு தேங்க்ஸ் கிடையாதா...?" அவளின் கையைப் பற்றித் தடுத்து நிறுத்தியபடி கேட்டவனின் கையில் இருந்து தன் கையை உருவி கொள்ள அவள் முயன்றாள்...

"எதுக்குத் தேங்க்ஸ்...?" என்றவள் தன் முயற்சியைக் கைவிடவில்லை...

அவளது முயற்சி புரிந்தவனாய் அவளது கரத்தை தன் கன்னத்தோடு வைத்தான் அவன்... அதில் திகைத்துப் போய்ப் பார்த்தாள் அவள்... எல்லாம் ஒரு கணம் தான்,

"யாரை ஏமாத்த இப்படி நடிக்கிற...?" சுள்ளென்று அவன் மீது பாய்ந்தாள்...

அவளின் பாய்ச்சலுக்கு எல்லாம் பயந்தால் அது அக்ஷய் அல்லவே...

அவளது உள்ளங்கை சொரசொரப்பை அவனது கன்னங்கள் உணர்ந்தது... திடுக்கிட்டவனாய் அவளது கையை விரித்துப் பார்த்தவன் அதில் இருந்த காய்ப்புகளைக் கண்டு அதிர்ந்து போனான்...

அவளது உழைப்பின் அளவை கண்டு வாயடைத்துப் போனான்... அவனும் உழைக்கின்றான் தான் ஆனால் அவளைப் போல் அல்லவே...

"இது ஏன்... இப்படி...?" கேள்வி கேட்க முடியாமல் திணறினான்...

அவனது திகைப்பில் அவமானத்தில் முகம் கன்ற கையை வெடுக்கென்று இழுத்து கொண்டாள் அவள்...

"நான் என்ன உங்க மதியா கையை லோசன் போட்டு வழுவழுப்பாய் வச்சிக்கிறதுக்கு..."

அவளின் பேச்சில் தன்னைச் சமாளித்துக் கொண்டவன், "ஏன் மதி மட்டும் தான் அப்படி இருக்கணுமா... நீயும் தான் அப்படி இருக்கலாம்..." என்றவன் அவளின் கையைப் பிடித்து மெல்ல வருடி கொடுத்தான்...

அவனது வருடலில் மேனி நடுங்க நின்று இருந்தவளின் நிலை அவளுக்கே புரியாததாய் இருந்தது...

"இந்தக் கையை மெனிக்யூர் பண்ணலாம்..." என்று கை மீது தனது இதழை பதித்தவனைக் கண்டு அவள் அதிர்ச்சியில் சிலையாய் மாறி நின்றாள்...

அவளின் முகத்தைக் கைகளில் தாங்கியவன், "இந்த அழகான முகத்துக்குப் பேசியல் பண்ணி இன்னும் அழகாய் வைக்கலாம்..." அவளது மென்மையான கன்னத்தில் அழுத்தமாய் இதழ் பதித்தவனைக் கண்டு அவளது இமைகள் இரண்டும் சாசர் போல் விரிந்தது...

"உன் அழகுக்கு என்ன குறைச்சல்ன்னு நீ இப்படிச் சொல்ற...?" அவன் சொன்னதும் அவளையும் அறியாமல்

அவளது கண்கள் அங்கு ஒரு பக்கச் சுவரை அடைத்துக் கொண்டு இருந்த கண்ணாடியை பார்த்தது...

அவளது பார்வை சென்ற திசையை அறிந்தவன் அவளோடு சேர்ந்து தானும் கண்ணாடி முன்பு நின்றான்...

அவளது இடையில் கைக் கொடுத்து அவளைத் தன்னருகில் இழுத்தவன் இருவரின் ஜோடி பொருத்தத்தை அதில் பார்த்து ரசித்து,

"மேட் ஃபார் ஈச் அதர்..." என்றவனின் முகத்தில் பெருமை வழிந்தது...

அவனது வார்த்தைகள் உணர்ந்து அவளும் தங்களது பிம்பத்தை அதில் பார்த்தாள்...

சாதாரணத் தோற்றத்துடன் இருக்கும் தன்னுடைய ஏழ்மையும், அலுவலக உடையில் கூடக் கம்பீரமாய்க் காட்சி அளிக்கும் அவனது பணக்காரத்தனமும் ஏணி வைத்தால் கூட எட்டாத உயரம் உடையது என்பது பார்ப்பவர் அனைவருக்கும் புரியும்... அப்படி இருந்தும் அவன் இப்படிச் சொல்வது கேட்டு மனம் குழம்பி போய் நின்றாள்...

அந்த மதியின் அழகில் கால்வாசி அழகு கூட இல்லாத தன்னை ஏன் இவன் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறான் என்று யோசித்தவளுக்கு அவனின் காதல் மனம் கொஞ்சமும் புலப்படவில்லை... மாறாக அவனது நயவஞ்சகமே புலப்பட்டது அவளது கண்ணில்...

அவ்வளவு நேரம் இருந்த மாயவலை அறுந்து விழ அவனிடம் இருந்து விலகினாள்...

"உனக்குப் பைத்தியம் தான் பிடித்து இருக்கு..."

அவளது விலகலுக்கான காரணத்தை அறிந்தவனாய், "ம்... உன் மேல்..." என்றான் புன்னகை மாறாமல்...

"சாத்தான் வேதம் ஓதுது..." என்றவளது வார்த்தையில் வாய்விட்டு சிரித்தவன்,

"இந்தச் சாத்தான் வேதம் ஓதும்..." என்றவன் அவளது கண்களை உற்று நோக்கியபடி,

"ஏன்னா இந்தச் சாத்தான் இந்தத் தேவதையை அல்லவா காதலிக்கிறது..." என்றவனின் வார்த்தையில், பார்வையில் காதலை தவிர வேறு இல்லை...

அதில் திணறி போனவள் தன் மனதை புரிந்து கொள்ளாமலும், அவனது மனதை புரிந்து கொள்ள முயற்சிக்காமலும்,

"நான் என் வேலையைப் பார்க்க போகட்டுமா சார்..." தவிப்புடன் நின்று இருந்தவளை மேலும் தவிக்க வைக்க விரும்பாமல்,

"ம்... போ..." அவன் சொன்னதும் தான் தாமதம் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் விரைந்து வெளியேறினாள்...

'இன்னும் எத்தனை நாளைக்குத் தான் உன் மனதை மூடி மறைக்கிறேன்னு நானும் பார்க்கிறேன்...? கூடிய சீக்கிரம் நீயே என்னைத் தேடி வந்து ஐ லவ் யூன்னு சொல்லலை... இல்ல இல்ல... சொல்ல வைக்கல நான் அக்ஷய் இல்லைடி...'

செல்லும் அவளைக் கண்டவாறு மனதில் சபதம் எடுத்தவனுக்கு அப்போது தெரியவில்லை... அவள் என்றுமே அவனைக் காதலிப்பதை சொல்ல போவது இல்லை என்று... அவளின் காதலை பெற அவன் கடுமையாகப் போராட வேண்டி இருக்கும் என்பது அந்நேரம் அவனுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை...

அதன் பின் வந்த ஒரு மாதம் எந்தவித பிரச்சினையும் இல்லாது கழிந்தது...

கத்தி குத்துப்பட்ட ரஞ்சித் உடல் சற்று தேறி வந்தது... அதை அறிந்த காவல்துறை அவனிடம் விசாரணையைத் தொடங்கியது... அவனது பெற்றோர் எவ்வளவோ தடுத்தும் அவனை விசாரிப்பதை தடுக்க முடியவில்லை...

அனி மீதும், அக்ஷய் மீதும் இருந்த கோபத்தில் ரஞ்சித் எல்லா உண்மைகளையும் அவர்களிடம் போட்டு உடைத்தான்... அதில் தானே குற்றவாளியாக மாறப் போவதை அறியாமல் உளறிக் கொட்டினான்...

ரஞ்சித்தை விசாரித்த காவல்துறையின் பார்வை அடுத்து அனியின் மீது விழுந்தது...

அவளை விசாரிக்க வேண்டும் என்று அழைத்த போது உண்மையில் அவள் பயந்து தான் போனாள்...

"நான் கூட வர்றேன் அனி... நீ பயப்படாதே..." என்ற ஆதர்ஷ் அவளைக் காவல்துறையினர் வர சொல்லியிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான்...

செல்லும் முன் அக்ஷய்க்கும் அழைத்து விசயத்தைச் சொல்லி விட்டே சென்றான்... இந்த மாதிரி காவல்நிலையம் செல்வது என்பது அவனுக்குமே புதுசு...

அவர்கள் சென்ற சில நிமிடங்களில் அக்ஷயும் அங்கே வந்து சேர்ந்தான்...

"இப்போ எதுக்கு என் தங்கையை விசாரிக்கணும்... அவளுக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." அசோக் மரண வழக்கின் காரணமாகத் தான் அனியை விசாரிக்கப் போகிறார்கள் என்று தெரிந்து அக்ஷய் பதட்டம் அடைந்தான்...

அக்ஷயின் பேச்சு ஆதர்ஷ்க்குப் புரியாவிட்டாலும் மனைவியின் பயம் அறிந்து அவள் அருகில் இருந்தான்...

"மிஸ்டர். அக்ஷய்... இது ஜஸ்ட் என்கொயரி தான்... பயப்படும்படி ஒண்ணும் இல்லை... மிஸஸ். அனித்ரா... நீங்க மட்டும் வாங்க..." அந்தப் பெண் அதிகாரி அவளை அழைக்க...

அனியின் மனம் பதற்றம் அடைய கண்கள் கலங்கியது அச்சத்தில்... பயத்தில் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு நின்று இருந்தவளின் நிலை அக்ஷய்க்கு

புரிவதாய் இருந்தாலும் அவளின் அருகில் சென்று ஆறுதல் சொல்ல முயலவில்லை... அந்தளவுக்கு அவள் ஏற்படுத்திய காயம் ரணமாய் இருந்தது...

இதோ இப்போது கூட அவன் போராடுவது யாருக்காக...? அவளுக்காகத் தானே... தன்னைப் புரிந்து கொள்ளாமல் போன தங்கையை மன்னிக்க அவனால் முடியவில்லை...

"அனி... இங்கே பாரு... பயப்படாதே... உனக்குத் தெரிஞ்சதை நீ சொல்லு..." என்று ஆதர்ஷ் மனைவிக்குத் தைரியமூட்டினான்...

"இல்லை... எனக்குப் பயமாயிருக்கு..." அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு சிறு குழந்தையாய் அவனோடு ஒண்டியவளை கண்டு அவனுக்குப் பரிதாபமாய் இருந்தது...

அதனால் அந்த அதிகாரியிடம், "நான் அவளுடைய கணவன் தான்... நானும் உள்ளே வரலாமா...?"

"நீங்க எப்படி...?" அவர் யோசித்தார்...

"எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் இல்லை... அனி பயந்தாலும் அவளுக்குப் பதிலா நானும் சில விசயங்களை உங்களுக்குச் சொல்லலாம் இல்லையா..."

அவனின் கூற்று ஏற்றுக் கொள்வதாய் இருக்க இருவரையும் உள்ள அழைத்துச் சென்றனர்...

"பயப்படாம இரு அனி..." அவளை அணைத்தபடி ஆறுதல் கூறிக் கொண்டு வந்தவனின் அன்பு முதன் முறையாய் அவளின் மனதை தாக்க அவளது கண்களில் கண்ணீர் பொங்கியது...

அவர்கள் வந்தமர்ந்ததும்,

"உங்களுக்கும் ரஞ்சித்துக்கும் என்ன உறவு...?" என்று கேட்ட முதல் கேள்வியிலேயே அரண்டு போனவளாய் அவள் கணவன் முகத்தைப் பார்த்தாள்...

அவனோ புன்சிரிப்புடன் அவளுக்குப் பார்வையால் தைரியமூட்டினான்...

"அவன் என்னோட எக்ஸ் லவ்வர்..." மெல்லிய குரலில் முணுமுணுத்தவளின் வார்த்தையில் அனியின் கரத்தோடு கரம் கோர்த்து இருந்த ஆதர்ஷின் கரம் விலகியது...

"என்னங்க..." அவனது முகத்தைப் பார்த்தவளுக்கு அவனது இறுகிய முகமே விடையாய்க் கிடைத்தது...

அவன் மறந்தும் கூட அவள் புறம் தன் பார்வையைத் திருப்பவில்லை... சற்று முன் அவன் நோக்கிய ஆறுதலான அன்பான பார்வையை அவள் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தாள்...

"சொல்லுங்க அனித்ரா... ரஞ்சித் எப்படிப்பட்டவன்... அவனுடனான உங்க பழக்கம்..."

"அவன் குணம் சரியில்லைன்னு தெரிஞ்சு நான் அவனை விட்டு விலகிட்டேன்..." ஆதர்ஷை பார்த்துக் கொண்டு அவசரமாய்ச் சொன்னவள்,

"இப்போ நான் கல்யாணமாகி நல்ல கணவன், நல்ல குடும்பம்ன்னு நிம்மதியா இருக்கேன்... இப்போ எதுக்கு அவனைப் பத்தி கேட்கறீங்க..." அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"இல்லையே மிஸஸ். அனித்ரா... ரஞ்சித் சொன்ன தகவல் வேறு ஆயிற்றே..." என்றவர் அவளுக்கும் ரஞ்சித்துக்குமான காதல் மற்றும் திருமணத்துக்குப் பின்னும் அது தொடர்ந்த விதம் என எல்லாவற்றையும் சொல்ல அதைக் கேட்க முடியாமல் ஆதர்ஷ் எழுந்துவிட்டான்...

"நான் வெளியில் இருக்கிறேன்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் வெளியில் வந்துவிட்டான்...

அவன் சென்றதும் அனி தாங்க மாட்டாமல் அழ ஆரம்பித்தாள்... அந்த அழுகையின் ஊடே நடந்த எல்லா

விசயத்தையும் கூறினாள்...

இதில் மறந்தும் தனது அண்ணனை காட்டி கொடுக்கவில்லை... தவறு முழுமைக்கும் தான் மட்டுமே காரணம் என்று சொன்னவள் தற்போது ரஞ்சித்தை விட்டு தான் விலகி விட்டதாய் கூறினாள்...

வெளியில் வந்த ஆதர்ஷ் அக்ஷயிடம், "நான் வீட்டுக்கு கிளம்பறேன்... நீங்க உங்க தங்கச்சியைக் கூட்டிட்டு உங்க வீட்டுக்கு போங்க..." என்றவன் அவனின் பதிலை எதிர்பாராமல் சென்றுவிட்டான்...

"ஆதர்ஷ்..." அக்ஷய் அழைத்தும் பதில் இல்லை...

அக்ஷய்க்கு ஆதர்ஷ் பின் செல்வதா இல்லை அனிக்கு காவலாய் நிற்பதா என்று குழம்பி போய் நின்று இருந்தான்...

ஆதர்ஷ் சென்ற விதத்திலேயே அவனுக்கு விசயம் தெரிந்து விட்டது என்று எண்ணிய அக்ஷய்க்கு மனம் ஆயாசம் அடைந்தது... கடைசியில் அவன் பாடுபட்டது எல்லாம் விழலுக்கு இறைத்த நீராய் போய்விட்டதே... மனம் நோக தலையை அழுந்த கோதி கொண்டவன் அங்கிருந்த சுவற்றில் சாய்ந்து கண்களை மூடி கொண்டான்...

விசாரணை முடிந்து வந்த அனியின் கண்கள் கணவனைத் தான் தேடியது... அவளது தேடலை உணர்ந்தவனாய் அக்ஷய் எதுவும் பேசாமல் முன்னே நடந்தான்...

"அண்ணா... அவர் எங்கே...?"

கேள்வி கேட்ட தங்கையை முறைத்து பார்த்தவன் எதுவும் பேசாமல் கார் கதவை திறந்துவிட்டான்... அண்ணனின் கோபம் கண்டு பயந்தவள் சட்டென்று காரில் ஏறி அமர்ந்தாள்...

காரை கிளப்பிய அக்ஷய் தனது பெற்றோருக்கு அழைத்து விசயத்தைக் கூறி அவர்களை அபியின் வீட்டிற்கு வர

சொன்னான்... அப்படியே அபியையும் வர சொன்னான்... அவளிடம் விசயம் என்ன என்று அவன் சொல்லவில்லை...

அக்ஷயின் பேச்சில் இருந்தே கணவனின் கோபத்தை உணர்ந்து கொண்ட அனிக்கு தன் நிலை கண்டு கண்ணீர் வந்தது...

அவர்கள் வீடு இருக்கும் வளாகத்தில் கார் நின்றவுடன் அக்ஷய் பற்றிக் கூட யோசிக்காமல் அனி தங்களது வீடு நோக்கி விரைந்தாள்... தங்கையின் இந்தச் செயலே அவளின் மனநிலையை நன்கு உணர்த்தியது அக்ஷயுக்கு...

இந்தக் குணம் முன்பே இருந்து இருந்தால்...??? விதி விட்ட வழி என்று பெருமூச்சு விட்டவன் அபியின் வீடு நோக்கி நடந்தான்...

"என்னங்க..." தங்களது அறையில் படுக்கையில் படுத்தபடி விட்டத்தை வெறித்துக் கொண்டு இருந்த ஆதர்ஷ் அருகில் வந்த அனி அவனை அழைத்தாள்...

அவள் அழைப்பை உணர்ந்தும் அவன் திரும்பவில்லை...

"நான் பண்ணினது தப்பு தான்... சாரிங்க... ப்ளீஸ் என் கூடப் பேசுங்க..." அவளின் கெஞ்சலில் மனம் தாங்காதவனாய் எழுந்து அமர்ந்தவன் பின் மனதுக்குள் தன்னைக் கடிந்தவனாய் தன்னை நிதானப்படுத்திக் கொண்டவன்,

"அந்த வீடியோ உண்மையா...?" அதில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தவள் வேறுவழியின்றி ஆம் என்பது போல் தலையசைத்தாள்...

"உங்க வீட்டில் எல்லோருக்கும் தெரியுமா...?"

"தெரியும்..."

"ச்சீ... எத்தனை கேவலமான மோசடி இது...? கேவலம் உன்னைப் போல் ஒருத்தியின் தப்பை மறைச்சு எனக்குக் கட்டி வைக்க எப்படி மனசு வந்தது... அவங்களை விடு... உனக்கு எப்படி மனசு வந்தது...?" என்று படபடவெனப் பொரிந்தான்...

தான் ஏமாற்றுப்பட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை... சட்டென்று தன்னை மீட்டு கொண்டவன்,

"இந்தக் கல்யாணம் உன் விருப்பம் இல்லாமலா நடந்தது...?"

"என்னங்க..."

"கேட்டதுக்குப் பதில்..."

"ம்..." என்று தலையாட்டியவளை கண்டு அவனது மனம் வேதனை அடைந்தது...

"எனக்குக் கெட்ட பேர் உண்டாக்கி டிவோர்ஸ் வாங்கிட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருந்தியா...?"

அதற்குப் பதில் கூற முடியாமல் அழுதவளை கண்டு அவன் மனம் இரங்கவில்லை...

"உண்மையான பதில் எனக்கு வேணும்..."

"ம்..." அதற்கும் தலையாட்டியவளை கண்டு அவனது காதல் இதயம் சுக்குநூறாய் உடைந்து சிதறியது...

"அப்போ நீ என் கூட வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் பொய்யா...?" இதைக் கேட்கும் போதே அவனுக்கு அருவருப்பாய் இருந்தது...

அதை விட அடுத்தவன் காதலித்த பெண்ணை, அவன் தொட்ட பெண்ணைத் தான் கூடி தழுவியதை நினைத்து தன் மீதே கோபம் எழுந்தது... கட்டில் முனையில் தன் கையை ஓங்கி குத்தினான்...

அவன் குத்தியதை கண்டு அவள் தான் பதறி போனாள்... "என்னங்க..." என்றவள் அவனது கையைத் தடுக்க...

தீச்சுட்டார் போன்று அவளது கையை உதறி தள்ளியவன், "என் மனசை உடைச்சிட்டு... இப்போ என் கை உடைக்கிறதுக்குக் கவலைப்படுறியா... நீ போடும்

வேசத்தை நம்ப நான் ஒண்ணும் பழைய இளிச்சவாயி ஆதர்ஷ் இல்லை..." என்றான் கோபத்தோடு...

"ஆனாலும் நீ கைக்காரி தான்டி... அவன் சரியில்லைன்னு தெரிஞ்சதும்... என் கூட வாழ்ந்து உன் வாழ்க்கையைக் காப்பாத்திக்கிட்ட பாரு உன் திறமையை என்னால பாராட்டாம இருக்க முடியலை... உன் வாழ்க்கையைக் காப்பாத்திக்க என் காதலை பலகீனமா பயன்படுத்திக்கிட்ட உன் சுயநலத்தை என்ன சொல்றது... ச்சீ... கேவலமான பிறவிடி நீ..."

அவனின் அருவருப்பில், முகம் சுளிப்பில் அவள் உள்ளுக்குள் செத்து போனாள்... கணவனின் உதாசீனம் அவளுக்கு வலித்த போது தான் அவனைத் தான் எந்தளவுக்குக் காதலிக்கிறோம் என்பதை அவள் உணர்ந்தாள்...

"என்னை மன்னிச்சிருங்க..." அவனது காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள்...

அவளது அகம்பவம், திமிர் எல்லாம் அவனின் காதலில் ஏற்கெனவே கரைந்திருக்க மிச்சமாய் மனதில் அவனின் மனைவியாய் மட்டுமே அவள் இருந்தாள்...

அவளைக் கண்டு கொள்ளாது விலகி நின்றவன்,

"என் காதலை, என் நம்பிக்கையை உடைச்ச உன்னை என்னால் மன்னிக்க முடியாது... உன் கேவலமான தப்புகளை மறக்கவும் இயலாது... இந்த ஜென்மத்தில் உன்னை என்னால் ஏற்றுக் கொள்ளவும் முடியாது... நமக்குள் எல்லாம் முடிந்தது... முடிந்தது... நீ போகலாம்... உன் முகத்தில் முழிப்பது கூடப் பாவம்..." என்றவன் குளியலறைக்குச் சென்று முகத்தைக் கழுவி கொண்டு வந்தவன் மருத்துவமனைக்குக் கிளம்பலானான்...

"நான் திரும்ப வீட்டுக்கு வரும் போது நீ இங்கே இருக்கக் கூடாது..." என்றவன் அவள் பேச இடம் கொடுக்காமல் வெளியில் சென்றான்...

அனி பேச வார்த்தை இன்றி மௌனமானாள்... அவள் தரப்பில் நியாயம் இருந்தால் தானே பேச முடியும்... அவனின் பின்னே கண்ணீரோடு சென்றாள்...

அங்கே வரவேற்பறையில் இரு குடும்பத்தினரும் கூடி இருந்தனர்... அக்ஷய் குடும்பத்தினர் பார்வை கலக்கத்துடன் இருவரையும் பார்த்தது... அபியும், பாட்டியும் புரியாது நின்று இருந்தனர்...

கோபிநாத், துளசி, அக்ஷய் மூவர் மீதும் தன் பார்வையைச் சுழற்றிய ஆதர்ஷ், "ஆக மொத்த குடும்பமும் சேர்ந்து தான் என் தலையில் மண்ணை அள்ளி போட்டுட்டீங்க இல்ல..." என்று ஆத்திரத்துடன் கேட்டான்...

"மாப்பிள்ளை... அவள் ஏதோ அறியாம..." கோபிநாத், துளசி மேலும் பேச முயல,

"நிறுத்துங்க..." கையமர்த்தித் தடுத்தவன், "உங்க பையனுக்கு உங்க பொண்ணு மாதிரி ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி வைப்பீங்களா... இல்லை இப்படி மறைச்சுக் கல்யாணம் பண்ணி வச்சது தெரிஞ்சா சும்மா தான் இருப்பீங்களா... இல்லை உங்க பொண்ணு மாதிரி நான் நடந்து இருந்தா என்னைத் தான் சும்மா விட்டு இருப்பீங்களா...?"

ஆதர்ஷின் கேள்வியில் அக்ஷயின் பெற்றோர் தலை தானாகக் கவிழ்ந்தது... அனி கண்ணீரின் தத்துப் பிள்ளையாய் நின்று இருந்தாள்...

அபிக்கு எல்லாம் புரிந்து போனது... அவள் அதிர்ச்சியுடன் அண்ணனையும், அக்ஷயையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"ஆது... என்னாச்சுடா...?" பாட்டி பதறி போய்க் கேட்க...

"இந்த அசிங்கம் எல்லாம் உங்களுக்குத் தெரியாம இருக்கிறது நல்லது ஆச்சி... இது உங்களுக்குத் தெரிய வேணாம்... அவங்க வீட்டுப் பொண்ணைக் கூட்டிட்டுப்

போகச் சொல்லுங்க..." ஆதர்ஷ் பேசியது கேட்டு அனியின் அழுகை கூடி கொண்டு போனது...

தங்கையின் அழுகை கண்டு காண சகிக்காதவனாய் அக்ஷய்,

"இங்கே பாருங்க ஆதர்ஷ்... அனி பண்ணிய தப்பு உண்மை தான்... ஆனா இப்போ அவ திருந்திட்டா... உங்க மேல உயிரையே வச்சிருக்கா... நீங்க இப்படிப் பேசுறது ரொம்பத் தப்பு..." தங்கைக்காக அவன் ஆதர்ஷிடம் பணிந்து பேசினான்...

அனி மட்டும் ஆதர்ஷ் தேவையில்லை என்று வந்து இருந்தால் அவன் ஆதர்ஷை ஒரு வழி பண்ணி இருப்பான்... ஆனால் அவளின் கண்ணீர் அவளின் காதலை பறைச்சாற்ற அதைக் கண்டு அவன் மௌனமானான்...

"எது தப்பு மிஸ்டர். அக்ஷய்...? அண்ணனும், தங்கையுமா சேர்ந்து என் தங்கை வாழ்க்கையும், என் வாழ்க்கையும் அழிச்சது மட்டும் தப்பு இல்லையா... உங்க தங்கை மாதிரி அலையற ஒரு பொண்ணை நீங்க தான் கல்யாணம் பண்ணிப்பீங்களா...? இல்லை அபி அப்படி இருந்தா நீங்க தான் ஏத்துக்கிட்டு இருப்பீங்களா...? உங்களுக்கு ஒரு நியாயம்... எனக்கு ஒரு நியாயமா...?" ஆதர்ஷின் வார்த்தையில் அக்ஷய் அவனது சட்டையைப் பிடித்து விட்டான்...

"என் தங்கச்சியை எப்படிடா நீ பேசலாம்...? ஏதோ தெரியாம தப்பு பண்ணிட்டா... அதை மன்னிச்சு அவ கூட வாழாம... இது என்ன பேச்சு...?" ஆங்காரத்துடன் கேட்டவனைக் கண்டு பதற்றத்துடன் ஆதர்ஷ் அருகில் ஓடி வந்தாள் அபி...

"எங்க அண்ணன் சட்டையை விடு..." அக்ஷயின் கையைப் பிடித்து அவள் விலக்க...

அவளது தொடுகையில் அக்ஷயின் கோபம் சிறிது குறைய அவன் தன் கையைத் தளர்த்தினான்...

"அண்ணா... அண்ணியைப் பாருங்க... எப்படி அழறாங்கன்னு...? தப்பு செஞ்சவங்க திருந்த கூடாதா அண்ணா... அவங்க மன்னிப்பு கேட்கிறப்போ நீ அவங்களை மன்னிச்சு ஏத்துக்கண்ணா..." அவள் ஆதர்ஷிடம் அனிக்காக மன்றாடினாள்...

இப்போதும் அக்ஷய் பிரமிப்பாய் அபியை பார்த்தான்... மனதில் சில்லென்ற ஒரு உணர்வு தாக்குவதைச் சுகமாய் உணர்ந்தான்...

"அப்போ நீ ஏன் அக்ஷயை ஏத்துக்கலை... அவரும் தப்பு செஞ்சிட்டு மன்னிப்பு கேட்டாரே... நீ மன்னிச்சு அவரைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே..." ஆதர்ஷின் கேள்வியில் வாயடைத்து போனாள் அபி...

"உன்னால முடியாதுல்ல.. அதே போல் தான் என்னாலும்... அவ என்னை உயிரோட கொன்னு இருந்தா கூட அவளுக்காக உயிரை கூடக் கொடுத்து இருப்பேன்... ஆனா அவ கொன்னது என் நம்பிக்கையை, என் காதலை... அது செத்து போன பின்னால அவளே எனக்கு அந்நியமா போயிட்டா... அப்படி இருக்கும் போது அவளை நான் எப்படி ஏத்துக்க முடியும்..." என்றவன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு,

"அன்னைக்கு நீ கேட்டியே உன் தங்கையா நான் இருந்தர்றேன்னு... அதே போல் நானும் கேட்கிறேன்... கடைசி வரை உன் அண்ணனா இருந்திர்றேன்... என்னை நீ பார்த்துக்க மாட்டியா அபி..." அண்ணனின் வார்த்தையில் அபி உடைந்து போனவளாய்,

"நிச்சயமாண்ணா..." என்று கேவலுடன் அவனை அணைத்து கொண்டாள்...

அக்ஷய் இருவரையும் இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான்... அவர்களின் பாசம் அவனை நெகிழ்த்தியது...

அபியின் அணைப்பில் இருந்து விலகிய ஆதர்ஷ் அக்ஷயிடம், "இனி உங்க குடும்பத்துக்கும் எங்க

குடும்பத்துக்கும் ஒத்து வராது... தயவுசெஞ்சு உங்க தங்கிச்சியைக் கூட்டிட்டு போயிருங்க... இதுக்கு மேலே இங்கே இருந்து என்னை மிருகமா மாத்தாதீங்க... ப்ளீஸ்..." வேண்டி கேட்டவனைக் கண்டு அவமானத்தில் முகம் கறுத்துப் போனது அக்ஷய்க்கு...

ஆண் மகனாய் அவன் செய்த தவறை சரி செய்ய முனைந்தவனுக்குப் பெண்ணான தங்கையின் தவறை சரி செய்ய முடியவில்லை...

அதற்கு மேல் ஆதர்ஷ் எதுவும் பேசவில்லை... அக்ஷயாலும் எதுவும் பேச இயலவில்லை... அவனின் பெற்றோரால் பிள்ளைகளின் நிலையை எண்ணி வருந்தி கண்ணீர் வடிக்க மட்டுமே முடிந்தது...

அவ்வளவு நேரம் அழுது கொண்டு இருந்த அனி கண்களைத் துடைத்துக் கொண்டு ஆதர்ஷிடம் வந்து,

"என்னைக்காவது ஒரு நாள் நீங்க என்னைப் புரிஞ்சிப்பீங்க எனக்கு நம்பிக்கை இருக்கு... ஏன்னா நீங்க ரொம்ப நல்லவங்க... நான் தான் கெட்டவள்... கெட்டுப் போனவள்... அப்படியே இருந்துட்டு போறேன்... ஆனா சாகிற வரை உங்களை மட்டுமே நெஞ்சில் சுமந்துட்டு சாவேன்... அப்போ என்னைப் புரிஞ்சிப்பீங்க... என் காதலை புரிஞ்சிப்பீங்க..." என்றவளை கண்டு ஆதர்ஷின் உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

அவனை ஒரு நொடி பார்த்திருந்தவள் தனது பெற்றோரை அழைத்துக் கொண்டு வெளியேறினாள்...

அடுத்து அக்ஷயும் வெளியேறினான்... அவனைப் பின் தொடர்ந்து வந்த அபி,

"அண்ணா... ஏதோ கோபத்துல... நான் அவன் கிட்ட பேசறேன்... நீங்க தப்பா ஏதும்..." பதட்டத்துடன் பேசியவள் மனம் அவனுக்குப் புரிந்தது... அவனது மிரட்டலுக்குப் பயந்து தான் அவள் இப்படிப் பயப்படுகிறாள் என்பது புரிந்துவனுக்கு உள்ளம் வலித்தது...

அவள் வாய் மீது கை வைத்து தடுத்தவன்,

"எனக்கு என் தங்கை வாழ்க்கையை விட நீ ரொம்ப ரொம்ப முக்கியம்..." என்றவன்,

"பை ரக்ஷி..." அவளது கன்னம் தட்டி விடைப்பெற்றான்...

அவனது சொல்லிலோ அல்லது செயலிலோ அவள் அசைவற்று மரமாய் நின்றாள்...

ஒரு மாதம் கழித்து அசோக்கின் மரண வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது...

ரஞ்சித்தின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு அக்ஷய்க்கும், விக்டருக்கும் எந்த விதத்தில் தொடர்பு இருக்கும் என்று அலசி ஆராய்ந்து பார்த்தும் காவல்துறையால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை... அதனால் இந்த வழக்கில் இருந்து அக்ஷயை விடுவித்தது... அத்தோடு அனியையும்...

அதே போல் தான் நிஷாவையும்... அவளின் எதிர்காலம் முன்னிட்டு அந்தக் காணொளியை வெளியிடவில்லை... ஆனால் அது தான் முக்கியச் சாட்சியாகக் கருதப்பட்டு ரஞ்சித்தை குற்றவாளியாக அடையாளம் காட்டியது... அது மட்டும் அல்ல மற்ற பெண்களை மிரட்டி எடுத்த காணொளியும் அவனுக்கு எதிராய் திரும்பியது... அதனால் அவனது குற்றம் நிரூபிக்கப்பட்டு அவனுக்கு மூன்று ஆண்டுகள் தண்டனை கொடுக்கப்பட்டது...

விக்டர் மேல் ஆள் கடத்தல் மற்றும் கொலைப்பழி சுமத்தப்பட்டது... அசோக் மருத்துவமனையில் சேர்த்த பின் இறந்தாலும் அதன் பழி விக்டர் மேல் விழுந்தது... அவனுக்கு ஒரு ஆயுள் தண்டனையும், தண்டத் தொகையும் கட்ட சொல்லி நீதிமன்றம் உத்தரவிட்டது...

தீர்ப்பை கேட்டதும் நீதிமன்றத்திலேயே நிஷா மயங்கி விழுந்தாள்...

வழக்கறிஞர் மூலம் அவளை மருத்துவமனையில் சேர்த்தான் அக்ஷய்... எந்த நிலையிலும் தீர்ப்பு வரும் வரை அவன் தனக்கும் விக்டருக்கும் தொடர்பு இருப்பதை வெளியில் காட்ட இயலாது... அதனால் அவன் அங்கு நேர வர முடியவில்லை...

விக்டரிடம் அலைப்பேசியில் பேசியவன், "மேல்முறையீடு பண்ணலாம்... எப்படியும் உனக்கு ஜாமீன் கிடைக்க ஏற்பாடு பண்றேன்... அது வரை நிஷா என் பொறுப்பு..." அவன் சொன்னதைக் கேட்டு விக்டர் நிம்மதியுடன் சிறை சென்றான்...

மயங்கி விழுந்த நிஷா கர்ப்பமாய் இருப்பது தெரிய வந்தது...

"சார்... இவங்களை டெஸ்ட் பண்ணனும்... அதுக்கு நீங்க லேடி டாக்டரை பார்க்கிறது நல்லது... இப்போ அவங்களுக்கு ஓபிடி தான்... நீங்க போய்ப் பாருங்க..." செவிலிப்பெண் கூறியதை அடுத்து நிஷாவை அங்கிருந்த பெண் மருத்துவரை சந்திக்க அழைத்துச் சென்றான் அக்ஷய்...

தன் தங்கைக்காகச் சிறையில் இருக்கும் விக்டருக்காக அவன் மனமுவந்து இதைச் செய்தான்... இதில் அவன் ஈகோ பார்க்கவில்லை... நிஷாவை தன் சொந்த தங்கையாகத் தான் நினைத்தான்...

நிஷாவின் முறை வந்ததும் அவளை அழைத்துக் கொண்டு அவன் மருத்துவர் அறைக்குள் நுழைய அதே நேரம் அபி அந்த அறையில் இருந்து வெளியில் வந்தாள்...

அக்ஷயையும் நிஷாவையும் மாறி மாறி பார்த்தவள் பார்வை இறுதியாக நிஷா தோள் மீது இருந்த அக்ஷயின் கரத்தின் மீது நிலைத்தது... நிஷா பலவீனமாக இருந்ததால் அவன் அவளைத் தாங்கி பிடித்து இருந்தான்...

அதைக் கண்டு அபியின் மனதை சொல்லொண்ணா துயரம் தாக்கியது... அவளது கண்கள் கலங்கியது...

அவளையும் அறியாமல் அவளது வலது கை அவளின் வயிற்றின் மீது அழுந்தப் பதிந்தது...

எதிர்பாராமல் அபியை அங்குக் கண்டவன் முகம் மலர, "ரக்ஷி..." என்றழைக்க...

அவளோ வெறுப்பான பார்வையை அவனுக்குப் பதிலாகக் கொடுத்தவள் அங்கிருந்து வேகமாக வெளியேறினாள்...

பூக்கும்...

அபி பின்னால் செல்ல முடியாமல் நிஷா என்ற கடமை அக்ஷயை தடுத்து நிறுத்தியது...

'வேலை நேரத்தில் இவள் எதற்கு இங்கே வந்தாள்...?' அவன் அபியை பற்றி யோசிக்கும் போதே மருத்துவர் அழைக்க நிஷாவுடன் உள்ளே சென்றான்...

மருத்துவர் அவளைப் பரிசோதிப்பதற்காகத் தனியே அழைத்துச் செல்ல அக்ஷயின் மனம் மீண்டும் அபியிடம் தாவியது...

எதிர்பாராமல் அவளை இங்கே கண்டதும் முதலில் மகிழ்ந்தான் தான்... ஆனால் பிறகு யோசித்துப் பார்க்கும் போது 'அவள் உடம்புக்கு ஏதும்...?' என்ற நினைவு எழுந்து அவனைக் கவலை கொள்ளச் செய்தது...

அந்நேரம் நிஷா பரிசோதனை முடிந்து வந்தாள்...

"நீங்க அவங்க ஹஸ்பெண்ட்டா...?" மருத்துவர் அவனைப் பார்த்து கேட்டார்...

"இல்லை... இல்லை..." பதறி போய் அவசரமாய் மறுத்தவன், "நான் அவளோட அண்ணன்..."

"ஓ..." என்றவர் நிஷாவிடம், "எல்லாம் நார்மலா இருக்கு... இதில் எழுதி இருக்கிற டேப்லேட் தினமும் எடுத்துக்கோங்க... அடுத்தச் செக் அப் டூ மன்த் கழிச்சு வாங்க..."

அவருக்கு நன்றி கூறி விடைப்பெற்று எழுந்த அக்ஷய் பின் ஏதோ நினைத்தவனாய் நின்றவன்,

"எங்களுக்கு முன்னாடி வந்தவங்க எதுக்கு வந்தாங்க...? என்ன பிரச்சினை...?" மருத்துவரிடம் கவலையாய் விசாரித்தான்...

"அதை எதுக்கு நீங்க கேட்கறீங்க...?" அவர் அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தார்...

"அவள் என்னோட மனைவி..." என்றான் கம்பீரமாக...

மஞ்சள் கயிறு கட்டினால் தான் அவள் அவன் மனைவியா... என்று அவன் தன் காதலை உணர்ந்தானோ அன்றில் இருந்து அவளைத் தன் இதயத்தில் அல்லவா சுமக்கிறான்... அவள் அவனோட மனைவி அல்லாமல் வேறு யார்...

"மனைவி..." யோசனையாய் நெற்றியை சுருக்கிய மருத்துவர், "பின்னே ஏன் தனியா வந்தாள்...?" தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார்...

"டாக்டர்... அவளுக்கு என்னாச்சு...? ப்ளீஸ் சொல்லுங்க..." அவனது தவிப்பான வார்த்தையில் அவனது மனம் புரிய...

"ஷி இஸ் பிரக்னெனன்ட்..."

"வாட்...?" முதலில் அதிர்ந்தவன் முகம் பின் மகிழ்ச்சியைத் தத்தெடுத்தது...

"உண்மையாவா டாக்டர்..." அந்தச் செய்தியை இன்னமும் அவனால் நம்ப முடியவில்லை...

"உண்மை தான் மிஸ்டர்..." என்றவர், "தங்கை மீது இருக்கும் அக்கறையை உங்க மனைவி மீதும் கொஞ்சம் காட்டுங்க..." அவர் அவனுக்குக் கடுமையுடன் அறிவுரை கூற...

"நிச்சயமா டாக்டர்..." அவரின் அறிவுரையை ஏற்றுக் கொண்டவன் அவருக்கு நன்றி கூறிவிட்டு நிஷாவுடன் வெளியில் வந்தான்... அவனுக்கு இருந்த சந்தோசமான மனநிலையில் அவர் என்ன திட்டி இருந்தாலும் வாங்கிக் கொண்டு வந்து இருப்பான்...

வெளியில் வந்ததும் முதல் வேலையாக அவனது கைகள் அலைப்பேசியை எடுத்து அபிக்கு அழைத்தது...

அழைப்புப் போய்க் கொண்டு இருந்தது... மறுபுறம் அவள் எடுக்கவில்லை...

"ம்ப்ச்..." சலித்தவாறு அலைப்பேசியை அணைத்துச் சட்டைப் பையில் போட்டு விட்டு நிஷாவிடம் திரும்பி,

"போகலாமா..." என்க..

"ம்..." என்று தலையசைத்தவள், "கங்கிராட்ஸ் அண்ணா..." என்றாள் மனமார...

"தேங்க்ஸ்..." என்றவன் அவளுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி விட்டு வந்து அவளை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான்...

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்... நான் ஆட்டோவில் போய்க்கிறேனே..."

"ஒரு சிரமமும் இல்லை..." என்றவன் காரை ஓட்டினான்...

கண்கள் சாலையில் பதிந்து இருந்தாலும் மனதில் அபியின் நினைவுகளே...

அதிலும் அவனது மகவு அவளது வயிற்றில்... நினைக்கும் போதே வானத்தில் பறப்பது போல் ஒரு உற்சாகம் எழுந்தது அவனுள்... அந்தக் குழந்தை முறை தவறி நடந்ததினால் வந்தது என்ற எண்ணம் சிறிதும் அவனுக்கு வரவே இல்லை... அதனால் தான் செய்த தவறின் அளவை உணராமல் போனான்...

அபி அவன் மனைவி... அந்தக் குழந்தை அவர்களது வாரிசு என்றே நினைத்தான்...

பெண்களை உணராதவன்... பெண்களிடம் அதிக ஆர்வம் காட்டாதவன்... பெண்களை அறிய முற்படாதவன்... அப்படிப்பட்ட அவன் காதல், கல்யாணம், மனைவி, குழந்தை என்று நினைப்பது குறித்து அவனுக்கே சற்று ஆச்சிரியமாக இருந்தது தன்னைக் குறித்து...

அதை விடத் தனக்கு என ஒரு வாரிசு என்ற எண்ணம் தோற்றுவித்த கர்வம், பெருமை உணர்வுகள் எல்லாம் அவன் என்றுமே உணராத ஒரு உணர்வு... தொழிலில் எத்தனையோ வெற்றி பெற்ற போதும் வராத கர்வம் 'எனக்கு ஒரு மகன் பிறக்க போகிறான்...' என்று நினைத்த போது வந்தது.... அதை வாய்விட்டு உலகம் முழுவதும் கேட்க

கத்தி சொல்ல வேண்டும் போல் உத்வேகமும் உற்சாகமும் அவனுள் எழுந்தது...

மனதின் உற்சாகம் முகத்தில் பிரதிபலிக்க அமர்ந்து இருந்தவனைக் கண்ட நிஷா, "ரொம்பச் சந்தோசமா இருக்கீங்களா...?"

அவளின் கேள்வியில் திரும்பி பார்த்து புன்னகைத்தவன், "ம்... ரொம்ப... ரொம்ப..." புன்முறுவல் மாறாமல் சொன்னவனைக் கண்டு நிஷாவுக்கு அவளையும் அறியாமல் விக்டர் நியாபகம் வந்தது...

இப்போது அவன் தன் அருகில் இருந்து இருந்தால் இது போல் தான் சந்தோசப்பட்டு இருப்பான்...

"என்ன நிஷா... முகம் ஏன் சரியில்லை...?" அவளின் முகமாறுதலை கவனித்தவனாய் கேட்டான் அக்ஷய்...

"விக்டர் நியாபகம்..." மனதை மறைக்காமல் எடுத்து உரைத்தாள்...

அவளைக் கண்டு பாவமாக இருந்தது அவனுக்கு... எந்தப் பெண்ணும் இந்த மாதிரி நேரத்தில் கட்டிய கணவனின் துணையைத் தேடுவார்கள்... அவளின் மனநிலை அவனுக்குப் புரிவதாய்...

"கூடிய சீக்கிரம் விக்டரை ஜாமீனில் எடுக்கப் பார்க்கிறேன்...." என்றவன், "சாரி நிஷா..." என்றான் உண்மையான வருத்தத்துடன்...

அவனது மன்னிப்பை ஏற்றுக் கொள்வது போல் தலையசைத்தவள் பின் வெளியில் வேடிக்கை பார்த்தாள்...

அவளின் மௌனம் உணர்ந்து அவனும் எதுவும் பேசவில்லை... அவனின் மனது மீண்டும் அபியிடம் சென்றது...

'நிஷா விக்டரை தேடுவது போல் ரக்ஷியும் என்னைத் தேடுவாளா...?' என்ற நினைவு எழுந்ததும் உடனே அவளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது...

நிஷாவை வீட்டில் இறக்கி விட்டவன் அபியை காண அவளது வீட்டிற்குச் சென்றான்... எப்படியும் அவள் அங்குத் தான் இருப்பாள் என்று நினைவில் அங்குச் சென்றான்...

ஆனால் அங்கு அவள் இல்லை... கோமதி பாட்டி மட்டுமே இருந்தார்...

அவரிடம் எதையோ சொல்லி சமாளித்து வெளியில் வந்தவன், 'எங்கே போயிருப்பாள்...?' என்று யோசித்தான்...

அவளது வீடு, கடை, மில் இது தான் அவன் நியாபகத்தில் வந்தது... அவளைப் பற்றி அவனுக்குமே முழுதாய்த் தெரியாது... அவளது அலைப்பேசிக்கு முயன்றான் அது எடுக்கப்படவில்லை...

'குழந்தை உண்டாகி இருப்பதை அவமானமாகக் கருதி ஏதேனும் தவறான முடிவுக்குப் போய்விட்டாளா...?' அதை நினைத்ததும் அவனுக்கு மனம் பதறியது...

அவளைத் தேடி புறப்பட்டான் தனது மில்லுக்கும், அவளது கடைக்கும்...

'ம்ப்ச்... இவனுக்கு வேற வேலையில்லை...' அக்ஷயின் அழைப்பை துண்டித்த அபி அருகில் இருந்த தூணில் சாய்ந்தாள் மனதின் பாரம் தாங்க முடியாமல்...

அந்த மதிய வேளையில் கோவில் பிரகாரம் சற்று அமைதியுடன் காணப்பட அது அவளை அமைதியாய் சிந்திக்க உதவியது...

இப்போது ஒரு வார காலமாக அவளுள் நிகழும் மாற்றங்கள் அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது... 'ஒருவேளை குழந்தையாக இருக்குமோ...' என்ற சந்தேகம் எழுந்தது... தன்னில் நிகழும் மாற்றத்தை உணராமல் இருக்க அவள் ஒன்றும் பதின் வயது பருவப்பெண் அல்லவே...

அவளுக்கு இருந்த கவலையில் இத்தனை நாளாய் தன் உடல் உபாதை கூட மறந்து போனாள்... அதில் விளைந்த

குழப்பம் தான் இது...

'ஹைய்யோ... இதை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்...?' என்று பிரம்மை பிடித்துச் சிறிது நேரம் அமர்ந்துவிட்டாள்...

அவரவர் குழந்தை வரம் வேண்டி வருடக்கணக்கில் கோவில் கோவிலாகச் சுற்றுகின்றனர்... ஆனால் தனக்கு நேர்ந்த ஒரு நாள் உறவில் இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று அவளுக்குக் குழப்பமாகவும் இருந்தது... அதே சமயம் அச்சமாகவும் இருந்தது...

எதிர்காலம் இல்லாமல் இருக்கும் தனக்கு இந்தக் குழந்தை எதிர்காலத்தைக் கொடுக்கப் போகிறதா... இல்லை அதை அழிக்கப் போகிறதா...?

திருமணம் ஆகாமல் குழந்தையைச் சுமந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்...? அத்தோடு இந்தக் குழந்தையும் அல்லவா பழிச்சொல் ஏற்க நேரிடும்...

'பணம் படைத்த அவன் செய்த தவறுக்கு இந்தக் குழந்தையும், நானும் சிலுவை சுமப்பதா...?' கலங்கியவளுக்கு எதுவும் ஓடவில்லை...

எதற்கும் மருத்துவரை பார்த்து வரலாம் என்று எண்ணித்தான் அவள் மருத்துவமனைக்கு வந்தது...

அங்கு அவளைப் பரிசோதிக்கும் போது இரண்டு மாதங்களுக்கு மேலானதால் ஸ்கேன் செய்து குழந்தையின் ஆரோக்கியத்தைப் பார்த்தார் மருத்துவர்...

கணினி திரையில் எதையும் காண முடியவில்லை என்றாலும் குழந்தையின் இதயத்துடிப்பை அவளால் கேட்க முடிந்தது... அந்நேரம் அவளுள் ஏதோ ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது...

'இது என் குழந்தை...' என்று முதல் முறையாய் அதன் மீது ஒரு சொந்தம் வந்தது...

அவளையும் அறியாமல் அவளது கண்கள் கணினி திரையின் மீது படிந்தது... அதில் சிறிய வட்டமாய்த் தெரிந்த

கறுப்பு சதைக் கோளத்தை உற்று நோக்கினாள்...

அவளையும் மீறி மனம் படபடத்தது...

'அவனைப் போல் செக்கச்செவேல் என்று சிவப்பாய் இருக்குமா... இல்லை என்னைப் போல் மாநிறமாய் இருக்குமா...? அவனைப் போல் ஆறடியில் கம்பீரமாய் அழகாய் போல் இருக்குமா... இல்லை என்னைப் போல் நோஞ்சானாய் அழகற்று இருக்குமா...?' நினைக்கும் போதே கண்களில் கண்ணீர் வழிந்தது...

'இந்தக் குழந்தை மட்டும் முறையோடு வந்து இருந்தால்...? இந்நேரம் அவன் என் அருகில் ஆதரவாய் நின்று இருக்க மாட்டானா...?' என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை... அவளின் காதல் கொண்ட மனம் அவளையும் அறியாமல் அதை நினைத்தது...

மருத்துவப் பரிசோதனை முடிந்து வெளியில் வரும் வரை அவளது மனம் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவிக்கத் தான் செய்தது... இந்தக் குழந்தை அவமானச் சின்னமா அல்லது அரிய வரமா என்று மனதில் ஒரு குழப்பம் இருக்கத்தான் செய்தது...

வெளியில் அக்ஷயை வேறு ஒரு பெண்ணுடன் பார்த்த போது அவள் மனதுக்குள் செத்து தான் போனாள்...

'இவன் திருந்தவே மாட்டானா...? பெரிய நல்லவன் போல் என்னிடம் வேசம் போட்டது எல்லாம் பொய்யா...?' அவள் மனதில் இன்னமும் அந்தக் கண்ணியமான அக்ஷய் உயிர் வாழ்ந்து கொண்டு தான் இருந்தான்...

அதற்கும் அக்ஷய் இறுதி யாத்திரை செய்துவிட்டான் தன் நடவடிக்கையால்...

அதிலும் அந்தப் பெண்ணின் தோளை உரிமையுடன் பற்றி அவன் நின்று இருந்த விதம் அவளின் மனதை கலக்கமுற செய்தது...

அவன் தோள் சாய அவள் தவித்துக் கொண்டு இருக்கும் போது அவன் வேறு ஒரு பெண்ணிற்குத் தன் தோள் தந்து ஆதரவு அளிப்பதை கண்டு அவளுக்கு அவன் மேல் எல்லையில்லா வெறுப்பு எழுந்தது...

'ச்சீ... போயும் போயும் இவனின் உருவத்தையா என் குழந்தைக்குக் கற்பனை பண்ணினேன்...' அந்தக் கற்பனையே கசப்பாக இருக்க அவளையும் அறியாமல் அவளது கை வயிற்றை அழுத்த... அவன் மீது பார்வையால் வெறுப்பை உமிழ்ந்துவிட்டு வந்துவிட்டாள்... அதற்கு மேல் அங்கு நின்று அந்தக் கண்றாவி காட்சியைப் பார்த்து சகிக்க அவளால் முடியாது...

"இந்த வயசில என்னம்மா சோகம்...?" அந்தக் குரலில் நினைவலை அறுந்து விழ நிமிர்ந்தவள் தன் முன் அமர்ந்து இருந்த அந்த வயதான அம்மாளை கண்டு புன்னகை செய்ய முயன்றாள்... அந்தோ பரிதாபம் அவளால் முடியவில்லை...

"இருட்டுற நேரமாச்சு... எழுந்து வீட்டுக்கு போம்மா... காலம் கெட்டு இருக்கு..." அவர் சொன்னதும் தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது...

இருள் கவிழ்ந்த இரவை கண்டு பதறிப் போய் எழுந்தாள்... மதிய வேளை இங்கு வந்து அமர்ந்தது... தன் யோசனையில் மூழ்கி இருந்தவள் நேரம் விரைந்து சென்றதை அறியவில்லை... சுற்றிலும் நடப்பதை கூட உணராமல் யோசனையில் மூழ்கி இருந்ததை உணர்ந்தவளுக்கு வெட்கமாய்ப் போயிற்று...

வேகமாய் எழுந்ததில் லேசாகத் தலைச்சுற்ற அருகில் இருந்த தூணைப் பற்றிக் கொண்டு சமாளித்தவள் வெளியில் வந்து பேருந்து ஏறி வீடு வந்து சேர்ந்தாள்...

அங்கே அவளுக்காக அக்ஷய், ஆதர்ஷ் இருவரும் காத்து இருந்தனர்...

"அபி... இவ்வளவு நேரம் எங்கேடா போன...?" ஆதர்ஷ் அவள் அருகில் வருவதற்குள்...

"ரக்ஷி... எங்கேடி போன...?" பரிதவிப்புடன் கேட்ட அக்ஷய் அடுத்த நொடி அவளை இறுக்கமாய் அணைத்து இருந்தான்...

எத்தனை மணி நேர தவிப்பு இது... அவளைக் காணவில்லை என்றதும் பயந்து போய்த் தெரு தெருவாய் அலைந்து திரிந்தவனின் தவிப்பை அவன் மட்டுமே உணர்வான்...

அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் தான் உயிரோடு இருப்பதில் அர்த்தம் இல்லை என்று நினைத்தவனுக்கு அவள் தன் மனதில் எந்தளவுக்கு ஆழமாய்ப் பதிந்து இருக்கிறாள் என்று அப்போது தான் புரிந்தது...

பல மணி நேர தேடலுக்குப் பின் அவளைக் காணாது தோற்று போனவனின் மனநிலை வாழ்க்கையில் தோற்று போனவனின் விரக்தி மனநிலையில் இருந்தது...

'என்னைத் தவிக்க விட்டுட்டு எங்கேடி போன...?' மனம் கலங்கி நின்றான்...

அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாமல் ஆதர்ஷ்க்கு அழைத்தவன் அபி கர்ப்பமாய் இருக்கும் விசயத்தைக் கூறி அவளைக் காணவில்லை என்பதையும் கூறினான்...

மீண்டும் அபியின் வீடு வந்த போது ஆதர்ஷ் அங்கு இருந்தான்... அவனும் தனக்குத் தெரிந்த அபி வழக்கமாய்ச் செல்லும் இடங்களில் எல்லாம் தேடி களைத்து போய் வீடு திரும்பி இருந்தான்...

ஆதர்ஷ் இருந்த மனநிலையில் அக்ஷயை வரவேற்கவும் முடியவில்லை... அவனிடம் சண்டை போடவும் முடியவில்லை...

இப்போது அக்ஷயின் காதல் மனதை உணர்ந்தவனாய் ஒன்றும் பேச இயலாதவனாய் அவன் நின்று இருந்தான்...

"ச்சு... என்னை விடு..." அபி அக்ஷயின் அணைப்பில் நெளிந்தவள் அவனின் அணைப்பில் இருந்து விடுபட முயன்றாள்...

"உன்னைக் காணாம தவிச்சு போயிட்டேன்டி..." விலகியவளின் தோள் பற்றி அவளது கண்களைப் பார்த்து சொன்னவனின் கண்கள் கலங்கி இருந்தது...

அவனை உறுத்து விழித்தவள் ஒன்றும் பேசாது அறையை நோக்கி நடந்தாள்...

அவள் பின்னே செல்ல முயன்றவனை ஆதர்ஷ் தடுத்து நிறுத்தினான்...

"அவளைத் தொந்திரவு செய்யாதீங்க..."

"ஆதர்ஷ்... நான் அவ கிட்ட பேசியே ஆகணும்..."

"இல்லை அது சரி வராது..." என்று ஆதர்ஷ் தடுக்க... அதில் எரிச்சல் அடைந்த அக்ஷய்,

"நீ யார் அதைச் சொல்றதுக்கு...? என் மனைவி கூட நான் பேசுவதுக்கு நீ யார் பெர்மிசன் கொடுப்பதற்கு...?" என்று அவனைத் தள்ளிவிட்டு செல்ல...

"அக்ஷய்..." ஆதர்ஷ் கோபமாய்க் கத்திய போது,

"ஆது விடுப்பா... அவங்க ரெண்டு பேரும் பேசி முடிவு எடுக்கட்டும்..." பாட்டி அவனைத் தடுத்துவிட்டார்...

அபியின் பின்னால் அறைக்குள் சென்ற அக்ஷய் அறைக் கதவை தாளிட்டான்... சத்தம் கேட்டு திரும்பி பார்த்தவள் கண்களில் அச்சம் இல்லை... மாறாக வெறுமை இருந்தது...

"ரக்ஷி..." என்று அவளை அழைத்தவன் மீண்டும் அவளை அணைத்து இருந்தான்...

இன்னமும் அவனின் மனத்தவிப்பு அடங்கவில்லை... அவள் அசையாது கல் போல் உணர்வற்று நின்று இருந்தாள்... அதை அவன் உணரவில்லை...

மெல்ல மெல்ல அவனது தவிப்பு அடங்கியதும், "என் கிட்ட சொல்லவே இல்லையே ரக்ஷி..." என்றவனின் கை அவளைத் தழுவி இருந்த புடவையின் முந்தானையை விலக்கி அவளின் வெறும் வயிற்றில் படர்ந்தது...

உணர்வற்ற கல்லாய் நின்று இருந்தவள் அவனின் தொடுகையில் மேனி சிலிர்க்க அவனை விட்டு விலகினாள்...

அவளின் விலகலை உணராதவனாய் அவளின் முகத்தைக் கையில் தாங்கி, "தேங்க்ஸ்டா... நான் ரொம்ப ரொம்பச் சந்தோசமா இருக்கேன்..." என்றவன் அவளது முகத்தில் முத்தப்பூக்களால் அர்ச்சனை செய்தான்...

அதில் அவள் தான் மூச்சு திணறி போய் நின்று இருந்தாள்...

கடமை தவறாத கணவனாய் அவன் அவளைக் கொஞ்சி கொண்டு இருந்தான்...

"என்னோட மகன் உன் வயிற்றில் நினைக்கும் போதே ஜிவ்வுன்னு வானத்தில் பறக்கிற மாதிரி சந்தோசமா இருக்கு ரக்ஷி..." என்றபடி அவளது முகவடிவை விரல்களால் அளந்தவன்,

"நீயே இன்னும் பேபி மாதிரி தான் இருக்க... உனக்கு ஒரு பேபி வர போகுதா..." என்று சொல்லி சிரித்தவன்,

"ஐ லவ் யூ சோ மச் ரக்ஷி பேபி..." என்றான் காதலாக...

அவனின் அந்த வார்த்தையில், "ச்சீ..." என்று அவனைப் பிடித்துத் தள்ளினாள்...

"பேபியாம் பேபி... நீ என் கற்பை சூறையாடும் போது இந்த நியாபகம் எங்கே போயிருந்தது...? இப்போ வந்து பேபின்னு உருகுற... ச்சீ... உனக்கு வெட்கமா இல்லை..." வெறுப்புடன் கத்தியவளை கண்டு கோபப்பட்டால் அது அக்ஷய் இல்லையே...

"இதுக்கு எதுக்கு வெட்கப்படணும்...?" என்று சொன்னவன் அவளின் காதோரமாய்ச் சென்று, "அன்னைக்குத் தான் நீ

பேபின்னு எனக்குத் தெரிஞ்சது... இல்லைன்னா எனக்குத் தெரிஞ்சு இருக்காது..." என்றான் விசமக் குரலில்...

"ச்சீ..." அருவருப்புடன் காதுகளைப் பொத்தி கொண்டாள் அவள்...

"சரி போனதை எல்லாம் மறந்து விடு... இப்பவாவது சொல்லு பேபி..." அவனது பேபி என்றழைப்பில் முறைத்தவளை கண்டு கண்சிமிட்டியவன்,

"இப்போ நமக்குக்குன்னு குழந்தை கூட வரப் போகுது... இப்பவாவது நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?" என்றான் தன்மையான குரலில்...

"கல்யாணமா...? அது எதுக்கு உனக்கு...?" நிஷாவுடன் அவனைச் சேர்த்து பார்த்த எரிச்சலில் பதிலுரைத்தாள்...

"எல்லாரும் எதுக்குக் கல்யாணம் பண்ணுவாங்க...? எல்லாம் அதுக்குத் தான்..." மீண்டும் கண்சிமிட்டியவனை எரித்துவிடுவது போல் பார்த்தவள்,

"அது தான் உனக்குத் தாராளமாய்க் கிடைக்குதே... அப்புறம் எதுக்குக் கல்யாணம்ங்கிற வேலி...?"

"என்ன சொல்ற புரியலை...?" அவளது வார்த்தையில் அவனது குரல் மாறி ஒலித்தது... முன்பு இருந்த இதம் அதில் இல்லை...

"ஏன் புரியாது உனக்கு...? உனக்குத் தான் எல்லாமே ஈசியா கிடைக்குதே... அதான் ஹாஸ்பிட்டல்ல பார்த்தேனே..."

அதில் அவனது விழிகள் கூர்மை அடைந்தது...

"அவளை மாதிரி எத்தனை பேரோ... இதில் நான் வேறு உனக்கு எதுக்கு...?" அவள் சொல்லி முடிக்கும் முன்,

"ஏய்..." என்று தன் கையை ஓங்கி இருந்தான்...

அவனுக்கு வந்த கோபத்தில் அவளை அடித்து இருப்பான்... ஆனால் அவளின் நிலையை அறிந்து அடக்கி

கொண்டான்...

"தேவையில்லாம அடுத்தவங்களைப் பத்தி தப்பா பேசாதே..."

அவனது வார்த்தையில் அவளையும் அறியாது உள்ளம் வலித்தது...

"ஓ... அப்ப சரி... உன்னைப் பத்தி பேசலாமா...?" அவளது எகத்தாளத்தில் அவனது சினம் தான் அதிகரித்தது...

"என்னைப் பத்தி என்ன தெரியும்ன்னு நீ இப்படிப் பேசுற...?"

"உன்னைப் பத்தி என்ன தெரியாது...? நேரத்துக்கு நேரம் மலருக்கு மலர் தாவும் வண்டு நீன்னு எனக்கு நல்லாவே தெரியும்...?"

தன்னிடம் இல்லாத ஒரு குணத்தை அவள் சுட்டி காட்டி பேசியது அவனது தன்மானத்தைச் சீண்டி விட்டது...

"அதான் தெரிஞ்சிருச்சு இல்ல... இப்ப என்ன பண்றதா உத்தேசம்...? வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கப் போறதா ஐடியா இருக்கா...?" அவளின் மனதை அறிந்தவனாய், அவளின் வயிற்றில் தன் மகவு இருக்கும் தைரியத்தில் திமிராய் வினவினான்...

"இதுக்கான பதிலை நான் ஏற்கெனவே உன் கிட்ட சொன்னதா நியாபகம்...?"

அவள் கூறிய நாளின் நியாபகத்தில் அவனது முகம் கறுத்தது அவமானத்தில்...

"ஏன் இல்லாம நல்லாவே நியாபகம் இருக்கு...?" நக்கலாய் பதில் சொன்னவன்,

"என் மகனை என்ன செய்யப் போற...?" என்றான் கர்வமாய்... பெண்ணின் தாய்மை குணத்தை அறிந்தவனாய்...

அவனை ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவள் அவன் கண்ணில் தெரிந்த கர்வத்தில் அவளது தன்மானம் தட்டி எழுப்பப்பட...

"கருவிலேயே அழிச்சிருவேன்..." அடுத்த நொடி அவளது குரல்வளை அவனது கைகளில் சிக்கித் தவித்தது...

"கொன்னுருவேன்டி... அப்படி ஒரு முடிவு மட்டும் நீ எடுத்து பாரு அடுத்த நொடி நீ உயிரோட இருக்க மாட்ட... உன் கிட்ட கெஞ்சிட்டு இருந்தா என்னை என்ன கேனையன், கையாலாகாதவன்னு நினைச்சிட்டியா...? அன்னைக்கு உன் பெர்மிசன் இல்லாம உன்னை ரேப் பண்ணின அதே பொறுக்கி அக்ஷய் இன்னமும் உள்ளுக்குள் இருந்துட்டு தான் இருக்கான்... வீணா அவனைத் தட்டி எழுப்பாதே..." அவன் குரல் ஆக்ரோசத்துடன் ஒலித்தது...

அவள் தொண்டைக் குழியில் இருந்து 'ஹக்' என்று எழுந்த சத்தத்தில் அவனது கைகள் தளர்ந்தது...

"ஏண்டி என்னைக் கொலைக்காரனா மாத்துற...?"

வலித்த தொண்டை பகுதியை தடவி கொடுத்தவள், "என் சந்தோசத்தைக் கொன்ன நீ கொலைக்காரன் இல்லாம வேறு யார்...?" வெறுப்புடன் வந்தது அவளது வார்த்தைகள்...

அவளது நிலை பரிதாபத்தைத் தர அவள் அருகில் வந்தவன், "என்னைப் புரிஞ்சிக்கவே மாட்டியா பேபி..."

"உன்னைத் தானே... ரொம்ப நல்லாவே புரிஞ்சு வச்சிருக்கேன்..." என்று கேலியாய் கூறியவள்,

"இன்னைக்குக் கூட்டிட்டு வந்தியே அவளை எதுக்கு அங்கே கூட்டிட்டு வந்த... அபார்சனுக்கா...? இல்லை உன் குழந்தை நல்லா இருக்கான்னு பார்க்க செக்கப்புக்கு கூட்டிட்டு வந்தியா..." அவளது வார்த்தையில் அவனது பொறுமை காற்றில் பறந்தது...

ஓங்கி விட்டான் ஒரு அறை அவளது கன்னத்தில்...

"நானும் பார்த்துட்டே இருக்கேன்... எப்பப்பாரு அவளையே பேசிட்டு இருக்க...? தேவையில்லாம அவளைப் பேசுற வேலை வச்சுக்காதே..." ஆள் காட்டி விரலை ஆட்டி எச்சரித்தவனின் அடியோ, மிரட்டலோ அவளுக்கு வலிக்கவில்லை...

யாரோ ஒருத்திக்காகத் தன்னை நோக அடிக்கும் அவனின் செயல் தான் அவளுக்கு வலித்தது...

"அவளைச் சொன்னா உனக்கு ஏன் கோபம் வருது...? ஓ... அந்தளவுக்கு அவ உனக்கு முக்கியமா போயிட்டாளா...? அப்படின்னா போ அவள் கிட்டேயே போய் உனக்கு வாரிசு கேளு... பெத்து கொடுப்பா..." கோபத்தில் இரைந்தவள்,

"என்னமோ இது ஒண்ணு தான் உனக்கு வாரிசு மாதிரி என்னை ஏன் கொடுமைப் படுத்துற...? என் முகத்துல முழிக்காதே... இங்கிருந்து போ... போடா..." அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு ஆவேசமாய்க் கத்தியவளை கண்டு புரியாமல் ஒரு நொடி விழித்தவன் மறு நொடி முகம் மலர அவளைப் பார்த்தான்...

'கடைசியில் இதுக்குத் தான் உனது கோபமா...? அட முட்டாள் பொண்டாட்டியே... உன்னைத் தவிர வேறு யாரையும் தொட்டது இல்லை... இனி தொடப் போறதும் இல்லை... நீ மட்டும் தான்டி எனக்கான பெண்...' மனதில் காதலாய் நினைத்தவன் புன்னகையுடன் அவளைப் பார்த்து இருந்தான்...

அவனது அத்தனை நேர டென்சன் குறைய நிம்மதி அடைந்தவனாய் நின்றிருந்தான்...

அவளது ஆவேசத்தில் அவளது முகத்தில் வந்து விழுந்த முடிக்கற்றையை நிதானமாய் ஒதுக்கியவன், "என் மகனை பெத்து கொடுக்க நீ இருக்கும் போது வேறு ஒரு பொண்ணு எனக்கு எதுக்கு...?" சின்னச் சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவளது கோபம் கூடி கொண்டு போனது...

"நிச்சயம் உன் வாரிசை நான் பெத்து கொடுக்க மாட்டேன்... அதை அழிக்கத் தான் போறேன்..."

"நிச்சயம் அது உன்னால் முடியாது..." என்றான் உறுதியாய்...

"பார்க்கலாமா...?" என்றாள் சவால் விடுவது போல்...

"எதில் எல்லாம் சவால் விடுறதுன்னு ஒரு வரைமுறை இல்லையா பேபி... இது உன்னால் முடியாது... உன் மனசில் உள்ள என் மீதான காதல் அதுக்கு ஒத்துக்காது..." என்றான் அவளது காதல் கொடுத்த நிமிர்வில்...

"நான் உன்னைக் காதலிக்கலை... காதலிக்கலை... திரும்பத் திரும்ப எத்தனை தடவை சொல்றது..."

"திரும்பத் திரும்பச் சொல்றதால பொய் உண்மையாகி விடாது... உன் மனசில் நான் இருக்கேன்... அதனால் உன்னால் என் வாரிசை அழிக்க முடியாது..." என்றவன்,

"முடிஞ்சா ட்ரை பண்ணி பாரு..." என்றான் கூலாக...

தனக்குப் புலப்படாத காதல் அவனுக்கு மட்டும் எப்படிப் புலப்படுகிறது என்று தெரியாமல் அவள் விழித்து நின்றாள்...

"உடம்பை கவனமா பார்த்துக்கோ என்ன... நான் வர்றேன் பேபி..." என்று நகர்ந்தவன் கதவின் தாளை நீக்கும் சமயம் மீண்டும் அவளை நோக்கி வந்தான்...

அவள் எதிர்பாரா நேரத்தில் அவளை இறுக்கி அணைத்தவன் அவளது காதோரமாய், "எனக்குக் குழந்தைன்னு ஒண்ணு வந்தா அது உன் மூலமா மட்டும் தான் வரணும்... என் குழந்தைக்கு அம்மான்னு ஒருத்தி இருந்தா அது நீ மட்டும் தான்..." கிசுகிசுப்பாய் சொல்லியவன் அதன் அர்த்தம் அவளுக்குப் புரியும் முன்னே அவளை விட்டு விலகி வேகமாய் வெளியேறினான்...

அவனது வார்த்தையில் இருந்த அர்த்தத்தை உணராமல் அவன் மீது இருந்த கோபத்தை இழுத்து பிடித்த அபி மறுநாள் தனது கருவை கருவறுக்க நாள் குறித்தாள்… அது தங்களது காதலையும் சேர்த்துக் கருவறுக்கப் போவதை அவள் அறியவில்லை…

அதில் அவனது காதல் மனம் காயப்படப் போவதையும் அவள் அறிந்து இருக்கவில்லை…

அந்தக் காயம் கொடுத்த ரண வேதனையில் அவன் மனம் பழையபடி இரும்பாய் மாறப் போவதையும் அவள் அறியவில்லை…

ஆனால் அவள் இது வரை அறியாத, உணராத காதலை இனி மேல் தான் உணரப் போகிறாள்… அறியப் போகிறாள்…

பூக்கும்…

அக்ஷய் சென்றதும் உடலும், மனமும் தளர அபி அப்படியே மடங்கித் தரையில் அமர்ந்தாள்... அவனிடம் போராடி போராடி மிகவும் மோசமாய் அவள் தோற்றுப் போய்க் கொண்டு இருப்பதை உணர்ந்து அவளது கண்களில் கண்ணீர் பெருகியது...

ஆரம்பத்தில் இருந்து இன்று வரை அவன் தன்னிடம் நடந்து கொண்டதை நினைத்து பார்த்தவளுக்கு வேதனையும், வலியும் மட்டுமே எஞ்சி இருந்தது... அவனுடன் நடக்க இருந்த திருமணத்தைத் தன் உயிர் கொடுத்து நிறுத்தியவளால் அவளின் உயிரில் உதித்த அவனின் உயிரை என்ன செய்வது என்று தெரியவில்லை...

அதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை... அதே சமயம் அதை உதறி தள்ளவும் முடியவில்லை... முழங்காலில் முகம் புதைத்து மௌனமாய் அழுகையில் கரைந்தாள்...

ஆதர்ஷும், பாட்டியும் உள்ளே வந்தனர்... ஆளுக்கொரு பக்கமாய் அவளின் இரு புறமும் அமர்ந்தவர்களின் வேதனை அவளின் கண்ணீரை கண்டு இன்னமும் அதிகமானது...

"அபி கண்ணு... அழாதேம்மா..." கோமதி பாட்டி அவளின் தலையை வருடி ஆறுதல் படுத்த அவ்வளவு தான் அபி அவரின் மடியில் முகம் புதைத்து,

"ஆச்சி..." என்று கதறிவிட்டாள்...

அவளின் கதறல் அவள் மீது அன்பு கொண்ட அந்த இரு ஜீவன்களையும் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்தது...

"ஏன் ஆச்சி எனக்கு மட்டும் இப்படி எல்லாம் நடக்குது...? நான் யாருக்கு எந்தக் கெடுதலும் பண்ணலையே..." அழுதவளின் வேதனை அவர்களுக்கும் புரிந்தது... ஆனால் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அவர்கள் இருந்தனர்...

அமைதியாய் யோசித்த ஆதர்ஷ் ஒரு முடிவு எடுத்தவனாய் தங்கையிடம், "அபி நான் என்ன சொன்னாலும் கேட்பியா...?"

"ம்..." அழுகையுடனே தலையாட்டியவளிடம்,

"இந்தக் குழந்தை உனக்கு வேண்டாம் அபி..." என்றவனை இரு பெண்களும் அதிர்ச்சியாய் பார்த்தனர்...

மென்மையே உருவான ஆதர்ஷிடம் இருந்து இத்தகைய வார்த்தையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை...

அக்ஷயிடம் அதே வார்த்தையைச் சொன்ன அபி இப்போது அண்ணனின் வார்த்தையில் அதிர்ந்து போனாள்... அக்ஷயை எதிர்த்து பேச வேண்டும் என்று வேண்டும் என்றே பேசிய அபியால் இப்போது இதை ஜீரணிக்க முடியவில்லை...

அவளின் உயிரை அவளே அழிப்பதா... கண்களில் கரகரவெனக் கண்ணீர் வழிய சகோதரனை பரிதாபமாய்ப் பார்த்தாள்...

"ஆது நீ பேசறது சரியில்லை... எந்தப் பாவமும் அறியாத ஒரு பிஞ்சை கருவிலேயே அழிக்க நினைக்கிறது பாவம்ப்பா... உயிரை காப்பாத்துற ஒரு டாக்டரான நீ இப்படிப் பேசலாமா...?" பாட்டியின் குரலில் ஆதங்கமும், வருத்தமும் கலந்து இருந்தது...

"ஆச்சி... புரிஞ்சிக்காம பேசாதீங்க... நீங்க குழந்தையைப் பார்க்கிறீங்க... ஆனா நான் என் தங்கையான குழந்தையைப் பார்க்கிறேன்... அந்தக் குழந்தை பிறந்தா அபி என்ன என்ன அவமானத்தைத் தாங்கணும் தெரியுமா... அதை விடத் தகப்பன் இல்லாம அந்தக் குழந்தை வளரும்... அது அதை விடக் கொடுமை... சரி அதை எல்லாம் விடுங்க... நாளைக்கே அபி இதை மறந்துட்டு வேறு வாழ்க்கைக்குத் தயாராகும் போது இந்தக் குழந்தை அதுக்கு இடைஞ்சலா இருக்காதா...? எப்படிப் பார்த்தாலும் இந்தக் குழந்தையால்

அபிக்குத் துன்பம் தானே தவிர நிச்சயம் சந்தோசம் இல்லை..."

வேறு வாழ்க்கையா என்று நினைத்த அபியின் மனம் உலக வாழ்க்கையையே வெறுத்து இருந்தது...

"இதுக்கு அபி அக்ஷயை கல்யாணம் பண்ணிக்கலாமே..." பாட்டி சொன்னதும்...

"ஆச்சி..." அபியின் தழுதழுத்த குரலில் பாட்டி வாயை மூடி கொண்டார்...

"கல்யாண விசயத்தில் அபி சொல்றதுல நியாயம் இருக்கு ஆச்சி... அவள் முடிவு சரி தான்..."

"இப்படி இருந்தா எப்படிப்பா... அபி இறங்கி வந்தால் தானே நல்லது..." என்ற பாட்டிக்கு எப்படிப் புரிய வைப்பது என்று ஆதர்ஷ்க்கு தெரியவில்லை...

"ஆச்சி... அக்ஷய் கொஞ்ச நாள் பார்ப்பான்... அதுக்கு அப்புறம் அவன் வேற கல்யாணம் பண்ணிப்பான்... அதுக்கு அப்புறம் நம்ம அபியோட வாழ்க்கை...? நான் எப்பவுமே அபியை மட்டும் தான் யோசிப்பேன்..." என்றவன் தங்கையிடம்,

"அபி... இதில் உன் முடிவு தான் இறுதி முடிவு... உனக்குக் குழந்தையைப் பெத்துக்க விருப்பம்ன்னாலும் உனக்குத் துணையா நான் இருப்பேன்... அதே சமயம் வேண்டாம்ன்னு நினைச்சாலும் அதுக்கும் நான் உனக்குத் துணையா தான் இருப்பேன்..."

ஆதர்ஷின் வேறு எந்த வார்த்தையும் அவள் காதில் விழவில்லை... 'அக்ஷய் வேறு கல்யாணம் பண்ணிப்பான்' அது மட்டுமே அவள் காதில் விழுந்தது...

'ஆமாம் அவனுக்குக் கல்யாணம் ஒண்ணு தான் கேடு... அது பண்ணாமலே கூத்தடிக்க அவனுக்கா தெரியாது...' கோபமாய் அவளது மனம் நினைத்தது...

"சரி அண்ணா..." என்றவளை கேள்வியாய் பார்த்தவனைக் கண்டு,

"நா... நான்... இதை அபார்சன் பண்ண சம்மதிக்கிறேன்..." அவளின் வார்த்தையில் ஒரு நொடி அமைதியாய் இருந்தவன் பின் அவளின் தலையை வருடி,

"காலையில் வெறும் வயத்தோட ரெடியா இரு..." என்றவனுக்கும் துயரமாகத் தான் இருந்தது... எழுந்து வெளியில் சென்றுவிட்டான்...

"அபி... வேணாம் கண்ணு... ஒரு உயிரை பறிப்பது பாவம்..." கோமதி பாட்டி அழ...

அபியின் மனதிலும் அக்ஷய் மீதான கோபத்தையும் மீறி ஏதோ ஒரு உணர்வு தாக்கியது... அது என்ன என்று அவள் உணரவில்லை... அதை விட அதைப் பற்றி யோசிக்கவில்லை அவள்...

கள்ளிச்செடியில் பூத்த பூ போல் அவனது காதல் அவனது கரடுமுரடான முள் போன்ற குணத்தைத் தாண்டி அவளைப் பெரியதாய் ஈர்க்கவில்லை... செடியில் உள்ள முள்ளையும் தாண்டி அந்தப் பூவின் அழகு அவளை ஈர்க்கும் போது அவள் அவனை ஏற்றுக் கொள்வாள்...

வீட்டிற்கு வந்த அக்ஷய் உற்சாகத்தோடு அன்னையைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்... மகனின் இந்தச் செயல் துளசிக்கு அதிசயமாய் இருக்க,

"என்ன அக்ஷய் ரொம்பச் சந்தோசமா இருக்கிற மாதிரி இருக்கு...?"

"எஸ் மாம்... எனக்கு மகன் பிறக்க போகிறான்..." என்றான் விரிந்த புன்னகையுடன்...

"அக்ஷய்..." வியப்புடன் மகனை பார்த்தவர், "உண்மையாவா அக்ஷய்..."

"பிராமிசா மாம்..."

"ரொம்பச் சந்தோசமா இருக்குப்பா... உடனே அபி வீட்டில் பேசி கல்யாணத்துக்கு நாள் பார்க்கலாம்... இதுக்கு மேல தள்ளிப் போட்டா நல்லா இருக்காது..."

அன்னையின் வார்த்தையில் அவனது முகம் கூம்பி போனது...

"அவ கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேங்கிறா மாம்..."

அங்கிருந்த கோபிநாத் அதைக் கேட்டதும் கோபம் அடைந்தார்...

"ஆனாலும் அந்தப் பொண்ணுக்கு இவ்வளவு அழுத்தம் ஆகாதுடா... எல்லாத்துக்கும் உன்னைச் சொல்லணும்... நீ ரொம்பத் தாங்கறதால தான் அவள் இப்படி ஏறி மிதிக்கிறா... உலகத்திலேயே அவள் மட்டும் தான் பொண்ணா... பேசாம நீ அந்த மதியை கல்யாணம் பண்ணிட்டு உன் வாழ்க்கைய வாழ பாரு..."

தந்தையின் பேச்சில் அக்ஷயின் கண்கள் கோபத்தில் சிவந்தது...

"மாம்... இவரைப் பேசாம இருக்கச் சொல்லுங்க... என் வாழ்க்கையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... நான் யாரை கல்யாணம் பண்ணனும்ன்னு நான் தான் முடிவு பண்ணனும்... இவர் இல்லை..."

மகனை தொழிலில் தனித்து முடிவு எடுக்க விட்டு பழக்கிய தன் முட்டாள்த்தனத்தை இப்போது எண்ணி மனம் நொந்து போனார் கோபிநாத்...

"விடு அக்ஷய்... உன் விருப்பம் தான் நடக்கும்... எனக்கு அபியை பார்க்கணும் போலிருக்கு... நாளைக்குக் கூட்டிட்டு போறியா...?" துளசி ஆசையாய் கேட்டதும் அவனையும் அறியாது அவனது கண்கள் அனியின் பக்கம் சென்றது...

வழக்கம் போல் அமைதியாய் நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவளின் நிலை அவனுக்குப் பரிதாபமாய் இருந்தது...

அனியிடம் எப்போதும் இருக்கும் துள்ளல், சிரிப்பு, உற்சாகம் எல்லாம் போய் எதையோ பறி கொடுத்தார் போன்று எந்நேரமும் மௌனத்தைக் கடைப்பிடிக்கும் அவளது நிலை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது...

அண்ணன், தங்கை இருவரும் செய்த தவறு வாழ்க்கை முழுமையும் துரத்தும் போலும்...

அவனையும் அறியாது ஒரு பெருமூச்சு எழுந்தது... "கூட்டிட்டு போறேன் மாம்..." என்றான்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... கோமதி பாட்டி தான் அபியின் முடிவு அறிந்து மனது கேட்காமல் அவனுக்கு அழைத்து விசயத்தைச் சொல்லி விட்டார்...

விசயம் கேள்விப்பட்டதும் அவனது முகம் ரௌத்திரத்தை தத்தெடுத்தது...

வெளியில் செல்ல போனவனைத் தடுத்த துளசி, "என்ன அக்ஷய்... முகம் ஒரு மாதிரியா இருக்கு..."

"என்... என் குழந்தையை அபார்ட் பண்ண போறாளாம்..." சொல்லும் போதே அவனது விழிகள் கலங்கியது...

"கடவுளே..." அதிர்ந்து போய் நெஞ்சில் கை வைத்தார் துளசி...

"நான் தான் சொன்னேன்ல..." கோபிநாத் சொல்ல அவரை முறைத்த துளசி,

"அக்ஷய்... நானும் உன் கூட வர்றேன்... அபி கிட்ட நான் பேசறேன்..." என்று அவரும் மகனுடன் கிளம்பினார்...

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு இருந்த அனி தனது அறைக்குச் சென்றாள்... அங்கிருந்த கண்ணாடி முன் நின்றவளின் கை அவளையும் அறியாது அவளது வயிற்றைத் தடவி பார்த்தது...

அவள் உதட்டில் விரக்தி புன்னகை எழுந்தது... பின் மெல்ல அந்தப் புன்னகை மறைந்து அழுகை எட்டி பார்த்தது...

கணவன் தன்னிடம் அன்பாய் இருந்த அந்தத் தருணங்களை நினைத்துப் பார்த்தது அவளது மனம்... இதோ இப்போது துக்கப்படும் போது கூட அவனது தோள் சாயத்தானே அவளது மனம் ஆசைப்படுகிறது...

உடலின் தேடலை மீறிய உள்ளத்தின் தேடலை அவள் உணர்ந்தாள்... காதல் என்றால் என்ன என்பது இப்போது அவளுக்குப் புரிந்தது...

அதை அவளுக்கு உணர்த்தியவனின் அருகாமையை நினைத்துக் கண்ணீர் வடித்தது அவளது கண்கள்...

தான் மரணிப்பதற்குள் என்றாவது ஒரு நாள் தன்னவனைத் தான் சேருவோமா... இல்லை அதுவும் கானல் நீராய் போய்விடுமா? மனதில் எண்ணம் அலைப்பாயப் படுக்கையில் சாய்ந்தாள்...

தூக்கம் வரவில்லை ஆனால் துயிலத் தான் வேண்டும்... பசிக்க எழவில்லை ஆனால் உண்டு தான் ஆக வேண்டும்... வாழ விருப்பமில்லை ஆனால் வாழ்ந்து தான் ஆக வேண்டும்... ஆம் அவள் வாழ்ந்து தான் ஆக வேண்டும்...

என்றாவது ஒரு நாள் கணவன் தன்னைத் தேடி வருவான் என்று நம்பினாள்... அப்படி வரவில்லை என்றாலும் அவனை நினைத்துக் கொண்டு தன் மீதி வாழ்நாளை கழிக்க முடிவு செய்தாள்... அதுவும் அவனது வாழ்நாள் இருக்கும் வரை மட்டுமே... அதன் பின் உயிர் வாழ அவளுக்குமே விருப்பம் இல்லை...

படுக்க ஆயத்தமான ஆதர்ஷ் வீட்டின் அழைப்பு மணி சத்தத்தில் 'இந்த நேரத்தில் யாராக இருக்கும்...?' என்று யோசித்தபடி கதவை திறந்தான்...

அங்கே கோபத்தில் அக்ஷயும், தவிப்புடன் துளசியும் நின்று இருப்பதைக் கண்டவன் அவர்களை வரவேற்க தோன்றாமல் அப்படியே நின்றான்...

"எங்கே உன் தங்கச்சி...?" உறுமலுடன் கேட்டான் அக்ஷய்...

அவனுக்கு இருக்கும் கோபத்தில் அபியை கண்டால் கண்டந் துண்டமாய் வெட்டி போட்டு விடுவான்...

"அவ தூங்கிட்டா..."

"ஓ... என் நிம்மதியை கெடுத்துட்டு அவ நிம்மதியா தூங்குறாளா...?"

"யாருங்க யாரு நிம்மதியை கெடுத்தது... நீங்க அண்ணனும், தங்கையும் தான் சேர்ந்து எங்க நிம்மதியை கெடுக்கறீங்க..." வெறுப்புடன் சொன்ன ஆதர்ஷை கொலைவெறியுடன் பார்த்தான்...

"நாங்களாவது உங்க நிம்மதியை தான் கெடுத்தோம்... ஆனா நீங்க ரெண்டு பேரும் எங்களை உயிரோட இல்ல கொல்லுறீங்க..." என்றவன்,

"எவ்வளவு தைரியம் இருந்தா என் குழந்தையை அழிக்க உன் தங்கிச்சியைக் கூட்டிட்டு போக நினைப்ப...? என்னை மீறி நீ எப்படி அவளைக் கூட்டிட்டு போறன்னு நானும் பார்க்கிறேன்..." கோபத்தில் ஆதர்ஷின் சட்டையைப் பிடித்து இருந்தான்...

"அக்ஷய்... வேண்டாம் விடு..." துளசி மகனிடம் கெஞ்சினார்...

அதற்குள் உள்ளே இருந்து வந்த கோமதி அம்மாள் அவர்களைக் கண்டதும், "துளசி வாம்மா... ஆது அவங்களை உள்ளே விடு..." பேரனை அதட்டினார்...

"எதுக்கு ஆச்சி... திரும்ப அபியை குழப்புறதுக்கா...?"

"நான் தான் அவங்களை வர சொன்னேன்..." பாட்டி சொன்னதும் ஆதர்ஷ் தன்னையும் அறியாது விலகி வழி விட்டான்...

"ஆச்சி... என்ன பண்றீங்க...?"

பேரனுக்குப் பதில் சொல்லாமல் அவர் துளசியிடம் வந்து, "என் பேத்தி வயித்தில் வளர்றது உங்க வீட்டு வாரிசு...

ஏதாவது செஞ்சு அதைக் காப்பாத்திக்கோ..." என்றவரிடம் கண்ணீர் மல்க தலையை ஆட்டினார் துளசி...

"அவ எங்கே...?" என்று கேட்ட அக்ஷய்க்கு இன்னமும் கோபம் குறையவில்லை...

"ரூமுல இருக்கா..." பாட்டி சொன்னதும் அக்ஷய் அங்கு விரைந்தான்...

மகனின் கோபம் அறிந்தவராய் துளசியும் அவன் பின்னே செல்ல ஆதர்ஷும், பாட்டியும் உடன் சென்றனர்...

இன்னமும் உறங்காமல் அழுகையில் கரைந்து கொண்டு இருந்தவளை கண்டு அவனுக்கு இரக்கம் வரவில்லை...

மாறாக ஆத்திரத்துடன் அவளது முடியை கொத்தாக பற்றி அவளை எழுப்பி உட்கார வைத்தவன், "உன் மனசுல என்னடி நினைச்சுட்டு இருக்க...? நான் அத்தனை தூரமும் சொல்லியும் நீ குழந்தையை அழிக்கத் துணிஞ்சிட்டியே..." அவன் கர்ஜித்த கர்ஜனையில் அபி சர்வாங்கமும் ஒடுங்கி போய் அமர்ந்து இருந்தாள்...

மகனின் முரட்டுத்தனத்தில் துளசி பதறி போய், "அக்ஷய்... அவளை விடு..." அவனது கைகளை அபியிடத்தில் இருந்து பிரித்து எடுத்தவர் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டார்...

"அபி என்னம்மா இது...? நீ கன்சீவான விசயம் கேள்விப்பட்டு எவ்வளவு சந்தோசத்தோட வந்தேன்... ஆனா நீ... ஏன்ம்மா இப்படி...? அக்ஷய் மேல எவ்வளவு கோபம் இருந்தாலும், ஒரு உயிரை கொல்லுறது பாவமில்லையா..."

"நல்லா சொல்லுங்க மாம்... இதுல அவ என்னைக் கொலைக்காரன்னு சொல்றா... நானாவது அவ சந்தோசத்தைத் தான் கொன்னேன்... ஆனா அவ என் குழந்தையை, ஒரு உயிரை கொல்ல தயாரா இருக்கா..." என்று அன்னையிடம் சொன்னவன் அபியின் முகத்தைப் பற்றி,

"உன் சந்தோசத்தைக் கொன்னுட்டேன்னு சொல்றியே... என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ... நீ வாழ்நாளில் அனுபவித்திராத சந்தோசத்தை நான் அள்ளி அள்ளி உனக்குத் தர்றேன்... ஆனா... ஆனா... உன்னால என் குழந்தையின் உயிரை திருப்பித் தர முடியுமாடி... இதுக்கு அப்புறம் எத்தனை குழந்தை வந்தாலும் என் முதல் உயிர் போல் வருமா... சொல்லுடி எனக்குப் பதில் சொல்லுடி..." கடைசி வரி சொல்லும் போது அவனையும் அறியாது அவனது நா தழுதழுத்தது...

அவனின் கேள்விக்கு அபியிடத்தில் இருந்து அழுகை தான் பதிலாக வந்தது...

"உன் கிட்ட அத்தனை தடவை படிச்சு படிச்சு சொல்லிட்டு போயும் நீ நினைச்சதை செய்யத்தான் நினைக்கிற... உனக்கு என்ன தான்டி பிரச்சினை... செய்த தப்பை சரி செய்யக் கல்யாணம் பண்ணிக்கலாம் வான்னு கூப்பிடுறேன் அதுக்கும் வர மாட்டேங்கிற... நான் என்ன தான் பண்ணனும் உனக்கு..." எரிச்சலுடன் மொழிந்தவன்,

"உனக்கு எல்லாம் ஏமாத்திட்டு போறவனா வந்து வாய்ச்சு இருக்கணும்... அப்போ உனக்குப் புரிஞ்சி இருக்கும் என்னோட அருமை... என்னை மாதிரி பணக்கார பசங்க கிட்ட போய்க் கேட்டு பாரு... உன்னை மாதிரி ஆயிரம் பொண்ணுங்க கூடப் பழகிட்டு கையைக் கழுவிட்டு போயிட்டே இருப்பாங்க... ஆனா நான் அந்த மாதிரி பண்ணாம உன் கிட்ட வாழ்க்கை கேட்டு கெஞ்சிட்டு இருக்கேன்ல அதான் உனக்கு என்னோட அன்பு புரியலை... புரிஞ்சு இருந்தா இப்படி நடக்க நினைக்க மாட்ட..."

மனதில் உள்ளதை படபடவெனக் கொட்டியவன், "நான் சொன்னது எதுவும் உனக்குப் புரியலையா இல்லை புரியாத மாதிரி நடிக்கிறியா... எனக்குக் கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா அது உன் கூட மட்டும் தான்... என் மனைவின்னு ஒருத்தி வந்தா அது நீ மட்டும் தான்... எனக்குக் குழந்தைன்னு ஒண்ணு வருமானால் அது உன் மூலமா தான் வரணும்..."

ஆதர்ஷ் அக்ஷயின் காதலை பிரமிப்புடன் பார்த்து இருந்தான்...

"அதையும் நீ அழிச்சிட்டேன்னா..." என்ற அக்ஷய் நிறுத்தி அவள் முகத்தைப் பார்த்து,

"என் வாழ்க்கையில் குழந்தை என்ற ஒன்று கிடையாது... எனக்கு என்று வாரிசு இல்லை... என் குடும்பத்துக்கும் வாரிசு இல்லை..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

அவளோ அதை உணராது, "பொய் சொல்லாதே..." என்றாள் கேவலுடன்...

அதற்கு மேல் அக்ஷயாலும் விளக்கம் கொடுக்க முடியாமல் ஆயாசத்துடன் அவளை விட்டு விலகினான்...

"அபி இங்கே பாரும்மா... அக்ஷயை பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவன் பொய் சொல்ல மாட்டான்... அவன் தன்னோட தப்பு உணர்ந்துட்டான்... அவனைத் தண்டிக்கிறதா நினைச்சு எங்க குடும்பத்துக்கு வாரிசு இல்லாம பண்ணிடாதேம்மா..." துளசி அவளை அணைத்துக் கொண்டு அழுதார்...

"அத்தை..." அவரின் தோள் சாய்ந்து உடைந்தாள் அபி...

"இந்த அத்தைக்காக அவனை மன்னிக்கக் கூடாதாம்மா... உன் மனசுல அப்படி என்ன தான் இருக்கு அபி... இந்த அத்தைக் கிட்ட சொல்ல கூடாதா...?" அவரின் அழுகை அந்த நிலையிலும் அவள் மனதை சுட்டது...

இரு ஆண்களிடம் சொல்லாத தன் மனதை, பாட்டியிடம் வயது காரணமாக மறைத்து வைத்த தனது துக்கத்தைத் தாயை போல் அன்பு காட்டிய அந்த அன்னையிடம் சொல்லத் துவங்கினாள்...

"அவர் பண்ணிய தப்பு ஒண்ணா ரெண்டா அத்தை... நான் மன்னிக்கிறது... அவரைப் பார்த்த நாளில் இருந்து இன்று வரை என் சந்தோசம் போச்சு... என் நிம்மதி போச்சு... நான் பேசுறது, செய்றது எல்லாமே அவர் திமிரா நினைச்சு

இருக்கலாம்... ஆனா நான் அதை என்னோட தன்மானமா தான் நினைச்சேன்... அந்தத் தன்மானத்தை அவர் தினம் தினம் நசுக்கினார்... அதை எல்லாம் கூடப் பொறுத்துக்கலாம்... ஆனா... ஆனா... அவர்..."

அன்றைய நாளின் தாக்கத்தில் அவளுக்கு அழுகை பொங்கியது... அவளது அழுகை கண்டு அக்ஷயின் முகம் இறுகியது...

"ஒரு பொண்ணு மேல எவ்வளவு கோபம் வேணும்ன்னாலும் இருக்கட்டும் அதுக்காக அவளோட கற்பை பறிப்பது நியாயம் ஆகுமா...? நீங்களே சொல்லுங்க அத்தை... செய்ற தப்பு எல்லாம் செஞ்சிட்டு நான் உன்னைக் காதலிக்கிறேன்... நான் செஞ்ச தப்பை எல்லாம் மன்னிச்சிரு... மறந்திருன்னு சொன்னா எப்படி அத்தை மறக்கிறது... ஆரம்பத்தில் இருந்து அவரைப் பத்தி எனக்கு நல்ல எண்ணம் கிடையாது... அந்த மாதிரி தான் அவர் என் கிட்ட நடந்துக்கிட்டார்... அப்படிப்பட்டவர் இப்போ வந்து காதலிக்கிறேன்னு சொன்னா... அது எப்படி உண்மைன்னு நான் நம்பறது...? இப்பவும் எதுக்காக இதைச் சொல்றார், நடிக்கிறார்ன்னு என் மனசு என் கிட்ட கேள்வி கேட்குது... இதுக்கு மேல என் கிட்ட நடிச்சு ஏமாத்துறதுக்கு ஒண்ணும் இல்லை... இப்போ நான் எதுக்குமே உதவாத பெண்..." சொல்லும் போதே அவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

"ஏற்கெனவே நடந்த பிரச்சினையில் என் பெயர் பேப்பர் வரை வந்து நாறி போச்சு... தெருவுல நடந்து போக முடியலை ரொம்ப அசிங்கப்படறேன்... இதுல இப்போ இந்தக் குழந்தை வேற... இதை நான் சுமந்து பெத்தா எல்லோரும் என்னை வேசியா தான் பார்ப்பாங்க... இப்பவாவது தப்பா பார்த்தாலும் அதில் கொஞ்சம் இரக்கம் கலந்து இருக்கு... இந்தக் குழந்தை பிறந்தா நிச்சயம் என் கேரக்டர் மோசம்ன்னு முத்திரை குத்திடுவாங்க... பணக்காரங்க உங்களுக்கு வேணும்ன்னா இது எல்லாம் சகஜமா இருக்கலாம்... ஆனா என்னை மாதிரி மிடில்

கிளாஸ் பெண்களுக்கு இது வாழ்வா... சாவாங்கிற போராட்டம்..."

அவள் பேச பேச வேதனையுடன் பார்த்து இருந்தான் அக்ஷய்...

ஆணாய் அவன் தன்னை மட்டுமே யோசித்துச் சுயநலமாய் இதுவரை நடந்து இருக்கிறான்... முதன் முறையாக ஒரு பெண்ணின் மனநிலையை அவளின் வாய்மொழியாகக் கேட்டவனுக்கு மனம் வலித்தது... தான் செய்த தவறின் அளவு புரிந்தது...

"எனக்கு மட்டும் என் குழந்தை எப்படி இருக்கும்... என்னை மாதிரியா... இல்லை அவங்க அப்பா மாதிரியா... யாரை மாதிரி இருக்கும்...? நிச்சயம் அவங்கப்பா மாதிரி அழகா தான் இருக்கும்ன்னு நினைக்கிறேன்..." கடைசி வரியை தனக்குள் சொல்லி கொண்டவளை இமைக்க மறந்து பார்த்து இருந்தான் அக்ஷய்... அந்நேரம் அவளின் ஆழ் மனது காதல் அவனுக்குப் புலப்பட்டது...

"இந்த மாதிரி கற்பனை எல்லாம் இல்லைன்னா நினைக்கிறீங்க... நிறைய இருக்கு... எந்தக் குழந்தை பிறக்கும்... அதை எப்படி வளர்க்கணும்... எந்த ஸ்கூலில் சேர்க்கணும்... இந்த மாதிரி ஆயிரம் கற்பனை இருக்கு... ஆனா இப்படி எந்தக் கற்பனையும் பண்ண விடாம ஏதோ என்னைத் தடுக்குது... இந்தக் குழந்தையை வெறுக்க வைக்குது... அது என்னன்னு தான் எனக்கும் புரியலை... இப்போதைக்கு இந்தக் குழந்தை வேண்டாம்ன்னு தான் என் மனசுக்கு தோணுது... அது ஏன்னு எனக்குத் தெரியலை...?"

முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு ஆறுதல் சொல்ல வகையில்லாமல் நின்று இருந்தான் அக்ஷய்... அவளது வார்த்தைகள் கேட்டு அவனது கண்களிலும் கண்ணீர் துளிகள்...

இதுவரை அவளைப் புரியாது கடிந்து பேசியவன் இப்போது அவளைப் புரிந்து கொண்டதும் வாய் இருந்தும் ஊமையாய் நின்று இருந்தான்...

அவளது வார்த்தையில் அவனுக்கும் கற்பனை சிறகடித்துப் பறந்தது... குழந்தை யாரை போன்ற சாயலில் இருக்கும் என்று... என்ன முயன்றும் அவனால் அபியை தாண்டி யோசிக்க முடியவில்லை... அவர்களது குழந்தைக்கு அவளின் உருவம் கொடுத்து மகிழ்ந்தான்...

ஆனால் அந்த மகிழ்ச்சிக்கு சொற்ப ஆயுளே... அடுத்து அவள் கூறிய வார்த்தைகள் கேட்டு....

ஏன்... ஏன்... ஏன் என்ற கேள்வியே அவனுள் வியாபித்து இருந்தது...

அவள் குழந்தைக்குத் தன்னை அப்பா என்றும், தன் உருவத்தை அதற்குப் பொருத்தி பார்த்து மகிழ்கிறாள் என்பதை அறிந்த அவனுக்கு அவளது காதல் புரிவதாய்...!!! அந்தக் காதலையும் மீறிய அவளின் வலி அவனின் மனதை கொல்வதாய்...!!!

ஆனால் அப்படி யோசிக்கும் அவள் அதை ஏன் அழிக்க நினைக்கிறாள்...? அவளது மனம் புரியாத புதிராய் இருந்தது... ஆனால் அதுவும் அவன் மேல் உள்ள காதலினால் என்பது அவனுக்குத் தெரியவில்லை...

எதுவாக இருந்தாலும் அவளின் காதலை, பெண்ணாய் அவளின் மனதை புரிந்து கொண்டவனுக்கு முன்பு போல் அவளிடம் கடுமை காட்ட முடியவில்லை...

அவள் வயிற்றில் இருக்கும் தன் உயிர் முக்கியம் தான்... ஆனால் அவன் தன் உயிரை விடப் பெரிதாய் நேசிக்கும் அவள் அவனுக்கு முக்கியம் அன்றோ...

தனது முடிவை மாற்றிக் கொண்டவனாய் அவள் அருகே வந்தான்...

"ரக்ஷி..." என்றழைத்தவன் அவளது முகத்தைக் கையில் தாங்கினான்...

அவனது செயலில் அவளது விழிகள் அவனது விழிகளைச் சந்தித்தது... கலங்கி சிவந்து இருந்த அவனது விழிகள்

அவளது கண்ணில் பட்டது...

"ஐம் சாரி பேபி... ஐம் ரியலி சாரி... உன் மனசு தெரியாம நான் இப்படி நடந்துக்கிட்டேன்... எனக்கு நம் குழந்தையை விட நீ தான் முக்கியம்... உனக்கு என்ன தோணுதோ அதை நீ செய்... இந்தக் குழந்தையை நீ தாராளமா அழிச்சிக்கலாம்..." இதைச் சொல்லும் போது அவனது இதயம் இரண்டு துண்டாய்ப் பிளப்பது போல் வலித்தது... ஆனால் இதயத்தில் கொலு வீற்றிருக்கும் அவளுக்காக அதைச் சொன்னான்...

முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன், "இனி உன் வாழ்க்கையில் நான் குறுக்கே வர மாட்டேன்... இனி நீ ஒரு சுதந்திர மனுசி... நீ விருப்பப்பட்டது போல் யாரையும் கல்யாணம் பண்ணிக்கலாம்... அதுக்கு நானோ என் குழந்தையோ தடையா இருக்க மாட்டோம்..." என்றவன் குனிந்து அவளது நெற்றியில் இதழ் பதித்தான் தன் காதல் மனதினை சமாதானப்படுத்துவதற்கான கடைசி வாய்ப்பாய்...

"இதுவே நான் உன்னைப் பார்க்கும் கடைசித் தடவை..." அபியிடம் கூறியவன்,

"மாம்... போகலாம்..." அன்னையிடம் கூறியவன் யார் முகத்தையும் பார்க்க மனம் இல்லாமல் அங்கிருந்து வெளியேறினான்...

துளசி வேறுவழியின்றித் தன் அழுகையை அடக்கி கொண்டு மகனை பின் தொடர்ந்தார்...

அன்று இரவு எல்லோருக்குமே தூங்காத இரவாய்ப் போனது... கோபிநாத்தை தவிர...

அபியின் காதுகளில் அக்ஷயின் ஒவ்வொரு வார்த்தையும் ஒலித்து அவளை அழுகையில் கரைத்துக் கொண்டு இருந்தது... அவனது வார்த்தைகளின் அர்த்தம் புரிந்த போதும் அவனது செயலை மன்னிக்க முடியாமல் பேதையவள் மனதுக்குள் தவித்துக் கொண்டு இருந்தாள்...

அனி ஆதர்ஷை நினைத்து மனம் கலங்க... அங்கே அவனும் தன் மனைவியைத் தான் நினைத்துக் கொண்டு இருந்தான்...

அத்தனை நாள் கழித்து ஏனோ அவளின் நியாபகம் வந்தது... அது அக்ஷயின் காதலை கண்டதால் கூட இருக்கலாம்... அனியோடு காதலோடு சுகித்த நேரங்கள் நெஞ்சில் இனிமையாய் இனித்தது... எல்லாம் கொஞ்ச நேரம் தான்...

'ச்சே... என்னோட பலவீனத்தைப் பயன்படுத்தி அவளோடதை சாதிச்சுக்கிட்டா... சாகசக்காரி...' என்று பழித்தவன் மனதில் அனியின் மீது அளவு கடந்த வெறுப்பே நிறைந்து இருந்தது...

அங்கு அக்ஷய் மனதில் அபியின் எண்ணங்களே...

'திட்டினாலும் கோபப்பட்டாலும் உன்னோட முகத்தைப் பார்த்தால் தானேடி எனக்கு நிம்மதி... அந்த நிம்மதி கூட எனக்குக் கிடைக்கவில்லையே... இனி எனக்கு நிம்மதி ஏது... சந்தோசம் ஏது...?' அவளைப் பற்றி நினைக்கும் போதே குழந்தையின் நினைவு எழுந்தது...

அவனையும் அறியாமல் கண்களில் கண்ணீர் துளி உருண்டோடியது...

'எனக்கு உன் அம்மாவுக்கும் இடையில் இருக்கும் ஒரே உறவான நீயும் நாளைக்கு இருக்க மாட்ட... அதுக்கு அப்புறம் உன் அம்மாவுக்கு என் நியாபகம் இருக்குமோ இருக்காதோ... நிச்சயம் இருக்காது தான்... அதன் பின் அவள் வாழ்க்கையில் இந்த அக்ஷய் யாரோ... அவள் வாழ்க்கை வேறு ஒருவனுடன் சந்தோசமாய்... ஆனால் என் வாழ்க்கை அவளின் நினைவில் சோகமாய்...' நினைத்தவன் கண்ணில் மேலும் கண்ணீர் துளிகள்...

காதில் சூடாய் ஏதோ திரவம் உருண்டோடுவதை உணர்ந்தவன் கைகள் அதைத் துடைக்க அது தனது

கண்ணீர் என்பதை உணர்ந்தவனுக்குத் தன்னைக் குறித்தே அவமானமாய்ப் போனது...

'ச்சே என்ன இது... நானா அழுவது...? எதைக் கண்டும் கலங்காத நான் ஒரு பெண்ணின் காதலுக்காகக் கலங்குவதா... அவள் என்னைப் புரிந்து கொள்ளாவிட்டால் போகட்டும்... நஷ்டம் அவளுக்குத் தான் எனக்கில்லை... என்னை மாதிரியான ஒருவனைக் கணவனாய் அடைய அவளுக்குத் தான் கொடுத்து வைக்கவில்லை... போகட்டும் போ... இதனால் உன் வழ்க்கையில் எதுவும் மாறப் போவது இல்லை அக்ஷய்... நீ அதே அக்ஷய் தான்...' மனதில் நினைத்து கொண்டவன் முதலில் இருந்த மாதிரி இரும்பு கவசத்தை அணிந்து கொண்டான்...

அந்த இரும்பு கவசமும் அவள் மீதான காதல் எந்த நேரத்திலும் தன்னைப் பலகீனப்படுத்தி விடக் கூடாது என்பதற்காகத் தானோ என்னமோ...

மறுநாள் காலையில் எதுவும் நடவாதது போல் அலுவலகத்திற்குக் கிளம்பிய அக்ஷய் உணவு உண்ண அமர்ந்தான்... அவன் வரவை உணர்ந்தும் பரிமாற வராமல் இருந்த அன்னையைக் கண்டு,

"மாம்... சீக்கிரம் டிபன் எடுத்து வைங்க... நேரமாச்சு..."

அவன் போட்ட சத்தத்தில் அங்கு வந்த துளசியின் முகம் அழுது அழுது சிவந்து இருந்தது... அதை உணர்ந்தாலும் அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை...

அவனது தட்டில் தோசையை வைத்த துளசி, "அக்ஷய்... இந்நேரம் அபி ஹாஸ்பிட்டல் போயிருப்பாளா...?"

அவரது கேள்வியில் தோசையை விண்டு கொண்டு இருந்த அவனது கை அப்படியே நின்றது... பின் ஒரு விள்ளல் பிய்த்து வாயில் போட்டவன்,

"அபியா யாரு மாம் அது...?" என்றான் தெரியாதது போல...

"அக்ஷய்..." அதிர்ச்சியுடன் பார்த்தார் துளசி...

அவரது அதிர்ச்சியைக் கண்டு ஒரு கணம் அமைதியாய் இருந்தவன், "நீங்க அபியை மறக்கிறது தான் நல்லது மாம்..."

"எப்படிடா மறக்க சொல்ற... எதை மறக்க சொல்ற...? ஆண் ஒண்ணு, பெண் ஒண்ணுன்னு பெத்தும் ரெண்டும் இப்படி வாழாமல் இருப்பதைப் பார்த்து எனக்குத் தான் வேதனையா இருக்கு... நீ என்னடான்னா குழந்தையை அழிச்சிக்கோன்னு அவளுக்குப் பெர்மிசன் கொடுத்துட்டு வந்துட்ட... இங்கே தவிக்கிறது நான் தான்... உங்களுக்கு எல்லாம் வாழ்க்கை விளையாட்டா போச்சு இல்ல..."

"இல்லை மாம்... இவ்வளவு நாள் விளையாட்டா தான் இருந்தேன்... இனி அப்படி இருக்கப் போறது இல்லை..."

"அப்போ அபியை இங்கே கூட்டிட்டு வர்றியா அக்ஷய்..."

ஆவலாய் கேட்ட அன்னையிடம் 'இல்லை' என்பது போல் தலையசைத்தவன், "இனி அவளோட வாழ்க்கை அவள் கையில்... காலில் விழாத குறையாய் கெஞ்சியாச்சு... இதுக்கு மேல எனக்கு என்ன செய்யன்னு தெரியலை... அப்படியே வலுக்கட்டாயமாய் அவளுடன் வாழ்ந்தாலும் அந்த உறவு ஒட்டுமான்னு தெரியலை..." என்றவன்,

"என்ன நடக்கணுமோ நடக்கட்டும்... இனி அவளைப் பத்தி யாரும் பேச வேண்டாம்..." என்றவன் அபியின் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தான்...

அலுவலகம் வந்தவன் முதன் வேலையாக வக்கீலை தொடர்பு கொண்டு விக்டரை சந்திப்பதற்குப் போட்டிருந்த மனு பற்றி விசாரித்தான்...

"இன்னும் இரண்டு நாளில் அவரைப் போய்ச் சந்திக்கலாம் சார்..."

"அப்போ ஒண்ணு செய்ங்க... நீங்களே நிஷாவை அழைச்சிட்டு போய்ட்டு வந்துடுங்க..." அக்ஷய் சொன்னதும் அவரும் சரி என்று அழைப்பை துண்டித்தார்...

அவர் வைத்ததும் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவனுக்கு அபியின் நினைவுகள்...

'இன்னேரம் என் குழந்தையைக் கொன்று இருப்பாள்... கண்ணா... எல்லா வலிமையும் படைத்த உன் அப்பனால் உன் உயிரை காப்பாற்ற முடியாமல் போயிருச்சே... உன் உயிர் போகும் போது உனக்கு ரொம்ப வலித்ததாடா...' அந்தச் சின்னஞ்சிறு சிசுவை நினைத்தவனுக்கு வேதனை எழுந்தது...

அவன் மனம் முழுவதும் வலி... வலி... வலி... அதை அவனுக்குக் கொடுக்க நினைத்தவளோ அவன் மனதை கொஞ்சமும் உணரவில்லை...

அதே சமயம் அன்று அபி தன்னிடம் போராடி கதறி துடித்து ஓலமிட்டது இன்றும் அவன் காதில் ஒலித்தது...

'உன்னை வலிக்கச் செய்ததற்கு நீ இப்படி என் குழந்தைக்கு வலிக்கச் செய்துவிட்டாயே...' அபியின் மேல் வேதனையும், கோபமும் ஒன்று சேர்ந்து எழுந்தது... ஆனால் அதற்கு அவனால் ஒன்றும் செய்ய முடியாத நிலை...

இரண்டு நாள் கழித்து நிஷா விக்டரை பார்க்க சென்றாள்... அவள் கருவுற்று இருப்பது அறிந்து அவனது கண்களில் கண்ணீர் வழிந்தது... முதன் முறையாகத் தான் தவறான தொழிலை கையில் எடுத்ததை உணர்ந்தவனாய் வருந்தினான்...

"கண்ணம்மா... இந்த நிலையில் உன்னைத் தனியா விட்டுட்டேன்னே..." என்று கவலை கொண்டு வருந்தியவனை அவள் தான் தேற்றினாள்...

தன்னை அக்ஷய் சொந்த தங்கை போல் பார்த்து கொள்வதாய் அவள் கூறியதும் அவனுக்கு ஆச்சிரியமாகப் போய்விட்டது... அக்ஷயின் உயரம் தெரியும் அவனுக்கு... அப்படிப்பட்ட அக்ஷய் தன் மனைவிக்கு உதவுவது குறித்து மனம் நெகிழ்ந்து போனான்...

அடுத்து வந்த சில தினங்களில் அக்ஷயின் சில தொழிற்சாலைகள் முறையற்று அனுமதி வாங்கித் தொடங்கியதாய் கூறி அரசாங்கத்தில் அதற்கு மூடு விழா நடத்தினர்...

இதைக் கேள்விப்பட்டதும் அக்ஷய்க்கு இது யார் செய்த வேலை என்று புரிந்து போனது... மனம் பதற்றப்படாமல் நிதானமாய் யோசித்தவன் கண்கள் பளிச்சிட நிமிர்ந்தான்...

உடனே பாரிவேந்தனுக்கு அழைத்தவன்,

"என்ன எக்ஸ் மாமனாரே... என்னைப் பத்தி நல்லா தெரிஞ்சு இருந்தும் என் வழியில் குறுக்கிடுறீங்கன்னா உங்க தைரியத்தை என்னன்னு பாராட்டுறது...?" எள்ளலாய் பேசியவனைக் கண்டு அவரது கோபம் அதிகரித்தது...

"நீ என் மகளுக்குப் பண்ணிய துரோகத்துக்கு இது கொஞ்சம்டா... இன்னமும் இருக்கு உனக்கு..."

"அப்படியா... ரொம்பத் தேங்க்ஸ்..." என்று வில்லன் சிரிப்பு சிரித்தவன் அலைப்பேசியைத் துண்டித்தான்...

அவனின் சிரிப்புக்கான அர்த்தம் இரண்டு நாள் கழித்துப் பாரிவேந்தனுக்கு விளங்கியது...

சொந்த காசில் தனக்குத் தானே சூன்யம் வைத்துக் கொண்ட முட்டாளாய் என்ன செய்வது என்று தெரியாமல் அவர் விழித்தார்...

பூக்கும்...

அதிகாலையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அக்ஷய் தான் கண்ட கனவின் தாக்கத்தில் பதறி அடித்துக் கொண்டு எழுந்தான்... ஏசியின் உபயத்தால் அறையில் பரவி இருந்த குளிரையும் மீறி அவனது உடல் முழுவதும் வியர்வையில் குளித்து இருந்தது...

சிறிது நேரம் தான் எங்கிருக்கிறோம் என்று புரியாதவனாய் ஸ்தம்பித்துப் போய் அமர்ந்து இருந்தவன் பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து மின்விளக்கை போட்டான்...

பெருகிய வியர்வைத் துளிகளைத் துண்டால் துடைத்துக் கொண்டு அமர்ந்தவன் மனதில் அந்தப் பயங்கரக் கனவும், அதில் கேட்ட குரல்களும் மீண்டும் மீண்டும் நியாபகம் வந்தது...

சின்னஞ்சிறு சிசு ஒன்று அவனது காலை கட்டி கொண்டு, "டாட் என்னைக் கொல்ல வேண்டாம்ன்னு சொல்லுங்க டாட்... எனக்குப் பயமா இருக்கு... ரொம்ப வலிக்குது... ஆ... ஆ..." என்ற அலறிய சத்தமும்...

அடுத்து அபி அவனிடம், "வேண்டாம் என்னை விட்டிரு..." என்று தன் கற்பை காப்பாற்ற போராடிய போது அவள் கெஞ்சி கதறிய குரலும் மாறி மாறி அவனது செவிகளில் ஒலித்தது...

அதன் தாக்கத்தைத் தாங்க முடியாமல் கைகள் இரண்டையும் காதின் மீது வைத்து பொத்தியவன், "நோ..." என்று பெரிதாக அலறினான்...

வாழ்க்கையில் தனக்குச் சாதகமாக மனதில் தோன்றியது எல்லாம் சுயநலமாய்த் தன்னுடைய நலத்தை மட்டும் முன்னிருத்தி செய்து பழக்கப்பட்டவன் மனம் அறிந்து தான் செய்த இரு தவறுக்கும், பாவத்துக்கும் விடை தெரியாது தத்தளித்தான்... இந்தப் பாவத்தை எத்தனை தடவை கங்கையில் மூழ்கி எழுந்தாலும் தீராது...

பெண்களைப் போகப் பொருளாய் பார்க்காதவன்... பெண் என்ற போதை தன்னை அடிமைப்படுத்தி விடும் என்று பெண்கள் பக்கம் கடைக்கண் பார்வை கூடத் திருப்பாதவன்... எந்த இடத்தில் அபியிடத்தில் சறுக்கினான் என்று அவனுக்குத் தெரியவில்லை...

அவனும் பல முறை யோசித்துப் பார்த்துவிட்டான்... ஏன் அவள் வாழ்வை நாசம் செய்தோம் என்று...? ஒருவேளை முதலில் இருந்து அவளைக் காதலிக்கிறோமா என்று கூட யோசித்துப் பார்த்தான்... ம்ஹூம்... அவளிடம் காதலில் விழும் அளவிற்கு அவனுக்கும் அவளுக்கும் இடையே என்றுமே உறவு சுமூகமாக இருந்தது கிடையாது...

பின் ஏன் என்று யோசித்தவனுக்கு ஒன்று மட்டுமே விடையாக வந்தது... எப்போதும் திமிராய், தைரியமாய், அலட்சியமாய் அவனைப் பார்க்கும் விழிகளில் அன்று தெரிந்த அச்சத்தை அவனால் என்றுமே மறக்க முடியாது...

அல்லிராணியாய் சிலிர்த்து நிற்கும் அவளிடம் தென்பட்ட பயம் அவனை மகிழச் செய்தது என்னமோ உண்மை தான்... ஆனால் அப்போதும் அவளை ஒன்றும் செய்ய அவன் நினைக்கவில்லை... ஆனால் அவன் நெருங்க நெருங்க அவளிடம் காணப்பட்ட அச்சம் அதிகரித்துக் கொண்டு போனதில் ஆண் என்ற அகம்பாவம் அவனது அறிவை மறைக்க எதற்கும் அவனிடத்தில் அடங்காத அவளை ஆண் என்ற மமதையில் அடக்கி ஆண்டுவிட்டான்...

ஆனாலும் அவனையும் அறியாமல் அவனுள் மெல்லிய நடுக்கம் எழத்தான் செய்தது... அதையும் அவளது எதிர்ப்பு தகர்த்து எறிந்துவிட்டது...

அப்போது அவன் மனதில் தோன்றிய சந்தோசத்தை விவரிக்க இயலாது... முதன் முறையாக அவன் தொடும் பெண் அவள் தான்... அதனால் தான் என்னவோ அவள் அவனை நகத்தால் கீறி காயத்தை உண்டாக்கிய போதும் அவன் அவளை மென்மையாகத் தான் கையண்டான்...

இப்போது நினைக்கும் போது அவனுக்கு எல்லாம் புரிந்தது... அவளைத் தொடும் வரை அவன் மனதில் எந்தவித சலனமும் இல்லை... ஆனால் அதன் பின் மனதில் எழுந்த உலகை வென்று விட்டது போன்ற மகிழ்ச்சிக்குக் காரணம் நிச்சயம் அபி என்று நினைத்தான்...

அதன் பின் தான் அவளது உடல்நிலையைக் கேள்விப்பட்டுப் பதட்டப்பட்டு மருத்துவமனையில் பார்த்தது எல்லாமே அவள் தன் மனதில் நிறைந்து இருந்தது தான்... அப்போது எல்லாம் உணராத தன் மனதை அவள் உயிர் போகும் தருவாயில் அவன் கண்டு கொண்டான்...

என்ன கண்டு கொண்டு என்ன பிரயோஜனம் அவன் அவளிடம் நடந்து கொண்ட தவறை அவனால் என்றுமே சரி செய்ய இயலாது... அவளும் அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை...

அவன் செய்த தவறு இப்படி அவனது வாரிசை பாதிக்கும் என்று கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... கடைசியில் அவனது வாயாலேயே அவனது மகவை கொலை செய்யச் சம்மதம் தெரிவிக்குமாறு செய்துவிட்டாளே அவள்...

அவன் செய்த தவறுக்கு அவள் அவனுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் அவன் ஏற்றுக் கொள்வான்... ஆனால் அதற்குத் தண்டனையாக அவனது குழந்தையை அல்லவா பலி கேட்டு விட்டாள் ராட்சசி...

என்றுமே போனதை நினைத்து வருந்துபவன் அவன் கிடையாது... ஆனால் காதல் விசயத்தில் மட்டும் அவனால் தினமும் வருந்தாமல் இருக்க முடியவில்லை...

அவளையும், அவளது நினைவுகளையும் மறக்க நினைத்து தான் அவன் தன் வேலை நேரத்தை அதிகரித்துக் கொண்டது...

அவளை மறப்பதற்காகவே காலை நான்கு மணிக்கு எழுபவன் இரவு பன்னிரெண்டு மணி வரை கடுமையாக

உழைத்தான்... அப்படி இருந்தும் அந்த இடைப்பட்ட நான்கு மணி நேரத்தில் அவளுக்கும், அவனது குழந்தைக்கும் அவன் செய்த துரோகம் அவன் மனதை வாள் கொண்டு அறுக்கத் தான் செய்தது...

இப்படியே அமர்ந்து இருந்தால் சரி வராது என்று நினைத்தவன் மணியைப் பார்த்தான்... ஐந்து மணி... அன்றைய ஓட்டம் ஆரம்பமானது... அதன் பின் அவனுக்கு யோசிக்க நேரம் இல்லை...

வேலை நேரத்தில் அவன் இதை யோசித்தால் பாரிவேந்தன் மாதிரி ஆட்கள் அவனை முழுதாய் முழுங்கி ஏப்பம் விடத் தயாராய் இருந்தனர்... பாரிவேந்தனை நினைத்ததும் அவனுள் சிரிப்பு எழுந்தது...

இன்று நடக்கப் போகும் செயலால் அவரது முகம் எப்படி மாறி போகும் என்று கற்பனை செய்தவனுக்கு அந்தக் கற்பனையே இனிப்பாய் இருந்தது...

'எனக்காடா வைக்கிற ஆப்பு... நான் உனக்கு வைச்சேன் பாரு அது தான் உண்மையான ஆப்பு...' மனதில் கறுவி கொண்டவனுக்கு அந்தப் பாரிவேந்தன் இத்துடன் ஒதுங்கி போவார் என்று நம்பிக்கை இல்லை...

அவன் வைத்த ஆப்பின் எதிரொலி அன்று காலை சுமார் பத்து மணியளவில் பாரிவேந்தன் வீட்டிற்கு அவரது தொழில் துறையில் இருந்து அவரை விசாரிக்க ஆட்கள் வந்தது...

பதவியில் இருக்கும் அவரை விசாரிக்க வருகிறார்கள் என்றால் அதுவும் அவரது தொழில் துறையில் இருந்து...??? பாரிவேந்தனுக்கு அடிவயிறு கலங்கியது...

அக்ஷய் முறையற்று அனுமதி வாங்கித் தொழிற்சாலை தொடங்கிய வழக்கில் அவர் மீதே குற்றச்சாட்டு திருப்பப்பட்டு உள்ளதை அவர்கள் அவருக்குத் தெரிவித்தனர்...

"மிஸ்டர். அக்ஷய் தெளிவாக அவரது தரப்பை சொல்லிவிட்டார்... அவர் முறையாகத் தான் அவரது தொழிற்சாலைகளுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்... அதற்கு அரசாங்கமும் முறையா அனுமதி கொடுத்து இருக்கிறது..." அவர்கள் சொன்னதைக் கேட்டு பாரிவேந்தன் கொதித்துப் போனார்...

"என்னய்யா... முறையா அனுமதி வாங்கினான்... அவன் பேக்டரி சுத்திலும் இருக்கிற வீடு, ஆறு எல்லாம் அந்தப் பேக்டரியில் இருந்து வெளியேறும் கழிவு தண்ணியாலும், புகையினாலும் மாசு படுது... முதல்ல அந்த இடத்தில் அவன் எப்படிப் பேக்டரி போட்டான்னு விசாரி...? அதெல்லாம் விவசாய நிலம்ய்யா... எதிர்கட்சி ஆட்சியில் இருக்கும் போது அவன் கிட்ட காசு வாங்கிட்டு அவனுக்கு அனுமதி கொடுத்து இருக்கு... அதை என்னன்னு விசாரிய்யா... அதை விட்டுட்டு என்னை வந்து நீ விசாரிக்கிற..." பாரிவேந்தனின் கோபம் அடங்கவில்லை...

"அதுக்குத் தான் சார் வந்து இருக்கோம்..."

அவர்களின் பதிலில் அவரின் முகத்தில் ஈயாடவில்லை...

"என் கிட்ட எதுக்கு...?" இழுத்தார் அவர்...

"போன ஆட்சியிலும் நீங்க தான் தொழில்துறை அமைச்சர்..."

அதில் அதிர்ந்து போய் அமர்ந்துவிட்டார்... அவர் எப்போதுமே தேர்தலில் வெற்றி பெறும் கட்சிக்கு தான் குடை பிடிப்பார்... போன தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி இந்தத் தேர்தலில் படுதோல்வி அடைவதுடன் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு அது வெற்றி பெறாது என்ற கருத்துக் கணிப்பை நம்பி தன் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு இப்போது இருக்கும் கட்சிக்கு மாறிவிட்டார்... அவரிடம் இருந்த பணம் அவருக்கு அதே பதவியைத் திருப்பி வழங்கியது...

தனக்கு மருமகனாய் அக்ஷயை தேர்ந்து எடுக்கும் முன் அவனிடம் கோடிக்கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு அவனுக்கு அனுமதி வழங்கியதை அவர் மறந்து போனார்... ஆனால் அவர் இட்ட கையெழுத்துச் சாட்சியாக மாறி இப்போது அவருக்கு அதை நியாபகப்படுத்தியது... இருந்தாலும் அவர் செய்யும் எத்தனையோ திருட்டுத்தனத்தில் இதை மட்டும் அவர் நியாபகத்தில் வைத்திருப்பார் என்பது நிச்சயம் கிடையாது...

"இது விவசாய நிலம், பொதுமக்கள் பாதிக்கப்படுறாங்கன்னு அப்போ உங்களுக்கு ஏன் தெரியலை...? இந்த அனுமதி வழங்குவதற்கு அவரிடம் இருந்து எவ்வளவு பணம் லஞ்சம் வாங்கினீங்க...?"

'அடப்பாவிங்களா... எப்படியோ ஆரம்பிச்ச வழக்கு இப்ப எப்படி எப்படியோ திசை மாறி போச்சே...' பாரிவேந்தன் மானசீகமாகத் தலையில் கை வைத்தார்...

அவர் ஒன்றும் அக்ஷய் அளவுக்குப் புத்திசாலியோ, படிப்பாளியோ கிடையாது... பதவியை வைத்துப் பணம் சம்பாதித்தார்... இதுவரை எதிலும் மாட்டாமல் தப்பித்து வந்தார்... இதோ இன்று மாட்டி கொண்டார்... அதுவும் அவர் ஆரம்பித்து வைத்த வினை அல்லவா...

மேலும் விசாரித்த குழு அவர் மீது குற்றச்சாட்டைப் பதிவு செய்தது... ஏனெனில் அக்ஷய் தமிழ்நாட்டின் முக்கியத் தொழிலதிபர்... அவனது தொழிற்சாலைகள் முறையான அனுமதி பெறாத காரணத்தால் மூடப்பட்டுள்ளதால் மக்களிடையே அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது... அதனால் இதை முழுமூச்சாக விசாரிக்க அரசாங்கமே பரிந்துரை செய்து இருந்தது...

பாரிவேந்தன் தனது பதவியைப் பயன்படுத்தி அவனைச் சிக்கலில் மாட்டி வைக்க நினைத்தால் அதில் தானே மாட்டி கொள்வோம் என்று கனவிலும் அவர் நினைக்கவில்லை...

"டாட்... என்ன இது...? உங்க மேலேயே இப்படித் திருப்பி விட்டுட்டார்..."

"அவனோட பேக்டரியை இழுத்து மூடினா கோடிக்கணக்கில் நஷ்டம் வரும்... பையன் நமக்கிட்ட கெஞ்சிட்டு வருவான்னு நினைச்சேன்... ஆனா இவன் இப்படிப் பண்ணுவான்னு நான் நினைக்கலையே மதி..."

"டாட்... இதனால உங்களுக்கு ஏதும் பிரச்சினை வருமா...?"

"இதெல்லாம் எனக்குச் சின்ன விசயம்... இதை வேற மாதிரி கொண்டு போய் முடிச்சிடறேன்... நீ கவலைப்படாதேம்மா... இது ஒண்ணு தான் இருக்கா அவனை அடக்குறதுக்கு... கைவசம் நிறைய இருக்கு..." என்றவருக்குத் தெரியவில்லை அவன் எந்த வசமும் சிக்கப் போவது இல்லை என்று...

அந்நேரம் அவரது அலைப்பேசி அழைத்தது... வேறு யார் அக்ஷய் தான்...

"எனக்கு நீங்க பறிச்ச குழியில் கடைசியில் நீங்களே விழுந்துட்டீங்களாமே... அடி ரொம்பப் பலமோ... ச்சுச்சு..." போலியாக வருத்தப்பட்டவனின் குரலில் மருந்துக்கும் வருத்தம் இல்லை...

அதைக் கேட்டு பல்லை கடித்தார் பாரிவேந்தன்...

"என்னோட பேக்டரியை மூடிட்டதா ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே... இன்னும் கொஞ்ச நாளில் நான் அதைத் திறந்துடுவேன்..." அவனின் பேச்சில்...

'அது எப்படி முடியும்...?' என்று அவர் யோசிக்க...

"என் பேக்டரி என்ன பத்து பேர் வேலை செய்யற குடிசைத் தொழில்ன்னு நினைச்சியா...? ஆயிரக்கணக்கானவங்க வேலை பார்க்கிற இடம் அது... கோர்ட்ல கேஸ் போட்டு இருக்கேன்... தொழிலாளர்கள் நலன் கருதி அதைத் திறக்க அனுமதிக்கணும்ன்னு... கூடிய சீக்கிரம் அனுமதி கொடுத்துருவாங்க... அதனால எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை... ஆனா உனக்கு வந்த பிரச்சினை அப்படியே தான் இருக்கு... என்ன செஞ்சு அதைத் தீர்க்க போற... பேசாம நான் சொல்றதை செய்... என் பேக்டரி

நடத்துக்கிறதுக்கு ஏத்த இடமா எல்லாத்தையும் மாத்தி கொடுத்துடு... அமைச்சர் நீ உனக்கு இதை எல்லாம் செய்ய நான் சொல்லவா வேணும்..."

அவனது பேச்சில் அவர் தப்புவதற்கான வழி கிடைக்க அதன் பின் அவன் பேசிய பேச்சு எதுவும் அவர் மூளையில் ஏறவில்லை... அலைப்பேசியை அணைத்தவர் அதை உடனே செயலாற்றினார்...

அதில் லாபம் அடைந்தது அக்ஷய் தான்... ஒரு பைசா செலவு இல்லாமல் அவன் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டான்... அவர் தான் தன் சொந்த செலவில் சில வேலைகள் செய்து இந்தக் குற்றச்சாட்டில் இருந்து வெளியில் வந்தார்...

இது சின்னப் பிரச்சினை தான் என்றாலும் அது அவரது பதவியைப் பறிக்கும் அளவுக்கு வளர்ந்தது குறித்து அச்சம் அடைந்து தான் அத்தனை விரைவாக அவர் செயல்பட்டது...

அடுத்து அவனுக்கு வருமானவரி துறை மூலம் தொந்திரவு கொடுக்க நினைத்தார்... ஆனால் முன்னது போலத் தான் எதுவும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று கவனமாய் அவனது கணக்கு வழக்குக்களை ஆராய்ந்து பார்த்த போது அவன் பக்காவாக வருமானவரி கட்டி இருந்தான்...

எந்த விதத்திலும் அவன் அரசாங்கத்தை ஏமாற்றவில்லை என்பதற்கான ஆதாரங்கள் அவரைப் பார்த்துச் சிரித்தது...

'நம்மை மாதிரி காசுக்கு ஆசைப்பட்ட பய தான் இந்த மாதிரி வேலைக்குத் துணைக்குப் போயிருக்கணும்... இல்லாட்டி இந்தக் காலத்தில் நேர்மையா சம்பாதிக்க முடியுமா...?' அவனை நினைத்து மனதுக்குள் கறுவியவரால் அவனுக்கு எதிரான ஆதாரம் ஒன்றை கூடத் திரட்ட முடியவில்லை...

"போங்க டாட்... மினிஸ்டர்ன்னு பெத்த பேரு தான்... அவரை உங்க காலில் விழ வைக்க முடியலையே டாட்..." மதி கூடப் புலம்பினாள்...

அதில் அவரது ஹீரோயிசம் அடிப்பட்டுப் போகக் கோபத்துடன், "வேணும்ன்னா அவனை ஸ்கெட்ச் போட்டு தூக்கிரலாமா...?" அது அவருக்குக் கை வந்த கலை... இன்றும் அவருக்குக் கை கொடுக்கும் கலை...

"டாட்... அவர் எனக்கு வேணும்..." அலறியவளை பார்த்து எரிச்சல் அடைந்தவர்,

"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா நான் என்னம்மா செய்ய..."

"எனக்கு அவர் வேணும் டாட்... அதுக்கு என்ன பண்ணுவீங்களோ பண்ணுங்க..."

அக்ஷய் பேசிய வார்த்தைகள் அவரது காதிலும் ஒலித்துக் கொண்டு தான் இருந்தது...

"நிச்சயம் மதி..." என்றார் உறுதியுடன்...

அதன் பின் தான் அவனை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்த போது தான் தெரிந்தது அவனது சறுக்கல்கள்...

அதில் ஒன்று தான் அவன் தனது தொழிலுக்காகச் சாதாரண மக்களை மிரட்டி பணிய வைத்து தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டது... அரசாங்க விசயத்தில் கவனமாய் இருந்தவன் சாதாரண மனிதர்கள் என்ன செய்துவிட முடியும் என்ற எண்ணத்தில் இதில் சற்று அலட்சியமாக இருந்துவிட்டான்... அபியை போல் அவனால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம்...

அதிலும் முக்கியமாய்ப் பாரிவேந்தன் கண்ணில் அவனது காஞ்சிபுரம் குடியிருப்புத் திட்டம் விழுந்தது... அது ஒன்றும் அவன் செய்த திட்டத்தில் மிகப் பெரிய குடியிருப்புத் திட்டம் கிடையாது தான்... ஆனால் அது துவங்குவதற்காகக் காலி செய்யப்பட்ட வீடுகளில் ஒரு வீடு அபியின் வீடு...

அரசியல்வாதி அல்லவா மனதுக்குள் வேகமாய்க் கணக்கிட்டவர் அபிக்கும், அக்ஷய்க்கும் உள்ள தொடர்பை எளிதில் கண்டு கொண்டார்... அவனுக்குப் பொருத்தமான

தனது மகளை விடுத்து அவன் எந்த விதத்திலும் தனக்குப் பொருந்தாத அபியை திருமணச் செய்யத் துடிப்பதன் பின்னணியில் அக்ஷயின் தங்கை அனியின் வாழ்க்கை அடங்கி இருப்பதை அவராய் ஊகித்துக் கொண்டார்...

அதை மகளிடம் சொன்னவர், "நீ கவலைப்படாதேம்மா... இப்போ அக்ஷய் தங்கச்சி அவ கணவனோட வாழலை... அதனால அபியோட அவனுக்குக் கல்யாணம் நடக்குமான்னு தெரியலை... இப்போ அந்த ஆதர்ஷ் கோபத்தை அக்ஷய்க்கு எதிரா திருப்பி விடணும்... அப்புறம் அந்த ஆதர்ஷ் தன்னோட தங்கையை அக்ஷய்க்குக் கல்யாணம் பண்ணி கொடுக்க மாட்டான்... இதைப் பயன்படுத்திட்டு நாம உள்ளே புகுந்திடலாம்... அதுக்கு அப்புறம் அக்ஷய் உனக்கு மட்டும் தான்..." என்றவர் மகளின் கலக்கமான முகத்தைப் பார்த்து,

"மதி... அக்ஷய் அந்த அபியை காதலிக்கலை..."

"டாட்..." என்றாள் இனிய அதிர்ச்சியுடன்...

"ஆமாம் மா... இதுல ஏதோ ஒரு விசயம் நடந்து இருக்கு... அதான் அக்ஷய் அபி கிட்ட மட்டும் அந்தப் பம்மு பம்முறான்... அது என்னன்னு நான் கண்டுப்பிடிக்கிறேன்..." தீவிரமாய் யோசித்தவர் முகம் பளிச்சிட,

"கவலை விடும்மா... அக்ஷய் உனக்குத் தான்..." என்றார் நம்பிக்கையுடன்...

அவர் முதலில் பிடித்தது மணிவண்ணனை தான்...

அக்ஷயின் விசுவாசியான அவன் அக்ஷயை பற்றி எதுவும் சொல்ல மறுத்துட்டான்... அவனுக்குக் காட்டிய உயிர் பயத்தில் வேறுவழியின்றிக் காஞ்சிபுரம் குடியிருப்பு கட்டுவதற்காக அபி உட்பட அனைவரையும் மிரட்டி பணிய வைத்தது... அதற்குப் பணியாத அபியை கடத்தி கொண்டு போய் மிரட்டி காரியத்தைச் சாதித்துக் கொண்டது என்று எல்லாவற்றையும் கக்கிவிட்டான்...

உண்மையைச் சொன்ன அவனை விடுவித்த பாரிவேந்தன் வெற்றிக்களிப்பில் திளைத்தார்...

அதை அப்படியே காணொளியாய் எடுத்து ஆதர்ஷிடம் காட்டியவர், "உன் தங்கையை மிரட்டி, கடத்தி, அவளுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுத்து அராஜக முறையில் உங்க வீட்டை தட்டி பறிச்சு இருக்கான் அந்த அக்ஷய்... அதை விட உன் தங்கை மானத்தைக் கெடுத்தவனுக்கா அவளைக் கல்யாணம் பண்ணி கொடுக்க நினைக்கிற... நல்லா யோசிச்சு முடிவு எடுப்பா... ஏன்னா நானும் ஒரு பொண்ணைப் பெத்தவன்... நல்லவேளை என் பொண்ணு தப்பிச்சா... ச்சே... எவ்வளவு மோசமானவன் அந்த அக்ஷய்..." நீலிக்கண்ணீர் வடித்தவரை அவன் நம்பினானோ இல்லையோ அக்ஷயின் உதவியாளன் கூறியதை முழுவதும் நம்பினான்...

ஏனெனில் அது தானே உண்மையில் நடந்தது... அதற்குச் சாட்சியாக அவன் இருக்கிறானே...

அன்று அபியின் மானத்தைக் கேள்விக்குறியாக்கி சொந்த வீட்டை வித்துவிட்டு அநாதையாய் சென்னை வந்ததை ஆதர்ஷ் இன்றும் மறக்கவில்லை...

'எவ்வளவு தைரியம் இருந்தா... என் தங்கை மானத்தை விலை பேசி, அவளின் வாழ்க்கையில் விளையாடிட்டு இப்போ நல்லவன் மாதிரி வேசம் போடுறியா...?' என்று ஆத்திரமாய் நினைத்தவனுக்கு அன்று அபி தன்னை மறந்த நிலையில் தன் மனதை துளசியிடம் வெளிப்படுத்திய போது பேசிய வார்த்தைகள் நியாபகத்துக்கு வந்தது...

"அவர் பண்ணிய தப்பு ஒண்ணா ரெண்டா அத்தை... நான் மன்னிக்கிறது... அவரைப் பார்த்த நாளில் இருந்து இன்று வரை என் சந்தோசம் போச்சு... என் நிம்மதி போச்சு..."

இதை அவள் கூறும் போது அப்போது அவன் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... இப்போதோ அது பூதாகரமாகத் தெரிந்தது...

அபிக்கும் அக்ஷய்க்கும் இடையில் உள்ள அறிமுகம் தங்களுடைய திருமணத்தால் வந்தது என்று இதுநாள் வரை அவன் நினைத்து இருக்க... ஆனால் அதுவோ அதற்கு முன் அல்லவா ஏற்பட்டு இருக்கிறது... அதுவும் கொடிய நிகழ்வின் வாயிலாக...

'அத்தகைய கொடியவனின் தங்கையை நான் மணந்ததும் இல்லாமல் அத்தகையவனை வீட்டிற்கு வர போக வைத்து இருக்கிறேனே... இதனால் அபி என்ன பாடு பட்டாளோ இல்லை அந்தப் பாவி என்ன பாடு படுத்தினானோ...' தங்கையை நினைத்து ஆதர்ஷ்க்கு மனம் கலங்கியது...

'ஒருவேளை இந்த விசயம் வெளியில் தெரியாமல் இருப்பதற்குத் தானா அவன் அபியை வன்கொடுமை செய்யத் துணிந்தானா...' நினைக்கும் போதே அவனுக்குப் பகீரென்றது...

நேரே வீட்டிற்கு வந்தவன் அபியிடத்தில் நேரிடையாய் விசயத்தைக் கேட்டான்...

"அக்ஷயை உனக்கு முன்னமே அதாவது என் கல்யாணத்துக்கு முன்னமே தெரியுமா...?" கோபமாய்க் கேட்ட அண்ணனை கண்டு,

"அது வந்து அண்ணா..." சொல்ல முடியாமல் அவள் திணறினாள்...

"அவனோட பிஏ மணி எல்லா விசயத்தையும் என் கிட்ட சொல்லிட்டான்..." என்றவனை இமை மூடாமல் பார்த்த அபியை கண்டு மனம் இரங்கியது அவனுக்கு...

"இந்த அண்ணன் கிட்ட கூட உன்னோட மனக்கஷ்டத்தைச் சொல்லலை இல்ல... அந்தளவுக்கு நீ பெரிய மனுசியாகிட்டியா... இல்லை நான் பாவியாகிட்டேனா...?" கண்கள் கலங்க கேட்ட அண்ணனை கண்டு,

"அண்ணா..." என்று கதறியபடி அவன் தோள் சாய்ந்தாள்...

"அப்படி எல்லாம் இல்லேண்ணா... நீயும் அண்ணியும் பிரிஞ்சிர கூடாதேன்னு தான் அமைதியா இருந்தேன்..." என்றவள் எல்லாவற்றையும் கூறிவிட்டாள்...

இனியும் அண்ணனிடம் மறைத்து வைப்பதில் பயன் இல்லை என்பதால் மனதில் இருந்த துயர் அனைத்தும் அவனிடத்தில் கொட்டிவிட்டாள்...

அவள் சொல்ல கண்கள் சிவக்க கேட்டுக் கொண்டு இருந்தவன் எதுவும் பேசவில்லை... ஆனால் அமைதியாய் மனதுக்குள் யோசிக்க ஆரம்பித்தான்...

அதே நேரம் அக்ஷயிடம் மணிவண்ணன் பாரிவேந்தன் தன்னை அடித்து உதைத்து அவனைப் பற்றிய தகவலை வாங்கிவிட்டதாய் சொன்ன போது அவன் பெரிதாய் அலட்டி கொள்ளவில்லை...

ஆனால் மிகச் சரியாகக் காஞ்சிபுரம் திட்டத்தைப் பற்றி மட்டும் அவர் விசாரித்தது குறித்து அவன் மனதில் எச்சரிக்கை மணி அடித்தது...

"நீ போ மணி... இதை நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் மணியை நன்கு ஓய்வு எடுத்த பின் வேலைக்கு வர சொன்னான்... பாவம் மணி என்ன பாவம் செய்தான்...

மணி சென்றதும் அவன் மனம் பாரிவேந்தனிடம் தாவியது... அவன் நினைத்தது போல் அவர் சாதாரணமானவர் இல்லை...

இந்தப் பிரச்சினை எந்த ரூபத்தில் அவனைத் தாக்கப் போகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... அபிக்காக என்ன தண்டனை வேண்டும் என்றாலும் ஏற்க அவன் தயாராக இருந்தான்...

அதற்கு அடுத்த நாள் அக்ஷய்க்கு எதிராய் வம்படியாய் நில கையகப்படுத்தியதாக வழக்குப் பதிவு செய்த பலருடன் ஆதர்ஷும் தனது புகாரை பதிவு செய்தான்... அத்தோடு தன் தங்கையைக் கடத்தி மிரட்டியதையும் சேர்த்துப் புகார் கொடுத்தான்...

அக்ஷயை விசாரிக்க வந்த காவல்துறையினரிடம் மற்ற புகார்கள் எதையும் ஒத்து கொள்ளாதவன் அதற்கான ஆவணங்களை எல்லாம் சரியாய் அவர்களிடம் நீட்டினான்...

ஆம்... அவன் அவர்களிடம் பலாத்காரமாய் நிலத்தைப் பிடுங்கி இருந்தாலும் அவன் எதையும் நேரடியாக வாங்கவில்லை... வேறு ஒருவர் மூலம் எல்லாவற்றையும் வாங்கி அதன் பின்னரே அவனின் பெயருக்கு நிலம் கை மாறி இருந்தது... வழக்குப் போடுவதாக இருந்தால் உண்மையில் அதை வாங்கி அக்ஷய்க்கு வித்தவனிடம் தான் வழக்கு போட வேண்டும்...

எல்லாவற்றுக்கும் உரிய ஆவணங்களை எடுத்து நீட்டிய அக்ஷயிடம் காவல்துறையால் எதுவும் பேச இயலவில்லை...

அப்போது தான் ஆதர்ஷ் அளித்த புகாரின் அடிப்படையில் மீண்டும் அபி விசயம் பற்றி விசாரித்தனர்... எல்லாவற்றுக்கும் ஆவணங்களைச் சரியாய் கொடுத்த அக்ஷய் இதற்குத் தன் மனசாட்சி சொல்படி நடந்து கொண்டான்...

அவன் அந்தப் புகாரை மறுக்கவில்லை... ஆமோதித்து ஏற்றுக் கொண்டான்...

நகரத்தில் பெரிய புள்ளி... உடனே அவன் கையில் விலங்கை மாட்ட முடியவில்லை... அதனால் கைது செய்து இருந்தாலும் விசாரிக்க என்று தான் அவனை அழைத்துச் சென்றனர்...

அபி விசயத்தில் ஆம் என்ற நிலைப்பாட்டைத் தவிர அவனிடத்தில் இருந்து வேறு பதில் இல்லை...

அவனை விசாரிக்க முயன்று களைத்து போன அதிகாரிகள் அவனைத் தனியே விட்டு செல்ல... அவனது நினைவுகள் அபியை நோக்கி சென்றது...

'ரக்ஷி... உனக்குச் செய்த துரோகத்துக்கு நான் தண்டனையை ஏற்க முடிவு பண்ணிட்டேன்... இப்போ உன்னால என் குழந்தையைத் திருப்பிக் கொடுக்க

முடியுமாடி...' கண்ணீரோடு மனதுக்குள் பேசியவனின் வார்த்தைகள் ஊமையின் ராகமாய்ப் போனது...

அக்ஷயின் நிலை அறிந்து துளசி அபியிடம் தான் ஓடினார்...

"அபி நீ வந்தா தான்ம்மா அக்ஷயை காப்பாத்த முடியும்..." தலையும் புரியாமல் வாலும் புரியாமல் சொன்னவரை கண்டு அபி திகைத்து விழித்தாள்...

அவர் எல்லாவற்றையும் கூற அவள் அதிர்ச்சியின் உச்சிக்கே சென்றாள்...

ஆதர்ஷ் இப்படி ஒரு காரியம் செய்வான் என்று அவள் நினைக்கவில்லை... தான் அக்ஷய் மீது கோபமாய் இருந்த போது கூட ஆதர்ஷ் அவனுக்கு ஆதரவாய் நடந்து கொண்டானே... இப்போது ஏன் இப்படி...?

அந்நேரம் அங்கு வந்த ஆதர்ஷ் துளசியைக் கண்டு, "ஏன் இங்கு வந்தீங்க...? உங்க பையனால நாங்க அனுபவிச்ச கஷ்டம் போதாதா... இப்போ என்ன சொல்லி என் தங்கச்சி மனசை கலைக்க வந்து இருக்கீங்க...? இனியும் வேதனைப்படுறதுக்கு அவள் தயாராய் இல்லை..." என்றவன் வாயிலை காட்டி,

"நீங்க போகலாம்..." என்றான் சற்றும் இரங்காமல்...

"அண்ணா..." ஆதர்ஷின் மரியாதையற்ற தன்மை கண்டு அபி திகைக்க...

"ஆது..." பாட்டியின் குரலில்...

"ஆச்சி..." என்று கத்திய ஆதர்ஷின் கோபம் புதிதாய் இருந்தது அந்த மூதாட்டிக்கு...

அனி விவகாரம் கேள்விப்பட்ட போது கூட ஆதர்ஷ் இந்தளவுக்குக் கோபத்தை வெளிப்படுத்தவில்லை... ஆனால் இன்று ருத்ரமூர்த்தியாய் அவன் நின்று இருந்தான்...

எதுவும் செய்ய இயலாதவராய் துளசி அழுது கொண்டே சென்றார்...

அவர் செல்வதைக் கண்கள் கலங்க பார்த்துக் கொண்டு இருந்த அபியை கண்டு ஆதர்ஷ் அவளைத் தன் பக்கம் திருப்பினான்...

"இப்போ நீ சந்தோசப்படணும் அபி... நரகாசுரன் இறந்ததைத் தீபாவளியா கொண்டாடுற மாதிரி நீ இதைக் கொண்டாடணும்... வாயை திற..." என்றவன் கையில் இருந்த இனிப்பை எடுத்து அவளுக்கு ஊட்டிவிட்டான்...

விசயம் கேள்விப்பட்டு வீட்டிற்கு வரும் போது இதை அவன் வாங்கி வந்து இருக்க வேண்டும்...

அவன் ஊட்டிய இனிப்பு நியாயத்திற்குத் தித்திப்பாய் இனித்து இருக்க வேண்டும் அபிக்கு... ஆனால் அதை உண்ண முடியாமல் ஏதோ ஒன்று தொண்டையை அடைத்தது...

மனதில் இருந்த அக்ஷய் மீதான காதல் கொடுத்த துக்கம் இனிப்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் வாய்க் கசந்தது... வாந்தி வரும் போல் இருந்தது...

அதற்கு மேல் தாங்க முடியாமல் குளியலறைக்குள் ஓடியவள் வாயில் இருந்த இனிப்போடு உண்ட உணவு அனைத்தையும் சேர்த்து வாந்தி எடுத்தாள்...

முழுவதும் எடுத்து முடித்த பின் முகத்தைக் கழுவி கொண்டு நிமிர்ந்தவளின் கண்களில் இருந்து தாரை தாரையாய் வழிந்த கண்ணீர் கழுவிய தண்ணீரையும் மீறி வழிந்தோடியது...

முகம் பார்க்கும் கண்ணாடியை பார்த்தவளுக்கு அதில் அவளது முகம் தெரியவில்லை... மாறாக அக்ஷயின் புன்னகை முகம் தெரிந்தது...

"ஏண்டா இப்படிப் பண்ணின...? உன்னைக் காதலிச்சதுக்காக நான் படுற கஷ்டம் போதும்... இதுக்கு

மேல என்னால தாங்க முடியாது..." என்றவளின் கைகள் அவளது வயிற்றின் மீது இறுக்கமாய்ப் படிந்தது...

"ஏன் இந்தக் குழந்தையை வேண்டாம்ன்னு சொன்னேன் தெரியுமா...? என் மனசில் நீ எப்பவும் நல்லவனா தான் இருக்க... ஆனா இந்தக் குழந்தை... இந்தக் குழந்தை..." எதையோ நினைத்து அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"இந்தக் குழந்தை நீ எனக்குப் பண்ணிய கொடுமையைத் தான் நியாபகப்படுத்துது... அப்படிப்பட்ட ஒரு கொடுமைக்காரனை போய் நீ காதலிக்கிறியே அம்மான்னு அது என்னைப் பார்த்து கேலி பேசி சிரிக்கிற மாதிரி எனக்குத் தோணுது... என் மனசில் நீ நல்லவன்னு நான் நினைச்சு இருக்கிற கற்பனையை அது உடைக்குது..."

"இதோ இப்பவும் உனக்காகத் தான் இதைப் பெத்துக்கப் போறேன்... உன் மீதுள்ள காதலால் தான் பெத்துக்கப் போறேன்... உன் காதல் எப்படியோ... ஆனால் என் காதல் உண்மையானது..." என்று சொன்னவளின் கண்களில் கண்ணீர் மட்டும் வற்றவில்லை...

"ரக்ஷி..." திடுமென ஒலித்த அக்ஷயின் குரலில் ஆவலுடன் திரும்பி பார்த்தாள்...

அங்கே கதவில் சாய்ந்து புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்த அக்ஷயை கண்டவள் சந்தோஷ மிகுதியில்...

"வந்துட்டீங்களா அக்ஷய்..." என்ற கூவலுடன் விரைந்து வந்து அவனை அணைத்து கொண்டாள்...

"அண்ணா... நீங்க ஜெயில்ல இருக்கிறதா சொன்னானே..." என்று தேம்பியவளின் தலையை ஆறுதலுடன் வருடி கொடுத்தது அக்ஷயின் கரங்கள்...

"காத்தை கூடக் கட்டி போட முடியும்... ஆனா உன் அக்ஷயை அப்படிக் கட்டிப் போட முடியுமா..." கண்சிமிட்டி

சிரித்தவனைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தவளின் முகத்திலும் புன்னகையின் சாயல்…

பூக்கும்…

"அக்ஷய்..." தன்னவனின் நெஞ்சில் முகம் புதைக்க எண்ணி அபி தன் முகத்தை அவன் நெஞ்சில் வைத்து அழுத்த கதவின் பலகை அவளது முகத்தை உறுத்தியது...

அது அக்ஷய் இல்லை என்று உணர்ந்தவள் தவிப்புடன், "அக்ஷய்... அக்ஷய்..." என்று அழைத்தாள்... அவளது கண்கள் ஒருவித அலைப்புறுதலுடன் அவனைத் தேடி குளியலறையைச் சுற்றி வந்தது...

எங்கும் அவனைக் காணவில்லை... ஆனால் அவன் அவளை அழைத்தது பொய் இல்லையே... அவன் அவளை அணைத்தது பொய் இல்லையே...

அந்தக் கணம் அவனது அணைப்பை உணர்ந்தார் போன்று அவளது தேகம் சிலிர்த்தது... அடுத்தக் கணம் நிதர்சனம் அவளைத் தாக்கியது...

எல்லாமே கானல் நீராய் பொய்யாய் போனதே... அவன் தான் சிறையில் இருக்கிறானே...

அதை நினைத்தவளுக்கு மீண்டும் கண்களில் கண்ணீர் பெருகியது... நிழலுக்கும் நிஜத்துக்கும் இடையில் போராடி போராடி தோற்று போனவளாய் மனதுக்குள் துவண்டு போனாள்...

நிற்கு முடியாமல் கால்கள் துவள குளியலறை விட்டு அவள் வெளியில் வர கோமதி பாட்டி கவலையுடன் அங்கு நின்று இருந்தார்...

"இந்த மாதிரி நேரத்தில் இப்படித் தான் இருக்கும்... வந்து படும்மா அபி..." அவர் சொன்னதும் அவள் படுக்கையில் அமர...

ஆதர்ஷ் கையில் எலுமிச்சைப் பழச்சாறுடன் வந்தான்... "இதைக் குடி அபி... வாமிட் நிக்கும்..."

அதை வாங்கி இரு வாய் குடித்தவள் மேலும் குடிக்க முடியாமல் அவனிடம் நீட்டினாள்... அவளை ஓய்வு எடுக்கச் சொல்லி விட்டு பேரனும், பாட்டியும் வெளியில் வந்தனர்...

அவர்கள் சென்றதும் அவள் மனதில் கலக்கம் சூழ்ந்தது...

"ரக்ஷி... தைரியமான நீ இப்படிக் கலங்கலாமா...?" மீண்டும் ஒலித்த அக்ஷயின் குரலில் அவளது முகம் மலர்ந்தது...

"காதல் வந்தால் எல்லோரும் கோழை தான்..." விசும்பியவளை பார்த்து,

"நான் தான் உன் கூடவே இருக்கேனே... நீ தைரியமா இருக்கணும்... இந்த மாதிரி நேரத்தில் சந்தோசமா இருக்க வேண்டாமா...? இனி நீ இப்படி இருக்கக் கூடாது... இது தான் கடைசித் தடவை..." என்ற அக்ஷயை இமைக்காமல் பார்த்தவள் பிறகு,

"ம்... ம்..." என்றாள் சம்மதமாக...

"தூங்குகிறாயா...?"

அவன் கேட்டதும் எப்போதும் போல் அவன் மடியில் தலை வைத்து படுத்தாள்... அவனது கைவிரல் மென்மையாய் அவளை வருடி கொடுத்தது...

ஆனால் நிஜத்தில் அவள் தலையணையில் படுத்து இருந்தாள்... மின்விசிறி ஓடியதில் உண்டான காற்று அவளை இதமாய் வருடி கொடுத்தது... அதை எல்லாம் அவள் உணர்ந்து இருந்தும் தறிகெட்டு ஓடும் அவளது கற்பனையை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை...

அது பொய் என்று தெரிந்து இருந்தாலும் அதில் அவள் அடையும் சுகம், இனிமை அது எல்லாம் உண்மையே... இது அவனை அவள் நேசித்த காலம் தொட்டு அவள் காணும் கனவு... ஆனால் அவளைப் பொருத்தவரை இது நனவு... இது அவளை உயிர் வாழ வைக்கும் உயிர் காற்று...

விருப்புக்கும் வெறுப்புக்கும் நடுவில் அவள் சிக்கி மூச்சு திணறினாள்... அக்ஷய் மீது இருக்கும் காதல் நிழலை

நேசிக்கிறது... அக்ஷய் மீது இருக்கும் வெறுப்பு அவனது நிஜத்தை கண்டு வெறுக்கிறது...

இரண்டும் வேறு வேறு அல்ல ஒருவன் தான் என்று மூளை உணர்த்திய போதும்... அவளது மனம் அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தது...

தன்னை விசமாய் வெறுக்கும் ஒருவனைத் தான் காதலிப்பது குறித்து அவளுக்கே தன் மீது வெறுப்பாய் இருந்தது... அதிலும் தன் மானத்தைப் பேரம் பேசியவனிடமே தன் மனம் இடறி விழுந்த அசிங்கத்தை எண்ணி அவளுக்கு அவமானமாய் இருந்தது...

காதலுக்குக் கண் இல்லை என்பது போல்... அது மான அவமானமும் பார்ப்பது இல்லை போலும்...

அக்ஷய் மீது அவள் கொண்ட காதலை நோக்கி அவளையும் அறியாது அவளது மனம் பயணப்பட்டது...

அன்று அவளின் ஆடை விலகிய போது கண்ணியம் காத்து திரும்பி நின்ற அக்ஷய் அவளையும் அறியாது அவளது மனதில் ஆழப் பதிந்துவிட்டான்... ஆனால் அவன் மீது இருந்த கோபத்தில் அதைப் பற்றி அவள் மேலே ஆராயவில்லை...

அதையும் ஆராயும் விதமாக மறுநாளே அதற்கான ஒரு சந்தர்ப்பம் வந்தது...

அனி ரஞ்சித்தை சந்தித்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட அக்ஷய் தன் தங்கையைப் பரிசோதிக்க எண்ணி மறுநாள் மாலையில் அவளது வீட்டிற்கு வந்தான்...

அவனுக்குக் கதவை திறந்துவிட்ட அபி அவனை வாயில்லேயே நிறுத்தி, "வீட்டில் யாரும் இல்லை..." என்றாள் முகத்தில் அடித்தார் போன்று...

அதில் முகம் கறுத்தாலும் அவன் அவள் பேச்சை அசட்டை செய்து விட்டு அவளை இடிப்பது போல் வீட்டிற்குள்

நுழைந்தான்... அவனின் செயலில் அவள் தன்னிச்சையாய்ப் பின்னால் நகர்ந்தாள்...

வரவேற்பறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவன், "அனி எங்கே...?" என்றான் அமர்த்தலாய்...

'வெளியில் போயிருக்காங்கன்னு சொல்றேன்ல...' என்று மனதுக்குள் நினைத்தவள், "பாட்டி கூடக் கோவிலுக்குப் போயிருக்காங்க..."

அக்ஷய் இங்கு வருவதைத் துளசி மூலம் அறிந்த அனி அண்ணனிடம் நல்ல பெயர் எடுப்பதற்காகக் கோமதி பாட்டியை கோவிலுக்கு அழைத்துச் சென்று இருந்தாள்...

"ஓ... அப்படியா..." என்றவன் அங்கு இருந்த டீப்பாய் மீது இருந்த நாளிதழை எடுத்துப் படிக்கத் துவங்க...

அதில் எரிச்சல் அடைந்தவள், "அவங்க வர லேட்டாகும்..."

கையில் இருந்த நாளிதழை இறக்கியவன் அவளைக் கேலியாய் பார்த்தபடி, "வீட்டுக்கு வந்து இருக்கும் விருந்தினனுக்கு ஒரு காபி கிடையாதா... அவ்வளவு தான் தமிழர் பண்பாடா... இல்லை பண்பாடு தெரியாதா...?" அவளைச் சீண்டினான்...

'நீ விருந்தினனா... நீ என் எதிரிடா...' மனதில் நினைத்தவள் அவனை முறைத்துக் கொண்டு காபி கலந்து கொண்டு வந்து அவன் முன் நங்கென்று வைத்தாள்... காபி தளும்பி சிதறியது...

அவன் வாழ்நாளில் இத்தனை அவமரியாதையாய் யாரும் அவனுக்குக் காபி கொடுத்தது இல்லை...

அவளை ஏறிட்டு உணர்வில்லாத பார்வை பார்த்தவன், "உன் கையால் காபி குடிக்கிறதுக்கு விசத்தைக் குடிக்கலாம்..."

"முதல்ல அதைச் செய்... அப்பத்தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்..." எரிச்சலுடன் மொழிந்தவள் தன் அறைக்குள் சென்று கதவை அடைத்தாள்...

அவளது உதாசீன நடவடிக்கை அவனை அவமானப்படுத்திய போதும் அனியை பார்த்து விட்டு போக வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அவன் அமைதியாய் அமர்ந்து இருந்தான்...

அபி அப்போது தான் வேலை முடித்துக் களைத்து வந்து இருந்தாள்... குளிப்பதற்காகக் குளியலறைக்குள் நுழைந்தவள் குளித்து முடித்துவிட்டு வெளியில் வரும் வேளையில் அங்குத் தேங்கி இருந்த சோப்புத் தண்ணியில் கால் வைத்தவள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் வழுக்கி மல்லாக்க விழுந்தாள்...

"ஆ..." என்ற பெரும் அலறலுடன் கீழே விழுந்தவளின் சத்தம் வரவேற்பறையில் அமர்ந்து இருந்த அக்ஷய் காதில் விழுந்தாலும் அவன் உடனே எழுந்து போகவில்லை... அந்தளவுக்கு அபி மேல் அவனுக்கு வெறுப்பாய் இருந்தது...

பத்து நிமிடம் கழிந்தும் அறையில் இருந்து அவள் வெளிவராததைக் கண்டு அவனது மனம் தடுமாறியது...

'அவளுக்கு ஏதும் ஆபத்தா... போய் உதவி செய்வோமா...' என்று நல்ல மனதும்...

'அவளுக்கா ஆபத்து வரும்... அந்த ஆபத்துக்குத் தான் அவளால் ஆபத்து வரும்... டெரர் கேர்ள்...' என்று கெட்ட மனதும் அவனுள் பட்டிமன்றம் நடத்த அவன் அசையாது அமர்ந்து இருந்தான்...

என்ன இருந்தாலும் அவனின் அடிப்படை நல்ல குணம் அவனை உதவப் பணித்தது...

"அபி..." என்றான் அவளது அறைக் கதவை தட்டி...

என்ன தான் இருந்தாலும் ஒரு பெண்ணின் அறைக்குள் அனுமதி இல்லாமல் அத்துமீறி பிரவேசிக்க அவனுக்கு விருப்பம் இல்லை...

அவளிடம் இருந்து பதில் இல்லாது போகவும் மீண்டும் அவளை அழைத்தான்...

"அபி... அபி..." அதற்கும் பதில் இல்லை என்றதும் இந்த முறை அவனிடத்தில் மெல்லிய பதட்டம் தொற்றியது...

கதவின் கைப்பிடியில் கையை வைத்து அதை ஆட்ட கதவு திறந்து கொண்டது... கதவை அவள் தாளிடவில்லை...

அறையில் அவள் இல்லாததை உணர்ந்து குளியலறை முன் நின்று அவன் குரல் கொடுத்தான்...

"அபி... அபி..." என்றவன் கதவை தட்ட...

அபியிடம் இருந்து பேச்சு மூச்சு இல்லை... சுற்றும் முற்றும் பார்த்தவனுக்கு அறைக்குள் இருந்த அபி வேறு எங்கும் சென்று இருக்க வாய்ப்பு இல்லை என்றே தோன்றியது... நிச்சயம் அவள் குளியலறையில் தான் இருக்க வேண்டும்...

'ஒருவேளை கீழே விழுந்துவிட்டாளோ...' என்று நினைத்தவன் கதவை திறக்க முயல அது மூடி இருந்தது...

கதவை பலமாய்த் தட்டி பலன் இல்லை என்றதும் அதை முட்டி மோதி அவன் திறந்ததில் பலம் இல்லாத அந்தப் பிளாஸ்டிக் கதவு திறந்து கொண்டது...

மயங்கிய நிலையில் அபியை கண்டவன் அதிர்ந்து போனான்...

உடனே அவளைத் தூக்கி வந்து படுக்கையில் படுக்க வைத்தவன் அவள் இருந்த கோலம் கண்டு அவளைப் பார்க்க கண்கள் கூசி அருகில் கிடந்த போர்வையை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டான்... பின் அவளின் மயக்கத்தைப் போக்கும் விதமாக நீரை எடுத்து தெளிக்க அதில் அவள் மெல்ல கண் விழித்தாள்...

தன் முகம் அருகே இருந்த அக்ஷய் முகம் கண்டு,

"நீ எப்படி இங்கே...?" என்று பயந்து அலறியவளை கண்டு,

"ஏய் லூசு... எதுக்கு இப்படிக் கத்துற...? கேட்கிறவன் என்னை இல்ல தப்பா நினைப்பான்..." அந்த நிலையிலும் அவன் அவளைக் கடியத்தான் செய்தான்...

பின்னே பாவம் என்று அவளைக் காப்பாற்றினால் அவள் என்னடா என்றால் வில்லனை கண்ட கதாநாயகி போல் இப்படி அலறுகிறாள்...

அவனது வார்த்தை அவளின் மனதில் ஏறவில்லை... அவசரமாய்த் தன்னை ஆராய்ந்தாள்... குளித்து முடித்து உடுத்திய ரவிக்கை, உள் பாவாடையுடன் அவள் கீழே விழுந்தாள்... ஆனால் இப்போது அவள் மீது போர்வை போர்த்தப்பட்டு இருந்தது...

தரையில் வழுக்கி விழுந்ததில் அங்கு இருந்த திண்டின் விளிம்பு மீது தலைப்பட்டது தான் அவளுக்குத் தெரியும்... அதன் பின் அடி விழுந்த அதிர்ச்சியில் மயங்கி போனாள்... நோஞ்சான் உடம்புக்காரியான அவளுக்கு அடிப்பட்டதைத் தாங்கும் சக்தி இல்லை... அதான் அவளை மயக்க நிலைக்கு இட்டுச் சென்றுவிட்டது...

அவன் முன் இப்படிக் கீழே விழுந்து கிடந்தது அவளுக்கு அவமானமாய் இருக்க அந்த எரிச்சலில் அவனைப் பார்த்து,

"நீ முதல்ல வெளியில் போ..." என்று கத்தியவளை கண்டு அவனுக்கும் எரிச்சல் வந்தது...

"ஆமாம்... எனக்கு வேண்டுதல் பாரு... உன்னை இந்த நிலையில் பார்க்கணும்ன்னு... ஐயோ பாவமேன்னு காப்பாத்தினா நீ இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவ..."

"நீ காப்பாத்தலைன்னா நான் ஒண்ணும் செத்துப் போயிருக்க மாட்டேன்..."

"செத்து போன்னு விட்டு இருக்கணும்... உனக்குப் போய் உதவ வந்தேன்னே பாரு என்னைச் சொல்லணும்..." என்றவன் அறையை விட்டு கோபமாய் வெளியில் சென்றான்...

போகும் போது கதவை சாத்திவிட்டு வெளியில் சென்றவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் மனதில் இப்போது லேசாக இதம் பரவியது...

மேலே போர்த்தி இருந்த போர்வையை மேலும் இழுத்துப் போர்த்திக் கொண்டவள் முகத்தில் அவளையும் அறியாது நிம்மதி புன்னகை எழுந்தது...

மெல்ல எழுந்தவள் புடவையைச் சுற்றிக் கொண்டு வெளியில் வந்தாள்...

இப்போது அனி வந்து இருக்க அவன் அவளுடன் பேசி கொண்டு இருந்தான்... கோமதி பாட்டி இவளை கண்டதும்,

"அபி... அக்ஷய்க்கு காபி கொடுத்தியாம்மா...?"

"அதெல்லாம் கொடுத்தா..." என்றான் அவன் அவளை முந்தி கொண்டு...

இன்னொரு முறை அவமரியாதை காபியை ஏற்க அவனுக்கு விருப்பம் இல்லை...

பாட்டி அருகில் சென்று அமர்ந்தவளின் மனதில் ஏனோ இனம் புரியாத படபடப்பு... ஏன் என்று யோசித்தவளுக்குக் காரணம் புரிந்தது...

அவள் அப்போது இருந்த நிலை கண்டு இப்போது எண்ணி பார்த்தவளுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது... அரைக் குறை ஆடையில் அவள் இருந்தும் கண்ணியம் தவறாமல் அவளைத் தூக்கி வந்து அவள் மீது போர்வையைப் போர்த்தி விட்டு முதலுதவி செய்த அக்ஷய் மீது மனதில் இருந்த வெறுப்பைத் தாண்டிய ஒரு உணர்வு சுகமாய்ப் பரவத் தான் செய்தது...

அவன் எத்தனையோ முறை அவளைத் தனது இளக்கார செயலால், கேலி பேச்சால் படுத்தி எடுத்து இருக்கிறான்... அது வெறுப்பாய் மனதை கசக்க செய்தாலும்... அவன் இரு முறை நடந்து கொண்ட கண்ணியம் அவள் மனதில் பசை போல் ஒட்டி கொண்டது...

இதுநாள் வரை வெறுப்பாய் பார்க்கப்பட்டவனிடத்தில் காணப்பட்ட இந்த நல்ல குணம் அவன் மீதான ஈர்ப்பை அவளுள் விதைத்தது...

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்... அழகாய், கம்பீரமாய், உயரமாய்க் கதாநாயகனை போன்று இருந்த அவனின் உருவம் அவள் மனதில் ஆழமாய்ப் பதிந்தது... இத்தனை நாள் தினமும் அவள் பார்த்து வந்த உருவம் தான்... ஆனால் இன்று அவள் அவனைப் பார்க்கும் பார்வையே வேறு அல்லவா...

அவனது தோற்றம் அவளுள் புதிய மாற்றத்தை உண்டு பண்ணியது... அது அவளது கன்னி மனதை கற்பிழக்க செய்தது...

விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் இருக்கும் நூலளவு இடைவெளியை அக்ஷயின் கண்ணிய குணம் அவளை விரும்பியே தாண்ட செய்தது...

அவன் விடைப்பெற்றுச் செல்லும் வரை அங்கே இருந்தவளை அவன் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை... அவனைப் பொருத்தவரையில் அவளைப் பற்றிய எண்ணம் என்றுமே மாறப் போவது இல்லை...

அன்று இரவு படுக்கையில் படுத்தவளுக்கு அவனது நியாபகமே... நேற்று அவனது கை இடையில் பட்ட போது உடல் சிலிர்த்தது போல் இப்போதும் அவளது தேகம் சிலிர்த்தது அவனது தொடுகையை எண்ணி...

மனதுக்குள் அழகிய ரோஜாப் பூவாய் மொட்டு விட்ட நேசத்தை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தாள்... காதல் வந்தால் உடனே கள்ளத்தனம் வந்துவிடும் போலும்...

மறுநாள் அக்ஷயை சந்திக்கும் போதும் அவளுள் இந்தப் படபடப்பு, உணர்வு இருந்து கொண்டே இருந்தது... அவளையும் அறியாமல் அவனைப் பார்க்கும் போது மெல்லிய வெட்கம் தயக்கம் அவளுள் எட்டி பார்க்கத் தான் செய்தது... அதனால் அவனை நேருக்கு நேர் சந்திப்பதை தவிர்க்க ஆரம்பித்தாள்...

அன்று அப்படித்தான் வழக்கம் போல் அவனது அறைக்குக் கையெழுத்திட சென்ற போது கதவை தட்டி விட்டு தான்

உள்ளே சென்றாள்...

ஆனால் அது அவன் காதில் விழவில்லை போலும்... உடன் மதி இருந்ததால் கூட இருக்கலாம்... இருவரையும் சேர்த்து பார்த்தவளுக்குத் தன்னுடைய உண்மை நிலை புரிவதாய்...

அவள் மனதில் மொட்டவிழ்ந்த காதல் மொட்டிலேயே கருக ஆரம்பித்தது... சீட்டு கட்டு மாளிகை போல் கீழே விழுந்து சிதறியது... அவளது உச்சந்தலையில் யாரோ சுத்தியலை நங்கென்று போட்டது போல் அவளுக்குத் தன் நிலை மண்டையில் உறைத்தது... வாழ்வின் நிதர்சனம் முகத்தில் அறைந்தது...

"ஏய் உனக்கு அறிவு இல்லை... ஒருத்தங்க ரூமுக்கு வரும் போது கதவை தட்டிட்டு வரணும்ங்கிற பேசிக் மேனர்ஸ் கூடத் தெரிய வேண்டாம்... நாங்க லவ்வர்ஸ் தனியா இருக்கும் போது இப்படித் தான் வர்றதா...?" மதி ஆங்காரத்தில் கத்த துவங்கினாள்...

அவளே இப்போது தான் அக்ஷயின் மனதை கரைத்து வெளியில் அழைத்துப் போக வந்து இருந்தாள்... அந்த நேரம் பார்த்து அபி காரியத்தைக் கெடுப்பது போல் இடையில் வந்து நிற்கிறாள்...

மதி கத்தியதை கூட அபியால் பொறுத்துக் கொள்ள முடியும்... ஆனால் மதி பேசியதை எல்லாம் முகத்தில் நமட்டுச் சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த அக்ஷயை அவளால் நம்ப முடியவில்லை...

முகத்தில் சுடுநீர் முகத்தில் ஊற்றியது போல் துடித்துப் போனாள்...

அவள் காதல் கொண்டுள்ள அக்ஷய் இவனில்லை... இந்த அக்ஷய் அவளை உயிரோடு கொல்லும் ராட்சசன்... சந்தர்ப்பம் எப்போது கிடைத்தாலும் அவளைக் கபளீகரம் செய்யத் துடிக்கும் வேட்டைக்காரன் இவன்...

அதே சமயம் அடுத்தவள் காதலன், கணவன் மீது ஆசை வைத்த தனது பொருந்தா காதலை எண்ணி மனம்

துடித்துப் போனாள்...

'நானா இப்படி... அடுத்தவளுக்கு என்று நிச்சயம் பண்ணியவனையா நான் மனதுக்குள் பூஜிக்கிறேன்...' மனம் அதிர்ந்தவளாய் நின்று இருந்தவளை அவனின் குரல் நனவுலகத்திற்கு அழைத்து வந்தது...

"மதி... டென்த் படிச்சவ கிட்ட போய்ப் பேசிக் மேனர்ஸ் பத்தி கிளாஸ் எடுக்கிறியே... அதைப் பத்தி அவளுக்கு என்ன தெரியும்...?" இளக்காரமாய்க் கேட்டவனின் பார்வை மதியிடத்தில் இல்லை மாறாக அபியின் மீது இருந்தது...

அபியை பற்றி இகழ்ந்து பேசுவதற்கு அவன் மதியுடன் கூட்டணி வைத்துக் கொண்டான்...

அவனது வார்த்தையில் மிகவும் அவமானம் அடைந்த அபி கலங்கிய மனதையும், கண்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு ஒன்றும் பேசாது அங்கு இருந்த வருகை ஏட்டில் கையெழுத்து போட்டு விட்டு வெளியில் வந்தாள்...

வெளியில் வந்ததும் அத்தனை நேரம் அடக்கி வைத்து இருந்த கண்ணீர் வழிந்தது... என்ன முயன்று அடக்க முடியாமல் தோற்று போய் நின்று இருந்தாள் அவள்... அதில் மட்டுமா காதலிலும் தான்...

அன்றைய இரவு அவளுக்குத் துக்கத்தில் தூக்கம் வரவில்லை...

'அவன் எனக்கு இழைத்த அநீதிகளை மறந்து எப்படி அவனைப் போய்க் காதலித்தேன்... போயும் போயும் நான் காதலிக்க அவனா கிடைக்க வேண்டும்... இத்தனை நாள் கட்டுப்பாடாய் இருந்தது போல் இந்தப் பாழாய் போன மனது இனியும் இருந்து இருக்கக் கூடாதா... என்னுள் எப்படி நிகழ்ந்தது இந்த மாற்றம்...?' தனக்குத் தானே கேள்வி கேட்டு கொண்டாள்...

முதன் முறையாய் அவளைத் தொட்ட ஆண் மகன் அவன் தான்... அவளை அந்த மாதிரி அரைக் குறை உடையில் பார்த்தவனும் அவன் மட்டுமே... ஆனால் அது மட்டும்

அவளது காதலுக்குக் காரணம் அல்லவே... அவள் என்ன அவனது தொடுகைக்கு மயங்கியா காதல் கொண்டாள்... அவனது கண்ணிய குணம் கண்டு தானே காதல் கொண்டாள்...

கண்ணியம் மிக்க அக்ஷய் உண்மை எனில்... இன்று அவளைப் பார்த்து இகழ்ச்சியாய் சிரித்த அக்ஷய் யார்...? இதில் யார் உண்மையானவன்...? இதில் யார் அவள் மனதை களவாடிய காதலன்...? யார்...? யார்...? யார்...? என்று யோசித்தவள் மனம் களைப்புற உறங்கி போனாள்...

நடுஇரவில் கனவில் அவளைக் காதலோடு அணைத்து காதல் மொழி பேசிய அக்ஷயை கண்டு வியர்த்து விறுவிறுத்து எழுந்தாள் அபி... ஆனால் அந்தக் கனவு அவளுக்கு நிரம்பப் பிடித்து இருந்தது... அவளது ஆழ்மனது ஏக்கத்தைக் கனவில் கரைத்தாள்...

அவளது காதல் கொண்ட மனம் அவனைக் கைவிட முடியாமல் தவித்தது... கனவில் அவனைக் காணுவது அவளுக்குச் சுகமாய், இதமாய் இருந்தது...

அதன் பின் கனவில் அவள் அக்ஷயை காதலிக்கத் துவங்கினாள்... கனவில் அன்பாய் தோன்றும் நிழல் அக்ஷயை மிகவும் நல்லவன், தன் காதலன் என்று நம்பியவள்... நேரில் பார்க்கும் நிஜ அக்ஷயை அவனது திமிரான செயலில், கேலி பேச்சில் அறவே வெறுத்தாள்...

உருவம் ஒன்று தான் ஆனால் குணத்தில் இரு அக்ஷயும் வேறு வேறு... அதனால் அவள் இரண்டு பேரையும் வேறு வேறு என்றே கருதினாள்... ஒருவனது கண்ணியத்தைக் காதலித்தவள்... மற்றொருவனின் கண்ணியமற்ற செயலில் அதாவது அவளது மானத்தைக் கேள்விக்குறி ஆக்கியவனை மனமார வெறுத்தாள்...

நிழல் அக்ஷய் அவளுக்கு மட்டுமே சொந்தமானவன்... அதில் அவர்களுக்கு இடையே மதி என்ற வில்லி கிடையாது... பணம், அந்தஸ்து, கல்வி என்ற ஏற்றத்தாழ்வு எதுவும் அவர்கள் இடையே கிடையாது... நிஜ அக்ஷய்

மதிக்கு சொந்தமானவன் என்ற எண்ணம் ஆழப் பதிந்து போனது...

பகலில் நேரில் அவனை வெறுப்பவள் இரவில் கனவில் அவனைக் காதலாய் அணைத்து கொண்டாள்... காதல் கொண்ட மனம் அதில் மகிழ்ந்து போனது... தனது ஏமாற்றத்தை கனவின் பின் மறைத்துக் கொண்டது... காயப்பட்ட அவள் மனதிற்கு அது மருந்தாக இருந்தது...

அதனால் தான் அவளால் அவனது தவறுகளைத் தட்டி கேட்க முடிந்தது... அவளுக்கு அவனால் இழைக்கப்பட்ட அநீதிக்குத் தண்டனை பெற்று தர அவளது மனம் துடித்தது... அதைச் செய்யவும் செய்தாள்...

அன்று அவன் அவளைக் கடத்திய போது கூட அவன் மீது அவளுக்கு இருந்த வெறுப்பையும் மீறி அவளது காதல் அவனிடத்தில் பயம் கொள்ளச் செய்யவில்லை... ஆனால் அவன் உண்மையில் தன்னைக் கடத்தி இருப்பதை அறிந்து தான் அவள் பயம் கொண்டாள்... அவனைத் தாக்கி தப்பிக்க நினைத்தாள்...

அதை விட அவளது பெண்மையை அவன் களவாண்ட போது அவளால் தாங்க முடியவில்லை... அந்நேரம் அவள் மனதில் அடக்கப்பட்ட காதல் அவளையும் அறியாமல் வெளியில் வந்துவிட்டது... அவனிடத்தில் வார்த்தையாய் கொட்டி விட்டது...

அதன் பின்பு அவன் பலமுறை தான் அவனைக் காதலிப்பதாய் சொன்ன போதும் அவள் ஒத்து கொள்ளவில்லை... அவளே தன் ஆழ்மனதை அலசி ஆராயப் பயப்படும் ஒரு விசயத்தை அவன் அசால்ட்டாய்க் கூறினால் அதை எப்படி அவளால் ஏற்றுக் கொள்ள முடியும்...

அதை விட அவள் தான் அவனைக் காதலிக்கவில்லையே... அவள் காதலிக்கும் அக்ஷய் வேறு அல்லவா...

ஆனால் அவன் தண்டனை அனுபவிக்கிறான் என்று கேட்டதும் அவளுள் புதைத்து அடக்கி வைத்து இருந்த காதல் அவளையும் அறியாமல் வெளிவந்து விட்டது...

அவன் தண்டனை பெற வேண்டும் என்று துடித்தவளால் இன்று அந்த மகிழ்ச்சியை முழுவதும் கொண்டாட முடியாமல் ஏதோ தடுத்தது...

அவன் தண்டனை பெற்றால் அது அவளும் பெற்றது போல் அல்லவா...

அவளுக்கு அவன் இழைத்த கொடுமைக்கு அவன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று அவளது வெறுப்பான மனது சொல்கிறது...

ஆனால் அவன் பாவம் என்று அவளது காதல் மனம் அவனைக் கண்டு இரக்கப்பட்டது...

நிழல் அக்ஷயின் காதலுக்கும் நிஜ அக்ஷயின் துரோகத்துக்கும் இடையில் தள்ளாடி தவித்தாள் அபி...

நிழல் அக்ஷயின் காதலை ஏற்றுக் கொண்ட அவள் நிஜ அக்ஷயின் காதலை ஏற்றுக் கொள்வது சந்தேகமே... ஏனெனில் அந்தளவுக்கு அவனால் துன்பப்பட்டு இருக்கிறாள் அவள்...

நம்மில் பலருக்கு இந்த நோய் உண்டு... ஒருவரின் கெட்ட குணத்தை மன்னித்து அவரது நல்ல குணத்தை மட்டும் மனதில் இருத்தி நட்பு பாராட்டுவோம்... ஆனால் அக்ஷய் விசயத்தில் அபியின் நிலை முற்றிலும் எதிர்ப்பதமாய்...

அவனது கெட்ட குணத்தை, அவன் செய்த துரோகத்தை மன்னிக்க முடியாமல் வெளியில் அவனை வெறுப்பவள்... அவனின் ஒரு நல்ல குணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அவன் மீது வந்த தன் காதலை மனதுக்குள் பொத்தி வைத்து போற்றினாள்...

அடுத்து வந்த இரு நாட்களில் அபி சாதாரணமாய் இருப்பது போல் அண்ணனிடம் காட்டி கொண்டாலும் மனதுக்குள்

ஊமையாய் அழுது கொண்டு இருந்தாள்...

அக்ஷயை நினைத்து வேதனை கொண்டவளுக்கு ஒரே ஆறுதல் நிழல் அக்ஷய் மட்டுமே... முதலிலாவது எப்போதாவது சரணடையும் அவனிடத்தில் இப்போது முழு நேரமும் சரணடைந்தாள்...

உண்ணாமல் உறங்காமல் தவித்த அபியின் உடல் பலவீனமாகி அவளை மயக்க நிலைக்கு இட்டுச் சென்றது...

காலையில் அவளை எழுப்ப வந்த பாட்டி அவளின் மயங்கிய நிலை கண்டு பயந்து கத்த ஆதர்ஷ் வந்து தங்கையின் நிலை கண்டு அவளின் மயக்கத்தைத் தெளிவித்து அவளின் உடல் நிலையைப் பரிசோதித்தான்...

அவளின் பலவீனமான நிலையைக் கண்டவன், "இந்த மாதிரி நேரத்தில் உடம்பை பத்திரமா பார்த்துக்கணும் அபி..."

"யாருக்காக அண்ணா நான் வாழணும்..." வெறுப்பும் விரக்தியும் கலந்து பேசியவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தவன்,

"புதுசா என்னலாமோ பேசுற...? ஏன் எங்களுக்காக நீ வாழ மாட்டியா...?" அவனின் பேச்சில் இருந்த அர்த்தம் அவளுக்குப் புரிய,

"அண்ணா..." அழுதபடி அவன் தோள் சாய்ந்தாள்...

"அவரை எப்படியாவது காப்பாத்துண்ணா..." தேம்பியவளின் வார்த்தை ஆதர்ஷை அதிர்ச்சி அடைய செய்தது...

"அபி... நீயா இதைச் சொல்றது...? ஆச்சிரியமா இருக்கு அதே சமயம் அதிர்ச்சியாவும் இருக்கு..." என்றான் மனதை மறையாமல்...

"அவனை மாதிரி ஒரு அயோக்கியனுக்கா நீ சப்போர்ட் பண்ற...?"

"அவர் ஒண்ணும் கெட்டவர் இல்லைண்ணா... கொஞ்சமே கொஞ்சம் நல்லவர் தான்..." என்றவள் தான் உணர்ந்த அக்ஷயின் நல்ல குணத்தைச் சொன்னாள்...

அவளைக் கூர்ந்து பார்த்த ஆதர்ஷ், "நீ அவனைக் காதலிக்கிறியா...?" அவனின் கேள்வியில் தலை குனிந்தவள் பின் மெதுவே,

"ம்... ரொம்ப..." என்றாள் உண்மையாக...

"அவனைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு விருப்பமா...?"

அதற்குப் பதில் தர முடியாமல் தலையைக் குனிந்தாள்...

"நான் அவரைக் காதலிக்கிறது உண்மை... அதே சமயம் அவர் எனக்கு இழைத்த துரோகத்தை மறக்க முடியாம தவிக்கிறதும் உண்மை... அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத் துடிச்சதும் உண்மை... இப்போ அவர் ஜெயிலில் இருக்கிறது தெரிஞ்சு வேதனைப்படுறதும் உண்மை... என் மனசு என்ன நினைக்குதுன்னு எனக்கே புரியலை... ஒரு பக்கம் அவரைப் பிடிக்குது... இன்னொரு பக்கம் அவரை நினைச்சாலே வெறுப்பா இருக்கு... நான் என்னத்தான் செய்ய அண்ணா..." என்று அழுதவளின் காதல் அவனின் மனதையும் கரைப்பதாய்...

கொடியவனிடத்தில் காதல் கொள்ளும் எல்லாப் பெண்களின் நிலை இது தான் போலும்... அதற்காக அக்ஷயை மன்னித்து விட அவன் ஒன்றும் மகான் இல்லையே...

"செய்த தப்புக்குத் தண்டனை அனுபவிக்கிறான் அபி... தண்டனை முடிஞ்சு அவனே வந்துருவான்... இல்லை அவனுக்கு ஜாமீன் எடுத்து கூட்டிட்டு வந்துடுவாங்க..."

"அப்போ அவர் எனக்குச் செய்த கொடுமைக்குத் தான் தண்டனை அனுபவிக்கணும்... அதைத் தான் என்னால் மறக்க முடியலை... ஆனால் நீ நானே மறந்துவிட்ட ஒரு சம்பவத்துக்காக அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து இருக்க..."

"ம்ஹூம்... என்னமா அவனுக்கு வக்காலத்து வாங்குற..." அவளை மெச்சியவன்,

"அதுக்கு நான் புகார் கொடுத்து இருந்தா உன்னையும் சேர்த்துப் போலீஸ் ஸ்டேசன்ல அலைக்கழிச்சு இருப்பாங்க... அதான் அந்த நில மோசடியோடு சேர்த்து இதையும் கொடுத்தேன்..." என்றவன்,

"நேரத்துக்குச் சாப்பிடு அபி... போய்ப் பிரஷ் பண்ணிட்டு வா..."

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்..."

அவளை ஆழ்ந்து பார்த்தவனுக்கு விசயம் புரிந்துவிட்டது...

"எத்தனை நாளா இந்த உண்ணாவிரதப் போராட்டம்..."

"இரண்டு நாளா..." என்றவளை கண்டு அவன் பதறிப் போனான்...

"உனக்காக இல்லைன்னாலும் வயித்தில் வளர்ற குழந்தைக்காகவாவது சாப்பிட வேண்டாமா...?" என்று அவளைக் கடிய...

"அவரே இல்லைன்னு ஆகும் போது இந்தக் குழந்தை எதுக்கு அண்ணா...? அவரைப் பிடிக்காத நீங்க இந்தக் குழந்தை மேல் பாசம் வைக்கிறது ஆச்சிரியமா இருக்கு..."

"உன்னை மாதிரி தான் நானும்... நீ எப்படி அவனை வெறுத்துக் கொண்டே காதலிக்கிறாயோ அது போல் தான் இதுவும்... இந்தக் குழந்தைக்குத் தந்தையாய் அவன் மீது வெறுப்பு இல்லை... ஆனால் என் தங்கைக்குத் தீங்கு செய்தவனாய் அவன் மீது கடலளவு வெறுப்பு இருக்கு..." முகத்தில் மிதமிஞ்சிய வெறுப்பைக் காட்டினான் ஆதர்ஷ்...

"அண்ணா... ப்ளீஸ்ண்ணா... எனக்காக... அவர் செஞ்ச தப்புக்கு இரண்டு நாள் ஜெயிலில் இருந்தது போதாதா... இன்னும் எதுக்குண்ணா இருக்கணும்... அவர் மேல கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிரு... அதுக்கு அப்புறம்

அவர் யாரோ... நாம யாரோ... இனி எந்தப் பிரச்சினையும் வராது..."

தங்கை சொல்வதும் அவனுக்குச் சரியாய்ப் பட்டது... துஷ்டன் என்று தெரிந்தால் தூர விலக வேண்டும்... அதன் படி அந்த அண்ணன், தங்கையிடம் இருந்து இருவரும் ஒதுங்கி இருப்பது நல்லது என்றே நினைத்தான்... அதை விடத் தங்கையின் மனதிற்காகப் புகாரை திரும்பப் பெற காவல் நிலையம் செல்ல முடிவு பண்ணினான்...

அன்றே ஆதர்ஷ் காவல்நிலையம் சென்று புகாரை திரும்பப் பெற்றுக் கொண்டான்... உடன் அபியும் சென்று இருந்தாள்... அக்ஷயை காண ஆவல் கொண்டு தான் அவள் அங்குச் சென்றது...

விசயம் கேள்விப்பட்டுக் கோபிநாத்தும் அங்கு விரைந்து வந்தார்...

"என்னய்யா இது உன் இஷ்டத்துக்குப் புகார் கொடுக்கிற... அப்புறம் உன் இஷ்டத்துக்கு வாபஸ் வாங்குறேன்னு வந்து நிற்கிற... எங்கள பார்க்க என்ன கேனை மாதிரியா இருக்கு...?" அலுத்துக் கொண்டார் அந்தக் காவல் அதிகாரி...

சம்பிரதாய வேலைகள் முடிந்து அக்ஷய் வெளியில் வந்தான்... இரு நாள் சவரம் செய்யப்படாத முகத்துடன் ஆடைகள் கசங்கி இருக்க அவன் இருந்த தோற்றம் அபியின் மனதை வேதனை கொள்ளச் செய்தது...

அக்ஷயும் அவளைத் தான் பார்த்தபடி வந்தான்... அவன் அவளைப் பார்த்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது...

'ரக்ஷி...' என்று அவளிடம் ஓடி சென்று சரணடைய துடித்த மனதை வெகுவாய் அடக்கி கொண்டு தனது காரில் ஏற போனான்...

பின் ஏதோ நினைத்தவனாய் நின்று அபியை திரும்பி பார்த்தான்... அவனது கண்கள் அவளது வயிற்றைத் தான்

ஆராய்ந்தது...

நான்கு மாதக் கருவை சுமந்து இருந்த அவளது ஒல்லி தேகத்தில் பெரிதாய் எந்த மாற்றமும் இல்லை... வயிறு கூட அவ்வளவாகத் தெரியவில்லை... அதனால் அவள் கருவை சுமந்து இருப்பது கூட அவனுக்குத் தெரியவில்லை...

அவள் எப்போதும் போல் சாதாரணமாய் இருப்பதாய் நினைத்தவன் மனம் சொல்லொண்ணா துக்கம் கொண்டது... அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் விருட்டென்று காரில் ஏறி அவன் அமர்ந்தான்...

'என் குழந்தை இப்போ உயிருடன் இல்லை... அழிச்சிட்டா ராட்சசி...' துயருடன் நினைத்தவன் வேதனை தாங்க முடியாமல் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்தான்...

தன்னைக் கண்டு கொள்ளாமல், தன்னிடம் பேசாமல் செல்லும் அவனைக் கண்டு வேதனையுடன் மனம் கலங்க அவள் நின்று இருந்தாள்...

பூக்கும்...

"அக்ஷய்..." வீட்டினுள் நுழைந்த மகனை ஓடி வந்து அணைத்துக் கொண்டார் துளசி...

அனி கவலை தோய்ந்த முகத்துடன் அங்கு நின்று இருந்தாலும் எதுவும் பேசவில்லை...

அன்னையின் அணைப்பிற்குத் தனது இறுக்கத்தைப் பதிலாகக் கொடுத்த அக்ஷய் கல்லாய் உணர்வில்லாது நின்று இருந்தான்... மகனின் இளக்கமற்ற தன்மையை உணர்ந்த அந்தத் தாயுள்ளம் துடித்துப் போனது... முதலில் இருந்த அக்ஷயாய் மாறி இருந்தவனைக் கண்டு அவரது மனம் துயர் கொண்டது...

அன்று அபி குழந்தை உண்டான போது சிறு பிள்ளையாய் குதூகலித்த மகனை அவனுள் தேடி தோற்றார்... காதல்

என்ற ஒன்று அவனை எந்தளவுக்கு இலகுத் தன்மையுடன் மாற்றி இருந்ததோ அந்தளவுக்கு அவனை மீண்டும் இறுகச் செய்துவிட்டதே...

ஆனால் அந்த இறுக்கத்தின் பின்னால் இருக்கும் காதல் தோல்வியின் வலி அந்த அன்னைக்குத் தானே தெரியும்... தாயறியாத சூல் உண்டோ...

"அக்ஷய்... கண்ணா... இங்கே பாரு... இந்தக் காதல், கருமாந்திரம் எல்லாம் உனக்கு வேண்டாம்டா... அந்த அபியால நீ அனுபவிக்கிற கஷ்டம் எல்லாம் போதும்... அவளை மறந்திருப்பா..." என்றார் அவன் படும் வேதனையைக் காண சகிக்காமல்...

"மாம்..." கண்டிப்புடன் அவரைப் பார்த்தவன், "இப்பவும் நான் அவளால தான் வெளியில் வந்திருக்கேன்... அதை நீங்க புரிஞ்சிக்கோங்க..."

ஆதர்ஷை பற்றி அறிந்தவனாய் அபியின் காதலை பற்றியும் தெரிந்தவனாய்... அபியாய் சொல்லி இருக்கா விட்டால் ஆதர்ஷ் அந்தப் புகாரை திரும்பப் பெற்றிருக்க வாய்ப்பு இல்லை... நிச்சயம் இதன் பின்னணியில் அபியின் வற்புறுத்தல் இருக்கும் என்று அவனுக்கு நன்கு தெரியும்...

எந்தளவுக்குத் தன் மேல் அவளுக்குக் காதல் இருக்கிறதோ அந்தளவுக்கு வெறுப்பும் இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியும்... ஆனால் அந்த வெறுப்பின் அளவு அவன் குழந்தையை அழிக்கும் அளவுக்குப் போகும் என்பதைத் தான் அவனால் நினைத்து கூடப் பார்க்கவில்லை... அதை நினைத்தவனின் மனம் கனத்துப் போனது...

"எப்படிக் கம்பீரமா வளைய வந்துட்டு இருந்த உன்னை இப்படி ஜெயிலில் போட்டு கேவலப்படுத்தி இருக்காளே... அவளுக்குப் போய் நீ இன்னமும் சப்போர்ட் பண்றியா...? உனக்கு என்னடா குறைச்சல்...? அவ பின்னாடி தொங்கிட்டு அலையறதுக்கு...? பாவம் பொண்ணா போய்ட்டாளேன்னு நானும் அவளுக்காகப் பரிதாபப்படத் தான் செய்தேன்... ஆனா அதுக்கு அவ நல்ல கைம்மாறு செஞ்சிட்டா... அவ

உனக்கு வேண்டாம் அக்ஷய்... உலகத்தில் அவள் மட்டும் தான் பெண் இல்லையே... உனக்கு நான் நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..." மகன் படும் துன்பம் சகிக்காமல் அவர் புலம்பினார்...

"மாம்... இதையே நீங்க அனிக்கு சொல்வீங்களா...?"

"என்னடா சொல்ற நீ...? நீயும் அவளும் ஒண்ணா...? அவ வாழ்க்கையில் அவளே மண்ணை அள்ளி போட்டுக்கிட்டா... நீ அப்படியா...?"

"அனி தப்பு செஞ்சான்னா... அதே மாதிரி நானும் தப்புச் செஞ்சிருக்கேன்... கற்புல ஆண் பெண்ங்கிற பேதம் கிடையாது மாம்... இது மனசு சம்பந்தப்பட்ட விசயம்... அப்படிப் பார்த்தா...?" என்று நிறுத்தியவன்,

"உடலாலேயும், மனசாலேயும் என்னைத் தீண்டிய ஒரே பெண் அவள் தான்... என் மனசுல அபியை தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் இடம் இல்லை... அவ என்னை ஏத்துக்கிட்டாலும் சரி இல்லை ஏத்துக்கலைன்னாலும் சரி நான் அவளை நினைச்சிட்டு தான் இருப்பேன்... என்னோட உயிர் போகும் வரை..." என்றவன் அதற்கு மேல் பேச்சு முடிந்தது என்பது போல் தனது அறைக்குச் சென்றான்...

"பாருங்க எப்படிப் பேசிட்டு போறான்னு..." கண்கள் கலங்கிய துளசி கணவனிடம் மகனை சாடினார்...

அன்று அபி மேல் கோபப்பட்ட கோபிநாத்தால் இன்று மகனிடம் கோபம் கொள்ள முடியவில்லை... முதலில் மகனை நினைத்து வருத்தம் கொண்டவர் இப்போது பெருமிதம் அடைந்தார்... அவனின் மாற்றம் அவருக்கு அந்தளவுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது... தன்னைப் போல் தன் மகனும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையுடன் இருப்பதைக் கண்டு மனம் நிம்மதி உற்றது... தங்களது வளர்ப்புத் தவறான பாதையில் செல்லவில்லை என்று உணர்ந்தார்...

"துளசி... அவன் பேசிட்டு போறதுல என்ன தப்பு...? இப்படி ஒரு மகனை பெத்ததுக்குச் சந்தோசப்படு... தப்புப் பண்றது மனித இயல்பு தான்... ஆனா அந்தத் தப்பை ஒத்துக்கிட்டு அதைச் சரி செய்ய எத்தனை பேர் முன் வர்றாங்க...? ஆனா நம்ம அக்ஷய் கம்பீரமா முன் வந்ததோடு மட்டுமில்லாம அதைச் சரி செய்யத் தனது வாழ்க்கையை, இளமையைத் தியாகம் பண்றான் பாரு... அது தான் நம்ம அக்ஷய்... இப்படி ஒரு மகன் கிடைச்சது நிச்சயம் நமக்குப் பெருமையான விசயம் தான்..."

"ஆனாலும்..." துளசிக்கு மனம் சமாதானம் ஆகவில்லை...

என்ன குறைச்சல் என்று இந்த அபி தன் மகனை வேண்டாம் என்கிறாள்... அவன் கயவனாக, காமுகனாக இருந்தாலாவது அவள் சொல்வதில் நியாயம் இருக்கிறது... ஆனால் திருந்தி மன்னிப்பு கேட்டபவனை இப்படி மேலும் மேலும் தண்டிப்பது எந்த விதத்தில் நியாயம்...

இதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த அனிக்கு அதற்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை... எழுந்து அறைக்குச் சென்று விட்டாள்...

அண்ணனும், அவளும் செய்த தவறு அவர்கள் இருவரின் வாழ்க்கை முழுவதும் துரத்தும் என்பது மட்டும் அவளுக்கு நிச்சயம் தெரியும்... அக்ஷய் செய்த தவறாவது என்றாவது ஒரு நாள் அபியால் மன்னிக்கப்பட்டு விடும்... ஆனால் தான் செய்த தவறுக்கு மன்னிப்பு...?

ஆதர்ஷ் எப்போதுமே தன்னை மன்னிக்க மாட்டான்... அவன் என்று இல்லை எந்த ஆண் மகனும் தன்னை மன்னிக்க மாட்டான் என்பதை உணர்ந்தவளுக்கு அழுகை பொங்கியது...

அறைக்கு வந்து குளித்து உடையை மாற்றிய அக்ஷய் அலுவலகத்துக்குக் கிளம்பினான்... கண்ணாடி முன் நின்றவன் தனது தோற்றத்தை கண்டு அவனுக்கே திகைப்பாய் இருந்தது... ஓய்ந்து போன தோற்றத்தில்

இருந்த தனது உருவத்தைக் காண சகிக்க முடியவில்லை அவனால்...

'இதற்கே ஓய்ந்து போனால் எப்படி அக்ஷய்...? இன்னமும் நீ சந்திக்க வேண்டியது நிறைய இருக்கே... இனி எப்படி உன் தொழில் முறை நண்பர்களைச் சந்திப்பாய்...? உன் நெருங்கிய நட்புகள், அக்கம் பக்கத்தினர் இவர்களை எல்லாம் எப்படி எதிர் கொள்வாய்...? இரண்டு நாள் நீ ஜெயிலில் இருந்தது அறிந்து உன்னை எல்லோரும் துக்கம் விசாரிப்பார்களே... இதற்கு எல்லாம் எப்படிப் பதில் அளிக்கப் போகிறாய்...?'

அவனது மனசாட்சி அவனைப் பார்த்துக் கேள்விகள் கேட்க தாங்க முடியாமல் கண்களை மூடி கொண்டான்...

காதலுக்காக அவன் செய்த செயல் ஒன்று அவன் இத்தனை நாள் பாதுகாத்து வந்த கௌரவத்தைக் கேள்விக்குறியாக்கி, அவனது தொழிலையும் பாதிக்கப் போகிறது... இதை எல்லாம் தான் எப்படி மீட்டு எடுக்கப் போகிறோம் என்பதை எண்ணி கலங்கி நின்றான்...

எல்லாம் ஒரு நிமிடம் தான் பின் கண்களைத் திறந்து கண்ணாடியை பார்த்தவன் தலை நிமிர்ந்து கம்பீரமாக நின்றான்... முகத்தில் இறுக்கத்தையும் மீறி சிறு புன்னகையைத் தவழ விட்டான்...

'எஸ்... இது தான் பழைய அக்ஷய்...' என்று மனதுக்குள் குதூகலித்துக் கொண்டான்...

காதலுக்காக அவன் செய்தது சரியே என்று அவன் நினைத்தான்... அதனால் பழைய கம்பீரம் திரும்பி விட்டது அவனிடத்தில்...

தொழிலில் எத்தனை இழப்பு வந்தாலும் அவனால் சரி செய்ய முடியும்... அதே போல் அவனைத் தவறாக யார் பேசினாலும் 'நான் அப்படித்தான்...' என்று நிமிர்ந்து நின்றால் கல்லை கண்ட நாய் போல் எல்லோரும் விலகி சிதறி ஓடி போயிருவர்...

அதை எல்லாவற்றையும் விட அவனிடத்தில் இருக்கும் பணம், செல்வாக்கு அவனது புகழை என்றும் குன்ற விடாது... அது இருக்கும் வரை அவனை எதிர்த்தோ, அவமரியாதை செய்தோ யாரும் அவனிடத்தில் நடந்து கொள்ள முடியாது... ஆனால் இழந்த காதலை இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் அவனால் மீட்க முடியாதே...

'ம்ஹூம்... என் காதலை மீட்டு விட்டேனா...' என்று நினைத்தவனுக்கு வேதனையாய் இருந்தது... ஆனால் அவனின் வேதனையை விட அவளின் வேதனை அதிகம் என்பதை உணர்ந்தவனாய் தன்னை மீட்டு கொண்டவன் அலுவலகத்துக்குக் கிளம்பினான்...

போகும் வழியில் நிஷா எப்படி இருக்கிறாள் என்று நலம் விசாரித்தான்... அவளுக்குத் துணையாக இருப்பதற்காக ஒரு வயதான பெண்மணியை ஏற்பாடு செய்து இருந்தான்...

விக்டருக்கு ஜாமீன் கிடைக்க முயற்சித்து வருகிறான்... ஆனால் கிடைத்த பாடில்லை... அடுத்து வழக்கை மேல் முறையீட்டு செய்த போது அசோக் மருத்துவமனையில் இறந்ததால் விக்டர் மேல் சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டு விலக்கப்பட்டு ஆள் கடத்தல் வழக்கு மட்டும் நிலுவையில் இருந்தது... இன்னும் சில மாதங்களில் விக்டர் வெளியில் வந்துவிடுவான்...

ரஞ்சித் தண்டனையை அனுபவித்து வருகிறான் என்று அக்ஷய் கேள்விப்பட்டான்... அத்தோடு சரி... மற்றபடி முன்பு போல் அவன் மீது இருந்த ஆத்திரம் இப்போது இல்லை... ஏனெனில் ரஞ்சித் ஒரு தவறு செய்தான் என்றால் அது போல் ஒரு தவறை தானும் செய்து இருப்பதை உணர்ந்தவன் குற்றவுணர்வில் தவித்தான்... அவன் தவறுக்கு தான் தண்டனை கொடுத்தால் தன் தவறுக்கு யார் தண்டனை கொடுப்பது...? தன்னைப் போல் ஆதர்ஷும் தனக்குத் தண்டனை கொடுக்க நினைத்தால்...???

'அப்படியாவது தண்டனை கொடுத்து இருக்கக் கூடாதா ஆதர்ஷ்...?' அக்ஷயின் மனம் வேதனை கொண்டது...

************************

அக்ஷய் தன்னை உதாசீனப்படுத்தி விட்டு சென்றதை எண்ணி குமுறி குமுறி அழுது கொண்டு இருந்தாள் அபி... அவனுக்காக அவள் தன் அண்ணனிடம் வாதாடி அவனை வெளிக்கொணர செய்தால் அவன் அவளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அலட்சியத்துடன் சென்றது அவளுக்கு அத்தனை வேதனையாய் இருந்தது...

அவனின் குணம் என்றுமே மாறப் போவது இல்லை... அவன் அதே அக்ஷய் தான் என்று நினைத்தவளுக்குக் கண்களில் கண்ணீர் பெருகியது தான் மிச்சம்...

"ரக்ஷி..." அக்ஷயின் குரலில் அவள் அமைதியாய் இருந்தாள்...

அவன் அவளைக் கண்டு கொள்ளாமல் சென்றதில் அவன் மேல் கோபமாய் இருந்தாள் அவள்...

"என் ரக்ஷிக்கு என் மேல் என்ன கோபம்...?" அவளது கன்னத்தை வருடிய அவனது கையை வெடுக்கென்று தட்டிவிட்டாள் அவள்...

"ஹேய்... என் மேல் என்ன கோபம்...?"

"என்னை ஏன் கண்டுக்காம போனீங்க...? நான் வந்ததே உங்களைப் பார்க்க தானே..." கோபமாய்ப் பேசினாலும் அவளது குரல் அழுகையினூடே ஒலித்தது...

"நீ எப்போ என்னைப் பார்த்த...? நான் எப்போ உன்னைக் கண்டுக்காம போனேன்... நான் உனக்காக இங்கேயே காத்துட்டு இருக்கேன்... நீ தான் வரலை..." அவனது குரலில் திகைப்பாய் திரும்பியவளை கண்டு கண்ணைச் சிமிட்டியவன்,

"எப்போதும் என் நினைவா...?"

"அப்போ அங்கே போலீஸ் ஸ்டேசன்ல பார்த்தது...?" அவள் குழம்பித்தான் போனாள்...

"நான் போலீஸ் ஸ்டேசன்லயா...? இருக்காதே... இருந்து இருந்தால் நேற்று உன் அருகில் எப்படி இருந்து இருக்க முடியும்... அது நான் இல்லை ரக்ஷி..."

"அது நீங்க இல்லையா...? அது நீங்கன்னு நினைச்சு நான் ரொம்பவும் தவிச்சு போயிட்டேன்..."

"என் ரக்ஷியை நான் கண்டு கொள்ளாமல் இருப்பேனா... நீ எனக்கு உயிர் பேபி..." அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

அக்ஷய் தண்டனை அனுபவிக்கிறான் என்றதும் நிதர்சனம் உறைக்கக் காதல் மனம் தடுமாற அவனைக் காண வேண்டி காவல் நிலையம் சென்றவளை சிறிதும் கண்டு கொள்ளாமல் சென்றவனை அவள் அறவே வெறுத்தாள்...

நிஜ அக்ஷயின் உதாசீனத்தில் அவளது மனம் மீண்டும் நிழல் அக்ஷயிடம் தஞ்சம் அடைந்தது... ஏனோ காதலில் சிக்கி தவித்த அந்தப் பேதைக்கு அவனின் அரவணைப்பு ஏதோ ஒரு விதத்தில் தேவைப்பட்டது... அதை இப்படி நிழல் மூலம் தேடி கொண்டாள்... நிஜத்தில் நடக்காத ஒன்றை நிழலில் தேடி இளைப்பாறிக் கொண்டது அவளது காதல் மனம்... எதுவுமே அளவோடு இருந்தால் நன்று... அளவுக்கு மீறினால் சற்று பயமே...

'ஆமாம் அவன் வேறு தான்... என்னை நேசிப்பதாய் இருந்தால் என்னிடம் வந்து பேசி இருப்பானே... அன்று அவன் தங்கைக்காகத் திருமணம் செய்ய முன் வந்தான்... அதன் பின் இந்தக் குழந்தைக்காக... ஆனால் என்றுமே அவன் என் மனம் உணர்ந்து, என்னை நேசித்துத் திருமணம் செய்து கொள்ள நினைக்கவில்லை... என்றுமே அவன் என்னை நேசிக்கப் போவதில்லை...' அவன் செயலால் உண்டான நம்பிக்கையின்மை அவனை நம்பச் செய்யவில்லை... அவனால் புண்பட்ட இதயம் அவனை நம்ப மறுத்தது...

"எனக்குத் தெரியும் என் அக்ஷய் அப்படி இல்லைன்னு... அது வேறு யாரோ..." என்றவள் நிழலை நிஜமாய் எண்ணி

அதன் அணைப்பில் அடங்கினாள் பாந்தமாய்...

"உங்களுக்காகத் தான் அக்ஷய் நான் இந்தக் குழந்தையைச் சுமக்கிறேன்... உங்களுக்காக மட்டும் தான்..." என்று கூறியவள் அவன் நெஞ்சில் முகம் புதைப்பதாய் எண்ணி கொண்டு தலையணையில் முகம் புதைந்தாள்...

அன்று அக்ஷய் அவளிடம் குழந்தையை அழிக்க வேண்டாம் என்று கெஞ்சியது எல்லாம் இந்த நிழல் அக்ஷயாய் உருவகப்படுத்திக் கொண்டவள் நிழலுக்காகக் கருவை சுமப்பதாய் மனதில் பதிய வைத்து கொண்டாள்...

நிழலின் அன்பு நிஜத்தை விடப் பல படி மிஞ்சி இருந்தது அவளின் இதயத்தில்...

************************

"டாட்... நீங்க பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லை..." கோபமாய் இரைந்த மகளை ஒன்றும் பேசாது பார்த்தார் பாரிவேந்தன்...

"அவரை எதுக்கு ஜெயிலுக்குப் போக வச்சீங்க..."

அதில் அவரது பொறுமை பறந்து போனது...

"பின்னே எப்படித் தான் அவனை வழிக்குக் கொண்டு வர்றது... அவன் எதுக்கும் அடங்குகிறவனா தெரியலை... அதான் அந்த அபியின் அண்ணன் மூலம் காய் நகர்த்தினேன்... இப்போ அவன் உள்ளே போனதுக்குக் காரணம் அந்த அபின்னு தெரிஞ்சதும் அவனுக்கு அபி மேல் கோபம் வரும்... அவனே அபியை வெறுத்து ஒதுங்கிருவான்... அதுக்கு அப்புறம் அவன் உனக்குத் தான்ம்மா..."

தந்தையின் சாணக்கியத்தனத்தை நினைத்து அவளது கண்கள் விரிந்தது...

"ரியலி டாட்...?"

"உண்மையா தான் மதி..." அவர் சொன்னதும் மதிக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது...

"நான் இப்பவே அவரைப் பார்க்க போகவா டாட்...?"

"கொஞ்சம் பொறுமையா இரும்மா... இன்னும் இரண்டு நாளில் ஒரு பார்ட்டி வருது... அதுக்கு அவனும் வர்றான்னு நான் கேள்விப்பட்டேன்... அதுக்கு நீயும் போ... போய்த் துக்கம் விசாரிக்கிற மாதிரி பேசி பழகு..." என்றவர் மகளிடம் எச்சரிக்கும் தொனியில்,

"எதுவுமே இயல்பா இருக்கணும் மதி... ஒரு சின்ன விசயம் கிடைத்தாலும் அந்த அக்ஷய் சுதாரிச்சிருவான்..."

"ஓகே டாட்..." என்றவள் அக்ஷயை காண போகும் கனவில் மிதந்தபடி அங்கு இருந்து நகர்ந்தாள்...

"அப்படி என்ன தான் அவன் கிட்ட இருக்குன்னு அப்பாவும், மகளும் அவனை விடாம பிடிச்சு தொங்கிட்டு இருக்கீங்க... விட்டது சனியன்னு தலை முழுக வேண்டியது தானே..." அன்னபூரணி நொடித்துக் கொண்டார்...

"என் பொண்ணுக்கு அவனைப் பிடிச்சு இருக்குடி... அது ஒண்ணு போதாதா..." என்ற கணவரிடம் மேலே ஒன்றும் பேச முடியவில்லை அவரால்... பட்டு திருந்தட்டும் என்று விட்டு விட்டார்...

அன்று வெகு நாட்கள் கழித்து அக்ஷய் டெக்ஸ்டைல் மில்லுக்கு வந்து இருந்தான்... அலுவலகத்திற்குள் நுழையும் போது அவனையும் மீறி அபியின் நியாபகங்கள்... அவள் அவனிடம் பேசியது, வாதாடியது, கோபப்பட்டது என்று எல்லாம் அவன் மனதில் திரைப்படமாய் ஓடியது...

வேதனையுடன் நினைத்து பார்த்தவன் தான் வந்த வேலையைப் பார்க்கலானான்... அபி இங்கு வேலை பார்க்கிறாளா என்று கூட விசாரிக்க அவனின் மனம் இடம் கொடுக்கவில்லை... இது தான் அக்ஷய்... ஒருவரிடம் இருந்து விலகி விட்டால் விலகியது தான்... அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு அவனின் தங்கையிடம் பேசாது இருப்பது...

அனி மேல் பாசம் இருந்த போதும் அவள் செய்த நம்பிக்கை துரோகத்தினால் அவளை அறவே வெறுத்து ஒதுக்கி விட்டான்... அதே போல் தான் அபி மீதும்... அவள் மீது அளவு கடந்த காதல் இருந்த போதும் அந்தக் காதல் அவளை எந்த விதத்திலும் துன்புறுத்துவதை அவன் விரும்பவில்லை... அவன் சொன்னால் சொன்னது தான்... விலகினால் விலகியது தான்... அனியிடம் இருந்து ஒதுங்கியது வெறுப்பால்... அபியிடம் இருந்து ஒதுங்கியது விருப்பால்...

அவசரமாய்க் கணக்கு வழக்குகளைப் பார்த்தவன் அதில் இருந்த குளறுபடிகளைக் கண்டுப்பிடித்து அங்கு இருந்த நிர்வாகியை கண்டிக்கவும் அவன் தவறவில்லை...

காரை கிளப்பிக் கொண்டு வெளியில் வந்தவன் அங்குச் சாலையோர நடைபாதையில் ஓரமாய் நடந்து சென்று கொண்டு இருந்த அபியை கண்டதும் மனம் எல்லாம் சந்தோசமுற அவளைக் கண்ணிமைக்காது பார்த்தான்...

'இவள் இன்னும் இங்குத் தான் வேலை செய்கிறாளா...?' மனதில் ஆச்சிரியமும் சந்தோசமும் ஒருங்கே எழுந்தது...

ஆனாலும் அவளைக் கண்டும் அவன் காரை நிறுத்தவில்லை... நிறுத்தினாலும் அவள் ஏறப் போவது இல்லை... அவளைத் தாண்டி செல்லும் போது அவனையும் அறியாமல் மனதில் வலி எழுந்தது...

முன்னால் இருந்த கண்ணாடி மூலம் அவளைப் பார்த்தான்... மெல்லமாய்ச் சோக சித்திரமாய் நடந்து வந்தவளை கண்டு மனம் துணுக்குற்றது... ஏற்கெனவே அவள் சற்று மெலிவான உடல்வாகு உடையவள் தான்... ஆனால் அவளின் இந்த மெலிவு அவனது கண்களை உறுத்தி மனதையும் உறுத்தி தவிக்கச் செய்தது...

காரை பின்னுக்கு எடுத்தவன் அவள் அருகில் சென்று நிறுத்தினான்... ஏதோ நினைவில் சென்று கொண்டு இருந்த அபி திடுமென ஒரு கார் அருகில் நிற்கவும் திகைத்து போனவளாய் திரும்பி பார்க்க அது அக்ஷய் கார் என்றதும் அவள் கண்களில் நெருப்புப் பறந்தது...

'திமிர்... உடம்பு எல்லாம் திமிர்... வேணும்ன்னு தான் காரை இடிக்கிற மாதிரி நிறுத்துறான்...' மனதில் அவனை வைதபடி மேலே நடக்க ஆரம்பித்தாள்...

அவள் செல்வதை உணர்ந்து காரில் இருந்து வேகமாய் இறங்கிய அக்ஷய் அவள் முன் வந்து வழியை மறிப்பது போல் நின்றான்... அவனது செயலில் ஏறிட்டு பார்த்தவள் அவனை முறைத்தாள்...

அவள் முறைக்காமல் காதலாய் பார்த்தால் தான் அதிசயம்... அதனால் அதைக் கண்டு கொள்ளாதவனாய் அவன்,

"வீட்டில் கொண்டு போய் விடறேன்... வா..."

"நீங்க யார்...? என்னைக் கொண்டு போய் வீட்டில் விடறதுக்கு...?" இறுக்கமாய் நின்று இருந்தவளை கண்டவன்,

"நானா யாரா வேணா இருந்துட்டு போறேன்... இப்ப என் கூட வா... இந்த மாதிரி நேரத்தில் இப்படித் தனியே போறது நல்லது இல்லை..."

அவன் குறிப்பிட்டது இரவு நேரத்தை... அவள் உணர்ந்து கொண்டதோ தான் கருவுற்று இருக்கும் அதாவது அவனது வாரிசை சுமந்து இருக்கும் இந்த நேரத்தில் தனியே செல்வது சரியில்லை என்று சொல்கிறான் என்று நினைத்தாள்... அதில் அவளுக்குக் கோபம் எழுந்தது...

"இத்தனை நாள் தனியா தான் போய்ட்டு இருந்தேன்... இப்போவும் அதே போல் போய்க்கிறேன்... நீ உன் வேலையைப் பாரு..." மேலே நடக்கப் போனவளை கண்டு அவனது பொறுமை காற்றில் பறந்தது... அதை விட இரவு பொழுதில் தனியே செல்லும் அவளது நிலைமை அவனை அச்சுறுத்தியது...

"இங்கே பார்... சொன்னதைக் கேட்டு நல்ல பிள்ளையாய் காரில் ஏறு... இல்லை நானே தூக்கிட்டு போய் உட்கார வைப்பேன்..." என்றவனைக் கண்டு பயப்படவில்லை

அவள்... மாறாகக் கைகளைக் கட்டி கொண்டு இறுக்கமாய் நின்று இருந்தாள்...

"முன்ன இருந்த பயம் போயிருச்சு போல..." என்று ஒரு மாதிரி குரலில் சொன்னவன் அவள் அருகில் நெருங்கி வர...

"ஏன் என்னை இம்சை பண்ற...? என்னை என் வழியில் போக விடு..." அவளின் வார்த்தையில் அவனது மனம் வேதனை அடைந்தது...

"உன் வழியில் நீ போக நான் எப்பவுமே தடையாய் இருக்க மாட்டேன்..." இரு பொருள்படக் கூறியவன், "உன்னை இப்படித் தனியா விட்டு விட்டு போகும் அளவுக்கு நான் இதயம் இல்லாதவன் இல்லை..."

அதற்கும் அசையாது நின்று இருந்தவளை கண்டு 'இனி பேசி பிரயோஜனம் இல்லை...' என்று நினைத்தவன் அவளை அலேக்காய்த் தூக்கினான்...

"ஏய்... என்ன பண்ற... விடு..." யாராவது பார்த்து விடுவார்களோ என்று அடக்கப்பட்ட குரலில் கத்தியவளை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

கார் கதவை திறந்து அவளை இருக்கையில் அமர்த்தி மறுபுறம் வந்து அமர்ந்தவன் காரை எடுத்தான்... அவள் அவனை வெறுப்பாய் பார்த்த போதும் கண்டு கொள்ளாமல் காரை செலுத்தினான்...

"அன்னைக்கு மாதிரி கடத்திட்டு போறியா...?" என்றவளை புன்னகையுடன் பார்த்தவன்,

"ஏன் உனக்கு ஆசையா இருக்கா...?"

"ச்சீய்..." அருவருப்பில் முகம் சுளித்தவளை கண்டு அவன் மனம் சுருங்கி போனது...

"இனிமேல் நீ வேலைக்கு வர வேண்டாம்..." என்றான் திடுப்பென்று...

கேள்வியாய் பார்த்தவளை கண்டு, "இனி நீ இப்படிக் கஷ்டப்பட வேண்டியது இல்லை... உன்னோட அக்ரீமென்ட்டை நான் கேன்சல் பண்ணிடறேன்..."

அவள் அந்த வேலைக்கு வருவதே அக்ஷயின் நியாபகத்திற்காகத் தான்... ஏனோ அவனுடன் இருப்பது போல் ஒரு மாயத்தோற்றம் அவள் மனதில்... அதையும் இவன் கெடுக்க நினைக்கிறான்...

அவளின் அமைதியை வேறுவிதமாய் எடுத்து கொண்டவன், "இப்போ உனக்குச் சந்தோசமா...?"

'இல்லை என்று சொன்னால் என்ன செய்வானாம்... தொல்லை விட்டது என்று தலை முழுகும் இவனிடம் எதுக்கு என் மனதை நான் சொல்லணும்...' மனதில் வீம்பாய் நினைத்தவள் வெளியில்,

"ரொம்பச் சந்தோசம்... இதுக்குத் தான் நான் இத்தனை நாளாய் காத்திருந்தேன்..." என்றாள் அத்தனை பற்களைக் காட்டி... அதில் அவனது மனம் அடிப்பட்டுப் போனது...

அதன் பின் அவன் ஒன்றும் பேசவில்லை... அவளும் அமைதி காத்தாள்... அந்த ஆழ்ந்த அமைதியில் அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது... நாள் முழுதும் உழைத்த களைப்பு, சூழ் கொண்ட உடலின் அயர்வு எல்லாம் சேர்த்து அவளை உறக்கத்திற்கு இட்டுச் சென்றது...

அவளிடம் பேச்சு இல்லை என்றதும் திரும்பி பார்த்தான்... தெருவிளக்கின் ஒளியில் அவள் முகம் பார்த்தவன் அவள் உறங்கிவிட்டதை அறிந்து அவளை நன்கு உற்று நோக்கினான்... அவளது முகத்தை மனதிற்குள் ஆழமாய்ப் பதிய வைப்பது போல் பார்த்தவன் பின் சாலையில் கண்ணைப் பதித்தான்...

அனியிடம் காட்டிய ஒதுக்கம் போல் அபியிடம் அவனால் காட்ட முடியவில்லை... அதிலும் யாருமற்றவளாய் ஒரு அநாதை போல் சோகமாய் அவள் நடந்து வந்ததைக் கண்ட

பின்பும் அவளை எப்படியும் போ என்று அவனால் விட்டு வர இயலவில்லை...

குழந்தையை அழித்ததில் அவள் மேல் வருத்தம் இருந்த போதும் அவளின் மீது இருந்த காதல் அவள் மீது அக்கறை கொள்ளச் செய்தது... அவளுடன் பேச வைத்தது... அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது அபி என்றுமே அவனுக்கு ஸ்பெசல் தான் என்று...

அந்நேரம் தூங்கி அவனது தோளில் சாய்ந்தவளை அவனது இடது கரம் வளைத்துக் கொண்டது ஆசையாய்... வெகுநாட்கள் கழித்துக் கிடைத்த அவளது அருகாமையில் அவனது மனம் தடுமாறிப் போனது... அவனையும் அறியாது அவளது நெற்றியில் இதழ் பதித்தவன்,

"ஐ லவ் யூ பேபி..." என்றான் காதலாக...

அவனின் வார்த்தையில் அவளிடம் லேசாக அசைவு வந்தது...

"ம்... நானும் தான் அக்ஷய்..." என்றவள் அவனது தோளில் முகத்தைப் புதைத்துக் கொள்ள அவன் ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தான்... அவனது மனம் சிறகு இல்லாமல் வானில் பறந்தது...

அவன் அவளுக்குத் துரோகம் செய்ததற்கு அவள் அவனுக்குத் தண்டனை கொடுத்தாலும் இந்தக் காதல் பொய்யில்லையே... இந்தக் காதல் தான் அவனை உயிர்ப்பிக்கிறது... அவனை உயிர் வாழ செய்கிறது... அவளிடத்தில் மண்டியிட வைக்கிறது...

அவளது தலை மீது தனது தலையைச் சாய்த்து வைத்தவன் மனம் உற்சாகமாய்... என்றாவது ஒரு நாள் அவள் தன்னைப் புரிந்து கொள்வாள் என்று நம்பினான்... அது வரை அவளை விட்டு பிடிக்க வேண்டியது தான் என்று மனதில் எண்ணி கொண்டான்...

அவளது வீடு வந்ததும் தனது தோளில் இருந்து அவளது தலையை மிகவும் ஜாக்கிரதையாக இருக்கையில் சாய

வைத்தவன் மெல்ல அவளை எழும்பினான்...

"ரக்ஷி... ரக்ஷி..." அவனது அழைப்பில் மெல்ல கண் விழித்தவள் தனது முகம் அருகில் இருந்த அவனது முகத்தைக் கண்டு பயப்படாமல்,

"அக்ஷய்..." என்று புன்னகைத்தாள்...

"ம்... உன் அக்ஷய் தான்டி..." அவளின் காதலை உணர்ந்தவனாய் உருகி நின்றான்...

"அது தான் எனக்குத் தெரியுமே..." என்றவள் தூக்கக் கலக்கத்திலேயே அவனைத் தழுவ அதில் அவன் ஆனந்த அதிர்ச்சி அடைந்தான்...

"பேபி..." என்று அழைத்தவன் தானும் அவளை அணைத்துக் கொண்டான்...

அவனுக்குத் தான் காண்பது கனவா நனவா என்று அவனுக்கே புரியவில்லை... ஆனால் வலிய கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடவும் மனம் இல்லை... மேலும் மேலும் அணைப்பை இறுக்கியவன் அவளது கழுத்தில் முகம் புதைத்தான் தாபத்தோடு...

கனவு என்று கட்டியணைத்தவள் அந்த அணைப்பு கொடுத்த வலியில் தூக்கம் கலைந்து நனவுக்குத் திரும்ப அவனது அணைப்பில் தான் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு அவனை விலக்க முயன்றாள்... அவளது முயற்சி புரிந்து அவளை விட்டு விலகியவன்,

"ஏன் பேபி...?" என்றான் பரிதாபமாக...

"ச்சீ... நீ கொஞ்சமும் மாறவே இல்லை... கொஞ்சம் சந்தர்ப்பம் கிடைத்தால் போதுமே உனக்கு... இதுக்குத் தான் என்னைக் கூட்டிட்டு வந்தியா... இதுக்கு நான் எதுக்கு...? அதான் பணம் கொடுத்தா ஆயிரம் பொண்ணுங்க வருவாங்களே... உன் இச்சையை அவங்க கிட்ட போய்த் தீர்த்துக்கோ..." படபடவெனப் பொரிந்தவளை கண்டு அவனது அத்தனை நேரம் மயக்கம் மறைய,

"ச்சீ... வாயை மூடு... எப்ப பாரு இதே பேச்சு தானா... ஒருத்தன் தெரியாம தப்பு பண்ணினா அதையே சொல்லி காமிச்சட்டு இருப்பியா...? உனக்குத் தான் பேச தெரியுமா...? எனக்கும் பேச தெரியும்... இப்போ நானா வந்து உன்னைக் கட்டி பிடிக்கலை... நீயா தான்டி என்னைக் கட்டிப்பிடிச்ச... வலிய நீ வந்ததுக்கு அப்புறமும் கையைக் கட்டிட்டு அமைதியா இருக்க நான் ஒண்ணும் புத்தன் இல்லை... நீயா வருவ... அப்புறம் நீயா கோபப்பட்டுக் கத்துவியா...? நான் என்ன கேனையா...?"

அவனது பேச்சில் அதிர்ந்து விழித்தவளுக்குத் தனது செயலுக்கான அர்த்தம் புரிய துவங்கியது... அவள் மனங் கவர்ந்தவன் என்று நினைத்து இவனிடம் சரணடைந்து விட்டாள்...

'கடவுளே என்னைப் பற்றி என்ன நினைப்பான்... நானாக அலைந்து போய் அவனிடம் வந்ததாக நினைத்து இருப்பானே... நினைத்து இருப்பான் என்ன... அது தான் உண்மை என்பது அவனது பேச்சில் தெரிகிறதே...' உள்ளம் நொந்து போனாள்...

மறுகணம் அவனை நோக்கி கையெடுத்து கும்பிட்டு, "நீ நினைக்கிற மாதிரி பொண்ணு நான் இல்லை... நான் உன்னைக் கட்டிப் பிடிக்கலை..." அவளைக் கண்டு மனம் இரங்கினாலும் உண்மை சூழ்நிலையை அவளுக்கு உணர்த்திடும் வேகத்தில்...

"அப்போ நான் பொய் சொல்றேனா...? அக்ஷய், அக்ஷய்ன்னு ஆசையா கட்டிப் பிடிச்சது நீ இல்லாம வேறு யாரு...?" கோபமாய்க் கேட்டவனைக் கண்டு அவளின் கண்களில் நீர் நிறைந்தது...

"அது நான் தான்... ஆனால் அந்த அக்ஷய் நீ இல்லை... அந்த அக்ஷய் நீ இல்லை..." என்று அழுது கொண்டே கார் கதவை திறந்து கொண்டு இறங்கியவள் அவன் அழைக்கும் முன் அங்கு இருந்து விரைந்தாள்...

அவள் நடந்து கொண்ட விதத்திற்கும், பேசுவதற்கும் சற்றும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதை உணர்ந்தவனுக்கு ஒன்றுமே புரியாத நிலை...

'நான் அக்ஷய் இல்லைன்னா... அப்போ வேறு யார் அக்ஷய்...? என்ன உளறுகிறாள் இவள்...?' புரியாமல் சிறிது நேரம் விழித்தவன் அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் காரை எடுத்தான்...

ஆனால் மனதில் இருந்த தவிப்பு மட்டும் அடங்கவில்லை... காதல் தவிப்பு மட்டும் அல்ல அதில் கொஞ்சம் காமமும் கலந்து இருந்தது... அவன் அறிந்த முதல் பெண், அதிலும் மனங்கவர்ந்த பெண் மனதில் மூட்டிய காதல் தீயை அவளால் மட்டுமே அணைக்க முடியும்...

வீட்டிற்கும் வந்தும் அபியின் படபடப்பு சற்றும் குறையவில்லை... தானா அவனிடம் அப்படி நடந்து கொண்டோம் மனதில் கேள்வி கேட்டு களைத்து போனாள்...

'என் அக்ஷய்க்கும் அவனுக்குமான வித்தியாசம் தெரியாமல் நானா இப்படி நடந்து கொண்டேன்... சாரி அக்ஷய்...' மனதார மன்னிப்பு கேட்டாள் நிழலிடம்...

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா ரக்ஷி... அதே போல் அவனைப் பத்தியும் எனக்கு நல்லா தெரியும்..." எப்போதும் மனதில் ஒலிக்கும் அக்ஷயின் கற்பனை குரல் என்றும் போல் இன்றும் அவளை அமைதிப்படுத்தியது...

**********************

அன்று அந்த விருந்துக்குச் செல்லவே அக்ஷய்க்கு பிடிக்கவில்லை... ஆனாலும் போய்த் தான் ஆக வேண்டும்... போகாமல் இருந்தால் அதுவே கேலிப் பேச்சுக்கு இடம் கொடுத்துவிடும்... அதற்குத் தான் இடம் அளிக்கக் கூடாது... அந்த ஒரு காரணத்திற்காகவே அவன் அங்குச் சென்றான்...

அவன் நினைத்தது போல் அங்குச் சிலர் அவனைக் கவலையுடன் விசாரித்தனர்... சிலர் கிண்டலாய் நலம்

விசாரித்தனர்... அதற்கு எல்லாம் அவனின் ஒரே பதில் ஒன்று தான்...

"நம்மை மாதிரி ஆட்களுக்கு இது போல் பிரச்சினை வருவது சகஜம் தானே... இன்னைக்கு நான் என்றால் நாளை உங்களில் யாரோ... ஆனால் இதனால் மட்டும் என்னைச் சாதாரணமாய் எடை போட்டு விட வேண்டாம்... தொழிலில் அதே அக்ஷய் தான்... முடிந்தால் என்னோடு போட்டி போட்டு பாருங்களேன்..." கர்வமாய்க் கேட்டவனிடம் யாராலும் பதில் பேச முடியவில்லை...

இந்த நிலையில் தான் மதிவதனா அவனைக் கண்டாள்... அவனைக் கண்டு உண்மையில் வருத்தப்பட்டாள்...

"அந்த அபி இப்படிப் பண்ணி இருக்க வேண்டாம் அக்ஷய்... உங்க மீது என்ன கோபம் வேண்டும் என்றாலும் இருக்கட்டும்... அதுக்காக இப்படியா பண்ணுவது... கொஞ்சம் கூட மனசாட்சி வேண்டாமா..." என்று படபடத்தவளை கண்டு எந்த உணர்வினையும் காட்டாது இருந்தவன் பின்,

"எப்படி உன்னைப் போல் மனசாட்சியுடனா...?"

அவனது கேலியில் அவள் முகம் கறுத்துப் போனது...

"நீயும், உன் மினிஸ்டர் அப்பனும் என்னை மாட்ட வைக்க என்ன என்ன பிளான் போட்டீங்கன்னு எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா...? எல்லாம் எனக்குத் தெரியும்... உன்னையும் தெரியும்... உன் அப்பனையும் தெரியும்..." என்று அலட்சியமாய்ச் சொன்னவனைக் கண்டு கோபம் வந்தது அவளுக்கு... அவளும் யாரிடத்திலும் பணிந்து போனது கிடையாது...

"அக்ஷய்... மைண்ட் யுவர் வேர்ட்ஸ்... எங்கப்பாவை பத்தி தப்பா பேசாதீங்க... என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்... என்னை விட அந்த அபி என்ன உசத்தி...? உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த அவ உங்களுக்குப் பெருசா போயிட்டாளா...? அவ எல்லாம்

உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கிற அளவுக்கு நீங்க தான் கேவலமா போயிட்டீங்க... நாங்க இல்லை..." என்றவளை வெறித்துப் பார்த்தவன்,

"இங்கே பாருடா... கோபத்தை...” கேலியாய் சொன்னவன் பின் ஆங்காரத்துடன், “இந்த அப்பனை பத்தி சொன்னதுக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருதுன்னா... என் ரக்ஷியை பத்தி பேசினா எனக்கு எவ்வளவு கோபம் வரணும்...?”

“இந்த அக்ஷய்க்கு யாராலும் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியாது... வழங்கவும் முடியாது... இது நானா என் ரக்ஷிக்காகத் தேடி கொண்ட தண்டனை... அவளுக்காக அவளுடைய காதலுக்காக நான் தலை வணங்கி ஏற்றுக் கொண்ட தண்டனை... இது எல்லாம் உனக்குப் புரியாது... உண்மை காதல்ன்னா என்னன்னு உனக்குத் தெரியுமா...? என்னை உன் காலடியில் விழ வைக்கணும்ன்னு துடிக்கிற நீ எங்கே... நான் தண்டனை அனுபவிக்கக் கூடாதுன்னு துடிக்கிற என் ரக்ஷி எங்கே...? நீ நீதான்... அவள் அவள்தான்..." என்றவனின் கண்கள் அபியை நினைத்து காதல் கனவில் மிதந்தது...

அதைக் கண்டு மதி அதிர்ச்சி அடைந்தாள்... தனக்குச் சொந்தமான அக்ஷயின் காதல் இப்போது அபியிடத்தில்... அதை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை...

அவள் மனம் அபியின் மேல் குரோதம் கொண்டது... தன்னிடம் இருந்து அக்ஷயை பறித்துக் கொண்ட அந்த அபியை பழிவாங்க அவளது மனம் வன்மத்தில் துடித்தது... அவனை அடைய தடையாக இருக்கும் அபியை அகற்ற எந்த விலையும் கொடுக்க அவள் தயாராக இருந்தாள்...

பூக்கும்...

காதலில் கனிந்துருகிய அக்ஷயை கண்ட மதிக்கு எரிச்சலை விட ஆத்திரம் தான் வந்தது... தன்னை விட எல்லா விதத்திலும் பல மடங்கு கீழ் நிலையில் இருக்கும் ஒருத்தியை தனக்குச் சமமாகப் பாவித்து அவன் பேசுவது கண்டு கோபம் வந்தது...

அவள் எப்போதுமே அபியை தனக்குச் சமதையாக நினைத்தது கிடையாது... அதனால் தான் அவளை ஒரு எதிரியாகக் கூட அவளால் கற்பனை பண்ணி கூடப் பார்க்க இயலவில்லை... அக்ஷய் அவளை விட்டு விலகிய போது கூட எப்படியாவது அவனைத் தன் காலடியில் விழ வைக்க வேண்டும் என்று நினைத்தாளே தவிர அந்த அபியை ஒரு பொருட்டாய் கருதவில்லை...

ஆனால் இன்று அக்ஷய் பேசுவதைக் கேட்ட பின் அவனது வாழ்வில் அபி எந்தளவுக்கு முக்கியத்துவம் கொண்டு இருக்கிறாள் என்பதை உணர்ந்த பின்னும் இனியும் அபியை பற்றிச் சிந்திக்காமல் இருந்தால் அவளைப் போன்ற முட்டாள் உலகத்தில் இல்லை...

அக்ஷயை தட்டி கீழே விழ வைப்பதற்கு முன் அவள் அபியை அல்லவா வசமாய்க் கவனித்து இருக்க வேண்டும்... எப்படி அந்த அபியை கோட்டை விட்டாள் என்று அவளுக்கே தெரியவில்லை...

"அது என்னமோ உண்மை தான் அக்ஷய்... அவள் அவள்தான்... நான் நான்தான்..." கடைசி வரி சொல்லும் போது மதியின் குரல் கர்வமாய் ஒலித்தது...

அவளின் குரலின் பேதத்தை உணர்ந்து அக்ஷய் கண்கள் யோசனையாய் சுருங்கி விரிந்தது...

"எத்தனை குட்டி கரணம் போட்டாலும் அவள் எந்த விதத்திலும் எனக்கு ஈடாக முடியாது... என்னுடைய லெவலுக்கு அவள் எல்லாம் என் கால் தூசிக்கு சமம்..."

அவளின் கர்வம் கண்டு அவன் ஒன்றும் அயர்ந்து போய்விடவில்லை... மாறாக எள்ளல் புன்னகை ஒன்று அவனது இதழில் படர்ந்தது...

"அவளின் குணத்துக்கு முன் நீ தான் தூசிக்கு சமமானவள்... ஒரு போதும் வான்கோழி மயிலாக முடியாது..." என்றவன்,

"உன்னை மாதிரி அறிவீலிகளுக்கு இது எல்லாம் புரியாது... ஓகே உனக்குப் புரியும் விதத்தில் சொல்கிறேன்... அவள் என்னைத் திருமணம் செய்து கொள்ளும் போது என் மனைவியாய் அவள் உன்னை விடப் பல மடங்கு அந்தஸ்தில் உயர்ந்து விடுவாள்... அப்போது நீ தான் அவள் கால் தூசிக்கு சமமானவள்... அவள் இல்லை..."

தன்னை இந்தளவுக்கு இகழ்வாய் பேசுபவனைக் கண்டு அவளது இத்தனை நாள் பொறுமை காற்றில் பறந்தது...

"ஏய்..." என்று ஆள் காட்டி விரலை நீட்டி அவனைப் பார்த்து கத்தினாள்...

"ஷ்... பார்ட்டி நடக்கும் இடத்தில் இப்படிச் சத்தம் போடாதே..." என்றவன், "பரம்பரை பணக்காரன் என் கிட்டேயே அந்தஸ்து பேதம் பத்தி பேசுவியா... என்னை என்ன உன் அப்பன் மாதிரி இடையில் பணத்தைப் பார்த்தவன்னு நினைச்சியா...? என்னோடு போட்டி போட உன்னால் என்ன உன் அப்பனால் கூட முடியாது... அதனால் சும்மா இந்தச் சவுண்ட் விடுற வேலை எல்லாம் என் கிட்ட வச்சுக்காதே..."

அதில் அவமானத்தில் குன்றியவள் முகம் கன்றி போயிற்று...

"பார்க்கலாம்... நீ எப்படி அந்த அபியை கல்யாணம் பண்றேன்னு நானும் பார்க்கிறேன்..." என்று சொல்லி விட்டு சென்றவளை யோசனையாய் பார்த்தான்...

அதற்குள் அவனது நண்பன் ஒருவன் அங்கு வரவே அக்ஷய் மதியை மறந்து அவனிடம் பேசலானான்...

"டாட்... அந்த அக்ஷய் என்னை அவமானப்படுத்திட்டான் டாட்... இதுக்கு ஏதாவது பதிலடி கொடுக்கணும்... அதுவும் அந்த அபி என்னை விட உசத்தியாம்... அதை என் கிட்டேயே சொல்றான் அந்த இடியட்..."

"அவனை ஒரேடியா தூக்கிடவா...?" பாரிவேந்தனுக்குத் தெரிந்தது அது ஒன்று தான்...

"டாட்... இதையே சொல்லாதீங்க... அவன் எனக்கு உயிரோட வேணும்... வேற ஏதாவது யோசிங்க..."

"அப்போ அந்த அபியை போட்டு தள்ளிடலாமா...?"

"டாட்... வயசாகுதே தவிரப் புத்தி கொஞ்சமும் இல்லை... அபிக்கு ஏதாவது ஒண்ணுன்னா முதல் வேலையாய் அவன் உங்களையும், என்னையும் தான் தேடி வருவான்... சும்மா இல்லை கையில் பாசக்கயிறோடு... அப்புறம் நமக்கு எமன் அவன் தான்..." தந்தையை அடக்கிய மதி,

"அவன் அந்த அபியை வெறுத்து ஒதுக்கி என்னைத் தேடி வரணும்... அதுக்கு ஏதாவது செய்ங்க டாட்..."

அவள் சொன்னதும் சிறிது நேரம் யோசித்த அந்த அரசியல்வாதி, "நீ கவலை விடு மதி... இதை நான் பார்த்துக்கிறேன்..."

பெண்ணைப் பெற்ற தகப்பனாய் இருந்து கொண்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையை அழிப்பதற்குத் துணிந்தார்...

********************

அபி அன்று வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பதைக் கண்டு ஆதர்ஷ் அவளிடம் வந்தான்... அவளின் சோர்வுற்ற முகத்தைக் கண்டவன்,

"அபி... சாப்பிட்டியா..." அவன் கேட்டதுக்குத் தலையை மட்டும் ஆட்டிய தங்கையை யோசனையாய் பார்த்தவன்,

"மருந்து எல்லாம் ஒழுங்கா சாப்பிடுறியா...?"

"ம்..." இதற்கு வேகமாய்த் தலையை ஆட்டிய தங்கையைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அந்த அயோக்கியனோட குழந்தையைப் பாதுகாப்பதில் தான் உனக்கு எத்தனை துடிப்பு...?" கிண்டலாய் வினவியவனை முறைத்தவள்,

"இது என் குழந்தையும் கூட..." என்றவள், "அவங்க நல்லவங்க தான்..." என்றாள் நிழலை நினைத்துக் கொண்டு...

"ம்ஹூம்... அவன் எப்போது இருந்து நல்லவன் ஆனான்...?"

"எப்போதுமே..." என்றவளை கண்டு அவனுக்கு வியப்பாய் இருந்தது...

அன்று தான் சொன்னதற்காகக் கருவை கலைக்க ஒத்துக் கொண்ட போதும் அக்ஷய் வந்து பேசிவிட்டுப் போன பின் அபியின் முடிவு மாறிப் போனது அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமே... இருந்தாலும் அவன் சொன்னது போல் அவள் குழந்தையைப் பெத்து எடுக்க விரும்பினால் அதற்குத் துணையாகத் தான் இருப்பேன் என்று உறுதி அளித்தான்...

காதல் என்ற ஒன்று கெட்டவனின் செயலையும் மன்னிக்கச் செய்கிறதே... அவனையும் அறியாமல் அவனுக்கு அனியின் நியாபகம் வந்தது...

அக்ஷய் போன்று அனியும் தவறு செய்தவள் தான்... ஆனால் அபியை போன்று தன்னால் அவளை ஏன் மன்னிக்க முடியவில்லை...?

'அவள் செய்த தவறு மன்னிக்கக் கூடிய தவறா...?' அவன் மனம் முரண்டியது...

அக்ஷய் செய்ததும் அப்படித் தானே... பெண் மனம் ஆணின் தவறுகளை மன்னிப்பது போல் ஆண் மனம் பெண்ணின் தவறுகளை மன்னிக்க முடியாதா...?

நிச்சயம் முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது... வேறு ஒருவன் தொட்டு ரசித்த பெண்ணைத் தானும் நேசித்து இருக்கிறோம் என்பதை அவனால் அவ்வளவு எளிதில் ஜீரணிக்க முடியவில்லை... வயதின் கோளாறில் செய்த தவறு தான் என்றாலும் அவளே மனமுவந்து வலிய சென்று வேறு ஒருவனின் கைகளில்...!!! அதற்கு மேல் நினைத்து பார்க்க கூட அவனால் முடியவில்லை...

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அபியிடம் திரும்பியவன், "வேலைக்குப் போகலையா...?"

அண்ணனை ஏறிட்டு பார்த்தவள் கண்களில் கண்ணீர் திரண்டது... "அவன் என்னை வேலைக்கு வர வேண்டாம்ன்னு சொல்லிட்டான்..."

"இவ்வளவு நேரம் அவர், இவர்ன்னு சொல்லிட்டு இப்போ அவன், இவன்னா. அப்பா... பெண்களுக்குக் கோபம் வந்தால் ஆண்கள் பாடு திண்டாட்டம் தான் போலும்..." என்று சிரித்தவன் தங்கையின் மனப் போராட்டத்தை அறியவில்லை...

"நான் தான் சொன்னேனே அவங்களோட சங்காத்தமே வேண்டாம்ன்னு... அவங்க குணம் தெரிஞ்சது தானே அபி... இதில் புதுசா என்ன இருக்கு... இதுக்குத் தான் சொன்னேன் அவங்க கிட்ட இருந்து ஒதுங்கி இருன்னு..." என்றவனின் குரல் சிரிப்பை தொலைத்து இருந்தது...

"இப்பவும் உனக்காகத் தான் அவனைச் சும்மா விட்டு வச்சிருக்கேன்... இல்லை எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு...?" அவனது முகம் கோபத்தில் இறுகியது...

"அண்ணா... அதான் ஒதுங்கியாச்சே இப்போ எதுக்கு இதைப் பத்தின பேச்சு..."

"நீ சொல்றது சரி தான்... சரி வேலைக்குத் தான் போகலை... கடைக்காவது போகலாமே..."

அவளின் மனதை மாற்றிக் கிளம்பச் செய்தவன் அவளை அழைத்துக் கொண்டு கடையில் விட்டு விட்டு வேலைக்குக்

கிளம்பினான்...

அடுத்து வந்த ஒரு வாரம் அமைதியாகக் கழிந்தது...

ஒரு நாள் அபி வேலைக்குச் செல்லும் போது அக்ஷய் காரோடு சென்று அவளை வழி மறித்தான்...

"ம்ப்ச்..." அவனைப் பார்த்ததும் சலித்தவள், "உனக்கு என்ன தான்டா வேணும்...?"

"நீ தான்..." என்றான் வசீகரப் புன்னகையுடன்...

ஒன்றும் பேசாது அமைதியாய் இருந்தாள்... எது பேசினாலும் விதண்டாவாதம் பேசுகிறவனிடம் மேலும் மேலும் பேச அவளுக்கு விருப்பம் இல்லை... அதிலும் தனது வழியை மறித்துக் கொண்டு இருப்பவனைத் தாண்டி செல்வது இயலாத காரியம் என்பதால் அமைதியாய் நின்று இருந்தாள்...

"சரி வா... போகலாம்..." என்றவன் அவளின் கையைப் பிடிக்க...

"எங்கே...?" பயம் மனதில் எழுந்தாலும் வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் கேட்டாள்...

"ம்... கல்யாணம் பண்றதுக்கு..." என்றான் அசால்ட்டாய்...

'ஷாப்பிங் போகலாம் வா...' என்பது போல் திருமணம் செய்ய அழைத்தவனைக் கண்டு திகைத்தவள்,

"ஆங்..." என்று கண்கள் அகல திறந்திருக்க வாயை ஆவெனப் பிளந்தாள்...

அவளின் அந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவளைக் காரில் ஏற்றியவன் தானும் ஏறி அமர்ந்து காரை கிளப்பினான்...

"நீ பொய் தானே சொல்ற..." சந்தேகமாய்க் கேட்டவளை கண்டு புன்னகைத்தவன்,

"பொய்யே சொல்லாமல் இருக்க நான் ஒண்ணும் அரிச்சந்திரன் இல்லை... ஆனால் உன் கிட்ட எப்பவுமே நான் பொய் சொல்ல மாட்டேன் பேபி..."

அவன் கூறியதன் அர்த்தம் அவளின் அறிவுக்கு எட்டவே சிறிது நேரமாகியது...

புரிந்ததும் கதவை திறக்க முயற்சித்தவளின் முயிற்சி கண்டு, "டூ லேட் பேபி... நீ எப்பவுமே இப்படித் தானா...?" நக்கலடித்தவன், "அன்னைக்கு மாதிரி தான் இன்னைக்கும்... லாக் போட்டு இருக்கேன்... உன்னால திறக்க முடியாது..."

"உனக்கு எல்லாம் கல்யாணம் ஒரு கேடா... திரும்பத் திரும்ப என் வாழ்க்கையை ஏன் பாழாக்குற...? என்னை என் வழியில் போக விடு..." அடக்கப்பட்ட அழுகையுடனும் கோபத்துடனும் பேசியவளை கண்டு அவனுக்கு இரக்கமாய்த் தான் இருந்தது...

ஆனால் இன்று அவளை விட்டு விட்டால் அதன் பிறகு அவளைத் தான் நிரந்தரமாக இழக்க நேரிடும் என்பதை உணர்ந்தவனுக்கு மனதில் சொல்லொண்ணா வலி எழுந்தது... இந்த வலியின் முன் அவள் மீதான இரக்கம் பின்னுக்குச் சென்றது...

"இனி உன் வாழ்க்கை என் கையில்... நான் காட்டும் வழியில்... அதுக்கு இந்தக் கல்யாணம் அவசியமானது..." என்றான் தன்மையாக அவளுக்குப் புரியும் விதத்தில்...

அதையும் அவன் திமிராகச் சொல்வதாக நினைத்து தவறாகப் புரிந்து கொண்டவள், "நீ யார் என் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது...?"

"நான் யார்ன்னு உனக்குத் தெரியாதா...?" என்றவனின் பார்வை மாறியது...

"பேபி இன்னும் பேபியாவே இருக்க... உன் மனசாட்சியிடம் கேட்டு பார்... நான் யார்ன்னு அது தெளிவா சொல்லும்..."

அவனின் பேச்சில் அன்றைய நியாபகத்தில் அவளது மனம் அவமானத்தில் குன்றியது... தான் எதிலோ அவனிடம் தோற்றுக் கொண்டு இருப்பதை உணர்ந்தாள்...

"இந்தக் கல்யாணத்தால் யாருக்கும் நிம்மதி இல்லை... இது தேவை தானா...?" அவனுக்குப் புரிய வைத்திடும் நோக்கில்...

"நிச்சயம் எனக்கு நிம்மதி தான்... எனக்கு இது இப்போ அவசியம் தேவை..." என்றான் அழுத்தமாய்...

அவனது அழுத்தத்தில் அவளது கோபம் மீண்டும் திரும்பலானது...

"ஏன் ஊரில் வேறு பெண் உனக்குக் கிடைக்கவில்லையா...?"

"நாவடக்கம் வருவதாய் இல்லை என்ன...? என்ன செய்தால் நாவடக்கம் வரும்..." என்றவன் அவள் புறம் திரும்பி,

"தேவை இல்லாதது பேசும் இந்த நாக்குக்குத் தண்டனை கொடுக்கலாமா... இல்லை... இதற்கு ஒலி வடிவம் கொடுக்கும் அழகான இந்தச் செப்பு இதழ்களுக்குத் தண்டனை கொடுக்கலாமா...?" ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கி அவன் கேட்ட விதம் அவளின் மனதில் கிலியை கிளப்பியது...

அன்று போல் அச்சம் கொண்டவளாய் இருக்கையின் பின்னே சாய்ந்தவள் விழிகளில் பிரதிபலித்த அச்சத்தைக் கண்டு ஓரமாய்க் காரை நிறுத்தியவன் அவள் புறம் நன்றாகத் திரும்பி அமர்ந்தான்...

"இப்படிப் பார்க்கும் போது தான் நான் ஆண்ங்கிற கர்வம் எழுகிறது... நீ பெண்ங்கிற உணர்வு பேயாட்டம் போடுது... எவன் எவனுக்கோ எப்படி எப்படி எல்லாமோ காதல் வருது... ஆனா எனக்கு மட்டும் உன் பயத்தைப் பார்த்து தான் காதல் வருது... உன்னை அப்படியே..." சொல்லி கொண்டே அவள் முகம் நோக்கி குனிந்தவனைக் கண்டு,

"ச்சீ... தள்ளி போ..." அவனது முன்னுச்சி முடியை கொத்தாக பற்றித் தள்ளிவிட்டவள்,

"அதுக்குப் பேர் காதல் இல்லை... காமம்... பெண்ணின் பயத்தைக் கண்டு அவளை ஆள நினைப்பவனுக்குப் பெயர் காதலன் இல்லை... காமுகன்..."

அவள் தள்ளிவிட்டதில் சிரித்தபடி நேராய் அமர்ந்தவன், "நீ என்ன வேணா சொல்லிக்கோ... ஆனா எனக்கு உன் மேல் அவ்வளவு ஆசை, காதல்..." என்றவன் முன் இருந்த கண்ணாடியை பார்த்து தனது முடியை கைகளால் கோதி சரி செய்து கொண்டவன்,

"இன்னைக்கு எனக்குக் கல்யாணம்மா... இப்படியா தலையைக் கலைச்சு விடுறது... ஃபோட்டோ எடுக்கும் போது உன்னை விட நான் அழகா தெரிய வேண்டாமா... இல்லை நான் அழகாய் தெரிவேன்னு உனக்குப் பொறாமையா...?"

"அப்போ நீ சீரியசாவா சொல்ற...?" அவனின் வார்த்தைகள் அவளுள் இப்போது நிஜமாய்ப் பயத்தைக் கிளப்பியது...

"இங்கே பாரு இப்படி எல்லாம் சின்னப் புள்ளத்தனமா காமெடி பண்ண கூடாது... சீரியசா தான் சொல்றேன்..." என்றவன் கைக் கடிகாரத்தில் நேரத்தை பார்த்தவன்,

"உன் கூடப் பேசினா டைம் போறதே தெரியலை... இப்போ இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்... இன்னைக்கு நைட் விடிய விடிய நாம பேசலாம்..." கண்ணைச் சிமிட்டி சொன்னவனைக் கண்டு ஆத்திரம் தலைக்கு ஏற...

"உன் கூட எல்லாம் மனுசன் பேசுவானா...?" என்றாள் வெடுக்கென்று...

"அது சரி தான்... நீ தான் என் தேவதை பெண்ணாச்சே... அதனால் பேசாம இன்னைக்கு நைட் உன்னைக் கொண்டாடிட வேண்டியது தான்..." இரு பொருள் படக் கூறியவனைக் கண்டு அவளது முகம் சிவந்து போனது...

அவளது முகச் சிவப்பை ரசித்தவன் விசிலடித்தபடி காரை எடுத்தான்...

மேலே அவள் பேச வாய் எடுக்கும் முன் அவன் தனது அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"மணி... நான் சொன்ன எல்லா ஏற்பாடும் பண்ணிட்டியா..."

"எல்லாம் பக்காவா பண்ணிட்டேன் சார்... ஆனா..." என்று இழுத்தவன் விசயத்தைக் கூற அதில் அவனது முகம் இறுகி போனது...

அதன் பின் அவன் அபி பக்கம் திரும்பவில்லை... அவளுக்கு அவனிடம் நிறையப் பேச இல்லை இல்லை சண்டை போட தோணிய போதும் அவனது இறுகிய முகம் எதையும் பேச விடவில்லை...

கோவில் முன் காரை நிறுத்தியவன் அவளை, "இறங்கு..." என்றான்...

அவன் தான் சொன்னதை மெய்ப்பிப்பது போல் கோவிலுக்குக் கூட்டி வந்து இருப்பதை உணர்ந்து அவனைப் பார்த்தவள்,

"நான் என் வீட்டுக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... உனக்கு வேணா யாரும் வேண்டாமா இருக்கலாம்... ஆனால் எனக்கு என் குடும்பம் முக்கியம்..."

அவளது பேச்சில் முகம் மலர கண்கள் பளிச்சிட, "அப்போ அவங்க எல்லாம் வந்தா உனக்குச் சம்மதம் தானா...?" சந்தோசம் பொங்க கேட்டவனைக் கண்டு அவளுக்கு எரிச்சலாய் வந்தது...

"அவங்க வந்தாலும் கூட உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எனக்குச் சம்மதம் இல்லை..."

"ம்ஹூம் அப்படியா... சம்மதம் இல்லை இல்லைன்னு சொல்லிட்டுக் கோவில் வாசல் வரை வந்திருக்க... அப்படின்னா உன் உள்மனசுல என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசை இருக்கு அப்படித்தானே..."

அவனின் பேச்சில் மனதில் எழுந்த வெறுப்புடன், "ச்சே..." என்றவள் அவனை விட்டு நகர முயல அது இயலாதபடி அவளின் கை அவனது கையின் இறுகிய பிடிக்குள் இருந்தது...

"எனக்குப் பிடிக்கலை விடு... நான் போறேன்..." பிடிவாதமாய் நின்றவளை பிடித்து வலுக்கட்டாயமாய்க் கோவிலுக்குள் அழைத்து வந்தவன்,

"உன் சம்மதம் கேட்கும் மனநிலையில் நான் இல்லை... என் மனதுக்கு எது சரின்னு படுதோ அதைத் தான் நான் செய்வேன்..." என்றவனின் கை அழுத்தத்தைப் போல வார்த்தையிலும் அழுத்தம் இருந்தது...

அங்கு ஏற்கெனவே காத்து இருந்த நிஷாவிடம் அபியை ஒப்படைத்தவன், "இவளை ரெடி பண்ணு நிஷா..."

நிஷாவை கண்டதும் மீண்டும் அபியின் மனதில் அக்ஷய் மீது வெறுப்பு கூடி கொண்டே போனது...

"சரி அண்ணா..." என்றவள் அபியிடம், "வாங்க அண்ணி..." என்று அழைக்க...

அந்த அழைப்பில் மனதின் வெறுப்பு அகல அபி திகைத்து போய் அவனையும் அவளையும் மாறி மாறி பார்த்தாள்...

"நிஷா... உன் அண்ணி காதில் விழற மாதிரி கொஞ்சம் சத்தமா சொல்லும்மா..." என்றவனின் பார்வை அபியின் மேல் நிலைத்து இருந்தது...

'இந்தப் பெண்ணையா நீ குற்றம் சாட்டினாய்...? என் சகோதரி போன்றவளை என்னுடன் இணைத்து பேச உனக்கு எப்படி மனம் வந்தது...?'

அவனது விழிகள் சொன்ன குற்றச்சாட்டில் அவளது விழிகள் அவளையும் அறியாமல் தாழ்ந்தது...

"நீங்க என்ன சொல்றீங்கன்னே எனக்குப் புரியலை அண்ணா..." என்ற நிஷாவிடம்,

"புரிய வேண்டியவங்களுக்குப் புரிஞ்சா சரி..." என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்காமல் சென்றுவிட்டான்...

"நீங்க வாங்க அண்ணி..." நிஷா அவளை அழைத்துச் சென்றாள்...

அந்தக் கோவிலில் மணப்பெண் உடை மாற்ற என்று இருந்த சிறிய அறைக்கு அழைத்துச் சென்றாள்...

நிஷாவின் சற்று மேடிட்ட வயிற்றைக் கண்டு அபி, "எத்தனை மாதம்...?" என்று கேட்க...

"ஐஞ்சு..." என்றவள் முகம் வெட்கத்தில் சிவந்தது...

தனக்கும் ஐந்தாவது மாதம் தான் ஆனால் இன்னமும் வயிறு தெரியவில்லையே என்று குனிந்து தன் வயிற்றைப் பார்த்தாள்... லேசாக உப்பி இருந்த வயிற்றை எல்லோராலும் சாதாரணமாய்க் கண்டுப்பிடித்து விட முடியாது...

அதற்குள் நிஷா ஒரு பட்டு புடவையைக் கொண்டு வந்து கட்ட சொல்ல அப்போது தான் அவளுக்குத் தான் எதற்காகக் கோவிலுக்கு வலுக்கட்டாயமாய் அழைத்து வரப்பட்டு இருக்கிறோம் என்பது புரிந்து அதை மறுத்தாள்...

"ஏன் அண்ணி...?" என்ற நிஷா காரணம் தெரியாமல் மேலும் அவளை வற்புறுத்த அபி பிடிவாதமாய்த் தன்நிலையில் நின்றாள்...

வேறுவழியின்றி நிஷா அக்ஷய்க்கு அழைத்து விசயத்தைக் கூற, "இன்னும் ஐஞ்சு நிமிசத்தில் அவளே ரெடியாகுவா... நீ விட்டிரு..." என்று அவன் அழைப்பை துண்டிக்க...

அந்நேரம் கோமதி பாட்டியும் ஆதர்ஷும் அங்கு வந்தனர்... நிஷா அவர்களுக்குத் தனிமை கொடுத்து நாகரீகமாக வெளியில் சென்றாள்...

"ஆச்சி..." என்று அவரை அணைத்துக் கொண்டு அழுதாள் அபி...

"ச்சீ... அசடு மாதிரி அழுதுட்டு... யாராவது கல்யாணம் அன்னைக்கு அழுவாங்களா...?" என்று அவளைக் கடிந்தபடி அவர் அவளின் கண்ணீரை துடைக்க...

"ஆச்சி... நீங்களுமா...?" கண்ணீரோடு கேட்டவளை கண்டு இரக்கம் சுரந்தது அவருக்கு...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழற... தவறா போன உன் வாழ்க்கையைச் சரி பண்ண ஒரு சந்தர்ப்பம் கிடைச்சு இருக்குன்னு நினைச்சுக்கோ...
சாமார்த்தியசாலியா அதை நழுவ விடாம கெட்டியா பிடிச்சுக்கோ..."

"ஆச்சி... எனக்கு அவனைப் பிடிக்கலை..."

"பிடிக்காம தான் அவன் குழந்தையைச் சுமந்துட்டு இருக்கியா... உனக்காக இல்லைன்னாலும் இந்தக் குழந்தைக்காகப் பாரு அபி... இதுக்கு மேல இந்த வயசான காலத்துல என்னைக் கஷ்டப்படுத்தாத அபி... என் உயிர் போறதுக்குள்ள உங்க வாழ்க்கை சரி ஆகிடணும்ன்னு நான் கடவுளை வேண்டுறது எனக்கு மட்டும் தான் தெரியும்... ஆச்சிக்காகச் சரின்னு சொல்லு அபி..."

"அண்ணா..." அபி பரிதாபமாகச் சகோதரனை பார்த்தாள்...

அவனுக்குமே அக்ஷயை அபி திருமணம் செய்வது பிடிக்கவில்லை தான்... இது மூலம் அந்த வீட்டுச் சொந்தம் மீண்டும் துளிர் விடுவதை அவன் கொஞ்சமும் விரும்பவில்லை தான்... ஆனால் அவன் கேள்விப்பட்ட விசயம் அத்தனை உவப்பானதாக இல்லையே...

"அபி... நீ அக்ஷயை கல்யாணம் பண்ணி தான் ஆகணும்மா..." என்றான்... அவனின் குரல் மட்டும் அல்ல முகமும் இறுகி இருந்தது... அது அக்ஷயை அவனுக்குப் பிடிக்காத காரணத்தினால் வந்தது...

அப்படிப்பட்ட ஒருவனிடத்தில் தங்கையின் வாழ்க்கையை ஒப்படைக்க நினைக்கும் தனது நிலையை எண்ணி அவனுக்குத் துக்கமாய் இருந்தது... அதையும் மீறி சிறிது

நேரத்திற்கு முன் அவனிடம் பேசிய அக்ஷயின் வார்த்தைகள் காதில் ஒலிக்க அது அவனது மனதை மாற்றி இந்தத் திருமணத்திற்குச் சம்மதம் சொல்ல வைத்தது...

"அண்ணா... நீயுமா...?" அவள் அழ...

அவளை ஆறுதலாய் அணைத்து கொண்டவன், "நான் உன் நல்லதுக்குத் தான் சொல்வேன் அபி..."

"அவனைக் கல்யாணம் பண்றது எனக்கு நல்லதா..."

"நிச்சயம் அபி..." தயங்காமல் கூறிய அண்ணனை சந்தேகமாய்ப் பார்த்தாள் அவள்...

"நீ இப்படிச் சொல்வேன்னு நான் எதிர்பார்க்கல..."

"இப்போ நான் சொல்றது உன்னோட எதிர்காலம் நல்லா இருக்கணும்ன்னு தான் அபி..."

பேசி பேசியே ஆதர்ஷ் அவளைக் கரைத்துத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தான்...

அண்ணனின் பேச்சை தட்டவும் முடியாமல் மனதில் நேசிக்கும் நிழல் அக்ஷயை மறக்கவும் முடியாமல் தவித்தாள் அவள்...

'உன்னை மறந்துட்டு அவனைக் கல்யாணம் பண்றதை நினைச்சாலே எனக்கு வெறுப்பா இருக்கு...?' மானசீகமாக அவனுடன் உரையாடினாள்...
'நான் தான் உன்னுடனே இருக்கேனே ரக்ஷி...' நிழல் அவளைச் சமாதானப்படுத்தியது...

'இது துரோகம் இல்லையா...?'

'யாருக்கு...?' நிழல் கேட்ட கேள்வியில் அவள் யோசித்தாள்...

நிழலுடன் மனதால் வாழ்ந்தால் தாலி கட்டிய அக்ஷய்க்கு தான் அவள் துரோகம் செய்யப் போகிறாள்...

'நிச்சயம் அவனுக்குத் தான்...' அவளது பதிலில் சிரித்தது நிழல்...

‘அப்புறம் என்ன திருமணத்துக்குத் தயாராகு... அவன் செய்த துரோகத்துக்கு இது தான் பரிசு...’ நிழலின் பதிலில் அவள் சற்று தெளிந்தாள்...

அதற்கு மேல் அபி எதைப் பற்றியும் யோசிக்கவில்லை... விதி விட்ட வழி என்று திருமணத்திற்குத் தயாரானாள்...

கடவுளின் சன்னிதானத்திற்கு வரும் போது தான் அங்கு இருந்தவர்களைக் கவனித்தாள் அபி...

அக்ஷயின் குடும்பத்தினர் எல்லோரும் வந்திருந்தனர்... துளசியைக் கண்டதும் அவள் சிரிக்க முயல அவரோ அவள் மீது இருந்த கோபத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டார்... அந்த வீட்டில் அவளுக்கு இருந்த ஒரே ஆதரவு அவர் மட்டுமே... அவரும் இப்படி முகத்தைத் திருப்பியது கண்டு அவளுக்கு வருத்தமாய் இருந்தது...

"எல்லாம் சரியாகும் ரக்ஷி..." அவளின் எண்ணம் புரிந்தவனாய் அவளின் கையை ஆறுதலாய் பற்றிய அக்ஷயை நிமிர்ந்து பார்த்தவள் பார்வையில் எந்த உணர்வும் இல்லை...

அதை அவன் கண்டு கொள்ளவும் இல்லை...

கடவுளின் பாதத்தில் வைத்து ஆசிர்வதிக்கப்பட்ட மங்கல நாணை எடுத்து வந்து ஐயர் அக்ஷயிடம் கொடுக்க அதை அவன் அபியின் கழுத்தருகே கொண்டு போனான்...

'என் சம்மதம் இல்லாமல் என் கழுத்தில் நீ தாலி கட்ட போற இல்ல... என் மேல் செய்து கொடுத்த சத்தியம் பொய்யா... அப்போ நீயே பொய் தானா...?' அவளின் குற்றச்சாட்டு பார்வை கண்டு ஒரு கணம் தயங்கியது அவனது கைகள்...

அந்தச் சத்தியம் அவன் பண்ணிய போது அவள் இருந்த இரத்த கோலம் அவன் மனக்கண்ணில் வந்து போனது... அன்றும் அவள் மீது கொண்ட நேசத்திற்காகத் தான் அவன் சத்தியம் செய்தான்... இன்றும் அவள் மீது கொண்ட நேசத்திற்காகத் தான் அந்தச் சத்தியத்தை மீறுகிறான்...

ஆனால் இரண்டின் நோக்கமும் ஒன்றே... அதில் அவளது நலன் மட்டுமே அடங்கி இருந்தது...

'சாரி ரக்ஷி... எனக்கு வேறுவழி இல்லை... நீ என்னோடு இருக்கணும் அதுக்கு எனக்கு இதைத் தவிர வேறுவழி தெரியலை...' மனதில் அவளிடம் மன்னிப்பு கோரியவன் அடுத்தக் கணம் எந்தவித தயக்கமும் இல்லாமல் அவளது கழுத்தில் முதல் முடிச்சு போட்டான்...

இரண்டாவது முடிச்சு போட வந்த அனியை கண்டதும் ஆதர்ஷ் வெறுப்புடன், "என் தங்கை நல்லபடியாய் வாழ வேண்டும்... இந்தத் தரங்கெட்டவள் முடிச்சு போட்டால் என் தங்கை வாழ்க்கை சிறக்காது..."

அவனின் வார்த்தையில் கோபிநாத், துளசிக்குக் கோபம் வந்தது... இருந்தாலும் வீட்டு மாப்பிள்ளையிடம் எதிர்த்து பேசுவது சரியாய் இருக்காது என்று தோன்ற அமைதியாய் இருந்தனர்... மகள் நடந்து கொண்டதும் அப்படித்தான்...

அனி கண்கள் கலங்க கணவனைப் பார்த்தாள்... இத்தனை நேரம் அவனைப் பார்க்க அஞ்சி அவன் புறம் திரும்பாமல் இருந்தவள் இப்போது தான் அவனைப் பார்த்தாள்...

தங்கையின் கலங்கிய தோற்றம் அக்ஷயின் மனதை வருத்த அவன் ஆதர்ஷிடம், "இது உங்க தங்கை கல்யாணம் மட்டும் அல்ல... என் கல்யாணமும் கூட... என் தங்கை தான் முடிச்சு போட வேண்டும்..." என்றான் பிடிவாதமாய்...

அனி நன்றியுடன் தன் அண்ணனை பார்த்தாள்... அவனது பேச்சில் அவள் மனம் மகிழ்ந்தது...

அண்ணன் பேசியது அபிக்கே சற்று உறுத்தலாய் இருக்க, "அண்ணா... அண்ணி பாவம்ண்ணா..."

"அபி... உனக்கு இவளை பத்தி ஒண்ணும் தெரியாது..." என்றான் ஆதர்ஷ் வேகமாய்...

"ப்ளீஸ் அண்ணா... எனக்காக விட்டு கொடு..." அபி சொன்னதும் அந்த அண்ணன் அடங்கினான்...

இரு அண்ணன்களும் தங்கள் தங்கையிடம் கொண்ட பாசம் ஒன்றுக்கு ஒன்று சளைத்தது அல்ல...

அனி மீதம் இருந்த இரண்டு முடிச்சு போட அக்ஷய், அபியின் திருமணம் இனிதே நடந்து முடிந்தது... அபிக்கு தான் என்றும் இல்லாத ஒரு வெறுமை மனதில் சூழ்ந்தது...

முதலில் கோமதி பாட்டியின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க அவர், "பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழணும்..." என்று மனதார வாழ்த்தினார்...

அடுத்த அவனது பெற்றோர் காலில் விழ... கோபிநாத் அமைதியாய் அவர்களின் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்யத் துளசி,

"எவ்வளவு ஆடம்பரமா எத்தனை பிரமாண்டமா நடக்க வேண்டிய உன் கல்யாணம் இப்படி யாருக்கும் தெரியாம திருட்டுத்தனமா நடக்குதே அக்ஷய்..." என்று புலம்ப...

"மாம்... இது திருட்டு கல்யாணமா... ரெண்டு வீட்டு ஆளுங்களும் வந்து ஆசிர்வதிக்கத் தான் இந்தக் கல்யாணம் நடந்து இருக்கு..." அவன் எரிச்சலுடன் பதில் மொழிய...

அதற்கு மேல் துளசி ஒன்றும் பேசவில்லை...

அக்ஷய் வீட்டிற்குக் கிளம்பிய போது ஆதர்ஷ் தங்கையிடம், "நான் ஹாஸ்பிட்டல் போகணும் அபி... ஆச்சி உன் கூட வருவாங்க..." என்றவன் பாட்டியிடம்,

"நீங்க கிளம்பும் போது எனக்கு ஃபோன் பண்ணுங்க நான் வந்து கூட்டிட்டு போறேன்..." அக்ஷய் வீட்டிற்கு வர விருப்பம் இல்லாதவனாய்...

"பாட்டியை பத்திரமா வீட்டில் கொண்டு விடறது என் பொறுப்பு..." என்ற அக்ஷயை முறைத்து பார்த்த ஆதர்ஷ் ஒன்றும் பேசாது நகர்ந்தான்...

அக்ஷய்க்கு பயந்தோ என்னமோ அபிக்கு கொடுக்க வேண்டிய மரியாதை அனைத்தும் முறையோடு

நடத்தப்பட்டது... முறையாய் ஆரத்தி சுற்றி வரவேற்கப்பட்டுப் பூஜை அறையில் விளக்கு ஏற்றி அபி அக்ஷயின் மனைவியாய் அவனது வீட்டில் அடி எடுத்து வைத்தாள்...

மாலை வரை பாட்டி இருந்ததால் அபிக்கு பெரிதாய் சஞ்சலம் தோன்றவில்லை... கோமதி பாட்டி இருந்தாலோ என்னமோ துளசியும் சற்று அமைதியானார்... ஆனால் அவரின் ஒதுக்கம் அபியின் மனதை வாள் கொண்டு அறுத்தது... தாயை போன்று பாசம் காட்டிய அவரிடம் பேச அவளது உள்ளம் துடித்தது... ஆனால் அதற்கு இடம் அளிக்காது அவர் அவள் இருக்கும் பக்கம் வரவில்லை...

எல்லோரும் இருந்ததால் அக்ஷயாலும் அபியின் அருகில் செல்ல முடியவில்லை... குறிப்பாக அவள் பாட்டியுடன் ஒட்டி கொண்டு இருந்த போது அவனால் எதுவும் மனம் விட்டு பேச முடியவில்லை...

மாலையில் பாட்டி விடைப்பெற்று செல்ல அவரை வீட்டில் விடுவதற்கு அக்ஷய் தான் உடன் சென்றான்... அபிக்கு தனியாய் ஆளில்லா தீவில் மாட்டி கொண்டது போல் தவித்தாள்... அனி அவளுடைய துக்கத்தில் இருந்ததால் அபியை கவனிக்கவில்லை... துளசி அவரது அறையில் இருந்தார்...

அபி துளிசியின் அறைக்குச் சென்றாள்... அவளைக் கண்டு கோபிநாத், "உள்ளே வாம்மா..." என்று அவளை அழைத்தார்...

என்று அவள் அவனது மகன் மனங்கவர்ந்து இந்த வீட்டு மருமகள் ஆனாளோ அப்போதே அவரது கோபம் குறைந்துவிட்டது... மகனை பற்றிப் புகார் அளித்து விட்டாளே என்ற கோபம் தவிர அவள் மீது அவருக்கு வேறு எந்தக் கோபமும் இல்லை...

துளசி அவள் வரவை உணர்ந்தும் திரும்பாமல் மடித்து வைத்து இருந்த ஆடைகளை அலமாரியில் எடுத்து வைத்துக் கொண்டு இருந்தார்...

"அத்தை..." என்று அவரை அணைத்துக் கொண்டு அபி அழ ஆரம்பிக்கத் திடுமென அவள் அப்படி அணைத்ததில் அதற்கு மேல் துளசியாலும் தனது கோபத்தை இழுத்து பிடிக்க முடியவில்லை...

"அபி..." என்று அவரும் அணைத்துக் கொண்டார்...

"என் மேல் என்ன கோபம் அத்தை...?"

"இன்னும் உன் மேல் உள்ள கோபம் எனக்குத் தீரவில்லை தான்..." முகத்தைத் தூக்கி வைத்து கொண்டவரின் பேச்சில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை...

அவர்கள் சொன்னதற்கு ஏற்ப அவள் கருவை கலைக்கவில்லையே... பின் எதற்காக...? அவள் அவரிடம் நேரிடையாய் கேட்டுவிட்டாள்...

"உனக்காகத் தானே அக்ஷய் ஜெயிலுக்குப் போனான்... அவனை வெளியில் எடுக்கணும்ன்னு உன்னை நான் கூப்பிட்டப்போ நீ வரலையே... அப்போ எனக்கு எப்படி இருந்தது தெரியுமா...? உன் அளவில் நீ நினைப்பது சரி தான் அபி... இப்பவும் நான் சொல்றேன் அவன் செஞ்சது மன்னிக்க முடியாத தப்பு தான்... அதில் நான் உன் பக்கம் தான்... ஆனா ஒரு தாயா அக்ஷயை நான் எப்படி வெறுக்க முடியும்... நீயே சொல்லு அபி... எத்தனை தவறு செய்தாலும் உன் பிள்ளையை நீ வெறுப்பியா...? அது போல் தான் எனக்கும்... அவன் தண்டனை அனுபவிப்பது பார்க்க சகிக்கவில்லை எனக்கு... நீ உதவலையேன்னு எனக்கு உன் மேல் நிரம்ப வருத்தம் இருந்தது... ஆனா இப்போ நீ அத்தைன்னு அழுததும் என்னால் கோபத்தை இழுத்து பிடிக்க முடியவில்லை..."

அவர் அக்ஷய்க்கு மட்டும் தாய் அல்ல அவளுக்கும் தாய் தான் என்று நிரூபித்தார்...

"சாரி அத்தை..." என்று தேம்பியவளின் கண்களைத் துடைத்தவர்,

"போனது போகட்டும் விடு... இனி மேல் நடப்பது நல்லதாக நடக்கட்டும்..." அவரின் கூற்றைக் கேட்டு அமைதியாய் இருந்தாள் அவள்...

அக்ஷயின் இந்த அதிரடி திருமணத்தால் அதிர்ந்து போயிருந்தவள் மனநிலை இப்போதும் குமுறிக் கொண்டு தான் இருந்தது...

அன்றைய இரவு அக்ஷயின் அறைக்கு நுழைந்தவளை காதல் கணவனாய் அவன் அவள் பின்னால் இருந்து அள்ளி கொண்டான்...

"ஏய்... விடு..." என்று திமிறியவளை கண்டு,

"இந்த டயலாக் கேட்டு கேட்டு போர் அடிக்குது பேபி... ஏதாவது இன்ட்ரஸ்ட்டிங்கா சொல்லேன்... அதாவது..." அவளது காதில் ரகசியம் பேசியவனின் வார்த்தையில் அவளது முகம் சிவந்தது... அது கோபத்தில் சிவந்ததா இல்லை வெட்கத்தில் சிவந்ததா யாருக்கு தெரியும்...?

"ஐயோ கடவுளே..." என்று காதை மூடி கொண்டவளிடம்,

"அந்தக் கடவுளை கூப்பிடறதுக்கு அக்ஷய்ன்னு கூப்பிட்டால் நான் சந்தோசமாவேன் ரக்ஷி தேவியாரே..." என்று கிண்டலடித்தவன் படுக்கையில் அவளை அமர வைத்து தானும் உடன் அமர்ந்தான்...

அவன் அருகில் அமர விருப்பம் இல்லாமல் அவள் தள்ளி அமர, "இன்னும் எதுக்கு இந்த இடைவெளி...?" சிரித்தபடி அவன் அந்த இடைவெளியை நகர்ந்து நிரப்ப... அதில் கண்களால் அவனை எரித்தாள் அவள்...

"என்ன சொல்லி எல்லோரையும் உன் வலையில் விழ வச்ச...? என் அண்ணனை கூட மயக்கிட்ட இல்ல..." ஆற்றாமையில் வந்தது அவளது வார்த்தைகள்...

அதைக் கண்டு மாயக்கள்வனாய் புன்னகைத்தவன், "அவன் தங்கையே என்னிடம் மயங்கி இருக்கிறப்போ அவன் மயங்கிறதுக்கு என்ன...?"

"உண்மையைச் சொல்லு...?"

"உண்மையைத் தான் சொன்னேன் பேபி..." அவள் முறைப்பில்,

"உன் கிட்ட சொன்ன உண்மையைத் தான் அவனிடமும் சொன்னேன் பேபி... இனியும் என் வழியில் யாரும் குறுக்கே வராதீங்கன்னு சொன்னேன்... வந்தாலும் யார் பேச்சையும் நான் கேட்கிறதா இல்லைன்னு சொன்னேன்... உன் அண்ணன் பயந்து போய் ஒதுங்கிட்டான்..."

"பொய் சொல்லாதே..."

"உன் கிட்ட பொய் சொல்வேனா பேபி... எல்லாமே மெய் தான்..."

"அது எப்படிடா உன்னால மட்டும் எதுவுமே நடக்காத மாதிரி சந்தோசமா பேச முடியுது... ஆனா எனக்கு முடியலை... நீ செஞ்ச துரோகம் தான் கண்ணுக்கு முன்னால நிக்குது..."

"எல்லாத்தையும் மறந்திரு ரக்ஷி..."

"எதை மறக்க சொல்ற... ஒரு தப்புன்னா மறந்து மன்னிக்கலாம்... ஆனா நீ எனக்குச் செஞ்சது எல்லாம் தப்பு தான்... தப்புக்கு மேல தப்பு தான் செஞ்சி இருக்க..."

"தப்பு தான் நான் செஞ்சது எல்லாம் தப்பு தான் பேபி... இப்போ அதுக்கு என்னைய என்ன செய்யச் சொல்ற...? எனக்குப் புரியல... நீ என்ன நினைக்கிற... என்ன பேசறன்னு...?"

"எனக்கு உன்னைப் பிடிக்கலை... உன்னைக் கண்டாலே உடம்பு எல்லாம் எரியுது..."

"ஓகோ... அப்புறம்..." கையைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்து கேலியாய் கேட்டவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் தான் வந்தது... அவன் மேல் வந்தது கொஞ்சம்... தன் மீது வந்தது தான் அதிகம்...

பெண்ணாய் பிறந்து விட்ட பாவத்துக்கு இப்படி அவன் முன்னாடி தலை குனிந்து நிற்க வேண்டிய தன் நிலையைக் கண்டு மனம் குமுறினாள்...

"ஆண்ங்கிற கர்வம்... அதான் இப்படி எகத்தாளமா பேசுற... பெண்ணாய் இருந்து பாரு அப்போ புரியும் என் கஷ்டம்..." கண்கள் கலங்கியது அவளுக்கு...

"ச்சேச்சே... நான் எப்போதும் அப்படி நினைக்கலை பேபி... எப்பவும் நீ எனக்கு முக்கியம் தான்... உன் கஷ்டம் என் கஷ்டம் போல..."

அவனது பேச்சுக் காதில் விழாமல் அழுது கொண்டு இருந்தவளை எப்படிச் சமாதானம் கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை... அதற்காக அப்படியே விடவும் அவனுக்கு மனம் இல்லை...

"இங்கே பாரு பேபி... உனக்கு என் மேல் கோபம், வருத்தம் இருக்கு... அதே போல் எனக்கும் உன் மீது வருத்தம் இல்லைன்னா நினைக்கிற... ஆனா அதையும் மீறி நான் உன்னைக் காதலிக்கிறேன்... அதனால் தான் நீ செய்தது சரின்னு என்னால ஏத்துக்க முடியுது... அதைப் போல நீயும் என்னைக் காதலிக்கிற... அது எனக்கு நல்லா தெரியும்... கொஞ்சம் யோசிச்சு பாரு... நிச்சயம் இந்த வருத்தத்தை மீறி என்னை ஏத்துக்க உன்னால் முடியும்..." அவள் குழந்தையை அழித்ததை மனதில் கொண்டு அவன் பேசினான்...

"நான் உன்னைக் காதலிக்கலை..." அவனின் அவ்வளவு பெரிய பேச்சுக்கு ஒன்றே ஒன்றுக்கு மட்டும் பதில் சொன்னாள் அவள்...

"பரவாயில்லை... உனக்கும் சேர்த்து நான் காதலிச்சிட்டு போறேன்..." என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட அதில் அச்சம் அடைந்தவள் பின்னால் நகர இப்போது அவன் அவளை நோக்கி முன்னேறவில்லை...

"உன் சம்மதம் இல்லாமல் எதுவும் நடக்காது..." என்றான் இறுகிய குரலில்...

"என் சம்மதமா... அது கனவிலும் கிடைக்காது...?" என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"நான் கனவை நம்புறவன் இல்லை... ஆனால் நனவின் மீது நம்பிக்கை இருக்கு..."

"எனக்குத் தூக்கம் வருது..." உண்மையில் அவளுக்கு உறக்கம் வந்தது...

"தூங்கு..." என்றான்...

"எங்கே...?" அந்த அறையைச் சுற்றி பார்த்தாள்...

"ஏன்... இங்கே தான்... இன்றே நம் வாழ்க்கையை ஆரம்பிக்கலாமா...?" குறும்பு குரலில் கூறியவனைக் கோபமாய்ப் பார்த்தவள்,

"ரொம்பத் தான் ஆசைப்பட்டதே... நான் ஒண்ணும் உன் மேல காதல் கொண்டு கல்யாணம் பண்ணலை... என் அண்ணனுக்காக... அவன் சொன்னான்ங்கிற ஒரு காரணத்துக்காகத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... அவன் மட்டும் வேண்டாம்ன்னு சொல்லியிருந்தா உன்னைத் தூக்கி எறிஞ்சிட்டு போயிருப்பேன்..."

அவளின் வார்த்தையில் அவனது மனம் காயப்பட்டுப் போனது...

'கடைசியில் அவளது அண்ணனுக்காகத் தான் என்னை மணந்தாளா...? அவள் சொல்வது போல் அவளுக்கு என் மேல் காதல் இல்லையா... நானா தான் தவறாக எண்ணி கொண்டேனா... இல்லை என் காதில் தான் ஏதும் குறைபாடா...?'

எது எப்படியோ ஆதர்ஷ் சொல்லி தான் அபி அவனை மணந்தாள் என்பது அவனது தன்மானத்துக்குப் பெருத்த அடியாக இருந்தது... அத்தனை நேர இலகுத் தன்மை அவனிடத்தில் காணாமல் போயிருக்கக் கட்டிலில் இருந்து எழுந்தவன்,

"வா..." என்று அவளை அழைத்து அவன் அறையோடு ஒட்டி இருந்த அறையைத் திறந்துவிட்டு, "உன் அண்ணனுக்காக நீ ஒண்ணும் என்னைச் சகிச்சிக்க வேணாம்... உன் அண்ணனை விட எனக்கு என் தங்கை மேல் பாசம் அதிகம் இருக்கு... அவள் இப்படி இருக்கும் போது நானும் உன் கூடச் சந்தோசமா இருக்கணும்ன்னு நினைக்கலை... நானும் நல்ல அண்ணன் தான்..." அவளுக்கு உறைக்கும் படி கூறியவன் கதவை மூடிவிட்டு சென்றுவிட்டான்...

அவன் அவளைத் தனியே விட்டு விட்டுச் சென்றதும் அவளுக்கு ஏதையோ பறி கொடுத்தார் போன்ற ஒரு உணர்வு மனதில் தோன்றுவதைத் தடுக்க முடியவில்லை...

சண்டை போடவாவது அவன் இன்னும் கொஞ்ச நேரம் இருக்கக் கூடாதா என்றே அவளுக்குத் தோன்றியது...

'என்ன அபி அவனை வெறுக்கும் நீ ஏன் அவனை நினைக்கிறாய்...' என்று மனதில் நினைத்தவள் படுக்கையில் அமர்ந்தாள்...

அவள் மனம் அக்ஷயுடன் பேசியதை அசைப் போட்டுக் கொண்டு இருந்தது...

அக்ஷய் மனம் முழுவதும் விரக்தியை சுமந்து கொண்டு பால்கனியில் நின்றவன் வெளியில் தெரிந்த இருளை வெறித்துக் கொண்டு இருந்தான்...

அபி தன் மனைவியாய் ஆனதில் இருந்து காலை முதல் அவனது உள்ளத்தில் தோன்றிய குதூகல உணர்வு இப்போது அவனிடத்தில் இல்லை... ஒருவித குழப்பமான மனநிலையில் நின்று இருந்தான்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பார்த்தவன் கண்கள் ஆத்திரத்தில் சிவந்தது...

வேண்டும் என்றே அணைத்துச் சட்டை பையில் போட்டான்... மீண்டும் மீண்டும் அது அழைக்க அவன் மீண்டும் மீண்டும் அதை அணைத்தான்...

சுமார் இருபது அழைப்புக்குப் பின் அந்தப் பக்கம் இருந்தவரை தவியாய் தவிக்க வைத்த பின்னரே அவன் அழைப்பேசியை எடுத்தான்...

இவ்வளவு நேரம் அபியிடம் இணக்கமாய், தழைந்து பேசி கொண்டு இருந்த காதலன் அக்ஷய் இல்லை இவன்... பக்கா தொழிலதிபனாய் குரூர சிரிப்புடன், மனம் நிறையக் குரோதத்துடன் அவன் நின்று இருந்தான்...

பழிக்கு பழி வாங்கி விட்ட வெறியில், வெற்றியில் அவனது கண்கள் பளபளத்தது...

பூக்கும்...

அக்ஷய் அலைப்பேசியை உயிர்பித்ததும் அந்தப் புறம் இருந்து பாரிவேந்தனின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது...

"டேய்... என் பொண்ணை என்னடா செஞ்ச...?"

அவரின் பதற்றம் கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"உன் பொண்ணை... நானா...? உன் உளறலுக்கு அளவே இல்லையா...? இன்னைக்கு எனக்கு ஃபர்ஸ்ட் நைட்... இந்த நேரத்தில் கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாம இப்படியா தொந்திரவு பண்றது..."

அவன் கூறியதை கேட்டு அவர் பதட்டம் கொண்டவராய், "அக்ஷய்... ஃபோனை வச்சிராதே... ப்ளீஸ் என் பொண்ணை எங்கே ஒளிச்சு வச்சு இருக்க..." அவர் பேசும் போதே அவன்,

"ஹேய்... ஸ்டாப்... ஸ்டாப்... உண்மையில் உனக்குப் பைத்தியம் தான் முத்தி போச்சு... எதுக்கும் காலையில் எழுந்ததும் முதல் வேலையா ஒரு நல்ல டாக்டரா போய்ப் பாரு... உன் பொண்ணை நான் எதுக்கு ஒளிச்சு வைக்கணும்... உன் பொண்ணு காணாம போனா அதுக்கு நான் தான் பொறுப்பா... விட்டா ஊர்ல எந்தப் பொண்ணு காணாம போனாலும் அதுக்கும் நான் தான் காரணம்ன்னு சொல்லுவ போலிருக்கே..."

"பொய் சொல்லாதேடா... உன்னைத் தவிர வேறு யாரும் இந்த வேலையைச் செய்ய முடியாது... நீ தான் அவளை ஏதோ செஞ்சிருக்க..."

"உனக்கு அப்படிச் சந்தேகமா இருந்தா உன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவளைக் கண்டுபிடி... நான் தான் அவளைக் கடத்தி வச்சு இருந்தேன்னா அப்ப என் கிட்ட விசாரணைக்கு வா... இப்ப என்னை ஆளை விடு..."

"டேய் அக்ஷய்... நான் அந்தப் பொண்ணு அபியை கடத்த ஏற்பாடு செஞ்சதை முன்கூட்டியே தெரிஞ்சிட்டு நீ பிளான்

பண்ணி என் பொண்ணைக் கடத்திட்ட... ஒழுங்கு மரியாதையா உண்மையைச் சொல்லு... இல்ல என் அதிகாரத்தை நான் பயன்படுத்தினா நீ தாங்க மாட்ட... என் பொண்ணை என் கிட்ட ஒப்படைக்கல நடக்கிறதே வேற..."

எல்லா இடத்திலும் மதியை தேடி சோர்ந்து போனவராய் அவளைக் காணவில்லை என்ற கவலையோடு, அவனது ஒட்டாத பேச்சில் ஏற்பட்ட ஆத்திரமும் ஒன்று சேர அவரையும் அறியாமல் அவரது வார்த்தைகள் வெளிவந்தது...

"ரொம்பத் தேங்க்ஸ் பாரிவேந்தா... எதுக்குடா தேங்க்ஸ் சொல்றான்னு முழிக்கிறியா... உண்மையை நீயே ஒத்துக்கிட்ட இல்ல... அதுக்குத் தான்..." என்று கேலியாய் பேசியவனின் தொனி அடுத்தக் கணம் உறுமலாய் மாறியது...

"எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா அப்பனும், மகளுமா சேர்ந்துட்டு இப்படி ஒரு வேலை செய்ய நினைப்பீங்க...? யார் மேல கை வைக்க நினைக்க நினைச்சீங்க...? என் ரக்ஷி மேலயா...? அவள் என் உயிர்... அவள் மேல் கை வைக்க நினைச்சா நான் உங்களை எல்லாம் சும்மா விடுவேன்னு எப்படி நினைக்கலாம்...?"

"மதியை என்ன பண்ணினே...?" அவனது உறுமலில் அவர் கலங்கி போனார்...

"நீ அபியை என்ன பண்ண நினைச்சியோ அதைத் தான் நான் உனக்குத் திரும்பப் பண்ணி இருக்கேன்... யூ சீ எனக்கு எதையும் கொடுத்து தான் பழக்கம்... வாங்கிப் பழக்கம் இல்லை... அதனால் நீ எனக்குக் கொடுக்கணும்ன்னு நினைச்சதை விட அதிகமா உனக்குத் திருப்பிக் கொடுக்கப் போறேன்..."

"அக்ஷய்..." உயிர் போவது போல் அலறினார் அவர்...

"என்ன மினிஸ்டரே... உன் உயிர் துடிக்குதா... உன் பொண்ணு அப்படின்னதும் வலிக்குதுல்ல... அதே மாதிரி

தானே என் ரக்ஷிக்கு ஒண்ணுன்னா எனக்கு வலிக்கும்... அதான் அந்த வலியை உனக்குத் திருப்பிக் கொடுக்க நினைச்சேன்... நீ ரக்ஷியை கடத்தி அவளை ரெட் லைட் ஏரியாவுல வித்து அவளை நாசமாக்க நினைச்ச... அதைத் தான் நான் இப்ப உன் பொண்ணுக்குச் செய்யப் போறேன்... நாளைக்குப் பேப்பரில் தலைப்புச் செய்தியில் ‘அமைச்சரின் மகள் போதையில் வாலிபர்களுடன் உல்லாசம்’ன்னு கொட்டை எழுத்தில் வரும்... அதைப் பார்த்து சந்தோசப்பட்டுக்கோ..."

"உன்னைச் சும்மா விட மாட்டேன்டா..." மகளுக்கு நேர போகும் ஆபத்தை அறிந்து அவரது இரத்தம் துடித்தது...

"உன்னால என்னை என்ன பண்ண முடியும்...? முடிஞ்சா உன் அதிகாரத்தைப் பயன்படுத்தி என்னைக் கைது பண்ணி பாரு... உனக்கு மட்டும் தான் காவல்துறை நண்பன் இல்லை... எனக்கும் தான்... எந்த ஓட்டையில் புகுந்து எப்படித் தப்பிக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... கெடுவான் கேடு நினைப்பான்..." என்ற அக்ஷய் அலைப்பேசியை அணைத்து விட்டு அறைக்குச் செல்வதற்காகத் திரும்ப அங்குக் கதவோரமாய் நின்று இருந்த அபியை கண்டு திகைத்துப் போனான்...

'பேசினது எல்லாத்தையும் கேட்டு இருப்பாளோ... சும்மாவே என் பேரில் நம்பிக்கை கிடையாது... இதில் இதுவும் சேர்ந்தால்...' மனதில் நினைத்தவன் வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன்,

"வா ரக்ஷி... தூக்கம் வரலையா...?" என்றான்... அத்தனை நேரம் இருந்த கடுமை மறைந்து அவனது முகத்தில் இளக்கம் தோன்றியது...

அவளது பேச்சற்ற அமைதியும், வெறித்த பார்வையும் அவனை ஏதோ செய்ய அவன் அவள் அருகில் விரைந்து வந்தான்... அப்போதும் அசையாமல் பால்கனி கதவை பிடித்துக் கொண்டு நின்று இருந்த அபியின் நிலையைக் கண்டு அவன் பயந்து தான் போனான்...

"ரக்ஷி..." அவளின் தோளை தொட அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்கள் கலங்கி இருந்தது...

"ஹேய்... இப்போ எதுக்கு இந்தக் கண்ணீர்...? நான் தான் உன்னைத் தனியா படுத்துக்கோன்னு சொல்லிட்டேனே... அப்புறம் என்ன...? நீ எப்போதும் போல் உன் வீட்டில் இருந்த மாதிரி இருக்கலாம்... பீல் ஃப்ரீ... என்ன..." பேச்சை மாற்றுவது போல் அவளைச் சமாதானப்படுத்தினான்...

அவனது பேச்சை காதில் வாங்காதவளாய் அவனைப் பார்த்தவள் அடுத்த நொடி தன் இரு கரங்களையும் குவித்துக் கும்பிட்டாள்... அவள் கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது...

அவளது செயலில் அவன் தான் பதறிப் போனான்...

"என்னடி இது புதுசா கையெடுத்து கும்பிட எல்லாம் செய்ற... நீ எப்போதும் போல் என்னைத் திட்டு, முறைச்சு பாரு... அது தான் நீ... இந்த மாதிரி ஏதாவது செஞ்சு என்னைப் பயமுறுத்தாதே..." என்றவன் அவசரமாய் அவளது கையைக் கீழே இறக்கினான்...

"அதனால் தான் இந்த அவசர கல்யாணமா...?" கண்ணீர் மல்க கேட்டவளை பார்த்து அவளின் கேள்வி புரிந்தார் போன்று அவன் தலையசைத்து அதை ஆமோதித்தான்...

"தேங்க்ஸ்..." என்றவளை அணைத்து கொண்டவன்,

"எதுக்குடி தேங்க்ஸ் எல்லாம் சொல்ற...? நன்றி சொல்லி என்னை அந்நியப் படுத்தாதே... நீ என்னோட உயிர்டி... உன்னைப் பாதுகாக்கிறதை விட எனக்கு வேறு என்ன வேலை... உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா என்னால தாங்க முடியாது ரக்ஷி..."

முதன்முறையாய் அவனது வார்த்தைகள் அவளது இதயத்தைத் தொட்டது... அண்ணாந்து அவனது முகத்தைப் பார்த்தாள்...

அன்று அவளது மானத்தைக் கேள்விக்குறி ஆக்கியவன், அதன் பின் கற்பை களவாடிய கயவன் என்று அவள் வெறுத்து ஒதுக்கியவன் இன்று அவள் மானம் காத்து இருக்கிறான் என்றால் அவளின் மீது அவனுக்கு அக்கறை இருக்கிறது என்று தானே அர்த்தம்… அந்த அக்கறை அவளது அடி நெஞ்சு வரை சென்று இனித்தது…

தன் கற்பை அழித்து விட்டான் என்று எண்ணி அவன் மீது வெறுப்பை உமிழ்ந்தவள் இன்று அவன் அவளது கற்பை காப்பாற்றியது தெரிந்ததும் அவன் மீதான வெறுப்பு விருப்பாக மாறத் தொடங்கியது… அவன் தான் செய்த தவறை தானே சரி செய்துவிட்டான் அவனையும் அறியாமல்… அது அவளது மனதையும் தொட்டு விட்டது…

நிழலாய் பார்த்து நேசித்தவனின் குணம் நிஜமாய் இருப்பவனிடத்தில் கண்ட போது அவளது மனம் லேசாக அவன் புறம் சாயத் துவங்கியது… அவளது ஆழ்மன ஏக்கமும் அது தானே… அது தானே நிழல் அக்ஷயாய் உருவெடுத்து இருக்கிறது…

இந்த அக்கறை நாளடைவில் அன்பாய், காதலாய் மாறாதா என்று பேதை நெஞ்சம் ஏங்கியது… அவனது அந்த அக்கறை கூடக் காதலினால் வந்தது என்பதை அவள் அறியவில்லை…

அவளது இமைக்காத பார்வையில் உருகி நின்றான் அவன்… அவன் எதிர்பார்த்தது இந்த மாதிரி இணக்கமான நிலையைத் தானே… சற்று முன் அவள் அவனிடம் சண்டை போட்டது என்ன… இப்போது அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கி நிற்பது என்ன…

அதற்குக் காரணம் அவளுக்கான அவனது செயல் என்றால் அவளுக்காக அந்த நட்சத்திரங்களையும் வானில் இருந்து பறித்து வர அவன் சித்தமாய் இருந்தான்… அவளுக்காக அவன் தன் உயிரையும் துறக்க தயாராய் இருந்தான்… அந்தளவுக்கு அவளது காதல் அவனை ஆட்டுவித்தது…

"என்ன பார்வை எல்லாம் பலமா இருக்கு...?" அவளது மூக்கின் நுனியில் தன் மூக்கை உரசியபடி கேட்டவனின் செயலில் உடல் சிலிர்க்க கண்களை மூடி கொண்டாள்...

அவள் கண் மூடி நின்ற அழகில் அவன் மனம் மயங்க அவளது இதழில் மென்மையாய் தனது இதழை பதித்து நிமிர்ந்தான்... மனதில் வன்முறையாளனான அவனால் மென்மையான அவளிடத்தில் வன்மையைக் காட்ட இயலவில்லை...

அதில் கண்களைத் திறந்த அபி அவனைக் காண நாணி கண்களைத் தாழ்த்த, "ரக்ஷி... இப்பவாவது சொல்லேன்... நீ என்னைக் காதலிக்கிறியா...?" அவளது நாணத்தின் பின்னால் இருந்த அவளது காதல் மனதை அவள் வாயால் கேட்க எண்ணினான்...

அவனது கேள்வியில் அவனை ஏறிட்டவள் அத்தனை நேர இதம் மறைந்து குழம்பி போய் நின்றாள்...

"நா... நான்..."

எப்படிச் சொல்வது நிழல் மீதான அவளது காதலை... இவனைப் பிடிக்காது அவனைத் தான் நிரம்பப் பிடிக்கும் என்று... ஆனால் அவனைப் போல் இவனும் அவளுக்காக எல்லாம் செய்கிறானே... அவளின் மானம் காத்து இருக்கானே... அதை விட இவன் அவளது கணவன்... இவனிடம் எப்படி அவனைப் பற்றிச் சொல்வது...???

நிழலும் நிஜமும் ஒருவன் என்று அறிவு ஏற்றுக் கொண்டாலும் அவளது மனது அதை ஏற்க மறுத்தது...

"நீ..." ஆர்வமாய் அவளைப் பார்த்தான்...

"நான் அவனைத் தான் காதலிக்கிறேன்..." ஒருவழியாகச் சொல்லிவிட்டாள்...

"எவன் அவன்...?" கைப்பொருள் கை விட்டு போன மன நிலையில் கோபமும், விரக்தியுமாய் நின்று இருந்தவனின் குரல் சற்று உயர்ந்தது...

அதில் ஓரடி பின்னால் நகர்ந்தவள், "அந்த அக்ஷய்..." என்றாள் வலது ஆட்காட்டி விரலை பின்புறமாய்க் காட்டி...

அவளின் பின்னால் எட்டி பார்த்தவன், "எந்த அக்ஷய்...? இங்கே இருப்பது ஒரே ஒரு அக்ஷய் தான்... அது நான் மட்டும் தான்..." என்றவனின் பேச்சில் பழைய துள்ளல் திரும்பி இருந்தது...

அது அக்ஷய் என்று அவள் கூறிய அவனது பெயரினால்...

"இல்லை இல்லை... அது நீ இல்லை... அவன் வேற... அவன் ரொம்ப நல்லவன்... ஆனா நீ ரொம்ப ரொம்பக் கெட்டவன்..."

அவளின் பேச்சில் அவன் குழம்பி போய் நின்றான்... அன்றும் இது போல் தானே ஏதோ உளறிவிட்டு ஓடினாள்... இன்றும் அதே போல் ஏதேதோ உளறுகிறாளே... என்னவானது இவளுக்கு...?

"ரக்ஷி... இங்கே பாரு... அக்ஷய் நான் மட்டும் தான்... நீ என்னைத் தான் காதலிக்கிற..."

அவனது வார்த்தையில் அடுத்தக் கணம் அவள் வெடித்தாள்... அழுகையுடன் அவளது குரல் ஓங்கி ஒலித்தது...

"நான் உன்னைக் காதலிக்கிறேன்னு சொல்றியே... நான் காதலிக்கிற மாதிரி ஒரு விசயமாவது எனக்கு நீ நல்லது பண்ணி இருக்கியா... நீ பண்ணியது எல்லாமே கெட்டது தானே... ஆனா அவன் அப்படி இல்லை... அவன் எனக்கு எப்பவும் நல்லது மட்டுமே பண்ணுவான்..." என்றவள் கண்ணியமாய் அவளிடம் அவன் நடந்து கொண்ட இரு செயல்களையும் கூறி அது அவன் அல்ல வேறு அக்ஷய் என்று கூறிய போது உண்மையில் அவன் தலைச்சுற்றி நின்றான்...

'அன்று அவளிடம் அப்படி நடந்து கொண்டது நான் தானே... பின்னே ஏன் இப்படிக் கூறுகிறாள்...?' அவன் குழம்பி போனான்...

"நீ என்னைத் திட்டும் போது, நீ என்னை அவமரியாதை செய்யும் போது எல்லாம் அவன் தான் என்னை அன்பா பார்த்துக்கிட்டான்... ஆனா நீ...???" என்று ஆங்காரமாய்க் கேட்டவள் அழுகையில் கரைய...

அக்ஷய் தலையைப் பிடித்துக் கொண்டு நின்றுவிட்டான்... அவளது நிலையைக் கண்டு என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது அவனது கெட்ட செயலால் பாதிக்கப்பட்டவள் அவனது நல்ல செயலால் கவரப்பட்டு இருக்கிறாள் என்று... அதுவே அவளுக்குத் தன் மீது காதலை ஏற்படுத்தி இருக்கிறது...

தன்னை வெறுத்துக் கொண்டே காதலித்து இருக்கிறாள்... அதனால் வந்த விளைவு தான் இந்த இரு அக்ஷய்... ஓரளவு அவளது மனநிலையை அவன் ஊகித்துவிட்டான்... அவனுக்கு இருந்த ஒரே ஆறுதல் அவள் தன்னைத் தான் காதலிக்கிறாள் என்பது மட்டுமே...

முதலில் மனப்பாதிப்பு சற்று அதிர்ச்சியாக இருந்தாலும் அவளின் இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணம் என்பது புரிய வர அவனுக்குத் தன் மீதே வெறுப்பாய் இருந்தது...

"ரக்ஷி... இங்கே பாரு... அதே அக்ஷய் தான்டா நான்... அதே கண்ணியத்துடன் இருக்கும் அக்ஷய் தான் பேபி... இல்லாட்டி உன்னை வலிய வந்து நான் கல்யாணம் பண்ணி இருப்பேனா..." அவளது முகத்தை இரு கரங்களில் தாங்கியவன்,

"நான் தொட்ட முதல் பொண்ணும் நீ தான்... நான் காதலிச்ச ஒரே பொண்ணும் நீ தான்... அதனால் தான் தொட்ட உன்னை விட முடியாமல், மறக்க முடியாமல் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... எனக்கு நீ வேணும்டி... உன் காதல் வேணும்..." என்றான் தனது காதலை அவளுக்கு உணர்த்திடும் வேகத்தில்...

அவளை அவன் மனம் பாதிக்கப்பட்டவளாய் பார்க்கவில்லை... தன்னால் மனம் நொந்து

போயிருப்பவளுக்குத் தனது அன்பு மருந்தாய் இருக்கும் என்று எண்ணி அந்த மருந்தை கொடுக்க முயன்றான்...

"நீ சொல்றதை நம்ப முடியலையே..." அவளது அடிப்பட்ட மனது சற்று முன் நடந்ததை மறந்துவிட்டது... மீண்டும் பழைய நிலைக்குச் சென்று கொண்டு இருந்தது...

அவளது வார்த்தையில் அவன் சோர்ந்து போய் நின்றுவிட்டான்... என்ன சொல்லி அவள் மனதை மாற்றுவது... தன் அன்பை எப்படிப் புரிய வைப்பது என்று யோசித்தவன் மூளையில் மின்னல் வெட்டியது...

"உன் மேல் காதல் இல்லாமலா உன்னை அந்தப் பாரிவேந்தன், மதியிடம் இருந்து காப்பாத்தினேன்... அவங்க உன்னைக் கடத்திட்டு போய் உன் மானத்தை விலை பேசி உனக்கு அவப்பெயர் உண்டாக்க நினைச்சாங்க... அதைத் தடுத்து நிறுத்த தான் நான் உன்னை அவசரமா கல்யாணம் பண்ணியது... இல்லை அவங்க உன்னை என்ன பண்ணி இருப்பாங்களோ இல்லை என்ன பண்ண காத்து இருந்தாங்களோ..."

அவளுக்குப் புரிய வைத்திடும் நோக்கில் அவளிடம் சொன்னவன் இப்போதும் அந்தப் பயங்கரத்தை உணர்ந்தவனாய் தாய் பறவையாய் அவளை இறுக அணைத்துக் கொண்டான் பாதுகாப்பாய்... அவனது உடல் லேசாக நடுங்கியது... எதற்கும் அஞ்சாத சிங்கம் அவளுக்காக அஞ்சி நடுங்கியது...

அவனது பேச்சு அவளது மூளையில் உறைத்தது... அவனது உடல் நடுக்கம் அவளது மனதில் உறைத்தது... அவன் எத்தனை பாதகமான செயலை புரிந்த போதும் அவளுக்கான அவனது இந்தத் துடிப்பு உண்மையே...

"இன்னுமாடி என்னைப் புரிஞ்சிக்கலை..." பாவமாய்க் கேட்டவனைக் கண்டு அவளுக்கும் பாவமாய் இருந்தது தான்... ஆனாலும் சூடு கண்ட பூனையாய் மனம் சுருங்க நின்று இருந்தாள்...

"பதில் பேசு ரக்ஷி..." ஒற்றை விரலால் அவளது முகத்தை நிமிர்த்தியவன் தவிப்புடன் அவளது கண்களைப் பார்த்து கேட்டான்...

இத்தனை நாளாய் அவன் காதலிப்பதாய் சொன்ன போது எல்லாம் அவனைப் புறக்கணித்தவளை இன்று அவன் செய்த செயல் அவனை உற்று கவனிக்க வைத்தது... இதோ இப்போது தனக்காகத் தவிக்கும் அவனது தவிப்பு பொய் இல்லையே...

"என்னை ஏமாத்திற மாட்டீங்கல்ல..." அவளது அந்தப் பதிலில் அவன் மனதில் சிறு நிம்மதி வந்தது...

"சத்தியமாடி..." அந்த வார்த்தையில் அவளது இதழில் ஆயாசமான புன்னகை பூத்தது...

"அப்போ செஞ்சு கொடுத்த சத்தியம் மாதிரியா..."

"உன்னோட நலனுக்காக இந்தச் சத்தியத்தையும் மீறும் நிலை வந்தா கண்டிப்பா நான் மீறுவேன்..." தன் மனதை தவறாமல் எடுத்து உரைத்தான்...

"இப்பவாவது சொல்லு ரக்ஷி... என்னைக் காதலிக்கிறியா...?"

"தெரியலை..." இன்னும் அவள் மனதில் குழப்பம் தீர்ந்தபாடில்லை... இது ஒரு நாளில் தீரும் பிரச்சினையும் அல்ல...

அவளது பதிலில் அவனது முகம் காற்று போன பலூனாய் தொங்கி போனது... இவ்வளவு விளக்கம் சொல்லியும் தன்னை அவள் நம்பவில்லையே என்று... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டான்...

"என்னைக்காவது நீ உணருவ என்னோட காதல் உண்மைன்னு..." பதில் ஒன்றும் பேசாது அவனது கைகளை விலக்கி கொண்டு அவள் நடந்தாள்...

அவளது விலகலை ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்...

இரண்டு அடி எடுத்து வைத்தவள் ஏதோ நியாபகம் வந்தவளாய் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"என்ன ரக்ஷி...?" அவளது பார்வை உணர்ந்து அருகில் வந்தான்...

"அந்த மதியை ஒண்ணும் பண்ணிடாதீங்க..." அதைச் சொல்லும் போது அவளது கண்கள் கலங்கியது...

"அதுல நீ தலையிடாதே... அவளுக்கு எல்லாம் இது பத்தாது..." மதி மற்றும் அவளது அப்பா மீதான அவனது கோபம் இன்னும் தீர்ந்தபாடு இல்லை...

"அவ என்ன தப்பு செஞ்சான்னு இப்படித் தண்டிக்க நினைக்கிறீங்க...?"

"என்ன தப்பு செய்யலை...? நான் மட்டும் கொஞ்சம் சுதாரிக்கலைன்னா நாளைக்குப் பேப்பரில் நீ தலைப்பு செய்தியா வந்திருப்ப... அதுவும் என்ன மாதிரி தெரியுமா...?" அவன் ஆவேசமாய்க் கேட்க அதன் அர்த்தம் புரிந்தவள் முகம் வாடினாலும்,

"இது எல்லாம் நடக்கிறதுக்குக் காரணம் யாரு...?"

அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்...

"நீங்க தானே... என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண் தானே... அவளுக்கு நிச்சயித்த உங்களை நான் அபகரிச்சா அவ கோபப்படாம என்ன செய்வா...? இதுக்கு எல்லாம் காரணம் நீங்க தான்... நீங்க மட்டும் அவசரப்பட்டுத் தேவையில்லாம என் மேல் கை வைக்கலைன்னா இப்போ அவ கூடத் தானே உங்க கல்யாணம் நடந்து இருக்கும்..." என்றவள் அவனது விழிகளை உற்று நோக்கி,

"உங்க மனசாட்சி தொட்டு சொல்லுங்க... ஒரு நாள் ஒரு பொழுதாவது அவளைக் காதலிக்கிறேன்னு நீங்க சொன்னது இல்லை...?"

அவளது குற்றச்சாட்டில் அவன் திகைத்து போய் நின்று இருந்தான்... அவள் கூறுவதும் உண்மை தானே... அவனது

காரியத்துக்காக மதியிடம் எத்தனையோ முறை 'காதலிக்கிறேன்' என்று சொல்லி இருக்கிறான்... ஆனால் அபியிடத்தில் சொன்னது போல மனப்பூர்வமாய் இல்லை... மதியிடம் சொன்னது வெறும் வாயளவில்... ஆனால் அபியிடம் சொன்னது ஆழ்மனதின் நேசம் அல்லவா... அதை எப்படி அபியிடம் சொல்லி புரிய வைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை...

அவனது மௌனமே அவளுக்கான பதிலை சொல்லிவிட அதில் அவள் மனம் வேதனையில் கசங்கியது... என்ன இருந்தாலும் அவன் மனதில் முதலில் இடம் பிடித்தது அந்த மதி தானே... ஒருவேளை தன்னைத் தொட்டதினால் திருமணம் செய்து இருக்கிறானோ... காதல் கொண்ட மனம் கண்டபடி யோசித்தது...

"ப்ளீஸ் அக்ஷய் எனக்காக அவளை விட்டுருங்க... நாளைக்கு அவளைப் பழிவாங்க நினைச்சு என்னைப் பழிவாங்கிய மாதிரி அவளையும் பழிவாங்கிறாதீங்க... அதைத் தாங்கிக்கிற சக்தி என்னிடம் இல்லை..."

தாங்க மாட்டாமல் அவனது நெஞ்சில் முகம் புதைத்து அவள் அழ... அவள் பேச்சின் அர்த்தம் புரிந்ததில் அவன் அப்படியே உறைந்தான்... அந்தக் கணம் தன் உயிர் தன்னுடைய உடலை விட்டு பிரிந்து போகக் கூடாதா என்று மனம் வெதும்பி போனான்... அவன் என்ன காமுகனா... பார்க்கும் எல்லாப் பெண்களையும் படுக்கைக்கு அழைப்பதற்கு...

அவன் தொட்டது அபியை மட்டும் தான்... அதுவும் அவள் மீது முன்பு இருந்தே ஈர்ப்பு இருந்து இருக்க வேண்டும்... இல்லாவிட்டால் இப்போது மதியை நினைத்து மனம் அருவருப்பது போல் அன்று அபியின் அருகில் மனம் அருவருத்து இருக்க வேண்டுமே... அப்படி எதுவும் நடக்கவில்லையே... மாறாக மனதில் மகிழ்ச்சியைத் தானே அவன் உணர்ந்தான்...

ஆனால் அந்த மகிழ்ச்சிக்கான காரணம் மிகவும் தாமதமாய்ப் புரிந்து கொண்டதில் அவனது மனம் ரணமாய் வலித்தது...

"ஏன்னா என்னால உங்களை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது... ப்ளீஸ் புரிஞ்சிக்கோங்க..."

காயம் ஏற்படுத்திவிட்டு அந்தக் காயத்திற்கு அவளே மருந்தாய் மாறுவதைக் கண்டவன் மனதில் விரக்தி தான் எழுந்தது...

அபி தன்னைத் தவறாக நினைப்பதை எண்ணி மனம் வருந்துவதா இல்லை அவள் மனதில் தான் இருப்பதை எண்ணி மகிழ்வதா ஒன்றும் தெரியாமல் அவன் நின்று இருந்தான்...

ஒன்று மட்டும் புரிந்தது தனது செயலால் அவளது மனம் மிகுந்த வேதனை அடைந்து இருக்கிறது என்று... ஒரு பெண்ணை அடக்கி ஆள்வது ஆணுக்கு வேண்டும் என்றால் கர்வமாய் இருக்கலாம்... ஆனால் ஒரு பெண்ணுக்கு அது அவமானமே... காலம் கடந்து உணர்ந்தான் தனது பாவத்தின் வேதனை...

அவனிடம் பதில் இல்லை என்றதும் அண்ணாந்து அவனைப் பார்த்தவள், "மதியும் என்னைப் போல் தானே யோசித்து இருப்பா... உங்களை யாருக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு... அப்போ நீங்க எனக்குச் சொந்தமானதை எப்படி அவளால் தாங்கி கொள்ள முடியும்... எனக்கு மாதிரி தானே அவளுக்கும் வலிக்கும்..."

அவளையும், மதியையும் ஒப்பிட்டு அவள் பேசியது கேட்க சகிக்காமல் அவன்,

"இருக்கலாம் ரக்ஷி... அதுக்காக ஒரு பொண்ணை எதுவும் செய்யத் துணியலாமா... அதுக்கு அவங்க அனுபவிக்க வேண்டாமா... இனி உன் மேல் கை வைக்க அவங்க ஜென்மத்துக்கும் பயப்படணும்..." அபியின் மனம் புரிந்தாலும் மதியை அவ்வளவு சுலபத்தில் மன்னிக்க அவனால் முடியவில்லை...

பெண்ணின் பாவம் பொல்லாதது என்பதை அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியாமல் விழித்தவள்

சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்...

அவனது கையை எடுத்து தன் வயிற்றின் மீது வைத்து, "நீங்க செய்ற ஒவ்வொரு பாவமும் நம்ம குழந்தையைத் தான் பாதிக்கும்... இந்தப் பாவச்செயல் வேண்டாங்க..." அவளது வார்த்தைகள் அவனது காதில் தேனாய்ப் பாய்ந்தது... அவளது வயிற்றில் இருந்த தன் கையை மேலும் அழுத்தியவன்,

"ரக்ஷி என்ன சொல்ற...?" அவன் கேட்டதை அவனால் நம்ப முடியவில்லை... இழந்து இருந்த சந்தோசம் மீண்டும் மீண்டு வந்தது போல் குதூகலம் அடைந்தான்...

"நம்ம குழந்தை..." அவள் சொல்லி முடிக்கும் அவன் அவளைத் தன் கையில் தூக்கி சுற்றினான்...

"எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா... நீ குழந்தையை அழிக்காம இருப்பன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..."

அவனது வார்த்தையில் அவளது முகம் கூம்பியது... அதைக் கண்டு அவளைப் படுக்கையில் அமர வைத்தவன்,

"என்னடா..." என்றான் கனிவுடன்... அவனது இத்தனை நேர வருத்தம் எல்லாம் மறைந்து இருந்தது அவள் சொன்ன செய்தியால்...

எத்தனை கர்வமான விசயம் தந்தையாவது... அதிலும் அவன் மேல் கோபம் கொண்டு குழந்தையை அழித்தே தீருவேன் என்று சபதம் போட்டவள் அதைப் பாதுகாத்து வருகிறாள் என்றால் அது நிச்சயம் அவன் மீது இருக்கும் அன்பினால் தானே...

இது தான் அவனுடைய அபி... துரோகம் செய்த அவனுக்குக் கூட நன்மை செய்யும் அவன் காதலி...

"நான் ஒண்ணும் அந்தளவுக்குக் கெட்டவள் இல்லை..."

"அது தான் எனக்குத் தெரியுமே..." என்றான் உல்லாசமாய்... பழைய அக்ஷய் திரும்பி இருந்தான்...

"அப்போ எதுக்கு அப்படிச் சொன்னீங்க..."

"எப்போ...?" புரியாமல் கேட்டவனிடம் அவள் தூங்க செல்லும் முன் அவன் பேசிய வார்த்தைகளைச் சுட்டி காட்டியவள்,

"அதை யோசிக்கும் போது தான் நீங்க பேசியதன் அர்த்தம் புரிந்தது... நான் அந்த மாதிரி பண்ணலைன்னு சொல்ல தான் வந்தேன்... நீங்க எனக்குக் கொடுத்த வலி மாதிரி என்னால உங்களுக்குக் கொடுக்க முடியாது... ஏன்னா...."

"ஏன்னா.. நீ என்னைக் காதலிக்கிற..." என்று அவளது இழுவைக்குப் புன்னகையுடன் முற்றுப்புள்ளி வைத்தான் அவன்...

"தெரியலை..." என்றாள் அப்போதும் குழப்பமாய்...

"தெரியும்... விரைவில் அது தெரிய வரும்..." அவளின் மனம் புரிந்தவனாய்...

"மதியை..." மீண்டும் இழுத்தவளை கண்டு புன்னகைத்தவன்,

"நிச்சயமா அவளை விட்டுர்றேன்..." என்றவன் குனிந்து அவளது வயிற்றில் மென்மையாய் முத்தமிட்டான்... தனது வாரிசை சுமந்து இருக்கும் அவளது விருப்பத்திற்கு அவன் தலை வணங்கினான்...

அவனது செய்கையில் உடல் கூச பின்னுக்கு நகர்ந்தவள், "குழந்தைக்காகவா...?" என்றாள் ஆதங்கத்துடன்...

அவளது கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்தவனாய், "இல்லை உனக்காக... என் குழந்தையை மீட்டு தந்திருக்கிற உனக்காக..."

அவள் கூறியதன் அர்த்தமும் அவன் கூறியதன் அர்த்தமும் ஒன்று தான் என எண்ணி அவள் மனம் வருத்தமுற்றது...

"எதையும் நினைச்சு மனசை போட்டு குழப்பாம நிம்மதியா தூங்கு... நாளைக்குக் காலையில் மதி அவள் வீட்டுக்கு

போய் விடுவாள்... நீ கவலைப்படாதே..."

அவனது பேச்சில் அவளது அறைக்குச் செல்வதற்காக எழ,

"மேடம் எங்கே போறீங்க...? அது அப்போ... இப்போ உங்க வயித்துல இருக்கிறது என்னோட குழந்தை... அதனால் அது என் கிட்ட தான் படுக்கணும்..." என்றவன் அவளை அங்குப் படுக்கச் சொல்லி வற்புறுத்த வேறுவழியின்றி அங்கே ஓரமாய்ப் படுத்தாள்...

அவனும் மின்விளக்கை அணைத்துவிட்டு வந்து மறுபக்கம் வந்து படுத்தான்...

அவனது பேச்சு அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது... எல்லாம் குழந்தைக்காகத் தானா... தனக்காக இல்லையா... அவளது மனம் தவித்தது... இத்தனை நேரமாய் அவன் காதல் பிச்சை கெட்டு கெஞ்சியதை காயம் கொண்ட மனம் மறந்து போனது...

அவளது ஏக்கம் கொண்ட மனம் அவனது அன்பை இன்னும் அதிகமாய் எதிர்பார்த்தது...

தூங்காமல் கண் விழித்து இருந்தவளை பார்த்த அக்ஷய் அவளின் கையைப் பிடித்து, "சாரி பேபி..." என்க...

புரியாமல் பார்த்தவளின் வயிற்றில் மறு கையை வைத்தவன், "நம்ம குழந்தை..." என்றான் காதலாக...

மெல்லிய இரவு விளக்கின் ஒளியில் அவனது முகத்தில் தெரிந்த காதலில் அவள் திகைத்து போனாள்...

இத்தனை நாள் நிழலாய் பார்த்து ரசித்த அக்ஷயின் நிஜ பிம்பமாய்த் தன் முன் இருந்தவனைக் கண்டு அவளின் கண்கள் அவன் மேல் நிலை குத்தி நின்றது...

நிஜம் கொஞ்சம் கொஞ்சமாய் நிழலை வென்று கொண்டு இருந்தது நிஜத்தில்...

பூக்கும்...

அபி நன்கு உறங்கியதை அறிந்து மெல்ல படுக்கையை விட்டு எழுந்த அக்ஷய் பால்கனியில் வந்து விக்டரின் ஆட்களிடம் மதியை நாளை காலையில் அவளின் வீட்டில் பத்திரமாய் விடச் சொல்லி பணித்தவன் மீண்டும் அறைக்குள் நுழைந்தான்...

படுக்கையில் படுத்தவனுக்குச் சந்தோச மிகுதியில் உறக்கம் வரவில்லை... திரும்பி அருகில் படுத்து இருந்த மனைவியைப் பார்த்தான்... ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளின் அழகு அவனை ஈர்க்க எழுந்து அவள் பக்கமாய் நகர்ந்தவன் அவள் அருகில் வந்து அமர்ந்தான்...

மின்விசிறி காற்றில் அவள் முகத்தில் விழுந்து விளையாடிய முடிக்கற்றையைக் காதோரமாய்ச் சுருட்டி விட்டவன் பார்வை காதலோடு அவளைப் பார்த்தது... காலையில் இருந்த அவனது மனப்போராட்டம் தான் என்ன... இப்போது அவன் மனம் அடைந்து இருக்கும் எல்லையில்லா உவகைத் தான் என்ன... இரண்டுக்குமே காரணம் அபி என்றால் அது சற்றும் மிகையில்லை...

அன்று மதி அவனிடம் சவால் விடுவது போல் பேசி சென்றது அவனுள் உறுத்தி கொண்டே இருந்தது... அதை விட அந்த விருந்து முழுவதும் மதி அவனைப் பார்த்த பார்வையில் இருந்த வெறி அவளின் ஆழ்மனதை எடுத்துரைப்பதாய் இருந்தது...

அவன் தனக்குத் தான் ஆபத்து வரும் என்று தான் முதலில் நினைத்தான்... அப்படி அவனுக்கு ஆபத்து வருவதாக இருந்தால் இத்தனை மாதங்களில் அவனின் கதையை அவர்கள் முடித்து இருக்கலாம்... இல்லை முயற்சியேனும் பண்ணி இருக்கலாம்... அப்படி எதுவும் இதுவரை நடைப்பெறவில்லை... எல்லா முயற்சியுமே அவனை அவர்களின் காலடியில் விழ வைப்பதற்காகத் தான் நடந்ததே தவிர அவனின் உயிரை வாங்குவதற்காக அல்ல...

அப்படி என்றால் மதி சொன்னதற்காக அர்த்தம் தான் என்ன...???

'நீ எப்படி அந்த அபியை கல்யாணம் பண்றேன்னு நானும் பார்க்கிறேன்...?' மதியின் வார்த்தைகள் அவனது காதில் திரும்பத் திரும்ப ஒலித்தது...

'அவளது குறி எனது உயிர் இல்லை என்றால்...? அபியை நான் திருமணம் செய்வதைத் தடுக்க வேண்டும் என்றால்...?' அவனது எல்லாக் கேள்விகளுக்கும் விடையாய் அபியே வந்தாள்... அதனால் தான் தொடர்ந்து பாரிவேந்தனை கண்காணிக்க விக்டரின் ஆட்களைக் கொண்டு ஏற்பாடு செய்தான்...

அவரைக் கண்காணித்ததில் அவனுக்கு ஒரு விசயமும் பிடிபடவில்லை... அடுத்து அபியையும் தனது பாதுகாப்பு வளையத்தில் கொண்டு வந்தான்... அப்போதும் அவனால் பெரிதாய் கண்டுப்பிடிக்க முடியவில்லை... அந்தளவுக்கு அமைதியாய் பாரிவேந்தன் காயை நகர்த்தினார்...

கடைசி நேரத்தில் அபி கடத்தப்பட இருக்கிறாள் என்பதை அறிந்தவன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு அபியிடம் ஓடினான்... நல்லவேளையாகக் காலையில் வேலைக்குச் சென்று கொண்டு இருந்தவளை மிக எளிதாகத் தன்னுடன் அழைத்து வந்துவிட்டான்...

அதற்கு முன்னரே மணியை அழைத்துத் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துவிட்டே வந்து இருந்தான்... இவ்வளவு நாள் அபிக்குச் செய்து கொடுத்த சத்தியத்திற்காகத் திருமணத்தைப் பற்றி யோசிக்காமல் இருந்தவன் இப்போது அவளது உயிருக்கு ஆபத்து என்றதும் சத்தியத்தை மறந்தான்...

அவனளவள் உயிரோடு இருந்தால் அல்லவா சத்தியம் செல்லும்... அவள் உயிரோடு இல்லாமல் வெறும் சத்தியத்தை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்யப் போகிறான்... அவளுக்காகத் தான் செய்து கொடுத்த சத்தியத்தை மீறினான்...

அவன் அவளைக் காரில் ஏற்றும் இடத்தில் இருந்து வெகுஅருகில் விக்டரின் ஆட்கள் பாரிவேந்தன் அனுப்பிய ஆட்களைப் பிடித்து நன்றாக மொத்தி தங்களுடன் அழைத்துச் சென்றார்கள்... இது எல்லாம் அபிக்குத் தெரியாது... ஆனால் அவனுக்கு நன்கு தெரியும்...

அவ்வளவு நேரம் உயிரை கையில் பிடித்துக் கொண்டு வந்தவன் அவளைக் கண்டதும் நிம்மதி அடைந்தவனாய் பழைய குதூகலம் திரும்ப அவளோடு வம்பிழுத்து அவளை அழைத்துச் சென்றான்...

அந்த ரணகளத்திலும் குதூகலமாய் இருந்த தனது மனதை நினைத்தவனுக்கு இப்போது நினைத்தாலும் சிரிப்பு வந்தது... அவளது முகத்தைக் குனிந்து பார்த்தான்...

"காலையில் உன்னைப் பார்க்கும் வரை என் உயிர் என் கையில் இல்லை... உன்னைப் பார்த்த நொடி இரண்டு பேர் உயிர் போனால் கூட என் உயிர் உன்னோடு சேர்ந்து தான் போகும் என்று அறிந்த அந்த நொடி உன் மீதான என் காதலின் அளவை நான் உணர்ந்த அருமையான தருணம்..." என்றவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்...

"உனக்காக உன்னை அடையறதுக்காக என்னோட டாட், மாம் எல்லார் கிட்டேயும் போராடி தான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்கினேன்... இதுல உன் அண்ணன் விசயம் கேள்விப்பட்டு ரொம்பத் தான் ஏகிறினான்... நான் என்னமோ அனிக்காகத் தான் உன்னை அவசரமா கல்யாணம் பண்றேன்... உன்னை வச்சு அவனை நான் ப்ளாக்மெயில் பண்ணுவேன்னு என் கிட்ட கோபப்பட்டான்... அவனுக்குத் தெரியாதுல்ல நான் மாறினது... முதல்ல இருந்த அக்ஷய்யா இருந்தா ஒருவேளை அப்படித்தான் யோசிச்சு இருப்பேன்... ஆனா இப்போ இருக்கிற அக்ஷய் உன்னைக் காதலிக்கிறவன்... அதனால் உண்மை நிலவரத்தை சொன்னேன்... பையன் அரண்டு போயிட்டான்..."

"என் கிட்ட நீ வந்தா உன்னைப் பத்திரமா பார்த்துக்குவேன்னு சத்தியம் பண்ணாத குறையா சொன்னதும் தான் ஒத்துக்கிட்டான்... ஆனாலும் அவனுக்குத் திமிர் கொஞ்சமும் குறையலை... கடைசியில் என்ன தெரியுமா சொல்லிட்டுப் போறான்... என்னை மாதிரி ஆள் பலம், பணப் பலம் அவனுக்கு இல்லையாம்... அதனால் உன்னோட உயிருக்கு ஆபத்து வந்துட கூடாதுன்னு தான் சம்மதித்தானாம்..."

ஆதர்ஷை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஆனால் அடுத்த நொடி அவனது முகம் இறுகியது...

ஆம்... அவர்கள் திருமணம் முடிந்த பின்னர்த் தான் அவனுக்குத் தெரிந்தது அபியை கடத்த இருந்ததன் நோக்கம்... அதைக் கேட்டதும் அவன் கொதித்துப் போனான்... அவன் எப்போதும் பாவம் புண்ணியம் பார்ப்பவன் அல்ல தனக்குச் சுண்டு விரல் போனால் எதிராளிக்குக் கை போக வேண்டும் என்று நினைப்பவன்...

அப்படிப்பட்டவனின் அன்புக்கு பாத்திரமானவளுக்கு ஒன்று என்றால் பார்த்துக் கொண்டு சும்மாவா இருப்பான்... அன்று பிற்பகலே மதியை கடத்திவிட்டான் சத்தமில்லாமல்... அபியை துடிக்க வைக்க நினைத்த பாரிவேந்தனுக்கு மரண அடி கொடுக்க அவன் தயாராகி விட்டான்... அவனுள் எரிமலையாய் ஆத்திரம் குமுறிக் கொண்டு இருந்தது...

அந்த ஆத்திரத்தையும் அவனது காதலி காதலை காட்டி குளிர செய்துவிட்டாள்... குழந்தையைப் பாதிக்கக் கூடாது என்றதும் அவனால் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை... அவனுக்காக அவனது வாரிசை சுமப்பவளுக்காக அவன் தனது கொள்கையைச் சிறிது தளர்த்திக் கொண்டான்... அதற்காக எப்போதும் அப்படியே இருப்பான் என்று சொல்வதற்கு இல்லை...

மீண்டும் தன்னவள் முகத்தைப் பார்த்தான்... அவளைச் சந்தித்ததில் இருந்து இன்று வரை நடந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாய் அவனது மனம் நினைத்துப் பார்த்தது...

யாரை கண்டால் வேப்பங்காயாய் கசந்ததோ அவளிடமே தான் காதல் வயப்படுவோம் என்று யாராவது முன்பு சொல்லி இருந்தால் பைத்தியக்காரன் என்று அவர்களை அவன் எள்ளி நகையாடி இருப்பான்... ஆனால் இப்போது அவனே இப்படி அவள் மேல் பைத்தியக்காரனாவான் என்று கனவிலும் அவன் நினைத்து பார்க்கவில்லை...

அவளது முக வடிவை தனது கையால் அளந்தவன், "உன் கிட்ட எதைக் கண்டுடி இப்படிப் பைத்தியமானேன்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க வந்தப்போ வேண்டாம்ன்னு மறுத்து தன்மானத்தோட நின்னியே அப்போதா... இல்லை கல்யாணம் வேண்டாம்ன்னு உயிரை விடத் துணிந்தியே அப்போதா... இல்லை என் பணம், அந்தஸ்து பார்த்து மயங்காத உன் நல்ல குணத்தைப் பார்த்தா... எதைப் பார்த்துடி நான் மயங்கினேன்..." அது அவனுக்குத் தெரியவில்லை...

ஆனால் அதற்கு முன்பே அவளிடத்தில் அவனுக்கு ஒரு ஈர்ப்பு இருந்திருக்க வேண்டும் இல்லை என்றால் மதியிடம் கூடப் பேச யோசிப்பவன் அபியிடம் விடாமல் மல்லு கட்டி கொண்டு நின்று இருக்க மாட்டான்... அதுவும் அவள் அவனை எதிர்த்து வாயாடுவது கண்டு வெளியில் கோபத்தில் அவளை அவன் சாடி பேசினாலும் மனதுக்குள் அவளது தைரியம் அவனைக் கவர்ந்து இருக்க வேண்டும்...

"என்னமா வாயடிக்கிற... இப்போ எங்கேடி போச்சு அந்த வாய்..." அவளது உதட்டை வலிக்காமல் சுண்டினான்...

"ஆனாலும் அந்த ரக்ஷியை தான் நான் ரொம்ப மிஸ் பண்றேன்... பழையபடி நீ வாயடிக்க மாட்டியா... என்னோடு கலகலப்பா இருக்க மாட்டியான்னு தான் என் மனம் ஆசைப்படுது... சீக்கிரம் என்னைப் புரிஞ்சு ஏத்துக்கோ ரக்ஷி... நீ நினைக்கிற மாதிரி நான் ரொம்ப ரொம்பக் கெட்டவன் கிடையாது... கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்..." ஆதங்கத்துடன் தனது மன ஏக்கத்தை உறங்கும் அவளிடம் கூறினான்...

"உன் அளவுக்கு நல்ல குணம் இல்லைன்னாலும் உனக்காக என் குணத்தை மாத்திக்கிற அளவுக்கு நான் கொஞ்சம் நல்ல குணம் உள்ளவன் தான்..." என்றவன்,

"அது எப்படிப் பேபி உனக்கு அந்த மதியை மன்னிக்க முடியுது... என்னால எல்லாம் மன்னிக்க முடியலை... நாளைக்குப் பேப்பர்ல அந்த மாதிரி நியூஸ் வந்தா தான் அவ பண்ணிய துரோகத்துக்கு எனக்குத் தூக்கம் வரும்... ப்ச்... உனக்காகப் போனா போகுதுன்னு அவளை விட்டுட்டேன்... அதுவும் நீ கேட்ட பாரு ஒரு கேள்வி அதுல ஆடி போனவன் தான்... இன்னும் அந்த அதிர்ச்சி என்னை விட்டு போகலை... அவளைப் பழிவாங்க அவள் மீது கையை வைப்பேன்னா... போடி லூசு ரக்ஷி..." செல்லமாய் மனையாளின் முன்நெற்றியில் முட்டியவன்,

"நிச்சயம் பண்ணி லைசென்ஸ் கொடுத்த இத்தனை மாதங்களில் ஒரு நாள் கூட அவளைத் தொட இன்ட்ரஸ்ட் காண்பிச்சது இல்லை... இதில் நீ வில்லன் வேலை எல்லாம் பார்க்க சொல்ற... நான் உனக்கு மட்டும் தான் வில்லன், ஹீரோ எல்லாம்... வேற எந்தப் பொண்ணு கிட்டேயும் இல்லை..." என்றவன்,

"பிகாஸ் ஐ லவ் யூ பேபி..." என்றவன் மனதில் அபி நீக்கமற நிறைந்து இருந்தாள்...

அவள் தன்னை விட அழகில், அந்தஸ்தில், படிப்பில் எல்லாவற்றிலும் பல படி கீழே என்ற சிறு உறுத்தல் கூட அவன் மனதில் இல்லை... அவளின் குணம், அவளின் தைரியம், அவளின் தன்மானம் இது எல்லாம் தான் அவனைக் கவர்ந்து அவளிடத்தில் காதலாய் மண்டியிட செய்தது...

பலம் பொருந்திய ஆண் பலகீனமான பெண்ணிடம் மண்டியிடுகிறான் என்றால் அது காதலில் மட்டுமே சாத்தியமாகும்... அதிலேயே ஒரு பெண் தன் மனவலிமை ஆணுக்கு உணர்த்திவிடுகிறாள்...

வெகு நேரம் முழித்து இருந்தவன் அதிகாலையில் தான் உறங்கினான்...

காலையில் வழக்கம் போல் விழிப்பு தட்ட அபி எழுந்தாள்... எழுந்ததுமே அறையின் தோற்றம் வித்தியாசமாய்ப் படத் தான் கணவன் வீட்டில் இருப்பதை உணர்ந்து அவசரமாய் அருகில் பார்த்தாள்... அக்ஷய் அயர்ந்து உறங்கி கொண்டு இருந்தான்... அவன் உறங்கும் அழகை கண்டு அவளால் விழியை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை...

உறங்குவதாலோ என்னமோ அவனது முகத்தில் எப்போதும் குடி இருக்கும் கடுமை மறைந்து இளக்கம் தோன்றி இருந்தது... அச்சில் வார்த்தார் போல் எந்தக் குறையும் சொல்ல முடியாமல் கம்பீரமான அழகோடு இருந்தவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் தன்னை ஒரு முறை குனிந்து பார்த்து கொண்டாள்...

குச்சி குச்சியாய் கை காலுடன் மாநிறமாய் இருக்கும் தான் எந்த விதத்தில் அவனுக்குப் பொருத்தமாவோம் என்று அவளது மனம் சுணங்கியது...

மீண்டும் பார்வை அவனிடத்தில் சென்றது... முன்பாவது அனியின் வாழ்க்கைக்காக அவன் தன்னைத் திருமணம் செய்ய முன் வந்தான் என்று சொல்லலாம்... ஆனால் இப்போது அனி பிரச்சினையில் இனி தன்னை இழுக்க முடியாது என்று உணர்ந்தும் அவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான் என்றால் அது உண்மையில் காதலினால் தானா...???

நேற்று நடந்த சம்பவத்தை வைத்து பார்க்கும் போது அவனது காதல் நூறு சதவீதம் உண்மை என்றே தோன்றியது... அவனுடைய குணத்துக்கு அவள் எக்கேடோ கெட்டு போகட்டும் என்று விட்டு விட்டு சென்று இருக்கலாம்... ஆனால் அதைச் செய்யாமல் பாதுகாத்து மனைவி அந்தஸ்து அளிக்கிறான் என்றால் நிச்சயம் அது காதல் இல்லாமல் வேறு என்னவாம்...

அதை நினைக்கும் போது அவளது மனம் சிறிது லேசானது...

விசமாய் வெறுத்து ஒதுக்கிய ஒருத்தனை திருமணம் செய்து இதோ இப்படி அவன் அருகில் இருப்போம் என்று அவள் கனவிலும் நினைத்துப் பார்த்தது இல்லை... அந்த வெறுப்பிலும் அவனைக் காதலித்த தன்னைக் குறித்து அவளுக்கே வெட்கமாய் இருந்தது... காதலுக்குக் கண் இல்லை போலும்... இல்லை என்றால் இப்படி அவனிடத்தில் காதல் வந்து இருக்குமா...

அவன் செய்த காரியத்தில் அவன் மீது வெறுப்பு கூடி கொண்டே போனாலும் அந்தக் காதல் அவனது தவறை மன்னித்து ஏற்றுக் கொள்ள வைத்து இருக்கிறது... அப்போது அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத் தான் துடித்தது என்ன இப்போது அவனுக்குக் கட்டுப்பட்டு அமைதியாய் இருப்பது என்ன... இது எல்லாம் காதலினால் தானா...

அதிலும் நேற்று அவளது மானத்தை அவன் காத்ததைக் கேட்டு இது நாள் வரை அவளது மானத்தைக் களவாடி விட்டானே என்று அவனிடத்தில் கொண்டு இருந்த கோபம் சூரியனை கண்ட பனித்துளியாய் மறைந்து போனதை உணர்ந்தே இருந்தாள்... அவன் மீதான கோபத்தை அவனே போக்கிவிட்டான்...

எல்லா விதத்திலும் யோசித்துப் பார்த்தாலும் அவனது காதல் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புரிவதாய்... நேற்று இரவு அவன் விழியில் கண்ட காதலில் அவளது மனம் கரைந்தே போயிற்று... அது பொய்யில்லையே...

எது எப்படியோ அவனுடன் வாழ்ந்து தான் பார்க்கலாமே என்று அவளது காதல் கொண்ட மனம் நினைத்தது... விரும்பியது...

எப்போதும் நிழலிடம் தஞ்சம் அடைபவளுக்கு இன்று அதன் தாக்கம் கொஞ்சம் கூட இல்லை... நிழல் தான் நிஜமாய் உருமாறி அவள் அருகில் உறங்கி கொண்டு இருக்கிறதே...

மனதில் எழுந்த காதல் மீண்டும் அவனது முகத்தைப் பார்க்க விடாமல் அவளை நாணச் செய்ய எழுந்து தனது அறைக்குச் சென்றாள்...

குளிப்பதற்காகத் துண்டை தேடி அலமாரியை திறந்தவள் அங்கு அவளுக்குத் தேவையான எல்லா உடைகளும் அடுக்கப்பட்டு இருப்பதைக் கண்டு விழிகள் விரித்து வியந்து நின்றாள்...

ஒரு காலத்தில் தேளாய் கொட்டியவன் இன்று அவளுக்காக இப்படிப் பார்த்து பார்த்து செய்வதைக் கண்டு அவளது மனம் மகிழத்தான் செய்தது...

குளித்து விட்டு வந்து அவள் புடவையைக் கட்டி கொண்டு இருக்கும் போது கதவு திறக்கும் சத்தத்தில் அவள் அவசரமாய்ப் புடவையை அள்ளி நெஞ்சோடு அணைத்து கொண்டாள்...

வேகமாய் உள்ளே நுழைந்த அக்ஷய் அவளது நிலையைக் கண்டு திகைத்தவன் பின் திரும்பி நின்று கொண்டு, "சாரி... கதவை தட்டினேன்... நீ பதில் சொல்லலைன்னதும் பயந்து போய்..." அவன் தயங்கி நிறுத்தினான்...

"ம்... பரவாயில்லை..." மெல்லிய குரலில் அவள் பதில் உரைத்ததும்,

"ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வா..." என்றவன் கதவை சாத்திவிட்டு வெளியேறினான்...

என்றும் போல் இன்றும் அவனது கண்ணியம் அவளது மனதை கவரத்தான் செய்தது... தாலி கட்டிய மனைவியாய் இருந்தாலும் தனது உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கும் அவன் அவளது மனதில் பல மடங்கு உயர்ந்து போனான்...

அவள் காதலித்தது இந்தக் கண்ணியத்தைக் கண்டு தானே... அந்தக் கண்ணியம் கொஞ்சமும் குறையாமல் இருந்தவன் அவளின் மனதில் ஆழப்பதிந்தான்...

உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவளை கண்டு அக்ஷய், "சாரி பேபி..." என்றான் மீண்டும்...

ஏனெனில் அவளுக்கு இருக்கும் கோபத்தில் அவளது உடலுக்காக அவன் அலைகிறான் என்று அவள் நினைத்துவிடக் கூடாதே என்று பயந்தான்...

"அதான் பரவாயில்லைன்னு சொல்லிட்டேனே..."

"எந்திரிச்சதும் உன்னைக் காணோம்ன்னு பதறிப் போயிட்டேன்... அந்தப் பதட்டத்துல தான்..." இன்னமும் பதட்டம் குறையாமல் பேசுபவனைக் கண்டு ஏனோ அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"வேறு யாரோவா நான்... எதுக்கு இத்தனை விளக்கம்...?"

அவளது சகஜமான பேச்சில் அவனது பதட்டம் குறைய அவளை ஆழ்ந்து பார்த்தவன், "அப்போ நீ யாரு...?"

அவனது பார்வையில் அவளது முகம் சிவந்தது... "யாருன்னு உங்களுக்குத் தெரியாதா...?"

"ம்... தெரியலையே..." அவனது பேச்சில் திகைத்து போய் அவள் அவனைப் பார்க்க...

அவள் அருகில் வந்தவன் அவளை உற்று நோக்கி, "இப்போ நல்லா தெரியுது..." என்றான் விசமமாய்...

அதில் அழையா விருந்தாளியாய் வெட்கம் எட்டி பார்க்க அவள், "நான் அத்தையைப் பார்க்க போறேன்..."

"அத்தையைப் பிறகு பார்க்கலாம்..." என்றவன் அவளைத் தன் கையணைவில் வைத்துக் கொண்டு, "நீ என் மனைவின்னு எனக்கு நல்லா நியாபகம் இருக்கு... மனைவியா இருந்தாலும் நீ ஒரு தனி மனுசி... உனக்குன்னு ஒரு பர்சனல் ஸ்பேஸ் இருக்கும்... அதில் உன் விருப்பம் இல்லாமல் அத்துமீறி நான் நுழைய மாட்டேன்..."

அவனது பேச்சு அவளது காதில் தேனாய்ப் பாய்ந்தது... இந்தளவுக்குப் பக்குவமாய்ப் பேசுபவன் அன்று மட்டும் ஏன்

தன்னிடம் அப்படி நடந்து கொண்டான்...? அதுவும் தான் மறுக்க மறுக்க வலுக்கட்டாயமாய்...?

அவளது முகம் யோசனையில் இருப்பதை அறிந்து அவளது மனதை உணர்ந்தவனாய், "அன்னைக்கு நான் ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்னு எனக்கே புரியலை...? ஆனா இப்போ அதை நினைக்கும் போது மனசுக்கு வேதனையா இருக்கு... மன்னிப்புங்கிற ஒரு வார்த்தையில் அந்தத் தப்பை சரி செய்ய முடியாதுன்னு எனக்குத் தெரியும்... ஆனா என்னோட அன்பால அந்தத் தவறை நிச்சயம் நான் சரி செய்வேன்..."

"அன்னைக்கு நான் உன்னை அதுக்காகக் கடத்தலை... கோர்ட்ல கேஸ் முடியற வரை உன்னை மறைச்சு வைக்கணும்ன்னு தான் நினைச்சேனே தவிர வேறு எந்தக் கெட்ட எண்ணத்திலும் இல்லை... ஆனால் அதுக்கு அப்புறம் எல்லாமே கைமீறி போயிருச்சு..."

அன்றைய தாக்கதில் அவன் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்... அவனது வேதனை அவளையும் தாக்கியது... அது அவளுக்கும் புரிவதாய்...

அதே சமயம் அவனது வார்த்தைகளின் அர்த்தமும் அவளுக்குப் புரிவதாய்... முதலில் இருந்த அபியாய் இருந்து இருந்தால் இதை நம்பி இருக்க மாட்டாள்... அவன் பொய் சொல்கிறான் என்று அலட்சியப்படுத்திக் கோபம் கொண்டு இருப்பாள்...

இப்போது இருக்கும் அபிக்கு அவனது மற்றொரு பக்கம் நன்கு தெரியும்... அவளுக்கு ஏதும் ஒன்று என்றால் காப்பாற்ற அவன் இருக்கிறான் என்ற எண்ணம் அவள் மனதில் ஆழப்பதிந்து போயிருந்தது... அந்த எண்ணமே அன்று அவனது செயலுக்கான நியாயத்தைத் தேட சொல்லியது...

அன்று அவன் கடத்திட்டு வந்தாலும் எந்த நிலையிலும் தவறாக ஒரு பார்வையோ இல்லை தவறான பேச்சோ தன்னிடம் பேசவில்லை என்று காலத் தாமதமாய்ப் புரிந்து

கொண்டாள்... அன்று அவள் செய்த செயல்கள் அனைத்தும் அவனது கோபத்தைக் கிளறிவிட்டு இருக்க வேண்டும்... தவறு தன் பக்கமும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள்...

"என் மேலும் தப்பு இருக்கு..."

அவளது வார்த்தையில் கண்களைத் திறந்தவன், "இருக்கலாம்... அதுக்காக உன்னை அந்த மாதிரி..." அதைப் பத்தி பேச முடியாமல் நிறுத்தியவன்,

"நான் செய்த தவறுக்கு என்னால் கேட்க முடிந்தது மன்னிப்பு மட்டுமே..." யாரிடமும் தலைக் குனிந்து மன்னிப்பு கேட்காதவன் மனைவியிடத்தில் மன்னிப்பு வேண்டி தலைக் குனிந்து நின்றான்...

அவள் பதில் சொல்லாமல் அவன் அருகில் வந்து அவனது நெஞ்சில் சாய்ந்தாள்...

"பேபி..." அவளது அருகாமை தந்த பிரமிப்பு அவனைத் திகைக்கச் செய்தது...

நேற்று கூட அவன் நெஞ்சில் தஞ்சம் அடைந்தாள் தான்... அது உணர்வில்லாமல் நடந்து கொண்டது... ஆனால் இது...

"என்னை மன்னிச்சிட்டியா...?"

ஆம் என்பது போல் தலையாட்டியவள் உணர்ச்சிவசத்தில் பேச்சிழந்து நின்று இருந்தாள்... அவனது அன்பு மேலும் மேலும் அவளை வாயடைக்கச் செய்தது... ஒரே நாளில் திகட்ட திகட்ட அன்பை வாரி வழங்கும் அவனைக் கண்டு இப்போது அவள் பிரமித்து நின்றாள்...

அதே போல் அவள் மன்னிப்பை ஏற்றுக் கொண்டது கண்டு அவனும் சந்தோசத்தில் வாயடைத்து போய் நின்றான்...

சில நேரங்களில் மௌனம் கூடக் காதலில் அழகு தான் போலும்... அவர்களின் இதயங்கள் மட்டும் பேசி கொண்டது மௌனமாய்...

அபி குழந்தை உண்டாகி இருப்பதை அறிந்து துளசி, கோபிநாத் சந்தோசப்பட்டார்கள்... துளசிக்கு அபி மேல் இருந்த சிறு சுணக்கம் கூட இந்த விசயத்தைக் கேட்டதும் மறைந்து போனது... அனி அவளுக்கு வாழ்த்து சொன்னவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை...

அக்ஷய் அலுவலகம் கிளம்பியவன் அவளிடம், "நீயும் வாயேன் ரக்ஷி... எனக்குப் பொழுதும் போகும்... உன் கூட இருந்த மாதிரியும் ஆச்சு..."

"அத்தை வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க..."

"ம்ப்ச்..." என்று சலித்தபடி கிளம்பியவன் மனைவியிடத்தில் தெரிந்த தயக்கத்தில் நின்றவன், "என்ன சொல்லணும் ரக்ஷி..."

"அது... அது..." கேட்டால் கணவன் கோபப்படுவானோ என்று அவள் தயங்கினாள்...

"எதுவா இருந்தாலும் சொல்லுடா..."

"மதியை வீட்டுக்கு அனுப்பிட்டீங்களா..." என்றவளை கண்டு அவனது முகம் மிருதுவானது...

அவளது இடை பிடித்துத் தன் பக்கமாய் இழுத்தவன் அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு, "நான் என்ன பதில் சொன்னா சந்தோசப்படுவியோ அதை நான் செஞ்சிட்டேன்..."

அவனது பேச்சில் குழம்பி நின்றவள் பின் புரிந்ததும் முகம் மலர அவனைப் பார்த்தாள்...

"உண்மையா...?"

"உன் கிட்ட பொய் சொல்ல மாட்டேன்னு சொன்னதாய் எனக்கு நியாபகம்... இந்நேரம் அவ வீட்டுக்குப் போய்க் காலை டிபனை நல்லா மொக்கிட்டு இருப்பா..." என்று சிரித்தவனைக் கலக்கமாய்ப் பார்த்தவள்,

"உங்களுக்கு இது தப்புன்னு தோணலையா...?"

“இங்கே பார் ரக்ஷி... சில விசயங்களை இப்படித் தான் டீல் பண்ணனும்... நான் அந்த மாதிரி பண்ணலைன்னா நஷ்டம் எனக்குத் தான்... இந்நேரம் உன்னோட நிலை... அதைக் கொஞ்சம் எண்ணி பார்... அவங்க உன்னை ஒரு பொண்ணா நினைச்சு பார்த்தாங்களா... இல்லையே... இந்த உலகம் ரொம்பச் சுயநலமானது ரக்ஷி... இதில் நானும் சுயநலமா இருந்தா தான் ஜெயிக்க முடியும்... இல்லைன்னா என்னை ஏறி மிதிச்சுட்டு மத்தவன் முன்னேறி போய்க்கிட்டே இருப்பான்... எல்லோரையும் போல் நானும் இருப்பதில் தப்பில்லையே... தனித்து இருந்தா பிழைக்கத் தெரியாத ஏமாளின்னு பட்டம் கட்டி ஓரமா உட்கார வச்சிருவாங்க..."

பேசி கொண்டே போனவன் அவளது பேச்சற்ற நிலையைக் கண்டு அவளைக் குனிந்து பார்த்தான்...

"என்ன பேபி...?" ஒற்றை விரலால் அவளது முகத்தை நிமிர்த்தியவன் அவளது கண்களில் கண்ணீர் கண்டு பதறினான்...

"ஏய்... என்னாச்சு..." அவளது கண்ணீரை துடைக்க மீண்டும் மீண்டும் அது வழிந்தது...

நேற்று கோபத்தில் இருந்த போது அவன் சொன்னதன் சாராம்சம் உறைக்கவே இல்லை... ஆனால் இன்று அது நன்கு உறைக்க அவளது மேனி நடுங்கியது...

"எனக்கு மட்டும் அந்த மாதிரி ஒண்ணு நடந்து இருந்தா..." சொல்லும் போதே அதை எண்ணி அவளது உடல் அதிர்ந்தது அச்சத்தில்...

"என்ன பேச்சு பேசுற பேபி... நான் அப்படி எல்லாம் நடக்க விட்டிருவேனா..." என்று அவன் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்...

"அப்படி நடந்து இருந்தா...?" அவனது அணைப்பில் இருந்து விடுபட்டு அவனை அண்ணாந்து பார்த்தவள் மனம் அவனிடம் எதையோ தேடியது...

"அப்படி மட்டும் நடந்து இருந்தா அவங்களை உயிரோடு எரிச்சு கொன்னு இருப்பேன்..." என்றவனின் பதிலில் அவளது மனம் சமாதானம் ஆகவில்லை... மேலும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தது...

இன்னமும் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் பூ முகத்தைத் தன் கைகளில் ஏந்தியவன், "உனக்கு என்ன நடந்து இருந்தாலும் நீ தான் என் மனைவி... நீ மட்டும் தான் என் மனைவி..."

அவன் சொல்லி முடிக்கவில்லை, "அக்ஷய்..." என்று அழுது கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள்...

இதோ இந்த அன்பு பொய்யில்லையே... இது ஒன்று போதாதா அவனது உள்ளம் எவ்வளவு உயர்ந்தது என்று எடுத்துரைப்பதற்கு...

"பேபி... நீ எப்படி இருந்தாலும் என் காதல் மாறாது... உன்னை வெறுக்கவும் இயலாது..." என்றவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

அவள் விரும்பிய விதத்தில் அவளது காதலனாய் கணவனாய் இருந்த இந்த அக்ஷய் முன்னால் அவள் கற்பனையில் உதித்த அக்ஷய் கூட உண்மையில் தோற்றுப் போனான்... அவனுள் இத்தகைய ஒரு நல்ல மனம் இருப்பதை அவள் இதுநாள் வரை உணர்ந்தது இல்லை...

'இவன் என் கணவன்...' அவளது மனம் கர்வமாய் நினைத்தது...

பெண்ணின் இந்தக் கர்வமே ஒவ்வொரு ஆணையும் தலைநிமிர்ந்து வாழ செய்கிறது... நிச்சயம் அக்ஷயையும் தலை நிமிர்ந்து வாழ செய்யும்...

*********************

சோகத்தில் அமர்ந்து இருந்த தங்கள் முன் திடுப்பென்று மதி வந்து நிற்பாள் என்று அவளின் பெற்றோர் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை...

"மதி..." என்று அவளை அணைத்துக் கொண்டு கதறி விட்டனர்...

காலையில் எந்தச் செய்தித்தாளில் மகளது அவப்பெயர் வருமோ என்று திக் திக் என்று அவர்கள் மனம் பதைபதைத்துக் கொண்டு இருக்க அவளே நேரில் வந்தால் அவர்களுக்கு எப்படி இருக்கும்...

பிரிந்து சென்ற உயிர் மீண்டும் கிடைத்தது போல் இருந்தது...

"உன்னை இந்த மாதிரி ஆக்கின அக்ஷயை நான் சும்மா விடப் போவது இல்லை..." பாரிவேந்தன் சபதம் உரைக்க...

"பேசாம சும்மா இருங்க... சும்மா விலகி இருந்தவனைப் போய் அப்பாவும், பொண்ணும் போய் வம்பு இழுத்தா அவன் சும்மா விடுவானா... அதுவும் அவன் காதலிக்கிற பொண்ணைக் கடத்தினா பேசாம இருப்பானா... ஒரு பொண்ணைக் கடத்துற அளவுக்கு உங்க புத்தி ஏன் இப்படிப் போச்சு.... அதே வயசுல உங்களுக்கும் ஒரு மகள் இருக்கா அது உங்க நியாபகத்துல வரலையா... அதான் அவன் உங்களுக்கு நல்லா நியாபகப்படுத்திட்டான்..."

"ஏய்... வாயை மூடுடி... பெருசா அவனுக்கு வக்காலத்து வாங்குற... அவன் மட்டும் என் பொண்ணுக்குத் துரோகம் பண்ணலையா..."

"எத்தனையோ கல்யாணம் மணவறை வந்து கூட நிக்குது அது மாதிரி நினைச்சிட்டு போக வேண்டியது தானே... பழிவாங்க இது என்ன சினிமா... அவன் இல்லைன்னா வேறு ஒரு மாப்பிள்ளை... மாப்பிள்ளைக்கா பஞ்சம்... அவ தான் புத்தி இல்லாம பேசறான்னா நீங்களாவது புத்தி சொல்லி திருத்த வேண்டாமா...? மதியை கடத்திய விசயம் யாருக்காவது தெரிஞ்சா அவளுக்குக் கல்யாணம் தான் நடக்குமா... எதையும் யோசிச்சு பார்த்துச் செய்றது இல்லை..."

"இப்போ என்னை என்ன தான் செய்யச் சொல்ற...?" மனைவியின் பேச்சில் அவரது கோபம் சற்று அடங்கியது...

அவர்கள் பேசியது அனைத்தும் காதில் விழுந்தாலும் மதி மௌனமாய்க் கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தாள்... தன்னைக் கடத்தும் அளவுக்குத் துணியும் அக்ஷயையா தான் இவ்வளவு நாள் நேசித்தோம் என்று மனம் நொந்து இருந்தாள்... அது குறித்து அவளுக்கே அவமானமாய் இருந்தது... அவன் மேல் வெறுப்பாய் வந்தது...

"இன்னும் ஒரு மாசம் டைம் தர்றேன்... அதுக்குள்ள மதிக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறீங்க..."

"மதி..." மகளின் முகத்தைப் பார்த்தார் பாரிவேந்தன்...

"இனியும் அவள் விருப்பத்துக்கு நீங்க ஆடினா நானே அவளுக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டி இருக்கும்..." உறுதியாய் கூறிய மனைவியிடம் தழைந்து தான் போக வேண்டி இருந்தது அவருக்கு...

மகள் கடத்தப்பட்ட விசயத்தை யாரிடமும் சொல்லவில்லை பாரிவேந்தன்... நிச்சயம் இது அக்ஷய் வேலை தான் என்று அவருக்குத் தெரியும்... அவனைப் பற்றிச் சொன்னால் அடுத்து அவர் செய்த வேலையும் வெளிச்சத்துக்கு வந்து விடும் அதனால் அடக்கி வாசித்தார்... ஆனாலும் அக்ஷய் மீது இருந்த கோபம் குறையவில்லை...

*******************

மிகவும் கஷ்டப்பட்டு விக்டருக்கு ஜாமீன் வாங்கிக் கொடுத்துவிட்டான் அக்ஷய்... அதன் பின்பே அவனுக்கு மனம் லேசானது... நிஷாவை பற்றிய அவனது கவலை சற்றே அகன்றது...

மேடிட்ட வயிறுடன் தன்னை வரவேற்ற மனைவியைக் கண்டதும் விக்டருக்குக் கண்கள் கலங்கியது...

"நிஷா..." என்று அவளை அணைத்துக் கொள்ள...

அவளும் அவனது அணைப்பில் அடங்கியவள் சந்தோசத்தில் கண்ணீர் வடித்தாள்...

"இனி உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன் நிஷா..." என்றவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் அவள்...

"ம்... நம்பு... இனி இந்தத் தொழிலை விட்டுட்டு சார் கிட்ட வேலைக்குப் போகலாம்ன்னு இருக்கேன்..."

"இதைக் கேட்கும் போது எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா..." அவளது மகிழ்ச்சியில் அவனது மனம் நிறைந்தது...

விக்டர் அக்ஷயிடம் வேலை கேட்க அவன் விக்டரை தனது பாதுகாவலனாய், சாரதியாய் தன்னோடு வைத்துக் கொண்டான்...

அன்று வேலைக்கு வந்த விக்டரை அபிக்கு அறிமுகம் செய்து வைத்தான் அக்ஷய்...

"இது விக்டர்... நிஷாவோட ஹஸ்பெண்ட்..."

"வாங்க அண்ணா..." அபியின் 'அண்ணா' என்ற விளிப்பில் யாருமற்ற அநாதையான அவன் நெகிழ்ந்து போனான்...

"சார்... உங்களை மாதிரியே தங்கச்சியும் ரொம்ப நல்லவங்க சார்..."

அவனது கூற்று கேட்டு சிரித்த அக்ஷய், "இப்போ நல்லவள் தான்... ஆனா கோபம் வந்தா ரொம்ப ரொம்பக் கெட்டவள்..."

அவனது பேச்சில் கோபமாய் முறைத்தாள் அவனது மனையாள்...

"பார்த்தியா விக்டர் நான் தான் சொன்னேனே..." என்று வாய்விட்டு சிரித்த அக்ஷயை வியப்பாய் பார்த்தான் விக்டர்...

எப்போதும் இறுக்கமாய் இருக்கும் அக்ஷயா இது என்று அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது...

காதல் வந்தால் மனிதன் தலைகீழாய் மாறிவிடுகிறான் என்று நினைத்தவனுக்குத் தன் மன மாற்றமும் நியாபகம் வர அதோடு அதுக்குக் காரணமான தன் காதல் மனைவி நிஷாவும் நியாபகத்தில் வந்தாள்... அவளை நினைத்ததும் அவனது முகத்திலும் அவனையும் அறியாது புன்னகை தோன்றியது...

*********************

"என்ன தேடுறீங்கன்னு சொன்னா நானும் சேர்ந்து தேடுவேன்ல...?" சலித்தவளாய் பொறுமையின்றி அமர்ந்து இருந்தாள் அபி...

"கொஞ்சம் அமைதியா வெய்ட் பண்ணு..." என்ற அக்ஷயின் கண்களோ அவளது உடைகள் இருந்த அலமாரியில் நிலைத்து இருந்தது...

இன்று மதிக்குத் திருமணம்... சொன்னது போல் ஒரே மாதத்தில் அவளின் திருமணத்தை வைத்துவிட்டார் பாரிவேந்தன்... அங்கு அபியை அழைத்துச் செல்வதற்காகத் தான் அக்ஷய் அவளது உடைகளைப் பார்வையிட்டுக் கொண்டு இருந்தான்...

"ம்... செலக்ட் பண்ணிட்டேன்..." என்றவன் திரும்பிய போது அவன் கைகளில் இருந்த இளஞ்சிவப்பு புடவையை ஒன்று இருந்தது...

"எப்படி இருக்கு...?" புருவம் உயர்த்திக் கேட்டவனிடம்,

"நல்லா இருக்கு..." சின்னச் சிரிப்புடன் தலையாட்டியவளிடம்,

"என் செலக்சனாச்சே நல்லா இல்லாம இருக்குமா?" என்று சட்டை காலரை தூக்கி விட்டு கொண்டவன்,

அவளது முகத்தில் தன் பார்வையை நிலைத்து, “உன்னைப் போல்..." என்றவனது பார்வை ரசனையுடன் அவளை வருடியது...

அதில் அவளது இதயம் தாளம் தப்பி ஒலித்தது...

"எதுக்கு இந்தப் புடவை...?" பேச்சை மாற்றினாள்...

"மதி மேரேஜுக்கு போறோம்..."

"நானா...?" அபி தயங்கினாள்...

"என் மனைவி நீ தானே... அப்போ நீ என் கூட வந்து தான் ஆகணும்... ஏன்னா இன்விடேசன்ல குடும்பத்தோட வர சொல்லி போட்டு இருக்காங்க..." சிரியாமல் சொன்னவனைக் கண்டு முறைக்க முயன்று தோற்று,

"நான் வரலை..." அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை அவளுக்கு...

"ஏன்...?" கூர்ந்து பார்த்தது அவனது பார்வை...

"அங்கே பெரிய மனுசங்க எல்லாம் வருவாங்க..."

"அப்படி எல்லாம் இல்லையே... உன்னைப் போல் என்னைப் போல் யூத்தும் வருவாங்களே..." அவளது பேச்சின் அர்த்தம் புரிந்தும் கிண்டலடித்தவனைக் கண்டு ஆற்றாமையாக இருந்தது...

"ப்ளீஸ்... புரிஞ்சுக்கோங்க... நான் எப்படி உங்க கூட..."

"என் கூட வருவதற்கு என்ன...?" அழுத்தமாய்க் கேட்டவனின் வார்த்தையில் வெடித்தாள் அவள்...

"உங்களுக்கு எந்த விதத்திலும் பொருத்தம் இல்லாத நான்... நான் உங்க மனைவியா உங்க கூட வந்தா எல்லோரும் கேலி பேசி சிரிப்பாங்க... நான் வரலை..." சொல்லும் போதே அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அவள் அழுவது கண்டு அவனுக்கு வேதனையாய் இருந்த போதிலும் அவளது கண்ணீரை துடைக்க அவன் முயலவில்லை... இந்தத் தாழ்வு மனப்பான்மை பின்னால் வாழ போகும் வளமான வாழ்க்கைக்கு மிகப் பெரிய எதிரி ஆயிற்றே...

"அப்படி யாராவது சிரிச்சா பல்லை தட்டி கொடுத்துர மாட்டேன்... தைரியம் இருக்கிறவன் என் முன்னாடி வந்து சிரிக்கச் சொல்லு பார்க்கலாம்..."

அவனது பேச்சில் திகைப்புற்று பார்த்தவளின் விழிநீர் நின்றுவிட்டது...

"உனக்கு என்ன குறைச்சல்ன்னு நீ இப்படிச் சொல்ற..." என்றவளை கண்ணாடி முன் நிறுத்தி பின்னால் இருந்து அணைத்தபடி கண்ணாடியில் அவளைப் பார்த்து,

"பால் நிலா நீ கேள்விப்பட்டு இருக்கியா அது மாதிரி இருக்கு உன் முகம்..." சொல்லி கொண்டே அவனது கைகள் அவளது முகத்தை மென்மையாய் வருடியது...

அவனது தொடுகையில் செயலற்று போய் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது போல் நின்று இருந்தாள்... சும்மாவே அவனது தொடுகையில் உருகுபவள் இப்போது அவனது காதலையும் உணர்ந்தவளாய் அதில் கரைந்து நின்று இருந்தாள்...

"வில் போன்ற புருவம், மீன் போன்று துருதுருவென அலைப்பாயும் கண்கள், ஆப்பிள் மாதிரி கன்னம், சங்கு போல மென்மையான கழுத்து..." ஒவ்வொன்றாய் வர்ணித்தவனின் கைகள் கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழிறங்க அதற்கு மேல் இறங்க முடியாதபடி அவளது கை அவனது கையை இறுக்கமாய்ப் பற்றியது...

"ச்சே..." அலுத்தவன், "இன்னும் கொஞ்சம் சொல்றேன் கேளு..." என்று மீண்டும் அரம்பிக்க...

"ச்சு... போதும்... போதும்... வர்ணிச்சது..." என்றவள் வெட்கத்துடன் அவன் கையணைவில் இருந்து விலகினாள்...

"சரி சீக்கிரம் கிளம்பு... டைமாகுது..." என்றவனை ஏறிட்டவள் கண்களில் இன்னமும் தயக்கம் இருக்க...

"நீ இப்படியே யோசிச்சிட்டு இருந்தேன்னா... நானே உனக்குப் புடவை கட்டி அலங்காரம் பண்ணி கூட்டிட்டு போயிருவேன்..." கையில் புடவையுடன் அவன் அவளை நோக்கி நெருங்க,

"ஐயோ... வேண்டாம்..." என்றவள் அவன் கையில் இருந்த புடவையைப் பறித்துக் கொண்டு கதவை நோக்கி கையைக் காண்பித்தாள்...

அவன் சிரித்தபடி வெளியேற கதவை தாளிட்டு வந்தவள் கண்ணாடி முன் நின்றாள்... அவன் சொன்னது போல் தான் அழகாய் இருக்கிறோமா என்று கண்ணாடியை உற்று உற்று பார்த்தாள்... ம்ஹூம் அவளுக்கு அப்படி ஒன்றும் அதி அற்புதமாய் அவள் காட்சி அளிக்கவில்லை...

"பொய் வாயை திறந்தால் பொய் தான்..." அவனை வைதபடி புடவையைக் கட்டலானாள்...

காரில் சென்று கொண்டு இருந்த போது அபி கணவனைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு வந்தாள்...

"என்ன என்னையைத் திரும்பி திரும்பி பார்த்துட்டே வர்ற... அவ்வளவு அழகா இருக்கேனா..."

அவனது பேச்சில் அப்போது தான் அவனைக் கவனித்தாள்... அழகாய் கம்பீரமாய் இருந்த அவனது அழகு அவளை மயக்கத்தான் செய்தது... இல்லை என்று சொல்லிவிட முடியாது...

"பார்க்கிற பார்வை பார்த்தா அது உண்மை தான்னு சொல்லுது..." கண்சிமிட்டியவனைக் கண்டு முகம் சிவந்தாலும் அவளது முகம் யோசனையில் இருந்ததை அவன் கவனிக்கத் தான் செய்தான்...

"இந்த அழகான தலைக்குள் அப்படி என்ன குடையுது..."

"அண்ணி பத்தி நீங்க ஒண்ணும் முடிவு எடுக்கலையா...?" திடுமென அவள் தங்கையைப் பற்றிப் பேசியதும் அவன் மௌனமானான்...

"அவங்களைப் பார்த்தா ரொம்பப் பாவமா இருக்கு..."

அதில் அவனிடம் இருந்து பெருமூச்சு ஒன்றே பதிலாய்க் கிடைத்தது...

"நானும் அண்ணன் கிட்ட எவ்வளவோ எடுத்து சொல்லிட்டேன்..."

"இங்கே பாரு ரக்ஷி... இது அவங்க வாழ்க்கை அவங்க ரெண்டு பேரும் தான் முடிவு எடுக்கணும்..."

அதில் அவள் மௌனமானாள்...

"அனி தப்பு பண்ணி இருக்கா... நீ என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்ட மாதிரி ஆதர்ஷும் ஏத்துக்கணும்... அதை விட்டுட்டு அனியை ஏத்துக்கச் சொல்லி நாம திணிக்க முடியாது... அவனை வற்புறுத்தவும் முடியாது..."

அன்று அனிக்காக அவளைப் பார்த்து அந்தப் பேச்சு பேசின அக்ஷயா இவன் என்று அதிசயமாக இருந்தது அவளுக்கு... அவளது மனம் அறிந்தார் போன்று அவனே தொடர்ந்து பேசினான்...

"முன்பு இருந்த அக்ஷயா இருந்தா இப்போ நான் எடுக்கற ஆக்சனே வேறயா இருக்கும்... ஆனா இப்போ என்னால அதைச் செய்ய முடியலை... மனசில் காதல் இல்லாம எந்த வாழ்க்கையையும் நாம ஒட்ட வைக்க முடியாது... அனியோட வாழ்க்கை உன் அண்ணன் கையில்... ஏதாவது அதிசயம் நடந்து அவன் மனம் மாறி அனியை ஏத்துக்கிட்டா தான் உண்டு... அதுவரை நாம பொறுத்து தான் ஆகணும்..."

அவனது கூற்று சரி என்று தோன்ற ஆமோதிப்பாய் தலையசைத்தாள்... அவளது மௌனம் கண்டு,

"அவங்க வாழ்க்கையோட நம்ம வாழ்க்கையைப் போட்டு நீ குழப்பிக்காதே... இது வேறு... அது வேறு..." என்று அவன் தெளிவுப்படுத்த அவள் முகத்தில் சிறிது புன்னகை தோன்றியது...

காலமும் காதலும் ஒரு மனிதனிடத்தில் எத்தகைய மாற்றத்தை உண்டு பண்ணுகிறது...

அக்ஷய் திருமணத்திற்கு வந்ததை அறிந்ததும் பாரிவேந்தன் முகத்தில் ஈயாடவில்லை...

'இப்போ எதுக்கு இவன் இங்கே வந்து இருக்கான்...?' என்று யோசித்தவரால் அவனிடம் நேரில் சென்று பேச முடியவில்லை...

அபியோடு சென்று முதல் வரிசையில் அமர்ந்தவன் திருமணத்தைக் கவனிக்கலானான்...

அபி அவனது ஒவ்வொரு அசைவையும் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவனது மனதின் ஓரத்தில் மதியை இழந்த துக்கம் ஏதும் இருக்குமோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது...

மதி கழுத்தில் தாலி ஏறும் போதும் அவள் அக்ஷயை தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்... ம்ஹூம்... அவள் எதிர்பார்த்த வருத்தமோ, கவலையோ சிறிதும் அவன் முகத்தில் இல்லை... மாறாகப் புன்னகை முகத்துடன் அட்சதையைத் தூவி கொண்டு இருந்தான்...

மணமக்களுக்குப் பரிசு பொருள் கொடுப்பதற்காக அவளையும் அவன் உடன் அழைக்க...

'இப்போ இது தேவை தானா...' என்று தோன்றியது அவளுக்கு... ஆனாலும் உடன் சென்றாள்...

"வாழ்த்துக்கள்..." மணமக்களிடம் அவன் வாழ்த்து சொல்ல மதியின் முகம் பேயறைந்தார் போலானது...

அவனோ அதைக் கண்டு கொள்ளாமல் பாரிவேந்தன் அருகில் நின்று சிரித்தபடி புகைப்படத்துக்குப் போஸ் கொடுத்தான்... அவனது செயல் கண்டு பாரிவேந்தன் திகைத்து போய் நிற்க,

"வரலாறு முக்கியம் அமைச்சரே..." அவரது காதுக்கருகில் குனிந்து சொன்னவன் முன்னால் இருந்த

புகைப்படக்காரரை சுட்டி காட்டினான்...

அதில் பாரிவேந்தன் இரத்த அழுத்தம் எகிறாமல் இருந்தால் தான் அதிசயம்...

அபிக்கு கூடக் கணவனது பேச்சில் சிரிப்பு வந்துவிட்டது...

வீட்டிற்கு வந்ததும் தன்னோடு அறைக்கு வந்த கணவனைக் கேள்வியாய் பார்த்தாள்...

அவனோ அவளது பார்வையை உணராதவனாய் அருகில் வந்தவன்,

“கல்யாண வீட்டில் எதுக்கு என் முகத்தை உத்து உத்து பார்த்துட்டு இருந்த...?”

அவள் பதில் பேசாது தலைகுனிய அவளது முகத்தை நிமிர்த்தியவன், "இப்பவும் அந்த மதியை நான் விரும்பறேன்னு நினைக்கிறியா... சொல்லு ரக்ஷி..."

அதில் விழி விரிய நின்றிருந்தவள் இமை மீது முத்தமிட்டவன், "நீ சொன்னது போல் அவள் கிட்ட 'ஐ லவ் யூ' சொல்லி இருக்கேன் தான்... இல்லைன்னு சொல்லலை... ஆனா அதை நான் உணர்ந்து மனமார சொல்லலை... நான் வளர்ந்த கலாச்சாரத்தில் ஐ லவ் யூங்கிற வார்த்தை ரொம்பச் சாதாரணமானது... அதனால அப்போ எனக்கு அது ஒண்ணும் பெருசா தெரியலை... எல்லாம் உன்னைப் பார்க்கும் வரை தான்... உன் காதலை உணர்ற வரைக்கும் தான்... உன்னைப் பார்த்த பின்னாடி தான் அந்த வார்த்தைக்கான அர்த்தமே எனக்குப் புரியுது... நான் மனசார நேசிச்சு ஐ லவ் யூன்னு சொன்னது உன் கிட்ட மட்டும் தான்... அதே மாதிரி தான் உன்னைத் தவிர எந்தப் பொண்ணையும் என்னால் தொட முடியாது... மனதார நேசிக்கவும் முடியாது... இவ்வளவு ஏன் எனக்குன்னு நிச்சயம் செஞ்ச பொண்ணு தானே மதி அவ கிட்ட கூட நான் வரம்பு மீறிப் பழகியது இல்லை... நீ என்னை நம்பணும் ரக்ஷி..."

நீண்ட விளக்கமாய்த் தன் காதலை சொன்னவனைக் கண்ணிமைக்காது பார்த்தவளின் மனதில் அவனது காதல் இதமாய்ச் சாமரம் வீசியது என்றால் அது மிகையில்லை...

பூக்கும்...

அபி என்ன தான் அக்ஷயை மனதில் விரும்பிய போதும் அவன் வேறு ஒருத்திக்கு சொந்தமானவன், தான் அதைத் தட்டி பறித்துவிட்டோமோ என்ற கவலை அவள் மனதின் ஒரு மூலையில் முணுமுணுவென அரித்துக் கொண்டு இருந்தது என்னமோ உண்மை தான்...

அதிலும் அவனின் தகுதிக்கு மதி போன்ற பெண் தான் இணையானவள்... தான் எந்த விதத்திலும் அவனுக்கு இணையானவள் இல்லை என்ற எண்ணமும் அவள் மனதை கொன்று கொண்டு இருக்க அவனோ அவளைத் தவிர வேறு பெண்ணை மனதால் கூடத் தீண்டவில்லை என்று கூறுகிறான்...

ஒரு பெண்ணுக்கு இதை விட வேறு என்ன வேண்டும்...? கட்டிய கணவன் அவளிடத்தில் எல்லையில்லா காதல் கொண்டு இருப்பது அவள் செய்த மிகப் பெரிய அதிர்ஷ்டம் அன்றோ... அவள் வாழ்க்கையில் அவன் எந்த வழியில் நுழைந்து இருந்தாலும் அவனின் நேசம் உண்மையன்றோ...

கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் மனம் அவனின் காதலில் கரைந்து கொண்டு இருந்தது... அவளின் மௌனத்தை அவன் வேறு விதமாய் எண்ணி கொண்டான்...

"இதே இது நீ வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ண இருந்தேன்னா இந்த மாதிரி அட்சதையைத் தூவி ஆசிர்வாதம் பண்ணிட்டு வர என்னால் முடியாதுடி... அடுத்த நொடி அந்த மாப்பிள்ளை கையில் இருந்து தாலியை பிடுங்கி உன் கழுத்தில் கட்டி இருப்பேன்... உன்னை யாருக்காகவும் எதுக்காகவும் விட்டு கொடுக்க என்னால் முடியாது..."

அவனது பேச்சில் அவளின் உதடுகள் ஏதோ சொல்ல துடித்தது... ஆனால் அதைச் சொல்லாமல் மௌனப் பார்த்தவளை கண்டு,

"என்ன ரக்ஷி...?" அவளின் மனதை படித்தவனாய் கேட்டவனைக் கண்டு விழி விரிய நின்று இருந்தவள்,

"இப்போ இப்படிப் பேசுறீங்க... ஆனா முன்னே என்னை ஏன் அப்படிப் படுத்துனீங்க...?" அவள் கேட்க வேண்டும் என்று நினைக்கவில்லை... ஆனால் அவளையும் அறியாமல் வார்த்தைகள் வந்துவிட்டது...

இப்போது அவனது காதலில் எந்தளவுக்குக் கரைகிறாளோ அதே போல் அன்று அந்தளவுக்கு அவனால் மனக் காயமும் அடைந்து இருக்கிறாளே...

அவளின் மனம் அவனுக்குப் புரியத்தான் செய்தது...

"என்னைப் பத்தி உனக்கு நல்லா தெரியும்... கொஞ்சம் முரடன், பிடிவாதம் அதிகம் உள்ளவன்... வீட்டிலும் சரி, வெளியிலும் சரி யாரும் என்னை எதிர்த்து பேச பயப்படுவாங்க... அப்படிப்பட்ட என் கிட்ட நீ அறிமுகமான விதமே மோதலில் தான்... நம் சந்திப்பு நல்லவிதமாய் நடந்து இருக்கக் கூடாதான்னு இப்போ ஒவ்வொரு நிமிசமும் நான் ரொம்ப வருத்தப்படுறேன்... என்னை எதிர்த்த உன்னை அடக்கியே ஆகணும்ன்னு நினைச்சேன்... அதை இப்போ நினைச்சாலும் அவமானமா இருக்கு... சாரி பேபி..." அவளிடம் மனதார மன்னிப்பு கேட்டவன்,

"அப்படிப்பட்ட உன் கிட்ட என் மனம் எப்படி விழுந்ததுன்னு எனக்கே தெரியலை... ஆனா இப்போ என் மனசு பூரா நீ தான் நிறைஞ்சு இருக்க... உன்னால மட்டும் தான் என்னைக் கண்ட்ரோல் பண்ண முடியும்... என் உணர்வுகளை ஆழி அலையாய் ஆர்ப்பரிக்க வைக்கவும் முடியும்... அதே சமயம் ஆழ்கடல் அமைதியாய் வைக்கவும் உன்னால் மட்டுமே முடியும்... மொத்தத்தில் என்னோட ரிமோட் கண்ட்ரோல் நீ தான் பேபி... எனக்கு இப்படி இருக்கத்தான் பிடிச்சு இருக்கு... இது நாள் வரை அனுபவிக்காத ஒரு உணர்வு சுகமாய் என்னைத் தாக்குது... அது என்னன்னு சொல்ல தெரியலை... ஆனா அதுக்குக் காரணம் நீன்னு மட்டும் என்னால் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்..."

"நான் உங்களுக்குத் தண்டனை கிடைக்கணும்ன்னு போலீஸ் ஸ்டேசன் வரை போனவ... அப்படிப்பட்ட என்னைப் போய் லவ் பண்றீங்களா...?"

அவனது காதலில் அவளது மனம் ஏனோ குற்றவுணர்வில் தவித்தது... அவன் செய்தது தவறு என்றாலும் தானும் அவனுக்குக் கொஞ்சமும் சளைக்காமல் பலவித இடையூறுகளை அவனுக்குக் கொடுத்து இருக்கிறோமே என்று மனம் வருந்தினாள்...

"நான் உனக்குச் செய்த கொடுமையை விடவா நீ எனக்குச் செஞ்சிட்ட..." அவள் முகம் பார்த்து வினவியவன்,

"ஆனாலும் பேபி நம் காதலை பார்த்து எனக்கு ஆச்சிரியமா தான் இருக்கு... இன்னமும் நம்ப முடியலை... நான் அந்தளவுக்கு உன்னைக் கொடுமை செஞ்சும் என்னை நீ காதலித்தது தெரிஞ்சு முதலில் பயம் தான் வந்தது... பின்னே கர்வம் வந்தது... அதுக்கு அப்புறம் தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு தைரியமா சொன்னேன்... நீ என்னை மறுக்க மாட்டேன்னு நினைச்சேன்..."

அவள் வியப்பாய் அவனைப் பார்க்க அவன் மருத்துவமனையில் நடந்த விசயத்தைக் கூற அவளுள் மெல்லிய நாணம் எழுந்து அவனைக் காண முடியாமல் இமை தாழ்த்த செய்தது...

"ஆனா உன்னுள் இப்படி ஒரு போராட்டம் இருக்கும்ன்னு நான் நினைக்கவே இல்லை ரக்ஷி... ஐம் சாரி..." அவனின் வருத்தம் அவளையும் பாதித்ததோ என்னமோ,

"இப்போ இல்லை... நான் உங்களை நம்பறேன்..." அவனுக்காக அவனின் வருத்தத்திற்காகப் பொய் கூறினாள்...

சில சமயம் அவளையும் அறியாமல் அவளுள் போராட்டம் எழத் தான் செய்கிறது... அதையும் மீறி அவனது காதல் அவளுக்குப் புரியத்தான் செய்கிறது... அது அவளுள் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றத்தை ஏற்படுத்துகிறது...

அவள் சொன்னதைக் கேட்டு அவனுள் மகிழ்ச்சி பெருக அவளை அணைத்து கொண்டவன், "போனது எல்லாம் போகட்டும் ரக்ஷி... இனி புதிதாய் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க போல் நாமும் புரிதலோடு வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்... இனி எந்தச் சஞ்சலமும் தேவையில்லை... அதே போல் நமக்குள் எந்த ஒளிவு மறைவும் இருக்கக் கூடாது... என் கிட்ட எதுவா இருந்தாலும் மனசு விட்டு பேசணும்... கேட்கணும்... என்ன சரியா...?"

அவனது வார்த்தைக்கு அவளிடம் இருந்து சிறு தலையாட்டல் மட்டுமே பதிலாகக் கிடைத்த போதும் அவனது நெஞ்சில் அழுத்தமாய் முகம் பதித்து அவள் நின்றவிதமே அவனுக்கு அவளது மனநிலையை எடுத்து சொல்வதாய்...!!!

"ஐ லவ் யூ பேபி..." என்று சொல்லியவன் கைகள் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டது...

***********************

"ஆது... அபிக்கு ஏழாம் மாசம் ஆரம்பிச்சிருச்சு... அடுத்த வாரத்துல நல்ல நாள் இருக்குதாம்... அதில் வளைகாப்பு வைக்கலாமான்னு கேட்டு துளசி ஃபோன் பண்ணினா... நீ என்னப்பா சொல்ற...?"

பாட்டி சொன்னதும் ஆதர்ஷின் முகம் தங்கையை நினைத்து ஒளிர்ந்தது... தாய்மாமன் என்பது எவ்வளவு பெரிய அங்கீகாரம்... அதைத் தனக்கு அளித்த தங்கையின் குழந்தை மீது பாசம் நிறைந்தது...

"அதுக்கு என்ன ஆச்சி செஞ்சிரலாம்..." சந்தோசத்துடன் சொன்னவனிடம் வளைகாப்பிற்கு வேண்டிய பொருட்களை வாங்குவதற்கு மிகப்பெரிய பட்டியலை அடுக்கினார் கோமதி பாட்டி...

அவனும் மகிழ்ச்சியுடன் அனைத்தையும் குறித்துக் கொண்டவன், "அபிக்கு புடவை, வளையல் எல்லாம்

இன்னைக்கு வாங்கிரலாம் ஆச்சி... பூ, பழங்கள் எல்லாம் முதல் நாள் வாங்கினால் போதும்..."

"அதுவும் சரி தான்... ஆது நீயும் ஒரு புதுத் துணி வாங்கிக்கோப்பா..."

"எனக்கு எதுக்கு ஆச்சி...?" புரியாமல் கேட்டவனைப் பார்த்து,

"அபி வீட்டுக்கு போகணும்ல்ல... அதுக்குச் சொன்னேன்... அங்கே வர்றவங்க எல்லாம் பெரிய வீட்டு மனிதர்கள் இல்லையா...?"

பாட்டி சொன்னது கேட்டு அவன் முகம் கறுத்துப் போனது... அது அவர் பேசிய வார்த்தைக்காக அல்ல... அக்ஷய் வீட்டு வாசல் படியை மிதிக்க வேண்டுமே என்ற கோபத்தில் தான்... அங்கே போக அவனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை... அதை விட அவனது மனைவி அனியின் முகத்தில் விழிக்கச் சுத்தமாய் விருப்பம் இல்லை...

'பெண்ணா அவள் பேய்...' மனதுக்குள் ஆத்திரமாய் நினைத்தான் அவன்...

"நான் வரலை ஆச்சி..." அனியின் மீது இருந்த கோபத்தில் அப்படிச் சொன்னான்...

"ஆது..." அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தவர், "உன் மனக் கஷ்டம் எனக்குப் புரியுதுப்பா... ஆனா நம்ம அபியை கொஞ்சம் நினைச்சு பாரு... அம்மாவுக்கு அம்மாவா, அப்பாவுக்கு அப்பாவா நீ தானேப்பா அவளுக்கு எல்லாம் செய்யணும்... நீயே வர மறுத்தா அவளுக்கு யார்ப்பா இருக்கா...?"

கண் கலங்கியவர் தன் கண்களைத் துடைத்துக் கொள்ள அவரின் வார்த்தையில் தன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது...

'என் பிரச்சினையை மனசில் வச்சிக்கிட்டு அபியை பத்தி யோசிக்காம போயிட்டேனே... ஆது நீ எப்போ இருந்து

இப்படிச் சுயநலமா யோசிக்க ஆரம்பிச்ச... உனக்காக உழைத்து உழைத்து ஓடா தேய்ஞ்ச உன் தங்கையிடம் நீ காட்டும் அன்பு இது தானா...' அவனது மனசாட்சி அவனை இடித்துரைத்தது...

"தப்பு தான் ஆச்சி... கொஞ்சம் சுயநலமா யோசிட்டேன்... அபியை நான் நினைச்சு பார்க்கலை..." கண்கள் கலங்க கூறியவன்,

"நான் இல்லாமல் என் தங்கச்சிக்கு வளைகாப்பா...? கட்டாயம் நானும் வருவேன் ஆச்சி..." அவன் சொல்லவும் தான் மூதாட்டிக்கு நிம்மதியாய் இருந்தது...

'அப்படியே ஆதுவோட வாழ்க்கையும் சரியாகிட்டா எனக்கு நிம்மதியா இருக்கும்...' மனதில் நினைத்தவர் பேரனிடம் அதைப் பற்றிப் பேசவில்லை...

வயிறு சற்று மேடிட்டு இருக்க மெதுவே அன்னநடை நடந்து வந்த மனைவியை இமைக்காமல் பார்த்த அக்ஷயை கண்டு அபியின் முகம் சிவந்தது...

இரு கைகளை விரித்து அழைத்த அவனது கரங்களில் சரண் புகுந்தவள் அவனுள் பாந்தமாய் அடங்கி நின்றாள்... அவனும் அவளை அணைத்து கொண்டவன் அவள் தலை மீது தன் நாடி பதித்துக் கண் மூடினான்... இருவரும் அந்த மோனநிலையைக் கலைக்க விரும்பவில்லை...

இருவரும் ஒருவரின் காதலை மற்றவர் நன்கு உணர்ந்து இருந்தனர்... ஆனாலும் அவன் தன் எல்லையைத் தாண்டவில்லை... சின்னச் சின்ன அணைப்பும், முத்தமும் மட்டுமே அவனின் காதலின் மிகப்பெரிய பிரதிபலிப்பாய் இருக்கும்... அதை மீறி அடுத்தக் கட்டத்துக்கு அவன் சென்றது இல்லை... அந்தத் தேவையை அவனின் மனமும் ஒரு நாளும் நாடியது இல்லை...

அவளும் அவனது அணைப்பில் சுகமாய் அடங்குவாள்... அதே போல் அவனது முத்தத்தில் உள்ளம் உருகி நிற்பாள்... அவனின் விருப்பத்திற்கு இணங்கி நடப்பாள்... ஆனால்

அவளாக அவனை அணைத்தது இல்லை... முத்தமிட்டது இல்லை... ஏனோ அவளுள் இன்னமும் சிறு தயக்கம் இருந்து கொண்டே இருந்தது... மற்றபடி நல்ல மனைவியாய் நடந்து கொண்டாள்...

"ரக்ஷி... உங்க அண்ணனை வளைகாப்புக்கு வர சொன்னியா...?" மோனநிலையை அவனே கலைத்தான்...

"இல்லை..."

அவள் சொன்னதும் அவன் தனது அலைப்பேசியில் இருந்து ஆதர்ஷ்க்கு அழைத்தவன், "மாப்பிள்ளை நான் அக்ஷய் பேசுறேன்..."

அவனது பேச்சில் ஆதர்ஷ்க்கு சிறிது கோபம் வந்தது... மாப்பிள்ளை என்ற விளிப்பில் மிளகாயை அரைத்து பூசியது போல் உடல் எல்லாம் பற்றி எரிந்தது...

"தெரியுது... சொல்லுங்க..." என்றான் எரிச்சலுடன்...

அவனது எரிச்சலை அக்ஷய் உணர்ந்தாலும் முகத்தில் எதையும் காட்டி கொள்ளவில்லை... ஏனெனில் அவன் மனையாள் அவனின் முகத்தை மிகவும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"ரக்ஷி வளைகாப்புக்கு வந்திருங்க..." என்றான் தன்மையுடன்...

"நீங்க சொல்லி தான் நான் வரணும்ன்னு இல்லை... என் தங்கை வளைகாப்புக்கு நீங்க கூப்பிடணும்ன்னு அவசியம் இல்லை..." பட்டு தெறித்தார் போன்று பேசினான் ஆதர்ஷ்...

"சரி மாப்பிள்ளை... ரக்ஷி கிட்ட பேசுங்க..." என்று அலைப்பேசியை மனைவியிடம் நீட்டினான்...

"அண்ணா..." அபியின் அழைப்பில் ஆதர்ஷ்க்குக் கண்கள் கலங்கியது... அபிக்கும் தான்...

அதைக் கண்டதும் அக்ஷய்க்கு தனது தங்கை அனி நியாபகம் வந்தது... அங்கிருந்து எழுந்து ஜன்னல்

பக்கமாய்ப் போய் நின்று வெளியில் வெறித்துப் பார்த்தான்... தன் தங்கையும் கணவனுடன் ஒழுங்காய் வாழ்ந்து இருந்தால் இந்நேரம் அவளது வயிற்றிலும் மகவு ஒன்று உதித்து இருக்கும்.... அவனையும் மாமா என்று அழைக்க அது வந்து இருக்கும்...

"என்னங்க..." அபி வந்து அவனது தோள் தொடும் வரை அவன் தன் யோசனையில் மூழ்கி இருந்தான்...

"அண்ணா பேசியதுக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன்..." என்றவளை திகைப்பாய் பார்த்தான் அவன்...

"அண்ணா பேசியது என் காதிலும் விழுந்தது... அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... அண்ணி மேல ரொம்பக் காதல், நம்பிக்கை வச்சிருந்தான்... அது இல்லாம போனதும் அவனுக்கு ரொம்ப வருத்தம்... அதான் இந்தக் கோபம் எல்லாம்..."

அவள் விளக்கம் கொடுக்கவும் அவள் நெற்றியோடு தன் நெற்றியை சேர்த்து வைத்து அவளது கண்களை இமைக்காமல் பார்த்தவன்,

"இதை நீ சொல்லவும் வேணுமா... அவனோட உணர்வுகளை இப்போ என்னால புரிஞ்சிக்க முடியுது... அதே சமயம் அவனுக்கு என் மேலயும் செம கோபம் இருக்கு... எல்லாம் நான் பண்ணிய வேலையால்... உன் மனசு மாறின மாதிரி... அவனும் ஒரு நாள் இல்லை ஒரு நாள் என்னைப் புரிஞ்சிப்பான்... அதுவரை என் தேவதைக்காக இதை எல்லாம் நான் பொறுத்து கொள்வேன்..." புரிந்துணர்வோடு கூறிய கணவனைப் பார்த்தவள் பார்வையில் காதல் கலந்து இருந்தது...

வளைகாப்பு அன்று அனி கிளம்பாமல் தனது அறையில் முடங்கினாள்... அவளுக்குத் தெரியும் ஆதர்ஷ் இங்கு வருவான் என்று... எப்படி அவன் முகத்தில் விழிப்பது என்று அவளது மனம் குற்றவுணர்ச்சியில் தவித்தது... அதை எல்லாம் விட அன்று அக்ஷய், அபி திருமணத்தில் அவன் அவளைப் பேசிய வார்த்தைகள் அவள் மனதை வாள்

கொண்டு அறுக்க இனி ஒரு முறை அவனிடம் பேச்சு வாங்க அவளது பூ மனதிற்கு சக்தி இல்லை... தான் அவன் கண்ணில் படாமல் இருந்தால் அவனாவது நிம்மதியாய் விழாவில் கலந்து கொண்டு போகட்டும் என்று கருதி அறையினுள் இருந்தாள்...

"அண்ணி..." என்றபடி அங்கு வந்தாள் அபி...

அனி விழாவுக்கு வர மறுக்கிறாள் என்று துளசி புலம்பியதை கேட்டு மனம் பொறுக்காமல் அவள் அனியை தேடி வந்துவிட்டாள்...

"அண்ணி இன்னுமா நீங்க கிளம்பலை...?"

அனியின் காது அபி சொன்னதைக் கேட்கவில்லை... மாறாக அவளது கண்கள் அபியை தான் பார்த்துக் கொண்டு இருந்தது... தாய்மை கொடுத்த பூரிப்பில் பேரழகியாய் காட்சி அளித்தவளை கண்டு அவளுள் ஏக்கம் எட்டி பார்த்தது...

அனியின் கண்களின் ஏக்கத்தைப் புரிந்து கொண்ட அபிக்கு தன் அண்ணன் மேல் கோபம் கோபமாய் வந்தது...

"அண்ணா கூடச் சேரணும்ன்னு ஐடியா இருக்கா இல்லையா...?" திடுமென அப்படி அபி கேட்டதும் அனி திடுக்கிட்டவளாய் அவளைப் பார்த்தாள்...

"நீங்க இப்படி ரூமுக்குள்ள அடைஞ்சு கிடந்தா அண்ணாவை பார்க்கிறது எப்படி...? அவன் மனசும் எப்படி மாறும்...?"

"நான் வந்தா அவருக்குப் பிடிக்காது..." கண்களில் கண்ணீர் வழிந்தது அனிக்கு...

"நான் ஒண்ணு சொல்லவா அண்ணி... அண்ணா பிடிக்காத மாதிரி நடிச்சாலும் அவனுக்கு மனசுக்குள்ள உங்களை ரொம்பப் பிடிக்கும்... அதை மறைக்கத் தான் கோபப்படுற மாதிரி எரிஞ்சு விழுறான்..."

"உண்மையாவா அண்ணி..." ஏக்கமும் ஆர்வமுமாய்ப் பார்த்த அனியை கண்டு அபிக்கு பரிதாபமாய் இருந்தது...

'இன்னைக்கு அண்ணன் கிட்ட இது பத்தி ஏதாவது பேசி முடிவு எடுக்கணும்...' மனதில் உறுதியாய் நினைத்து கொண்டாள்...

"உண்மையா தான் அண்ணி..." அனியிடம் கூறியவள்,

'ஏன்னா நானும் உங்கண்ணனை அப்படித் தானே காதலித்தேன்... இப்போ தான் அவரோட மனசு புரிஞ்சது...' மனதுக்குள் தனக்குத் தானே சொல்லி கொண்டாள்...

அபியின் வார்த்தை அனியிடத்தில் உற்சாகத்தைக் கொடுத்தது... அங்கு இருந்த அலமாரியை திறந்து அவள் தனது புடவையைப் பார்வையிட,

"அண்ணாவுக்கு ஸ்கை ப்ளூ கலர்ன்னா ரொம்பப் பிடிக்கும்..." அபி அவளுக்கு உதவி புரிய...

அனி திரும்பி பார்த்து சிரித்தவள், "தேங்க்ஸ்..." என்றாள்...

"எப்பவும் இப்படிச் சந்தோசமா இருக்கணும் அண்ணி... கூடிய சீக்கிரம் எல்லாம் சரியாகும்..." அனியிடம் கூறிய அபி வெளியில் சென்றாள்...

கணவனுக்குப் பிடித்த வானத்து வண்ணத்தில் முத்துக்கள் பதித்த அந்த நைலக்ஸ் புடவையை எடுத்தவள் தன் மீது போட்டுக் கொண்டு கண்ணாடியை பார்த்தாள்...

ஏனோ கணவனே கூட இருப்பது போல் மாயத்தோற்றம் தோன்ற அவளது அகமும் முகமும் மலர்ந்தது மகிழ்ச்சியில்...

புடவையை உடுத்தி அதற்குப் பொருத்தமாக முத்து நகை அணிந்தவள் மீண்டும் கண்ணாடியை பார்த்து திருப்தி அடைந்த பிறகே அறையை விட்டு வெளியில் வந்தாள்...

அவள் வரவேற்பறைக்கு வரும் போது ஆதர்ஷ் ஏற்கெனவே அங்கு வந்து அமர்ந்து இருந்தான்... அனியின் பார்வை அவனைத் தொட்டுத் தழுவி கொண்டு இருந்ததால் ஏற்பட்ட உந்து சக்தியில் அவன் தன்னையும் அறியாமல் விழிகளை உயர்த்தினான்...

மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டு இருந்த மனையாளின் அழகில் அவனது காதல் மனம் ஒரு நொடி தடம் புரளத்தான் செய்தது... அதுவும் புடவையில் தனி அழகோடு இருந்தவளை கண்டு அவன் மூச்சு விட மறந்து அமர்ந்து இருந்தான்...

"வாம்மா அனி... எப்படி இருக்கேம்மா..." பாட்டியின் குரலில் அவனது எண்ண அலைகள் அறுந்து விழ மீண்டும் அவனுள் கடுமை குடி கொண்டது...

'என்னைப் பிரிந்து இருந்தாலும் அவள் சந்தோசமா தான் இருக்கா... யாரை மயக்க இத்தனை அலங்காரம்...?' மனதுக்குள் வன்மமாய் நினைத்தவன் அனியை நெருப்பாய் எரித்தான் தனது பார்வையால்...

"வாங்க பாட்டி..." அவரை வரவேற்றவள் அவரது காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க அதில் ஆதர்ஷின் முகம் மேலும் இறுகி போனது...

அன்று அப்படி நடித்துத் தானே அவனை ஏமாற்றினாள்... பாம்பு என்றுமே தனது விசக்குணத்தை மாற்றிக் கொள்ளாது... அது போல் தான் இவளும் மனதில் நினைத்தவனுக்கு அவளைக் கண்டாலே ஆத்திரமாய் இருந்தது... அதன் பிறகு அவன் அனி பக்கமே திரும்பவில்லை... ஆனால் அனியின் ஏக்கமான பார்வை அவனைத் தொடர்ந்து கொண்டே இருந்தது...

"இன்னும் நீங்க கிளம்பலையா...?" சிணுங்கலாய் ஒலித்தது அபியின் குரல்...

'இதோ வந்துவிடுகிறேன்' என்று வெளியில் கிளம்பி போன அக்ஷய் இன்னமும் வீடு வந்து சேரவில்லை... விழாவிற்கு எல்லோரும் வந்துவிட்டனர்... ஆனால் முக்கியமானவன் இன்னும் வராமல் இருந்தான்...

"இதோ வந்துட்டேன்..." என்றபடி அறைக்குள் நுழைந்தான் அக்ஷய்...

"வந்துட்டு தான் என்னைப் பயமுறுத்தினீங்களா...?" மீண்டும் சிணுங்கியவளை பார்த்தவன் இமைகள் இமைக்க மறந்தான்...

பச்சை பட்டு உடுத்தி மிதமான அலங்காரத்தில் அழகுற நின்று இருந்தவளின் அமைதியான அழகு அவனுள் மெல்லிய சலனத்தை ஏற்படுத்தியது... அவனது பார்வை கணவனது மோகப் பார்வையாக மாறியது...

"ப்யூட்டிபுல் பேபி..." என்று விசிலடித்த படி அவள் அருகில் வந்தவன் அவள் முகத்தைக் கைகளில் தாங்கி அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

ஏனோ இன்று அத்தோடு அவனது தாகம் தணியாதது போல் தோன்ற மேலும் மேலும் அவளுள் மூழ்க எண்ணி அவனது இதழொற்றலின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது... இறுதியில் அவளது இதழில் இளைப்பாறியவன் அவளை விடும் நினைவு சிறிதும் இல்லாதவனாய் வண்டு பூவில் தேன் உறிஞ்சுவது போல் அவளது இதழ் பூவின் தேனை மிச்சம் வைக்காமல் பருகினான்...

அவள் தான் மூச்சு திணறி அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் வலுக்கட்டாயமாய்...

"ஏண்டி..." தாபத்தோடு பரிதாபமாய்க் கேட்டவனை மூச்சு வாங்கியபடி பார்த்தவள் கைகளால் தனது வயிற்றைச் சுட்டி காட்டி மூச்சு முட்டுகிறது என்று சைகை செய்ய அதன் அர்த்தம் புரிந்து,

"சாரி பேபி..." என்று மீண்டும் நெற்றியில் முத்தமிட்டவனைக் கையால் பிடித்துத் தள்ளியவள் அவனை முறைத்து பார்க்க முயன்று தோற்றுப் பின் சிரித்தாள்...

அவளது சிரிப்பில் என்றும் போல் இன்றும் மயங்கியவன், "ஐ லவ் யூ சோ மச் பேபி..." என்றான்...

அதற்குப் பதில் பேசாது எப்போதும் போல் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள் அவள்... அவனுக்குத் தெரியும் அவன் அப்படிச் சொன்னால் அவள் இப்படித் தான் நெஞ்சில் வந்து சாய்ந்து கொள்வாள் என்று...

ஆனாலும் அவளது வாயால் 'ஐ லவ் யூ...' என்ற மூன்று வார்த்தையைக் கேட்க அவனும் பிரம்மபிரயத்தனம் செய்யத் தான் செய்கிறான்... இன்று வரை அது மட்டும் அவள் சொல்லவே இல்லை... மனதிற்குள் வருத்தம் தோன்றிய போதும் அவளை வருந்த செய்யக் கூடாது என்பதற்காக அவன் எதுவும் பேசவில்லை...

"இன்னும் வேணும் போல் இருக்கு பேபி..." அவளது அணைப்பில் கிறங்கி நின்றவன் அவளது கையை எடுத்து இதழ் பதித்தான்...

முன்பு இருந்த காய்ப்புக்கள் மறைந்து அவளது கை மிருதுவாய் மாறி இருந்தது... அதை உணர்ந்து அவனது இதழ் இன்னமும் அழுத்தமாய்ப் பதிந்தது அவளது உள்ளங்கையில்...

"இப்போ சாப்ட்டா இருக்கா...?" ஆர்வமாய்க் கேட்டவளின் முகத்தைப் பார்த்தவன்,

"நீ எப்படி இருந்தாலும் பிடிக்கும் ரக்ஷி..." காதலாய் சொன்னவனின் காதல் அவளுள் பனிமலைச் சாரலாய் சில்லென்று இறங்கியது...

"என்னோட காதல் அழகு பார்த்து வந்தது கிடையாது... உன் குணம் பார்த்து வந்தது ரக்ஷி... அதை நீ நல்லா புரிஞ்சிக்கணும்..." அவளின் மனதை படித்தவனாய்... அவனின் தாழ்வு மனப்பான்மையைப் புரிந்தவனாய்...

"ம்..." என்று தலையசைத்தவளின் முகத்தை நிமிர்த்தி,

"ஆனாலும் இந்தச் சாப்ட் பிடிச்சு தான் இருக்கு..." என்றவனின் பேச்சில் முகம் மலர்ந்து அவனைப் பார்த்தாள்...

"கீழே போகலாமா... இல்லை இங்கேயே இருப்போமா..." அவனது கிசுகிசுப்பான குரலில் அவள் முகம் சிவக்க அவனது பிடியில் இருந்து விலகி வெளியில் செல்ல முயல,

"என் கிட்ட இருந்து அவ்வளவு லேசா தப்பிக்க முடியுமா மேடம்..." என்றவனை அவள் திகிலாய் பார்க்க,

"நானும் உன் கூட வர்றேன்னு சொன்னேன்டி... அதுக்கு எதுக்கு உன் முட்டைக் கண்ணை விரிச்சு இப்படிப் பயமுறுத்துற..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வர அதில் மனம் நிம்மதியுற்றவள் அவனுடன் இணைந்து நடந்தாள்...

மனையில் அமர்த்தப்பட்டு அபிக்கு நலுங்கு செய்ய ஆரம்பிக்க அக்ஷயின் கண்கள் மனையாளை விட்டு வேறு எங்கும் திரும்பவில்லை... திருமணம், மனைவி, மக்கள் என்பதற்கான முழு அர்த்தமும் விளங்க பொறுப்பான கணவனாய் அவன் நின்று இருந்தான்...

ஆதர்ஷ் தங்கைக்கு நலுங்கு வைக்க வரும் போது அபி அனியையும் உடன் அழைத்தாள்... அனி கணவனைப் பயந்து போய்ப் பார்த்தாள்...

"அபி..." ஆதர்ஷ் கோபமாய்ப் பேச துவங்கும் முன் அபி,

"அண்ணா... சபையில் அண்ணியை விட்டு கொடுக்காதே... நம்ம சண்டை நமக்குள் இருக்கட்டும்..." தங்கை சொன்னதும் அவன் ஒன்றும் பேசவில்லை...

அபி அனியை அழைக்க அவள் ஆதர்ஷ் அருகில் வந்து நின்றாள்...

"உம்... சீக்கிரம் அண்ணா, அண்ணி நீங்களும் தான்..." தன் கன்னத்தைக் காட்டிய அபியின் செயலில் இருவருக்கும் சிரிப்பு வர தங்களது மனஸ்தாபத்தை மறந்து புன்னகையுடன் சந்தனத்தை எடுத்து அவளது கன்னத்தில் பூசிவிட்டனர்...

இதை எல்லாம் பூரிப்புடன் மனம் நெகிழ பார்த்துக் கொண்டு இருந்த அக்ஷய் மனதில் மனைவியை நினைத்து பெருமையாய் இருந்தது... விரைவில் அபி தனது தங்கையை அவளது கணவனோடு ஒன்று சேர்த்துவிடுவாள் என்று நினைத்தான்...

ஆதர்ஷ் நலுங்கு செய்துவிட்டு திரும்ப அதே நேரம் அனியும் திரும்பி செல்ல முயல இருவரின் தோளும் ஒன்றுடன் ஒன்று உரச அவனது வலிமையில் அனி சிறிது தடுமாறி கீழே விழ போனாள்... அன்னிச்சை செயலாய் அவளைப் பிடித்து நேராய் நிறுத்திய ஆதர்ஷை விழி எடுக்காமல் அனி பார்த்தாள்...

வெள்ளை உடையில் தேவதைகள் பின்னணி குரல் கொடுக்கக் கனவு உலகத்தில் அவள் சஞ்சரிக்க,

"எந்த ஆம்பிளை கிடைப்பான்னு உரசுறதுக்கு அலையறியோ...?" கடும் வார்த்தை கங்குகளை அள்ளி வீசி விட்டு சென்ற கணவனின் சொல்லில் அவளுக்குக் கண்கள் கரிக்க அந்த இடத்தை விட்டு வேகமாய் நகர்ந்தாள் அனி...

கடைசியாய் மனைவிக்கு வளையல் அணிவிக்க வந்த அக்ஷய் வளையலை அவளின் கரத்தில் அணிவித்துக் கொண்டே,

"தேங்க்ஸ்..." என்றான் மனமார...

"ஏன்...?" புன்சிரிப்புடன் கேட்டவளின் தாய்மை தோற்றம் கண்களையும், மனதையும் நிறைக்க,

"எல்லாத்துக்கும் தான்..." என்றவனின் நேசம் அவளுக்கும் புரிவதாய்...

விழாவிற்கு வந்த நிஷாவுக்கும் புதுப் புடவை அணிவித்து அதே மனையில் அமர்த்தி வளையல்கள் அடுக்கப்பட்டது... பெற்றோர் இல்லாத விக்டருக்கும் பெற்றோர் இருந்தும் பிரயோஜனம் இல்லாத நிஷாவுக்கும் அக்ஷய்

குடும்பத்தினர் உறவினர்களாய் மாறி அவளுக்குச் செய்ய வேண்டிய சடங்குளை செய்தனர்...

"ரொம்பத் தேங்க்ஸ் சார்..." மனம் நெகிழ்ந்து நன்றி உரைத்த விக்டரை தன்னுடன் அணைத்துக் கொண்டான் அக்ஷய்...

அங்குத் தகுதி பேதத்தையும் தாண்டிய ஒரு உறவு ஆழமாய் அவர்களைப் பிணைத்து இருந்தது...

வளைகாப்பிற்கு வந்த உறவினர்கள் எல்லாம் சென்று இருக்க வீட்டு உறுப்பினர்கள் மட்டுமே அங்கு இருந்தனர்... ஆதர்ஷ்க்கு அங்கு இருக்கவே மூச்சடைத்தது... ஆனால் கோமதி பாட்டி வெகு ஆசையுடன் பேத்தியுடன் உரையாடிக் கொண்டு இருக்க அதைக் கெடுக்க அவனுக்கு மனம் வரவில்லை... அதனால் எழுந்து வெளியில் வந்தவன் அங்கு இருந்த தோட்டத்தில் தஞ்சம் அடைந்தான்...

அண்ணன் தனியே செல்வதைக் கண்டு அபி அனியிடம் வந்தாள்...

"அண்ணி... அண்ணா தனியா தோட்டத்தில் இருக்கான்... நீங்க போய்ப் பேசுங்களேன்..."

"ஐயோ... அவர் திட்டுவார்..." உண்மையில் அனி அவனுக்குப் பயப்படத்தான் செய்தாள்...

தேளாய் கொட்டும் அவனது நாக்கின் முன் அவளது தைரியம் தோற்றுப் போயிருந்தது...

"இப்படியே இருந்தா எப்படி அண்ணி... தவறு உங்க மேலும் இருக்கு தானே... அப்போ நீங்க தான் அவன் கிட்ட பேசணும்..."

அபி சொல்வது அவளுக்குப் புரிந்தாலும், "திட்டினா..."

"சரி... நான் கூட வர்றேன்... ஆனா தள்ளி நின்னுக்கிறேன்... ரொம்பத் திட்டினா என்னைக் கூப்பிடுங்க..." அபி சமாதானமாய்ச் சொன்னதும் அனிக்கும் கொஞ்சம் தைரியம் வந்தது...

இருவரும் வெளியில் வந்தனர்... அங்கு இருந்த வேப்பமரத்தின் கீழ் இருந்த கல் மேடையில் அபி அமர்ந்து கொண்டு,

"நீங்க போய்ப் பேசுங்க..."

அவள் சொன்னதும் அனி ஆதர்ஷை நோக்கி நடந்தாள்... ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் மனம் பயத்தில் அதிரத்தான் செய்தது... ஆனாலும் அவனைப் பிரிந்து தவிக்கும் மனதின் துயரம், அவனுடன் தான் சேர்ந்து விட மாட்டோமா என்ற தவிப்பு எல்லாம் சேர்த்து அவளை அவனை நோக்கி செலுத்தியது...

கைகளைக் கட்டி கொண்டு வானை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்த ஆதர்ஷின் முகத்தில் அத்தனை துயர் மண்டி இருந்தது... அபியின் தாய்மை கண்டு அவனுள்ளும் சிறிது தடுமாற்றம் வந்து இருந்தது...

மனைவி தன்னுடன் இருந்து இருந்தால் அவளது வயிற்றிலும் இந்நேரம் தனது மகவு வந்து இருக்குமோ என்ற எண்ணம் அவனை வாட்டி வதைக்கும் போதே,

'போயும் போயும் அந்தக் கேடு கெட்டவள் வயிற்றில் என் குழந்தையா... ச்சீ...' அருவருப்பாய் நினைத்த போது அவன் முன் அவன் மனையாள் வந்து நின்றாள்...

அந்த அருவருப்பில் முகம் சுளித்தவன், "ச்சீ... நீயா...?" என்றவனைக் கண்டு அவள் உள்ளுக்குள் செத்து போனாள்...

இந்தளவுக்குத் தன்னை அருவருக்கும் அவனிடத்தில் தான் என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் விழித்தாள்...

"இங்கே எதுக்கு வந்த...? இருக்கிற என் கொஞ்ச நஞ்ச நிம்மதியும் கெடுக்கிறதுக்கா...?" அடிக்குரலில் சீறினான் அவன்...

"ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க...? என்னை மன்னிக்கவே மாட்டீங்களா...?" கண்ணீர் மல்க கேட்டவளை கண்டு

அவனுக்குக் கொஞ்சமும் இரக்கம் வரவில்லை... மாறாகத் தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி ஆத்திரம் தான் அதிகரித்தது...

"எதைடி மன்னிக்கச் சொல்ற...? பொண்ணா நீ...? பெண் இனத்துக்கே கேவலம் நீ... நீ பண்ணிய காரியத்துக்கு இன்னொருத்தனா இருந்தா உன்னைக் கொன்னு போட்டு போயிருப்பான்... நானா இருக்கப் போய் அமைதியா விலகி இருக்கேன்..."

"தப்பு செஞ்சவங்க திருந்த கூடாதா... இப்போ நான் திருந்திட்டேன்ங்க..."

"இதே தப்பு நான் செஞ்சிட்டுத் திருந்திட்டதா சொன்னா நீ என்னை ஏத்துக்குவியா... இல்லைல்ல... உன்னால முடியாதுல்ல அப்புறம் எதுக்கு வீண் பேச்சு..." என்றவன் அவளை உற்று நோக்கி,

"ஏன் வேற யாரும் கிடைக்கலையா... அதான் என்னைத் தேடி வந்து இருக்கியா...?"

"ஆது..." அவனது சொல்லின் வீரியம் தாங்காமல் அவளையும் அறியாது அவனது பெயர் சொல்லி கத்திவிட்டாள்...

முதன்முறையாய் மனைவியின் வாயால் தனது பெயர் சொல்லி கேட்டவன் மனதில் துக்கம் பொங்கியது... அந்தத் துக்கம் தந்த துயரம் தாங்க முடியாமல்,

"ஷ்... எதுக்கு இப்போ கத்துற... உனக்குத் தேவை அது தானே..." என்றவன்,

"எனக்கு ஓகே தான்... உன்னோட ரேட் என்ன...? எந்த லாட்ஜில் ரூம் போடட்டும்...?" கொஞ்சம் கூட அலட்டி கொள்ளாமல் கேட்ட கணவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வரவில்லை... மாறாக வருத்தமாய் இருந்தது... அவனை இந்த மாதிரி தரம் இறக்கி பேச வைத்ததற்கு அவள் தானே முக்கியக் காரணம்...

அவனின் குணத்தை அருகில் இருந்து பார்த்தவளாயிற்றே அவள்... அவளின் சிறு வலியில் கூடத் துடிதுடித்துப் போகிறவன் அவளை இந்தளவுக்கு வார்த்தையால் காயப்படுத்துகிறான் என்றால் தான் அவன் மனதை எந்தளவுக்கு நோகடித்து இருக்கிறோம் என்பதை உணர்ந்தவளாய் மௌனமாய் அவனைப் பார்த்தாள்...

"என்ன வர்றியா...?" இதைக் கேட்கும் போது அவளை விட அவனுக்கு அதிகமாய் வலிக்கத் தான் செய்தது... ஆனால் அவள் அவனுக்கு அளித்த வலி அதை மறக்க செய்தது...

மனதுக்குள் எதையோ தீர்மானித்தவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "கூப்பிடறது நீங்களா இருக்கிறதால நான் எங்கே வேணும்னாலும் வருவேன்..." அவளது வார்த்தையில் அவன் தான் திகைத்து போனவனாய் நின்று இருந்தான்...

"எங்கேன்னு சொல்லுங்க...?"

அவளது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து அவன் நின்று இருக்க அவன் அருகில் நெருங்கி வந்தவள்,

"என்னால் நீங்க கெட்டவங்களாக வேண்டாம்... உங்களால அது மாதிரி மாறவும் முடியாது... கெட்டவளா நான் மட்டும் இருந்துட்டு போறேன்..." என்றவள்,

"கடைசியாய் ஒரு தடவை..."

அவளது பேச்சில் அவன் ஏன் என்று சுதாரிக்கும் முன் அவள் அவன் உயரத்திற்கு எம்பியவள் அவனது இதழில் தன் இதழை பதித்தாள்... அதில் அதிர்ச்சி அடைந்து அவன் சிலையாய் நின்றான்...

எம்பியபடி ரொம்ப நேரம் நிற்க முடியாமல் அவளது கைகள் அவனது கழுத்தை வளைத்துக் கொள்ள அதில் நிலை தடுமாறியவனின் கைகள் மனைவியின் இடையில் அழுத்தமாய்ப் பதிந்தது...

வெகு நாட்கள் கழித்துக் கணவனது கை ஸ்பரிசம் அவளது மேனியில் சிலிர்ப்பை உண்டு பண்ணியது... இனி அவன் அருகாமை கிடைக்குமா என்று எண்ணியவளின் கண்கள் கண்ணீரை பொழிந்தது...

ஆதர்ஷும் அவளது இதழொற்றலில் மனம் மயங்கி நின்று இருக்க அனி அவனை விட்டு விலகினாள்... அதில் ஏற்பட்ட ஏமாற்றத்தில் கோபம் அடைந்தவன்,

"எதுக்கு இந்த நாடகம்...? யாரை ஏமாத்த இந்த நடிப்பு...?"

அவனை ஆழ்ந்து பார்த்தவள், "இது நாடகமும் இல்லை... நடிப்பும் இல்லை... உண்மை..." என்றவள்,

"நாம ரெண்டு பேரும் டிவோர்ஸ் பண்ணிக்கலாம்... நீங்க வேறு நல்ல பெண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க..."

"எதுக்கு... நீ வேற கல்யாணம் பண்ண ஆள் பார்த்திட்டியா... அதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன்... காலம் முழுவதும் நீ இப்படித் தான் இருக்கணும்... என் மனைவியா ஆனா என் கூட வாழாம..."

அவனது பேச்சில் சந்தோசம் எழுந்த அதே நேரம் விரக்தியும் எழுந்தது அவளுள்...

"உங்களுக்கு வேண்டாமா இருக்கலாம்... ஆனா எனக்கு டிவோர்ஸ் வேணும்..." அழுத்தமாய் உரைத்தவளை கண்டு,

"ஏய்..." கோபமாய்க் கையை ஓங்கியவனைக் கண்டு புன்னகைத்தவள்,

"உங்களால என்னை அடிக்க முடியாதுங்க... அதுக்கு எல்லாம் ரொம்ப ரொம்பக் கெட்ட குணம் வேணும்... நீங்க ரொம்ப ரொம்ப நல்லவங்க..." என்றவள் அவனைத் திரும்பியும் பார்க்காமல் நடக்கத் துவங்க,

'இவள் என்னைக் கிண்டல் செய்கிறாளா இல்லை உண்மையாக அப்படிச் சொல்றாளா...' என்று அவள் சொல்வதன் அர்த்தம் புரியாமல் அவன் நின்று இருந்தான்...

அனி வருவதைக் கண்டு அபி எழுந்தாள்...

"அண்ணா என்ன சொல்றான்...?" ஆர்வமாய் விசாரத்தவளை புன்னகையுடன் பார்த்தவள்,

"கூடிய சீக்கிரம் நல்ல முடிவா எடுப்பார் அண்ணி..." என்றபடி அவள் செல்ல அபியும் பிரச்சினை சரியானதில் மகிழ்ச்சியுடன் அவளைப் பின் தொடர்ந்தாள்...

வரவேற்பறை வந்ததும் அபி மீண்டும் தனது பாட்டியிடம் சென்று பேச அமர்ந்தாள்... துளசியும், கோபிநாத்தும் உடன் இருந்தார்கள்... அக்ஷய் யாரிடமோ அலைப்பேசியில் பேசி கொண்டு இருந்தான்...

அனி நேரே சமையல் அறைக்கு வந்தாள்... வேலைக்காரர்கள் மதிய உணவு முடிந்து பாத்திரங்களைக் கழுவி கொண்டு பேசி அரட்டை அடித்துக் கொண்டு இருந்தனர்...

அனி அங்கு இருந்த கேஸ் அடுப்பை எரிய விட்டவள் அந்தத் தீ ஜூவாலையைப் பார்த்துக் கொண்டு நின்று இருந்தாள்... அவளது கண்களில் கண்ணீர் பெருகியது...

'கடைசியில் என்னை உடம்புக்கு அலையறவள்ன்னு சொல்லிட்டீங்க இல்ல ஆது... நான் அப்படிப்பட்டவ இல்லைன்னு உங்களுக்கு எப்படி நிரூபிப்பது... அந்த ரஞ்சித் கூட நான் அப்படி இருந்ததைக் கேட்டு தானே நீங்க என்னை இப்படிக் கேவலமா நினைக்கிறீங்க...? காதலிச்ச அவனை நான் நம்பியது தப்பா... அப்போ அந்த மாதிரி எல்லை மீறுவது தப்புன்னு எனக்குத் தோணலை... ஆனா இப்போ உங்க முகச் சுளிப்பில் அது தப்புன்னு உணர்றேன்... உங்க காதல் கிடைச்ச பிறகு தான் நான் காதல்ன்னா என்னன்னு உணர்ந்தேன்... இப்பவும் உணர்றேன்... ஆனா என்னை உணர்றதுக்கு நீங்க தயாரா இல்லையே...'

'நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு எனக்குப் புரியுது... அவன் தொட்ட என் உடம்பை நீங்க தொடக் கூடாதுன்னு நிடைக்கிறீங்க... அதை நினைச்சு அருவருக்கிறீங்க... தப்பு

எல்லாம் என் பேரில் தான்... அதுக்காக நீங்க மனசு நோக வேண்டாம்... நான் இந்த உலகத்தை விட்டே போறேன்... நீங்க வெறுக்கிற, அருவருக்கிற இந்தத் தேகம் எனக்கு வேண்டாம்... அதைத் தீயில் பொசுக்கி சாகடிக்கப் போறேன்...' என்று நினைத்தவள் கண்களைத் துடைத்துக் கொண்டு மனதில் எழுந்த வைராக்கியத்துடன் தனது முந்தானையை அடுப்பின் மீது போட்டாள்...

சமையல் வேலை செய்பவள் மட்டும் சில பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அங்கு வந்தவள் அனியின் சேலை தீப்பிடித்து எரிவதை கண்டு பெரிதாய் கூச்சல் போட அடுத்தக் கணம் எல்லோரும் அங்கு விரைந்து வந்தனர்...

தண்ணீரை ஊற்றி நெருப்பை அணைப்பதற்குள் அது அவளது உடலை பாதி எரித்து இருந்தது...

அக்ஷயும் அவனது குடும்பத்தினரும் திகைத்து நின்றனர்... அபியும் இத்தகைய ஒரு நிலையை எதிர்பார்க்காததால் அவளும் அதிர்ந்து போய் நின்றாள்... கோமதி பாட்டியும் அப்படியே...

"அனி..." அக்ஷய் தன்னைச் சுதாரித்துக் கொண்டு தங்கையை நோக்கி ஓடினான்...

"வேண்டாம் அண்ணா... கிட்டே வாராதீங்க..." அந்த வலியிலும், வேதனையிலும் திடமாய்ப் பேசியவளை கண்டு எல்லோரும் வேதனையாய் பார்க்க...

“அனி...” அக்ஷய் செய்வதறியாது நிற்க,

“நீங்க கூட என்னை நம்பலையே அண்ணா...” அவளது வார்த்தையில் சாட்டையடி வாங்கியது போல் துடித்துப் போய் அவளைப் பார்த்தான் அக்ஷய்...

அவள் தான் சிறு பெண் ஏதோ தெரியாமல் தவறு செய்து விட்டாள்... அதற்காக இத்தனை நாள் தான் பாராமுகம் காட்டியது தவறோ என்று அவனது மனம் கேள்வி எழுப்பி அவனைக் குற்றவுணர்வில் குன்றச் செய்தது...

அந்நேரம் சத்தம் கேட்டு அங்கு ஓடி வந்தான் ஆதர்ஷ்... அனியின் நிலை கண்டு பதறி போய்க் கதறியபடி அவள் அருகே ஓடினான்... என்ன தான் கோபம் இருந்தாலும் அவனது காதல் மனம் அவளை நோக்கி அவனைச் செலுத்தியது...

"ஹனி..." அவனையும் அறியாது அவளின் செல்லப் பெயரை சொல்லி அழைத்தான்...

அதில் அவளது முகம் மலர்ந்ததோ என்னமோ... கருமை படிந்த முகத்தில் வெண்மையாய் பற்கள் மட்டும் லேசாகத் தெரிந்தது... அந்த நொடி அன்றலர்ந்த மலர் போன்ற அவளது புன்னகை முகம் அவனது மனத்திரையில் நிழலாட அவனது கண்கள் கண்ணீர் உகுத்தது... அவளின் நிலைக்குத் தானும் ஒரு காரணமோ என்ற எண்ணம் அவனை வாட்டி எடுத்தது...

"ஏன் இப்படிப் பண்ணின...?" கண்ணீர் மல்க கேட்டவனைக் கண்டு அவளது எரிந்த கை அவனைச் சுட்டி காட்டியது...

"உங்களுக்காகத் தான்... அவன் தொட்ட உடம்புன்னு தானே நீங்க என்னை வெறுத்தீங்க... அதான் நெருப்பில் பொசுக்கிட்டேன்..." மெதுவாய் ஒவ்வொரு வார்த்தையாய் சொன்னவள் வலியை தாங்கியபடி பேசினாள்...

அவளது வேதனையை உணர்ந்தவனாய் ஆதர்ஷ், "அக்ஷய்... ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போவோம்..." அக்ஷயை பார்த்து கத்த...

"இல்லை நான் பொழைக்க மாட்டேன்..." என்று மறுத்தவள் கணவனிடம்,

"உங்க கிட்ட ஒண்ணே ஒண்ணு நான் கேட்கணும்...”

“இப்போ கேள்வி கேட்கிற நேரமா இது...?” கண்ணீர் விட்டான் ஆதர்ஷ்...

“இல்ல கேட்டே ஆகணும்... இப்போ கேட்கலைன்னா எப்பவுமே கேட்க முடியாம போயிடும்... நீங்க டாக்டர் தானே...

நான் கன்னிப் பொண்ணுன்னு உங்களால கண்டுபிடிக்க முடியலையா..."

அனியின் கேள்வியில் ஆதர்ஷ் அதிர்ச்சியில் உறைந்தான்... தான் பேசிய வார்த்தைகளின் தாக்கம் நெருப்பாய் மாறி திருப்பி அவனைத் தாக்கி தகிக்கச் செய்தது...

"என் மனசு, உடம்பு எல்லாத்துக்கும் சொந்தக்காரர் நீங்க மட்டும் தான்... ஐ லவ் யூ..." அத்தனை நேரம் வலியும், வேதனையும் தாங்கியவள் நினைவு அதிக வலியில் கொஞ்சம் கொஞ்சமாய் மயங்க துவங்கியது...

அனியின் கழுத்துச் சாயத் துவங்கியதை கண்டு, "ஹனி..." ஆதர்ஷ் அலறிய அலறலில் அந்த வீடே கிடுகிடுத்தது...

அவள் பேசியது ஒவ்வொன்றும் அவனுக்குத் தீரா வலியை கொடுத்தது... தான் பேசியது நடந்து கொண்டது எல்லாம் அவள் மனதை இந்தளவுக்குக் காயப்படுத்தும் என்று அவன் சிறிதும் எண்ணவில்லை... அதி நவநாகரீகமான மங்கையவள் மனதில் இத்தனை காதல் இருக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை... அவன் மனைவி அவன் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கி அவளது காதலை அவனிடம் நிரூபித்து இருந்தாள்...

வயதின் கோளாறு காரணமாக அனி தவறு செய்த போதும் கணவனின் காதலை உணர்ந்து அவன் மீதான தன் காதலை வன்மையாய் காலத்தால் அழிக்க முடியாதபடி கல்வெட்டாய் அவன் மனதில் பதித்து விட்டாள்...

பூக்கும்...

"நீ அண்ணிக்கு ட்ரீட்மெண்ட் பார்க்க கூடாது...?" ஆதர்ஷின் முன் வழி மறித்தார் போல் நின்றாள் அபி...

அனியின் வார்த்தைகள் கேட்டதில் இருந்து அண்ணன் மேல் அவளுக்கு அவ்வளவு வெறுப்பாய் இருந்தது... ஒரு பெண்ணை இந்தளவுக்கு வார்த்தைகளால் காயப்படுத்த முடியுமா என்று மனம் குமுறி போனாள்... அதுவும் தன் சகோதரனிடம் இருந்து இந்த மாதிரியான ஒரு செயலை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... எல்லா ஆண்களையும் போல் தன் அண்ணனும் மனைவியின் மனதை வார்த்தைகளால் கொன்று விட்டான் என்று அவன் மேல் கோபமாய் வந்தது...

தவறு செய்தாலும் அதை உணர்ந்து மன்னிப்பு கேட்டும் அதை ஏற்றுக் கொள்ளாமல் அனியை சாடிய தன் அண்ணனை மன்னிக்க அவள் தயாராக இல்லை...

"அபி... என்னை உள்ளே போக விடு..." கண்கள் கலங்க கூறிய ஆதர்ஷை கண்டு அவள் சிறிதும் இரங்கவில்லை...

"எதுக்கு...? இன்னும் எஞ்சி இருக்கிற அவங்க உயிரை எடுக்கிறதுக்கா...? வேண்டாம் இங்கு இருந்து போயிடு..." அவன் முகத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்தபடி பேசிய தங்கையைக் கண்டு அவனுக்கு வேதனையாய் இருந்தது...

"அபி... நீயே என்னைப் புரிஞ்சிக்கலைன்னா எப்படி...?"

"உன்னை நல்லா புரிஞ்சிக்கிட்டதால தான் சொல்றேன்... எப்படிண்ணா உன்னால இப்படி எல்லாம் பேச முடிஞ்சது...? என் அண்ணனா இப்படின்னு என்னால கொஞ்சமும் நம்ப முடியலை... இதோ இவரை நீ கெட்டவர், கெட்டவர்ன்னு சொல்லுவியே... இப்போ வரைக்கும் அவரை மன்னிக்காம இருக்கிறியே... அந்தக் கெட்டவர் கூட நீ அண்ணியைப் பார்த்து பேசியது போல் என்னை ஒரு வார்த்தை பேசியது இல்லை... ஆனால் நீ பெரிய நல்லவன் மாதிரி வேசம்

போட்டுட்டு உன் மனசுக்குள்ள ரொம்பக் கெட்டவனா இருந்து இருக்க... உன்னை மாதிரி நடிக்காம வெளிப்படையா இருக்கிற அவர் உன்னை விடப் பல மடங்கு நல்லவர் தான்..."

அக்ஷயை சுட்டி காட்டி அவள் பேச ஆதர்ஷ் அக்ஷயிடம் திரும்பி, "அக்ஷய்... நீங்களாவது அபி கிட்ட சொல்லுங்க..."

அவனைப் பார்க்கவும் பாவமாக இருந்தது அக்ஷய்க்கு... ஆதர்ஷ் போல் அவனும் மனைவிக்குக் கெடுதல் இழைத்து விட்டு பின்பு மருகியவன் தானே... ஒரு ஆணாய் அவனைப் புரிந்து கொண்டவனாய் அபியின் தோளில் கை வைத்து,

"ஷ்... ரக்ஷி அவரைப் போக விடு..." என்று சமாதானமாய்ப் பேச...

"என்னங்க...?" அதிர்ந்து போய்ப் பார்த்தாள் அவள்...

அனியின் நிலையைக் கண்ட பிறகு அவளால் அண்ணனை மன்னிக்க முடியவில்லை...

"இங்கே பார் ரக்ஷி... உன்னை விட என்னை விட அனியின் செயலால் அதிகம் பாதிக்கப்பட்டவர் உன் அண்ணன் தான்... அவளுக்காக அவர் துடிக்கிற துடிப்பு பொய் இல்லைடா..."

கணவன் தன்மையாய் எடுத்துச் சொன்னதும் அபி வழியில் இருந்து விலகி துளசி அருகில் சென்று அமர்ந்தாள்... துளசி மகளின் நிலையை எண்ணி அழுது கொண்டு இருந்தார்... பெண்ணாய் பிறந்ததால் அவர் கண்ணீர் வடித்துத் தன் துக்கத்தை ஆற்றி கொள்கிறார்... ஆனால் கோபிநாத் கண்ணீர் விட முடியாமல் தன் வேதனையை மனதில் புதைத்துக் கொண்டு கலங்கிய கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு திக்பிரம்மை பிடித்தது போல் அமர்ந்து இருந்தார்...

அக்ஷயும் தனக்குள் இறுகி போய்த் தான் அமர்ந்து இருந்தான்... தனக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை... அன்று அபி,

இன்று அவன் தங்கை... அவன் மனம் நொந்து போயிருந்தான்...

எப்படியோ தீவிர சிகிச்சைகள் மேற்கொண்டு இரு நாட்களில் அனியின் உயிரை காப்பாற்றியாகி விட்டது... அதன் பின்னரே குடும்பத்தினர் இடையே நிம்மதி ஏற்பட்டது... அந்த இரு நாட்களும் மரண வேதனையை அனுபவித்தனர் அனைவரும்... யாருக்கும் வீட்டிற்குச் செல்லவே பிடிக்காமல் அங்கேயே இருந்தனர்...

தீவிர சிகிச்சை பிரிவில் அனி அனுமதிக்கப்பட்டதால் யாரும் அவளுடன் தங்க முடியாது... மருத்துவனான ஆதர்ஷ் மட்டும் அவளுடன் இருக்க முடியும்... அதனால் ஆதர்ஷ்,

"நான் அவளைப் பார்த்துக்கிறேன்... நீங்க எல்லாம் வீட்டுக்கு போங்க... ஆச்சி வேற தனியா இருப்பாங்க..." என்று அன்று இரவு எல்லோரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தான்...

இன்னமும் அபி ஆதர்ஷோடு பேசவில்லை... அவன் பேச முயற்சித்த போதும் அவள் பேசவில்லை...

அவர்கள் சென்றதும் ஆதர்ஷ் அனியின் அருகில் சென்று அமர்ந்தான்...

அழகு தேவதையான அனி இப்போது இருக்கும் கோலம் கண்டு மருத்துவனான ஆதர்ஷின் கண்களில் கண்ணீர் வழிந்தது... அவன் வாழ்வில் இது மாதிரி நோயாளிகள் நிறையப் பேரை கையாள வேண்டும்... அதனால் எப்போதும் திட மனதுடன் உறுதி குறையாமல் சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்துவது அவனது வாடிக்கை... ஆனால் இன்று மனையாளின் துன்பத்தைக் கண்டு அவனால் அதே போல் இருக்க முடியவில்லை... மனதில் பாரமேறிய ஒரு உணர்வு...

அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவன் மனதை உயிருடன் கொன்றது... திருந்தி வந்தவளை ஏற்றுக்

கொள்ளாமல் தான் பேசிய வார்த்தைகள் அவளை எந்தளவுக்குக் காயப்படுத்தி இருக்கும் என்று அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

அவள் செய்த காரியத்தால் அவள் மீது அவன் கோபம் கொண்டு இருந்தானே தவிர அவளை அவன் வெறுக்கவில்லையே... என்றுமே அவளை வெறுக்க அவனால் முடியவே முடியாது...

ஏனெனில் அவனின் நேசம் அப்படிப்பட்டது... அவளைப் பற்றி முழுதாய் அறிவதற்கு முன் அவள் மேல் காதல் கொண்டவன் அவன்... இடையில் அவளின் செயல் கேள்விப்பட்ட போதும் அவளை வெறுக்க முடியாமல் அதே சமயம் அவளது செயலை மறந்து மன்னிக்கவும் முடியாமல் தவிப்பது அவனுக்கு மட்டுமே தெரியும்... அதையும் மீறி அவள் மீதான அவனது தேடலை தணிக்க முடியாமல் மனதுக்குள் அவஸ்தைப்படுவது அவன் மட்டுமே அறிவான்...

அன்றும் அனியை பார்க்க பார்க்க அவளிடம் மயங்கிய மனதை கட்டுப்படுத்தும் வகையறியாது வேதனையுடன் நின்று இருந்தவனிடம் வந்து அனி பேசியதும் அவனும் இத்தனை நாள் மனதில் இருந்த துன்பத்தை எல்லாம் வார்த்தையாய் வெடித்து விட்டான்... அதை இப்போது எண்ணி நொந்து கொண்டு இருந்தான்...

அந்த வேதனை, வலியிலும் அவனது முகத்தை ஆசையுடன் காதலாய் பார்த்தவளை கண்டு அவன் உடைந்து போய் அழுதான்...

"ஏன்... என்னை... காப்பாத்துனீங்க..." ஒவ்வொரு வார்த்தையாய் திக்கி திணறி கேட்டவளை கண்டு,

"நீ என் உயிர்... உன்னைக் காப்பாத்தாம நான் வேறு யாரை காப்பாத்துவேன்..." என்றவன்,

"நான் ஏதோ கோபத்தில் அப்படிப் பேசிட்டேன்... அதுக்காக நீ இப்படிப் பண்ணலாமா... உன்னை நீ இப்படி

வருத்தியதுக்கு நீ என்னை ஏண்டா இப்படிப் பேசினேன்னு ரெண்டு அடி அடிச்சு இருக்கலாம்... இது என்னடி கோலம்...? என்னால பார்க்க முடியலையே..." வேதனையுடன் புலம்பியவனைக் கண்டு அவளது கண்ணிலும் கண்ணீர் வழிந்தது...

"ஏன்... என்னை... பார்க்க... சகிக்கலையா..." அந்த வேதனையிலும் அவனைப் பார்த்து கேட்டவளை கண்டு,

"ஐயோ என்னைக் கொல்லாதே ஹனி..." அவனது 'ஹனி' என்ற அழைப்பில் அவளது இதழ் புன்னகையில் விரிந்தது...

"நீங்க தான் என்னைக் கொல்றீங்க... நான் இல்லை..."

"இல்லை... இல்லை... இனி இப்படி நடக்காது... இனி இப்படிப் பேச மாட்டேன்..." தனது மனதை எப்படி எடுத்து உரைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை...

ஏனெனில் அவளைத் தொட்டு பேச முடியாதபடி அவளது உடலின் அனைத்து பாகங்களையும் தீயின் நாக்குகள் தீண்டி இருந்தது... இதில் அவன் எங்கே அவளைத் தீண்டுவது...?

அவளது பார்வை அவன் மீதே நிலைத்து இருந்தது...

"என்னடா...?" அவனது மென்மையில் அவளுக்குத் தொண்டை அடைத்தது...

இது தான் அவளது கணவன் ஆதர்ஷ்... மென்மையே உருவானவன் அவன்... அவனுக்கு அதிர்ந்து பேச கூடத் தெரியாது... அப்படிப்பட்டவன் இந்தளவுக்கு மாறியதற்கு அவள் தானே முழுக் காரணம்...

ஒன்றும் இல்லை என்பது போல் தலையசைத்தவள் அமைதியாய் கண்களை மூடினாள்... வெளியில் தான் அமைதியாய் படுத்து இருப்பது போல் தோன்றும்... ஆனால் உள்ளுக்குள் வலியில், வேதனையில் அவள் கதறிக் கொண்டு இருந்தாள்... ஒன்று உடல் கொடுத்த வலி,

மற்றொன்று மனம் அளித்த வேதனை... இரண்டும் சேர்ந்து அவளை அலைக்கழித்துக் கொண்டு இருந்தது...

ஆதர்ஷின் மாற்றம் மனதுக்கு இதமாய் இருந்த போதும் இனி தான் அவனுக்கு எந்த விதத்திலும் பொருத்தமாய் இருக்க மாட்டோம் என்று எண்ணியவளுக்கு மனதுக்குள் துயரமாய் இருந்தது...

இதற்கு அவன் சொன்னது போல் அவனை அடித்துத் திட்டி வழிக்குக் கொண்டு வந்து இருக்க வேண்டுமோ... ஆத்திரத்தில் அவசரத்தில் வேதனையில் அவள் செய்து கொண்ட காரியம் இப்போது அவளுக்குப் பெரும் துன்பத்தை அளித்தது...

இப்படி நடைப்பிணமாய் உயிருடன் இருப்பதற்கு அவள் இதில் உயிரை விட்டு இருக்கலாமே என்று மனதில் துயரத்துடன் நினைத்தாள்... கண் எதிரே கணவனைக் கண்டு கொண்டு நெஞ்சம் நிறையக் காதலை சுமந்து கொண்டு அவனிடம் பாராமுகம் காட்டுவது அவளால் முடியுமா...???

'ஏன் முடியாது...? என்னால் நிச்சயம் முடியும்... இனி ஆது வாழ்க்கையில் நான் தொந்திரவு பண்ண மாட்டேன்... அவருக்கு ஏத்த மாதிரி நல்ல பொண்ணாய் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளட்டும்... எல்லோரும் கேலிப் பொருளாய் பார்க்கும் நான் அவருக்கு வேண்டாம்... இதைச் சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வாரா... நிச்சயம் மாட்டார் தான்... ஆனால் நான் வற்புறுத்தி கேட்டுக் கொண்டால் சம்மதிப்பார்... வெகு விரைவில் ஆதுவிடம் இருந்து விவாகரத்து வாங்குவது தான் அவருக்கு நல்லது...' என்று நினைத்தவளின் மனசாட்சி,

'உனக்கு...?' என்று எதிர் கேள்வி கேட்க அதைத் தாங்க முடியாமல் அவளுக்கு அழுகை வந்தது... அவளது கண்ணீர் கண்டு,

"வலிக்குதா ஹனி..." அவன் பதறி போய்க் கேட்க...

அவனின் 'ஹனி' என்ற வார்த்தையில் இருந்த இனிமை அவளின் வலியை மறக்க செய்தது...

இல்லை என்பது போல் தலையசைத்தவள் மனம் முழுவதும் ரணமாய்...

வீட்டிற்கு வந்து அறைக்குள் நுழைந்ததும் அக்ஷய், "ரக்ஷி..." என்று மனைவியை இறுக அணைத்துக் கொண்டான்...

அவனின் மனக் கஷ்டத்தை உணர்ந்து அவளும் அவனை அணைத்து ஆறுதல் அளிக்க அவனது முதுகு குலுங்கியது அழுகையில்...

அதில் திடுக்கிட்டு போனவள் அவன் முகத்தை நிமிர்த்தி, "அக்ஷய்... என்ன இது... சின்னப் பிள்ளை போல்... அண்ணி உயிருக்கு தான் எந்தவித ஆபத்தும் இல்லையே..." அவள் அவனது கண்களில் நீரை துடைக்க... அவளது கையைக் கன்னத்தோடு வைத்து கொண்டவன்,

"அனியை அப்படிப் பார்க்க முடியலை ரக்ஷி... ரொம்ப வேதனையா இருக்கு... இதோ இந்தக் கையில் தான் பூ மாதிரி மென்மையா இருந்த அவளை வாங்கினேன்... இத்தனை நாளில் அவளின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசியது கிடையாது... ஊரெல்லாம் நான் பேசுறதை கேட்கும்... ஆனா நான் அவள் பேசுறதை மட்டும் தான் கேட்பேன்... அவள் என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பேன்... அவள் முகத்தில் சின்னச் சுணக்கம் கூட வராம தான் இது நாள் வரை நடந்து இருக்கேன்... அவ கேட்டு என்னால் வாங்கிக் கொடுக்க முடியாத ஒண்ணு... அவள் காதல் தான்... பொறுக்கி ராஸ்கல் அந்த ரஞ்சித்... அவனை எப்படி இவளுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பேன்... மனசறிஞ்சு அவளுக்குக் கெட்டது செய்ய என்னால் எப்படி முடியும்...? அதான் அவனைத் தவிர்த்துட்டு உன் அண்ணனை மாப்பிள்ளையா பார்த்தேன்... ஆனால் அவள் பண்ணிய தப்பு இப்படி அவளின் உயிரை காவு வாங்கும் அளவுக்குப் போகும்ன்னு நான் நினைக்கலை..."

"உன் அண்ணன் பண்ணது கூட ஒரு விதத்தில் சரி தான்... இந்த விசயத்தில் ஒரு புருசனா எந்த ஒரு ஆணும் கோபப்படாமல் இருந்தால் தான் தப்பு... ஆனா அண்ணனான நான் அவளிடம் கோபப்பட்டது... ரொம்ப ரொம்பத் தப்பு... நான் தப்புப் பண்ணிட்டேன் ரக்ஷி..." நெற்றியில் அறைந்து கொண்டு கதறியவனைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் அவனைத் தன்னோடு அணைத்து கொண்டாள்...

அவளது கழுத்தில் முகம் புதைத்தவன் மேலும் புலம்பினான்...

"அவளைப் பத்தி நல்லா தெரிஞ்ச நான் இப்படி நடந்து இருக்கக் கூடாது... அவள் கிட்ட மனசு விட்டு பேசி இருக்கணும்... எதுவா இருந்தாலும் என் கிட்ட தான் முதல்ல சொல்லுவா... அப்படிப் பேசி இருந்தா அவள் மனசில என்ன நினைக்கிறாள்ன்னு தெரிஞ்சு இருக்கும்... இந்தளவுக்கு ஆதர்ஷை நேசிப்பாள்ன்னு நான் நினைக்கலை... என்ன எல்லாம் நினைச்சு மனசுக்குள் மருகிட்டு இருந்தாளோ தெரியலையே... கடைசியா என்னைப் பார்த்துக் கேட்டா பாரு ஒரு கேள்வி செருப்பால அடிச்ச மாதிரி... அது இன்னும் என் காதுக்குள் கேட்டுட்டே இருக்கு..."

அவனின் மன வேதனை தாங்காமல் அவள், "அதான் அண்ணி பிழைச்சிட்டாங்களே... இனி எல்லாம் சரியா போயிரும்..."

"பிழைச்சுட்டா தான்... ஆனா இப்போ அவள் அனுபவிக்கிற நரக வேதனை எவ்வளவு கொடுமையானது தெரியுமா...? சின்ன வயசுல தீபாவளிக்கு பட்டாசு வெடிச்சப்போ சின்ன நெருப்பு பொறிப் பட்டதுக்கே அப்படி அழுது துடிச்சா... இப்போ உடல் முழுசும் கருகி போய்ப் படுத்து இருக்கா... எப்படி வலி தாங்குறான்னு தெரியலை..." என்று கதறியவனை அணைத்து ஆறுதல் படுத்தித் தனது மடியிலேயே சாய்த்து உறங்க வைத்தாள்...

இரு நாட்களாய் தூங்காததன் விளைவு அபியின் இதமான வருடலில் அக்ஷய் உறங்கிவிட்டான்... அபி வெகுநேரம்

கணவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவனின் இன்னொரு பக்கம் தெரிந்து அவளுக்கு ஆச்சிரியமாய்ப் போனது...

இத்தகைய மென்மையான குணம் தன்னவனிடமா... அவளால் நம்ப முடியவில்லை... தன் வீட்டுப் பெண்களை நேசிப்பவனால் அடுத்த வீட்டு பெண்ணுக்கு தீங்கு செய்ய முடியாது... அதனால் தான் பெண்கள் விசயத்தில் நெருப்பாய் இருந்தானோ... அவள் விசயத்தில் சறுக்கியது கூட அவள் மீதான நேசத்தினால் தானோ என்று எண்ணியவளுக்கு அவளையும் அறியாது மனதில் காதல் ஊற்றுப் பெருகியது...

*********************

"அவளுக்குத் தான் அறிவில்லைன்னா... நீங்களும் இப்படிப் பேசுறது சரியில்லை அக்ஷய்..." ஆதர்ஷ் அக்ஷயிடம் பொரிந்து கொண்டு இருந்தான்...

அவனது கையில் விவாகரத்துக்கான விடுதலை பத்திரம் இருந்தது...

ஆம் அனி தான் அவனுக்கு இதை அனுப்பி இருந்தாள்... அவளுக்கு அந்த நிகழ்வு நடந்து மூன்று மாதங்களாகி போனது... இப்போது ஓரளவுக்குக் காயங்கள் ஆறி போனாலும் அதன் வடுக்கள், தழும்புகள் இன்னுமும் அவளது உடலில் இருக்கத் தான் செய்தது... சில பெரிய புண்கள் இன்னமும் ஆறவில்லை... அதற்குச் சிகிச்சை எடுத்து வருகிறாள்...

சும்மாவே ஆதர்ஷை பிரிந்ததில் இருந்து பேச்சு குறைந்து போன அனி இப்பொழுது முற்றிலுமாய்த் தனது அறையில் முடங்கிப் போனாள்... தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்க்க மனம் அருவருத்து போய் இப்போது எல்லாம் அவள் கண்ணாடி பார்ப்பது இல்லை...

"நான் என்ன செய்யட்டும் ஆதர்ஷ்... அவள் சொல்லும் போது என்னால் மறுத்து பேச முடியவில்லை... ஒரு முறை

அவளைப் புரிஞ்சிக்காம நான் இருந்தது போதும்... இனியும் அவளை நான் கஷ்டப்படுத்த விடலை..."

"இதுக்குச் சம்மதம் சொல்லி தான் அவளை மேலும் நீங்க கஷ்டப்படுத்துறீங்க..." என்றவனைப் புரியாது பார்த்தான் அக்ஷய்...

"என்னைப் பிரிஞ்சு உங்க தங்கச்சியால சந்தோசமா இருந்திட முடியுமா...?" ஆதர்ஷ் கேட்ட கேள்விக்கு அவனிடத்தில் பதில் இல்லை...

"நான் பேசி பார்க்கிறேன் அக்ஷய்... எனக்கு அனி மேல் நம்பிக்கை இருக்கு..." நம்பிக்கையுடன் பேசியவனைப் புன்னகையுடன் பார்த்தவன் சம்மதமாய்த் தலையசைத்தான்...

"ஆல் த பெஸ்ட் அண்ணா..." அபி அண்ணனை வாழ்த்தி அனுப்ப... அக்ஷயின் பெற்றோர் மனதுக்குள் மகிழ்ச்சி அடைந்தனர்...

மனைவி மீதான அண்ணனின் தவிப்பை கண்டு அபி அவனை மன்னித்து விட்டாள்... அனிக்காக அவள் பிரசவத்திற்காகத் தாய் வீடு செல்லாமல் இங்கு இருந்தாள்... அவளைப் பார்க்கும் சாக்கில் ஆதர்ஷ் அனியை பார்த்துவிட்டு செல்வான்... தனியே என்றால் அவனைச் சந்திக்க அனி மறுத்து விடுவாள் அதனால் தான்...

அவனும் மனைவி மனதை மாற்ற எவ்வளவோ முயலுகிறான்... ஆனால் எதற்கும் மசியாத அனி கடைசியில் விடுதலை பத்திரம் ஒன்றை அவனுக்கு அனுப்பி வைத்து விட்டாள்... அவள் விடுதலை கொடுத்தாலும் அவன் அவளுக்குக் கொடுக்க விருப்பப்படணுமே...

ஆதர்ஷ் அனியின் அறைக்குள் கதவை தட்டாமல் வேகமாய் நுழைந்தான்...

அனி முதுகு பக்கமாய் இருந்த புண்ணிற்குக் கையில் இருந்த களிம்பு மருந்தை எடுத்து பூசுவதற்காக முயன்று கொண்டு இருந்தவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்... அங்கே எதிர்பாரா விதமாகக் கணவனைக் கண்டதும் அதிர்ந்து போய் அருகில் இருந்த உடையைக் கொண்டு தேகத்தை மறைக்க முயல அவன் அதைக் கண்டு கொள்ளாமல் அவள் கையில் இருந்த மருந்தை வாங்கி அவளது முதுகில் இருந்த காயங்களில் போட்டு விட்டான் ஒரு நல்ல மருத்துவனாய்...

அவனது தொடுகையில் அவள் தான் கூச்சத்தில் நெளிந்தாள்...

"நானே போட்டுக்கிறேன்..." என்று அவள் மறுக்க மறுக்க ஒன்றும் பேசாது எல்லா இடங்களிலும் மருந்து போட்டு விட்டு தான் அவன் குளியலறைக்குச் சென்றான் கைகளைச் சுத்தம் செய்வதற்கு... அதற்குள் அவள் நைட்டியை எடுத்து அணிந்து கொண்டாள் அவசரமாக...

துண்டில் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தவன் தன் சட்டையில் இருந்து அந்தக் காகிதத்தை எடுத்து அவள் முன் நீட்டினான்...

"என்ன இது...?"

"பார்த்தா தெரியலையா...?" அவன் முகம் பார்க்காமல் தலை குனிந்து கொண்டாள்...

"ஏன் நீ வேறு கல்யாணம் பண்ணிக்கப் போறியா...?" அவனது சுள்ளென்ற வார்த்தையில் துடித்துப் போய் நிமிர்ந்தவள் கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள்...

"இல்லை... உங்களுக்காகத் தான் இது... நீங்க உங்க மனசுக்கு பிடிச்ச மாதிரி வேறு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க..."

"ஏன் அந்த நல்ல பொண்ணா நீ இருக்க மாட்டியா...?" அதற்கு அவள் பதில் பேசவில்லை... அமைதியாய் இருந்தாள்...

"நான் பேசின வார்த்தைக்காக என்னை வெறுத்துட்டியா..." என்றவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து,

"இப்போ நான் சொல்றதை நீ நம்பணும்... என் மனசு பூரா நீ தான் நிறைஞ்சு இருக்க... அன்னைக்கு நான் அப்படிப் பேசியது கூட உன் மேலுள்ள காதலிலால் தான்..." என்றவனை விழியகல பார்த்தாள் அவள்...

"உண்மை தான் ஹனி... உன்னை நேரில் பார்த்த பிறகு என் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் நான் திண்டாடிட்டு நிற்கிறப்போ தான் நீ வந்து பேசின... அந்தக் கோபத்தைத் தான் நான் உன் கிட்ட காண்பிச்சிட்டேன்..." என்றவன்,

"அதுக்காக நான் பேசிய வார்த்தைகள் சரின்னு சொல்லலைல... ரொம்ப ரொம்பச் சாரி ஹனி... என்னை மன்னிச்சிரு..." அவளது கையைப் பிடித்து அதில் முகம் பதித்தான் ஆதர்ஷ்...

அவனது கண்களின் கண்ணீரை அவளது கைகள் உணர்ந்தது...

"ஆது... ப்ளீஸ்..." அவளது அழைப்பில் நிமிர்ந்து பார்த்தவன்,

"நீ இப்படிக் கூப்பிடும் போது என் பேரு எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா..." என்றவனது விழிகளை அவளது கைகள் துடைத்து விட்டது அவளையும் அறியாமல்...

அவளது கரத்தை பற்றியவன், "கண்ணோட துயரத்தை போக்கின மாதிரி என் மனசோட துயரத்தையும் போக்க என்னோடு வாழ வா ஹனி... இனியும் நீ இல்லாம என்னால் வாழ முடியாது..."

மெதுவே அவனது கரத்தில் இருந்து தனது கரத்தை விடுவித்துக் கொண்டவள், "முதல்ல கேட்டிருந்தா கூட ஒருவேளை நான் வந்திருக்கக் கூடுமோ என்னவோ... ஆனா இப்போ என்னால் உங்க கூட வர முடியாது... இந்த அழகில்லாத நான் உங்களுக்கு வேண்டாம்... என்னால்

உங்களைத் தான் எல்லோரும் கேலியா பார்ப்பாங்க... வேண்டாம் நான் உங்களுக்கு வேண்டாம்..." என்று முகத்தை மூடி கொண்டு அழுதவளை என்ன சொல்லி தேற்றுவது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"கடைசி வரைக்கும் நீ என்னை மன்னிக்கவே மாட்டியா ஹனி..." என்று எழுந்தவன், "அப்படியே இருந்துட்டு போகட்டும்... ஆனா நான் வேற கல்யாணம் பண்ண மாட்டேன்... நீயா மனசு மாறி என் கிட்ட வர்ற வரைக்கும் உனக்காக நான் காத்திருப்பேன்..." என்றவன் அறையை விட்டு வெளியேறினான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது... இனி வாழ்க்கையில் அழுகை மட்டும் தான் துணை என்று நினைத்தவள் அழுகையை அடக்கி கொண்டாள் மிச்சம் இருக்கும் வாழ்க்கைக்குத் தேவை என்பதை உணர்ந்து...

ஆதர்ஷ் சென்றதும் அக்ஷய் உள்ளே நுழைந்தான்...

"அனி என்னம்மா இப்படிப் பண்ணிட்ட...?"

"அண்ணா... ப்ளீஸ்... இதில் என் விருப்பப்படி விட்டுருங்க..." கண்ணீர் மல்க சொன்னவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"நீ அமெரிக்காவுக்கு ட்ரீட்மெண்ட் போகும் போது ஆதர்ஷையும் உன் கூட அனுப்பலாம்ன்னு இருந்தேன்..." அண்ணனை புரியாமல் பார்த்தவள்,

"அவர் எதுக்கு... நான் தனியா போய்க்கிறேன்..."

"இல்லைம்மா... மாப்பிள்ளைக்கு ஹார்ட் ஸ்பெசலிஸ்ட் ஆகணும்ன்னு ரொம்ப நாளா ஆசை... அவருக்குப் படிக்க வசதி இல்லாததால நாம படிக்க வைக்கலாம்ன்னு முடிவு பண்ணினேன்... இப்போ அவர் தான் உன் புருசன் இல்லையே அப்புறம் எதுக்கு நான் வீணா செலவு பண்ணனும்... எதுக்குத் தேவையில்லாத தண்டச் செலவு..." அவன் சொல்லி முடிக்கும் முன்,

"அவர் ஒண்ணும் தண்டச் செலவு இல்லை... எனக்கு உள்ள ஷேர்ஸ் அப்படியே தானே இருக்கு... அதுல வர்ற வருமானத்தில் அவரைப் போல் பல பேரை படிக்க வைக்கலாம்... அதில் நீங்க அவரைப் படிக்க வச்சா போதும்... நான் அவருக்குச் செலவு பண்றேன்... நீங்க ஒண்ணும் அவருக்குச் செலவு பண்ண வேண்டாம்..." அவள் படபடவெனப் பொரிந்தாள்...

கணவனது படிப்பு செலவை தண்டச் செலவு என்று அண்ணன் சொன்னது அவளால் தாங்க முடியவில்லை... தன்னால் அவனது படிப்பு, அவனது லட்சியம் கெடுவது குறித்து அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை... அவனுக்குக் கொடுக்காமல் அவளிடத்தில் பணம் இருந்து என்ன பயன்...

"இவ்வளவு அன்பை வச்சிட்டு நீ ஏன்ம்மா அவர் கூடச் சேர்ந்து வாழ மாட்டேங்கிற..."

"எப்படின்னா நான் அவர் கூட வாழுவேன்... முன்னே அவர் கூட வாழும் போது மனசு அழுக்கா, அசிங்கமா இருந்தது... இப்போ வாழ விரும்பும் போது என் உடல் அழகா இல்லை... யாரும் பார்க்க முடியாதபடி அசிங்கமா இருக்கு... இந்த அசிங்கத்தோட போய் அவர் கூட என்னை வாழ சொல்றீங்களா... அப்பவும் நான் அசிங்கம் தான்... இப்பவும் நான் அசிங்கம் தான்... இப்ப எனக்கு அவரைப் பிடிச்சியிருக்கு... அவரை உயிருக்கு உயிரா நேசிக்கிறேன்... ஆனா... மறுபடியும் வாழ்க்கை கேட்டு அவர் கிட்ட போய் நிற்க எனக்கு என்ன அருகதை இருக்கு..."

முகத்தை மூடி கொண்டு அவள் அழ, "இவ்வளவு காதலை வச்சிட்டு உன்னால எப்படி இப்படி இருக்க முடியுது ஹனி...?" ஆதர்ஷின் குரலில் விலுக்கென்று அவள் நிமிர்ந்து பார்க்க...

"அனி... இனி உன் புருசன் பாடு... உன் பாடு... இதுக்குப் போயா ரெண்டு பேரும் மூக்கால அழுறீங்க..." என்று சிரித்தபடி அக்ஷய் கதவை சாத்திவிட்டு வெளியில் சென்றான்...

ஆம் ஆதர்ஷ் போய் அவனிடம் வருத்தத்துடன் அனி பேசியதை சொல்லி கவலைப்பட அவன் தான் ஆதர்ஷை அழைத்து வந்து மறைவாக நிற்க செய்துவிட்டுத் தங்கை இடத்தில் பேச வந்தான்... அவளின் மனதையும் ஆதர்ஷ்க்கு புரிய வைத்துவிட்டான்...

"ஹனி என்னை மன்னிச்சிட்டியா..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"நீங்க என்னை மன்னிச்சிட்டீங்களா... இப்போ நான் பழைய அனி இல்லை... இப்போ என்னிடத்தில் அவன் தீண்டிய எதுவும் இல்லை... அதைத் தீயில் எரிச்சிட்டேன்... இப்போ இருக்கிற அனி மனசில் நீங்க மட்டும் தான்... நீங்க என்னை நம்புறீங்களா..."

"நம்புறேன்... உன்னை நம்புறேன்... இதுக்காக நீ இவ்வளவு பெரிய காரியம் பண்ணி இருக்கத் தேவையில்லை... நீ அசிங்கம்ன்னா உன்னைச் சந்தேகப்பட்டுப் பேசிய நான் தான் அசிங்கமானவன், கேவலமானவன்... நீ இல்லை ஹனி..." என்றவன் அவளை அணைத்துக் கொண்டான் மென்மையாய்...

அத்தனை நாள் மனதில் அலைப்புறுதலுடன் வாழ்நாளை கழித்தவள் இன்று தனது இடம் சேர்ந்துவிட்ட நிம்மதியில் அவனின் நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள் விருப்பமாய்...

அடுத்த மூன்று நாட்களில் அபிக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது... அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் நிஷாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது...

குழந்தையைக் கையில் ஏந்திய அபிக்கு கணவன் அளவுக்கு மகிழ்ச்சி பொங்கவில்லை...

தன்னை உறித்து வைத்து பிறந்த மகனை கையில் தூக்கி கொண்டாடினான் அக்ஷய்... அந்தச் சந்தோசத்தில் மனைவியின் மாற்றத்தை அவன் கவனிக்கவில்லை...

"தேங்க்ஸ்... தேங்க்ஸ் பேபி..." என அவளையும் தலையில் தூக்கி வைத்து கொண்டாட அவன் தவறவில்லை...

ஒரு மாதம் கழித்துக் குழந்தைக்கு ஆதித்யா என்று பெயரிட்டனர்... அந்த விழாவிற்கு நிஷா, விக்டர் தம்பதியினர் தனது இரு மாத குழந்தை மித்ரேஷ்வரனுடன் வந்து இருந்தனர்...

தங்கை குழந்தைக்குப் பெயர் வைத்த பின்பே ஆதர்ஷ் அனியுடன் அமெரிக்கா கிளம்பினான்... அவள் சிகிச்சைக்காகவும், அவன் தன் மேல் படிப்பை தொடர்வதற்கும் இருவரும் கிளம்பினர்...

கோமதி பாட்டியை அவனோடு அழைத்துச் செல்லலாம் என்றால் அவர் அங்கே வர மறுத்துவிட்டார்... அதனால் அவரை அக்ஷய், அபி வசம் ஒப்படைத்து விட்டனர். துளசியும், கோபிநாத்தும் கோமதி பாட்டியை தங்களுடன் தங்க செய்வதில் சந்தோசம் அடைந்தனரே தவிர வருத்தப்படவில்லை...

கிளம்பும் முன் ஆதர்ஷ் அக்ஷயிடம் தனியே வந்து, "அனிக்காகத் தான் நான் அப்படிச் சொன்னேன்... ஆனால் என் படிப்பை என் வருமானத்தில் படிக்கத் தான் எனக்கு விருப்பம்... என் கிட்ட கொஞ்சம் சேவிங்ஸ் இருக்கு... நான் அங்கே போய் ஹாஸ்பிட்டல்ல வேலை பார்த்துட்டுப் படிப்பு செலவை என்னால் சமாளிக்க முடியும்... தயவுசெஞ்சு இதை அனி கிட்ட சொல்லிடாதீங்க... அவள் ரொம்ப வருத்தப்படுவா..."

மனைவியின் சிகிச்சைக்கு அக்ஷய் செலவு செய்ய ஒத்து கொண்டவன் தன்னுடைய படிப்பிற்கு அவனிடம் கேட்க அவனது தன்மானம் இடம் கொடுக்கவில்லை... அவனது மனம் புரிந்தார் போல் அக்ஷயும்,

"நான் சொல்ல மாட்டேன்... நீங்களும் அனியும் சந்தோசமா வாழ்ந்தா அதுவே எனக்குப் போதும்..." சிரித்தபடி விடை கொடுத்தான்...

அன்று இரவு குழந்தை வீரிடலில் பதறி அடித்துக் கொண்டு எழுந்த அக்ஷய் மனைவியைப் பார்க்க அவளோ எங்கோ வெறித்துக் கொண்டு இருந்தாள்...

"ரக்ஷி..."

"என்ன...?" திடுக்கிட்டு அவள் விழிக்க...

"குழந்தை அழுகுது பாரு..."

அவனது சொல்லில் குழந்தையைப் பார்த்தவள் வேகமாய் அதைக் கைகளில் அள்ளி கொண்டாள்...

'என்னவானது இவளுக்கு...?' என்று யோசித்தவனுக்குக் கொஞ்ச நாட்களாக அபி இப்படி இருப்பது புரிந்தது... ஏன் என்ற கேள்விக்கு விடை தான் தெரியவில்லை...

குழந்தைக்குப் பால் கொடுத்துவிட்டு அவள் அப்படியே படுக்க வைக்கப் போக, "ரக்ஷி... என்ன பண்ற...?" கடிந்தபடி அவளிடம் இருந்து குழந்தையைக் கையில் வாங்கியவன் அதைத் தோளில் போட்டு தட்டி கொடுத்தான்... குழந்தை ஏப்பம் விட்டதும் அதைப் படுக்க வைக்கப் போக அதுவோ தந்தையைக் கண்டு கண்களை உருட்டி உருட்டி பார்த்துச் சிரித்தது...

ஒரு மாத குழந்தைக்குத் தந்தையை இனம் காண முடியாது என்பது புரிந்தாலும் தன்னைப் பார்த்து சிரித்த குழந்தையைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சி பொங்க,

"ரக்ஷி... இங்கே பாரு... ஆதி என்னைப் பார்த்து சிரிக்கிறான்..." என்று மகனை கொண்டாட அவனது மனைவியோ அவன் புறம் கொஞ்சமும் திரும்பி பார்க்கவில்லை... ஏதோ யோசனையில் அமர்ந்து இருந்தாள்...

குழந்தையுடன் சிறிது நேரம் விளையாடி விட்டு அதைத் தூங்க வைத்துவிட்டு மனைவியிடம் வந்தவன், "தூக்கம் வரலையா...?" என்று கேட்க அவளோ அவனது முகம் பார்க்க தயங்கி,

"இல்லை..." என்றாள் மெதுவாக...

"வா..." இரு கரம் நீட்டி அவன் அழைத்ததில் அவனை வினோதமாய்ப் பார்த்தவள் அவனது முகத்தில் தெரிந்த

நேசத்தில் அவளது முகம் சட்டென்று மலர்ந்தது... வேகமாய் அவனின் கையில் சரண் புகுந்தவளை நெஞ்சில் சாய்த்து தலையை வருடி கொடுக்க அவள் இதமாய்க் கண் அயர்ந்தாள்...

அவள் நன்கு உறங்கியது அறிந்ததும் மெதுவே பால்கனிக்கு வந்த அக்ஷய் ஆதர்ஷ்க்கு அழைத்தான்...

பொதுவான நலம் விசாரிப்பிற்குப் பின் அபியிடத்தில் காணப்படும் மாற்றத்தை அவன் சொன்னான்... அதே போல் முன்பு அவள் மனதில் இருந்த இரு அக்ஷய் பற்றியும் கூறியவன்,

"ரக்ஷி மாறிட்டாள்ன்னு நினைச்சேன்... ஆனா இப்போ அவ நடந்துக்கிறதை வச்சு பார்த்தா எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு ஆதர்ஷ்..." மருத்துவனான அவனின் உதவியை நாடினான்...

தங்கையின் முழுப் பிரச்சினையும் கேட்ட ஆதர்ஷ்க்கும் சிறிது அதிர்ச்சி தான்... அவளின் மனமாற்றத்தை மருத்துவனான அவன் உணரவே இல்லையே என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவன்,

"எதுக்கும் சைக்கியாட்டிரிஸ்ட் கிட்ட கூட்டிட்டு போகலாமா அக்ஷய்... இதுக்கு அந்த மாதிரி ஆலோசனை கேட்கிறது தான் சிறந்த தீர்வு..." என்று அவன் கூற...

மேலும் அனியின் நலம் விசாரித்த அக்ஷய் அலைப்பேசியை அணைத்துவிட்டு இருண்ட வான் வெளியை வெறித்தான்... அவனுக்கு ஒரே குழப்பமாய் இருந்தது... வெகுநேரம் யோசித்தவன் இதற்குத் தானே முடிவு கட்ட நினைத்தான்...

"என் அன்பு மாற்றாததையா டாக்டரின் அட்வைசும், மாத்திரையும் மாற்றி விடப் போகிறது..." என்று மனதுக்குள் சொல்லி கொண்டவன் அவளுக்கு மருந்தாய் தான் மாற வேண்டும் என்று நினைத்தான்...

உண்மையில் அவன் நினைத்தது போல் தான் நடந்தது...
ஆம் அவனே அவளுக்கு மருந்தாய் மாறினான் ஆனால்
அவன் நினைத்தது போல் அல்ல வேறு விதத்தில்...

பூக்கும்...

அடுத்து வந்த நாட்களில் அபியை தொடர்ந்து கண்காணித்ததில் அக்ஷய்க்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது... அவள் மனைவியாய் அவனோட தேவைகளைப் பார்த்து பார்த்து கவனிப்பவள் தாயாய் மகனுக்குச் செய்ய வேண்டியதை ஆதித்யாவிற்குச் செய்தாலும் அதில் கடமை தான் இருந்ததே ஒழிய... அதில் கிஞ்சித்தும் பாசமோ, ஒட்டுதலோ இல்லை...

இதை அவன் அறிந்த போது உள்ளுக்குள் துடித்துப் போனான்... சிறு குழந்தை என்ன தவறு செய்தது என்று இப்படிப் பாராமுகம் காட்டுகிறாள்... ஒருவேளை தன்னைப் பிடிக்காமல் இருந்து அதைத் தன்னிடம் காட்ட முடியாமல் குழந்தையிடம் காட்டுகிறாளா...???

'ஒருவேளை அன்று கூறியது போல் அவளது அண்ணனுக்காகத் தான் என்னை மணந்தாளா...? ச்சேச்சே... என்ன நினைவு இது...? என் ரக்ஷியின் அன்பை போய் நான் சந்தேகப்படுவதா...? பொய்யாய் நேசம் காண்பிக்க அவளுக்குத் தெரியாது... அப்படி நடிக்கத் தெரிந்து இருந்தால் குழந்தையிடம் பொய்யாய் அன்பு காட்டி அவள் குணத்தை மறைத்து இருக்கலாமே...'

மனதில் பலவாறு நினைத்தவன் இதைப் பற்றி விரைவில் மனைவியிடத்தில் பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்...

அதற்கான சந்தர்ப்பத்தை அவனது மனையாளே அவனுக்கு அளித்தாள்...

அன்று குழந்தையைக் கொஞ்சி கொண்டு இருந்த அக்ஷய் அவளிடம், "ஆதியை என்னவாக ஆக்க நீ ஆசைப்படுற ரக்ஷி... என்னை மாதிரி பிசினஸ்மேனாவா இல்லை உன் அண்ணன் போல் டாக்டராவா...?"

அதற்கு எந்தவித பதிலும் அளிக்காமல் தனது கைவிரல் நகத்தை ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டு இருந்த

அபியை கண்டு அவனுள் சிறிது கோபம் எட்டி பார்த்தது...

"ரக்ஷி..." அழுத்தமாய் அவன் அழைத்ததில் திடுக்கிட்டு போய் அவள் நிமிர...

"ஆதி நம் குழந்தை ரக்ஷி... அவனோட எதிர்காலம் எப்படி இருக்கணும்ன்னு நான் மட்டும் நினைத்தால் போதாது... அவனோட அம்மா நீயும் நினைக்கணும்..." அவனது குரல் என்றும் இல்லாத அளவுக்கு அழுத்தமாய்ச் சற்று ஓங்கி ஒலித்தது...

அவனது குரல் அவளுள் அச்சத்தைத் தோற்றுவிக்கப் பழைய அக்ஷயாய் உறுமியபடி நின்று இருந்தவனைக் கண்டு அவளது உடல் நடுங்கியது... கண்களில் கண்ணீர் திரண்டது...

அவளது நிலை கண்டதும் தன்னைக் கடிந்து கொண்டவனாய் அவளது புறமாய்க் கை நீட்டி அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான் ஆறுதலாய்...

அதற்குள் ஆதித்யா பசியில் அழ அபி மனம் பதைத்தவளாய் அவனைத் தன் கையில் வாங்கியவள் அவனுக்குப் பசியாற்ற துவங்கினாள்... அவளின் செயலில் அக்ஷயின் மனம் மென்மையுற்றது...

பால் குடித்ததும் குழந்தை உறங்க ஆரம்பித்தது... அதை அவள் கையில் இருந்து வாங்கித் தொட்டிலில் போட்டவன் மீண்டும் அவள் அருகில் வந்து அமர்ந்தான்... அவளின் தலையைத் தன் தோளில் சாய்த்து கொண்டவன்,

"ஏன் பேபி இப்படி இருக்க...? அவன் நம் குழந்தைடா... அவன் கிட்ட நீ இப்படி நடந்துக்கிறது எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா...?"

அதில் அவள் உடைந்து போய் அழத் துவங்கினாள்... கிட்டத்தட்ட குழந்தை பிறந்தது முதல் இரண்டு மாத காலமாக யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் அடக்கி வைத்து இருந்த அவளது உணர்வுகள் எல்லாம் பீறிட்டுக் கொண்டு வந்தது...

"ஆதியை பார்க்கும் போது எல்லாம் நீங்க... நீங்க..." சொல்லும் போதே அவளது மேனி அதிர்ந்தது...

அவளது நடுக்கத்தைப் போக்கும் விதமாக அவளை அணைத்து கொண்டவன் அவளைத் தடவி கொடுத்தான் ஆதரவாய்...

"நான் என்னடா பண்ணினேன்...?" தான் என்ன தவறு செய்தோம் என்று அவனுக்குத் தெரியவில்லை...

"அன்னைக்கு நீங்க என் கிட்ட மோசமா நடந்துக்கிட்ட நிகழ்ச்சியைத் தான் நியாபகப்படுத்துது... என் விருப்பம் இல்லாம நீங்க என்னை..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் அவள் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்...

அவளது வார்த்தையில் அவன் உள்ளுக்குள் நொறுங்கி போனான்... இதை எப்படி மறந்து போனான்... அவளின் காதலில், அன்பில் அவன் அவர்களை ஆதர்ச தம்பதிகளாய் எண்ணி கொண்டு சந்தோசத்தில் மகிழ்ந்து இருக்க அவனது மனைவியோ அதை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறாள்...

அன்று அவன் செய்த கொடூர செயல் அவனுக்கும் நியாபகம் வர இன்னமும் அவளது கதறல் சத்தம் அவனது காதில் ஒலித்தது... அவனையும் அறியாது அவனது கண்களில் நீர் சொட்டியது...

உச்சந்தலையில் விழுந்த அவனது கண்ணீரில் நிமிர்ந்து பார்த்தவள் அவனது கலங்கிய கண்களைக் கண்டு வேகமாய்த் தன் கரம் கொண்டு துடைத்தவள்,

"இதுக்குத் தான் உங்க மனசு கஷ்டப்படும்ன்னு தான் நான் சொல்லாம இருந்தேன்... அன்னைக்கு இவனைக் கருவிலேயே அழிச்சிடுறேன்னு சொன்னப்போ அவ்வளவு கோபப்பட்டீங்களே ஆனா ஏன்னு ஒரு நொடி நீங்க யோசிக்கவே இல்லை... நீங்க யோசிச்சு இருந்தீங்கன்னா அது உங்களுக்குப் புரிஞ்சி இருக்கும்..." என்றவளை அவன்

புரியாமல் பார்த்தான்... என்ன சொல்ல வருகிறாள் என்று அவனுக்குச் சுத்தமாய் விளங்கவில்லை...

"ஏன்னா இவனைப் பார்க்க பார்க்க இவன் உண்டானதுக்குக் காரணமான அந்தச் சம்பவம் தான் என் நியாபகத்தில் வருது... அதை நினைக்கும் போது என்னையும் அறியாமல் எனக்கு உங்க மேல் வெறுப்பு வருது... ஆனா மனசுக்குள்ள உங்களைக் காதலிக்கிற எனக்கு அந்த வெறுப்பைத் தாங்கிக்க முடியலை... அது நீங்களா இருக்கக் கூடாதுன்னு என் மனசு கிடந்து அடிச்சிக்குது... நீங்க செஞ்ச செயல் வெறுப்பைக் கொடுக்குது... அதே சமயம் உங்க மேல உள்ள காதல் உங்களை நேசிக்கச் செய்யுது... நீங்க ஏன் நல்லவங்களா எனக்கு அறிமுகம் ஆகலை... ஏன் கெட்டவங்களா அறிமுகமானீங்க...?" கதறியவளின் வார்த்தைகள் அவனைச் சாட்டைக் கொண்டு அடித்தது போல் சுரீர் என்று வலிக்கச் செய்தது...

மனைவியின் மனப்போராட்டம் அவனுக்குப் புரிந்து போனது... தனது செயலை அவளால் மறக்க முடியவில்லை... அதே சமயம் அவளது காதல் மனதால் தன்னை வெறுக்கவும் முடியவில்லை... விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் போராடும் மனைவியைக் கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது...

அவளின் போராட்டத்தின் முன் அவனது காதல் கானல் நீராய் மாறி போனதை வேதனையுடன் நினைத்துப் பார்த்தான்... தனது நேசம் அவளது மனதை துளி அளவு கூடக் கரைக்கவில்லையா... இல்லை அது அவள் மனதை எட்டாத அளவு தன்னுடைய செயல் அவளைப் பாதித்து இருக்கிறதா...? யோசித்தவனுக்கு இரண்டாவது காரணம் தான் சரியாக இருக்கும் என்று தோன்றியது...

"அக்ஷய்..." அவனின் அமைதி அவளுள் கிலியை கிளப்ப அவனை அச்சத்துடன் ஏறிட்டாள்...

"என்ன பேபி..." அவளது முன் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவனைக் கண்டு வியப்பாய் விழி விரித்தவள்,

"என் மேல் கோபம் இல்லையா...?"

"எதுக்குக் கோபம் படணும்...? உன் மேல் எனக்குக் கோபம் வரவே வராது..." என்றவனைக் கண்டு அவளது மனம் நிம்மதியுற்றது...

அவளைத் தன்னோடு அணைத்து கொண்டவன் மனதில் யோசனை வலுத்தது... எப்படி அவளது மனதை மாற்றுவது என்று... தனது நேசம் அவளது மனதின் வடுக்களை மாற்றுமா, மறைய செய்யுமா...? என்று நினைத்தவனுக்கு விடை தெரியவில்லை...

"சாரி அக்ஷய்..." மெதுவே முணுமுணுத்த அபியை குனிந்து கேள்வியாய் பார்த்தான்...

"கொஞ்சம் கொஞ்சமா நான் மாற முயற்சி பண்றேன்..." அவளுக்கும் தனது தவறு புரிந்ததோ என்னமோ...

"நீ நீயா இரு ரக்ஷி... காலம் எல்லாத்தையும் பார்த்துக்கும்..." என்றவனுக்கு அவளது வார்த்தைகள் எத்தனை நிம்மதி கொடுத்தது என்பதைச் சொல்ல தேவையில்லை...

அதன் பின் வந்த நாட்களில் அபி ஓரளவிற்குத் தன்னை மாற்றிக் கொண்டாள்... அக்ஷய்க்காகக் குழந்தையைக் கொஞ்ச துவங்கினாள்... தினமும் குழந்தை என்ன செய்தான் என்பதை மகிழ்ச்சியுடன் அவனிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தாள்... அவளையும் அறியாது குழந்தையிடம் மனம் லயிக்கத் துவங்கினாள்...

அதையும் மீறி சில சமயம் குழந்தை உறங்கும் போது அவனை மடியில் போட்டுக் கொண்டு விரல்கள் நடுங்க அவனைத் தடவி கொடுப்பாள்... அந்நேரம் அவளது கண்கள் சிறிது கலங்கி இருக்கும்... அக்ஷய் இதைக் கவனித்தாலும் அதைப் பற்றி எதுவும் கேட்பதில்லை... கேட்டு அவளது மனநிம்மதியை கெடுக்க அவன் தயாராக இல்லை...

அதே போல் குழந்தை பிறந்து மூன்று மாதங்களான பிறகும் அவன் கணவனாய் அவளை ஒரு போதும் நெருங்கவில்லை... அவளது மனம் அறிந்து விலகி இருந்தான்... தாய்மை கொடுத்த பூரிப்பில் அழகாய் இருந்தவளின் அழகு அவனது இளமையைப் பரிசோதிக்கத் தான் செய்தது... ஆனாலும் உடல் உணர்வுகளை மனவுணர்வு வென்று அவனைக் கட்டுப்பாடாக இருக்கச் செய்தது...

வாழ்க்கையில் ஒரு முறை தவறு செய்துவிட்டுக் குற்றவுணர்வில் குமைந்து கொண்டு இருப்பவனுக்கு மீண்டும் மறுமுறை தவறு செய்யத் தைரியம் இல்லை... அதை விட அவளை மேலும் துன்புறுத்தி பார்க்க அவன் தயாராய் இல்லை...

அக்ஷயும், அபியும் தொழிலில் தொடர்புடைய ஒருவரின் மகளின் திருமணத்திற்காகப் பாண்டிச்சேரி சென்றுவிட்டு திரும்பி கொண்டு இருந்தனர்... ஆதித்யாவை உடன் அழைத்து வரவில்லை...

"ரக்ஷி... உன் கூட இப்படி லாங் டிரைவ் போகணும்ன்னு ரொம்ப நாள் ஆசை... அந்த ஆசை இப்போ தான் நிறைவேறி இருக்கு..."

கணவனைத் திரும்பி பார்த்த அபி அவனைப் பார்த்து புன்னகைத்தாள்... திருமணத்திற்காகப் பட்டுப்புடவை உடுத்தி எளிமையான அலங்காரத்தில் எழிலுற அமர்ந்து இருந்தவளை கண்டு அவனது உணர்வுகள் பேயாட்டம் போட்டது... அவளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அவன் விலகி இருந்தாலும் அவனும் சாதாரண மனிதன் தானே...

அவனது இடது கரம் அவனையும் அறியாது அவளது தோளில் அழுத்தமாய்ப் பதிய அதில் திடுக்கிட்டு போய் அவனை ஏறிட்டவள் அவனின் பார்வையில் பயந்து போனாள்... அன்று அவனது கண்ணில் கண்ட அதே வேட்கை பார்வை கண்டு அவளது தேகம் நடுங்க, கண்கள் கலங்கி அச்சத்தைப் பிரதிபலிக்கத் தன்னையும் அறியாது

இருக்கையோடு அவள் சரிந்தாள்... அன்றைய நாளின் நினைவு அவளைத் தாக்கியது...

காமத்திற்கும் காதலுக்கும் வித்தியாசம் தெரியாமல் போனது அந்தப் பேதைக்கு...

அதில் தீச்சுட்டார் போன்று கையைப் பட்டென்று எடுத்துவிட்டான் அக்ஷய்...

"சாரி பேபி... சாரிடா... இனி இது மாதிரி நடக்காது..." அவளது வேதனை கண்டு அவன் மனம் பதறிப் போனான்...

ஒன்றும் பேசாது கண்களில் கண்ணீர் வழிய தலை குனிந்து அமர்ந்து இருந்தவளின் மனதை எப்படி மாற்றுவது என்று புரியாமல் இருந்தவன் எதிரில் வேகமாய் வந்து கொண்டு இருந்த லாரியை கவனிக்க மறந்தான்...

லாரி அருகில் வந்ததும் சுதாரித்துக் கொண்டு அவன் காரை ஒடித்துத் திருப்ப அவனது நோக்கம் புரிந்தார் போன்று லாரியும் அவன் பக்கமாய்த் திரும்பியது...

எப்படியும் விபத்தைத் தவிர்க்க இயலாது... அவனது உயிர் போகப் போவது உறுதி... நொடி பொழுது நேரம் கூடத் தாமதிக்காதவனாய் அபி புறம் இருந்த கதவை திறந்து அவன் அவளை வெளியில் தள்ளி விட்ட அடுத்த நொடி லாரி பெரும் சத்தத்துடன் காரின் மீது மோதியது...

லாரியின் போக்கு கண்டு பயந்து போய் அமர்ந்து இருந்த அபி அக்ஷயின் செயலில் திகைக்கும் முன் அவள் வெளியில் தள்ளப்பட்டு இருந்தாள்... அங்கு இருந்த மைல் கல்லில் தலை அடிப்பட்டு விழுந்தவள் சமாளித்துக் கொண்டு எழுவதற்குள் அக்ஷய் இருந்த கார் மீது லாரி மோதி இருந்தது...

"அக்ஷய்..." அவள் கத்திய கத்தல் அந்த அத்துவான காட்டில் பயங்கரமாய் எதிரொலித்தது... தனது வலியை தாங்கி கொண்டு மனம் பதைபதைக்க அவனிடம் ஓடினாள்...

காரின் முன் பக்கம் லாரிக்குக் கீழ் நசுங்கி இருந்தது... காரின் ஓட்டுநர் இருக்கையில் அக்ஷய் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்...

"அக்ஷய்... அக்ஷய்..." அவளது கண்ணீர் கதறலில் மெல்ல கண்களைத் திறந்தவன் அவளது அழுகை கண்டு 'அழாதே' என்பது போல் சைகை செய்தான்...

அதை அவன் சொல்லும் போதே அவளது கண்களில் மேலும் கண்ணீர் வழிந்தது...

"அக்ஷய்..." அவனது தலையைத் தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டாள்...

"கடைசி வரை நீ என்னை மன்னிக்கவே இல்லைல்ல ரக்ஷி... ஆனா எனக்கு நீ தான்டி உயிர்... உன்னைத் தவிர எனக்கு வேறு உலகம் கிடையாது... அடுத்த ஜென்மத்திலாவது நான் நல்லவனா பிறந்து நீயும் நானும் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கணும் ரக்ஷி..." அன்று அவள் கூறிய அதே வார்த்தைகளை இன்று அவன் கூறினான்...

"தப்புப் பண்ணிட்டேன் அக்ஷய்..." அவள் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்...

"நீ தப்பு பண்ணலை... நான் தான் தப்புப் பண்ணிட்டேன்... உன்னை ரொம்பக் கொடுமை படுத்திட்டேன்... தப்பு செஞ்சவன் தண்டனை அனுபவிச்சு தான் ஆகணும்... அது அனி விசயத்தில் நான் உணர்ந்துட்டேன்... அன்னைக்குச் சொன்னியே உன் கற்புக்கான விலை என் உயிர்ன்னு... உன்னைக் காப்பாத்திட்ட நிம்மதியில் இப்போ உனக்காக நான் உயிரை விடப் போறேன்... எனக்கான தண்டனையா நான் இதை ஏத்துக்கிறேன்..."

"இல்லை அக்ஷய்... உங்களுக்கு ஒண்ணும் ஆகாது... எனக்கு நீங்க வேணும்... என் வாழ்க்கை முழுமைக்கும்..." தேம்பியவளை கண்டு,

"நான்னா யார் ரக்ஷி... உன் மனசுக்குள் நிழலாய் இருக்கிற, நீ நேசிக்கிற நானா... இல்லை உன் கண் முன்னாடி நிஜமாய் நடமாடிட்டு இருக்கிற நீ வெறுக்கிற நானா..."

அவனது வார்த்தைகள் அவளது இதயத்தை வாள் கொண்டு அறுத்தது...

"நீ என்னை வெறுத்தாலும் சரி... நேசிச்சாலும் சரி... நான் உன்னைக் காதலிச்சிட்டே தான் இருப்பேன் ரக்ஷி... என் உயிர் போனாலும்..." என்றவனின் தலை சாயத் துவங்கியது...

"அக்ஷய்..." அலறியவள் அடுத்த நொடி தானும் மயக்கமானாள்...

**********************

"ரக்ஷி... நான் பேசுறது உனக்குக் கேட்குதா...?" அபியின் மனதில் மீண்டும் அந்தக் குரல் ஒலித்தது...

"இல்லை நீ பேசுறது எனக்குக் கேட்கலை... நீ எனக்கு வேண்டாம்... உன்னால் தான் என் அக்ஷய் என்னை விட்டு போயிட்டாங்க... நான் உன்னை நேசிச்ச பாவத்துக்குத் தான் அவங்க திரும்பி வர முடியாத இடத்துக்குப் போயிட்டாங்க... நானும் அவங்க கூடப் போகணும்... என்னைச் சாக விடு... திரும்பத் திரும்ப என்னைத் தொந்திரவு பண்ணாதே..." மனதுக்குள் பேசிய அபி அந்தக் குரலை புறக்கணித்தாள்...

"டாக்டர்... த்ரீ மன்த்சா இப்படிக் கோமாவில் இருக்கிறாளே... கண் முழிக்க மாட்டேங்கிறாளே... அவளை விட அதிகமா அடிப்பட்ட நான் கூடப் பிழைச்சு எழுந்துட்டேன்... ஆனா எந்த ஒரு அடியும் படாம இப்படி நினைவிழந்து போய் இருக்கிறாளே..." மனைவியின் நிலை கண்டு துக்கத்தில் புலம்பினான் அக்ஷய்...

ஆம் விபத்து நடந்து மூன்று மாதங்களாகி விட்டது... மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அக்ஷய் கூட உயிர் பிழைத்து

விட்டான்... இப்போது அவனது காயங்கள் எல்லாம் ஆறிப் பரிபூரணமாகக் குணம் அடைந்துவிட்டான்...

அவன் நினைவு இழந்ததைப் பார்த்த அபி மயக்கமுற்று விழுந்தவள் இன்னமும் கண்கள் திறக்கவில்லை... அவளது ஆழ்மனதில் அக்ஷய் இறந்து விட்டான் என்ற எண்ணம் ஆழப் பதிந்து அவளுள் வாழும் ஆசையை அழித்துவிட்டது...

அக்ஷய் அவளுக்காகத் துடித்துக் கதறும் வார்த்தைகள் அனைத்தும் நிழல் அக்ஷய் தன்னை ஏமாற்றுவதற்காக அவ்வாறு பேசுவதாக எண்ணி கொண்டவள் அந்தக் குரலை புறக்கணிக்கத் துவங்கினாள்...

உண்மையில் அவளுக்காக அவன் துடிப்பது அவளது காதில் விழவில்லை...

"மிஸ்டர். அக்ஷய்... அவங்களுக்குக் காயம் உடலில் இல்லை அவங்க மனதில்... நீங்க இறந்துட்டதா நினைச்சு அதைத் தாங்கிக்க முடியாம அவங்களோட மூளை வேலை நிறுத்தம் செஞ்சு இருக்கலாம்... இந்த நிலைமை எப்போ மாறும்ன்னு சொல்ல முடியாது... நாளைக்கே கூடச் சரியாகலாம்... இல்லை இப்படியே கூட வருசக் கணக்கா கன்ட்டினியூ ஆகலாம்... எதுவும் நம்ம கையில் இல்லை..." மருத்துவர் சொல்லி விட்டுச் சென்றதும் அவன் மனம் உடைந்து போனான்...

குழந்தை ஆதித்யாவின் 'ம்மா' என்றழைப்புக்கு கூடச் செவி சாய்க்காமல் இருந்தவளை கண்டு அவனுக்குப் பயம் வர ஆரம்பித்தது... மூன்று மாதத்தில் விட்டு சென்ற மகன் இப்போது பேச ஆரம்பித்து இருப்பது அவளுக்குத் தெரியாதே... அப்படியே தெரிந்தாலும் அவளது நினைவு அக்ஷயோடு அல்லவா நின்று போயிருந்தது...

மருத்துவர் சொன்னது கேட்டு அவனுள் பயம் வந்தது...

அவளின் கையைத் தனது கையில் தாங்கி, "ரக்ஷி... நீ என்னை மன்னிக்கவே இல்லையா... ஏண்டி என்னைக் கண் முழிச்சு பார்க்க மாட்டேங்கிற..."

'நான் எதுக்கு உன்னைக் கண் முழிச்சு பார்க்கணும்... நீ என் அக்ஷய் இல்லை... அவரைப் போல் நடிச்சு என்னை ஏமாத்தாதே... அவர் ரொம்ப நல்லவர்... நீ தான் ரொம்பக் கெட்டவன்... போ... போ...' அவள் மனதோடு பேசி கொண்டு இருந்தாள்...

"ப்ளீஸ்... என் கிட்ட வந்துடுடி... நீ இல்லாம என்னால் உயிர் வாழ முடியாது... நீ எனக்கு வேணும்..."

'ஆனா எனக்கு நீ வேண்டாமே...'

அப்போதும் கண்களை விழிக்காமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல் படுத்து இருந்த மனைவியைக் காண, காண வேதனை தாங்காமல்,

"நீ எப்படி என்னை விட்டு போறேன்னு நானும் பார்க்கிறேன்... என்னைத் தாண்டி வந்து உன் உயிரை எடுத்துட்டு போற அளவுக்கு அந்த எமனுக்குத் தைரியம் இருக்கா என்ன...?"

அவனது ஆளுமையான வார்த்தையில் அவளது மனதில் மெல்லிய சலனம் எழுந்தது...

'இது இது... அவரோட குரல் ஆச்சே... அப்படின்னா..."

"இங்கே பாரு ரக்ஷி... அன்னைக்கு அவ்வளவு அடிப்பட்டும் நான் பிழைச்சுட்டேன்னா அந்த எமனுக்கு என் கிட்ட நெருங்க பயம்ன்னு தானே அர்த்தம்... அதே மாதிரி உன்னையும் அவன் கிட்ட இருந்து காப்பாத்தி என் கிட்ட வச்சுக்குவேன்... என்னை மீறி யாரும் உன்னை நெருங்க முடியாது..." அவனது அதிரடி, அடாவடி பேச்சில்,

'இது நீங்களே தான் அக்ஷய்... உங்களால் மட்டும் தான் இப்படிப் பேச முடியும்... அப்படின்னா உங்களுக்கு ஒண்ணும் ஆகலையா... நீங்க உயிருடன் தான் இருக்கீங்களா...?'

அபியின் மனம் தன்னவன் உயிருடன் இருப்பதை அறிந்து சந்தோசப்பட்டது... அதன் பின் அவளின் உடல்நிலையில்

முன்னேற்றம் ஏற்பட்டது...

அக்ஷய் அபியிடம் பேசுவதை மருத்துவரும் ஊக்குவிக்க அவன் தினமும் அவளிடம் பேச துவங்கினான்... அவளைச் சந்தித்ததில் இருந்து ஆதித்யா பிறந்தது வரை அவன் ஒவ்வொன்றாய் சொல்ல சொல்ல அவளது ஆழ்மனம் அவனைத் தன் கணவன் அக்ஷயாய் நம்பத் துவங்கியது...

அன்றும் அதே போல் அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவன் பேசி கொண்டு இருக்க அவளது விழியில் கண்ணீர் வழிந்தது...

"ரக்ஷி..." அவனது முயற்சிக்கு அவளிடத்தில் இருந்து கிடைத்த முதல் எதிரொலி... அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"கண்ணைத் திறந்து பாரு ரக்ஷி..." அவன் கதறி துடிக்க அதில் மெல்ல தன் கண்களைத் திறந்தாள் அவள்...

"ரக்ஷி..." அவள் நோயாளி என்பதையும் மறந்து சந்தோச மிகுதியில் அவளை அணைத்துக் கொண்டான் அவன்...

இரத்த வெள்ளத்தில் தலை தொங்கி போன நிலையில் கண்ட கணவன் இன்று உயிருடன் தன் முன் இருப்பதைக் கண்டு அவளும் உணர்ச்சிவசப்பட்டவளாய் அவனின் அணைப்பில் அடங்கி இருந்தாள்...

"அ... க்ஷ... ய்..." மெதுவாய் அழைத்தவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"இந்த வார்த்தையைக் கேட்காம நான் செத்து போயிட்டேன்டி..." என்றவன் அவளது முகத்தைக் கையில் தாங்கி முத்தமழை பொழிய அவனது வேகம் தாங்காமல் அவனை விலக்கியவள்,

"மயக்கம்... வரும்... போல்... இருக்கு..." என்க...

தன் மடத்தனத்தை எண்ணி நெற்றியில் அறைந்து கொண்டவன், "சாரி பேபி..." என்று மன்னிப்பு கேட்டுவிட்டு,

"டாக்டரை கூட்டிட்டு வர்றேன்..." என்று சந்தோசமாய் வெளியில் விரைந்தான்...

அடுத்தப் பத்துத் தினங்களில் அவளது உடல் நன்றாகத் தேறியது...

ஆறு மாத குழந்தையாக இருந்த தனது மகன் ஆதித்யாவை கண்டு ஆச்சிரியப்பட்டவள் அவனை அள்ளி அணைத்து கொண்டாள்...

மருத்துவமனையில் இருந்த நாட்களில் இருவரும் மனம் விட்டு பேசி கொண்டனர்... ஒருவரின் காதலை மற்றொருவர் நன்கு புரிந்து கொண்டனர்... இப்போது அபியின் மனதில் எந்தவித சலனமும் இல்லை என்பதை அவனும் உணர்ந்து கொண்டான்...

"உங்க உயிர் துடிச்சப்போ நான் அடைந்த வேதனை முன் நீங்க எனக்கு இழைத்த துரோகத்தின் வேதனை பெருசா தெரியலை..." என்ற அபி அவனது முகத்தைப் பார்த்து,

"ஏன்னா நான் உங்களைக் காதலிக்கிறேன்..." அவள் சொன்னதைக் கேட்டு அவன் அப்படியே உணர்ச்சி குவியலாய் அமர்ந்து இருந்தான்...

இந்த வார்த்தைக்காகத் தானே அவன் தவம் இருந்தது... அந்த வார்த்தை கொடுத்த சந்தோசத்தை வார்த்தையால் வடிக்க முடியாது...

"நான் சொன்னதை நீங்க நம்பலையா..." அவனது அமைதி கண்டு அவள் தவிப்பாய் கேட்க...

"உண்மையில் நம்பத் தான்டி முடியலை..." என்றவனைக் கண்டு அவளது முகம் வாடி போக...

"நீ என்னைக் காதலிக்கிறேன்னு சொல்றதை நம்ப முடியலை... எனக்குச் சந்தோசத்தில் என்ன சொல்றதுன்னே தெரியலை..." என்றவன் தனது மகிழ்ச்சியை அவளை அணைத்து வெளிப்படுத்தினான்...

"ப்ம்ச்... கொஞ்ச நேரத்தில் என்னைப் பயமுறுத்திட்டீங்க..." என்று அவள் சிணுங்க...

"நீ இத்தனை மாசமா என்னைப் பயமுறுத்தியதை விடவா நான் உன்னைப் பயமுறுத்திட்டேன்..." அவன் அவளைச் சீண்ட,

"ம்... போங்க..." என்று அழகாய் வெட்கப்பட்டவளின் முகத்தை ஆசையாய் அவன் பார்க்க அதில் நாணம் கொண்டு அதை மறைக்க அவனது நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள் அவனது இதயராணி...

*****************************

இரவு உணவுக்குச் சமைத்துக் கொண்டு இருந்த அனியின் மனது உற்சாகத்தில் இருந்தது... என்றும் இல்லாத வண்ணமாய் இன்று கணவனின் பார்வையில் தெரிந்த மாற்றத்தை எண்ணி மனதுக்குள் சந்தோசமாய் இருந்தது...

இது நாள் வரை தன்னை ஒரு நோயாளியாய் எண்ணி மருத்துவனாய் கவனித்துக் கொண்ட ஆதர்ஷ் இன்று தான் தனது பார்வையை மாற்றி இருக்கிறான்...

காலை நேர பரபரப்பில் அங்கும் இங்கும் ஓடி கொண்டு இருந்த அனியின் நிறுத்தி அவளது முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்து விட்டவன்,

"நான் ஹாஸ்பிட்டல் போக இன்னும் நேரம் இருக்கு... எதுக்கு இந்தப் பதட்டம்...?" உரிமையோடு அவன் அதட்ட...

அவனது அருகாமையில் உண்மையில் அவளுக்குப் பதற்றம் தொற்றிக் கொள்ள இன்னமும் வியர்த்து வழிந்தது...

அவளது பதட்டத்தை உற்று பார்த்தவனின் கண்களில் பெண்மை மிளிர நின்று இருந்தவளின் அழகு வெகுநாட்களுக்குப் பின் கண்ணில் பட்டது...

அறுவை சிகிச்சை மூலம் அவளது தோற்றத்தை ஓரளவிற்குச் சீர் செய்த போதும் தீயின் கோர

தாண்டவத்தை முற்றிலும் அகற்ற முடியவில்லை... அது தன் சுவடுகளை அவளது மேனியில் அழுத்தமாய்ப் பதிந்து விட்டு சென்று இருந்தது...

ஆனாலும் அவன் கண்களுக்கு அவள் பேரழகியாய் தான் தோன்றினாள்... மனதில் இருந்த காதல் அவனை அந்தக் கண்ணோட்டத்தில் தான் பார்க்க செய்தது... அதையும் மீறி சிறு வருத்தம் அவனுள் உறுத்தி கொண்டு தான் இருந்தது... அவளின் இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணம் என்ற எண்ணம் அவனைக் கொல்லாமல் கொன்று கொண்டு இருந்தது... அதில் அவன் அவளிடம் இருந்து விலகி சென்றான்...

ஆர்வத்துடன் தன்னைப் பார்த்தவன் திடீரென்று விலகி செல்வதன் காரணம் தெரியாமல் விழித்தாள் அனி...

அவன் மருத்துவமனைக்குச் சென்றதும் யோசித்துப் பார்த்தவளுக்கு அவனின் விலகலுக்கான காரணம் புரிந்தது... இந்த இடைவெளியை மேலும் விரிவுப்படுத்த அவள் விரும்பவில்லை... இன்றே அதை முடிவுக்குக் கொண்டு வர எண்ணி மனதுக்குள் முடிவு எடுத்தவள் அதைச் செயலாற்ற எண்ணினாள்...

அங்கு மருத்துவமனையில் ஆதர்ஷும் அதையே தான் நினைத்துக் கொண்டு இருந்தான்... தான் அனியை நெகிழ்ந்து போய்ப் பார்த்ததும் அதில் அவளது கண்ணில் முதலில் தோன்றிய மிரட்சி பின்பு தோன்றிய எதிர்பார்ப்பு எல்லாம் கண் முன் படமாய் ஓடியது...

இன்னமும் தங்கள் வாழ்க்கையைத் துவங்காமல் நேரம் காலத்தை வீண் அடிப்பது போல் அவனுக்குத் தோன்ற இரவு வீடு திரும்பும் போது காதலின் அடையாளமாய்ச் சிவப்பு நிற ரோஜா பூங்கொத்தை வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்...

தன்னிடம் இருந்த வீட்டு சாவியை எடுத்து கதவை திறந்தவன் வீடு இருளில் மூழ்கி இருப்பதை அறிந்து

திகைத்து மின்விளக்கை போட போக அனி உணவு மேசை மீது இருந்த மெழுகுவர்த்தியை ஏற்றினாள்...

அதன் சத்தத்தில் மின்விளக்கை போடாமல் திரும்பி பார்த்தவன் மனைவியைக் கண்டு கண்ணிமைக்க மறந்து நின்றான்...

மெழுகுவர்த்தியின் மெல்லிய வெளிச்சத்தில் ஆகாய வண்ண புடவையில் தேவதையாய் நின்று இருந்தவளை கண்டு அவன் மனம் மயங்கியது... அதிலும் அவளது வெட்கம் அவனை வாவென்று அழைப்பது போல் தோன்ற அவள் அருகில் வந்தான்...

"ஹனி..."

அவனது அழைப்பில் நிமிர்ந்து பார்த்தவள் அவனது பார்வையில் நாணி தலை குனிய அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"ஐ லவ் யூ ஹனி..." என்று காதலை சொல்லியவன் அவளிடம் பூங்கொத்தை நீட்டினான்...

"மீ டூ ஆது..." என்றவள் பூங்கொத்தை வாங்கிக் கொண்டு அவன் நெஞ்சில் சாய்ந்தாள்...

"ஹாஸ்பிட்டல்ல இருந்து வர்றேன்... குளிச்சிட்டு வர்றேன்டா..." அவனது வார்த்தையில் அவள் விலகி நிற்க அவளது விலகலை அவனாலும் தாங்க முடியவில்லை...

"சீக்கிரம் வந்துடறேன்..." அவளது கன்னம் தட்டி சொன்னவன் அறைக்குள் நுழைந்தான்...

அவன் குளித்து முடித்து வரும் போது அனி அவன் கொடுத்த ரோஜா பூக்களை மென்மையாய் வருடி கொண்டு இருந்தாள்... பின்னால் இருந்து அணைத்தவன் தோளில் அவள் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்...

"ஹனி... உனக்கு ஓகேவா..." அவளது காதில் கிசுகிசுத்தவனைக் கண்டு புரியாமல் பார்த்தவள் அவனின்

மையல் பார்வையில் புரிந்து முகம் சிவக்க அடுத்தக் கணம் அவன் அவளைக் கையில் அள்ளி கொண்டான்...

"சாப்பாடு ஆற போகுதுங்க..."

"சாப்பாடு ஆறினா ஆறிட்டு போகட்டும்... ஆனால் சில விசயங்களை ஆற போட கூடாது ஹனி..." என்றவன் அவளைப் படுக்கையில் சரித்து அவளுள் மூழ்க ஆரம்பித்தான்...

கூடல் முடிந்து மனைவியைத் தன் மீது சரித்து அணைத்துக் கொண்ட ஆதர்ஷ், "சாரி ஹனி... நான் அப்படிப் பேசி இருக்கக் கூடாது..." என்றான் உண்மையான வருத்தத்துடன்...

அவன் பேசிய வார்த்தைகள் இன்றும் அவனைக் கொன்று கொண்டு இருந்தது...

"நான் பண்ணியதும் தப்பு தானே ஆது... தப்பு என் மேலும் இருக்கு..." தன் தவறை உணர்ந்து அவளும் சொல்ல அவனது கை அவளை இறுக்கி அணைத்துக் கொண்டது...

காலமும், ஒருவர் மீது ஒருவர் வைத்து இருக்கும் அன்பும் அவர்களது மனக்காயத்தை ஆற்றுமாக...

****************************

ஆதித்யாவின் முதல் வருட பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடினர் அக்ஷய், அபி தம்பதியினர்...

அன்று இரவு ஆதித்யாவை துளசி தன்னுடன் படுக்க வைத்துக் கொள்ள அபி மட்டும் அறைக்குள் நுழைந்தாள்... அவள் உள்ளே நுழைந்ததும் அன்று போல் அக்ஷய் அவளை அலேக்காய் தூக்க,

"விடுங்க..." என்று அவள் திமிற... அவனாவது அவளை விடுவதாவது... படுக்கையில் சரித்த பின்னரே நிமிர்ந்தான்...

மகனின் பிறந்தநாளுக்காகப் பிரத்யேகமாய் அலங்காரம் செய்து கொண்டதில் அவள் தேவதையாய் அழகாய் ஜொலித்தாள்... மனைவியின் அழகில் மயங்கியது அவனது காதல் மனம்...

இதுநாள் வரை அவன் கட்டுப்படுத்தி இருந்த உணர்வுகள் கட்டவிழ்ந்த காளை போல் குதியாட்டம் போட்டது...

கணவனது முக மாறுதலை அவதானித்துக் கொண்டு இருந்த அபியின் மனதில் பயம் எழுந்தது...

அவன் அருகே வர வர அவளது இதயம் வேகமாய்த் துடிக்க ஆரம்பித்தது... அவன் அவளது முகம் நோக்கி குனிய அவளது கண்கள் அப்பட்டமாய்ப் பயத்தை வெளிப்படுத்த,

"நீ இப்படிப் பயப்படும் போது தான் எனக்கு என்னென்னமோ செய்யத் தோணுது பேபி..." கிசுகிசுப்பாய் உரைத்தவன் இன்னும் நெருங்க பயத்தில் முகம் வெளிறி போனாள் அவள்...

அடுத்த நொடி அவன் அவளை விட்டு விலகி இருந்தான்...

"உனக்குப் பிடிக்காததை நான் செய்ய மாட்டேன்..." என்றவன் மறுபக்கம் படுத்துக் கொண்டான்...

அவள் அவனுக்கு முதுகு காட்டி படுத்தாலும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை... மாறாக அவனது ஏக்கமும் ஏமாற்றமும் பிரதிபலித்த விழிகளே அவளது மனதில் உலா போனது... வெகு நேரம் யோசித்தவள் பின் ஒரு முடிவு செய்தவளாய் அவன் புறம் திரும்பினாள்...

"அக்ஷய்..." அவளது அழைப்பில் திரும்பி பார்த்தவன்,

"இன்னும் தூங்கலையா பேபி..."

"இல்லை..." என்றவள் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்பது புரியாமல் அவன் அருகே நகர்ந்து படுத்தவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து படுக்க அவன் நம்ப முடியாமல் திகைத்தவன் அவளது முகத்தை நிமிர்த்தி 'உண்மையாவா...?' என்று விழிகளால் வினவினான்...

"நீங்க என்னைக் காயப்படுத்த மாட்டீங்கன்னு நம்பிக்கை இருக்கு..."

"என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்குத் தேங்க்ஸ் பேபி..." என்றவன் முத்தமழையில் அவளைக் குளிப்பாட்டினான்...

"உன்னைக் காயப்படுத்த என்னைக்குமே நான் நினைச்சது இல்லை... இப்பவும் கூட நீ வேண்டாம் என்றால் எனக்கும் வேண்டாம்..." மெய்யாய் வருந்தியவனாய்...

ஒரு தடவை தவறு செய்துவிட்டு மேலும் மேலும் வருந்துபவனைக் கண்டு அவளுக்கு இரக்கம் சுரந்தது...

"அந்தத் தப்பை நான் மறக்கணும்ன்னா..." என்று இழுத்தவளை கண்டு பரபரப்பாய் அவன்,

"என்ன செய்யணும் சொல்லு பேபி..."

"அந்தத் தப்பை திரும்பச் செஞ்சிர வேண்டியது தான்..." என்றவளை திகைத்து போய் அவன் பார்க்க...

அவனது நெற்றியில் முட்டி விளையாடியபடி, "அட என் மக்கு புருசா... மைனஸ் இன்ட்டு மைனஸ் ஈக்குவல் டூ ப்ளஸ்ன்னு படிச்சது இல்லையா... அதே போல் தப்பு இன்ட் தப்பு ஈக்குவல் டூ ரொம்ப ரொம்ப நல்லது..." என்று கண் சிமிட்டி குறும்பாய் சிரித்தவளை கைகளில் அள்ளி எடுத்து கொண்டவன்,

"உன்னை இப்படிப் பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா..." பழைய அபியாய் மாறி இருந்தவளை அவன் பார்த்து ரசித்துக் கொண்டிருக்க,

"சரி நீங்க இப்படியே பார்த்துட்டு இருங்க... நான் தூங்க போறேன்..." என்று கொட்டாவி விட்டவளை கண்டு,

"அடப்பாவி..." என்றபடி வேகமாய் அவளது இதழ்களைச் சிறை செய்தான் அந்தக் காதல் கணவன்...

அவளின் சம்மதம் கேட்டு முன்னேறியவனின் மென்மையான அணுகுமுறை அவளுக்குப் பிடித்து இருந்த

போதும் தேவையில்லாமல் அன்றைய நிகழ்வும் அவள் மனதில் எழுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை... அதையும் மீறி அவனுக்காகத் தன் மனதை மறைத்துக் கொண்டு அவனின் கைகளில் அடங்கினாள்...

அவனது அன்பு, காதல் அவளது காயம் பட்ட மனதின் ரணத்தை இனி வரும் காலங்களில் மாற்றும்...

***********************

"எங்கே போகிறோம்ன்னு நீங்க சொல்லவே இல்லை..." இரண்டு வயது மகனை மடியில் வைத்துக் கொண்டு அபி கேட்க...

"போனா தெரிஞ்சிற போகுது..." என்ற அக்ஷய் மேலே பேசாமல் காரை கிளப்பினான்...

போகும் வழியைக் கண்டு அது காஞ்சிபுரம் செல்லும் வழி என்று அவளுக்குப் புரிந்து போனது... ஏன் என்று புரியாமல் கணவனை ஏறிட்டாள்...

அவனோ அவள் பார்வை உணர்ந்து திரும்பி பார்த்தான் இல்லை...

நேரே காமாட்சி அம்மன் கோவிலில் நிறுத்தியவன் இறங்கி ஆதித்யாவை கையில் வாங்கி அவள் இறங்குவதற்கு உதவி செய்ய... கோவிலை கண்டதும் அவளது கண்கள் கலங்கியது...

நெகிழ்வுடன் அவனைப் பார்த்தாள்... அவனோ புன்னகையுடன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான்...

கோவில் சந்நிதானத்தில் நிற்கும் போது அன்று இதே அக்ஷயை பழிவாங்க வேண்டும் என்று அம்மனிடத்தில் தான் கோரிக்கை வைத்தது நியாபகம் வந்தது... ஆனால் இன்றோ அவளது வாழ்க்கையே அவனாகி போன விந்தை தான் என்ன...

காமாட்சி அம்மனை பார்த்தாள்... அம்மன் என்றும் போல் இன்றும் புன்னகையுடன் பக்தர்களுக்கு அருள் பாலித்துக்

கொண்டு இருந்தாள்...

'அம்மா... தாயே... என் கணவரையும், குழந்தையையும் நல்லா வைம்மா...' என்று அபி வேண்டிய போதும் அம்மனின் புன்னகை மாறவில்லை...

எப்போது என்ன அதிசயம் நிகழ்த்த வேண்டும் என்பது அந்த ஆதிபராசக்திக்கு மட்டுமே தெரியும்...

அடுத்து அக்ஷய் அழைத்துப் போன இடம் அவள் வீடு இருந்த பகுதிக்கு... அங்கு அவன் கட்டி இருந்த புதுக் குடியிருப்பை இடித்து விட்டு அபி வீடு இருந்த பகுதியில் அதே மாதிரி ஒரு வீட்டை புதியதாய் கட்டி இருந்தான்... மீதி இருந்த இடத்தைத் தென்னந்தோப்பும் பிள்ளைகள் விளையாடுவதற்கு ஏதுவாய் பூங்காவும் அமைத்து இருந்தான்...

வீட்டை திறந்து கொண்டு உள்ளே சென்ற போது அவளின் வீடு அப்படியே உருமாறி இருந்தது புதியதாய்...

"எப்படிச் சரியா அதே மாதிரி கட்டினீங்க...?" அவள் ஆச்சிரியமாய் அவனைப் பார்த்து கேட்டவள் ஆசையுடன் வீட்டை தடவி கொடுத்தாள்...

"மணி தான் உதவி பண்ணினான்... அவனுக்குத் தான் உன் வீட்டை பத்தி நல்லா தெரியுமே... அவன் சொன்னதை வச்சு நான் வடிவமைத்தேன்..."

அவள் ஆவலுடன் ஒவ்வொரு அறையாய் பார்க்க செல்ல அவன் அங்கே இருந்த ஜன்னல் அருகே வந்தவன் வெளியில் பார்த்தபடி அப்படியே நின்றுவிட்டான்...

"ரொம்ப அழகா இருக்குங்க..." குழந்தையுடன் வந்தவள் அவன் இறுக்கமாய் நின்று இருப்பதைக் கண்டு அருகில் வந்து,

"அக்ஷய்..."

"என்னை மன்னிச்சிட்டியா பேபி..." என்றவனின் கண்களில் மெல்லிய நீர் படலம்...

"உங்களை மன்னிக்காம வேறு யாரை மன்னிக்கப் போறேன்... ப்ளீஸ் இனி மேல் இது மாதிரி பேசாதீங்க... எனக்கும் அழுகை அழுகையா வருது..." என்றவள் அவனை அணைத்துக் கொள்ள...

ஆதித்யா தனது பிஞ்சு கரங்களால் இருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டான்...

மனைவி, மகன் அன்பில் கரைந்த அக்ஷய் அவர்கள் இருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டான்... இனி அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி மட்டுமே...

வீட்டை பூட்டி கொண்டு கிளம்பும் போது அன்று அவளைக் கேவலமாய்ப் பேசிய மாமி எதிரில் வந்தார்...

“யாரு அபியா...?” கண்களைச் சுருக்கி கொண்டு அவர் பார்க்க...

“ஆமாம்...” என்றாள் புன்னகையுடன்... அருகில் இருந்த கணவன் தான் அவளது புன்னகைக்குக் காரணம் என்று சொல்லத் தேவையில்லை...

அவள் அருகில் இருந்த அக்ஷயைப் பார்த்த மாமி அவனையும், அபியின் தோற்றத்தையும் கண்டு மனதுக்குள் வேகமாய்க் கணக்கிட்டவராய்,

“வீட்டுக்கு வந்துட்டு போ அபி...”

“இப்போ நேரம் இல்லை மாமி... அடுத்த முறை வர்றேன்...” என்றவள் கணவனுடன் நடந்தாள்...

“அந்த மாமியா இது...?” அவனுக்கு விசயம் தெரியும்... ஆதலால் அப்படிக் கேட்டான்...

“ம்...” என்று அவள் தலையாட்ட...

“தவறு செஞ்சவங்களை மன்னிக்க உன்னால் மட்டும் எப்படி முடியுது...?” அவன் தன்னையும் சேர்த்து சொன்னானோ?

“அந்தத் தவறால் தான் நீங்க கிடைச்சு இருக்கீங்க... அப்போ அதை மன்னிக்கலாம் தானே...” தலையைச் சரித்துக் கொண்டு அவள் வினவ,

“நிச்சயமா...” என்று சிரித்தவன் மனம் தன்னவளை நினைத்துப் பெருமிதம் கொண்டது...

மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள் அபி, அக்ஷய் இருவரும் மில்லிற்குக் கிளம்பினர்... வழக்கம் போல் விக்டர் காரை ஓட்டினான்...

இப்போது அபி டெக்ஸ்டைல் மில்லின் நிர்வாகத்தைப் பார்த்து கொள்கிறாள்... அவளை அங்குக் கொண்டு விட்ட பின்னரே அக்ஷய் தனது வேலைகளைப் பார்க்க கிளம்புவான்... மனைவியைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்...

அபி நேரடியாகப் பன்னிரெண்டாம் வகுப்பு எழுதி தேர்ச்சி பெற்று தொலைத்தூர கல்வி மூலம் இளங்கலை வணிக நிர்வாகம் பயின்று வருகிறாள்... படிப்பை விட அனுபவம் அவளைத் திறம்படச் செயல்பட வைத்தது...

அன்றைய செய்தித்தாளில் கண்களை ஓட்டியவள் கண்ணில் பெட்டிச் செய்தியாய் ரஞ்சித்தின் தற்கொலை இடம் பெற்று இருந்தது விழுந்தது...

"அக்ஷய்... இங்கே பாருங்க..." என்று அவள் நாளிதழை அவனிடம் காட்ட...

அதைப் படித்துப் பார்த்தவன், "ஓ..." என்றான் சுவாரசியமின்றி...

"எதுக்குத் தற்கொலை பண்ணிக்கிட்டான்...?" என்று வாய்விட்டு சொன்னபடி யோசித்தவள் சந்தேகமாய்க் கணவனைப் பார்க்க...

"ஐயோ எனக்கு ஒண்ணும் தெரியாது பேபி..." போலியாய் அலறினான்...

"இல்லை... இல்லை... உங்களை நம்பறேன்..." என்றவள் கணவன் மீது இருந்த நம்பிக்கையில் அந்தச் செய்தியை மறந்து வேறு செய்தி படிக்கத் துவங்கினாள்...

அக்ஷய் நிமிர்ந்து முன்னால் இருந்த கண்ணாடி வழியாக விக்டரை பார்க்க அவனும் இவனைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தான்... அக்ஷய் விக்டரை பார்த்து கண்ணடிக்க அதைக் கண்டு விக்டருக்குச் சிரிப்பு பீறிட அதை அபி அறியாமல் மறைத்துக் கொண்டான்...

மில் வந்ததும் அபியுடன் இணைந்து நடந்த அக்ஷய் அவளுடன் பேசி கொண்டே தனது வலது கையைப் பின் பக்கமாய் வளைத்து விக்டரை பார்த்துக் கட்டை விரலை உயர்த்திக் காட்ட அதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு இருந்த விக்டரின் நினைவில் அந்தக் காட்சி தோன்றியது...

ஒரு நாள் யாரும் இல்லாத நேரம் பார்த்து ரஞ்சித் வீட்டிற்குச் சென்ற விக்டர் அவனைக் கொலை செய்யப் போவதாய் மிரட்ட அவன் இவன் காலில் விழுந்து கெஞ்சினான்...

"நீ தப்பிக்க ஒரே ஒரு வழி தான் இருக்கு... நீயே தற்கொலை பண்ணிக்கோ..." என்று அசராமல் சொன்ன விக்டர் அங்கேயே அமர்ந்து இருக்க வேறு வழியின்றி ரஞ்சித் தானே தூக்கு போட்டு இறந்து போனான்...

ஒருவன் தெரியாமல் தவறு செய்துவிட்டு அதற்காக வாழ்நாள் முழுவதும் வருந்தி அதற்குப் பிராயச்சித்தம் தேட விழையும் போது அவன் நல்லவன் ஆகிவிடுகிறான்... அவனது தவறும் மன்னிக்கப்பட்டு விடுகிறது...

அதே இது ஒருவன் தவறு செய்துவிட்டு அதை உணராமல் வருந்தாமல் மேலும் மேலும் அதே தவறு செய்யும் போது கெட்டவனாகி விடுகிறான்... அவனது தவறுகள் என்றுமே மன்னிக்கப்பட மாட்டாது...

முன்னது அக்ஷய்க்கு பொருந்தும்... பின்னது ரஞ்சித்திற்குப் பொருந்தும்...

ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது அவரவர் நல்ல எண்ணங்களே...

ரஞ்சித்துக்கு ஏற்பட்ட கதி தான் பாரிவேந்தனுக்கும் நடந்தது... அன்று அக்ஷய்க்கு நிகழ்ந்த விபத்து திட்டமிட்ட சதி என்றும் அதன் பின்னணியில் இருந்தது அமைச்சர் பாரிவேந்தன் என்பதையும் அறிந்த அக்ஷய் அவருக்கும் ஒரு நாள் குறித்தான்...

அவரது கட்சியின் ஆட்சி கவிழ்ந்ததும் ஒரு நாள் அவர் தனது சொந்த ஊருக்கு சென்று திரும்பும் வழியில் அவரது கார் விபத்துக்குள்ளானது... அதில் அவரது உயிர் போகவில்லை... ஆனால் அது அவருக்கு உயிர் பயம் அளிக்க அதற்குக் காரணம் அக்ஷய் தான் என்பதை அறிந்து அதன் பின் அவர் அவன் வழிக்கு வரவே இல்லை...

அக்ஷய் அபிக்கு மட்டும் தான் அன்பானவன், மென்மையானவன்... ஆனால் தொழிலில் அதே அதிரடியானவனாய், எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாய், யாரும் எளிதில் நெருங்க முடியாதவனாய் தான் அவன் விளங்கினான்...

அக்ஷய் அவன் என்றும் அப்படித்தான்... மாறாதவன்...

**************************

"அத்தை... இங்கே வாங்களேன்..." நிஷாவின் கையைப் பிடித்துக் கொண்டு மாடிக்கு அழைத்துச் சென்றாள் பன்னிரெண்டு வயது மதுவந்தி... அக்ஷய், அபியின் இரண்டாவது வாரிசு... ஒரே ஒரு செல்ல மகள்...

அங்கே மொட்டை மாடியில் மித்ரேஷ்வரன் சிகரெட்டை ரசித்துப் பிடித்துக் கொண்டு இருந்தான்... கல்லூரியில் காலடி எடுத்து வைத்து இருக்கும் பதினெட்டு வயது மித்ரேஷ்வரன் நண்பர்களிடம் இருந்து அந்தப் பழக்கத்தை இப்போது தான் புதிதாகப் பழகி இருந்தான்...

"டேய் ஈஸ்வர்... என்னடா இது...?" அன்னையின் குரலில் சிகரெட்டை தூர தூக்கி போட்டு விட்டுக் காற்றில் கைகளை

வேகமாய் அசைத்து புகையை விலக்கி விட்டான்...

அன்னை அருகே நமட்டு சிரிப்புடன் நின்று கொண்டு இருந்த மதுவந்தியை கொலைவெறியுடன் முறைத்துப் பார்த்தான்...

"இந்தக் கெட்ட பழக்கம் எல்லாம் வேண்டாம் கண்ணா..." நிஷா தன்மையாக எடுத்து சொல்ல...

"சரி மாம்..." என்றவன் தலை தான் செய்த தவறால் குனிந்து இருந்தது...

அன்று மாலையே விக்டரிடம் மதுவந்தி அவனைப் பற்றி வத்தி வைத்துவிட்டாள்... ஏனோ தெரியவில்லை அவளுக்கும் மித்ரனுக்கும் சிறு வயதில் இருந்தே ஏழாம் பொருத்தம்... அவளுக்கு அவனைக் கொஞ்சமும் பிடிக்காது... இதே இது அவனது தம்பி அவளை விட நான்கு வயது பெரியவனான ஜான்பீட்டரை மிகவும் பிடிக்கும் அவனும் அவளிடத்தில் அன்பாய் நடந்து கொள்வான்...

அதே போல் அவர்களது மாமா மகள் அவளை விட இரண்டு வயது மூத்தவளான மிருதுளாவையும் அவளுக்கு நிரம்பப் பிடிக்கும்... அண்ணன் ஆதித்யாவை சொல்லவே வேண்டாம் அவ்வளவு பிடிக்கும் அவளுக்கு... அவளுக்குப் பிடிக்காத ஒரே ஆள் மித்ரேஷ்வரன் மட்டுமே...

விசயம் கேள்விப்பட்ட விக்டர் அவனைப் பெல்ட்டை எடுத்து விளாசிவிட்டான்... எங்கே மகன் தன்னைப் போல் ரௌடியாய் ஆகிவிடுவானோ என்ற பயத்தில்...

"வளர்ந்த பையனை அடிக்கிறது தப்பு விக்டர்... எடுத்து சொல்லி புரிய வைக்கணும்..." நிஷா தடுத்த போதும் விக்டர் தனது அடியை நிறுத்தவில்லை...

மறுநாளே மித்ரேஷ்வரன் மது அருந்தி வந்து தந்தை முன் நின்றவன், "இப்போ என்ன பண்ண முடியும் உங்களால... அடிப்பீங்களா... அடிங்க பார்க்கலாம்..." நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கேட்க விக்டர் கோபத்தில் அவன் மேல் பாய...

நிஷா தான் இருவரையும் தடுத்து நிறுத்தி சமாதானப் படுத்தினாள்...

தன்னை அடி வாங்க வைத்த மதுவந்தியை போட்டு கொடுக்க நாள் பார்த்துக் கொண்டு இருந்தான் மித்ரன்...

அந்தப் பொன்னான நாள் இரண்டு வருடங்களுக்குப் பின் அவனுக்குக் கிடைத்தது... அன்று தந்தைக்கு உடல்நலம் சரியில்லாததால் அவன் தான் காரை எடுத்துக் கொண்டு மதுவந்தியை பள்ளியில் இருந்து அழைத்துப் போக வந்து இருந்தான்... அன்று வசமாக அவனிடம் சிக்கினாள் அவள்...

'எங்கே இந்தக் குள்ள கத்திரிக்காயை காணோம்...?' என்று அவனது கண்கள் அவளைத் தேடியது...

அங்கே மரத்தடியில் அவளது வகுப்பு தோழன் அவள் கையில் கடிதம் ஒன்றை கொடுக்க அவள் மறுக்க நினைத்துப் பின்னால் நகர அவனோ அவளது கையில் அந்தக் கடிதத்தைத் திணித்து விட்டு சென்று விட்டான்...

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தவள் நிமிர்ந்த போது அவளது பார்வையில் மித்ரன் விழ அவசரமாக அதைத் தன் பையில் திணித்தவள் அவனை நோக்கி வந்தாள்...

"அங்கிள் வரலையா...?" அவனைப் பார்க்காமல் கேட்டவள் காரிலேறி அமர...

அவன் பதில் சொல்லாமல் வண்டியை கிளப்பினான்...

'திமிர்... திமிர்...' மனதுக்குள் முணுமுணுத்தவள் வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

'இன்னைக்கு வசமா மாட்டினேடி...' மனதுக்குள் கறுவி கொண்டே வண்டியை ஓட்டினான் மித்ரன்...

வீட்டில் அவளை இறக்கி விட்டதும் மறக்காமல் அவளை அபியிடம் போட்டும் கொடுத்தான்...

"அத்தை... மது பையை எதுக்கும் செக் பண்ணுங்க... ஏதோ லெட்டரை மறைச்சு வச்ச மாதிரி இருந்தது..."

அதே போல் அபி அவளது பையைச் சோதனை போட்ட போது அந்தக் காதல் கடிதம் அபியின் கையில் சிக்க அவள் மகளை அடி பின்னி துவைத்து எடுத்துவிட்டாள்...

அக்ஷய் கூட அந்த விசயத்தில் தலையிட முடியவில்லை... பெண் பிள்ளை விவகாரம் ஏற்கெனவே ஒரு முறை சூடு பட்டவன் என்பதால் ஒதுங்கி நின்றான்... அதே சமயம் அழுது கொண்டு இருந்த மகளைச் சமாதானப்படுத்தவும் தவறவில்லை...

மறுநாள் மதுவை பள்ளிக்கு அழைத்துச் செல்ல வந்த மித்ரனை கண்டு அவள் அவனுடன் போக மாட்டேன் என்று அடம் பிடிக்க அபி அதட்டி உருட்டி அவனுடன் அனுப்பி வைத்தாள்...

பள்ளி வந்ததும் ஒன்றும் பேசாமல் இறங்கி சென்றவள் சடையைப் பிடித்து இழுத்து நிறுத்தியவன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான்...

"நேத்து அடி பலமோ..." என்றவனை வெறுப்பாய் பார்த்தாள் அவள்...

"நீ தான் மாம் கிட்ட போட்டு கொடுத்ததா... ஐ ஹேட் யூ..." சொல்லும் போதே அவளது கண்களில் கண்ணீர் திரண்டது...

"போடி குள்ள கத்திரிக்கா... நீ ஹேட் பண்ணா நான் ஒண்ணும் கவலைப்பட மாட்டேன்... ஆனா நீ லவ் பண்ணினா தான் நான் ரொம்பக் கவலைப்படுவேன்..." என்றான் அலட்சியமாக...

"போயும் போயும் உன்னைப் போய் யாராவது லவ் பண்ணுவாங்களா... ச்சீ போடா பொறுக்கி..." என்று கோபமாய் இரைந்தவள் பள்ளியினுள் செல்ல...

"போடி போ... உலகத்திலேயே கடைசிப் பொண்ணா நீ இருந்தா கூட நான் உன்னை லவ் பண்ண மாட்டேன்டி... மூணு அடி இருந்துட்டு இது எல்லாம் லவ்வை பத்தி பேசுது... எல்லாம் கலிகாலம்..." என்றவன் காரை கிளப்பிக் கொண்டு சென்றான்...

இந்தக் கள்ளிச்செடியில் காதல் பூ பூப்பது எப்போதோ...???

“கள்ளிப்பூ காதல்” கதையின் தொடர்ச்சியாய் அதன் இரண்டாம் பாகமான “வீழ்கிறேன் உனது விழியில்” கதையில் ‘மித்ரேஷ்வரன் மற்றும் மதுவந்தி’ நாயகன், நாயகியாக உங்களை எல்லாம் சந்திக்க வருகிறார்கள்... காத்திருங்கள் இந்தக் கள்ளிப்பூவின் காதலுக்கு...